॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ॥

அதிகரணஸாராவளியின் மார்க்கமாக

ப்ரஹ்ம ஸூத்ரங்களின் அநுபவம்.

Brahma Sutragalin Anubhavam

ஸ்ரீ-உ.வே மதத்ஸாராஸ்வாதீ,

அன்பில். வெ, கோபாலாசாரியரால்

எழுதப்பட்டது.

கும்பகோணம்

ஸ்ரீ கோமளாம்பா பிரஸ்ஸில்

அச்சிட்டு

வெளியிடப்பட்டது.

Gomalamba press

no place

பஹுதாந்ய-௵ தை-மாஸம்.

1939

விலை] [அணா-4

ஸ்ரீ:

முகவுரை.

ஸ்ரீ சேட்லூர் மஹாமஹோபாத்யாய ஸ்வாமியின் ஸப்ததி யப்தபூர்த்தி தினத்தை உத்தேசித்து ஓர் வ்யாஸமெழுத நியமிக்கப்பட்டதை அநுஸரித்து இந்த க்ரந்தம் சுருக்கமாக எழுதப்பட்டது. ஸாராவளியின் முதல் 4- ச்லோகங்களின்ரஸங்கள் விஸ்தாரமாக முன்பு வேதாந்த தீபிகையில் அச்சிடப்பட்டன. ஸூத்ராநுகுண்யஸித்திவிமர்சத்தில் சில ச்லோகங்களுக்கு ஸம்ஸ்க்ருதத்தில் வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. ஸாராவளி முழுவதையும் விஸ்தாரமாக விவரிக்க ஆசையிருந்தும், பொழுதும் மற்ற ஸௌகர்யங்களுமில்லை. நம் ஸம்ப்ரதாயத்தில் ஓர் கல்விக்களஞ்சியமும், சீலவ்ருத்தரும், ஜ்ஞானவ்ருத்தரும், வயோவ்ருத்தருமான ஸ்ரீ-உ-வே திவான்பகதூர் V. K ராமானுஜாசாரியர் ஸ்வாமி ஸாராவளிமுழுவதற்கும் தமிழில் மிகத் தெளிவாக உரை ஸாதித்திருக்கிறார். அதில் முதல் இரண்டு பாதங்கள் அச்சிடப்பட்டுமிருக்கின்றன. அப்பெரியார் உரை அருளிச்செய்திருக்கிறபடியால், மற்றோருரை எழுத அவசியமும் இல்லை. ஒரு கோர்வையாக ப்ரஹ்மஸூத்ரங்கள் முழுவதையும் ஸாராவளி காட்டிய வழியில் எல்லோரும் அனுபவித்து ரஸிக்கும்படிசெய்யவேண்டுமென்ற அவாவினால் இச்சுருக்கமெழுதப்பட்டது. ஜைமினீயசாஸ்த்ரம் முழுவதையும் ஓர் க்ரீடாபுஷ்கரிணியாகச் செய்வதாகச் சொல்லி ஸ்வாமியின் ஸதீர்த்தரும், ஸுஹ்ருத்துமான ஸ்ரீவித்யாரண்யர் ந்யாயமாலாவிஸ்தரமென்று 2000-ச்லோகங்களும், அதற்கு வ்யாக்யானமுமாக ஓரழகிய க்ரந்தமியற்றினர். சாரீரகமீமாம்ஸையை ஸர்வவிதமான ஸம்சயங்களையும் தினவு கெடத் தீர்த்தும், ஒவ்வோரதிகரணத்தின் ரஸங்களும் நெஞ்சைக் கவர்ந்து மறவாமல் பதிந்து, எளிதாக மனதில் தரித்து அநுஸந்தானம் செய்யவும் ஸுகரமாக அதிமதுரமான ஸ்ரக்தராச்லோகங்களாக இந்த க்ஷீரராசியைஸ்வாமி நமக்கு சாச்வதமாக அமைத்

Ⓐ See p. 142 Sankalpa Suryodayam (Kittamore)

தருளிய உபகாரத்திற்குக் "கைம்மாறு மாயனும் காணகில்லான்" இந்த 'ஸ்ரக்தராதுக்தராசியால்' நமக்கு சைதந்யஸ்தந்யத்தைப் புகட்டி வேதாந்தசாஸ்த்ரத்தை ஓர் விநோதம் போல நாமநுப விக்கும் பாக்யம் ஏற்படுகிறது. ஸ்ரீபாஷ்யம் ச்ருதப்ரகாசிகை முத லிய க்ரந்தங்களில் ஸாரத்தைத் திரட்டியிருப்பதுடன், பரமதங் களோடு வாதிக்கும் திறமையை யளிக்கும், அதிகமான ரணஸா ரத்தின் (வாதப்போருக்கு வேண்டிய ஬லங்களின்) ஓர் ஆவளியும் (கோர்வையும்) ஆகும். 'ஸாரம்' என்பது ஬லத்தையும் சொல் லும். இந்த ஬லத்தைக்கொண்டு மிக எளிதாகப் பிறருடன் வாதிக்கலாம்.

Ⓐ

ராயம்பேட்டை ஸ்ரீ-உப-வே. மஹாமஹோபாத்யாய R. V. கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமியும், ஸ்ரீ-உ-வே. சின்னமு ஸ்ரீநிவாஸ பாட்டராசாரியர் ஸ்வாமியும் இந்த க்ரந்தத்தின் மாத்ருகையையு புரூபுகளையும் க்ருபையாக சோதித்து அச்சிட்டு வைத்த உபகாரத் திற்கு அடியேன் மிகவும் க்ருதஜ்ஞன்.

அ. வே. கோபால தாஸன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய மஹாதேசிகா

அதிகரணஸாராவளியின் வழிய

ப்ரஹ்மஸூத்ராநுப

அத்யாயம்—1, பாதம்—1.

ஸ்ரீபாஷ்யத்தின் ப்ரவசனத்தை நித்யகைங்கர்ய
யாவதாயுஷமுமநுஷ்டித்துவந்தது ப்ரஸித்தம். '
தத்தை சரீரபாதபர்யந்தம் ஆதரத்தோடு நடத்
தமக்குளம்பெருமானுர்நியமித்தருளினதாக ஸ்ரீ
தயத்தில்ஸாதித்தார். அந்நாட்கமியற்றுமுன் 30
ஷ்யத்தை ஆமூலாக்ரம் சிஷ்யர்களைக்கேட்பிவி
யதீச்வரஸரஸ்வதீ ரஸபரத்தோடே த
சென்றதென்றும், அந்த ஸ்ரீஸூக்திக
ஆராவமுதமாக திரும்பவும் திரும்பவ
யௌவனமெல்லாம் ஸுகமே கழிந்
'யுவாஸ்யாத் ஸாது யுவாத்யாய
யுவாத்யாயக:) என்று உபநிஷத்து அத்
னந்தத்தைப் பேசிற்று. அந்த அத்ய
தின் அத்யாபநமன்று. வேதாந்தசாஸ்
அது பேரின்பமான ப்ரம்மாநந்தம் பே
யுவாவாக (யௌவனமெல்லாம்) ப்ரா
யதிராஜஸூக்திமான ஸ்ரீபாஷ்யத்தை
ருமான சிஷ்யர்களுக்கு ஸர்வ காலமும
பெரிய பெருமாள் ஒருவராலும் எக்க
தாசார்யர்' என்று அநுக்ரஹித்த சா
தமக்கு ஸ்வரூபநிரூபகமாகக்கொண்
பதியும், அவர் ஸ்ரீபாஷ்யமும் உக
ஸுகமாக ஆப்ரயாணம் திவஸங்களை

மிக்க கௌரவபாத்ரரான ஸ்ரீவாசஸ்பதி மிச்ரரின்
ரௌடிமையையும் அதிசயித்து ஸ்ரீபாஷ்யத்திற்கு
ன்ற வ்யாக்யானத்தைச் செய்தருளினர். அந்த க்ரந்தம்
கயில் ஸ்ரீபாஷ்யத்தின் ப்ரவசனத்தின் இருபத்தெட்
த்தியென்று ஸாதிக்கிருர். ஸூர்யோதயநாடகம்
முப்பது ஆவ்ருத்திகளாயினவென்ருர். ஸாராவளி
'சாச்வதகாலமும் அத்யாபனம் செய்து' என்று
திப்பதால், ஆவ்ருத்திகள் கணக்கு நினைப்பில்லை
ாம். ரஸாநுபவம் உந்மஸ்தகமாக ஏற ஏற எண்
ில்லைபோலும். 'நாயமாத்மா' என்னும் ச்ருதி
தை 'ப்ரவசநம்' என்னும் சப்தத்தால் பேசிற்று.
ன சிஷ்யர்களுக்குத் தினவுகெட ப்ரவசனம் செய்
மனனமாகுமென்று அந்த ச்ருதி வ்யஞ்ஜனம்
ர்கள் வாக்கைப் பெருமாள் ஸத்யமாகச் செய்
பெருமாள் வாக்கை ஸத்யாபநம் செய்யவே இந்த
தசிகன் பாடியது. ஸத்யம் விதாதும் நிஜ
(ஸத்யம் விதாதும் நிஜபர்த்ருபாஷிதம்)
டம். 'ஸத்யஸ்ய ஸத்ய:' (ஸத்
புருஷோத்தமனுடைய 'பிருது தான
உட்படலாமோ? 'ஸமர்' என்றும்
ம் பிரஸித்தரான ரங்கபதி கேவலம்
க்கு இந்த அபூர்வபிருதத்தை யளித்
காடுக்கலாமோ?

களில் முடிவில் ஸ்ரீபாஷ்யஜிக்ஞாஸாதி
ஹரித்து, அந்த ஸ்ரீஸூக்தி அந்த
டதாக ஸாதிக்கப்படுகிறது. அந்த
யகஸிம்ஹமென்ற பிருதத்தை ஸத்
யத்தை ஸேவிப்பவர்களுக்கு ப்ராஹ்ம
ன்ன சங்கைகளுண்டாகக்கூடுமென்
னக சிஷ்யர்களுக்கு, ஸர்வ காலமும்
கன்தான் நன்ருயறியக்கூடும். பின்
ம்பரைகளுக்கு மனதிலுதிக்கக்கூடிய
ல்லா சங்கைகளையும் எடுத்துப் பரி
மனப்பாடம் செய்து ஹ்ருதயத்

தில் தரிக்கும்படி மதுரமதுரமான ச்லோகங்களால் ஸாராவளி என்னும் [illegible] (துக்தராசி) க்ரந்தத்தை அமைத்தருளினர். "[illegible]" (தத்பாஷ்யம் ஸச பாஷ்யக்ருத், ஸச ஹரி: ஸம்யக் ப்ரஸீதந்து:) என்னும் க்ரமத்தில் யதிபதிகூயிதமான பாஷ்யத்தின் ப்ரஸாதத்திற்காகவும், [illegible] (தத்ப்ரஸத்ஸை) யதிபதிப்ரஸாதத்திற்காகவும், ஸ்ரீரங்கபர்த்தாவெனும் ஹரியின் ப்ரஸாதத்திற்காகவும், 'ஸ்வஸ்தி ஸ்ரீ' என்று தொடங்கி ஸ்ரீரங்கபர்த்தாவருளிய திருதுசாஸனத்தைக் கைங்கர்யசாஸனமாகக்கொண்டு, சாரீரகத்தை அதிகரிக்கும் எல்லோருக்கும் எக்காலத்திலும் ஸர்வவித சங்கைகளையும் தெளிவித்து விசதமாகப் போதித்து ஞானப்பால்ராசியைப் பருகிப்பருகி இன்புற்று வேதாந்தத்தில் ப்ரதிஷ்டிதராகும்படி செய்ய இந்த க்ரந்தம் இயற்றப்பட்டது. ஸ்வாமி நமச்செல்லாம்ளாகூாத்தாக ஆசிரியராயிருந்து சாரீரகமெனும் வேதாந்தசாஸ்திரத்தை நேருக்கு நேராக எதிரேயிருந்து போதிக்காவிடினும், ஸ்வாமியின் மதுமத்தமானஜிஹ்வையிலிருந்து அவதரித்த இப்பாடல்கள், நமக்கு ஸ்வாமி ஸ்தானத்தில் ஆசார்யகம் செய்து நம் ஸந்தேஹங்களையெல்லாம் சேதித்து (ஹ) நமக்கு ஞானப்பாலையளித்து வழினறப்போமளவும் வாழ்வை அளிக்கின்றன. இந்த ஸ்ருத்யபான பத்யாவளி தினகரகிரணச்ரேணிகை போல் கிளர்புகிறதென்றார். அர்ச்சிராதிகதியான எணி (நிச்ரேணிகை) போன்றது. 'நீர்தாம் எமக்குப் பிதா; நீரல்லவோ எம்மை அவித்யையின் அக்கரைக்குத் தாண்டுவிக்கிறீர்' என்பர் சிஷ்யர் ஆசார்யனை நோக்கி. "தமஸின் அக்கரையை நாரதருக்கு ஸநத்குமாரபகவான் காட்டியருளினர்" என்று பூமவித்யை பேசிற்று.

இப்பாடல்கள் [illegible] (ஸ்ரக்தரைகள்). '[illegible]' (சதம் மாலாஹஸ்தா:) என்று வேதமோதிய 'மதிமுகமடந்தையர் பரமபதம் சேரச்செய்வது எப்படித் திண்ணமோ, அப்படியே மாலாஹஸ்தைகள் எனும் பொருளுடைய இந்த ஸ்ரக்தரைகளும் சாரீரகார்த்தமும், ச்ருதோபநிஷத்கர்களுக்கு ப்ரஸித்தமாயேற்பட்டதான அர்ச்சிராதிமார்க்கத்தில் சேர்த்துப் பரமபதத்திற்கு நயனம் செய்யும். இந்த க்ரந்தம் சாரீரகம் அதி

கரிக்குமெல்லோருக்கும் நிஸ்ஸம்சயமாக மதுரமதுரமாக தத்வத்தைப் போதிப்பதால் இதைச்செய்தருளினதால், ஸ்வாமி எல்லோருக்கும் எக்காலத்திலும் ஸாக்ஷாத்தாகவே வேதாந்தாசார்யரானுரென்பது திண்ணம். பெருமாள் அளித்த ஆசார்யப்பட்டயம் சாச்வதப்பட்டயமென்பதை ஸத்யாபநம் செய்யவே ஸாராவளியின் நிர்மாணம். எக்காலத்திலும் எல்லோர்க்கும் எங்கும் இவர் வேதாந்தாசார்யனென்று பட்டயம். இந்தப் பாசுரங்களை ஸ்ரீவைஷ்ணவப் பெரியாரெல்லாம் மனப்பாடம் செய்து ஹ்ருதயத்தில் தரிப்பர். இருகலைகளுக்கும் பொதுவாகவே ஆதரபாத்ரம்; நடப்பும் அப்படியே.

முதல் 26-ச்லோகங்கள் உபோத்காதம் (முகவுரை). ப்ரக்ருதி தத்துவம் 24, ஜீவதத்துவம் 25-வது, ஈச்வரதத்துவம் 26 வது. ஜீவனை பஞ்சவிம்சகனென்றும், ஈச்வரனை ஷட்விம்சகனென்றும் ப்ரமாணங்கள் பேசுகின்றன. ஜீவனைக்காட்டிலும் ப்ரஹ்மம் வேறு. மேல்பட்டவன் (அந்யன், பரன் அதிகன்) என்றே ஸூத்ரங்கள் பலகால் உத்கோஷிக்கின்றன. ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் ஐக்யமே இந்த சாஸ்த்ரத்திற்கு விஷயமென்பர் பிறர். 25-வது தத்துவமே அவர்களுக்கு ஈச்வரதத்துவமாகும். முன் 24-தத்துவங்களும் கானல்போல் பொய்யாகும். தத்துவம் ஒன்றே என்பர். தத்துவங்கள் 26 என்பதும், ஜீவனுக்கு ஈச்வரன் தானும் ஸாதனமாக நின்று ஸர்வவிதமான அநுகூலங்களையும் செய்து மோக்ஷபலத்தையளித்து தம் வீடு சேர்த்து தன்னுள்ளே பிரியாமல் சேர்த்துக்கொண்டு தன்னோடு ஸமமாக தன் பேரின்பத்தையும் அளிக்கிருரென்பதை ஸூத்ரகாரர் படிப்படியாகக் காட்டுகிருர் என்பதும் நம் ஸித்தாந்தம். 26 என்னும் கணக்கும் நம்முடைய தத்துவங்களுக்கு ஏற்றது. நம் பாஷ்யப்படி ஸூத்ரங்களின் கணக்கு 545, அதிகரணங்கள் 156, 'சுபாசீ:' என்பது 545 இலக்கத்தைக் காட்டும். 'வி நயீ' என்பது 156-ஐக் குறிக்கும். இந்த ப்ரஹ்மகாண்டத்தில் எங்கள் அதிகரணக்கணக்கும் சிந்மயம். ஸூத்ரக்கணக்கு சுபத்தை ஆசாஸிப்பது (சுபாசீ:) என்று அழகாகக் காட்டுகிருர்.

வேதவாக்யப்பொருளை நியாயங்களைக்கொண்டு விசாரிப்பது மீமாம்ஸை. மீமாம்ஸையெல்லாம் ஒரே சாஸ்த்ரம். முன் பாக

மான கர்மகாண்டத்தை கர்மமீமாம்ஸையைக்கொண்டு விசாரித்து விட்டு, பிறகுதான் ப்ரஹ்மமீமாம்ஸை செய்யத் துடங்குவது ப்ராசீன ஸம்ப்ரதாயமென்பது திண்ணம். தைத்திரீயபாஷ்யத்தி லும், சாந்தோக்யபாஷ்யம் முடிவிலும் ஸ்ரீசங்கரரே இதை ஸ்பஷ்டமாகக் கூறுகிறார். இரண்டு பாஷ்யங்களுக்கும் மூலமான வ்ருத்திக்ரந்தமொன்றே. இரண்டு பாஷ்யங்களுக்கும் மூலமான பாஷ்யம் த்ரமிடபாஷ்யமே. ப்ரஹ்மநந்திதான் இருவருக்கும் வாக்யகாரர். உபவர்ஷர்தான் போதாயனர். இதெல்லாம் பிறர் க்ரந்தங்களிலிருந்தே ஸ்பஷ்டம். ப்ராசீனவ்ருத்திகார் 'அத' (பின்பு)என்பதற்கு 'கர்மவிசாரம் செய்தபிறகு'என்றுதான்பொரு ளுரைத்தாரென்று அத்வைதக்ரந்தங்களில் ஸ்பஷ்டம். ப்ராசீன உரைகளையும், ப்ராசீன ஸம்ப்ரதாயத்தையும் நம் பாஷ்யமநுஸரித் தது. சமதமாதி குணங்களைப் பூர்ணமாக ஸம்பாதித்து, ஸந்யா ஸம் செய்துகொண்டு பிறகுதான் ப்ரம்மவிசாரம் செய்யவேணு மென்பது பிறர்கொள்கை. அப்படி அவர்கள் செய்வதுமில்லை. கர்மவிசாரம் செய்தபிறகுதான் பரஹ்மவிசாரம் செய்வதென்பதை நாமும் அநுஷ்டிக்கவில்லை. ஆயினும் ஸூத்ரத்தின் ஸாம்ப்ரதா யிகப்பொருள் ஸ்ரீபாஷ்யத்தில் ஸாதித்தபடிதான். இக்கலியுகத்தில் அவகாசக்குறைவு முதலியதால் நாம் முன்பே ப்ரஹ்மவிசாரத்திலி றங்குகிறோமென்று இவர் ஸாதித்தார். கர்மாநுஷ்டானமே ஞான மார்க்கத்துக்கு வேண்டாம், கர்மாநுஷ்டானம் ஞானமார்க்கத்திற்கு விரோதியென்ற காரணத்தைச் சொல்லி கர்மவிசாரம்வேண்டி யதேயில்லையென்கிறார்கள் பிறர். ப்ரபஞ்சமே பொய்யானதால் கர்மாநுஷ்டானமும் அதற்காகக் கர்மவிசாரமும் வேண்டாமென் கிறார்கள். இந்தக் காரணங்களைக் கண்டிப்பதற்காக முதலதிகரண ஸ்ரீபாஷ்யம் விரிந்தது. முன்பே கழுத்திலுள்ள பொன்மாலையை ஊரெல்லாம் தேடிவிட்டு பின்பு உன்கழுத்திலிருக்கிறதேயென்ற சொல்லைக்கேட்டு கழுத்தில் தொட்டுப்பார்ப்பதுபோல், தானே பர மாத்மாவென்பதை மறந்து, வெளியே தேடி பிறகு 'நீயே அவன்' என்று கேட்டு அதையறிந்து தன்னிலும் வேறு பொருள் இல்லை என்றும் அடையவேண்டியது வேறில்லையென்றும் அறிகிறான். இதில் கர்மாநுஷ்டானம் செய்யவேண்டிய உபகாரமென்ன? உடம்பு வேறு, த்ரவ்யங்கள் வேறு, தேவதை வேறு என்று பேதங்களையே பற்றும் கர்மாநுஷ்டானம் பேதப்ரபஞ்சசூன்ய

மான ஐக்யஉணர்ச்சிக்கு நேர் விரோதமல்லவா என்று இப்படி கக்ஷிகள் வர, 'விஸ்தாரமாய் பாஷ்யம் பதில் கூறிற்று' என்று முதலதிகரண பாஷ்யம் விரிந்த காரணத்தைக் காட்டினார். (9-சு)

கார்யமல்லாத முன்பேயுள்ள ஸித்தப்ரஹ்மத்தை சப்தம் ஸ்வதந்த்ரமாக போதிக்கமாட்டாதென்று சில மீமாம்ஸகர் சொல்லுவர். முன்மீமாம்ஸை செய்கையைப் பேசிற்று. இங்கே ஸித்தப்பொருளைப்பற்றி விசாரம். ஸித்தத்தை சப்தம் ப்ரதிபாதிக்கக் கூடுமென்பதை முதலில் ஸமர்த்தித்துத் தீரவேணும். இல்லாவிடில் 'ப்ரஹ்மம்' எனும் விஷயமே ஸித்திக்காது. சாஸ்த்ரம் அதை ப்ரதிபாதிக்கிறதென்கிற ஸம்பந்தமும் ஸித்திக்காது. ஆகையால் முதலில் ஸித்தத்தில் சப்தத்திற்கு வ்யுத்பத்தியை ஸாதிக்கவேணும். இது பிறர்பாஷ்யத்தில் 4-வது அதிகரணத்தில் ஸாதிக்கப்படுகிறதென்றார்கள். முதல் ஸூத்ரத்தில் ப்ரயோஜனமென்னும் மோக்ஷத்தை ஸாதிப்பதாகவும் சொன்னார்கள். முதலில் விஷயம் ஸித்தித்தல்லவா அதன் ப்ரயோஜனத்தை விசாரிக்கவேணும். இப்படி முன்பின் க்ரமத்தை மாற்றுவது தலைகீழாகுமென்று ஸ்வாமி 26-ம் ச்லோகத்தில் காட்டினார்.

இந்த சாஸ்த்ரம் 4-அத்யாயங்கள் கொண்டது. (1) ஸமந்விதி, (2) அவிரோதம் (பாதிக்கத் தகாமை), (3) கரணம் (ஸாதனம்), (4) ப்ராப்தி (மோக்ஷம்). வேதாந்தங்களிலுள்ள ஜகத்காரணவாக்யங்கள் ப்ரஹ்மத்தைத்தான் காரணமாகவும் பரமபுருஷார்த்தமாகவும் விளக்குகின்றன என்று முதலாவதான ஸமந்வயாத்யாயம் பேசுகிறது. ப்ரஹ்மத்தின் காரணத்வத்தை ஸ்மிருதிகளாலாவது யுக்திகளாலாவது, மற்ற மதங்களாலாவது, ச்ருதிகளுக்குள் விரோதத்தாலாவது பாதிக்கமுடியாதென்று அவிரோதத்தை (அபாத்யத்வத்தை) 2-வது அத்யாயம் விளக்குகிறது. வைராக்யம், கர்மாநுஷ்டானம், சமதமாதி குணங்கள், ப்ரஹ்மத்தை உபாஸிப்பதென்ற பக்தியோகங்கள் (வித்யைகள்), ப்ரஹ்மத்தின் நிர்தோஷத்வம், மங்களகுணபூர்ணத்வம், ஜீவனுடைய ஸதோஷத்வம், பாரதந்த்ரியம் முதலியவற்றை 3-வது ஸாதனாத்யாயம் விளக்குகிறது. நான்காவது அத்யாயம் மோக்ஷப்ராப்திக்ரமங்களை விளக்குகிறது. முதலிரண்டு அத்யாயங்களும் சேர்ந்து ஓர் த்விகம்; அது ப்ரஹ்மமென்னும் விஷயத்தை விளக்குவது. அது விஷயத்விகம். பின்னிரண்டும் 'விஷயி த்விகம்'. ப்ரஹ்மத்தை ஞானத்திற்கும்

அநுபவத்திற்கும் விஷயமாக்குவது ; த்யானத்திற்கு விஷயம் ப்ரஹ்மம்; அது ஸாதனமுமாகிறது. பரம ப்ராப்யம் ப்ரஹ்மம். தன்னையடைய தானே ஸாதனமாகையாலும், தானே ப்ராப்யமும் தன் ப்ராப்தியே ஸாத்யமுமாகையாலும், பின்த்விகத்திலும் ப்ரஹ்மமே விஷயமாகச் சிந்திக்கப்படுகிறது. இப்படி இந்த சாஸ்த்ரம் முழுவதிற்கும் ப்ரஹ்மம் விஷயம். அத்வைதத்தில் 'ப்ரஹ்மம். சாஸ்த்ரத்திற்கு விஷயமன்றென்றும், ப்ரபஞ்சம் பொய் என்பதுதான் சாஸ்திரத்திற்கு விஷயமென்றும் சொல்லவேண்டியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஸூத்ரமோ 'ப்ரஹ்மவிஷயமான விசாரத்தை' ப்ரதிக்ஞை செய்கிறது. அவர்கள்மதத்தில் ஜிஜ்ஞாஸ்யதை சேராது.

முதல் அத்யாயத்தில் 4-பாதங்கள். முதல் பாதத்தில் ஜீவன் அசித் இவற்றைப்பற்றி ரொம்பவும் அஸ்பஷ்டமாகப் பேசும் கா்ரணவாக்யங்களும், 2-ல் அவற்றைப்பற்றிச் சிறிது அஸ்பஷ்டமாய்ப் பேசுவனவும், 3-ல் ஸ்பஷ்டமாகப் பேசுவனவும், 4-ல் மிகவும் ஸுஸ்பஷ்டமாகப் பேசுவனவும் விசாரிக்கப்படுகின்றன. 2-ம் அத்தியாயத்தில் 1-ல் ஸ்ம்ருதி, யுக்தி முதலியதால் அசைக்கக்கூடாமையும், 2-ல் மதாந்தரங்களால் அசைக்கக்கூடாமையும் 3-ல் ஆகாசம் முதலியதின் கார்யத்வம் முதலியதும், 4-ல் இந்திரியங்கள முதலியதின் கார்யத்வம் முதலியதும் விசாரிக்கப்படுகின்றன. 3-ம் அத்தியாயத்தில் 1-லும், 2-ல் முன் பாகத்திலும் ஜீவனுடைய தோஷங்களையும்(குறைவுகளையும்),2-ல் ப்ரஹ்மத்தின் நிர்தோஷத்வகுணபூர்ணத்வங்களையும், 3-ல் ப்ரஹ்மத்தினிடம் செய்யும் பக்திமார்க்கங்களையும், 4-ல் பக்தியின் அங்கங்களையும் விசாரிக்கிறார். 4-வது அத்தியாயத்தில் 1-ல் பக்தியின் (யோகத்தின்) ஆரோஹத்தையும்-சில ப்ரபாவங்களையும் 2-ல் பக்தியின் வேறு பிரபாவங்களையும் தேஹத்தை விட்டு உத்க்ரமணக்ரமத்தையும் 3-ல் மோக்ஷம் சேர்க்கும் அர்ச்சிராதிகதியையும் 4-ல் மோக்ஷபலத்தையும் நிரூபிக்கிறார். இதெல்லாம் ஒரு ச்லோகத்தில் (18-ல்) ஸாதிக்கப்பட்டது. அத்யந்தஸுகமாய் மனதில் சாரீரகம் முழுவதையும் தரிக்கலாம்.

இங்கே (1) உலகஸ்ருஷ்டி-கர்த்தாவாயும், (2) ஸர்வத்தையும் தனக்கு சரீரமாக உடையவனையும், (3) தனக்குத் தானே ஆதாரமாயும், விச்வாதாரனுயும், (4) எல்லையற்ற மஹிமையுடையவனு

யும், (5) ஸ்மிருதிகளாலும் யுக்திகளாலும் பாதிக்க அசக்யனும், (6) மதாந்தரங்களால் அசைக்கத்தகாதவனும், பாஞ்சராத்ராகமத்தால் ஆச்ரயிக்கத்தக்கவனும், (7) ஆகாசம் முதலியவற்றையும் ஜீவர்களையும் அததற்குத் தக்கபடி பிறப்பிப்பவனும், (8) ப்ராணன், இந்திரியம் முதலியவற்றைப் பிறப்பிப்பவனும், (9) லோகாந்தரங்களையும், சரீராந்தரங்களையுமடைவித்து ஸம்ஸாரதந்த்ர நிர்வாஹியாயும், (10) நிர்தோஷத்வ கல்யாணகுணகரத்வங்களால் மிகவும் ஆசைப்படத்தக்கவனும், (11) அநேக வித்யைகளால் அந்தந்த அதிகாரிகளால் பஜிக்கத்தக்கவனும், (12) அவரவர் வர்ணாச்ரமத்திற்குத் தக்க ஸ்வகர்மத்தால் ஆராதிக்கப்பட்டு பக்திவிரோதியான பாபங்களைப் போக்கி பக்திப்பெருக்குக்கு அநுகூலமான சுத்தியை அநுக்ரஹிப்பவனும், (13) தன்னையடைய விரோதிகளான பாபங்களைச் சேதிப்பவனும், (14) ப்ரஹ்மநாடியில் சேர்ப்பித்து அர்ச்சிராதிகதியெனுமேணியோடு ஸம்பந்தப்படுத்துபவனும், (15) அர்ச்சிராதி தேவதைகளால் மோக்ஷத்திற்கு நயநம் செய்பவனும், (16) தன்னோடு ஸாம்யத்தை (ஸமமான பேரின்பத்தையும் குணாஷ்டகங்களையும்) அநுக்ரஹிப்பவனும்—ப்ரஹ்மம் இந்த 16-பாதங்களில் அறிவிக்கப்படுகிறது. இப்படி 19-ம் ச்லோகத்தில் எல்லாப் பாதங்களின் முக்கிய விஷயங்கள் ஸங்க்ரஹிக்கப்பட்டன. 18, 19-ச்லோகங்களில் ஒவ்வொன்றும் தன்னுள்ளே 16-பாதங்களின் விஷயங்களையும் அடக்கிப் பிரித்து விளக்குகின்றன.

ப்ரஹ்மவிசாரம் ராகப்ராப்தமாயினும், அதை ஆசார்யன்முகமாகக் கேட்டே செய்யவேண்டுமென்று நியமம் விதிக்கப்படுகிறது என்று 21-ல் காட்டினர். அத்வைதவிவரணாதி க்ரந்தங்களில் இந்தப்படியே விவரிக்கப்பட்டது. முதல் பாதத்தில் முதல் 4-அதிகரணங்களும் ப்ரக்ருதமான சாஸ்திரத்தின் ஆரம்பத்தின் ஸித்தியைத் தருகின்றன ; இந்த சாஸ்த்ரம் ஆரம்பிக்கத்தக்கதல்லவெனும் 4-சங்கைகளை (ஆக்ஷேபங்களை)ப் பரிஹரிக்கின்றன. இவை நான்கும் உபோத்காதம் (முகவுரை). முதலிரண்டும் ஓர் த்விகம்; பின் இரண்டும் ஓர் த்விகம். முன்த்விகம் ப்ரஹ்மத்தைப் பற்றி அறிவை ஸாதிக்கிறது; பின்த்விகம் வேதாந்தங்களென்றும் சாஸ்த்ரம் ப்ரயோஜனமுள்ளதென்று ஸாதிக்கிறது. ஸித்தப்பொருளில் சப்தத்திற்கு அறிவிக்கும் சக்தியை முதலதிகரணத்

தில் ஸாதித்ததாலும், ப்ரஹ்மத்திற்கு ச்ருத்யுக்தலக்ஷணங்கள் பொருந்துமென்று ஸாதித்ததாலும், ப்ரஹ்மத்தைப்பற்றின அறிவையும் அதின் விசாரயோக்யதையையும் ஸாதித்தார். தார்க்கிகன் சொல்லுகிறபடி அநுமானயுக்திகளால் ப்ரஹ்மத்தை ஸாதிக்கக் கூடுமாயின், வேதாந்தவாக்யப் பொருளின்விசாரம் ஏதுக்கு என்ற ஆக்ஷேபம் வர, அநுமாநத்தால் ஸித்தியாது, சாஸ்த்ரமொன்றால்தான் ப்ரஹ்மம் ஸித்திக்குமென்று சாஸ்த்ரயோநித்வாதிகரணத்தில் காட்டப்படுகிறது. ப்ரஹ்மம் ஸ்வயமாகவே ப்ராப்யமான ஆநந்த கனப்பொருளென்று ஸமந்வயாதிகரணத்தில் காட்டி, வேதாந்தவாக்கியங்கள் ப்ரயோஜனப்பொருளை விளக்கமாட்டா என்கிற ஆக்ஷேபம் பரிஹரிக்கப்படுகிறது.

ஸித்தமான வஸ்துவை சப்தம் போதிக்க சக்தமே:– (1) கைவிரலால் குழந்தைகளுக்கு ஸித்தப் பொருளைக் காட்டி அதற்குப் பெயரான சப்தத்தைத் தாய் தகப்பன்மார் போதிக்கிறார்கள். இதனால் வ்யங்கியமான ரஸப்பொருளுமுண்டு; தத்வதர்சியான ஆசிரியர் புலனுக்கெட்டாத ப்ரஹ்மத்தையும் எதிரிலிருப்பது போல் விரலால் சுட்டிக்காட்டி நமக்குத் தெளிவுண்டாகும்படி போதிக்கிறார்கள். ஆசிரியர் நம் பிதா; நாம் அவர்கள் குழந்தைகள். (28.) (2) யானைக்கும் பாகர்கள் இப்படி ஸித்தப் பொருள்களுக்கு வாசக சப்தங்களைக் கற்பிக்கிறார்கள். திர்யக்குக்கு உண்டாகும் அறிவு நமக்கு ஏற்படாதா என்று காட்டுவதில் கருத்து. (30.) (3) 'உனக்குப் புத்திரன் பிறந்தான்' என்ற வாக்யத்தைக் கேட்டு ஸந்தோஷப் படுவதைப் பார்த்து 'புத்ர' சப்தத்திற்கு 'பிள்ளை' என்ற பொருள் தெரிகிறது. இந்த ப்ரஸ்தாவத்தால் சாஸ்த்ராரம்பத்தில் ப்ரஹ்மவித்யையால் சிஷ்யன் குருவுக்குப் புத்திரனாகப் பிறப்பதும் வ்யஞ்ஜிதம். பெருமாளுக்கும் இந்தக் குழந்தை புதியதாகப் பிறக்கிறது. (4) ப்ராப்யமான பயனாக ஸ்வர்க்கமென்னும் துக்கமற்ற ஸுகமயதேசத்தை மீமாம்ஸகர் வித்யர்த்தவாத வாக்யங்களால் அறிவிக்கப்படுவதாக ஒப்புகிறார்கள். ப்ரஹ்மத்தை மட்டும்தானா ஒப்பலாகாது.(34) ப்ரஹ்மம் விரும்பி விசாரித்தறிய யோக்யந்தான்; வேதாந்தசாஸ்திரங்கள் அதை போதிக்கத் தக்கனவே.

" பிறப்பு, இருப்பு, திரும்பவும் அபிஸம்வேசமெனும் லயம், இவை எதிலிருந்தோ, எதனாலோ, எதனுள்ளோ, அது ப்ரஹ்

மம், அது விஜிஜ்ஞாஸ்யம் ” என்பது லக்ஷணச்ருதி. ஸூத்திரத்திலுள்ள 'யத:' என்பது இம் மூன்று வேற்றுமைகளுக்கும் பொருந்தும். அபிஸம்வேசமென்பது ப்ரளயத்தையும் ஆத்யந்திகம், பிரியாத ஸம்ச்லேஷமான மோக்ஷத்தையும் சொல்லும். இந்த லக்ஷணத்தில் ப்ரஹ்மம் ஸகுணமென்றும், ஜீவனுக்கு ஜந்ம ஸ்திதிலயமோக்ஷங்களைத் தருகிறதென்றும் ஸ்பஷ்டம். ப்ரஹ்ம ஸூத்திரங்கள் முழுவதும் இந்த லக்ஷணத்தை ஸமர்த்திக்கின்றன. சாஸ்த்ரம் முடிவில் முக்தர்களுக்கு ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரகர்த்ருத்வயோக்யதையில்லை என்றும், ஆனந்தம் மட்டும் ப்ரஹ்மத்தோடு ஸமமென்றும் ஸூத்திரகாரர் தீர்மானித்தார். இந்த லக்ஷணம் ப்ரஹ்மத்திற்கு அஸாதாரணம், முக்தர்களுக்கில்லை என்று அதிவ்யாப்திதோஷத்தைப் பரிஹரித்து, இந்த லக்ஷணத்தை ஸமர்த்தித்து, அதோடு சாஸ்த்ரத்தை முடித்தார். காரணப் பொருள் புருஷனென்று புருஷஸூக்தம் பேசி, அவன் லக்ஷ்மீ பதியென்று அடுத்த நாராயணாநுவாகம் சுட்டிக் குறிப்பிட்டது. ஆகையால் காரணம் ஸ்ரிய:பதி; ச்ரிய:பதியே காரணமென்று ஸாதித்தார் (35-38.) ஒரு மரத்தின் கிளையைக் காட்டி 'இது சந்த்ரன்' என்று குழந்தைகளுக்குக் காட்டுவதுண்டு. ஆனால் கிளை சந்த்ரனன்று. அதுபோல காரணத்வம் என்னும் அடையாளத்தைக் காட்டி, சுத்த நிர்விசேஷப்ரஹ்மத்தை உபலக்ஷணம் செய்கிறார் என்று பேசுவது அறியாக் குழந்தைப் பேச்சு. (40.) வ்ருத்தரான பெரியோர் அருணாதிகரணத்தைக்கொண்டு, ஸத்யத்வம், ஞானத்வம், அநந்தத்வம் என்னும் பல விசேஷணங்களால் காட்டப்படும் எல்லா தர்மங்களும் விசேஷ்யமான ப்ரஹ்மத்தினிடத்தில் ஒருமிக்கச் சேருமென்பர். ஒன்று குழந்தைப்பேச்சு, மற்றொன்று மீமாம்ஸைக் கிழவர் பேச்சு என்று ரஸம்.

தார்க்கிகர் சொல்லும் ஈச்வராநுமானம் ஸரியான அநுமானமாகாது. அதை தத்வமுக்தாகலாபத்தில் விஸ்தாரமாய்க் கண்டித்தோமென்கிறார் (43.) தத்வமுக்தாகலாபம் ஸாராவளிக்கு முன்பே ஸாதிக்கப்பட்டது. அது பேரருளாளன் திருவடிவாரத்தில் ஸாதித்தது; இது கோயிலில். ச்ருதி 'யத:' என்று லக்ஷணம் கூறுவது அநுமானஹேதுக்களைக் குறிப்பதல்ல. முன் ச்ருதிகளில் ப்ரஸித்தமானதை அநுவதிப்பதேயாகும். (45). ஸ்ரீசங்கர பாஷ்யத்திலுள்ள இந்த விஷயம் நமக்கு அபிமதமானதால் இதைச்

சேர்த்துக்கொண்டார். தார்க்கிகருடைய ஈச்வராநுமானத்தைக் கண்டிக்காவிட்டால், சாஸ்த்ரம் சொல்லும் உபாதானகாரணத்வம் ஸித்தியாமற்போகுமென்பதை தத்வமுக்தாகலாபத்தில்விளக்கினார்.

குழந்தைகளுக்குப் பொய்க்கதையைச் சொல்லி ஆசை காட்டி தத்காலவின்பத்தைத் தருவதுபோல், உபநிஷத்துக்களும் ஸுக மயமான ப்ரஹ்மமிருப்பதாகப்பொய்யாக ஆசை காட்டலாமென்று சில நிரீச்வர மீமாம்ஸகர் பேசுவது குழந்தைப்ராயர் பேச்சென்றார். (46) கர்மகாண்டத்தில் அர்த்தவாதங்கள் விதியை ஸ்துதிப்பதற் காக அதிகமான ஸ்துதியைப் பேசுவதெல்லாம் உண்மையாகாவிடி னும், ப்ரஹ்மஸ்வரூபத்தை அறிவிப்பதற்காக மட்டும் ப்ரவ்ருத் திக்கும் ஸ்வரூபவாக்யங்களான அர்த்தவாதங்கள் அப்படியல்ல. விதிசேஷமல்லாமல், ஸ்வயம் நிரவதிகஸுகமாயும், ஸ்வத:ஸுகமா மாயும் அறியப்படுவதாலேயே புருஷார்த்தமாயும் உள்ள ஸத்ய நித்யாத்புத ஸுகபரப்ரஹ்மத்தை வேதாந்தங்கள் முழுத்தாத் பர்யத்தோடு ப்ரமாணமாக ப்ரதிபாதிக்கின்றன. ‘வேதத்தில் வேதாந்தங்கள் ஊஷரங்கள்’ (உவர் மண் பூமிகள்) என்று நிரீச் வரமீமாம்ஸகர் பேசுவது அயுக்தம். 49-ல் ஸமந்வயாதிகரணத்தில் ஸ்ரீபாஷ்யப்படி பல வாதங்கள் மேலே மேலே போகும் க்ரமத்தை ஸாதித்தார். ஸ்வயம் ப்ரயோஜனமான பொருளைக் காட்டும் ப்ர ஹ்மஸ்வரூபவிஷயமான அர்த்தவாதங்களால் சொல்லப்படும் பொ ருள் ப்ரமாணமே.

முதல் நாலு அதிகரணங்களும் சாஸ்த்ராரம்பத்தை ஸாதிக் கும் உபோத்காதபேடிகை. முதல் பாதத்தின் அதிகரணங்கள் 11. இந்த எண்ணிக்கையை ‘அக்ஷ’ என்று குறிப்பிட்டார். ‘அக்ஷ’ என் பது இந்த்ரியங்களுக்குப் பெயர். மனதைச் சேர்த்து 11-இந்த்ரி யங்கள். இந்தப் பாதத்தில் விசாரிக்கும் வாக்யங்கள் ஸ்பஷ்டமாக ப்ரஹ்மபரமென்று சொல்லக்கூடிய வாக்யங்கள். ஜந்மாத்யதிக ரணத்தில் சொல்லும் ஜகத்காரணத்வத்தை மேலே 1-4-ல் காரணத் வாதிகரணத்திலும், ஸமந்வயாதிகரணத்தில் சொல்லும் ஆநந்தமய நிர்தோஷ ஸ்வபாவத்தை 3- 2-ல் உபய லிங்காதிகரணத்திலும் ஸாதிக்கப்போகிறார். அக்ருதனுகவும் (ஸித்தனுகவும்), காரணத்வ லக்ஷணத்தால் லக்ஷிதனுயும், சாஸ்த்ரமொன்றாலேயே ஸித்திப்பவ னுயும், நிருபதிபரமப்ரேம போக்யனுயும், சதுஸ்ஸூத்ரியால் ஈச்வரன் ஸித்தித்தார்.

ஈக்ஷத்யதிகரணத்தில் ஸத்வித்யையின் விசாரம். பிறர் நினைப்பதுபோல இந்த வித்யை, நிர்குணமும் நிர்விசேஷமும் ஜீவனோடு ஒன்றேயாயுமான ப்ரஹ்மத்தைச் சொல்லவில்லை. காரணப் பொருளானப்ரஹ்மம் ஜகத்ஸ்ருஷ்டி ஸங்கல்பமெனும் முக்யமான ஈக்ஷணத்தோடு கூடியது. ஜகத்துக்குள் ப்ரஹ்மம் ஜீவாத்மாவோடு கூட அநுப்ரவேசித்து உலகத்திற்கு ஆத்மா (உயிர்) ஆயிற்று. ஜீவர்களும் ப்ரஹ்மத்தை உயிராக உடையவர்கள். ப்ரஹ்மத்திற்குள் ப்ரவேசித்து, முழுகி ஸம்பந்நரானல் துக்கமற்ற ஸுகம் நித்யமநுபவிக்கலாம். ப்ரஹ்மநிஷ்டனுக்கு மோக்ஷம். ப்ரஹ்மத்தின் ஸ்ருஷ்டி ஸங்கல்பம் முக்யமே, ஔபசாரிகமல்லவென்றதால் ஸாங்க்ய பக்ஷத்தைப்போல் அத்வைத பக்ஷமும் தள்ளப்படும். முக்யமான ஈக்ஷணத்தை ஸூத்ரம் ஸ்பஷ்டமாக அநுதியிடுகிறது. முதல் அத்யாயத்தின் கடைசி ச்லோகத்தில் "இது எப்படி அத்வைதத்திற்கு சேரும்" என்று கேட்டார். ப்ரஹ்மத்தில் நிஷ்டையுள்ளவனுக்கு மோக்ஷமென்றதால் பக்திநிஷ்டைதான் இந்தவித்யை. இதில்தான் அத்வைதபக்ஷத்திற்குள்ள ஜீவப்ரஹ்மைக்யமேற்படவேண்டும். ஸூத்திரங்களில் அதற்கு இடமில்லை. ஸத்தென்னும் ப்ரஹ்மத்திற்குள் மீளாத ஸம்பத்தி மோக்ஷம். விமோக்ஷமும் ப்ரஹ்மத்தில் ஸம்பத்தியுமொன்றென்றது. இதனுலும் ஜீவப்ரஹ்ம பேதம் ஸித்தம். 'விச்வவித்தும் விச்வமூர்த்தியுமான' ப்ரஹ்மம் இங்கே ப்ரதிபாத்யமென்று ஸாதித்தார். உள்ளே அனுப்ரவேசித்து நியமிப்பது ஆத்மா. ப்ரஹ்மம் சேதனுசேதனமான ஸர்வ ஜகத்துக்கும் ஆத்மா (பரமசரீரி). ஸர்வசரீரியாக உபாதான காரணமாகிறுர்.

ஸத்வித்யையிலிருந்து சில ஸம்சயங்கள் கிளம்பின. ஜீவனேப்ரஹ்மமாக இருக்கட்டுமே. 'அது நீயாயிருக்கிறுய்' என்று 9-தரம்படிக்கப் படுகிறது. 'ஸ்வமபீதோ பவதி' (ஸ்வமபீதோ பவதி) தன்னுள் அப்யயத்தை லயத்தை அடைந்தவனுகிறுன்' என்கிறது. ப்ரக்ருதிக்குஈக்ஷணம் முக்யமாக ஒட்டாவிடினும்சேதனனை ஜீவனுக்கு ஒட்டுமே. ஜீவன் ஜகத்காரணமாகட்டுமே என்பது ஸம்சயம். காரணப்பொருள் துக்கலேசமற்ற ஆநந்தமயம்; ஜீவர்களின் ஆநந்தம் எல்லாம் அந்த ஆநந்தமய ப்ரஹ்மத்தால் அநுக்ரஹிக்கப்படுகிறது. விஜ்ஞாநமயனென்னும் ஜீவனுக்குள்ளும் அந்தராத்மாவான ஆநந்தமயம் ஜீவனைக் காட்டிலும் வேறுபட்டவன். ப்ரஹ்மவித்தா

னவன் பரத்தை அடைவான்' என்று முதலிலேயே ப்ரஹ்மத்தை ப்ராப்யமாகவும், ஜீவனை அடைபவனாகவும் சொல்லிற்று. ஆநந்தமயம் முக்தனைக் காட்டிலும் வேறானது. ஆநந்தமயப்ரஹ்மத்திற்குள் புகுவதால் (கலப்பதால்) ஜீவனுக்கு ஆநந்தயோகம் கிடைக்கிறது. இப்படி பேதத்தையே, ஸூத்திரங்களும், ஆத்மாவாக அநுப்ரவேசிப்பதால் அதுவும் இதுவுமாயிற்று என்ற இந்த ச்ருதியும் ஸ்பஷ்டமாகக் காட்டிற்று. ஸமாநாதிகரணமான பேச்சுக்கு இதுவேகாரணம் 'ப்ரஹ்மம் ஸர்வஜகத்துக்கும் சாரீரனான ஆத்மா. ஆகையால் தான் 'சாரீரகம்' என்று சாஸ்த்ரத்தின் பெயர். 'அது உன் ஆத்மாவானதால் அது நீயாயிருக்கிறாய்' என்று ஸ்ரீசாங்கரஸத்வித்யாபாஷ்யம். 'ஸர்வமும் ஏததாத்மகம்'. ஸர்வத்திற்கும் ப்ரஹ்மமே ஆத்மா (உயிர்). ஸர்வமும் அதனுடல். 'ஜகத் ஸர்வம் சரீரம் தே'. இவ்விரண்டுவித்யைகள் ப்ரஹ்மம் ஸர்வத்திற்கும் உள்ளிருந்து நியமிப்பதைச்சொல்லுகின்றன. அந்தர்யாமி ப்ராஹ்மணமும் இதையேஇன்னும் ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறது. அங்கேஜீவன் அசேதனம் எல்லாம் ப்ரஹ்மசரீரமென்று ஸ்பஷ்டப் பேச்சு. 'சாரீரரான ஆத்மா' என்பது நிஸ்ஸங்கோசமாய் ஸர்வசரீரியைத்தான் சொல்லும். ப்ராப்யமான ஆனந்தமயனெனும் ஆநந்தஸமுத்திரத்தை உபஸங்க்ரமித்து(அடைந்து) பூர்ணாநந்தமடைகிறான். முக்தனுக்கும் ப்ரஹ்மத்துக்கும் ஆனந்தம் ஸமம். முக்தனுடைய ஆநந்தத்திற்கு ப்ரஹ்மம் தான் மூலமென்கிற ஏற்றம் மட்டுமுண்டு. ஒரு மூலத்திலிருந்து எடுக்கும் பல அச்சு நகல்களும் மூலத்தைப் போன்றனவே; ஈஷத்துக்கூட தாரதம்மியமிராது. மூலமூலிபாவம் மட்டுமுண்டு. அஸல் நகலென்ற பேதம்.

பகவானுக்கு ஸர்வஜகத்தும் சரீரமென்றார். அப்ராக்ருதமான திவ்யமங்களவிக்ரஹம் அவருக்குண்டு. ஜீவனுக்குள்ளிருக்கும் அந்தராத்மாவான ஆநந்தமயப்ரஹ்மமும் ஸூர்யனுக்குள்ளிருக்கும் ஹிரண்மயபுருஷனும் ஒன்றே என்றுஆனந்தமயச்ருதி ஓதுகிறது. அந்தராதித்தியபுருஷனும் ப்ரஹ்மம்தான். அவன் ஸர்வபாப்மோதிதன். ஸ்வேச்சையால் அவன் திவ்யவிக்ரஹத்தைப் பரிக்ரஹித்தான். அவன் சரீரம் கர்மக்ருதமன்று, ஏனென்றால் அவன் பாபமற்றவன். அவனை இப்படி அறிந்து உபாஸிப்பவனுக்கு எல்லாப் பாபமும் அற்றுப்போகும். இந்த அந்தராதிகரணத்தில் ஸூத்ரகாரர் அந்தர்யாமிச்ருதியை எடுத்து, அதில் ஆதித்தியனுக்குள்

அந்தராத்மாவாக இருந்து நியமிப்பவனென்று ஸூர்யனைக் காட்டிலும் வேறென்று பேசியிருப்பதால், ஆதித்தியனல்ல வென்கிறார். இந்த பேதவ்யபதேசஹேது ஜீவன்விஷயத்திலும் ஸமம். 'ஆத்மா' 'விஜ்ஞானம்' என்னும் ஜீவனுக்குள் அந்தர்யாமியாயிருக்கும் ப்ரஹ்மம் ஜீவனிலும் வேறு என்பது திண்ணம். முன்னிரண்டு வித்யைகளிலும் உள்ளே அநுப்ரவேசித்த அந்தர்யாமியாக ஆத்மாவாக ப்ரஹ்மம் பேசப்பட்டது. 'பாபம்' என்னும் சப்தம் புண்ணியத்தையும் உட்கொள்ளும். இரண்டும் ப்ரஹ்மவித்துக்கு அநிஷ்டம்.

இந்த அத்தியாயத்தில், ஜீவன் ப்ரக்ருதி முதலியது காரண வாக்யங்களில் ப்ரதிபாத்யமென்று சங்கித்து, அவையல்ல, அவற்றைக் காட்டிலும் வேறான ப்ரஹ்மம்தான் ப்ரதிபாத்யமென்று பல அதிகரணங்களில் தீர்மானிக்கிறார். ஒவ்வோர்வாக்கியத்திலும் ப்ரஹ்மத்தின் அஸாதாரணமான உத்க்ருஷ்டகுணங்களையும் காட்டுகிறார். ஜீவப்ரஹ்மபேதத்தையும், ப்ரஹ்மத்தின் உயர்ந்த கல்யாண குணங்களையுமே காட்டிவருவதால் பிறர்மதத்திற்கு இடமேயில்லை.

மேல் நான்கு அதிகரணங்களில் ஆகாசம், ப்ராணன், ஜ்யோதிஸ்ஸு, இந்த்ரன் இந்த விசேஷசப்தங்களைக்கொண்டு அந்தந்த வாக்யம் அதனை ப்ரதிபாதிக்கிறது, ப்ரஹ்மத்தைப் பிரதிபாதிக்கவில்லை என்று ஆக்ஷேபம் வர, அந்த ஆக்ஷேபங்கள் தள்ளப்படுகின்றன. ப்ரஹ்மத்திற்கே அஸாதாரணமான குணங்கள் காணப்படுவதால் அந்த சப்தங்களையும் ப்ரஹ்மபரமாக யௌகிகமாகவோ தத்விசிஷ்டமென்றோ பொருள்கொள்ளவேணும். நிரவகாசமான லிங்கங்களால் ரூடப்பொருள்கூடிய ச்ருதியை அநாதரித்து அந்த சப்தங்களுக்கு யோகப்பொருள் முதலியதைச்சொல்லி ப்ரஹ்மபரமாக்கவேணும்.

"ஸவ௯ாணி ஹவா இ௨ாநி ஹ௯தாநி ஆகாஶாஜெவ ஸமு௯ஜ௯ஷெ"(ஸர்வாணி ஹவா இமாநிபூதாநி ஆகாசாதேவஸமுத்பத்யந்தே) என்று ஆகாசவாக்யம். 'ஹ வா' என்பது பூர்வப்ரஸித்தியைக்காட்டும். முன்பேச்ருதிப்ரஸித்தியால் எதுகாரணமோ, அது தான் 'ஆகாசம்' என்ற பெயரால் இங்கே அநுவதிக்கப்படுகிறது. முன் ச்ருதிப்ரஸித்தியால் ஸத், ஆத்மா என்ற ப்ரஹ்மம்

தான் காரணம். 'அந்த ஆத்மாவிடமிருந்து ஆகாசமுண்டாயிற்று' என்று ஆநந்தமயவாக்யம். ஆகையால் பூதாகாசமென்ற பொருள் கூடாது. இந்தக் காரணம் 'பராயணம்', 'பரமப்ராப்யம்' என்று இந்த ஆகாசவாக்யத்தில் படித்துளது. இது ப்ரஹ்மத்திற்குத்தானொட்டும், பூதாகாசத்திற்கொட்டாது. 'ப்ரஹ்மவிதாப்நோதி பரம்'. இப்படியே ப்ராணவாக்யமும் முக்யப் பிராணனைப்பேசவில்லை, ஸர்வஜகத்தையும் ப்ராணனம் செய்யும் ப்ராணப்ராணமான ப்ரஹ்மத்தைத்தான் பேசுகிறது. "ஸர்வாணி ஹவா பூதாநி ப்ராணமேவாபிஸம்விசந்தி" (ஸர்வாணி ஹவா பூதாநி ப்ராணமேவாபிஸம்விசந்தி) (எல்லாம் ப்ராணனுக்குள் லயமடைகின்றன). ப்ராணனேயில்லாத சிலாதிகள் (கல்) எப்படி ப்ராணனுக்குள் லயிப்பதாக ஸம்பவிக்கும்? இதுவும் ப்ரஹ்மதர்மமே.

ஜ்யோதிர் வாக்கியத்திலுள்ள ஜ்யோதிஸ்ஸு அக்னியல்ல; பரமாத்மாதான். "ஸர்வபூதங்களும் அதன் பாதம் (அம்சம்); அதன் மூன்று பாதங்கள் (பாகங்கள்) பரமபதத்திலிருக்கின்றன" என்று முன் காயத்ரீவாக்யம். அங்கே சொல்லப்பட்ட பொருள் தான் இந்த ஜ்யோதிஸ்ஸு. புருஷன் குக்ஷியிலுள்ள ஜ்யோதிஸ்ஸோடு ஒன்றான இந்த ஜ்யோதிஸ்ஸும், வைச்வாநரனாக உள்ளே சதுர்விதமான அந்நத்தையும் ஜரிக்கச் செய்யும் ஈச்வரனே. புருஷஸூக்தத்திலுள்ள வாக்யமே ஜ்யோதிர் வாக்கியத்திற்கு முன் இங்கே படித்துளது. இந்த வாக்யமும் நாராயணபரமே. 'நாராயண பரோ ஜ்யோதிஃ (நாராயண, பரோ ஜ்யோதி:)

கௌஷீதகியில் ப்ரதர்தன வாக்கியத்தில் இந்த்ரன் "நான் ப்ரஜ்ஞாத்மாவான ப்ராணன். அந்த என்னை ஆயுஸ்ஸு, அம்ருதமென்று உபாஸி" என்று உபதேசிக்கிறார். 'நான் த்ரிசீர்ஷனை த்வாஷ்ட்ரனைக் கொன்றேன்' என்கிறார். இங்கே பேசுகிறவர் இந்த்ரனென்பது திண்ணம். இங்கே 'நான்' என்பதற்கு 'என்னுயிரான் என்னைச் சரீரமாகவுடைய பரமாத்மா' என்று பொருள். 'மத்விசிஷ்டனான பரமாத்மா'. இதுதான் இந்த சாரீரகசாஸ்த்ரதர்சனம். சாஸ்த்ரம்சாரீரகம்; சாஸ்த்ரத்ருஷ்டி சாரீரகத்ருஷ்டி. ஆகையால் அங்கே உபாஸ்யம் பரமாத்மா. உபாஸனங்கள் மூன்றுவிதம். கேவலப்ரஹ்மத்தின் உபாஸனம் (1), ஜீவசரீரகனாக ப்ரஹ்மத்தின் உபாஸனம் (2), போக்யவர்காதிசரீரகனாக உபாஸ

னம்(3). இப்படி மூன்று விதமாகவும் வேதாந்தங்களில் உபதேசிக்கப்படுகிறது. இந்த ப்ரதர்தனவித்யையில் ப்ராணசரீரகனுக இந்த்ர சரீரகனுக பரமாத்மாவை உபாஸிக்கவேணுமென்று உபதேசம். 'மாம்' என்பதற்கு 'ஶரீரனுன பரமாத்மாவை' என்று பொருள். இங்கே ஸ்ரீசாங்கரபாஷ்யத்தில் ப்ராசீனவ்ருத்திகாரருடைய வ்யாக்யானமென்று நம்பாஷ்யப் பொருளை இரண்டாவது அர்த்தமாகக் கூறியுளது. 'பூர்வோக்தார்த்தத்தில் அபரிதோஷம்'. ப்ராசீனப் பொருள் நம் பாஷ்யப் பொருள். இதை நிர்க்குண ப்ரகரணமென்கிருர்கள். 'உபாஸனம்தான்' இங்கே உபதேசிக்கப்பட்டதென்று ஸூத்ரம் ஸ்பஷ்டமாகப் பேசுகிறது. உபாஸனமென்பது ஸகுண ப்ரஹ்மவிஷயத்தில்தான் ஸ்வரஸம். இந்த்ரனும் 'உபேந்த்ரனுன பரமாத்மாவைத் தன் அந்தராத்மாவானதால் தானென்று பேசினுர். 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' (அஹம் ப்ரஹ்மாஸ்மி) என்றவிடத்தில் 'அஹம்' என்பது ஸ்வாத்மவிசிஷ்டமான பரமாத்மாவைச் சொல்லுகிறது.

“ ஸ்வேச்சையினுல் ஸ்வஸங்கல்பத்தால் ஸர்வகாரணமும், கல்யாணகுணவிபூதியோடு அநந்தநிஸ்ஸீமாநந்தமுடையவனும் கர்ம ஜநிதமல்லாத சுத்தமான நித்தியவிக்ரஹத்தோடு கூடியவனும், எங்கும் ஸ்வயமாக ப்ரகாசிக்கும் ஆகாசனுயும், ப்ராணனுள்ளவை ப்ராணனில்லாதவையான எல்லாவற்றிற்கும் உயிராயும், (ப்ராணனுயும்) நிரதிசயதிவ்யதீப்தியுடையவனும், ப்ராணன் இந்த்ரன் இவற்றிற்கு அந்தராத்மாவாயும், ப்ரபு ஏழு அதிகரணங்களால் ப்ரதிபாதிக்கப்பட்டார்” என்று 5-முதல் 11-அதிகரணங்கள் பகவத் குணப்ரதிபாதகங்களாகக் கடைசி ச்லோகத்தில் ஸங்க்ரஹிக்கப்பட்டன.

இரண்டாம் பாதம்.

முதல்பாதத்தில் ப்ரஹ்மத்திற்கு ஜகத்காரணத்வம் இல்லவேயில்லை; ஜீவன், ஆகாசம் ப்ராணன், அக்நி, இந்த்ரன் முதலியவைதான் காரணமென்று பூர்வபக்ஷம். 2, 3, 4-பாதங்களில் ஓரிடத்தில் ப்ரஹ்மம் காரணமாக இருக்கட்டும், சிலவிடங்களில் மற்றதும் காரணமாயிருக்கக்கூடுமென்று ஆக்ஷேபக்ரமம். கொஞ்சம் இடத்தை ஸம்பாதித்துக்கொண்டு மேலே முழுவதையுமழிக்க

க்ரூரமான எண்ணம். இந்தப் பாதத்தில் விஷயவாக்யங்களில் ஜீவன் ப்ரக்ருதி முதலியவையின் லிங்கங்கள்(அடையாளங்கள்)அஸ்பஷ்டம். ப்ரஹ்மலிங்கங்கள் ஸ்பஷ்டமென்பர் அத்வைதத்தில். அதனாலதிக பேதமில்லை. இந்தப் பாதத்தில் ஸகுண வாக்யவிசாரம் என்றும், 3-ம் பாதத்தில் நிர்குணவாக்யவிசாரமென்றும் கூறுகிறார்கள். அது த்ருஷ்டவிருத்தம்.

முன் அதிகரணத்தில் ப்ராணசரீரகனான ஈச்வரனை உபாஸிக்கச் சொன்னது. அங்கே 'ப்ராணனை உபாஸி' என்பதற்கு, 'ப்ராணசரீரகனை உபாஸி' என்றும், 'என்னை உபாஸி' என்பதற்கு 'என்னைச் சரீரமாக உடைய என்னோடு விசிஷ்டனான ஈச்வரனை உபாஸி' என்றும் பொருளென்பது நியாய பலத்தால் தீர்மானிக்கப்பட்டது. இங்கே முதலதிகரணத்தில் சாண்டில்யவாக்யத்தில் 'ப்ராணசரீரகனாக' உபாஸிக்கவேணுமென்று ஸ்பஷ்டவசனமே யுளது. '𑌏𑌷 𑌮 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑍃𑌦𑌯𑍇' (ஏஷ மே ஆத்மா அந்தர்ஹ்ருதயே) என்று உபாஸகன் திரும்பவும் திரும்பவும் ப்ரஹ்மத்தை அந்தராத்மாவாக பொங்கும் ப்ரஹர்ஷத்துடன் அநுஸந்திக்கிறான். 'எவனுக்கு ப்ராணன் சரீரமோ, அவன் உபாஸ்யன்' என்று ஸாராவளி முன் அதிகரணத்தை அநுவதித்ததற்கு 'இங்கே ப்ராணசரீரத்வம்' உபாஸ்யகுணமாக வசனத்தாலேயே காண்கிறதென்கிற ஸங்கதி யழகைக் காட்டுவதில் திருவுள்ளம். சாண்டில்யர் பக்திஸூத்ரம் இயற்றியவர். முன் அதிகரணத்தில் ப்ரஹ்மத்தை மட்டும் உபாஸிப்பது உபாஸனைகளில் ஓர்விதமென்றார். அதுவும் குணசூன்யமாக நிர்விசேஷத்தை உபாஸிப்பதல்ல; அநேக குணங்களோடு விசிஷ்டமாக உபாஸிக்கவேணுமென்று ஸூத்ரகாரர் ஸ்பஷ்டமாகத் தீர்மானிக்கிறார். குணங்களில் விவக்ஷை ஸம்பூர்ணமாக உண்டென்கிறார். '𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑌗𑍁𑌣𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌶𑍍𑌚' 1-2- (விவக்ஷிதகுணோபபத்தேச்ச) என்று ஸூத்ரம். உபாஸ்யன் உபாஸகன் என்னும் கர்மகர்த்ருபேதத்தாலும், "என்னுள்ளே அந்தராத்மாவாக எனக்கு ஸேவை ஸாதிக்கவேணுமென்றே விச்வாத்மா எழுந்தருளியிருக்கிறார். இத்தேஹத்தைக் கழித்து இவரையே அடைவேன்" என்று வேற்றுமைப் பேச்சிருப்பதாலும் ஜீவன் வேறு, ப்ரஹ்மம் வேறு என்று ஸூத்ரங்கள் ஸ்பஷ்டமாகக் கூறுகின்றன. முன் அதிகரணவாக்யத்தில் இந்த்ரன்

தன்னை உபாஸியென்று பேசினாலும், ‘தன் அந்தராத்மா ப்ரஹ்மம்’ என்ற சாரீரக சாஸ்த்ர தர்சனத்தைக் கொண்டுதான். தானே பரமாத்மாஎன்ற எண்ணத்தாலல்ல. வாமதேவரைப்போன்ற சாண்டில்யபகவான ‘𑌏𑌷 𑌮 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑍃𑌦𑌯𑍇’ (ஏஷ மே ஆத்மா அந்தர்ஹ்ருதயே) என்று பேசுவதைப்போல்தான் அது என்று சாஸ்த்ரத்ருஷ்டியை ஸூத்திரகாரர் உடனே இங்கே ‘அந்தராத்ம த்ருஷ்டி’ என்று ஸ்பஷ்டமாகக் காட்டுகிறார். முன்னே உபாஸனத்தைப் பேசிவிட்டு, இங்கே உபாஸனத்தின்படி பலம் ஸித்தமென்கிறார் தத்க்ரதுந்யாயத்தைக் காட்டி. இந்தப் பாதத்தில் ஸர்வஜகத்தும் ப்ரஹ்மத்திற்குச் சரீரமென்று விளக்கப்படுகிறது. இதெல்லாம் ப்ரஹ்மம்தான், அதிலிருந்தே உத்பத்தம், அதினுள்ளேயே நிற்பது, அதனுள்ளேயே லயிப்பது. ‘ஸர்வத்ர’ எங்கும் ப்ரஹ்மம் ஆத்மாவாக வ்யாபித்துளது. எல்லாவற்றிற்கும் அது ஆத்மா என்பதால் எல்லாம் அதன் சரீரம்.

இரண்டாவது அத்த்ரதிகரணம். இதில் கடவல்லியின் விசாரம். இது நிர்குணமென்பது ஒட்டாது. ஸம்ஹாரகர்த்தாவாக ப்ரஹ்மத்தை ஸூத்திரகாரர் உபபாதிக்கிறார். ஸம்ஹர்த்தா ஸகுணமே. ஹ்ருதய குஹைக்குள்ளே இரண்டு ஆத்மாக்களிருக்கிறார்களென்று ஸ்பஷ்ட ஸூத்திரம். ஒருவன் ஈசன், மற்றவன் அநீசன். ஒருவன் ‘அத்தா’ கர்மபலமுண்பவன். மற்றொருவன் அநத்தா; ஸாக்ஷீ. ஜீவனும், ப்ரஹ்மமும் ஒன்றென நினையாதே என்று ச்ருதிஸூத்திரோபதேசம். இரண்டு ஆத்மாக்கள் ஒரு ஹ்ருதயத்திலுள்ளனவென்றதாலும், அதில் ப்ரஹ்மத்தை ஸந்துஷ்டனாக்கி, அவன் தர்சனத்தைப் பெற்றால், அவன் மஹிமையை அடைகிறானென்றும், பிரித்து ‘விசேஷணம்’ செய்வதாலும் பேதம் நிச்சயம். அத்வைத வ்யாக்யானமும் இப்படியேதான்.

அடுத்த (3-வது) அதிகரணத்தில் உபகோஸலவித்யாவிசாரம். ஸுகவிசிஷ்டமானது ப்ரஹ்மமென்று ஸ்பஷ்டஸூத்திரம். அதுஹேது இதனால் ஆனந்தகுணவைசிஷ்ட்யம் ஸித்தம். ‘இங்கே சொல்லும் குணங்களெல்லாம் ப்ரஹ்மத்திற்குத்தானென்றும், என்று ஸ்ரீசங்கரபாஷ்யம். அர்ச்சிராதிகதியைச் சொல்லுவதால், இது ப்ரஹ்மவித்யைதான் என்றார் ஸூத்திரகாரர். ப்ரஹ்மவித்யாஸாயுஜ்யத்திற்கு இந்த கதிதான் மோக்ஷமார்க்கமென்பது திண்ணம்.

இங்கே கண்ணுக்கு உள்ளே உள்ள ப்ரதிபிம்பம்தான் அக்ஷிபுருஷனென்று ஓர் பூர்வபக்ஷம். இதற்கு சங்கையே கூடாதென்று தோன்றலாம். இப்பூர்வபக்ஷத்திற்கு 'ஸ்வாதந்த்ர்யோத்கம்ஸிதாஸ' (ஸ்வாதந்த்ரியோத்கம்ஸிதாஸ)என்ற ஓர் ச்லோகத்தால் அழகாகப் பலம் கட்டப்பட்டது. ஸ்ரீ தீக்ஷிதர் இதினழகில் ஈடுபட்டு சிவார்க்கமணிதீபிகையில் இதை உபயோகப்படுத்தினார்.

அடுத்தது அந்தர்யாம்யதிகரணம். முன் அதிகரணத்திலும், 'ஸ்தாநாதி' (ஸ்தாநாதி) என்னும் ஸூத்திரத்தில் அந்தர்யாமி ச்ருதியை எடுத்தார். இங்கே முழு அதிகரணமும் அதைப்பற்றியே. சாரீரகஸூத்திரங்கள் திரும்பவும் திரும்பவும் அந்தர்யாமி ச்ருதியை உதாஹரிப்பது உசிதமே. இந்த ச்ருதி உபாஸன வாக்யமல்ல; ஸ்வரூபவாக்யந்தானென்று அத்வைதவ்யாக்யானமான ர்த்நப்ரபை அறுதியிட்டது. ஜகச்சரீரகத்வம் தத்துவமே என்பது ஸ்பஷ்டம். மற்ற ஜகத்தைப்போல நம் ஆத்மாவும் ப்ரஹ்மத்திற்குச் சரீரமே என்று ஸ்பஷ்டவசனம். ஸூத்திரமும் ஜீவேச்வரபேதத்தை ஸ்பஷ்டமாகத் தீர்மானிக்கிறது.

அடுத்த அதிகரணம் அத்ருச்யத்வாதிகரணம். இதில் முண்டகத்தின் விசாரம். முண்டகம் நிர்க்குணபரமென்கிறார்கள். பாதி இங்கும், பாதி அடுத்த பாதம் முதலிலும் விசாரிக்கப்படுகிறது. ஒரே வித்யை பாதி ஸகுணமும், பாதி நிர்குணமுமாகுமோ? ப்ரஹ்ம தர்மங்களையும் ஜீவேச்வர பேதவ்யபதேசத்தையும், ப்ரஹ்மரூபத்தின் உபந்யாஸத்தையும், இங்கு உள்ள மூன்று ஸூத்திரங்களும் ஹேதுவாக்குகின்றன. 'எவன் ஸர்வஜ்ஞனோ ஸர்வவித்தோ அவனிடமிருந்து எல்லாமுண்டாகிறதென்று' இங்கு ஸ்ரஷ்டாவான ஸகுணப்ரஹ்மமே ப்ரதிபாத்யம்.

வைச்வாநராதிகரணம் ஸகுணப்ரஹ்மபரமென்று பிறரும் ஒப்புகிறார்கள். இந்தப் பாதத்தில் முதல் மூன்று அதிகரணங்களில் உபாஸகனுடைய ஹ்ருதய குஹையும், கண்ணுமான சின்ன ஸ்தானங்கள் ப்ரஹ்மஸ்தானமாக உபதேசிக்கப்பட்டன; பின் மூன்று அதிகரணங்களிலும் விச்வத்தையும் சரீரமாக உடைமை முதலிய பெரியஸ்தானங்கள் காட்டப்படுகின்றன, 'அக்நி சிரஸ்ஸு, சந்த்ரஸூர்யர் கண்கள், திக்குகள் ச்ரோத்ரங்கள்' என்றுள்ளது.

வைச்வாநரவித்யையில் 'த்யுலோகம் சிரஸ்ஸு, பூமி பாதங்கள்' என்றுளது. முண்டகத்தில் அக்நியென்பது த்யுலோகத்தைச் சொல்லுகிறது.

அசேஷஜகத்தின் ஸத்தாஸ்திதிப்ரவ்ருத்திகள் தன்னதீனமாயிருப்பதால் ஸர்வஜகத் ப்ரகாரமாக நிற்பவனும், ப்ரளயத்தில் ஸர்வஜகத்தையும் தன்னுள்ளே வைப்பவனும், சண்ணுள்ளே எப்பொழுதும் நிற்பவனும், ஸர்வசரீரியும், அக்னி முதலியதை உபாஸனத்திற்காகச் சரீரமாகக் கல்பிக்கப்பட்ட ரூபமுடையவனும், ஸ்வர்க்கலோகம், ஆதித்யன், வாயு, ஆகாசம், ஜலம் முதலியதைச் சிரஸ் முதலிய அவயவமாக உடைய வைச்வாநரனுமுள்ள ஸ்ரீநிவாஸன் இந்தப் பாதத்தில் 6-அதிகரணங்களாலும் ப்ரதிபாத்யன் என்று கடைசி சுலோகத்தில் பாதத்தை ஸங்க்ரஹித்தார். சடவல்லியில் விஷ்ணுவையும், ஸௌபால அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் நாராயணனையும் ஸ்பஷ்டமாகக் கூறியுளது.

மூன்றும் பாதம்.

இந்தப் பாதத்தில் ஜீவன் ப்ரக்ருதி முதலியதின் அடையாளங்கள் ஸ்பஷ்டமாக இருக்கும் காரணவாக்யங்கள் விசாரிக்கப்படுகின்றன. 'ஸ்பஷ்டங்களான ஜீவாதிலிங்கங்களாலே' என்று அழகாக இப்பாதத்தின் ஸாராவளி தொடங்குகிறது. ப்ரஹ்மம் எல்லாத்திற்கும் ஆதாரமாக விச்வத்தைத் தாங்குகிறதென்பது இந்தப் பாதத்தில் முக்கியமாகப் பிரதிபாத்யம். 'த்யுப்வாத்யாயதநம்' (த்யுப்வாத்யாயதநம்) என்பது முதல் ஸூத்ரம். விச்வத்திற்கெல்லாம் ஆதாரம், வாஸஸ்தானம். முன் பாதத்தில் ஸர்வத்திலும் உள்ளே அந்தர்யாமியென்றது.

இங்கே மொத்தம் பத்து அதிகரணங்களுண்டு. அதில் முக்யமாக ஏழு ஸங்கதம். நடுவில் மூன்று அதிகரணங்கள் ப்ராஸங்கிகமாக அதிகாரவிசாரத்தைப்பற்றி வருகின்றன. அதில் தேவர்களுக்கு ப்ரஹ்மவித்யையில் அதிகாரமுண்டென்று தீர்மானம். அதனால் மற்ற தேவரொருவரும் காரணமாயிருக்கமுடியாதென்று நிச்சயமாவதால், காரணவிசாரத்தில் அதுவும் நேராய் ஸங்கதம் என்று அழகாகக் காட்டினார்.

முன் பாதத்தில் அத்ருச்யத்வாதிகரணத்தில் முண்டகத்தின் முன் பாகம் விசாரிக்கப்பட்டது இங்கே பின் பாகம். அங்கே ப்ராக்ருதி ஜீவலிங்கங்கள் அஸ்பஷ்டங்கள். இங்கே ஸ்பஷ்டங்கள். இங்கே முக்தர்களால் ப்ரஹ்மம் ப்ராப்யமென்றும், ஜீவனுக்கொட்டாத ப்ரஹ்மதர்மங்களே இங்கே கூறப்பட்டன வென்றும், ஜீவனும், ப்ரஹ்மமும் வேறு வேறென்றும், ஸ்பஷ்டமாக ஸூத்திரங்கள் பேசுகின்றன. இது அத்வைதத்தில் நிர்குணப்ரகரணம். ஸூத்ரகாரர் ஸகுணம் (ஸதர்மகம்), ஜீவனைக் காட்டிலும் வேறுபட்டவன், ஜீவனுக்கு மோக்ஷப்ரதன், ஜீவனால் ப்ராப்யன் என்று நிர்விசேஷத்திற்கும், ஏகத்வத்திற்கும் விரோதமாகவே பல ஸ்பஷ்டஸூத்திரங்களால் தீர்மானிக்கிறார். இங்கே ஹார்த்தரென்று அந்தர்யாமி விக்ரஹத்தோடு பகவான் அந்தந்த ஹ்ருதய குஹையில் அவதரித்துள்ள அவதாரங்களைக் கடைசி ஸூத்திரங்கள் காட்டுகின்றன.

2-வதான பூமாதிகரணத்தால் ப்ரஹ்மம் எல்லையற்ற ஸுகமானதென்றும், அந்த வித்யையில் சொல்லப்பட்ட தர்மங்களெல்லாம் ப்ரஹ்மத்திற்குத்தானொட்டுமென்றும், ஜீவனைக் காட்டிலும் ப்ரஹ்மம் மேற்பட்டதென்றும் ப்ராப்யமான அநந்தஸுகமென்றும் காட்டப்படுகிறது. அத்வைதபக்ஷத்தில் பூமவித்யை நிர்க்குணவிஷயம்; ஸூத்திரபக்ஷத்தில் அது ஸகுணவிஷயமே.

அடுத்த அக்ஷராதிகரணத்தில் அவ்யாக்ருதாகாசம் முதலிய ஸகலமும் ப்ரஹ்மத்தால் தாங்கப்படுகிறது, ஆளப்படுகிறது என்கிறார்.

அடுத்த அதிகரணத்தில் 'ப்ரஹ்மம் ஈக்ஷதிகர்ம', 'பார்ப்பதெனும் வினைக்குப் பயனிலே' என்று ஸூத்திரத் தீர்மானம். அத்வைதமதத்தில் ப்ரஹ்மம் அறிவெயல்லாது அறியப்படுவதல்ல, காணப்படுவதல்ல. வ்ருத்திவ்யாப்திமட்டுமே, பலவ்யாப்தியில்லை என்பர். இங்கே 'கர்ம' என்பதால் பார்க்கும் கர்த்தாவுக்கு 'ஈப்ஸிததமம்' 'க்ரியயா ஆப்துமிஷ்டதமம்'(க்ரியயா ஆப்தும் இஷ்டதமம்) என்று ஸூத்ரகாரர் பலவ்யாப்தியை அறுதியிடுகிறார்.

தஹராகாசமெனும் ப்ரஹ்மத்தினிடம் த்யாவாப்ருதிவீ முதலியதெல்லாம் அடங்கியிருக்கிறது. இந்த வாக்யத்தில் ப்ரஹ்மமும்

அதன் குணங்களும் உபாஸ்யங்கள். குணங்கள் ஸத்யமென்று ச்ருதியின் ஸ்பஷ்டப் பேச்சு. ப்ரஹ்மத்தின் எண்குணங்களும் அதன் அநுக்ரஹத்தால் முக்தனுக்கும் ஆவிர்ப்பவிக்கின்றன. ஸத்யகாமனால் உபாஸிக்கவேண்டிய ஸத்யகாமங்கள் ஸத்யகுணங்கள். எண்குணங்களும் ப்ரஹ்மத்திற்கு ஸ்வதந்த்ரமாக உண்டு; முக்தருக்கு அவரது அநுக்ரஹத்தால் ஆவிர்ப்பவிப்பன. மூலமூலிபாவத்தால் தாத்ருப்ரதிக்ரஹீத்ரு பாவத்தால் ப்ரஹ்மத்திற்கு எற்றம். அவரோடு ஸாம்யத்தை அவர் உதாரசீலராய் அநுக்ரஹிக்கிறார். ப்ரஜாபதிவாக்கியத்தால் ஜீவஸ்வரூபத்தை சோதித்து, சுத்தஜீவஸ்வரூபத்திற்கு எண்குணங்களும் ப்ராப்தமெனப்படுகிறது. ஜீவனும் சுத்தனாய் எண்குணங்களோடு கூடி குணபரிபூர்ணமான ப்ரஹ்மத்தை அனுபவிக்கிறான். இந்த இரண்டு வாக்யங்களையும் ஒன்றாக (ஏக வாக்கியமாகக்) கொள்ளவேண்டும். ஸூத்ரமும் ஒரே வாக்யத்தின் பின்பாகம் என்று பேசுகிறது. ஜீவஸ்வரூபத்தை சோதித்து ஸ்வஸ்வரூபத்தைச் சுத்தமாக ஸாக்ஷாத்கரிப்பது தஹரப்ரஹ்மோபாஸனத்திற்கு அங்கம். ஒன்று ஸகுணவிஷயம், மற்றொன்று நிர்க்குணவிஷயமென்று இரண்டு வேறு வாக்கியங்களாகக் கொள்ளக்கூடாது.

பூதபவ்யங்களுக்கு ஈசானனாதால் ஹ்ருதயத்தில் அங்குஷ்டமாத்ரப்ரமிதனாகச் சொல்லப்படுபவன் ப்ரஹ்மம்.

கடைசி (10-வது) அதிகரணத்தில் ஆகாசமெனும் முக்தாத்மாவினும் ப்ரஹ்மம் வேறு (அர்த்தாந்தரம்) என்று ஸூத்திரகாரர் நிர்ணயித்தார். ஸர்வத்திற்கும் ஈச்வரன் அதிபதி, ஸர்வத்திற்கும் ஈசானன் என்று பேசி பாதத்தை முடித்தார். முதலதிகரணத்தில் 'ஹேதவ்யபதேஶாத்' (பேதவ்யபதேசாத்) என்ற ச்ருதியைக் கொண்டு ஜீவேசபேதத்தை நிர்ணயித்ததுபோல், கடைசி அதிகரணத்திலும், "ஸுஷுப்த்யுத்க்ராந்த்யோர்பேதவ்யபதேஶாத்" (அர்த்தாந்தரவ்யபதேசாத்) என்றும், 'தூக்கத்திலும் உத்க்ராந்தியிலும் பேதவ்யபதேசமிருப்பதாலும்' என்றும் பேதத்தையே நிர்மாணித்து முடித்தார்.

"விச்வாத்மாவாயும், அனந்தபூமாவாயும், விச்வநியமனதாரணம் செய்பவராயும் முக்தர்களால் அதிபோக்யராக அநுபவிக்கப்படுபவராயும், சின்ன தஹராகாசத்திலிருக்கையிலும் உலகத்தையெல்லாம் தன்னுள்ளே அடக்கினவராயும், ஹ்ருதயத்தில் அங்குஷ்ட

பரிமாணராயிருந்தே பூதபவ்யங்களை ஈசனம் செய்பவராயும், தேவாதிகளால் உபாஸ்யராயும், வஸ்வாதித்தியர்களால் தங்கள் அந்தராத்மாவாக ஸேவ்யராயும், அநதிகாரிகளால் பக்தியோகத்தால் அநுபாஸ்யராயும், நாமரூபங்களுக்கு ஏககர்த்தாவாயும் ப்ரபு அறியப்படுகிறார்" என்று கடைசி சுலோகத்தில் இந்தப் பாதாதிகரணங்களின் ஸங்க்ரஹம். வஸ்வாதித்தியர்கள் தங்களையே உபாஸிப்பதென்பது தம்மைச் சரீரமாக உடைய தம் அந்தராத்மாவை உபாஸிப்பதுதானென்று ஸூத்திரகாரர் திருவுள்ளம். இதனால் சாஸ்த்ரத்ருஷ்டி ஸூத்ரத்திலும் அதே கருத்தென்று தெளிவாகிறது தீக்ஷிதரும் தேவதாதிகரணத்தில் நம் பாஷ்ய ரீதியையே ஆதரித்தார்.

நாலாம் பாதம்.

இந்தப் பாதத்தில் ஸ்பஷ்டதரங்களான ப்ரக்ருதி ஜீவலிங்கங்களை உடைய வாக்கியங்கள் விசாரிக்கப்படுகின்றன. ப்ரக்ருதிச் சாயையும், ஜீவச்சாயையும் அநுஸரிக்கும் வாக்யங்கள் என்றும் சொல்லுவர். முதல் ஆறு அதிகரணங்களில் ஸாங்க்யர்கள் ப்ரக்ருதி ஸ்வதந்த்ரகாரணமென்று சொல்லும் பூர்வபக்ஷத்தையும் மேல் இரண்டு அதிகரணங்களில் யோகஸித்தாந்திகள் செய்யும் பூர்வபக்ஷத்தையும் நிரஸிக்கிறார். கடைசி ஸர்வவ்யாக்யாநாதிகரணம் அத்யாயம் முழுவதிலும் சொன்னதை நிகமனம் செய்கிறதென்றும் சொல்லுவர்.

கடவல்லியில் "மஹத்தைக் காட்டிலும் அவ்யக்தம் பரம்" என்னுமிடத்தில் ரதரூபகத்தில் ரதஸ்தானமான சரீரம்தான் பரிசேஷந்யாயத்தால் அவ்யக்தபதப்பொருள் என்று தீர்மானம். ப்ரக்ருதி தத்துவம் ஈச்வரனுக்கதீனமானதென்கிறார். இந்த்ரியங்கள், சரீரம் முதலியவற்றையும் வசப்படுத்துவதோடு, ப்ராஜ்ஞனெனும் ஈச்வரனையும் வசப்படுத்தவேணும். 'சாந்தாத்மாவான விஷ்ணு இங்கே பரபுருஷனாகக் காட்டப்படுகிறார்'. இங்கே கார்யகாரணபரம்பரையைப் பேசவில்லை. பேசப்படுத்தவேண்டிய பொருள் பரம்பரையே.

ப்ரஹ்மாதிஷ்டிதமான அஜையெனும் ப்ரக்ருதிதான் அஜா வாக்கியத்தில் காரணமாகப் பேசப்படுகிறது; ஸ்வதந்த்ரமான ப்ரக்ருதியல்ல. 'சமஸம்' என்று த்ருஷ்டாந்தமாக எடுக்கப்பட்ட பாத்ரமும் சேதனரால் அதிஷ்டிதமானதும், வாயோடு கூடியது மான சிரஸேயாகிறதென்று த்ருஷடாந்தஸாரூப்யம்.

தத்துவங்கள் இருபத்தைந்தென்று ஸாங்க்யர் ஜீவனோடு நிறுத்துவர். ஷட்விம்சனென்னும் ஈச்வரன் இங்கே ஸர்வத்திற்கும் ஆச்ரயமாக ஸூசிக்கப்படுகிறனென்று 3-வது அதிகரணம். 4-வது அதிகரணத்தில் ப்ரஹ்மத்தின் ஜகத்காரணத்வம் பல வாக்யங்களாலும் நிர்ணயிக்கப்படுகிறது. 5-வது அதிகரணத்தில் முன் ப்ரதர்த்தனவாக்கியம்போல கௌஷீதகிப்ராஹ்மணத்தில் மற்றோர் வாக்யம் விசாரிக்கப்படுகிறது. ப்ரஹ்மபரமான அந்த வாக்யத்தில் முக்யப்ராணலிங்கமும் ஜீவலிங்கமுமிருப்பதால் முன்போல் தத்விசிஷ்டமாக உபாஸனத்தில் தாத்பர்யமென்கிறர்.

6-வது அதிகரணம் மைத்ரேயி ப்ராஹ்மணவாக்யம். இங்கே ஜீவவாசிசப்தத்தால் ப்ரஹ்மத்தைப் பேசுவதற்குக் காரணத்தை 'அவஸ்திதேः' (அவஸ்திதே:) என்று தம் ஸித்தாந்தமாக (வ்யாஸ ஸித்தாந்தமாக) ஸூத்ரகாரர் அறுதியிடுகிறர். மோக்ஷதசையில் ஜீவன் ப்ரஹ்மமாகவே ஆய்விடுகிறனென்ற ஔடுலோமிமதத்தைத்தள்ளினர். அந்தர்யாமிச்ருதியில் ஜீவாத்மாவிற்குள் பரமாத்மா அவஸ்திதராயிருப்பதால், அப்படிப்பேசப்படுகிறது. 'தாத்ஸ்த்யாத் தாச்ச்ப்த்யம்' (தாத்ஸ்த்யாத் தாச்ச்ப்த்யம்) என்பர். "தத்ஸ்தத்வாத் அநுபச்யந்தி ஏக ஏவேதி ஸாதவः" (தத்ஸ்தத்வாத் அநுபச்யந்தி ஏக ஏவேதி ஸாதவ:) என்று வசனம். மஹாபாரதம் ஆதிபர்வமுதலத்தியாயமுடிவில் "யோகிகள் முக்தர்கள் எல்லோராலும் தம்முள் அவஸ்திதனாக அனுபவிக்கப்படுகிறன்' என்றவிடத்தில் முக்தர்களுக்குள்ளும் ப்ரஹ்மம் அவஸ்திதமாகவிருந்து ஸேவிக்கப்படுகிறன் என்றுள்ளது. அதை ஜ்ஞாபகப்படுத்த இங்கு 'அவஸ்திதேः' (அவஸ்திதே:) என்று ஸூத்ரமருளியது. முக்தருக்குள்ளும் ப்ரம்மம் அந்தராத்மாவாக இருந்து நியமிக்கிறது. முக்தர் ப்ராஹ்மமாவதில்லை?

7-வது ப்ரக்ருத்யதிகரணத்தில் ப்ரஹ்மம் உபாதானகாரணமு மாகிறதென்பது ஸமர்த்திக்கப்பட்டது. 'வரிணாமாக' (பரிணாமாத்) என்கிற ஸூத்ரத்தால் விவர்த்த வாதம் தள்ளப்பட்டது. சிதசித்விசிஷ்டப்ரஹ்மம் கார்யமாகப் பரிணமிக்கிறது. அத்வைதம் விவர்த்தவாதம், நமது பரிணாமவாதம்.

சதுஸ்ஸூத்ரியால், ஜிஜ்ஞாஸ்யமென்று ஸித்தித்த சராசர சிதசிச்சரீரகமான ப்ரஹ்மதத்வவிஷயமாக காரணச்ருதிகள் ச்ருதி லிங்க வாக்யாதிகளைக்கொண்டு ஸ்வாரஸமாக நிர்ணயிக்கப்பட்டன. இனிமேல் நியாயத்தால் ப்ரஹ்மகாரணத்வ விஷயத்தில் பாதக யுக்த்யாதிகளையும், மதங்களால் ப்ரதிரோதத்தையும், சுருதிகளுக்குள் கலஹங்களால் வரும் ஆக்ஷேபங்களையும் பரிஹரித்து ப்ரஹ்ம காரணத்வத்தை அகம்பனீயமாக த்ருடப்படுத்துகிறார். இத்தனை வாக்யங்களும் ஸவிசேஷப்ரஹ்மவிஷயமென்றே ஸூத்ரங்கள் பேசுகின்றன ; ஜீவப்ரஹ்மபேதத்தையே அறுதியிடுகின்றன. இதெல்லாம் நிர்விசேஷைக்யபக்ஷத்திற்கு எப்படி ஒட்டும் என்று கடைசி ச்லோகம்.

அத்யாயம்—2, பாதம்—1.

முன்காட்டிய ப்ரஹ்மகாரணத்வவிஷயத்தில் மஹாநிபுணர்களுக்கு ஸந்தோஷம் ஸித்தித்து ஸந்தேஹமே ஏற்படாவிடினும், மந்தபுத்திகளுக்குப் பிறர் கூறும் ஆக்ஷேபங்களாலும், புறமதங்களாலும் ச்ருதிகளுக்குள் வேற்றுமைப் பேச்சுக்களாலும் உண்டாகக் கூடிய ஸம்சயங்களைத் தீர்த்து, முன்னறுதியிட்ட ப்ரஹ்மகாரணத்வத்தை த்ருடப்படுத்த இந்த அத்யாயம். முதலிரண்டு பாதங்களும் ஜகத்காரணவிஷயத்தில் பிறரால் வரும் பீடையைப் போக்குகின்றன ; கார்யங்கள்விஷயத்தில் எல்லாவற்றிற்கும் கார்யத்வமுண்டா? அல்லது ஆகாயம் ஜீவன் முதலிய சில பொருள்கள் நித்யமா? கார்யத்வம் அதற்கு எந்த ப்ரகாரமென்னும் விஷயங்களில் ச்ருதிகளுக்குள் தோன்றக்கூடிய ஸகல விரோதசங்கைகளையும் 3, 4-பாதங்கள் பரிஹரிக்கின்றன. ச்ருதிகளால் எவை நித்யங்களென்று நிச்சயமோ, அவற்றைத் தவிர மற்றதெல்லாம் ப்ரஹ்ம கார்யம்,

ஸாங்க்யயோகஸூத்ரங்களில் (ஸ்மிருதிகளில்) சொல்லியிருக்கும் மூலப்ரக்ருதி முதலிய தத்துவங்களைப்போலவே சில உபநிஷத்துக்கள் பேசுகின்றன என்று முன்பாதத்தில் பூர்வபக்ஷம் பண்ணி, அந்த உபநிஷத்துக்களும் வ்யாக்யானம் செய்யப்பட்டன. எல்லா உபநிஷத்துக்களும் இம்முறையில் வ்யாக்யானம் செய்யப்பட்டதாகுமென்று கடைசி ஸூத்ரம். எங்கள் ஸ்மிருதிகளல்லவா உபநிஷத்துக்களுக்கு ஸரியான வ்யாக்யானம்? எங்கள் ஸ்ம்ருதிகள் செய்யும் வ்யாக்யானத்தை அநுஸரித்தே அந்த உபநிஷத்துக்களுக்கு வ்யாக்யானம் செய்யவேண்டுமென்று முதலிரண்டு அதிகரணங்களிலும் ஸாங்க்யயோகஸ்ம்ருதிகளைக்கொண்டு பூர்வபக்ஷம். ஹிரண்யகர்ப்பஸ்ம்ருதியைக்கொண்டு இங்கே முதலில் ஹிரண்யகர்ப்பர்கள் செய்யும் பூர்வபக்ஷம் பரிஹரிக்கப்படுகிறது. இந்த அத்தியாயத்தின் முடிவில் ஹிரண்யகர்ப்பர்தான் வ்யஷ்டி நாமரூபவ்யாகரணகர்த்தா என்ற பூர்வபக்ஷம் பரிஹரிக்கப்படுகிறது. ஸாங்க்யஸ்ம்ருதியிலும் யோகஸ்ம்ருதியிலும், மனு யாஜ்ஞவல்க்யர் இதிஹாஸங்கள் கீதாஸ்ம்ருதி முதலிய பல ஸ்ம்ருதிகள்தான் ப்ரபலமென்று திர்மானிக்கிறார்.

மேல் எட்டு அதிகரணங்களில் தர்க்கங்களைக்கொண்டு செய்யும் ஆக்ஷேபங்கள் பரிஹரிக்கப்படுகின்றன. காரணவஸ்தமான சிதசித்விசிஷ்டமான ப்ரஹ்மம் சிதசித்விசிஷ்ட கார்யஜகத்தாகப்பரிணமிக்கிறது. கேவல ப்ரஹ்மம் அசேதனஜகத்தாகப் பரிணமிக்கவில்லை. கார்யகாரணங்களும் அத்யந்தம் ஸலக்ஷணமாயிருக்கவேணுமென்ற நிர்ப்பந்தமில்லை. ஒரு தேஹமுடையவருக்கே ஒரு தேஹத்தாலளவற்ற தீங்குகள் விளைகின்றன; ஸர்வஜகத்தும் ஈச்வரனுக்குச் சரீரமானல் அவர் துக்கம் என்றைக்கு நீங்கும்? தேஹமிருப்பதைக் கொண்டுமட்டும் துக்கம் வராது, அந்த தேஹம் கர்மக்ருதமாகவிருந்தால்தான் துக்கம் வரும். யஜமானனுகவும் ஸாக்ஷியாகவும் உள்ளேயிருப்பவனுக்குத் துக்கப்ரஸக்தியில்லை. ஒரே காராக்ருஹத்தில் அதிகாரிபுருஷரும், கைதிகளுமிருக்கிறார்கள், அதிகாரபுருஷனுக்கு துக்கமில்லை. காரணம் வேறு, கார்யம் வேறு என்கிற அஸத்கார்யவாதத்தைத் தள்ளி கார்யகாரணங்களுக்கு அநந்யத்வம் (வேறல்லாமை) ஆரம்பணுதிகரணத்தில் ஸ்தாபிக்கப்படுகிறது. இங்கே ஸத்வித்யாச்ருதியும் விசாரிக்கப்படுகிறது. இந்த அதிகரணத்தால் ஜகத்தின் மித்யாத்வம் ஸித்திக்கிறதென்று பிறரது கொள்கை.

இந்த ஓரிடம்தான் அவர்களுக்கு ஆதாரமாக அவர்கள் சொல்லுவது. இந்த ஸூத்ரங்களில் அதற்கு ஒரு அனுகூலமுமில்லை. முழுவதும் ப்ரதிகூலமே. ச்ருதி கூறிய மண்பாண்டம், இரும்பு சாமான், தங்க அணிகலன் த்ருஷ்டாந்தங்கள் அதற்கு விரோதம். 'காரியம் இருக்கையில் (ஸஹூாவெ) காரணமும் காணப்படுவதால்', 'கார்யம் காரணத்தில் இருப்பதால்', இல்லையென்று ப்ரளய காலத்தைப்பற்றிப் பேசுகிறதே என்று ஆக்ஷேபித்தால், நாமரூபங்களில்லாததைக்கொண்டு அந்தப் பேச்சென்போம், 'நூல்களே வஸ்த்ராமாயிருப்பது போலவும்', 'வாயுவொன்றே ப்ராணன், அபானன் முதலிய பஞ்சப்ராணன்களாயிருப்பதுபோலவும்' என்று ஸூத்திரங்கள். எல்லாம் மித்யாத்வத்திற்கு நேர் விரோதம். கேவல (நிர்விசேஷ) ப்ரஹ்மம் ஜகத்காரணமாகாதென்று அத்வைதம் ஒப்புகிறது. மாயாவிசிஷ்டப்ரஹ்மம் ஜகத்காரணமென்று அத்வைதம்; உபாதிவிசிஷ்டமும், சக்திவிசிஷ்டமும் காரணம் என்று பாஸ்கரயாதவப்ரகாசர்கள். சிதசித்விசிஷ்டமென்று நம் மதம். எல்லாரும் விசிஷ்ட ஏக காரணவாதிகள், எல்லோரும் விசிஷ்டாத்வைதிகளே என்று அழகாகக் காட்டப்பட்டது. (13) ஸர்வ ச்ருத்யைகரஸ்யம் நமக்கே.

ஜகத்து இல்லையென்பது இல்லை என்று காட்டிவிட்டு, ஜீவன் என்பது ப்ரஹ்மத்திலும் வேறான தத்வமல்லவென்ற கக்ஷி அடுத்த இதரவ்யபதேசாதிகரணத்தில் தள்ளப்படுகிறது. அநந்யத்வம் என்பது ஐக்யமல்ல, தனிப்பட்டு ஸ்வதந்த்ரமான ஸ்வநிஷ்டமான தனித்த நிலைக்கு யோக்யமல்லாமைதான். ஜீவனே ப்ரஹ்மமாயின், தனக்கே தீங்கை ஸ்ருஷ்டித்துக்கொள்ளுவானேன்? உங்கள் வேதாந்தம் 'அவனே நீ' 'நானே அவன்' என்று ஐக்யத்தைப் பேசுகின்றதே என்று ஆக்ஷேபஸூத்திரம். ப்ரஹ்மம் ஜீவனல்ல, ஜீவனைக்காட்டிலும் அதிகன் (ச்ரேஷ்டன், வேறு, ப்ரபு), பேதச்ருதிகள்தான் ப்ரபலம் என்று ஸித்தாந்த ஸூத்திரம். 'கல்லும் மண்ணும் ப்ரஹ்மம்' என்றும் ச்ருதி பேசுகிறதே. அதைக்கொண்டு கல்லு மண்களுக்கும் ப்ரஹ்மத்திற்கும் ஐக்யத்தை ஒப்புகிறீரோ? அங்கே எப்படி ஐக்யமில்லையோ, எப்படி அஸங்கதமோ, அப்படித்தான் இங்குமென்று அடுத்த ஸூத்திரம், 'ஃஶ்மாதிவச்ச த஦நுபபத்திஃ' (அச்மாதிவச்ச தததுபபத்தி:) ஐக்யச்ருதியிலும் பேதச்ருதிதான் ப்ரபலப்ரமாணமென்றும், ஜீவ

னைக்காட்டிலும் ப்ரஹ்மம் வேறு, அதிகன் (ப்ரபு) என்றும் நிர்மானம். ஜீவன் துக்கஸமுத்ரம், ஈச்வரன் ஆநந்த ஸமுத்ரம். ஆநந்தஸிந்துவான ஈச்வரன் தானேயாகிய ஜீவனுக்கு விளையாட்டாகவாவது அநந்த துக்கங்களை ஸ்ருஷ்டிப்பானோ? ஜகத்தோடு எப்படி ஒன்றென்று பேச்சுளதோ, அப்படித்தான் ஜீவன்களோடும். இரண்டிடத்திலும் உயிராக, ஆத்மாவாக, ஈஸ்வரன் உள்ளேயிருந்து தாங்குவதும், சிதசித்துக்கள் உடலாக இருப்பதும் தான் ஒன்றென்ற பேச்சுக்குக் காரணம். பிரித்தால் நில்லாது; உயிரை விட்டுப் பிரித்தால் இல்லாமற்போக வரும். பிரித்த நிலையே அஸாத்யம். 'உயிர் வெல்லம்'. ஈச்வரன் தான் உயிர்; உயிருக்கும் உயிர். ஆகையால் அக்காரக்கட்டி ஆராவமுதமென அநுபவிக்கத் தக்கது. "தாத்ஸ்த்யேநாநந்யதோக்தேஸ்ததபி சிதசிதோ: தச்சரீரத்வஸித்தே:"

2/68 (தாத்ஸ்த்யேநாநந்யதோக்தேஸ்ததபி சிதசிதோ: தச்சரீரத்வஸித்தே:) என்று இங்கே ஸாராவளி. 'அவஸ்திதே:' (அவஸ்திதே:) என்ற ஸூத்திரத்தில் "தத்ஸ்த்வாத் காசக்ருத்ஸ்நோ யதிஹ நிரவஹத்வ்யாஸஸித்தாந்த ஏஷ:"

143. (தத்ஸ்த்தத்வாத் காசக்ருத்ஸ்நோ யதிஹநிரவஹத்வ்யாஸஸித்தாந்த ஏஷ:) என்று ஸாதித்ததையே ஜ்ஞாபகப்படுத்துகிறது. ஜடப்ரபஞ்சவிஷயத்தில் அநந்யத்வமென்பது இல்லாமை, மித்யாத்வம். ஜீவர்கள் விஷயத்தில் அது ஐக்யம் என்று இப்படி வேறு வேறு விதமாய் அத்வைதநிர்வாஹம். இரண்டிடத்திலும் ஸாமாநாதிகரண்யத்தை ஆத்மசரீரபாவத்தால் ஒரே விதமாய் நிர்வஹிக்கிறோம். 'உள்ளே அவஸ்திதியால்' 'உயிராயுள்ளேயிருப்பதால்' என்று காசக்ருத்ஸ்நர் காட்டிய வழியை ஸூத்திரகாரர் ஒப்பினார். 'ஸாதுக்களின் தர்சனமிதுவே' என்றனர் ருஷிகள். 'உடன் மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்' என்று மிகத் தெளிய ஓதியது த்ராவிடவேதம்.

அடுத்த அதிகரணத்தில் சிலந்தி த்ருஷ்டாந்தமும், பால் திரியும் த்ருஷ்டாந்தமும் காட்டப்பட்டது. 'தர்க்கங்களைக் கொண்டு குசோத்யம் செய்யவேண்டாம், இந்த விஷயம் சாஸ்த்ரமொன்றுக்கே எட்டுவது, சாஸ்த்ரமோதுவதைக் கேள்' என்று அடுத்த அதிகரணம். அடுத்த அதிகரணம்— ஸ்ருஷ்டியென்பது 'லீலை'

இதற்கு ஸ்வப்ரயோஜனமென்ன வென்று கேளாதே, பரப்ரயோஜனமுண்டு. மஹாபுருஷனுக்கு அதுவே ஸ்வப்ரயோஜனம். பிறர் பேறே தம் பேறு. அநாதிகர்மத்தால் குழந்தைகள் திண்டாடுகின்றார்கள். சரீரமென்னும் ஓடத்தைக் கொடுப்போம்; ஸுலபமான உபாயத்தைக் கைப்பற்றினாலும் தப்பலாம்; எப்படியாவது தப்பி நித்தியச்ரேயஸ்ஸைப் பெறட்டுமென்று கருணையால் ரக்ஷித்துக் கரையேற்றவே ஸ்ருஷ்டி. எல்லையற்ற கருணையால் ஸ்ருஷ்டி. ஸ்ருஷ்ட்யாதிலீலையே ரக்ஷாதீக்ஷை ஸபலமாகத்தானென்று ஸ்ரீ பர்ஷ்யமங்களச்லோகம் காட்டிற்று. முதலதிகரணத்தில் கபிலரெனும் வாஸுதேவரை ராமாயணத்தில் பேசியுள்ளதைக் காட்டிற்று. இந்தக் கடைசி அதிகரணத்தில் அஸமஞ்ஜனைப் பேசி ஸாராவளி ராமாயணத்தை ஸ்மரித்தது. அதிஸுலபமான சரணுகத்யுபாயத்தைக் காட்டும் ராமாயணத்தை நினைக்கிறார். அதனிலும் மிக்க தயவுண்டோ, அதனால் காப்பாற்றுவது எல்லையற்ற தயவல்லவோ. நேரில் தான் அவதரித்து இந்த உபாயத்தை விளக்கின தயாளுவை நிர்தயன் நிர்க்குணனென்னலாமா? ‘யதி வா ராவண: ஸ்வயம்’ (யதி வா ராவண: ஸ்வயம்) என்று விபீஷணனாயிருக்கட்டும், ராவணனாயிருக்கட்டும்; யாருக்கும் இது ஸமம்’ என்ற ப்ரபுவை விஷமனென்னலாமோ? ராமாயணத்தை நினையுங்கோளென்று ஸ்வாமி ஸூசித்தருளினார். கைகேயி அஸமஞ்ஜனை ராமனுக்கு த்ருஷ்டாந்தமாகப் பேசுகிறதுபோல், ஈச்வரனை ராமனை நிர்தயனை விஷமன் என்பது. முதலில் ராமாயண கபிலரைப் பேசியும் கடைசியிலும் அஸமஞ்ஜனைப் பேசுவதாலும், முதன்மையான ராமாயணஸ்ம்ருதியால் ஏற்படும் பலஅம்சங்களும் இந்தப் பாதத்தில் விளக்கப்படுகின்றதை ஸூசிக்கிறார்.

ஸாங்க்யஸ்ம்ருதியால் (கபிலஸ்ம்ருதியால்) விரோதம், ப்ரஹ்மாவின் (விதியின்) மதமான யோகஸ்ம்ருதியால் விரோதம், காரணத்திலும் கார்யம் விரூபமென்ற விரோதம், அநேக தந்த்ரங்களின் கக்ஷிகளோடு விரோதம், ஸர்வசரீரியாயிருப்பதால் ஸர்வபோகப்ரஸக்தியால் விரோதம், கார்யத்திற்கும் உபாதானமான காரணத்திற்கும் பேதமிருக்கவேணுமேயென்ற ஆக்ஷேபத்தால் விரோதம், தன் அஹிதத்தையே தான் தேடுவனோ என்ற விரோதம், உபகரணஸாமக்ரிகளில்லாததால் (காரகஸ்தோமமின்மையால்)

என்னும் விரோதம், முழுவதும் பரிணமிக்கிறதா? ஏகதேசம் பரிணமிக்கிறதா? நிரவயவப் பொருளுக்குப் பாகமில்லையே என்ற விரோதம், ப்ரயோஜனம் வேணுமே, ஆப்தகாமனுக்கு ப்ரயோஜனமொட்டாதே, பிறர் ஸங்கடமே படுவதால் பிறர் ப்ரயோஜனமுமில்லையே என்ற விரோதம்- ஆகிய இப்பத்து விரோதங்களும் பத்து அதிகரணங்களால் பரிஹரிக்கப்பட்டனவென்று அவிரோதாத்யாயத்தில் இந்தப் பாதத்தின் பிரயோஜனத்தை அழகாக ஸங்கிரஹித்தார். 8C 175

அத்தியாயம்—2, பாதம்—2,

இங்கே ப்ரஸித்தமான மதங்களால் ப்ரஹ்மகாரண ஸித்தாந்த விரோதமில்லை என்று ப்ரதர்சனம். அஸமஞ்ஜஸமான பக்ஷங்கள் ஸாங்க்யத்தில் தொடங்கி பாசுபதத்தோடு முடிந்தன. 'அஸமஞ்ஜஸம்' என்று முதலதிகரணத்தில் தொடங்கி பாசுபதத்திலும் அஸாமஞ்ஜஸ்யத்தை அறுதியிட்டார். அத்தோடு அஸமஞ்ஜஸபக்ஷங்கள் முடிந்தன. மேல் 'பாஞ்சராத்ராதிகரணம் ஓர் தனிப்பேடிகை. அது அஸம்பாவிதமோ என்று சங்கித்து, அந்த மதத்திற்கு ப்ரதிஷேதமில்லை (அப்ரதிஷேதமே), அது நமக்கிஷ்டமான பக்ஷமே, அதனால் நம் பக்ஷத்திற்கு விரோதமில்லை என்று பாதம் முடிந்தது.

ஸாங்க்யர்கள்-ஆத்மாக்கள் அநேகம், ஜகத் ஸத்யம் என்று பற்றியவர். அந்த அம்சங்களொன்றையும் ஸூத்ரகாரர் பழிக்கவில்லை. அதெல்லாம் அவருக்கு இஷ்டமென்பது திண்ணம். ஈச்வரன் வேண்டாம், ப்ரக்ருதிதானே ஸ்ருஷ்டிக்கிறதென்றார்கள்; அதை நிரஸித்தார்.

அஸத்கார்யவாதத்தையும், கார்யகாரணபேதத்தையும், பரமாணுகாரணத்வத்தையும் கொள்ளும் வைசேஷிகரை 2-வது அதிகரணத்தில் நிரஸித்தார்.

ப்ரதிக்ஷணவிநாசத்தைச் சொல்லும் பௌத்தபக்ஷங்களிரண்டை 3-வது அதிகரணத்தில் நிரஸித்தார். ப்ரபஞ்சம் பொய், ஜ்ஞானம் ஒன்றுதான் உள்ளது. அதுவும் க்ஷணிகம், ப்ரதிக்ஷணவிநாசி என்ற

யோகாசாரபக்ஷத்தை 4-வது அதிகரணத்தில் நிரஸித்தார். ப்ரபஞ்சம் மாயை, ஸம்வ்ருதி ஸத்யம் என்ற இவர்கள் பக்ஷம் மாயாவாதபக்ஷமே. அவர்களின் க்ஷணிகவாதம் முன் அதிகரணத்திலேயே மற்ற இரண்டு பௌத்த வாதங்களோடும் சேர்த்துத் தள்ளப்பட்டது. இந்த அதிகரணத்தில் 'பிரபஞ்சத்திற்கு அபாவமில்லை, பிறந்ததுமுதல் முடிவு வரையிலும் எல்லோராலும் ஏகரூபமாய் அநுபவிக்கப்படுகிறதே' என்றுமுதல்ஸூத்திரம். ஸ்வப்னம்போல பொய்யென்னவொண்ணாது. ஸ்வப்நத்திற்கு பாதம் காண்கிறோம்; இதற்கு ஒருகாலும் பாதத்தைக் காணவில்லையே என்று ஸூத்திரங்கள் ப்ரபஞ்சமித்யாத்வவாதத்தை நிரஸிக்கின்றன. உலகத்தோரெல்லோருக்கும் ஒரேவிதமாக ப்ரபஞ்சம் ப்ரமத்தால் தோன்றுமோ, எல்லோரும் ஒரேவிதமாகவே நியமேன யாவதாயுஷம் ப்ரமிப்பரோ? ஸ்வப்நவிஷயத்தில் அப்படியில்லையே, பலருக்குப் பலவிதம். இந்த அதிகரணத்தில் மாயாவாதமும் தள்ளப்பட்டதால் அதற்கென்று வேறொரு அதிகரணம் அநாவச்யகமென்று ஸூர்யோதயத்தில் காட்டப்பட்டது. ஸர்வசூன்யவாதத்தை 5-வது அதிகரணம் நிரஸித்தது. 6-வது அதிகரணம் ஜைநபக்ஷ நிராஸகம். 7-வது அதிகரணம் பாசுபதாகமநிராஸகம். அத்தோடு அஸமஞ்ஜஸபக்ஷம் நின்றது.

பாசுபதாகமத்தைத் தள்ளுகையில் ஆகமமானதால் பாஞ்சராத்ராகமத்தின் நினைப்பும் வருகிறது. அதுவும் இப்படி அஸம்பாவிதமோ என்ற சங்கை வந்து, மேலாகத் தோன்றும் அநுபபத்தியை சங்கித்து அதை தாத்பர்யப்ரதர்சனத்தால் (ஹாவவிசேஷாத்) பரிஹரித்து, அந்த மதத்திற்கு அப்ரதிஷேதமேயென்று தீர்மானித்தார். "இதில் கூறிய அபிகமனுதிபஞ்சகமும் பஞ்சகாலங்களில் செய்வது முதலிய ஆசாரங்களால் நாராயணனை ஆயுள் முழுவதுமாராதித்து மோக்ஷம் பெறுகிறானென்பதை நாமும் மறுதளிக்கவில்லை, அப்படி ஈச்வராராதனம் ச்ருதிஸ்மிருதி ப்ரஸித்தமே" என்று ஸ்ரீசங்கரபாஷ்யம். அப்பெரியார் ஸாளக்ராமாராதகர், பஞ்சகாலபராயணர், வாஸுதேவபக்தர். ஸாளக்ராமத்தில் ஹரி (ஸிம்ஹம்) அவருக்கு ப்ரத்யக்ஷம். எத்தனை தரம் பேசுவார்? தந்மயத்வமே.

மூன்றும் பாதம்.

---o---

நித்யப்பொருள், அநித்யப்பொருள் இதன் விவேகம் ஸரியாக வேதாந்தசாஸ்த்ரப்படித்தான் ஸித்திக்கும். ப்ரஹ்மமீமாம்ஸை செய்யுமுன் இந்த விவேகம் யதார்த்தமாக ஸித்தியாது. ஆகாசம் நித்யமென்பர் தார்க்கிகர்; ஆகாசமே இல்லையென்பர் பௌத்தர். ஜீவாத்மாக்கள் நித்யம்; முக்தியில் ப்ரஹ்மமாக மாறி இல்லாமற் போவதில்லை. முக்தர்களும் 'அஹம்' என்று நினைப்பர், பேசுவர். ஆனால் தம்முடைய 'அஹமை' ப்ரஹ்மத்திற்குள் சொருகிவிடுவர்; ப்ரஹ்மம் வரையிலும் அந்த அஹம் புத்தி செல்லும். அதற்குள் விச்ரமிக்கும். ஜீவன்முக்தரென்று பிறர் சொல்லும் 'வாமதேவர்', 'நான் மநுவாயிருந்தேன் (ஆனேன்), ஸூர்யனானேன்' என்கிறார். ப்ரஹ்மம்வரையில் அஹம்புத்தி உள்புகுவதால் ப்ரஹ்மம் எப்படி மநு முதலியவரோடு அநந்யமோ, அப்படி ப்ரஹ்மாநுப்ரவேசத்தால் தமக்கும் ப்ரஹ்மமூலமாக அநந்யத்வம். ப்ரஹ்மமும் 'அஹம்' என்று பேசுகிறது. ஜீவர்கள் நித்யமாயினும் தேஹத்வாரமாக தேஹவிசிஷ்டமாகப் பிறப்புண்டு. அவர்களுக்குக் கர்த்ருத்வமுண்டு; ஆனால் அவர்கள் கர்த்ருத்வம் ஈச்வராயத்தம். ஆனால் ஜீவர் ப்ரயத்னம் செய்வதையநுஸரித்து ஈச்வரன் கூடவிருந்து நிறைவேற்றிவைப்பவன். ஜீவன் ஜ்ஞானஸ்வரூபமாயிருப்பதோடு அறிவெனும் தர்மத்தையுமுடையவன். ஜீவன் ப்ரஹ்மத்தின் அம்சம் (ப்ரகாரம், விசேஷணம், சரீரம்) அவன் ப்ரஹ்மமேயல்லவென்று இந்தப் பாதத்தை முடித்தார்.

ஜீவோத்பத்திப்பேச்சு கௌணமென்று முன் அதிகரணம். ஆகாசம் உத்பந்நமென்று தைத்திரீயம் சொல்லுகிறது. 'ஆத்மநஃ ஆகாஶஃ ஸம்பூதஃ' (ஆத்மந: ஆகாச: ஸம்பூத:) என்று. இந்த உத்பத்திப்பேச்சு கௌணமாயிருக்கட்டுமேயென்று முன் பாதக் கடைசியதிகரணத்தோடு ஸங்கதி அழகாகக் காட்டப்பட்டது. ஆகாசமுமுத்பந்நமே, நித்யமல்லவென்று முதலதிகரணம். கைமுத்யத்தால் ஆகாசத்தை யாச்ரயித்திருக்கும் மாதரிச்வாவெனும் வாயுவும் கார்யமே. தேஜோதிகரணத்தில் தேஜச்சரீரகமான ப்ரஹ்மத்தினிடமிருந்து ஜலமுத்பந்நம். அந்தந்தக் காரணஜடதத்வசரீரகனான ப்ரஹ்மம் கார்யஜடசரீரகமாகப்பரிணமிக்கிறது.

ப்ரஹ்மவிஷயத்தில் எப்படி 'ததைக்ஷத'(ததைக்ஷத)என்றுகார ணம் செய்யும் ஸ்ருஷ்டிஸங்கல்பத்தை (கார்யஹவநஸங்கல்பத் தை)ப் பேசிற்றோ, அப்படியே 'தத்தேஜ ஐக்ஷத' (தத்தேஜ ஐக்ஷத)'தா ஆப ஐக்ஷந்த' என்று காரணம் அவ்வப்பொருள் செய்யும் ஸங்கல்பத்தைப்பேசுகிறது. எல்லா ஈக்ஷணங்களும் அநுஸ் யூதமாக முக்கியங்களே. அதனைச் சரீரமாகவுடைய ப்ரஹ்மம் ஈக்ஷ ணம்செய்தது என்றுதான்பொருள். 'தத்பித்யாநாதேவ'(ததபி த்யாநாதேவ) அதன் ஸங்கல்பத்தாலேயே. தேஜஸ்ஸூம் ஜல மும் ஸங்கல்பிக்கமுடியாது. அந்த சப்தங்களுக்கு அதனைச் சரீரமாகவுடைய ஆத்மா (பரமாத்மா) என்று பொருளென்று இந்த ஸூத்ரம் காட்டுகிறது. இந்த ஸூத்ரத்தின் ஸ்ரீசங்கர பாஷ்யமும், அதன் வ்யாக்யானங்களும் இப்படியே பொருளுரைத் தன. இதைக் காட்டி ஸ்ரீதிருவிசனல்லூர் சாஸ்திரிகள் ஸ்ரீசங் கரர் விசிஷ்டாத்வைதபக்ஷத்தையே அவலம்பித்ததை விளக்கினார். "ஈக்ஷாநுஸ்யூதித்ருஷ்டே: ப்ரதமமிஹ பரம் ஸௌதி தத்தச்சரீரம்" (ஈக்ஷாநுஸ்யூதித்ருஷ்டே: ப்ரதமமிஹ பரம் ஸௌதி தத்தச்சரீரம்). சரீரத்தைச் சொல்லும் தேஜஸ், அப்பு முதலிய சப்தங்கள் அதனுள்ள ஆத்மபர்யந்தம் சொல்லும். தத்தச்சரீரவிசிஷ்ட ஆத்மாவைச் சொல்லும் என்ற வ்யுத்பத்தி அபாக்தம் (முக்கியம்) என்று கடைசி ஸூத்திரம் அறுதியிட் டது. ஸத்வித்யா விசாரத்தில், எல்லா ப்ரபஞ்சமும் ஏத தாத்மகம்; ஐததாத்ம்யம்; அது (அவன்) ஆத்மா (உயிர்); நீயும் ததாத்மகனே (ஏததாத்மகனே) என்று 'தத் த்வமஸி' என்ற வாக் யத்தின் பொருளென்று இங்கே விளக்கப்படுகிறது.

'நாத்மா ச்ருதே:' (நாத்மா ச்ருதே:) (ஜீவாத்மா) உத் பத்தியாவதில்லை; அவன் நித்தியன். 'ஜநநம் தஸ்ய தேஹாதியோக:' (ஜநநம் தஸ்ய தேஹாதியோக:). தேஹஸம்பந்தம் கிடைப்பதுதான் அவனுக்குப் பிறப்பென வழங்கப்படுகிறது. 4வது ஜ்ஞாதிகரணம். ஜீவனுக்கு ஜ்ஞாநமென்ற தர்மமுண்டு. அது ஸ்வரூபம் நித்தியமாயினும் ஸங்கோசவிகாஸார்ஹம். 'ஜாநாதி வாயம் புருஷ:', 'அவிநாசீ வா அரே அயமநுச்சித்தி தர்மா' (ஜாநாதி வாயம் புருஷ:, அவிநாசீ வா அரே அயமநுச்சித்தி

தர்மா) இங்கே முதல் வாக்கியத்தில் 'ஏவ' என்பதால் 'அயோகம்' 'அந்யயோகம்' 'அத்யந்தாயோகம்' ஆகிய மூன்றும் தள்ளப்படலாம். 'அறிகிறான்' என்கிற க்ரியையோடு ஒட்டினால், 'அறியவே அறிகிறான், ஒருகாலும் அறியாதிருக்கிறதில்லை' என்று ஜ்ஞாநம் இல்லாமை என்பதே யில்லை என்று விலக்குதல். 'இவனே அறிகிறான்' என்று இவனென்னும் ஆத்மாவோடு ஒட்டினால், இவனுடைய அந்தக்கரணமறிகிறதென்பதில்லை, அந்தக்கரணத்தோடு கூடித்தான் அறிகிறானென்பதுமில்லை, இவனே அறிகிறானென்று கிடைக்கிறது. 'இவன் அறிகிறதென்பதேயில்லை என்பதில்லை' என்று 3-வது விலக்குதல் க்ரமம். சிலகால் அறிகிறானென்றாலும், அத்யந்தாயோகவ்யவச்சேதம் கிடைக்கும். இங்கே 'அறியவே அறிகிறான்' என்று ஏவகாரம் ஜ்ஞானமெனும் தர்மத்தோடு சேருகிறது. ஒருகாலும் ஜ்ஞான தர்மமில்லாமலிருப்பதில்லை யென்று இங்கே ப்ரமாணாந்தரங்களான 'விஜ்ஞாதாவுக்கு விஜ்ஞானதர்மத்தின் லோபமே கிடையாது', 'அநுச்சித்திதர்மா' என்பதை அநுஸரித்துப் பொருள் கொள்ளவேணும். 'ஜ்ஞாநாலோபாதிவாக்யாநுகுணவிஷயதாம் யாத்யஸாவேவகார:' (ஜ்ஞாநாலோபாதிவாக்யாநுகுணவிஷயதாம் யாத்யஸாவேவகார:) ஜீவன் அணுதான், இவனுக்குக்கர்த்ருத்வமுண்டு. அந்த கர்த்ருத்வம் பராயத்தம். பரனும் இவனைப் பிரவ்ருத்திப்பதற்கு முன் இவனால் செய்யப்படும் ப்ரயத்நத்தை அபேக்ஷிக்கிறான்.

ஜீவன் ப்ரஹ்மத்திற்கு அம்சம், விசிஷ்டத்தில் விசேஷணாம்சம். ஜடமான ப்ரபஞ்சமும் ப்ரஹ்மத்தின் அம்சமென்று மேலே அஹிகுண்டலாதிகரணம் தீர்மானிக்கிறது. மேல் 3-வது அத்யாயத்தில் சுத்தமான ஸ்வஸ்வரூபத்தின் ஜ்ஞான தர்சனங்களோடு பரமாத்மாவின் பஜனத்தைப் பேசப்போகிறபடியால், இங்கே ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்குமுள்ள ஸம்பந்தங்களை சோதித்தார். ஆகாசம் முதலியதின் உத்பத்தியும், பூர்வ பூர்வதத்வவிசிஷ்டமான ப்ரஹ்மத்தினிடமிருந்தே வாயு தேஜஸ் முதலியவற்றின் உத்பத்தியும், நித்யனான ஜீவனுடைய ஜந்மலயங்கள் சரீரோபாதிமூலமாயிருப்பதும், இவனுடைய ஜ்ஞானஸ்வரூபத்வ ஜ்ஞாத்ருத்வங்களும், கர்த்ருத்வத்தன்மையும், கர்த்ருத்வத்தின் பராயத்த ப்ரகாரத்தையும் குணகுணிகளைப்போலவும், சரீரசரீரிகளைப்போலவும் ஜீவர்கள் ஈச்வரனுக்கு அப்ருதக்ஸித்தவிசேஷணமான அம்சமென்பதும் வே

தாந்தவாக்யங்களில் வேறு வேறாகத் தோன்றும் விரோதங்களைப் பரிஹரித்து, இங்கே உள்ளபடி காட்டப்பட்டன என்று கடைசி ச்லோகத்தில் பாதஸங்க்ரஹம்.

நான்காம் பாதம்.

இந்த்ரியங்கள், மநஸ்ஸு, முக்யப்ராணன் முதலியதெல்லாம் கார்யமே. ப்ரஹ்மகார்யமல்லாததில்லை. இதில் 8- அதிகரணங்கள். 1- 8- அதிகரணங்கள் ஸாக்ஷாத் ஸங்கதம். நடு ஆறு அதிகரணங்கள் ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக வந்தவை. முன் பாதம் முதலதிகரணத்தில் ஆகாசத்திற்கு உத்பத்தியை ஸாதித்த ஹேதுக்களின்படியே இங்கே முதலதிகரணத்தில் ப்ராணன்களென்னும் இந்த்ரியங்களின் கார்யத்வம் தீர்மானிக்கப்பட்டது. கடைசி அதிகரணத்தில் ஹிரண்யகர்ப்பசரீரகரான பரமாத்மா நாமரூபவ்யாகரணம் செய்கிறாரென்று தீர்மானித்தது. முன்பாதம் 2-ம்அதிகரணத்தில் தேஜஸ் முதலியதைச்சரீரமாகவுடைய ப்ரஹ்மம் ஸங்கல்பித்துஸ்ருஷ்டித்ததென்றதுபோல், இங்கும் ஹிரண்யகர்ப்பனென்னும் சரீரவிசிஷ்ட பரமாத்மா ஸங்கல்பித்து வ்யஷ்டி ஸ்ருஷ்டி செய்ததாகச்சொல்லப் பட்டது. த்ரிவ்ருத்கரணம் செய்யும் ப்ரஹ்மம்தான் வ்யஷ்டி ஸ்ருஷ்டியைச் சதுர்முகசரீரனாகச் செய்கிறது. தேவர்களுக்கும் உபாஸ்யர் என்று முன் அத்தியாயத்தில் காட்டியதுபோல, ஹிரண்யகர்ப்பர் என்னும்ப்ரதமஜனுக்கும் சரீரமளித்துஸ்ருஷ்டிப்பவரென்றுகாட்டி இந்தக் காரணத்விகத்தை முடித்தார். ஜந்மாதிலக்ஷணத்தை ப்ரம்மத்தினிடம் ஸமந்வயம்செய்து, அது அ(பா)பாத்யமென்று விளக்கினார். இந்த அத்யாயாரம்பத்தில் மந்வாதிஸ்ம்ருதிகள் பிரமாணமென்று தீர்மானிக்கப்பட்டன. இங்கே அத்யாயம் முடிவிலும் மந்வாதிகள் ஸரஸிஜாஸனனை சதுர்முகர் வ்யஷ்டிநாமரூபகரணத்தைச் செய்கிறாரென்று பேசிய ஸ்ம்ருதிகளை ஸூத்ரகாரர் ஸ்மரிப்பதாக அழகாகக் காட்டுகிறார். "𑌮𑌨𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌸𑍍𑌮𑌰𑍍𑌯𑌤𑍇 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌸𑌰𑌸𑌿𑌜𑌵𑌸𑌤𑌿𑌃 𑌵𑍍𑌯𑌷𑍍𑌟𑌿𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌰𑍍𑌤𑌾" (மன்வாத்யை:ஸ்மர்யதேஸம்யக் ஸரஸிஜவஸதி: வ்யஷ்டிஸ்ருஷ்ட்யாதிகர்த்தா)என்றுமுதலில் யோகஸ்ம்ருதிகர்த்தாவாக ப்ரஹ்மாவை நினைத்ததுபோல்இங்குமுடிவிலும் ப்ரஹ்மாநினைக்கப்படுகிறார்.இந்தஅழகு

கள் கவனிக்கத்தக்கன. '𑌤𑍇𑌨𑍇𑌶𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌃 𑌸𑍍𑌵𑌕𑌰𑌣𑌤𑌯𑌾𑌽𑌨𑍁𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑍇𑌽𑌪𑌿 𑌕𑌰𑍍𑌤𑌾'(தேநேசஸ்தத்விஸிஷ்ட:ஸ்வகரணதயாऽநுப்ரவேசேபி கர்த்தா)

இந்த்ரியங்களின் உத்பத்தி, அவற்றின் கணக்கு, பரிமாணம், ப்ராணவாயுவின் ஸ்வரூபம், அதன் அணுத்வம், தேவர்களும் ஜீவர்களும் இந்த்ரியம் முதலியதை அதிஷ்டானம் செய்வதும் பரமாத்மஸங்கல்பாயத்தமென்பது, முக்யப்ராணன் மட்டுமிந்த்ரியமல்ல,ப்ராணனென்றுபெயருள்ள மற்றவை இந்த்ரியங்களேஎன்பது, பஞ்சீகரணகர்த்தாவே தன் உந்தியில் உத்பந்நனான ப்ரஹ்மாவென்னும் கவசத்தோடு (சட்டையோடு) கூடி வ்யஷ்டிஸ்ருஷ்டி யெனும் நாமரூபவ்யாகரணத்தைச் செய்வது— ஆகிய இவையெட்டும் இந்த எட்டு அதிகரணங்களில் காட்டப்பட்டன என்று கடைசி ச்லோகம். 'விசிஷ்டத்வாத் ஏகவ்யபதேசம்' என்று பொருளுடைய கடைசி ஸூத்ரமும் கவனிக்கத்தக்கது. ந்யாயஸாம்யத்தால் காரணமான ப்ரஹ்மமும் விசிஷ்டமாகையால் காரணத்தின் ஏகத்வவ்யபதேசம்.

அத்தியாயம்—3, பாதம்—1.

இது ஸாதனாத்யாயம். வைராக்யம் முக்யஸாதனம், ப்ரஹ்மத்தினிடம் ரக்தி(ராகம்)முக்யஸாதனம். இவையிரண்டையும் இரண்டு பாதங்களால் விளக்குகிறார். ஸித்தமான ப்ரஹ்மம் ஸாதனம். அதுதான் பலத்தை யளிப்பது. முக்தி ஸாத்யம்தான்; ஆயினும் அது நித்தியமே. ஜ்ஞானத்தின் ஸங்கோசம் கர்மத்தால் வருவது. கர்மம் நாசமடைகையில் ஜ்ஞானஸங்கோசமும் நாசமடைகிறது. நாசமெனும் அபாவம் கார்யமாயினும் நித்யம். முன்பு ப்ரஹ்மாநுபூதியில்லை; பரிபூர்ணப்ரஹ்மாநுபவம் ஸாத்யம்தான். ஜ்ஞானஸங்கோசம் த்வம்ஸம் அடையவே ஜ்ஞானத்தின் விபுவான விகாஸத்தால் அது ஸித்திக்கிறது. ப்ரஹ்மோபாஸனத்தில்அதிகாரத்தை இரண்டு பாதங்களால் விளக்குகிறார். ஸ்வஸ்வரூபம் விளங்கவேணும். தன்னுடைய சேஷத்வம், அத்யந்தபாரதந்த்ரியம், பரமாத்மாவையே உயிராக உடைய தன்மை, ப்ரக்ருதியின் பரிஷ்வங்கத்தால் வரும் கேடு, அதை விட்டு ப்ரஹ்மபரிஷ்வங்கமே

ஆநந்தஹேது— என்றிவையெல்லாம் தெரியவேணும். ஸ்வஸ்வரூபத்தை உள்ளபடி தரிசித்து பரபஜனமென்னும் ப்ரஹ்மவித்யையில் இறங்கவேணும். பரமாத்மாவின் ஆநந்தஸ்வரூபத்தையும், நம்மைக் காக்க அது காத்துக்கொண்டிருப்பதையும், ஸர்வாவஸ்தையிலும் நம்மை அத்யந்தஜாகரூகனாய் அது ரக்ஷித்துவருவதையும் காட்டி அதனிடம் க்ருதஜ்ஞதையும் ப்ரீதியும் வளரவேண்டும். 3-வது பாதத்தில் ப்ரஹ்மவித்யையின் பல பேதங்களையும் ஸ்வரூபங்களையும் ப்ரஹ்மவித்யைகளுக்கெல்லாம் ஸர்வோத்க்ருஷ்டமான மோக்ஷம் பலமென்பதையும் காட்டிவிட்டு, 4-ம் பாதத்தில் ப்ரம்மவித்யையின் அங்கங்களைக் காட்டி விட்டு, முக்திபலத்தைத் திருவாக்கால் கடைசி ஸூத்திரத்தில் ஸாதனத்யாயத்திற்கும் பலாத்தியாயத்திற்கும் மத்தியில் பேசி முடித்தார். ஸ்வர்க்கம்,ஐச்வர்யம் முதலிய பலங்களிலும் விராகத்தையும், ஸ்வஸ்வரூபமாத்திரமும் உயிரான பரமாத்மாவுக்குச் சேஷமல்லாமல் அத்யந்தபரதந்த்ரமல்லாமல்போனால் அஸத்கல்பமும் விரஸமுமாகும் என்பதையும் விளக்குகிறார். தன் ஸ்வரூபத்தை உள்ளபடி அறிந்து தன் உயிரான ப்ரஹ்மத்தினிடம் ப்ராணவத் ப்ரீதியுடன் பஜனத்தைத் தொடங்கவேணும். ப்ரஹ்மாநுபவமில்லாத ஸ்வர்க்காதிகளும் நரக துல்யங்களே.

முதலில் பஞ்சாக்நிவித்யைப்படி மநுஷ்யதேஹம் ஏற்படும் க்ரமம் காட்டப்படுகிறது. த்யுலோகமென்னும் ஓர் அக்னியில் ஜீவனுடைய ப்ராணன்கள் (இந்த்ரியங்கள்) ஜலம் முதலிய பூதஸூக்ஷ்மங்களை ஹோமம் செய்கின்றன. அந்த பூதஸூக்ஷ்மங்கள் ஸோமராஜனென்று பெயரையுடைய அம்ருததேஹமாகப் பரிணமிக்கின்றன. அந்த அம்ருததேஹத்தை அதே ப்ராணன்கள் மேகமெனும் அக்னியில் ஹோமம் செய்கின்றன; அந்த அம்ருததேஹம் அங்கே விழுந்ததும் மழையாகிறது. அதே ப்ராணன்கள் அந்த மழையைப் பூமியெனும் அக்னியில் ஹோமம் செய்கின்றன; அது அந்நமாக மாறுகிறது. அந்த அந்நத்தைப் புருஷனென்னும் அக்னியில் ப்ராணன்கள் ஹோமம் செய்கின்றன. அது ரேதஸ்ஸாக (வீர்யமாக) மாறுகிறது. அதை ஸ்த்ரீயெனும் அக்னியில் அந்த ப்ராணன்கள் ஹோமம் செய்கின்றன. இந்த 5-வது ஆஹுதியில் பூதஸூக்ஷ்மங்கள் கர்ப்பமாகின்றன. முதல் முதற்கொண்டு ஆதி பூதஸூக்ஷ்மங்களே தொடர்ந்துவருகின்றன. 5-வது ஆஹுதியில்

அவை கர்ப்பபுருஷனுகின்றன. உடம்பு இல்லாமல் திண்டாடுபவனுக்கு ஓர் உடம்பு கிடைக்க இத்தனையாகவேணும். இவனுடைய இந்த்ரியங்கள் தேவதைகளால் அதிஷ்டிதம். இத்தனையும் இவனுக்கு ஈச்வரகிருபையால் ஆகவேணும். ஜீவன் செய்வதொன்றுமில்லை. கேவலம் அத்ருஷ்டாயத்தம். நம் ப்ரமத்தால் கல்பனை என்று நினைக்கவே முடியாது. இப்படி மாநுஷதேஹம் கிடைப்பது மிக்க துர்லபம்; ஈஶ்வராநுக்ரஹைகலப்யம். அங்கமாகப் பரிணமித்த பூதஸூக்ஷ்மங்கள் ஊர்த்வரேதஸ்ஸினுடைய வயிற்றிற்போனால் அதற்குக் கர்ப்பமாக வழியில்லை. மறுபடியும் திண்டாட்டமே. புநரபி ஆரம்பந்தான். "ரேதஸ்ஸிக்கின் யோகம் வேண்டும்" என்று பாதமுடிவு ஸூத்ரத்தில் இதைக் காட்டினார். ப்ராணன் போனாலும் பூதஸூக்ஷ்மங்கள் இவனைத் தழுவிக்கொண்டே போகின்றன. ப்ராஜ்ஞனுடைய பரிஷ்வங்கம் ஸுகஹேது; இவற்றின் பரிஷ்வங்கம் அநர்த்த ஹேது. 'ப்ராஜ்ஞேநாத்மநா ஸம்பரிஷ்வக்த:' என்பதற்கு எதிர்த்தட்டாக பூதஸூக்ஷ்மஸம்பரிஷ்வக்தத்வத்தை முதல் ஸூத்திரம் அழகாகப் பேசுகிறது. அர்ச்சிராதிகதிக்கு நேர் எதிர்த்தட்டாக இந்தப் பாதத்தில் தூமாதிகதி காட்டப்படுகிறது. "𑌧𑍂𑌮𑌂 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌂 𑌚 𑌪𑌕𑍍𑌷𑌂 𑌤𑌿𑌮𑌿𑌰𑌕𑌲𑍁𑌷𑌿𑌤𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌮𑌾𑌸𑌾𑌨𑍍 𑌪𑌶𑍍𑌚𑌾𑌲𑍍𑌲𑍋𑌕𑌂 𑌪𑌿𑌤𑍄𑌣𑌾𑌂 𑌗𑌗𑌨𑌮𑌪𑌿 𑌮𑍃𑌤𑌃 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌪𑍍𑌯𑍇𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑍀" (தூமம் ராத்ரிம் ச பக்ஷம் திமிரகலுஷிதம் தக்ஷிணாவ்ருத்திமாஸாந் பஶ்சால்லோகம் பித்ரூணாம் ககநமபி ம்ருத: சந்த்ரமப்யேதி கர்மீ) என்று தூமமார்க்கம். திரும்பி வருகையில் பேதமுண்டு. சந்த்ரனிடமிருந்து ஆகாசம், ஆகாசத்திலிருந்து வாயு, அங்கிருந்து தூமம், அதிலிருந்து அப்ரம், அதிலிருந்து மேகம். மேகம் வர்ஷிக்கிறது. வர்ஷம் தான்யௌஷதி வ்ருக்ஷதிலமாஷங்களாகிறது. புண்யம் கழிந்ததும் கொஞ்சம் பாக்கியோடு (புக்தசேஷத்தோடு) திரும்புகிறார்கள். யாகாதிகள் செய்யாதவர்களுக்கு சந்த்ரப்ராப்தி யில்லை. நரகாநுபவங்கள் உண்டு. லோகங்கள் ஏழென்பதுபோல நரகங்களும் ஏழு.

இந்தப் பாதத்தில் ஆறு அதிகரணங்கள். (1) தேஹத்தை விடுகையில் பூதஸூக்ஷ்மங்களோடு கூடவே செல்லுகிறான். (2) ஸ்வர்க்கத்தை அநுபவித்துவிட்டும், புண்யம் கழிந்ததும் கீழேவிழுகிறான். இறங்கும் மார்க்கத்தில் கொஞ்சம் பேதம். போன வழியே அல்ல, கர்மசேஷத்தோடு இறங்குகிறான். (3) நரகம் போவா

ருக்கு சந்த்ரப்ராப்தி முதலியதில்லை. (4) ஆகாசாதிகளோடு வெறும் சேர்க்கையே, போகமில்லை. இப்படி யிறங்குவது வேகமாக. (6) தான்யம் முதலியதில் சேருகையில் அந்தந்த ஜீவனுடைய சரீரத்தில் இவன் சேருகிறான். இவன் ஸொந்த சரீரமல்ல, மற்றொருவன் சரீரத்தில் இவனுக்கு சேர்க்கை மட்டும். அங்கும் போகம் இல்லை. ஸ்த்ரீகர்ப்பப் பையை அடைகையில்தான் சரீரப்ராப்தி. அது முதல்தான் ஸுகதுக்கபோகம். இப்படித் திண்டாடுவதெல்லாம் ஜீவனுடைய ப்ரமம், அவன் ப்ரமிப்பதென்று சொல்லவே முடியாது. ஜீவனுடைய ஈச்வர பாரதந்த்ரியமே விளங்குகிறது. 'ஈச்வரப்ரேரிதனாக ஸ்வர்க்கத்திற்கோ நரகத்திற்கோ போகிறான்; தன் ஸுகதுக்கங்கள் விஷயத்தில் கூட இவன் அநீசன்; இவன் அஜ்ஞன்' என்ற வசனப்படி இப்படிப் பரதந்த்ரனாகத் திண்டாடும் ஜீவனை ப்ரஹ்மம் என்பது ஸூத்ரமதமாகாது. இப்படி தண்டிக்கும் ஈச்வரனும் தண்டிக்கப்படும் ஜீவனும் ஒன்றுவரோ?

இரண்டாம் பாதம்.

இதில் முதல் 4-அதிகரணங்களால் ஜீவனுடைய ஸ்வப்நாவஸ்தை, ஸுஷுப்த்யவஸ்தை, ப்ரபோதம், மூர்ச்சை இவற்றை விசாரிக்கிறார். மேலே 4-அதிகரணங்களால் ப்ரஹ்மத்தின் நிர்தோஷத்வ கல்யாணகுணாகரத்வங்களும், ப்ரபஞ்சம் முழுவதையும் தனக்கு விதேயமாக வுடைமையும், ஸர்வஸ்மாத் பரத்வமும், ஸர்வபலங்களையும் வழங்கும் ஔதார்யமும் விளக்கப்படுகின்றன. முதல் 4-அதிகரணங்களிலும், ஜீவனுடைய இளப்பத்தையும், பாரதந்த்ரியத்தையும் காட்டுவதால் முன் வைராக்யபாதம் செய்யும் வைராக்யோத்பாதனத்தை இவையும் செய்கின்றன. ஆயினும், இந்த 4-அதிகரணங்களிலும் ப்ரஹ்மம் ஜீவனுக்குச் செய்யும் உபகாரங்களையும் ஸர்வாவஸ்தைகளிலும் இவனுக்கு ப்ரஹ்மமே கதி, ரக்ஷகமென்பதையும் காட்டுவதால் ப்ரஹ்மகுணங்களையும் காட்டுகின்றன. ஆகையால் அந்த 4-அதிகரணங்களை இந்தப் பாதத்தில் முதலில் வைத்தார்.

1-வது ஸ்வப்நாதிகரணத்தில் ஸ்வாப்நபோகங்களையும் ஈச்வரன்தான் ஸ்ருஷ்டித்து அந்த ஸுகதுக்கங்களை இவனுக்கு அளிக்

கிறன். ஜந்மாதிஸூத்ரத்தால் சொல்லப்பட்ட ஸ்ருஷ்டிகாரணத்வம் ஸ்வாப்நப்பொருள்களின் ஸ்ருஷ்டிகள்விஷயத்திலும் உண்டு. அதிலும் ஜீவனுக்கு ஸ்ரஷ்ட்ருத்வமில்லை. ஸ்வப்நஸ்ருஷ்டிகள் அத்யாஸ்சர்யம். தூக்கத்தில் ஜீவனுக்கு ப்ரஹ்மம் ஆதாரஸ்தானம். தாய் ப்ரஜைகளை அணைப்பதுபோல, ஈச்வரன் ஸர்வ ஜீவர்களையும் காடமாய் அணைத்து துக்கம் கலவாத ஸுகத்தைக் கொடுக்கிறன். ஈச்வரனிடத்தில் ஸர்வகாலமும் விச்ரமித்து காடபரிஷ்வக்தனய் பூர்ண ஆநந்தப்படுவது மோக்ஷம். ப்ராஜ்ஞஸம்ஶ்லேஷம்தான் ஸுகத்திற்குக் காரணமென்பதை நேருக்கு நேராய் ஸுஷுப்தி காட்டுகிறது. ஈச்வரனிடம் விச்ரமிக்கையில் அவன் அணைப்பால் ச்ரமங்கள் போய்விடுகின்றன. விழித்துத் திரும்பி வெளிப்படுவதும் ப்ரஹ்மத்தினிடமிருந்தே. ப்ரஹ்மத்திற்குள் காடமாக ஒன்று கூடிக்கலந்தாலும், ஈச்வர ஸங்கல்பத்தால் தூங்குகிற ஜீவனே, அவனகவே திரும்பி வருகிறன். ஸர்வஜ்ஞன ஈச்வரன்தான் இப்படி அததை அததுவாகவே வெளியே விடமுடியும். புலியாகத் தூங்கிப் புலியாக எழுந்திருக்கிறது. இதெல்லாம் ப்ராந்திபக்ஷத்திற்கொட்டாது.

மூர்ச்சாவஸ்தையை நாலாவது அதிகரணத்தில் காட்டினர். மூர்ச்சை என்பது பாதி மரணம். மதிள்மேல் பூனை. நாமாக மூர்ச்சை தெளிய முடியாது. நம்முடைய ஜ்ஞானம் சக்தி சிறிதும் ப்ரயோஜனப்படாது. கேவலம் ஈச்வரேச்சையால் மூச்சும் ப்ரஜ்ஞையும் வரவேணும்.

5-வது உபயலிங்காதிகரணத்தில் நிர்தோஷத்வம், ஸகலகல்யாணகுணகரத்வம், இவை காட்டப்படுகின்றன. இரண்டு விதலிங்கங்கள் உபயலிங்கங்கள். தோஷங்களில்லாமலிருப்பது ஒன்று, கல்யாணகுணங்களிருப்பது ஒன்று. 'ஃஷிஜஂ ஃவிய விஜவஃ' (த்விலிங்கம் த்விவிதவிபவம்) என்று ஸாதித்தார். முடிவில் அநந்தகல்யாணகுணங்களோடு கூடியதென்று ஸூத்திரகாரர் நிகமனம் செய்தார். 'ஸமஸ்தகல்யாணகுணாத்மகோஸௌ' (ஸமஸ்தகல்யாணகுணாத்மகோஸௌ) என்றார் பராசர பகவான். 'ஸமஸ்தகல்யாணகுணாம்ருதோததிஃ' (ஸமஸ்தகல்யாணகுணம்ருதோததி:). ப்ரஹ்மம் அவ்யக்தமாயினும், அத்ருச்யமாயினும் ஸம்ராதனமென்னும் பக்தியோகத்தில் வ்யக்தமாக

த்ருச்யமாக ஆகிறதென்று இங்கே ஸூத்திரம். ஸ்ரீசாங்கரபாஷ்யமும் இப்படியே. அடுத்த ஸூத்திரத்தில் அத்ருச்யப்ரஹ்மத்தின் ப்ரகாசம், பக்தியோகமென்னும் செய்கையின் அப்யாஸத்தால் ஏற்படும் என்று கூறப்பட்டது. இந்த அதிகாணம் நிர்க்குணத்திற்கு ஒட்டாது. நிர்க்குணவாதத்தின் நிரஸனத்தையே இந்த அதிகரணம் செய்கிறதென்று ஸாராவளி. 6-வது அதிகாணத்தில் ஜடப்ரபஞ்சமும் ஜீவர்களைப்போல அம்சமே என்று தீர்மானித்தார். 7-வது அதிகரணத்தில் ஸர்வஸ்மாத் பரத்வத்தையும், 8-வது அதிகரணத்தில் ஸர்வபலங்களையும் அளிக்கும் ஔதார்யத்தையும் காட்டினர். பலம் கொடுப்பதென்பது நிர்க்குணப்ரஹ்மத்திற்கொட்டாது, ஸகுணப்ரஹ்மத்திற்குத்தானொட்டும் என்று ஸ்ரீசங்கர பாஷ்யம் ஒப்புகிறது. ப்ரஹ்மமும் ஸித்தோபாயமாக ஸாதனமானதால், அதை இங்கே ஸாதனத்யாயத்தில் விசாரிப்பது ஸங்கதமென்று ஸாராவளி காட்டிற்று.

ப்ரஜாபதி வாக்கியத்தில் சுத்த ஜீவனுக்கு ஸத்யஸங்கல்பத்வம் முதலிய எண்குணங்களுமுண்டென்று கூறப்பட்டது. அந்த எண்குணங்களும் ஈச்வரஸங்கல்பத்தால் தேஹமென்னும் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதால், ஜீவனுக்கு அநபிவ்யக்தம். பரஸங்கல்பத்தால் அவை திரோஹிதமென்று ஸ்வப்நாதிகரணஸூத்திரங்கள் ஸ்பஷ்டமாகக் கூறுகின்றன. ப்ரஹ்மத்தின் அநுக்ரஹத்தால் அர்ச்சிராதிகதிவழியாக முக்திவீட்டுக்குச் சேர்ப்பிக்கப்பட்டு ப்ரஹ்மத்தினிடம் ஸம்பத்தியை யடைந்து குணாஷ்டகத்தோடு கூடிய ஸ்வரூபத்திற்குப் பூர்ண ஆவிர்ப்பாவம் வரவேணும். ஜீவனோடு அவன் தேஹத்தில் கூடவிருக்கும் ஸம்ஸர்க்கத்தால் ப்ரஹ்மத்திற்கு தோஷம் வருகிறதில்லை. அதன் ஸ்வபாவத்தாலேயே அது எங்கேயிருந்தாலும் ஹேயப்ரதிபடம். அது யஜமானன்; தோஷங்கள் அணுகக் கூடாதது அகர்மவச்யம். எங்கிருந்தால் என்ன? எல்லாம் அநுகூலஸ்வபாவமே. கர்மத்தால்தான் ப்ரதிகூலமாவது. விதிக்கப்பட்ட குணங்கள், நிர்க்குணமென்ற பேச்சால் தள்ளப்படமாட்டா. நிர்க்குணமென்பதற்கு நிர்தோஷம் என்று பொருள். உபக்ரமந்யாயத்தையும், ஸாமாந்யவிசேஷந்யாயத்தையும் கவனிக்கவேணும்.

பராதிகரணத்தில் "ꣅம்ருதஸ்யைஷ ஸேது:" (அம்ருதஸ்யைஷ ஸேது:)என்று அம்ருதத்வப்ராபகத்வத்தையும், அம்ருத

மர்க ப்ராப்யத்வத்தையும் காட்டியிருக்கிறது. பலாதிகரணத்தில் மஹாராஜாவான பிதாவுக்கு ப்ரஹ்மத்தை ஒப்பிட்டார். 'ஸம்ராஜஃ ஸாநுகம்பாத் பிதுஃ' (ஸம்ராஜஸ்ஸாநுகம்பாத் பிது:)

மேல் பாதத்தில் சொல்லப்போகும் பக்தியை வ்ருத்திசெய்வதற்காக ஆச்சர்யமான ஸ்வப்நப் பொருள்களை ஸ்ருஷ்டிப்பவனும், தூக்கத்தில் ஆதாரமான விச்ரமஸ்தானமும், மெய் மறந்து தூங்குகிறவனையும் ச்வாஸம் செய்விப்பவனும், ஆஹாராதிகளைப் பசனம் செய்து ரக்ஷிக்கிறவனும், மூர்ச்சையைக் கருணையால் தெளிவிப்பவனும், நிர்தோஷகல்யாணகுணாகரனும், அசித்துக்களான சரீரங்களை அம்சமாக உடையவனும், பரத்வத்திற்கு எல்லைநிலமாயும், ஸர்வபலங்களையும் அளிக்கும் வதாந்யனுமாக ப்ரஹ்மத்தை இந்தப் பாதத்தின் அதிகரணங்கள் விளக்கின.

மூன்றும் பாதம்.

இது குணோபஸம்ஹார பாதம். வைச்வாநரவித்யை முதலிய வித்யைகள் பல சாகைகளிலிருக்கின்றன. அங்கங்கே சொல்லப்பட்ட குணங்களையெல்லாம் சேர்த்து அந்தந்த வித்யாநிஷ்டன் உபாஸிக்கவேண்டும். எந்த வித்யைகள் ஒன்று, எது வேறு என்றும் தெரியவேண்டும். எல்லா வித்யைகளிலும் பொதுவாக உபாஸிக்கவேண்டிய குணங்கள் சில உள. அந்த குணங்கள் ஸத்யத்வம், ஜ்ஞானத்வம், அநந்தத்வம், ஆநந்தத்வம், அமலத்வம், ஸ்ரிய:பதித்வம். அமலத்வம் என்பது நிர்தோஷத்வம். அது அத்யந்தம் அவச்யமானதால் அதைத் தனியாகவும் அக்ஷராத்யதிகரணத்தில் வற்புறுத்தினர். 'அமலத்வம்' என்று பொதுவாக ஒரு வார்த்தையில் சொன்னதோடு த்ருப்தியில்லை. மோக்ஷார்த்தமான உபாஸனங்கள் அநேகம் விதிக்கப்பட்டிருக்கின்றன. எல்லா மோக்ஷவித்யைகளுக்கும் ஸர்வோத்க்ருஷ்டமும், எல்லையற்றதுமான மோக்ஷாநந்தம் பலம். ஏதாவது ஒரு மோக்ஷவித்யையில் நிஷ்டை வேணும். அநேகத்தை ஒருவனே கலந்துகொள்ளவேண்டியதில்லை. எல்லாத்தையும் கலப்பதும் அஸாத்யம், கலப்பது புத்திக்கு ஸங்கடத்தைக் கொடுக்கும். அர்ச்சிராதிகதி எல்லாருக்கும் உண்டு, அந்தக் கதியை எல்லோரும் சிந்திக்கவேண்டும்.

ப்ரஹ்மவித்து தேஹத்தை விடுகையில் அவருடைய ஸுஹ்ருத்துக்களுக்கு அவர் ஸுக்ருதங்களும், துர்ஹ்ருத்துக்களுக்கு அவருடையபாபங்களும் ஒட்டிக்கொள்ளும். ப்ரஹ்மவித்துகளுக்கு யாரும் கிஞ்சித்காரம் செய்ய முயலவேண்டும்; அபகாரம் செய்யப் பயப்படவேண்டும். பலவிடங்களிலிருந்து குணங்களைக் கூட்டுவதென்பதே நிர்க்குணவித்யைக்கொட்டாது. ஸகுணவித்யைகளுக்குத்தான் இந்தப்பாதம் ஒட்டுமென்று இந்தப் பாதத்தின் முதலிலேயே ஸ்ரீசங்கரபாஷ்யம் ஒப்பிற்று. இந்தப் பாதத்தில் வித்யா பேதாபேதம் விசாரிக்கப்படுகிறதென்று ஸர்வாநுகதமாகச் சொல்லலாம். குணோபஸம்ஹாரமென்பது ஒரே வித்யைகளுக்கொட்டும். சில வித்யைகளில் பேதம் ஸமர்த்திப்பது உத்ஸர்க்கத்திற்கு அபவாதமாகக் கொள்ளலாம். ப்ரஹ்மஸ்வரூபத்தை யறிந்த பிறகும், யாவஜ்ஜீவமும் ப்ரஹ்மோபாஸனத்தை அனுஷ்டிக்கவேண்டும் என்பது நிர்க்குணப்ரஹ்மவாதத்திற்கொட்டாது.

பித்ருயானமார்க்கத்தில் யாதாயாதங்களையும், நரகாநுபவங்களையும், ஸ்வேதஜம் முதலிய கஷ்டஜந்மங்களையும், பஞ்சாக்நிவித்யைப்படி கர்ப்பமாகி மநுஷ்யஜந்மம் பெறுவதின் அருமையையும், ஸர்வாவஸ்தைகளிலும் ஜீவனுடைய குறைவுகளையும் கண்டு வைராக்யம் பிறந்து, ப்ரஹ்மகுணங்களின் ஆநந்த்யத்தையும் ப்ரஹ்மத்தின் ஔதார்யத்தையும் அறிந்து, அதனிடம் ப்ரீதி மேன்மேலும் வளர்ந்து, ப்ரஹ்மபஜனத்தில் சாஸ்த்ரோக்தமார்க்கமாக இறங்குகையில் தெரியவேண்டிய இப் பக்திவித்யைகளின் ஸ்வரூபங்கள் இங்கே காட்டப்படுகின்றன. தத்க்ரதுந்யாயத்தைக்கொண்டு ஓர் ஆக்ஷேபத்தைக் கிளப்பி அதைப் பரிஹரிக்கிறார். எப்படி எப்படி எந்தெந்த குணவிசிஷ்டனாக உபாஸனம் செய்கிறோமோ, அந்தந்த குணவிசிஷ்டமாகப்ராப்தி. உபாஸிக்காத குணங்களெல்லாம் ப்ராப்தியில் வராதே, அநந்த குணபரிபூர்ணப்ரஹ்மம் ப்ராப்யமாகாதே. எல்லா வித்யைகளுக்கும் பரிபூர்ணப்ரஹ்மாநுபவம் பலமென்று தத்க்ரதுந்யாயத்திற்கு விரோதமாக எப்படிச் சொல்லக்கூடும்? இதற்குப் பரிஹாரம்— உபாஸிக்கப்பட்டது கட்டாயம் ப்ராப்தியில் வருமென்று ந்யாயம். மற்றதைத் தள்ளுவதை அது சொல்லவில்லை. ஆர்த்திகமாக நிஷேதத்தைச் சொல்லப் பார்க்கவேணும். 'பரம ஸாம்யத்தை அடைகிறான்' என்று ஸர்வவித்யாபலமாக வசனமிருக்கையில் அதற்கு விரோதமாக ந்யாயம் கிளம்பாது.

கெடுதலை உபாஸித்தால் அதுவும் ப்ராப்தியில் வந்தே தீரும்; கெட்டதை உபாஸிக்கக்கூடாது என்பதும் ந்யாயத்திற்கு ப்ரயோஜனம். மற்ற பலங்களை உத்தேசித்த உபாஸனங்களில் தத்க்ரதுந்யாயமில்லை. அங்கு உபாஸ்யம் வேறு, ப்ராப்யம் வேறு. பலவிடங்களிலுள்ள சாண்டில்யவித்யை ஒன்றே. ஆதித்ய புருஷவித்யை வேறு, அந்தரக்ஷிபுருஷவித்யை வேறு, இரண்டிடத்திலும் ஆதாரமான ஸ்தானம் பின்னம்; அதனால் ரூபபேதம்.

'தஸ்யைவம் விதுஷோ யஜ்ஞஸ்ய' (தஸ்யைவம் விதுஷோ யஜ்ஞஸ்ய) என்ற தைத்திரீயபுருஷவித்யை வேறு; சாந்தோக்யத்தில் 'புருஷோ வாவ யஜ்ஞஃ தஸ்ய' (புருஷோ வாவயஜ்ஞ: தஸ்ய) என்ற புருஷவித்யை வேறு. ப்ரஹ்மவித்தின் புண்ய பாபங்கள் மித்ராமித்ரர்களுக்கு ஸங்க்ரமிக்கின்றனவென்பது நிர்க்குணவித்யையைச் சொல்லும் அத்வைதத்திற்கு ஒட்டாது. த்ருஷ்டக்ரமமாக ஜ்ஞானத்தால் எல்லாக் கர்மங்களும் தொலைவதைச் சொல்லுகிறார்கள். ஈச்வரஸங்கல்பம் என்னும் அத்ருஷ்டத்தால்தானே இப்படி ஸங்க்ரமணம் வரக்கூடும். இவனுடைய ஜ்ஞானத்தால் ஸித்தியாதே. ப்ரமநிவ்ருத்தியல்லவோ, ஜ்ஞானகார்யம். ப்ரஹ்மவித்தின் இந்த அத்ருஷ்டங்கள் ஸத்யமாகுமே, ஜ்ஞான நிவர்த்யமல்லவே. ஸத்யம்மாகவே பிறருக்குப் போகின்றனவே.

நான்காம் பாதம்.

ப்ரஹ்மவித்யையெனும் உபாஸனம் (பக்தியோகம்) மோக்ஷ ஸாதனம். அந்த ஸாதனத்தின் அங்கங்களைப்பற்றி இங்கே விசாரம். முதலில் 'வித்யை' என்பது மோக்ஷஸாதனம்தானென்று முதலதிகரணத்தில் ஸ்தாபிக்கிறார். இங்கே அதை ஸாதிக்கப்போவதை ஸித்தமாக வைத்துக்கொண்டு முன்பாதத்தில் வித்யைகளைப் பற்றி விசாரிக்கப்பட்டது. ஜ்ஞானமென்பது கர்மத்திற்கு அங்கம். வித்யைக்குக் கர்மாநுஷ்டானம் அங்கமென்பது ஒவ்வாது என்று பூர்வபக்ஷம். இந்தப் பூர்வபக்ஷம் அரைப்படிப்பு மீமாம்ஸகரால் (அர்த்தமீமாம்ஸகரால்) ஜைமினி பெயரை வைத்துக்கொண்டு செய்யப்படுவது. 'ஜைமினியால் அஹ்ருதயமாக மேலுக்குப் பேசப்

பட்ட பூர்வபக்ஷத்தை ஆக்ஷேபமாக எடுத்துவிலக்குகிறார்' என்று ஸாராவளி. ஜைமினி பாதராயணர் சிஷ்யரில் ச்ரேஷ்டர் (சிஷ்யதல்லஜர்) என்று சிந்தாமணி. வேதத்தை அங்கங்களுடனும் சிரஸான உபநிஷத்துடனும் அத்யயனம் பண்ணினவன் யஜ்ஞாதிகர்மங்களை அநுஷ்டிக்க அதிகாரி. அத்யயனமென்பதில் அர்த்தஜ்ஞாநமும் சேர்ந்ததென்று சிலர் சொல்லுவர். அக்ஷராராசிக்ரஹணம் மட்டுந்தான் பொருளென்று நம் மதம்; அத்வைதவிவரணக்ரந்தமும் அப்படியே. ஆயினும் குருகுலத்தில் மீமாம்ஸையும் கற்கப்படலாம். அர்த்தஜ்ஞாநமும் யஜ்ஞாத்யநுஷ்டானத்திற்கு முன் ஏற்படும். அர்த்தஜ்ஞானமும் கர்மத்திற்கு அங்கமாகலாம். ப்ரஹ்மவித்துக்களும்யஜ்ஞாதிகளை அநுஷ்டிக்கிறார்கள். உத்கீதவித்யையில்ஜ்ஞானத்தோடு செய்யும் கர்மம் வீர்யவத்தரமென்பர். வேதாந்தஜ்ஞானமும் கர்மத்திற்கு அங்கம். தன் ஆத்மா நித்தியம்என்பதைஉபநிஷத்துக்களைக்கொண்டு தெரிந்துகொண்டு இந்ததேஹம் போனாலும் நித்யனான ஆத்மா வேறு தேஹத்தோடு ஸ்வர்க்கத்தை அநுபவிக்கலாமென்று தெரிந்துகொள்ளத்தான் உபநிஷத்துக்கள் உபயோகப்படுவது. கர்மகர்த்தாவான ஜீவனுடைய ஸ்வரூபத்தை விளக்குவதுதான் உபநிஷத்துக்களின் கார்யம். ப்ரஹ்மம் ப்ரஹ்மமென்று ஒரு பொருள் சொல்லப்பட்டாலும் அதையும் ஜீவனோடு ஒன்றாகச் சொல்லும் சில வாக்கியங்களைக்கொண்டு, அது ஜீவஸ்வரூபமே, வேறல்லவென்று கொள்ளவேணுமென்று பூர்வபக்ஷம். 'அதிகன்' 'அதிகம்' என்று ச்ருதிகள் உபதேசிப்பதால், ஜ்ஞானத்தால்தான் மோக்ஷம் என்று வ்யாஸர்பதில். முன்பு இதரவ்யபதேசாதிகரணத்தில் ஸாதித்த 'அதிகம் து' என்னும் பதத்தையே இங்கே வைப்பது கவனிக்கத்தக்கது. பேதச்ருதி ப்ரபலமென்று ஜ்ஞாபகப்படுத்துகிறார். ஜீவனைக் காட்டிலும் வேறும், உத்க்ருஷ்டனுமான ப்ரஹ்மத்தின் ஜ்ஞானமும் வேதாந்தங்களால் விதிக்கப்படுகிறது. கர்த்தாவான ஜீவனுடைய ஜ்ஞானம்மட்டுமன்று. மேற்பட்டவனை உபாஸ்யனென்பதைக் காட்ட 'அதிக' என்ற பதம். 'ஜீவனைக் காட்டிலும் அதிகமான ப்ரஹ்மம் உபதேசிக்கப்படுவதால்' என்பதோடு மற்றொரு பொருளையும் "अधिकोपदेशात्तु" (அதிகோபதேசாத்து) என்பதின் அர்த்தமாக ஸாராவளி காட்டுகிறது. "பூர்வபக்ஷி சொல்லும் வேதவாக்யார்த்த ஜ்ஞாநத்தைக் காட்டிலும் அதிகமான யாவதாயுஷம் உபாஸனமென்னும் ஜ்ஞா

ந்த்தை வேதாந்தங்கள் உபதேசிப்பதால்" என்றும் பொருள். இந்தப் பொருள் ஸ்ரீசங்கரபாஷ்யத்தின் மூலத்திற்கு ஓர் வ்யாக்யானப்படி பொருள். அந்தப் பொருள் நமக்குமிஷ்டம். முன்பு 11-பாதங்களால் ஜீவனைக் காட்டிலும் ப்ரஹ்மம் வேறென்று நிரூபித்திருந்தும், மறுபடியும் இங்கே சங்கை வருமோ? வ்யாஸருடைய முக்கிய சிஷ்யர் ஜைமினி வேறு அபிப்பிராயத்தைக் கொண்டாரென்று பூர்வபக்ஷிகள் சொல்லி அதைக்கொண்டு சங்கை. அக்நிஸாத்யமான யஜ்ஞங்களேயில்லாத ஸந்யாஸாச்ரமம் உண்டு. அதனாலும், யஜ்ஞாதிகர்மத்திற்குத்தான் ஜ்ஞானமங்கம் என்று சொல்லமுடியாது.

இரண்டாம் அதிகரணத்தில் 'உத்கீதாதிகளும் ரஸதமம்' என்று உபநிஷத்து பேசுவது ப்ரமாணமே; ஏனெனில் அது ப்ரமாணாந்தரஸித்தமல்லாத அபூர்வவிஷயமென்று காட்டப்பட்டது. உத்கீதமே ரஸதமமானால், ஆநந்தகனமான ரஸபுருஷன் ரஸதமமென்பதில் ஐயமுண்டோ. 'உத்கீதத்தை உபாஸிக்க வேணும்'. விதிசப்தத்தை விணாக்கக்கூடாது என்று இங்கே, ஸூத்திரம். ப்ரஹ்மஜ்ஞானவிதிகள் கூடாதென்னும் அத்வைதக் கக்ஷியோடு இந்த ஸூத்திரஹேது விரோதிக்கும். ஜ்ஞானத்தை உபாஸனஜ்ஞானமாகக்கொண்டு விதி ப்ரத்யயத்தை விணாக்காமலிருப்பது நம் தர்சனம். ஸ்ரீசங்கரபாஷ்யமும் இங்கே நம் பாஷ்யம்போலவே பொருளுரைத்தது. வேதாந்தங்களில் அர்த்த வாதங்களைக்கூட விணாக்கக்கூடாது. அதையும் வித்யா விதியோடு சேர்த்துக்கொண்டு ஒரே வாக்யமாகப் பொருள்கொள்ள வேணுமென்று பாரிப்லவாதிகரணம் (3). அச்வமேதத்தில் புத்ராலும் மந்த்ரிகளாலும் சூழப்பட்ட ராஜாவின் முன்னிலையில் சொல்லவேண்டிய கதைகளுக்குப் பாரிப்லவமென்று பெயர். முதல் நாள் 'மநுர்வைவஸ்வதோ ராஜா'(மநுர்வைவஸ்வதோராஜா), 2-ம் நாள் 'யமோ வைவஸ்வதஃ' (யமோ வைவஸ்வத:) என்றும், 3-ம் நாள் 'வருணஃ ஆதித்யஃ' (வருண: ஆதித்திய:) என்றும் ஆக்யானங்கள். வேதாந்தகதைகளேயும் அச்வமேதகர்மத்திற்கு அங்கமாக்க பூர்வபக்ஷி ப்ரயத்நம். (4) ஸந்யாஸிகளுக்கு அக்நிகர்மங்களின் அபேக்ஷையில்லை; அவர்களின் ஆச்ரமதர்மங்கள் மட்டும் அபேக்ஷிக்கப்படும். (5) 'வேதாநுவசனத்தாலும், யஜ்ஞத்தாலும், தானத்தாலும், தபஸ்ஸாலும் ப்ரஹ்மத்தை அறிய (உபாஸிக்க)

விரும்புகிறார்கள்' என்ற ச்ருதியினால் க்ருஹஸ்தர்களின் வித்யைக்கு எல்லாக் கர்மங்களின் அபேக்ஷையுண்டு. (6) க்ருஹஸ்தர்களுக்கும் சமதமாதிகளின் அபேக்ஷையுண்டு. அவை த்ருஷ்டமான முறையிலே பக்தியோகத்திற்கு உபகரிக்கின்றன. கர்மங்கள் பாபங்களைப் போக்கிக்கொண்டு வித்யையின் தொடர்ச்சியான அநுவ்ருத்தியை ஸுகரமாகச் செய்கின்றன. இரண்டும் வித்யையின் நிஷ்பாதனத்தில் உபயோகப்படுவதால் இரண்டும் ஸந்நிபத்யோபகாரியான அங்கம். 8-வது அதிகரணத்தில் ஆச்ரமகர்மங்கள் வித்யைக்கு ஸஹகாரியான அங்கமென்று ஸூத்திரம் ஸ்பஷ்டமாக அறுதியிட்டது. 'கர்மங்களால் வேதனத்தை விரும்புகிறான்' என்னுமிடத்தில் கர்மங்கள் வேதனமென்றும் உபாஸனத்திற்குத் தான் கரணம் (அங்கம்) ஆகும். 'காலால் நடக்க விரும்புகிறான்' என்பதுபோல. (7) ப்ராணனுக்கே ஸம்சயம் வரும் ஆபத்தில் மட்டும் வர்ஜ்யமான அன்னத்தை ப்ராணனைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய அவச்யத்திற்கு மட்டும் புஜிக்கலாம். 'ஆஹாரஶுத்தௌ ஸத்த்வஶுத்தி:' என்று பூமவித்யை, த்ருவாநுஸ்ம்ருதி என்னும் உபாஸனத்திற்கு ஸாத்விகாஹாரநையத்யத்தை விதித்தது. விதி நிஷேதசாஸ்த்ரங்களை ப்ரஹ்மவித்தொருவரும் உல்லங்கனம் செய்யலாகாது. (9) பத்நீவியோகத்தால் க்ருஹஸ்தாச்ரமமில்லாமல் ஓராச்ரமமுமில்லாமல் நடுவிலிருப்பவருக்கு ஆச்ரமகர்மமில்லையாயினும், ஜபம், உபவாஸம், ஈச்வராராதனம் முதலிய கர்மங்களை அங்கமாகக்கொள்ளவேணும். ப்ரஹ்மவித்யைக்கு எதாவது கர்மங்களங்கமாகவிருந்தே தீரவேணுமென்று ஸூத்திரகாருடைய மதமென்பது ஸ்பஷ்டம். கர்மமே வேண்டாமென்பது ஸூத்ரங்களுக்கொட்டாது. 12-வது அதிகரணத்தில் 'தஸ்மாத் ப்ராஹ்மண: பாண்டித்யம் நிர்வித்ய' என்ற ச்ருதியால் பாண்டித்யம், பால்யம், மௌனம் ஆகிய மூன்றும் வித்யைக்கு ஸஹகாரிகளாக விதிக்கப்படுகின்றன. பக்தியின் ஆதிக்யத்தால் ஸத்வம் முற்றி, ஊஹாபோஹங்களுக்கு யோக்யமான ப்ரதிபை பாண்டித்யமாகும். ச்ரவணமனனங்களுக்கும் மேற்பட்டது. அதற்கும் மேற்பட்டதாக விதிக்கப்படும் மௌநம் கேவலமனனமாகாது. த்யானாலம்பனத்தை அடிக்கடி ஸம்சீலனம்செய்வது முனியின் தன்மையான நிரந்தரசிந்தநம், ப்ரக்ருஷ்டமான மனனம். அஷ்டாங்கயோகத்தில் ஸமாதியென்பது ஸாக்ஷாத் ப்ரம்மவித்யை. மௌனமென்பது ஸமாதிக்கு முந்

திய தாரணை த்யானங்களாகுமென்று ஸாராவளி. 'விஷள யாரு ணாதி)ருக்கிரேஷா' (விபௌ தாரணுத் யுக்திரேஷா). (13.) 'பால்யம்' என்பது தன் மாஹாத்ம்யத்தை வெளிப்படுத்தாமல் மறைத்து அடங்கியிருப்பது. குழந்தையைப்போல் யதேஷ்டசரித மல்ல. ஸம்மானம், பூஜை முதலியதால் தவம் அழியும், அவமானத்தால் தவம் பெருகும். (14, 15.) ப்ரதிபந்தகமில்லாவிடில், பலோத்தேசமாகச் செய்யப்படும் உபாஸனங்கள் உடனே பலம் அளிக்கும்; ப்ரதிபந்தகமிருந்தால், தாமதித்துத்தான் பலம்கிடைக்கும். முக்திபலத்திற்காகச் செய்யப்படும் உபாஸனங்களுமிப்படியே. நிவ்ருத்திதர்மங்களோடு கூடிய ப்ரஹ்மவித்யைக்கும் ப்ரதிபந்தகம் உண்டோ? 'இதில் ப்ரத்யவாயமில்லை' என்று கீதையும் நிவ்ருத்தி தர்மவிஷயத்தில் பாடுகிறதே என்று சங்கை. ப்ரஹ்மவித்விஷயத்தில்அபசாரம் மிகப்ரபலமான ப்ரதிபந்தகம்; அதிருந்தால், மோக்ஷ பலம் தாமதிக்குமென்று பதில். புருஷார்த்தகாஷ்டையோடு ஸாதனாத்தியாயத்தை அழகாக முடித்தார். மேல் மோக்ஷபலாத்யாயத்திற்கு அவதரிகையாக இங்கே முடிவில் முக்திபலத்தைப் பேசினர். இந்த இரண்டு அதிகரணங்களும் ப்ரதிபந்தகமிருந்தால் தாமதித்து, இல்லாவிடில் 'உடனே' என்கிற அநியமத்தைப் பேசுகின்றன. ஓர்ஸூத்ரத்தில் அநியமம் மற்றோர் ஸூத்திரத்தில் நியமம் என்று பிறர் பொருள் கூறுவது ஸூத்ராக்ஷரஸ்வரஸமல்லவென்று ஸாராவளி ஸூசிக்கிறது. வித்யை உடனே உத்திஷ்டபலத்தைக் கொடுக்கவில்லை யென்றதால் சாஸ்த்ரத்தில் அவநம்பிக்கை வரக்கூடாது. ப்ரதிபந்தகவிசேஷத்தால்தான் பலவிளம்பம் என்றறிய வேண்டும். ப்ரதிபந்தகங்களால் பலம் தடைபடுவதால் அவற்றையெல்லாம் போக்க முயற்சி செய்யவேண்டும். விக்நமில்லாமல் தோஷமில்லாமல் செய்தால் பலம் கைமேல் கிடைக்கும். இதையெல்லாம் விளக்குவதற்கு இந்தப் பாதமுடிவில் 'அநியம' விஷயமாக இந்த இரண்டு அதிகரணங்களும் அமைக்கப்பட்டன என்று ஸாராவளி.

இது பலாத்யாயம்— முழுவதும் மோக்ஷபலத்தைப் பற்றி விசாரிக்கவேணும். இதில் முதல் ஆறு அதிகரணங்கள் ஸாதனமான ஜ்ஞாநத்தைப்பற்றி விசாரிக்கின்றன. இந்த அத்தியாயத்தில் இது எப்படிப் பொருந்தும்? ஸாதனமான பக்தியும் பலத்தைப் போல இன்பமாயிருக்குமென்பதையும், ஸாதனம் அநுஷ்டித்தால் பலம் ஸித்திப்பது நிச்சயமென்பதையும், இந்த ஸாதனமல்லாத வேறொன்றாலும் மோக்ஷம் ஸித்தியாதென்பதையும், மோக்ஷம் இதோ நெருங்கிவிடும் என்பதையும் காட்டுவதற்காக, இந்த மோக்ஷாத்யாயத் தொடக்கத்திலேயே ஸாதனஸ்வரூபத்தையும் விசாரிக்கிறாரென்று ஸாராவளி. பலத்தில் பர்வங்களை 4-பாதங்களால் விளக்குகிறார். முதல்பாதம் பின்பாதியிலும், 2-ம் பாதத்திலும் வித்யையென்னும் பக்தியோகம் கைகூடித் தொடங்குகையிலேயே ஸ்தூலதேஹத்தோடு இருக்கையில் ஸித்திக்கும் பலன்கள் விசாரிக்கப்படுகின்றன. 3- 4-பாதங்களில் தேஹத்தை விட்டு வெளிக்கிளம்பின பிறகு ஸித்திப்பவையெல்லாம் விசாரிக்கப்படுகின்றன. மோக்ஷஸாதனமாக விதிக்கப்படும் ஜ்ஞானம் அநேகம் தரம் ஆவ்ருத்தி செய்யப்படும். ப்ரஹ்மவிஷயமான இன்ப நினைப்பு. இது கடைசிவரையில் ஆவ்ருத்தமாகவேணும். நிரந்தரமான த்யானமாயிருக்கவேணும். வேதாந்தங்களில் ப்ரஹ்மத்தை அறியவேண்டும் என்று சொல்லியிருப்பதற்கு உபாஸிக்கவேண்டும் என்று பொருளென்று முதலாவதான ஆவ்ருத்யதிகரணம் தீர்மானித்தது. வேதனம் என்பதற்கு உபாஸனம்தான் பொருளென்று ஸ்ரீசங்கரபாஷ்யமும் இங்கே அறுதியிட்டது. நிர்க்குணப்ரஹ்மத்தின் ஸக்ருத் ஜ்ஞானமென்பதற்கு இது நேர் விரோதம். தேஹம் விழும் வரையில் இப்படி ஆவ்ருத்தி செய்யவேணுமென்று 6-வது ஆப்ரயாணாதிகரணம் தீர்மானித்தது. அதுவும் நிர்க்குணஜ்ஞாநத்திற்கு விரோதம். பக்தியோகத்திற்குத்தானொட்டும். த்யானமென்னும் நிதித்யாஸனமான ஸாதனம் 'அஷ்டாங்கயோகம்' என்பது ஆஸீநாதிகரணத்தால் காட்டப்படுகிறது. அத்வைதவ்யாக்யானங்களில் நிர்க்குணஜ்ஞானமென்பதற்கு யோகமென்பதே பொருந்தாது என்கிறார்கள். இரண்டாவது அதிகரணம் ஆத்மத்வோபாஸநாதிகரணம். 'ஆத்மா' என்று ப்ரஹ்மத்தை உபாஸிக்கவேணும். உயிர் அந்தர்யாமி, 'தன்னை உடம்பாகவுள்ள அந்தர்யாமியான உயிர்' என்று அநுஸந்தானம். தேஹவியுக்தமான தன் சுத்த ஜீவஸ்வரூபத்திற்

கும் உள்ளுயிராக உபாஸனம். உடலாகத் தன் சுத்தஸ்வரூபமும் நினைக்கப்படும். அதை அஹங்க்ரஹோபாஸனமென்பர். நானென்பது அவனையும் சொல்லுகிறது. அவனன்றியில் நானென்பதே நில்லாது. 'யானெனன்பதென்'. 'நானே நீ'. இது அத்யந்தமான தாததீங்யபுத்தியை யளிக்கும். 'நின்னலாலிலேன் காண்'. "𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌯𑌤𑍍𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌪𑍍𑌰𑌮𑌿𑌤𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑍁𑌡𑌤𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇𑌽𑌹𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑍋𑌕𑍍𑌤𑌿𑌃" (ப்ரஹ்மாயத்தஸ்வரூபப்ரமிதிஸூத்ருடதாஸித்தயேஹங்க்ரஹோக்தி:) என்று ஸாராவளீ. விசேஷ்யமான ஸர்வாந்தராத்மாவான ஈச்வரனிடம்தான் புத்தி விச்ரமிக்கும். தத்துவஸ்திதியுமப்படியே. மோக்ஷத்தில் பலத்திலும் 'அவிபாகேந' (அவிபாகேந). பிரிக்காமல் உயிருமுடலுமாக ஒன்றுகவே அனுபவம். 4-வது பாதம் 2-வது அதிகரணம் 'அவிபாகேந த்ருஷ்டத்வாத்' (அவிபாகேந த்ருஷ்டத்வாத்) இங்கே உபாஸனதசையிலும் அப்படியே என்பதை இந்த ஆத்மத்வாதிகரணம் விளக்குகிறது. இரண்டிடத்திலும் ஐக்யம் பேசவில்லை. பிரியாத உயிருமுடலுமான கலவியே பேசப்படுகிறது. 'அவன் ஆத்மா' என்றதால் 'தான்உடல்' என்று ஏற்படுகிறது. 'எனனுயிர்' என்று உபாஸனக்ரமமென்பதை ஆழ்வாரும் முதல் திருவாய்மொழியிலேயே விளக்கியிருக்கிறார். 'இப்பிரபஞ்சமெல்லாம் அதை உயிராக உடையது. அவன் உயிர். ஆகையால் அது நீ' என்று தத்துவமஸி ச்ருதி. 'அவன் உன் ஆத்மாவானதால் நீ அது' என்று ஸ்ரீசங்கரபாஷ்யம். நமக்கும் இது இஷ்டமே.

மேல் ஐந்து அதிகரணங்களும் இந்த தேஹமிருக்கையிலேயே பலம் அங்குரிப்பதைக் காட்டுகின்றன. பக்தியோகம் ஆரம்பிக்கையிலேயே பலம் கிட்டத் தொடங்குகிறது. கர்மங்களெல்லாம் கழிவது பலம். ப்ராரப்தகர்மம் தவிர மற்றது கழிந்ததுபோலாகிறது. அபுத்திபூர்வகமாய்ப் பின்பு செய்யும் பாபங்களொட்டுகிறதுஇல்லை. புண்யமும் பாபம் போன்றதே. ஆனல் ஸத்வவ்ருத்தியை அளிக்கும். நித்தியகர்மங்கள் பக்தியோகத்திற்கு அநுகூலமாகையால் அவற்றைச் செய்யவேணும். அதன் பயனை பாபவாஸனநிரஸனமும் ஸத்வவ்ருத்தியும், பக்தி வளருவதற்கு அநுகூலம். இதெல்லாம் நிர்க்குணஜ்ஞானம் வந்ததும் ஜீவன்முக்தனென்பதற்கு ஒட்டாது ப்ராரப்தகர்மம் கழியாமல் நிற்கிறதென்று ஸூத்திரகாரர் தீர்மானம். போகத்தால் ப்ராரப்த புண்யபாபங்களைக்

கழித்துவிட்டுப் பிறகு 'ஸம்பந்நனுகிறான்', 'முக்தனுகிறான்' என்று கடைசி ஸூத்திரம். தேஹமிருக்கையிலேயே 'ஸம்பத்தி'. பின்பு அர்ச்சிராதிகதி வேண்டாமென்பது ஸூத்திரத்திற்குப் பொருந்தாது. 'ப்ராரப்தம் கழிந்து சரமதேஹம் விழுமளவுந்தான் தாமதம். அந்த ப்ரதிபந்தகம் தொலைந்ததும் நான் மோக்ஷமடைவேன்' என்று ஸத்வித்யாவாச்யம். 'நிர்க்குணஜ்ஞானத்தால் ப்ராரப்தகர்மம் நசிக்கிறதில்லை. போகத்தால்தான் கழியும்' என்று இங்கே ஸ்ரீஆநந்தகிரி. ஈச்வரஸங்கல்பமான அத்ருஷ்டமே ப்ரபலம். அவர்ஸங்கல்பமெனும் ப்ராரப்தம் கழிந்த பிறகுதான் மோக்ஷம் என்பது திண்ணம். தத்துவஜ்ஞானத்தால் ப்ரபஞ்ச ப்ரமம் த்ருஷ்டமுறையாகவே தொலைகிறது, அத்ருஷ்டம் செய்வதொன்றுமில்லை என்பது ஒவ்வாது. பலாத்யாயத்தின் முதல்பாதமுடிவில் 'ஊ௰ ஸம்௰டி௱தெ' என்று மோக்ஷபலத்தின் கீர்த்தனம். இரண்டாம்பாதம் முடிவிலும் அர்ச்சிராதிகதி வழியாய் ப்ரஹ்மத்தினிடம் சேருவதைச் சொல்லும் கீதையைப் பேசினர். 3-ம்பாத முடிவிலும் அப்ரதீகமாக உபாஸிப்பவரை அர்ச்சிராதிகள் பரமபதம் சேர்ப்பிப்பதைப் பேசினர். 4-வது பாதம் முடிவிலும் பரமபதம் சென்றவர் திரும்புவதில்லை என்று பேசினர். முழுவதும் நம் தர்சனமே. 'விஹிதகர்மங்களை ஈச்வரன் அந்தர்யாமியாகத் தன்னைக்கொண்டு செய்விக்கிறான்' என்ற புத்தியோடே அநுஷ்டிப்பதால் அவை பக்தியோகத்திற்கு அநுகூலமேயாகும். ப்ரத்யக்விஷயமான ஸம்ஸ்காரம் ஓங்கி வளர்ந்து அத்யந்தம் ஈச்வராதீனத்வபுத்தி த்ருடப்படும். இப்படிக் கர்மாநுஷ்டானம் ஸமாதிஅநுபவப் பயிற்சியை ஸுகரமாக்கும். "ஆரப்தகாந்தௌ வ மோக்ஷ:" (ஆரப்தசாந்தெள ச மோக்ஷ:) என்று ஸாராவளியும் மோக்ஷத்தைப் பேசி பாதத்தை முடித்தது ஸூத்திரத்தை அடியொற்றியது.

இரண்டாம் பாதம்.

அடுத்த பாதம் அர்ச்சிராதிகளால் பரமபதத்திற்கு ப்ரஹ்மவித்துக்கள் அதிவஹனம் செய்து சேர்க்கப்படும் விஷயம். கர்மங்கள் கழிந்து கடைசி தேஹம் விழும் வரையில் முன்பாதம் வந்தது. ஸ்தூலஸூக்ஷ்மதேஹங்களை அடியோடு விட்டுப் பிரிந்த அந்தர்

யாமியின் அநுக்ரஹத்தால் ப்ரஹ்மநாடியில் சேர்ந்து அர்ச்சிராதியில் அர்ச்சிஸ்ஸோடு அக்னி முதலியதோடு சேரும்வரையில் இந்தப்பாதம் விசாரிக்கிறது. இங்கே தேஹவியோகமான இறப்பை விஸ்தாரமாகப்பேசுகிறது. இறப்பில்லாத நித்யமான மோக்ஷப் பிறப்பைப் பேசுமிடத்தில் தேஹத்தினிறப்பைப் பேசுவது மிகவும் மங்களமே. அந்த மங்களமில்லாமல் மேல் வரும் அநந்தமங்களமான மோக்ஷம் ஸித்தியாதென்று ஸாராவளி அழகாகக் காட்டிற்று. "𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌪𑌲𑌾𑌨𑌾𑌂 𑌮𑌰𑌣𑌮𑌪𑌿 𑌵𑌦𑌨𑍍 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑌾𑌹" (மத்யே வித்யாபலாநாம் மரணமபி வதந் தத்ப்ரியம் சிந்த்யமாஹ). அந்நாளை ஓர் பெரிய திருநாளாக ப்ரஹ்மவித்து ஆவலுடன் ப்ரதீக்ஷிப்பார். அதுவும் ஃபலகோடியே. 'ஸம்பத்தி' என்பது இறப்பு மோக்ஷம் இரண்டையும் சொல்லுகிறது. நாடிவிசேஷத்தில் சேரும் வரையில் இந்த இறப்பெனும் ஸம்பத்தியின் க்ரமம் ஜ்ஞானி அஜ்ஞன் இருவருக்கும் ஏகரூபம். நிர்க்குணஜ்ஞானம் வந்ததாகச் சொல்லப்படுபவருக்கும் இந்தக் கல்யாணம் உள்ளவேயுள்ளது. நிர்க்குணஜ்ஞானம் வந்தவருடைய தேஹம் அவருக்கும் தொலையவில்லை, பிறருக்கும் தொலையவில்லை. ஞானம் வந்தபிறகும் தேஹம் அநுவர்த்திப்பதும் ஆஹாராதிகளும் உச்வாஸநிச்வாஸாதிகளும் மற்ற செய்கைகளும் எல்லோருக்கும் ஸமானம். ஈச்வரனுடைய ஸங்கல்பம் உதயமாகி தேஹச் சிறையிலிருந்து நீக்கி, ப்ரஹ்மநாடியில் சேர்ப்பித்து அவர் அநுக்ரஹத்தால் பரமபதம் சேர்ப்பிக்கப்படவேணும்.

ஹார்த்தனால் அநுக்ரஹிக்கப்பட்டு, 101-வதான ப்ரஹ்மநாடியில் சேர்ந்து வெளிப்பட்டு அர்ச்சிராதியோடு சேருகிறான். ஹார்த்தனுடைய அநுக்ரஹம் ஸாதனமென்பதை ஸூத்திரம் ஸ்பஷ்டமாகக் காட்டிற்று. இப்படிஈச்வரனுடைய அநுக்ரஹத்தால் மோக்ஷம் கிடைப்பதைப் பேசும் இந்த ஸூத்திரம்தான் எல்லாத்திலும் நீளமான (பெரிய) ஸூத்திரம். ப்ரஹ்மஸூத்ரசாஸ்த்ரத்தில் இதுதான் (மிகப்பெரிதான) நிரதிசயமான ப்ரஹ்மஸூத்திரம். இந்த இடத்தில் 'ஹ்ருதயாலயத்தில் நன்றாய் உபாஸிக்கப்பட்ட ப்ரஹ்மத்தினால் அநுக்ரஹிக்கப்பட்ட தத்பாவஸம்பந்நரான வித்வான் 101வது மூர்த்தந்யநாடியால் வெளிக்கிளம்புகிறான்' என்று ஸ்ரீசங்கரபாஷ்யம். ப்ரஹ்மபாவஸம்பந்நனுக்கும் நிஷ்க்ராந்திகதிகளுண்டென்றே பேச்சு. இங்கே 'சதம்ச ஏகாச' என்கிற கட

ச்ருதி உதாஹரிக்கப்பட்டது. அம்மதத்தில் கடோபநிஷத்து நிர்க்குணவிஷயம். நிர்க்குணஜ்ஞானிக்கு நிஷ்க்ராந்தியில்லை கதியில்லை, இந்த ஸூத்திரம் ஸகுணோபாஸகனுக்குத்தானென்றும் பேச்சில் ஸ்ரீசங்கரருக்கு ஹார்த்தமான தாத்பர்யமில்லை.ஹார்த்ததாத்பர்யம் இருந்தால் இப்படி ஹார்த்தனைப் பற்றிப் பேசார். 'வித்யையால் ஸம்ப்ரீதரான ஹார்தருடைய ப்ரஸாதமெனும் வெளிச்சத்தால் ஸ்வார்ஹமான நாடீப்ரவேசம்' என்று ஸாராவளீ.

வைராக்யபாதத்தில் இறப்பை வர்ணிக்கலாமே, இங்கே மோக்ஷ பலாத்தியாயத்தில்தானு வர்ணிக்கவேணுமென்று கேட்டுக்கொண்டு 'இறப்பு' என்பது ஸ்வயம் கெடுதியென்பதில்லை; ப்ரஹ்மவித்திற்கு அது ஆசைப்படும் பலம்; அதையும் பலமாகச் சிந்திக்கவேணும் என்று ஸாராவளீ யளித்த பதில். நிர்க்குண ஜ்ஞானம் வந்தஉடன் தேஹமிருக்கையிலேயே ஜீவன்முக்தி சொல்லும் பக்ஷம் ப்ரஹ்ம ஸூத்திரவிருத்தம். ஸம்பத்திகாலத்தில் (அந்தகாலத்தில்) ஸ்மரிக்கவேண்டியதைப் பற்றி இப்பாதத் தொடக்கத்தில் ஸாராவளி கீதையைப் பேசிற்று. ஸூத்ரகாரரும் அதை முன் பாதத்திலேயே 'ப்ரயாணகாலம் வரையிலும் அக்காலத்திலும் ப்ரஹ்மஸ்மரணம் அவச்யம் என்று காட்டினர். 'ரச்ம்யநுஸாரீ' 'தக்ஷிணாயனத்திலும் கூட' என்பதால் உத்தராயணத்தையும், 'யொ஗ிநஃ ப்ரதி ஸ்மயெதெ ஸ்மாா்தெ சைதெ' (யோகின: ப்ரதிஸ்மர்யேதே ஸ்மார்த்தே சைதே) எனும் ஸூத்ரத்தால் கதிஸ்மரிக்கப்பட்டுக்கொண்டே யிருக்கவேணும் என்ற கீதாஸ்மிருதியையும் காட்டி பாதத்தை முடித்தார். 'தச்ஶெஷ்க ஹ்யநுஸ்மரு தெஶ்ச' (தச்சேஷகத்யநுஸ்ம்ருதேஶ்ச) என்று ப்ரஹ்மவித்துக்களுக்கு கதிசிந்தனமவச்யமென்று நடுவிலும் காட்டினர். அர்ச்சிராதிகதி மோக்ஷமடைவிக்கும் சாச்வதமானகதி யென்றும், அதுதான் 'அநாவ்ருத்தி' 'அபுநராவ்ருத்தி'யெனும் மோக்ஷத்திற்கு ஸாதனமென்றும் காட்டினர். 'என்னை யடைந்தால்தான் புநராவ்ருத்தி யில்லை' என்று கீதை. 'மோக்ஷீ' என்று மோக்ஷபலமடைபவனைப் பேசி இந்தப்பாதத்தின் ஸாராவளி முடிந்தது.

மூன்றும் பாதம்

எல்லா ப்ரஹ்மவித்துக்களுக்கும் அர்ச்சிராதிகதிதான் ப்ரஸித்தமானது. இது ப்ரஸித்தமென்று முதல் ஸூத்திரம். ச்ருதோபநிஷத்கர்களுக்கு இந்த கதிதான் உண்டென்று அந்தராதிகரணத்தில் முன்பே அறுதியிட்டார். 'எல்லா வித்யைகளுக்கும் இந்த கதி ஸமானம்' என்று 3-இல் அறுதியிட்டார். ப்ரஹ்மவித்யாஸாமாந்யத்திற்கு இந்த கத்யநுஸ்ம்ருதி சேஷமென்று தமோதாகஸ்ஸூத்திரத்தில் கூறினார். இங்கும் இதன் ப்ரஸித்தியைக் கூறுகிறார். இந்தப்பாத முடிவிலும் 'அர்ச்சிராதிகணம் அப்ரதீகமாக ப்ரஹ்மத்தை உபாஸிப்பவரை மோக்ஷம் சேர்ப்பிக்கிறது' என்றும் தெளிவாகப் பேசுகிறார்.

இந்தப் பாதத்தில் நிர்குணப்ரஹ்மஜ்ஞானிக்கு கதியில்லை என்றோர் அதிகரணத்தில் தீர்மானிப்பதாகப் பிறர் சொல்லுவது பொருந்தாது. முன் பாதக் கடைசி ஸூத்திரத்தில் 'யோகியின் கதியை'ப் பேசினதை அநுஸரித்து 'யெ.ந யொ.மீ வூ.யா.தி' என்று இந்தப் பாதம் முதல் ச்லோகத்தில் ஸாதித்தார். 'இது மௌகுந்தமான முக்திகண்டாபதம்'. சிசுபாலன் தத்க்ஷணமே வாஸுதேவபதத்தை அடைந்தான். அயோத்யாஸ்தாவரஜங்கம ப்ராணிகள் பெருமாளுடன் சென்றன. சதுர்முகப்ரஹ்மா தம் லோகத்திலிருந்து பரமபதமடைகிறார். இப்படி சில அதிகாரி விசேஷங்களுக்கு வேறு கதி உண்டு. ஆயினும், இதுதான் ஸாமாந்யமான ப்ரஸித்தகதி. அர்ச்சிராதிகள் அதிவஹனம் செய்யும் தேவர்கள். ஆதிவாஹிகரில் எட்டாவது சந்த்ரன். தூமாதிமார்க்கத்தில் ஸுக்ருதிகளுக்கு சந்தரப்ராப்தி சொல்லப்பட்டது, அது வேறு. புருஷவித்யையில் தக்ஷிணாயன மரணநிமித்தமாக சந்த்ரஸாயுஜ்யம் சொல்லப்பட்டது, அது வேறு, அர்ச்சிராதிகளில் சந்த்ரர் ஆதிவாஹிகராக நயனம் செய்வது வேறு. சந்திரோதயம் என்ற திருநாமத்தில் அது மோக்ஷப்ராபக சந்த்ரன்தான் என்பது நிச்சயமாகாதாகையால் 'ஸூர்யோதயம்' என்று நாடகத்திற்குத் திருநாமம் சாற்றப்பட்டது. 'அர்ச்சிராதிகணமான அக்நி வாயு, ஸூர்யன் சந்த்ரன் முதலியவர் நாம்பூஜிக்கும் அக்ந்யாதி தேவதையல்ல. அவர்கள் நித்யவைகுண்டப்ருத்யர்கள்'. அமானவர் அப்ராக்ருதராக இருந்துதீரவேணும். அவரோடு கூடிய இந்த்ரப்ரஜாபதிகளுமப்படியே யிருக்கவேணும். அதற்கு அநுகுணமாக மற்றவரும் திவ்யபுருஷராயிருப்பது ஸ்வரஸம்.

கார்யமெனும் ஹிரண்யகர்ப்பரை உபாஸிப்பவர் சிலர். சரீரமான தனக்கு உயிரான ஸ்வசரீரகபரமாத்மாவை உபாஸிப்பவர் சிலர். பரமாத்மாவை உயிராகவுடைய ஸ்வஸ்வரூபத்தை உபாஸிப்பவர் சிலர். இவ்விருவரும் அஹங்க்ரஹோபாஸகர். முதற் சொன்னவர் பரப்ரஹ்மோபாஸகரேயல்லர். ஆகையால் அவர்களுக்கு அர்ச்சிராதிகதியில்லை. அவர்களுக்கு பரப்ரஹ்மப்ராப்தி இல்லை. பின் சொன்ன இருவருக்கும் அர்ச்சிராதிகணத்தால் ப்ரஹ்மப்ராப்தியுண்டு. பரமாத்மசரீரமாகத் தன்னை உபாஸிப்பதிலும் ப்ரஹ்மத்திற்குத்தான் உயிராக ப்ராதான்யம். இவ்விருவரும் அப்ரதிகப்ரஹ்மோபாஸகர். ஸ்வஸ்வரூபாந்விதப்ரஹ்மநிஷ்டையையும், பரமாத்மசரீரஸ்வாத்மநிஷ்டையையும் நயனம் செய்கிறார்கள். முகபேதத்தால் இவ்விருவரும் ஸம்பூர்ணநிஷ்டரே, அப்ரதீகோபாஸகரேளன்று ஸாராவளி. இருவருக்கும் ப்ரஹ்மமே உயிர், முக்கியம். தானென்பது விசேஷணமே. கேவலப்ரக்ருதியையாவது கேவல ஜீவனையாவது, ப்ரக்ருதிவிசிஷ்டகேவல ஜீவனையாவது ப்ரஹ்மத்ருஷ்டியாலோ, அல்லது ஸ்வயமாகவோ உபாஸிப்பவர் ப்ரதீகோபாஸகர். அவர்களுக்கு ப்ரஹ்மவிஷயமான க்ரது (உபாஸனம்) இல்லை. ப்ரஹ்மம் அவர்களுக்கு ப்ரதானமல்ல. எதில் ப்ரஹ்மத்ருஷ்டி பண்ணுகிறார்களோ, அந்த ப்ரதீகமே (ஆலம்பனமே) அவர்களுக்குப் பிரதானம். "வஶவடிமஃனெ தவிஷாං ஸொாzயஃயூா" (பரபதகமனே தத்விதாம் ஸோயமத்வா) என்று கடைசி ச்லோகத்தில் பரமபதகமனத்தை ஸாதித்தார்.

நாலாம் பாதம்.

ஸ்தூலதேஹமிருக்கையிலேயே அக(வ)ங்கள்(கர்மங்கள்)கழிவது, ஸ்தூல ஸூக்ஷ்ம தேஹங்களை விடுவது, அர்ச்சிராதிகளால் நயனம் செய்யப்படுவது இவை மூன்று பாதங்களால் விளக்கப்பட்டன. கர்மோபாதிகள் கழிந்தவனுக்கு ப்ரஹ்மத்தினிடம் ஸம்பத்தியால் ஸ்வஸ்வரூபத்தின் சுத்தமான ஆவிர்ப்பாவம் கிடைத்து பேரின்பமடைவதை இந்த 4-ம் பாதத்தில் விளக்குகிறார். முதல் 3-அதிகரணங்கள் ஒரு பேடிகை. பின் 3-ம் ஓர் பேடிகை. முதல் பேடிகையில் ஸ்வஸ்வரூபாவிர்ப்பாவத்தை விளக்குகிறார். பின் பேடிகையில் ஸ்வச்சந்தவிருத்தியான கைங்கர்யஸாம்ராஜ்யத்தை விசாரிக்கிறார்.

இதெல்லாம் கர்மாதீனமல்ல, ஆனால் ஸர்வகாரணபரமாத்மாதீனம். பரமாத்மாவிற்குள் நுழைந்து அவரநுக்ரஹத்தால் ஸ்வரூபமாவிர்ப்பவிக்கிறது. ஸாயுஜ்யமென்பது ஸமானபோகமுடைமை, ஐக்யமல்ல. ஸயுஜௌ என்னுமிடத்தில் இரண்டு ஆத்மாக்களும் ஸயுக்குகளென்றது. 'போகமாத்ரஸாம்யம்' என்று ஸூத்திரமும் சாஸ்த்ரமுடிவில் ஸமானபோகத்தைச் சொல்லிற்று. ஸமாதிதசையநுபவம்முக்திதசையநுபவமானப்ரஹ்மானந்தஸமுத்திரத்திலோர் பிந்துவேயாகும். தன்னை ப்ரஹ்மத்தோடு விபக்தமாக, ஸ்வநிஷ்டமாக, ஸ்வதந்த்ரமாகப் பிரிக்காமல், அப்ருதக்காக அவிபாகமாக அவனுயிரும் தானுடலுமாக, அவன் விசேஷ்யமும் தான் விசேஷணமுமாக அநுபவம். எப்படி தத்துவமோ, அது போல அநுபவம். அப்ருதக்ஸித்தி தத்துவம். ப்ரஹ்மத்தை உயிராகக்கொண்டே தன் நிலையுளது. பிரித்து நிற்கக் கூடிய நிலையேயில்லை. பிரித்தால் இல்லாததாகும். "ப்ரஹ்மைவ ஹவதி" (ப்ரஹ்மைவ பவதி) ப்ரஹமப்ரகாரமேயாகிறான். "தாத்ருமேவ ஹவதி" (தாத்ருகேவ பவதி), "மம ஸாயம்யமாகதா:" (மம ஸாதர்ம்யமாகதா:). ஏவ என்பதற்கு இவ என்று பொருளுண்டு. சுத்தசைதந்யஸ்வரூபமுளதே, ஸத்யஸங்கல்பத்வாதி குணஷ்டகரூபமான ஐச்வர்யமுமுண்டு என்று பாதராயணமதமென்று 3-ம் அதிகரணம் தீர்மானித்தது. ஸங்கல்பத்தால் ஐச்வர்யமுண்டு. ஸங்கல்பத்தால் ஸித்திக்கும் ஐச்வர்யத்தையும் அதன் எல்லையையும் மேல் பேடிகையில் விசாரிக்கிறார்.

இங்கே சொன்ன ஸத்யகாமத்வஸத்யஸங்கல்பத்வங்களை மேல் பேடிகையில் விசாரிக்கிறார். ஸங்கல்பமாத்ரத்தால் ஸங்கல்பிக்கப்பட்ட காமங்கள் ஸித்திக்கின்றன. அதற்கு வேண்டிய அப்ராக்ருத சரீரங்களும் பரமாத்மாநுக்ரஹத்தால் இச்சாமாத்ரத்தால் ஸித்திக்கின்றன. ஜாக்ரத் தசையில்போல், தேஹத்தோடு அநுபவம் கிடைப்பது. ஜாக்ரத்தசையில் எப்படி தேஹம் கிடைப்பது ஈச்வராயத்தமோ, அப்படி முக்தியிலும் ஈச்வராயத்தம். ஆனால்தான் இச்சித்ததும் பரமாத்மா அநுக்கிரஹிக்கிறாரென்ற பேதமுண்டு. ஸாயுஜ்யமென்னும் போகஸாம்யமிருப்பதால் ஜகத்ஸ்ருஷ்டி முதலிய ஜகத்வ்யாபாரமுமுண்டோவென்ற சங்கையைக் கடைசி அதிகரணத்தில் தீர்க்கிறார். போகத்தில் மட்டும் ஸாம்யம். போகம் முழுவதும் ஸமம். மாத்ர என்பதற்கு இரண்டு பொருளுமுண்டு.

"ஸோஃச்நுதே ஸர்வான் காமான் ஸஹ" (ஸோஸ்நுதே ஸர் வாந் காமாந் ஸஹ) ஸாயுஜ்யமென்னும் போகஸாம்யம் மோக்ஷம். ஜந்மாதிலக்ஷணம் ப்ரஹ்மமொன்றுக்குத்தான், முக்தனுக்கில்லை. முக்தன் ப்ரஹ்மமேயாவதில்லை. மோக்ஷம் ஈச்வராநுக்ரஹாதீனமாயிருந்தாலும் அவன் இவனிடமுள்ள அத்யர்த்தப்ரீதியால் இவனைத்திருப்புவதில்லை. ஜகத்ஸ்ருஷ்ட்யாதிவியாபாரம் இல்லாவிடினும் ப்ரஹ்மானந்தம் பூர்ணமாக அனுபவிக்கப்படுவதில் குறையில்லை. பிம்பத்திற்கு வருவதெல்லாம் ப்ரதிபிம்பத்திற்கு வந்தே தீரும். பதி ஸம்பாதிக்கும் போகஸாதனம் பத்னீக்கும் ஸமம். "ப்ரதிமுகஸ்ய யதா முகச்ரீ:" (ப்ரதிமுகஸ்ய யதா முகச்ரீ:) என்றார் சுகர் ப்ரஹ்லாதர் முகமாக. "நடனர்த்தகர்கள் ரஸம், ஸபாபதி, பாவுகரான ஸப்யரெல்லாருக்கும் துல்யமென்பர் ரஸநிபுணர்" என்று சிந்தாமணி. ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளயவிப்ரமநாடிகையில், சைலூஷனைப்போல்(நடனைப்போல்)விவிதவேஷம்தரிக்கும்ஈச்வரனுடைய ரஸமெல்லாம் அதை அத்யக்ஷணம் செய்யும் பாவுகருக்கும் ஸமம். இது ரஸமர்யாதை. ப்ரஹ்மானந்தம்போன்றது தஜ்ஜாதீயமானது, ரஸாநுபவம் என்பர் ஆலங்காரிகர். ப்ரஹ்மாநந்தத்தை அளவிடப் பார்ப்பது ஆகாயத்தை முழத்தால் அளக்கமுயல்வதுபோலாகுமென்று ஸாராவளி. 'யஷ்டியா நபோவத்' (யஷ்டியா நபோவத்). ஸர்வஜ்ஞனை முக்தன் தனக்கு அசக்யமான ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களை ஆசைப்படுவதில்லை. அவன் ஸங்கல்பிப்பதேயில்லை. சேஷத்வரஸத்தில் முழுகுகிறவன் ஈச்வராஸாதாரணதர்மத்தில் ஆசை கொள்ளான். 'சங்கோபசாந்தி:' என்று உபசாந்தியோடு மோக்ஷவாதத்தின் கடைசி யதிகரணத்தில் ஸாராவளி முடிந்தது. 'சாந்தி:' என்று அநாவ்ருத்தியதிகரணம் முடிந்ததும், சாந்திபாடம்.

"ஸ்வஸ்வரூபத்தின் ஆவிர்ப்பாவமும், தன் ப்ரகாரியான பரமாத்மபர்யந்தமான த்ருஷ்டியும், சைதந்யஸ்வரூபமாயிருப்பதோடு எண்குணங்களோடு ஸம்பத்தியும், ஸங்கல்பமாத்ரத்தால் ஈச்வரப்ரஸாதத்தால் ஆசைப்பட்டது ஸித்திப்பதும், ஆசைப்பட்டால் யதேச்ச திவ்யசரீரபரிக்ரஹங்களும், பரமமான ப்ரஹ்மஸாம்யம் வருகையில் போகத்தில் ஸாம்யமேயல்லாது ஈச்வரலக்ஷணமான ஜகத்ஸ்ருஷ்ட்யாதிவ்யாபாரங்களில்லாமையும்" துரீயாத்யாயதுரீய

பாதஸங்க்ரஹம். இந்த நாலாவது அத்யாயஸாத்யமான விஷயங்களொன்றும் அத்வைதத்திற்கு ஒட்டாதது என்று ஓர் ச்லோகத்தால் அழகாகக் காட்டப்பட்டது:— "த்யானம் முதலியதும், அதன் ப்ரபாவமான கர்மம் கழிதல் சத்ருமித்ரருக்கு ஸாதகனுடைய புண்யபாபங்களொட்டுதல் முதலியதும், தேஹமெனும் சிறைக் குடிசையிலிருந்து ப்ரஹ்மநாடியில் நுழைக்கப்பட்டு வெளிப்பட்டு, நற்கதியால் அர்ச்சிராதிகணத்தால் அதிவஹனம் செய்து ப்ரஹ்மத்தினிடம் சேர்க்கப்பட்டு அதனுள் ஸம்பத்தி பூர்வகமாக ஸ்வஸ்வரூபப்ரகாரத்தை யடைந்து தன்னிச்சாமாத்ரத்தால் தன்னிஷ்டங்களை ஸ்ருஷ்டிப்பதும், போகத்தில் மட்டும் பூர்ணஸாம்யம், ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளிலில்லை என்பதுமாகிய இவற்றையெல்லாம் ஜீவப்ரஹ்மாபேதவாதி (ஐக்ய வாதி) தம் மதத்திற்கு எப்படித்தானொட்டுவரோ? இதுவோ கடைசி அத்யாயம். மேலே ஓர் அத்யாயம்வரும், அதில் அநுகூலம் கிடைக்கலாமென்பதற்காசையில்லையே". மீமாம்ஸையில் எந்த விடத்தில்தானனுகூலமுண்டு? கர்மமீமாம்ஸை கர்மபேதாதிகளைச் சொல்லுகிறது. 'தேவதைகள் அனேகர்' என்று தேவதாமீமாம்ஸை பேசுகிறது. 'நாநா வா தேவதா' (நாநா வா தேவதா) என்னும் ஸூத்திரம் ஸ்ரீசங்கரரால் உதாஹரிக்கப்பட்டது.

ஆசார்யர்கள் புகட்டிய கல்விஸமுத்திரத்திருந்து உள்ளடங்காமல் அமுதம்போல் இப்பாக்கள் வெளிவந்தன. 'அம்ருதஸ்ய தாரணோ பூயாஸம்' (அம்ருதஸ்ய தாரணோ பூயாஸம்) என்றபடி ஆசிரியரும் சீடரும் இதைத் தரிக்கவேணும். உபநிஷத்தெனும் அமுதக் கடலைப் பாராசர்யர் ஸூத்ரங்களால் கடைந்து ஸாரத்தைத் திரட்டினர். அவரால் நிஷ்கர்ஷிக்கப்பட்ட அர்த்தம் யதிபதிஹ்ருதயத்தில் ஆரூடமாயிற்று. அதை வெள்ளைப் பரிமுகர் தார்க்ஷ்யாரூடராய் எம் தேசிகரான அப்புள்ளாரையும் கூட்டிக்கொண்டு இப்படி வெளிப்படுத்தினர். 'யதிபதி' என்று தொடங்கி, 'யதிபதி' என்று முடித்தார். 'ஸ்வஸ்தி' என்று ஆரம்பித்து 'தார்க்ஷ்ய:' என்று முடித்தார். கருடனோடு மங்களமாகப் பூர்த்தி.

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன்

அருளிச்செய்த

அதிகரண ஸாராவளி.

(முதல் அத்யாயம் முதல் பாதம்)

ஆசாரியர்களால்

V. K. ராமாநுஜதாஸனைக் கொண்டு

எழுதப்பட்ட தமிழுரையுடன் கூடியது.

சின்னமு. ர: ஸ்ரீநிவாஸபாட்ராசாரியரால்

கும்பகோணம்

ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடத்தில்

அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை | சித்திரைத் திருவோணம்.

1936

முகவுரை.

1. ஸ்ரீபாஷ்யத்தினுடைய அதிகரணங்களின் ஸாரமான அர்த்தங்களையெடுத்து ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன் ச்லோக ரூபமாக ஒரு க்ரந்தத்தை அருளிச் செய்திருக்கிறார். அதற்கு அதிகரண ஸாராவளி என்று பெயர். அதற்கு எளிதான தமிழ் நடையில் பொழிப்புரையெழுதி இதில் அச்சிட்டிருக்கிறது. உரையில் சொன்ன விஷயங்களை நன்றாய் அறிவதற்காக ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்குச் சுருக்கமான உரையும், விஷய வாக்யங்களும், அவைகளுக்குத தமிழில் உரையும் ஒவ்வோர் அதிகரணத்தின் ஆரம்பத்திலும், ச்லோகங்களுடைய பொழிப்புரைக்குக் கீழே ஸ்ரீ பாஷ்யத்தையும் ச்ருதப்ரகாசிகையையும் அநுஸரித்து விரிவான குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

2. அதிகரண ஸாராவளியையும் தத்துவ முக்தாகலாபத்தையும் ஸேவிக்கிறவர்களுக்கு ஸ்ரீ பாஷ்யகாரர் ப்ரவர்த்தனம் பண்ணின மதத்தில் அறியவேண்டியது ஒன்றுமிராது என்று ஸ்ரீதேசிகன் இந்த க்ரந்தத்தின் கடைசியில் அருளிச் செய்திருக்கிறார். யதீந்த்ரமத தீபிகைக்கு எளிதான தமிழ்நடையில் ஓர் உரை எழுதி அச்சிடப்பட்டு வருவது எல்லாருக்கும் தெரிந்திருக்குமே. அதில் நியாய பரிசுத்தி, நியாய ஸித்தாஞ்ஜனம் முதலியவைகளின் விஷயங்களும், தத்துவ முக்தாகலாபத்திலிருந்து சில விஷயங்களும் குறிப்புகளாக எழுதப்பட்டிருப்பதால், அதையும், இந்த அதிகரண ஸாராவளியையும் படிக்கிறவர்களுக்கு நம்முடைய விசிஷ்டாத்வைத மதத்தில் புதிதாய் அறியவேண்டியது ஒன்றுமிராது என்று தைரியமாய்ச் சொல்லலாம். ஸ்ரீபாஷ்யத்தை ஆசார்யர்களிடத்தில் ஸேவித்தவர்களுக்கும் ஸேவியாதவர்களுக்கும் இந்த இரண்டு கிரந்தங்களும் மிகுந்த உபகாரத்தைச்செய்யும். இவைகளைப் படிக்கிறவர் பெரிய பண்டிதராவர். இவைகளைப் படித்து விஷயங்களைத் தெரிந்துகொள்ளாதவனை ஸ்ரீபாஷ்யத்தை அறிந்தவன் என்று சொல்ல முடியாது.

3. இது, உப-வே. சின்னமு. ஸ்ரீநிவாஸ பாட்டராசார்யருடன் சேர்ந்து எழுதப்பட்டது. உப்பிலியப்பன் ஸந்நிதி வித்வான் உப-வே. நவநீதம் கிருஷ்ணமாசார்யரும், திருக்குடந்தை "அபிநவபட்டபாண, சப்ததர்க்காலங்காரவித்யாபூஷண, பண்டிதராஜ, மஹாமஹோபாத்யாய" என்னும் பிருதங்களுள்ள (ராயம்பேட்டை) கிருஷ்ணமாசார்யரும் மூலக்ரந்தங்களை வைத்துக்கொண்டு இதைப் பரிசோதித்திருக்கிறார்கள். ஆகையால் எல்லாப் பெரியோர்களும் ஒப்புக்கொள்ளுவர்கள் என்னும் நம்பிக்கையாலே இது அச்சிடப்பட்டது. இதை லாபத்துக்காகவாவது பெருமைக்காகவாவது எழுதி அச்சிடவில்லை. ஸ்ரீதேசிகன் மிகுந்த கருணையினால் விசிஷ்டாத்வைதமதத்திற்காக வெகு பிரயாஸம் எடுத்துக்கொண்டதை எல்லாரும் இதைப் படித்து அறிந்துகொண்டு இந்த ஆசார்யன் திருவடிகளில் பூர்ணமான பக்தியும் க்ருதஜ்ஞதையும் உள்ளவர்களாயிருக்கவேண்டும் என்பது அடியேனுடையவும், இந்த ஸ்வாமிகளுடையவும் மனோரதம். இதை ஸர்வேசுவரனான பகவானும் ஸ்ரீதேசிகனும் மற்ற ஆசார்யர்களும் நிறைவேற்றிவைக்கவேண்டும்.

4. இந்த ஸ்வாமிகள் செய்த உபகாரத்திற்குப் பதில் உபகாரம் இன்னது என்று அடியேனுக்குத் தோன்றவில்லை. அவர்களும் அதை அபேக்ஷிக்கவுமில்லை. எல்லாரும் இதைப் படிப்பதே போதுமான பதில் உபகாரமாகும்.

திருக்குடந்தை:
தாது-ௗ சித்திரை-மீ
சிரவணம்.

வி. கே. ராமானுஜ தாஸன்.

ஸ்ரீமதே வேதாந்தராமாநுஜமஹாதேஶிகாய நம: ||

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ||

ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய மஹாதேஶிகாய நம: ||

அதிகரணஸாராவளி.

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ |
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ||

அவதாரிகை— ஸ்ரீ பாஷ்யத்தில் இருக்கும் அதிகரணங்களின் ஸாரத்தை ஸ்ரீ தேசிகன் ச்லோகங்களாலே இந்த க்ரந்தத்தில் அருளிச்செய்கிருர். முதல் ச்லோகத்தில் க்ரந்தத்தின் விஷயத்தைக் காட்டுகிருர்:—

ஸ்வஸ்தி ஸ்ரீரங்கபர்து: கிமபி நியமநம் ஶாஸநம் தத்வஹத்ப்ய:
ஸத்யைகாலம்பி பாஷ்யம் யதிபதிகதிதம்
ஶுஶ்ரூஷுப்யோ(அ)ப்யஸந்ந: | விஶ்வஸ்ரஷ்ட்ரா ப்ரயுக்தா
நாமவிஹிதவதா தேந தேவேந தத்தாம் வேதாந்தாசா
ர்யஸம்ஜ்ஞாமவஹிதபஹுவித்ஸமாஜ: ஸமர்த்தயாமி ||

ஸ்வஸ்தி (க்ஷேமம், மங்களம்,) ஸ்ரீ ரங்கநாதனுடைய விலக்ஷணமான நியமனத்தை சிரஸா வஹித்துக்கொண்டு ஸத்யம் (பரமார்த்தம்) ஒன்றையே அவலம்பித்ததும், யதிபதியான ஸ்ரீ பாஷ்யகாரரால் அருளிச்செய்யப்பட்டதுமான ஸ்ரீபாஷ்யத்தைக் கவனமுள்ள சிஷ்யர்களுக்கு அடிக்கடி சொல்லிக்கொடுத்து, அந்த ஸ்ரீ ரங்கநாதனுடைய ப்ரஸாதத்துக்காக இந்த க்ரந்தத்தைச்செய்கிறேன். இதனுல் உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களுக்கும் நாமங்களையும் ரூபங்களையும் செய்த அந்தத் தேவனுல் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற **வேதாந்தாசாரியன்** என்கிற பெயரை அர்த்தமுள்ளதாய்ச் செய்கிறேன். நன்ருய் வெகு விஷயங்களை அறிந்த பெரியோர்களின் கூட்டம் இதைக் கவனிக்கவேண்டும்.

குறிப்பு:— 'ஸத்யைகாலம்பி' என்பதால், ஸ்ரீபாஷ்யம் அத்வைதமதபாஷ்யம்போல் மித்யை(பொய்)யான அவித்யையை அவலம்பிக்கவில்லை என்பதும், ஜகத்து ஸத்யமானதென்று சொல்லுகிறது என்பதும் காட்டப்படுகின்றன. (1)

அவ—தம்முடைய க்ரந்தத்தின் ப்ரயோஜனத்தை அருளிச் செய்கிருர்:—

ஸ்ரீமத்³ப்⁴யாம் ஸ்யாத்³ப்³ரஹ்மவித³யமிதி வரதா³சார்யராமா
நுஜாப்⁴யாம் ஸ்வைரத்³ருஷ்டேந ஸம்யக்ஸமதி⁴க³ததி⁴யா
வேங்கடேஶேந க்லுப்த:| ஸேவ்யோ ஸௌ ஶாந்திஸித்³தை⁴:
ஶ்ரவணரஸநயா ஶாந்திமாகாங்க்ஷமாணை: ஸித்³த⁴: ஶா
ரீரகார்த²ஸ்ஸஹஜப³ஹுகு³ணஸ்ஸ்ரக்³த⁴ராது³க்³த⁴ராஶி:||(2)

"இவன் ப்ரம்மஜ்ஞானமுள்ளவனுக வேண்டும்" என்று ஸ்ரீமான்களான வரதாசார்யர், ராமானுஜாசார்யர் என்கிற ஆசார்யர்களால் கேவலம் கிருபையினுல் நன்ருய் கடாக்ஷிக்கப் பட்டு, அதனுல் எதிலும் ப்ரவேசிக்கும்படி கூர்மையான புத்தியையடைந்த ஸ்ரீ வேங்கடேசன் என்கிற பெயரையுடைய என்னுல் இந்த க்ரந்தம் செய்யப்படுகிறது. இது சாரீரக சாஸ்திரத்தின் அர்த்தங்களை ஸ்ரக்தராவ்ருத்த ச்லோகங்களால் சேர்த்துச் சொல்லுகிற பால் ஸமுத்ரம்; இயற்கையாகவே பஹுகுணமுள்ளது. இது சித்தஸமாதானத்தை அடைந்தவர்களாலும், அதை அடையவேண்டுகிறவர்களாலும், காது என்ற ரஸநேந்த்ரியத்தாலே ஸேவிக்கத் தகுந்தது.

குறிப்பு. (1) ஜகத்தைச் சரீரமாகவுடைய பகவான் சாரீரன். அவனைப்பற்றிச் சொல்லுகிற சாஸ்திரம் சாரீரகம்.

2. ஸ்ரக்தராவ்ருத்தம்— ஒவ்வொரு பாதத்தில் இருபத்தொரு அக்ஷரமுள்ளது. இந்த சுலோகங்கள் அடங்கிய இந்த க்ரந்தம் இயற்கையாகவே பஹு குணங்களுள்ளதாகையால் மிகவும் இனிமையாயிருக்கும் என்பது "து³க்³த⁴ராஶி:" என்பதின் கருத்து. பாலை ரஸநேந்த்ரியத்தாலே அனுபவிக்க வேண்டியது இதை ச்ரோத்ரேந்திரியத்தாலேகேட்டு அனுபவிக்கவேண்டியது என்பது "ஶ்ரவணரஸநயா" என்பதின் கருத்து. (2)

அவ— இந்த க்ரந்தம் சாரீரக சாஸ்திரத்திரத்தைப் படிக்கிறவர்களுக்கு என்ன உபகாரம் செய்யும் என்பதைத் திருஷ்டாந்தத்துடன் காட்டுகிருர்:—

[illegible] ॥ (3)

மந்தபுத்தியுள்ளவர்கள், நியாயங்களைக்கொண்டே வேதாந்தத்தின் உட்கருத்தைச் சொல்லுகிற அதிகரணங்களில் சில தோஷங்கள் இருப்பனவாகக்கலங்குவார்கள். அந்த தோஷங்களாவன:— சொன்னதை ஒரு ப்ரயோஜனமில்லாமல் மறுபடியும் சொல்லுவது, முன்பு சொல்லப்பட்டதைப் பாதிப்பது, அல்ப ப்ரயோஜனமுள்ளதாயிருப்பது, அல்லது துர்பலமான யுக்தியைக்கொண்டு சொல்லப்படுவது, ஸங்கதி இல்லாமை (காண்டம், அத்யாயம், பாதம், அதிகரணம் இவை முதலானவைகளுக்குப் பொருத்தமில்லாமை), ஸம்சயம், ப்ரயோஜனமில்லாமை, வேண்டாத ப்ரயோஜனத்தைச் சொல்லுவது, ப்ரமாணத்துடன் விரோதம்—என்பன. இந்தத் தோஷங்களுள் ஒன்றுமில்லையென்று இந்த க்ரந்தம் காட்டி அவர்களை ஸந்தோஷப்படுத்தும். அவர்களும் இதைக்கவனத்துடன் பார்க்கவேண்டும். இருளாலேதிசை தெரியாமல்கலங்கி துக்கப்படுகிறவனுக்கு விடியற்காலத்தில் உதயமாகும் ஸூரியகிரணஸமூஹம் அந்த இருளைப்போக்கித் தெளிவை உண்டாக்குவதுபோல், இந்த க்ரந்தமும் தடுமாற்றத்தை அகற்றித் தெளிவை உண்டாக்கும்.

குறிப்பு.— சொன்ன தோஷங்களும் அவைகளுக்குப் பரிஹாரங்களும் மேலே அந்தந்த இடங்களில் காட்டப்படும். (3)

அவ— ஒருவன் கேட்கலாம்— நீர் ஐநூற்று ஐம்பது சுலோகங்களுள்ள க்ரந்தமெழுதுகிறீர்; ப்ரம்மஸூத்ரங்களுக்குப் போதாயனர் என்கிற ருஷி பத்துலக்ஷம் க்ரந்தமுள்ள வ்ருத்தியென்கிற வ்யாக்யானத்தைச் செய்திருக்கிறார்; அதில் கண்ட அர்த்தங்களை உம்முடைய க்ரந்தத்தாலே எப்படி முழுமையும் காட்டக் கூடும்? சிலவற்றை மாத்திரம் காட்டுவதானல், சிஷ்யர்களுக்கு உண்டாகும் சங்கைகள் எப்படித் தீரும்? என்று. இதற்குப் பதில் சொல்லுகிறார்:—

கம்பீரே ப்ரஹ்மபாகே கணயிதுமகிலம் க: ப்ரவீணை:
ப்ரபேதம் ஶிக்ஷாத்ரும் தத்ப்ரதானவ்யாஸமுகை நிபந்தனை:
ப்ராதான்யாத்வ்யக்ஷணீய: । ஸா ஸம்ப்ரதி ஶ்ருதிவிவிதவிஷயவி
ஸ்தாணவித: ஸ்தீதநிஸ்ஸீமரத்நே மத்யேஹாரம் நியேயம்
வஹதி ஜஹதி கிம் மௌக்திகம் ஶ்ரேயஶ்ரேயள ॥ (4)

ப்ரம்மத்தை விசாரிக்கிற மீமாம்ஸையின் பாகம் மிகவும் கம்பீர (ஆழ) மானது. அதின் விஷயம் முழுவதையும் எண்ணிச் சொல்லுவதற்கு எவன் ஸமர்த்தன்? வியாஸர் முதலானவர்களும் ப்ரதானமானவைகளைமாத்திரம் காட்டியிருக்கிறார்கள். நானும் அப்படியே ப்ரதானமான விஷயங்களைச சுருக்கமான என் க்ரந்தத்தாலே காட்டுகிறேன். இந்தச் சாஸ்த்ரத்தை நாலுபேர்களுக்குச் சொல்லிக்கொடுக்கிறவர்களும், அதைக் கேட்கிறவர்களும் அநுகூலமான புத்தியுடன் இதை க்ரஹிக்கவேண்டியது. முழுவதும் கிடைக்காது என்பது உண்மையே; ஆனால், கிடைத்த நல்லதை விடலாமோ? பெரும் கடலில் பருத்த ஒப்பில்லாத அனேக ரத்னங்களிருக்கின்றன; அதில் ஒரே முத்து அகப்பட்டு, அதுவும் ஹாரத்தின் நடுவில் வைக்கத்தகுந்ததாயும் இருந்தால், ரத்னங்களின் குணங்களையறிந்தவர்கள் அதை ஸமுத்திரத்திலேயே எறிந்துவிடுவார்களோ?

குறிப்பு. 'க:' என்கிற சொல்லுக்கு ப்ரம்மா என்கிற பொருளுமுண்டு. இந்தப் பொருளைக்கொண்டால், ப்ரம்மாவினால் இது முடியும் என்றும், வியாஸர் முதலானவர்களால் முடியாது என்றும் ஏற்படும். ப்ரம்மா பரமாத்மாவின் புத்திரனும் அவனிடமிருந்து வேதத்தையும் அதின் அர்த்தத்தையும் அறிந்தவனுமன்றோ? (4)

அவ— வேத விஷயமான விசாரத்துக்கு மீமாம்ஸை என்றும், அதில் முன்பாகத்தின் விசாரத்திற்குக் கர்மமீமாம்ஸை அல்லது பூர்வமீமாம்ஸை என்றும், பின்பாகத்தின் விசாரத்திற்குச் சாரீரக மீமாம்ஸை, அல்லது உத்தர மீமாம்ஸை என்றும் பெயர்கள். இரண்டும் ஒரே சாஸ்த்ரம். சாரீரக மீமாம்ஸாவிஷயங்களைச் சொல்ல ஆரம்பிப்பதற்கு முன்னாலே, பூர்வ மீமாம்ஸையின் விஷயங்களைச் சுருக்கமாக அருளிச்செய்கிறார்:—

[illegible Grantha verse, six lines] (5)

நியாயங்களைக்கொண்டு விசாரிக்கவேண்டிய வேதத்தின் அர்த்தங்களில், முதலில் கர்மங்கள் பன்னிரண்டு அத்தியாயங்களால் விசாரிக்கப்படுகின்றன. முதல் அத்யாயத்தில் விதி அர்த்தவாதம் மந்த்ரம் ஸ்மிருதி ஆசாரம் என்கிற ப்ரமாணங்களும், இரண்டாவது அத்யாயத்தில் இரண்டு இடங்களில் சொல்லப்பட்ட இரண்டு கர்மங்கள் ஒன்ரு? அல்லது வெவ்வேரு? என்பதும், மூன்ருவது அத்தியாயத்தில் அங்கிக்கும் அங்கங்களுக்கும் இருக்கும் ஸம்பந்தத்தை எந்த ப்ரமாணங்களாலே அறிகிறது அந்த ப்ரமாணங்களுக்குள்ளே எவைகள் ப்ரபலங்கள் எவைகள் துர்பலங்கள் என்பதும், நான்காவது அத்யாயத்தில் விதிக்கப்பட்ட கர்மத்தின் ப்ரயோஜனம் க்ரதுவை முடிப்பது தானு? அல்லது அதைச் செய்கிற யஜமானனுக்கு க்ரதுவின் பலனைக் காட்டிலும் வேறு பலனை உண்டுபண்ணுவதா? என்பதும், ஐந்தாவது அத்யாயத்தில் அங்கங்களோடு கூடிய கர்மங்களை எந்த வரிசையில் செய்யவேண்டியது என்பதும், ஆருவது அத்தியாயத்தில் கர்மங்களைச்செய்ய எவர்களுக்கு அதிகாரம் உண்டு எவர்களுக்கு இல்லை என்பதும், ஏழாவது எட்டாவது அத்யாயங்களில் எந்த ப்ரகிருதி யாகத்திலிருந்து விக்ருதி யாகங்களுக்கு அங்கங்களை எடுத்துக்கொள்ளவேண்டியது என்பதும், ஒன்பதாவது அத்யாயத்தில், இப்படிச் செய்கையில் மந்த்ரங்களில் எவ்வித வேறுபாடுகளைச் செய்யவேண்டியது என்பதான ஊஹமும், பத்தாவது அத்யாயத்தில் ப்ரகிருதியிலிருந்து எடுத்துக்கொண்ட அங்கங்களில் எவைகளை விடவேண்டியது என்பதும், பதினோராவது அத்யாயத்தில் இரண்டு மூன்று அங்கியான யாகங்களை ஒரே இடத்தில் ஒரே காலத்தில் ஒரே ருத்துவிக்கு செய்யும்போது அவைகளின் அங்கங்களை ஒவ்வொரு அங்கியான யாகத்துக்கும் தனியாகச் செய்யவேண்டி-

யதா? அல்லது எல்லாவற்றுக்கும் ஒரே தடவை செய்யவேண்டியதா? என்பதும், பன்னிரண்டாவது அத்யாயத்தில், ஒரு ப்ரதான யாகத்தின் அங்கங்களாலே அத்துடன் சேர்ந்த வேறு யாகத்துக்கு உதவி செய்யப்படுகிறபடியாலே அதன் அங்கங்களைத் தனியாய்ச் செய்யவேண்டியதில்லை என்பதும்— ஆகிய இவைகள் கர்ம காண்டத்தில் சொல்லப்படுகின்றன. மேல்நான்கு அத்யாயங்களுக்கு விஷயம் தேவதைகளைப் பற்றிய விசாரம்.

குறிப்பு— (1) முதல் அத்யாயத்தில் விதி வாக்யங்கள் ஸ்வத: ப்ரமாணங்கள் என்றும்,விதிக்கப்பட்ட கர்மத்தை ஸ்தோத்ரம் பண்ணுவதாலே அர்த்த வாதங்களும், அந்தக் கர்மங்களைச் செய்யும் விதத்தைக் காட்டுவதாலே மந்த்ரங்களும் ப்ரமாணங்கள் என்றும், வேதத்துக்கு விருத்தமான ஸ்மிருதி ப்ரமாணம் அன்று என்றும், ஸ்மிருதிக்கு விருத்தமான ஆசாரம் ப்ரமாணம் அன்று என்றும் தீர்மானம் செய்யப்படுகிறது. விதி வாக்யங்களும் அர்த்தவாத வாக்யங்களும் மந்த்ரங்களும் வேதத்தின் பிரிவுகள். விதி வாக்பங்களுக்கு ப்ராம்மணம் என்று பெயர். வேதத்துக்கு விருத்தமான ஸ்மிருதி பாதிக்கப்படுவதற்கு உதாஹரணம்—*‘ஔதும்பரீம் ஸ்ப்ருஷ்ட்வோத்காயேத்’ என்பது ச்ருதி வாக்யம். ‘ஔதும்பரீ ஸர்வா வேஷ்டயிதவ்யா’ என்பது ஸ்மிருதி வாக்யம் (த்ராஹ்யாயணஸூத்ரம்). ஔதும்பரியை முழுவதும் பட்டுவஸ்திரத்தால் சுற்றினால் அதைத்தொட்டுக்கொண்டு கானம் பண்ணமுடியாது. ஆகையால் ஸ்மிருதி பாதிக்கப்படுகிறது.

(2) இரண்டாவது அத்யாயத்தில்—இரண்டு இடங்களில் சொல்லப்பட்ட கர்மங்கள் ஒன்று என்பதற்கு ப்ரமாணங்கள்—ஒரேவிதமாயிருக்கும் விதிவாக்யங்களும், கர்மங்களின் பெயர்களும், அவைகளின் ரூபங்களும், அவைகளின் பலன்களும். கர்மத்தின் ரூபமாவது— அதில் கொடுக்கப்படும் ஹவிஸ்ஸும், அவைகளைப் பெற்றுக்கொள்ளுகிற தேவதையும். இந்த ்யாயம் சாரீரக மீமாம்ஸையிலும் வருகிறது. கர்மங்கள் வெவ்வேறு

* ஔதும்பரீ-யாகசாலையில் ஸதஸ் என்கிற இடத்தில் நடப்பட்ட அத்திமரம். வாக்யங்களின் பொருள்.— (1)ஔதும்பரியைத் தொட்டுக்கொண்டு உத்காதா கானம் செய்யவேண்டுமென்பதும், (2) ஔதும்பரி முழுவதிலும் பட்டு வஸ்திரத்தைச் சுற்றவேண்டியது என்பதும்.

என்பதற்கு ப்ரமாணங்கள்— (1) சப்தாந்தரம் (வெவ்வேறு சப்தங்கள்)-'ததாதி, ஜுஹோதி, யஜதே, என்று விதிக்கப்பட்ட கர்மங்கள் வெவ்வேறு கர்மங்கள். (2) அப்யாஸம்–ஒரே சொல்லைத் திருப்பிச் சொல்வது. "ஸமிதோ யஜதி தனூனபாதம் யஜதி" என்கிற இடத்தில் 'யஜதி' என்கிற சொல்லைத் திருப்பிச்சொல்வதால் இரண்டும் வெவ்வேறு கர்மங்கள். (3) ஸங்க்யை (எண்ணிக்கை)– 'திஸ்ர ஆஹுதீர்ஜுஹோதி' (மூன்று ஆஹுதிகளை ஹோமஞ்செய்யவேண்டியது) என்கிறவிடத்தில் மூன்று என்கிற எண்ணாலே மூன்று ஹோமங்களும் வெவ்வேறு என்று காட்டப்படுகின்றன. (4) ஸம்ஜ்ஞை (பெயர்)– 'அதைஷ ஜ்யோதி:, அதைஷ விஶ்வஜ்யோதி:' என்கிறவிடத்தில், 'ஜ்யோதி:, விஶ்வஜ்யோதி:' என்பவைகள் க்ரதுக்களின் பெயர்கள். அவைகள் வெவ்வேறுயிருக்கிறபடியால், க்ரதுக்களும் வெவ்வேறு. (5) *குணம்- "தப்தே பயஸி தத்யானயதி ஸா வைஶ்வதேவ்யாமிக்ஷா" (கொதிக்கிற பாலில் தயிரைச் சேர்க்கிறது. அதிலிருந்து உண்டாகும் ஆமிக்ஷைக்குத் தேவதை விச்வேதேவர்கள்) என்கிற வாக்யத்தில் சொன்னதைச் செய்யும் போது, பால்திரிந்து ஒருபாகம் கெட்டியாகவும் ஒருபாகம் தண்ணீராகவும் ஆகிறது. கெட்டியான பாகத்துக்கு ஆமிக்ஷை என்றும், தண்ணீரான பாகத்துக்கு வாஜிநம் என்றும் பெயர். ஆமிக்ஷைக்கு வாக்யத்தாலே தேவதை ஏற்பட்டபடியால், வாஜிநத்துக்கு வேறு தேவதை தேடவேண்டியது. ஆகையால் ஆமிக்ஷா யாகமும், வாஜியாகமும் வெவ்வேறு யாகங்கள். (6) ப்ரகரணம்-குண்டபாயினாம் அயனம் என்கிற ஸத்ரயாகத்தைச் சொல்லுமிடத்தில் 'உபஸத்பிஶ்சரித்வா மாஸமக்னிஹோத்ரம் ஜுஹோதி'

* குணம் என்கிற சொல் முக்கியமல்லாததைக்காட்டுகிறது. முக்யமானது யாகம் (ஒரு தேவதைக்கு ஒரு திரவ்யத்தைக்கொடுப்பது). திரவியம் இந்த முக்யமான யாகத்துடன் சேர்ந்திருப்பதால் அதைக் குணம் என்று சொல்லுகிறது. ஸம்ஸ்காரமும் குணமாகும். 'க்ரஹம் ஸம்மார்ஷ்டி' என்று ஸோமரஸத்தை எடுத்துவைக்கிற பாத்திரத்தை ஒரு வஸ்த்ரத்தால் துடையென்று விதிக்கிறது. க்ரஹம் முக்யமானது. ஸம்மார்ஜனம் (துடைப்பது) அதற்குச் செய்யும் ஸம்ஸ்காரம். அது குணம்.

(உபஸத்துக்களைச் செய்து ஒருமாதம் அக்னிஹோத்ர ஹோமங்களைச் செய்யவேண்டியது) என்று ஓர் அக்னிஹோத்ரம் விதிக்கப்படுகிறது. தினம் செய்யும் அக்னிஹோத்ரம் வேறு இடத்தில் சொல்லியிருப்பதால், அதின் நினைவு வருகிறதில்லை. ஆகையால் ஒருமாதம் செய்யவேண்டிய அக்னிஹோத்ரம் வேறுகர்மம்.

3. மூன்றாவது அத்யாயத்தில், அங்க - அங்கிபாவத்தை ஆறு ப்ரமாணங்கள் நிரூபணம் பண்ணுகின்றன. அவைகளாவன — (1) சுருதி (சப்தம்)—"ஐந்த்ர்யா கார்ஹபத்யமுப திஷ்டதே" (இந்த்ரன் விஷயமான மந்த்ரத்தைக்கொண்டு கார்ஹபத்ய அக்னியை ஸ்தோத்ரம் பண்ணவேண்டியது) என்கிறவிடத்தில் முதல்பதத்திலிருக்கிற 'ஆ' என்பது ச்ருதி. அதனால் அந்த மந்த்ரம் அந்த ஸ்தோத்ரத்துக்கு அங்கம் என்று காட்டப்படுகிறது. (2) லிங்கம்- "பர்ஹிர்தேவஸதனம் தாமி" (தேவர்களுடைய ஆஸநமான பர்ஹிஸ்ஸை அறுக்கிறேன்) என்கிறவிடத்தில் அறுக்கிறது என்பது அடையாளம்(லிங்கம்). இதனால் அந்த மந்த்ரம் பர்ஹிஸ்ஸை அறுப்பதற்கு அங்கம் என்று காட்டப்படுகிறது. பர்ஹிஸ் - யாகத்தில் உபயோகப்படுகிற ஒருவிதப் புல். (3) வாக்யம்- "யஸ்ய பர்ணமயீ ஜுஹூ:" (எவனுக்கு பர்ணம் என்கிற மரத்தாலேசெய்யப்பட்ட ஜுஹூ இருக்கிறதோ) என்கிறவிடத்தில் இரண்டாவது மூன்றாவது பதங்களின் சேர்க்கை வாக்யம். அந்த வாக்யம் பர்ணமரத்தால் செய்யப்படுவதை ஜுஹூவுக்கு அங்கமாகக் காட்டுகிறது. ஜுஹூ என்பது ஹோமம் செய்வதற்கு ஸாதநம். (4) ப்ரகரணம்- தர்சபூர்ணமாஸ இஷ்டிகளைச்சொல்லுகிறஇடத்தில் ப்ரயாஜங்கள் சொல்லப்படுகின்றன. அவைகளின் பலன்கள் சொல்லப்படவில்லை, ஆகையால் அவைகள் ஸ்வர்க்கத்தைப் பலமாகவுடைய தர்சபூர்ணமாஸ இஷ்டிகளுக்கு அங்கங்கள். (5) ஸ்தானம்- வேதம் பூர்ணமாஸ இஷ்டியான மூன்று யாகங்களை ஓர் இடத்திலும், அவைகளின் மந்த்ரங்களை வேறிடத்திலும் சொல்லுகிறது. அவைகளுள் முதல் மந்த்ரம் முதல் யாகத்திற்கும், இரண்டாவது மந்த்ரம் இரண்டாவது யாகத்திற்கும், மூன்றாவது மந்த்ரம் மூன்றாவது யாகத்திற்கும் அங்கங்கள் என்று ஸ்தானம் காட்டுகிறது. (6) ஸமாக்யை (பெயர்)- யஜுர்வேதத்திற்கு ஆத்வரம் என்று பெயர். அத்வர்யு

வுக்கு வேண்டியது என்பது அதன் பொருள். அந்த வேதத்தில் சொல்லப்பட்ட மந்த்ரங்கள் அத்வர்யுவே சொல்ல வேண்டியது. இந்த ஆறு ப்ரமாணங்களில் பின் உள்ள ஒவ்வொரு ப்ரமாணமும் முன் உள்ள பிரமாணங்களைக்காட்டிலும் துர்பலம். ஏன் என்றால், அதனால் அங்காங்கிபாவம் தாமதமாய் காட்டப்படுகிறது.

(4) நான்காவது அத்யாயத்தில், விதிக்கப்பட்ட கர்மத்துக்கு என்ன ப்ரயோஜநம்? க்ரது ஸரியாக முடிவதற்கு உதவிசெய்வதா? அல்லது யஜமானனுக்கு ஒரு பலனைக் கொடுப்பதா? என்று விசாரிக்கப்படுகிறது. முதல்வகைக்கு உதாரணம்— "யஸ்ய பர்ணமயீ ஜுஹூர்பவதி" என்பது. பர்ணமரத்தால் செய்யப்படுவதின் ப்ரயோஜனம் க்ரது முடிவதற்கு உதவிசெய்வது. இரண்டாவது வகைக்கு உதாரணம்— "சமஸேநாப: ப்ரணயதி, கோதோஹநேந பசுகாமஸ்ய" (ப்ரணீதா என்கிற ஜலத்தைச் சமஸத்தாலே கொண்டுபோய் வைக்கவேண்டியது, பசுஸம்ருத்தியை ஆசைப்படுகிறவனுக்கு மாடுகறக்கிற பாத்ரத்தாலே) என்பது. இங்கே கோதோஹனத்தை விதிப்பதால் யாகத்துக்கு ஓர் உதவியுமில்லை. சமஸத்தாலேயே யாகம் முடியும். ஆகையால் அது யஜமானன் ப்ரயோஜனத்துக்காகவே. க்ரதுக்காக விதிக்கப்பட்ட கர்மமும் எந்த ப்ரயோஜனத்துக்காக என்றும் விசாரிக்கப்படுகிறது. கொதிக்கிற பாலில் தயிரைச் சேர்ப்பதின் பிரயோஜனம் ஆமிக்ஷாவை உண்டு பண்ணுவது. அதுதான் பிரயோஜகம். வாஜிநம் ஆமிக்ஷையின் கூட உண்டாகிறது. அதற்கு அநுநிஷ்பாதி என்று பெயர்.

(5) ஐந்தாவது அத்யாயத்தில், கர்மங்களையும் அவைகளின் அங்கங்களையும் எந்த க்ரமமாய்(வரிசையாய்) செய்கிறது என்பது விசாரிக்கப்படுகிறது. க்ரமங்கள் ஆறு. (1) ச்ரௌதக்ரமம் அதாவது— வேதத்தாலேயே விதிக்கப்படுகிற க்ரமம். "உபஸத்பிஶ்சரித்வா" என்று கீழே உதாஹரிக்கப்பட்ட வாக்யத்தில் "சரித்வா" என்கிற பதத்திலிருக்கிற "த்வா" என்கிற ச்ருதி உபஸத்யாகங்களுக்கு மேலே அக்னிஹோத்ர யாகத்தைச்செய்யவேண்டியது என்கிற கிரமத்தை விதிக்கிறது. (2, 3) அர்த்தக்ரமும், பாடக்ரமமும், "அக்நிஹோத்ரம் ஜுஹோதி। யவாகூம்

வவதி" (அக்னிஹோத்ர ஹோமத்தைச் செய்யவேண்டியது. கஞ்சியைச்சமைக்கவேண்டியது). இது பாடத்தால் ஏற்பட்ட க்ரமம். "யவாகூா ஜுஹோதி" என்று கஞ்சியைக் கொண்டு ஹோமம் செய்யச் சொல்லியிருப்பதால் கஞ்சியை முதலில் சமையல் செய்து, பிறகு அக்னிஹோத்ரத்தைச் செய்யவேண்டியது. ஆகையால், யவாகூபசநம் முதலிலும், பின்பு அக்னிஹோத்ர ஹோமமும் வருகின்றன. இது அர்த்தக்ரமம். இது பாடக்ரமத்தைக் காட்டிலும் ப்ரபலம். (4) இரண்டு ப்ரதானகர்மங்களைச் சேர்த்துச்செய்யும்போது அவைகளின் அங்கங்களை எந்த வரிசையாய்ச் செய்யவேண்டியது என்று காட்டுவது முக்ய க்ரமம். (5, 6) ப்ரவ்ருத்தி க்ரமம் அநேக பசுவுள்ள க்ரதுவிலும், ஸ்த்தானக்ரமம் ஸாத்யஸ்க்ரம் என்கிற யாகத்திலும் வரிசையைக் காட்டுகின்றன.

(6) ஆறுவது அத்யாயத்தில், யாகங்களைச்செய்யக் குருடனுக்கும் செவிடனுக்கும் முடவனுக்கும் அதிகாரம் இல்லையென்பதும், மற்றவர்களில் சூத்ரனுக்கு உபநயநமும் வேதத்தின் அத்யயனமும், அதினால் உண்டாகும் அறிவுமில்லாமையால் அதிகாரமில்லையென்பதும்,மற்ற மூன்று ஜாதிகளில் புருஷனைப்போல ஸ்திரீக்கும் அதிகாரம் இருக்கிறது என்பதும், புருஷனும் அவன் ஸ்திரீயும் சேர்ந்தே யாகங்களைச் செய்யவேண்டியது என்பதும் தீர்மானிக்கப்படுகின்றன. ஸங்கரஜாதிகளில் ரதகாரனுக்கு ஆதாநத்திலும், நிஷாதஸ்த்தபதிக்கு ஒரு குறித்த யாகத்திலும் அதிகாரம் வேதம் கொடுத்திருக்கிறது. நிஷாதஸ்த்தபதி என்கிற சொல்லுக்கு நிஷாதனை ஸ்த்தபதி என்று பொருள். நிஷாதன் ஸங்கரஜாதி. இந்த அத்யாயத்தில், விதித்த த்ரவ்யம் அகப்படாவிட்டால் எதை ப்ரதிநிதியாக வைத்துக்கொள்ளலாம் என்பதும், சில குற்றங்கள் நேர்ந்தால் என்ன ப்ராயச்சித்தம் பண்ணவேண்டியது என்பதும் சொல்லப்படுகின்றன. ப்ராயச்சித்தங்களைச் சொல்லும்போது அத்வைதி தனக்கு ஸாதகமாகச் சொல்லும் அபச்சேதந்யாயமும் சொல்லப்படுகிறது.

(7) ஏழாவது எட்டாவது அத்யாயங்களில் அதிதேசம் விதிக்கப்படுகிறது. சில யாகங்களுக்கே அவைகளுக்கு வேண்டிய எல்லா அங்கங்களும் விதிக்கப்படுகின்றன. அவைகளுக்கு ப்ரக்ருதி

யாகங்கள் என்று பெயர். அக்னிஹோத்ரமும், தர்ச-பூர்ணமாஸ இஷ்டிகளும், அக்னிஷ்டோம ஸோமயாகமும் ப்ரகிருதியாகங்கள். மற்ற யாகங்களுக்கு அங்கங்கள் சொல்லவில்லை. அவைகளுக்கு விக்ருதி யாகங்கள் என்று பெயர். ஒரு ப்ரகிருதி யாகத்திலிருந்து விக்ருதியாகத்துக்கு வேண்டிய அங்கங்களை எடுத்துக்கொள்ளவேண்டியது. இப்படி எடுத்துக்கொள்வதற்கு அதிதேசம் என்று பெயர். எந்த ப்ரகிருதி யாகத்திலிருந்து ஒரு விக்ருதி யாகத்துக்கு அதிதேசம் பண்ணவேண்டியது என்பதை மூன்று வழியாய் அறியலாம். (1)வேதமே அதைக் காட்டுவதால்- ச்யேநம் என்கிற யாகத்தையும் இஷு என்கிற யாகத்தையும் விதித்து இஷுயாகத்துக்கு ஓர் அங்கத்தை விதித்து, "ஸமாந இதரச்ச்யேநேந" (மற்றவைகள் ச்யேந யாகத்துக்கு ஸமானங்கள்) என்று சொல்லுகிறது. (2) யாகத்தின் பெயரால்- குண்டபாயிநாம் அயனத்தில் ஒருமாதம் செய்யவேண்டியதாகச் சொன்ன அக்னிஹோத்ரத்தைத் தினந்தோறும் செய்யும் அக்னிஹோத்ரத்தைப்போல் செய்யவேண்டியது. இதை அக்னிஹோத்ரம் என்கிற பெயர் காட்டுகிறது. (3) தேவதையின் ஸாத்ருச்யத்தாலே, அல்லது த்ரவ்யத்தின் ஸாத்ருச்யத்தாலே (ஒற்றுமையாலே)- ஸூரியனுடைய சருயாகத்தைத் தர்சத்தில் முதல் யாகமான அக்னிதேவதையின் புரோடாச யாகத்தைப்போல் செய்யவேண்டியது. இங்கே சருவும் புரோடாசமும் வ்ரீஹியான ஒரே த்ரவ்யத்தாலே செய்யப்படுகின்றன. இந்த ஒற்றுமையைக் கொண்டு ஸூரிய யாகத்தை அக்னி யாகத்தைப்போல் செய்யவேண்டியது. ஸோமாபூஷன் என்கிற தேவதைக்குச் சருவைக் கொடுக்கும் யாகத்தில் தேவதைகள் இரண்டு பேர்களாகையால், பூர்ணமாஸ யாகத்தில் சேர்ந்த அக்னீஷோமீய புரோடாச யாகம் அதற்கு ப்ரகிருதி. இதிலும் தேவதைகள் இரண்டுபேர்கள். த்ரவ்யத்தாலே ஒரு யாகமும், தேவதையால் வேறு யாகமும் ஏற்பட்டால், த்ரவ்யத்தால் ஏற்பட்ட ப்ரகிருதியாகத்தைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டியது. தேவதையைக் காட்டிலும் த்ரவ்யம் ப்ரபலம். பசுயாகத்தை தர்ச இஷ்டியில் மூன்றுவதான பால் யாகத்தைப்போல் செய்யவேண்டியது. பசுயாகத்தில் த்ரவ்யம்பசுவின் வபையும் அங்கங்களும். இந்த்ரயாகத்தில் பசுவின் பால். இவைகள் எல்லாம் பசுவின் விகாரங்களானயால் ஸத்ருசங்கள்.

(8) ஒன்பதாவது அத்தியாயத்தில் ஊஹம் சொல்லப்படுகிறது. கீழே சொன்னபடி அதிதேசம் பண்ணும்போது மந்த்ரங்களில் சில வேறுபாடுகளைச் செய்யவேண்டும். இந்த வேறுபாட்டுக்கு ஊஹம் என்று பெயர். அக்னிதேவதையின் புரோடாச யாகத்துக்கு நெல்லை நிர்வாபம் (பிரித்து எடுப்பது) செய்யும்போது 'அக்நயெ த்வா ஜுஷ்டம் நிர்வபாமி'' என்கிறமந்த்ரம் சொல்லப்படுகிறது. ஸூர்யனுடைய சருயாகத்தில் இந்த மந்த்ரத்திலிருந்து "அக்நயெ'' என்கிற சொல்லை எடுத்துவிட்டு, ஸூர்யாய என்கிற சொல்லை அவ்விடத்தில் வைக்கவேண்டியது. இது ஊஹம். சில இடங்களில் மந்த்ரங்களிலிருக்கும் பதத்தின் லிங்கத்தையாவது வசநத்தையாவது, அல்லது இரண்டையுமே மாற்றவேண்டியதாயிருக்கும். அவைகளும் ஊஹங்கள்.

(9) பத்தாவது அத்யாயத்தில் (பாத:) பாதம் சொல்லப்படுகிறது. அதிதேசம் பண்ணும்போது ப்ரகிருதி யாகத்திலிருந்து அதிதேசம் பண்ணப்பட்ட அங்கங்களில் சில அங்கம் பாதிக்கப்படுகிறது. (1) அங்கத்துக்கு ப்ரயோஜநமில்லாமையால்-கிருஷ்ணலம் என்பதைச் சருவாக விதிக்கிற யாகத்தில் அவஹநநம் இல்லை. ப்ரகிருதி யாகத்தில் நெல்லைக்குத்தி உமியைப் போக்கவேண்டியது. இதற்கு அவஹநநம் என்று பெயர். கிருஷ்ணலம் என்பது நெல்லைப்போல் தங்கத்தால் செய்யப்பட்டது. அதற்கு உமியில்லை. ஆகையால் அவஹநநமில்லை. (2) விசேஷ விதியாலே—பசுயாகத்தில் ப்ரயாஜயாகங்கள் அதிதேசத்தாலே வருகின்றன. ப்ரகிருதி யாகத்தில் அவைகள் ஐந்து. பசுயாகத்தில் அவைகள் பதினொன்று. இந்த விசேஷ விதியினால் ஐந்து என்கிற ஸங்க்யை பாதிக்கப்படுகிறது. இங்கே அதிதேசத்தால் வந்த அவஹநநமும்ஸங்க்யையும்பாதிக்கப்படுகின்றன. இதுப்ராப்த பாதம். மூன்றுவது அத்யாயத்தில் ப்ரபலமான ப்ரமாணத்தாலே துர்பலமான ப்ரமாணம் பாதிக்கப்படுவது அப்ராப்த பாதம்.

(10) இரண்டு ப்ரதான யாகங்களைச் சேர்த்துச் செய்யும்போது அவைகளின் அங்கங்களைச் சேர்த்து ஒரேதடவை செய்யலாமா? அல்லது ஒவ்வொன்றுக்கும் அவைகளைத் தனித்தனியாய் செய்யவேண்டியதா? என்று விசாரித்து, அவைகளை ஒரே தட

வை செய்யவேண்டியது என்று தீர்மானிக்கப்படுகிறது. இப்படி ஒரே தடவை செய்வது தந்த்ரம். பூர்ணமாஸ-இஷ்டியில் மூன்று யாகங்கள் சேர்த்துச் செய்யப்படுகின்றன. அவைகளுக்கு வேண்டிய ப்ரயாஜங்கள், ஆஜ்யபாகங்கள், ஸ்விஷ்டக்ருத், அநுயாஜங்கள்—இவைகளை ஒரே தடவை செய்யவேண்டியது. பசுயாகத்தைச்செய்யும்போது முதலில் வபாயாகமும் பிறகு அங்கயாகங்களும் செய்யப்படுகின்றன. நடுவில் ஒரு புரோடாச யாகம் செய்யப்படுகிறது. வபையை எடுப்பதினால் பசுவின் உடம்பிலுண்டாகும் ஓட்டையைப் புரோடாசம் அடைப்பதாகச்சொல்லுகிறபடியால் புரோடாசயாகத்துக்குப் பசு யாகத்துடன் ஸம்பந்தமிருக்கிறது. ஆகையால் பசு யாகத்தின் அங்கங்களாலே புரோடாச யாகத்துக்கு உபகாரம் ஏற்படுகிறபடியாலே அதின் அங்கங்களைச் செய்யவேண்டியதில்லை. இப்படி அங்கங்களைச் செய்யாமலே அவைகளின் உதவியைப்பெறுவதற்கு ப்ரஸங்கம் என்று பெயர். பதினோராவது பன்னிரண்டாவது அத்யாயங்களில் தந்த்ரமும், ப்ரஸங்கமும் சொல்லப்படுகின்றன.

(11) தேவதாகாண்டத்தில் தேவதைகளின் ஸ்வரூபமும், அவைகளின் பேதங்களும், அவைகளின் உபாஸநமும், உபாஸநத்தின் பலமும் நான்கு அத்யாயங்களால் சொல்லப்படுகின்றன. (5)

அவ— இப்படிப் பூர்வமீமாம்ஸையின் விஷயங்களைக் கீழ்ச்ச்லோகத்தாலே ஸங்க்ரஹித்து, உத்தரமீமாம்ஸையின் விஷயங்களைச்சொல்ல ஆரம்பிக்கிறார். முதல் ஸூத்ரத்தின் பாஷ்யத்தில் வேதத்தை அங்கங்களுடனும் உபநிஷத்துக்களுடனும் அத்யயநம் பண்ணி முதலில் கர்மவிசாரத்தைச் செய்து த்ருப்தி அடையாதவனுக்கு, மேலே செய்யவேண்டியது ப்ரம்மவிசாரம் என்பது சொல்லப்படுகிறது. ஒரு வாதி, கர்மவிசாரம் வேண்டுவதில்லை, ப்ரம்மவிசாரமே செய்யலாம் என்று சொல்லுகிறான். அதற்கு ஸ்ரீபாஷ்யத்தில் சொல்லப்பட்ட பதிலைச் சொல்லுகிறார்—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

வேதத்தை முழுவதும் அத்யயனம் பண்ணினவனுக்கு அங்கங்களை அத்யயநம் பண்ணுவதாலும், ஸம்ஸ்க்ருதம் வழங்கிவரும் தேசத்தில் இருப்பதாலும் அதின் அர்த்தம் மேலெழுந்தவாறு தோன்றுகிறது. அப்போது வேதத்தில் சொல்லுகிற எல்லாவற்றின் பலன்களைப்பற்றியும் ஸம்சயமுண்டாகிறது. கர்மவிசாரத்தைச்செய்து கர்மங்களின் பலன்கள் அல்பங்கள் நிலையில்லாதவைகள் என்றும், அவைகளால் ஆராதிக்கப்பட்ட தேவதைகளும் அவைகளைப்போலவே அல்பர்கள் என்றும், நிலையில்லாதவர்கள் என்றும்அறிகிறான். அவைகளின் விஷயமான ஸம்சயம் போய்விடுகிறது. ப்ரம்மகாண்டத்தில் ப்ரம்ம விஷயமான ஜ்ஞானம் மேலெழுந்தவாறு இருக்கிறது. வேதத்தின் பின்பாகத்தில் சொல்லப்பட்ட ப்ரம்மத்தின் விஷயத்தில் ஸம்சயமுமிருக்கிறது. கர்மவிசாரத்தைச் செய்து, கர்மங்களில் வெறுப்பு வந்தவன் அந்தக் காரணத்தாலே ப்ரம்மவிஷயமான விசாரத்தை ஆரம்பிக்கிறான். இப்படியிருக்க, ஒருவாதி— ஆபாதமாக(மேலெழுந்தவாறு) முதலில் அறிந்த வேதத்தின் அர்த்தத்தைக் கொண்டு த்ருப்தியடைந்து, கர்மவிசாரத்தை விட்டு விட்டு, முதலில் ப்ரம்மவிசாரத்தை ஏன் செய்யக்கூடாது— என்று கேட்கிறான். அவனுக்குச் சொல்லவேண்டிய பதில்- எந்த யுக்தியைக்கொண்டு கர்மவிசாரம் வேண்டாம் என்று சொல்லுகிறாயோ, அதே யுக்தியைக்கொண்டே ப்ரம்மவிசாரமும் வேண்டாம் என்று சொல்லுகிறேன். இதற்கு நீ பாதம் சொல்லமுடியாது—என்பது.

குறிப்பு— இதற்கு அவன் பதில் சொல்லுகிறான்— "இப்போது உண்டாயிருக்கும் ப்ரம்மவிஷயமான ஜ்ஞானம் ஸம்சயத்துடனும் விபரீத ஜ்ஞானத்துடனும் கலந்திருக்கிறது. அவைகளை விலக்குவதற்காக விசாரம் செய்யவேண்டியது." என்று. இந்த பதிலை நாம் அவனுக்குச் சொல்லவேண்டியது. கர்மங்களின் விஷயமான ஜ்ஞானமும் ஸம்சயத்துடனும், விபரீத ஜ்ஞானத்துடனும் சேர்ந்திருக்கிறது. அவைகளை விலக்குவதற்காகக் கர்மவிசாரம் செய்யவேண்டியதுதானே. நீ தெளிவான சில வாக்யங்களைக்கொண்டு வாதிக்கிறாய். வேதத்தின் முன்பாகத்திலும் கர்மங்கள் நிலையான பலனைக் கொடுக்கின்றன என்பது சொல்லப்படுகிறது. உதாரணம்— "ஸோமரஸத்தைப் பானம் பண்ணினோம், மரணமில்லாதவர்களாக ஆனோம்", "சாதுர்மாஸ்ய யாகங்

अपाम सोममसृता बभूव। अक्षय्यं ह वै चातुर्मास्य याजिनस्सुकृतं भवति। See p. 58 Satar Dushani

களைச் செய்தவனுக்கு ஸுக்ருதம் க்ஷயமில்லாததாக ஆகிறது.” என்பவைகளாம். (6)

அவ— இப்படி ப்ரதிபந்தியாலே கர்மவிசாரத்துக்குமேலே ப்ரம்மவிசாரம் செய்யவேண்டியது என்று சொல்லி, அதற்குக் காரணங்களையும் காட்டுகிறார்—

𑌪𑍍𑌰𑌾𑌵𑌣𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 𑌤𑍍𑌰𑌿𑌵𑌰𑍍𑌗𑍇 𑌸𑌹𑌜𑌮𑌨𑍁𑌗𑌤𑌂 𑌤𑌾𑌵𑌤𑌾
𑌸𑌨𑍍𑌨𑌾𑌹𑍍𑌯𑌤𑍋𑌽𑌪𑌿 𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑍈 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰
𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌯𑌦𑌿𑌵𑌸𑍀 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 𑌕𑍃𑌤𑍍𑌯𑍇। 𑌧𑍀𑌨𑌾𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯
𑌵𑌾𑌯𑍁𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌤𑍁 𑌤𑌥𑌾 𑌵𑌾𑌕𑍍𑌯𑌵𑍇𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑌾
𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑌶𑍍𑌰𑍇𑌣𑍀𑌧𑍀𑌵𑍃𑌦𑍍𑌧𑌿 𑌧𑍀𑌯𑍋𑌃 𑌸𑌵𑌿𑌧𑍇 𑌯𑌾𑌤𑍁 𑌵𑌾
𑌦𑌂 𑌕𑍍𑌲𑍃𑌪𑍍𑌤𑌿𑌃 ॥ ॥௭॥

(1) தர்மம், அர்த்தம், காமம் என்று சொல்லப்பட்ட த்ரிவர்க்கத்தில் ஒருவனுடைய மனது முதலில் போய்விழுகிறது. இதற்குக் காரணம் அநாதியாயிருக்கிற வாஸனை. ஆகையால் வேதத்தின் அர்த்தத்தைத் தெரிந்தவன் முதலில் கர்மவிசாரம் செய்து, அவைகளின் தோஷங்களை அறிந்தபிறகுதான் கர்மபந்தத்தைப் போக்குவதாகிய அபவர்க்கத்தில் அவன்மனது படியும். (2) உபாஸநத்துக்குக் கர்மங்களை அங்கங்களாக வேதம் விதிக்கிறது. அவைகளை அறிந்து செய்தால்தான் உபாஸநம் உண்டாகி வளரும். ஆகையால் கர்மவிசாரத்தில் படும் ப்ரயத்னத்துக்குப் பலனுண்டு. (3) வேதத்துக்கு வியாக்யாநம் மீமாம்ஸை. அதில் முதலில் கர்மங்களும், பின்பு ப்ரம்மமும் சொல்லப்படுவதால் விசாரங்களையும் இதே வரிசையாய்ச் செய்யவேண்டியது. இது முக்ய க்ரமத்தால் ஏற்படுகிறது. (4) கர்மமீமாம்ஸையில் ப்ரமாணங்களின் பலாபலங்களும் கர்மங்களின் பேதங்களும் அங்கங்களை எப்படி அறியவேண்டுவது என்பதும் விசாரிக்கப்படுகின்றன. அவைகளைக்கொண்டு ப்ரம்மமீமாம்ஸையிலும் விசாரம் செய்து தீர்மானம் செய்யவேண்டியிருக்கிறது. (5) வேதத்தில் உபாஸநத்துக்கு யஜ்ஞம் முதலானவைகள் அங்கங்களாகச் சொல்லப்படுகின்றன. இந்த வாக்யத்தின் பொருளை அறிவதற்கு முன்னாலே அதில் இருக்கும் யஜ்ஞம் முதலான சொற்களுக்கு அர்த்தத்தை அறியவேண்டும். இந்த அறிவு கர்மவிசா

ரத்தாலேயே ஏற்படும். (6)ப்ரம்மமீமாம்ஸையில் பூர்வமீமாம்ஸையிலிருந்து பல உபமானங்கள் சொல்லப்படுகின்றன. அவைகளை அறிந்து தான் உபமேயங்களை அறியவேண்டியது. (7) தேன் கிட்டவே கிடைக்குமானால் எதற்காக மலைக்குப்போக வேண்டும். இந்தக் காரணங்களால் கர்மவிசாரத்தை முதலில் செய்யவேண்டியது.

குறிப்பு— (1) இந்த ச்லோகத்தில் சொல்லுகிற க்ரமங்கள் பூர்வமீமாம்ஸையில் சொல்லப்பட்டவைகள். ஐந்தாவது ச்லோகத்தின் 5-வது குறிப்பைப் பார்க்க. முதலில் சொல்லப்பட்டது அர்த்தக்ரமம். அப்படியே மூன்றாவது தவிர மற்றவைகள் அர்த்தக்ரமங்கள். மூன்றாவது முக்ய க்ரமம் என்று ச்லோகமே சொல்லுகிறது. இங்கே பாட க்ரமமும் என்று சொல்லலாம். வேதத்தில் முன்பாகத்தில் கர்மங்கள் படிக்கப்பட்டிருக்கிறபடியால் அவைகளின் விசாரத்தையே முதலில் செய்யவேண்டியது. இங்கே ஸ்த்தானக்ரமமுமாகவும் சொல்லலாம். அத்யயநம் பண்ணின பிறகுதான் கர்மவிசாரம் செய்வதற்குக் காலம். அதைச் செய்யாமல், மேலே செய்யவேண்டிய ப்ரம்மவிசாரத்தைச் செய்வதால் அந்த க்ரமம் போய்விடுகிறது. ஸாத்யஸ்க்ரம் என்கிற ஸோமயாகத்தில் ஐந்து நாளில் செய்யவேண்டிய வியாபாரங்களை ஒரே நாளில் செய்யவேண்டியது. ப்ரகிருதியாகத்தில் நாலாவது நாளில் ஒரு பசுயாசமும், ஸோமயாகம் நடக்கும் நாளில் ஒரு பசுயாகமும் அவப்ருதத்துக்கு மேலே ஒரு பசுயாகமும் செய்யவேண்டியது. இவைகளில் முதல் யாகத்துக்கு அக்னீஷோமீய பசுயாகம் என்றும், இரண்டாவதற்கு ஸவநீய பசுயாகம் என்றும், மூன்றாவதற்கு அநுபந்த்யா பசு யாகம் என்றும் பெயர்கள். இவைகளை ஸோமயாகதினத்திலே செய்வதாலே ஸவநீய பசுயாகத்தை அதினுடைய ஸ்தானத்தில் முதலில் செய்து, மற்ற இரண்டு யாகங்களை அவைகளின் வரிசைப்படி செய்யவேண்டியது. அப்படியே கர்மவிசாரத்தையும் அதின் காலத்திலேயே செய்து ப்ரம்மவிசாரத்தைப் பிறகு செய்யவேண்டியது.

(2) இங்கே ப்ரவ்ருத்தி க்ரமத்தையும் சொல்லலாம். வாஜபேய ஸோமயாகத்தில் பதினேழு பசுக்களை உபாகரணம் பண்ணவேண்டியது. இவைகள் ஒவ்வொன்றுக்கும் உபாகரணம், நியோ

ஜநம், ப்ரோக்ஷணம் அஞ்ஜநம் என்ற நாலு ஸம்ஸ்காரங்கள் செய்ய வேண்டியது. இவைகளில் முதல் வியாபாரம் எந்த வரிசையாய்ச் செய்யப்படுகிறதோ, அந்த வரிசையாகவே மற்ற வியாபாரங்களையும் செய்யவேண்டியது. சிஷ்யன் குருவினிடமிருந்து அத்யயநம் பண்ணுவது, அக்ஷரராசி க்ரஹணம், அர்த்த விசாரம், ஆகிய வியாபாரங்களைச்செய்கிறான். முதல்வ்யாபாரத்தை எந்த வரிசையாய்ச் செய்கிறானோ, அதே வரிசையாய் மற்றவைகளையும் செய்யவேண்டியது. இதனாலும் கர்மவிசாரத்தை முதலில் செய்யவேண்டியது என்பது ஏற்படுகிறது.

(3) ச்ரௌதக்ரமமுமிருக்கிறது. முண்டகத்தில்* "வேதத்தைப் படித்தவன் கர்மத்தாலே ஸம்பாதிக்கப்படும் பலன்களைப் பற்றி மீமாம்ஸாநியாயங்களைக் கொண்டு நிரூபணம் செய்து, கர்மங்களால் நித்யனான புருஷனை அடைய முடியாது என்று எப்போது வெறுப்பையடைகிறானோ, அப்போது அவன் குருவினிடமேபோய் அந்தப் புருஷனை அறியும்படியான ப்ரம்ம வித்யையை அடையவேண்டியது" என்று சொல்லியிருக்கிறது. இங்கே "𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯" என்கிற சொல்லில் 'ய' என்கிற விகுதி ச்ருதி. அது பரீக்ஷையை முதலில் செய்யவேண்டியது என்றும், வெறுப்பை அடைந்தபிறகு குருவினிடம் போய் ப்ரம்மவிசாரத்தைச் செய்யவேண்டியது என்றும் காட்டுகிறது.

(4) "சந்த்ரனைப் போன்றது முகம்" என்கிறவிடத்தில், சந்திரன் உபமானம்; முகம் உபமேயம். உபமானத்தை அறியாமல்

---

* 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌚𑌿𑌤𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌮𑌾𑌯𑌾𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍃𑌤𑌃 𑌕𑍃𑌤𑍇𑌨 । 𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸 𑌗𑍁𑌰𑍁𑌮𑍇𑌵𑌾𑌭𑌿𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍 ॥ (மு-1-2-12,13) 𑌅𑌕𑍃𑌤𑌃 என்கிற சொல்லுக்கு விசேஷ்யமில்லாமையாலே மந்த்ரத்தின் கடைசியிலிருக்கும் "புருஷம்" என்கிற சொல்லை அத்துடன் சேர்க்கவேண்டியது. இரண்டும் பும்லிங்கம். குருவினிடமும்போகலாம்; சிஷ்யன் தானாகவே புஸ்தகத்தைப் பார்த்தும்அறியலாம். இவைகளில் முன்சொன்னதையே செய்யவேண்டியது என்று '𑌏𑌵' என்கிற சொல் காட்டுகிறது. இது நியம விதி. ஒருவன் ஒரு பிரயோஜநத்துக்கு ஸாதநமாக தானாகச்செய்யக் கூடிய இரண்டு வியாபாரங்களில் ஒன்றையே செய்யவேண்டியது என்று விதிப்பது நியமவிதி.

உபமேயத்தை அறியமுடியாது. பூர்வமீமாம்ஸையிலிருந்து "க்ஷுத்ராவஹத்ஸ்ருத்யாதிந்யாய:" முதலான அனேக உபமானங்கள் ப்ரம்ம மீமாம்ஸையில் சொல்லப்படுகின்றன. அவைகளை அறியவேண்டுவதற்காகக் கர்மவிசாரத்தையே முதலில் செய்ய வேண்டியது.

(5) கர்மகாண்டத்தில் உபாஸநம் என்ற ஜ்ஞானமில்லாமல் கர்மத்தினாலேயே அளவில்லாத பலம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. ப்ரம்மகாண்டத்தில் கர்மங்களை அங்கங்களாகவுடைய ஜ்ஞானத்தால் அது கிடைக்கும் என்று சொல்லப்படுவதால், லகுவான (வியாபாரத்தைச்சொல்லுகிற) கர்மவிசாரத்தையே முதலில் ஒருவன் செய்வன். இதற்கு சுலோகத்தில் சொன்ன தேனைப் பெறுவது உதாரணம். (7)

அவ:— அத்வைதிகளுள் சிலர் மூன்று தாபங்களால் அடிபடுவது பூர்வ வ்ருத்தம் (ப்ரம்மவிசாரத்துக்கு முன்புள்ளது) என்றும், வேறு சிலர் ஸாதநசதுஷ்டயஸம்பத்தி (நான்கு ஸாதனங்கள் நிறைந்திருப்பது) பூர்வவ்ருத்தமென்றும் சொல்லுகிறார்கள். இவ்விருவரும் கர்மவிசாரத்தை பூர்வ வ்ருத்தமாக ஒப்புக்கொள்வதில்லை. அந்தப் பக்ஷங்களைத் தூஷிக்கிறார்:—

வ்யாவ்ருத்தை: கைஶ்சித் ஆத்மத்ரயஹதிநிரதை: ஸாதநாநாம் சதுஷ்கம் கைஶ்சித் ஸிந்து ப்ரபோத்யம் கதயதி நிகமை: கர்மவிஜ்ஞாநயுக்தம் | ஸாங்காதீதி ப்ரஸக்தே விஷயவஶாத் ஸ்வாத்ம ஜ்ஞாநாத் விரக்தி ஸ்வாமி ப்ரீத்யம் க்ரமஜ்ஞ ந பரிசயநிதாநாஸம்ப்ர யுக்த:|| ||7||

சிலர், பிரம்மகாண்டத்திற்குப் பூர்வவ்ருத்தம் மூன்று விதமான தாபங்களாலே அடிபடுவது என்றும், வேறு சிலர், நாலு ஸாதநங்களை அடைந்திருப்பது என்றும் சொல்லுகிறார்கள். இது ஸாரமில்லாதது. கீழ்ச் சொன்னவைகளைக் கர்மவிசாரத்தின் பலன்களாக வேதம் சொல்லுகிறது. அங்கங்களுடன் வேதம் முழுவதையும் அத்யயனம் பண்ணுகிறபடியால் ஸம்சயம் உண்டாகிறது. இவைகளை வேறு சாஸ்திரங்களாலே

ஸம்பாதிப்பதற்கு காலம் ஏது? நாம் கீழே சொல்லிய க்ரமமானது தகுந்ததாயிருப்பதைக்கொண்டு ஏற்படுகிறது. இதை வேதம் விதிக்கவில்லை.

குறிப்பு:— (1) தாபத்ரயத்தால் அடிபடுவதைப் பூர்வவ்ருத்தம் என்று சொல்லுகிறவன் யாதவப்ரகாசன். மூன்று தாபங்களாவன:— உடம்பால் உண்டாவதும், சுற்றிலுமிருக்கிறவர்களால் உண்டாவதும், தேவதைகளால் உண்டுபண்ணப்படுவதும். இவைகளுக்கு ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம், என்று பெயர்கள். நாலு ஸாதநங்கள்—(1) இது நித்யம் இது அநித்யம் என்று பிரித்து அறிவது, (2) இந்த உலகத்திலும் மேல் உலகத்திலும் அடையக்கூடிய ஸுகங்களில் ஆசையில்லாமை, (3) சமம் தமம் முதலானவைகள், (4) கர்மபந்தத்திலிருந்து விடப்படுவதில் ஆசை. இவைகளைப் பூர்வவ்ருத்தம் என்று சொல்லுகிறவன் சங்கரன்.

(2) கர்மவிசாரத்தைச் செய்கிறவர்களுக்கும் செய்யாதவர்களுக்கும் தாபத்ரயாபிஹதி பொதுவானது; ஆகையால் ப்ரம்மவிசாரத்துக்கு அது பூர்வவ்ருத்தம் என்று நியமம் ஏற்படாது. கர்மபலன்கள் நிலையில்லாதவைகளாகையால் அவைகளைவிடவேண்டும் என்கிற நிச்சயம் பூர்வவ்ருத்தமாகவேண்டுமானால், அது கர்ம ப்ரம்மவிசாரங்களாலேயே உண்டாகவேண்டியது. மேலும், இரண்டு விசாரங்களாலேதான் இந்தத் தீர்மானம் உண்டாகும், இந்தத் தீர்மானம் வந்தபிறகுதான் பிரம்மவிசாரம் செய்யவேண்டும் என்று அந்யோந்யாச்ரயம் என்கிற தோஷம்.

(3) நித்யாநித்யவஸ்து விவேகம் கர்மப்ரம்ம விசாரங்களால் ஏற்படவேண்டியது. கர்மவிசாரத்தாலே கர்மங்களின் பலன்கள் அல்பங்கள் என்பதும், நிலையில்லாதவைகள் என்பதும் ஏற்படும். ப்ரம்மவிசாரம் செய்தபிறகுதான் ப்ரம்மப்ராப்தியான பலன் அளவில்லாதது என்பதும், நிலையானது என்பதும் ஏற்படும். இப்படி நித்யாநித்யவஸ்து விவேகம் பிறந்த பிறகுதான் கர்மபலன்களில் வைராக்யமும், உபாஸநபலத்தில் ஆசையும் உண்டாகும். இவைகள் இரண்டாவது நாலாவது ஸாதநங்கள். சமதமாதிகள் வேண்டும்

என்பது *"ஶாந்தோ தா³ந்த:" என்று சொல்லப்பட்ட உபநிஷத் வாக்யவிசாரத்தாலே ஏற்படவேண்டியது. இது மூன்றாவது ஸாதனம். இப்படி இரண்டு விசாரங்களால் ஏற்படவேண்டிய தை ப்ரம்மவிசாரத்துக்குப் பூர்வ வ்ருத்தமாகச் சொன்னால் அந்யோந்யாச்ரயம் என்கிற தோஷம் வரும்.

(4) வேதத்தை அத்யயநம் பண்ணினவுடன் § ஆபாதப்ர தீதி உண்டாகிறது. அதினாலேயே நித்யா நித்யவஸ்து விவேகம் வரக்கூடாதா என்றால், அநித்யமான கர்மபலன்களை நித்யங்களா கவும், நித்யங்களான பலன்களை அநித்யங்களாகவும் சொல்லும் வாக்யங்கள் இருக்கிறபடியால் அதினால் வைராக்யமும் முமுக்ஷுத் வமும் உண்டாகமாட்டா. (ஶ்ரு. த.)

(5) பூர்வபக்ஷிகளால் சொல்லப்பட்ட பூர்வவ்ருத்தங்கள் ந்யாயசாஸ்த்ரம், ஸாங்க்யசாஸ்த்ரம் முதலானவைகளால் கிடைக் கலாமே என்றால், அவைகளைப் படிப்பதற்குக் காலமில்லை. ப்ராம் மணப்பையனுக்கு எட்டாவதுவயதில் உபநயனம். அவன்உடனே வேதத்தை அத்யயனம் பண்ண ஆரம்பிக்கிறான். அது முடிந்த வுடன் வேதார்த்தத்தினுடைய ஆபாதப்ரதீதி உண்டாகிறது. உடனே விசாரத்தை ஆரம்பிக்கிறான். ஆகையால் அதை விட்டு விட்டு வேறு சாஸ்திரங்களைப் பரிசயம் பண்ணுவதற்கு எங்கே இடமிருக்கிறது. அந்த சாஸ்திரங்களைப்பரிசயம் பண்ணினாலும் போதாது. அவைகளில் வேதத்துக்கு விருத்தமான அம்சங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளாவன— ஜகத்திற்குப் பர

* இந்த வாக்யத்தில் உபாஸநத்துக்கு வேண்டிய அங்கங்கள் சொல்லப்படுகின்றன. அவைகளாவன— (1) சமம், மனதை அடக் குவது; (2) தமம் - வெளியிந்திரியங்களை அடக்குவது; (3) உபரதி - வேதத்தாலே நிஷித்தமான கர்மங்களையும் காம்ய கர்மங்களையும் விடு வது; (4) திதிக்ஷை - நல்லது கிடைத்தால் ஸந்தோஷப்படாமையும், கெட்டது வந்தால் துக்கப்படாமையும், (5) ஸமாதி - துக்கமும் ஸந் தோஷமுமில்லாமையாலே மனது கலங்காமல் த்யானம்பண்ணத் தகுந் ததாயிருப்பது. (ஶ்ரு. தவ ப்ரகாஶிகா)

§ ஆபாத ப்ரதீதியென்றால், வாக்யத்தைக் கேட்டவுடன் உண்டா கும் அதின் அர்த்தத்தின் ஜ்ஞானம். அதில் ஸம்சயமும் விபரீதஜ்ஞான மும் கலந்திருக்கலாம். விசாரத்தாலேதான் அவைகள் போகவேண்டும்.

மாணுவே காரணம், பரப்ரம்மத்தாலே நியமனம் பண்ணப்ப டாத ப்ரதானமே காரணம், ஆகாசம் நித்யம், ஈச்வரன் நிமித்த காரணம் மாத்ரம் என்பவைகளாம். ஆகையால், அந்த சாஸ்தி ரங்களின் ஜ்ஞானத்தால் உண்டாகும் நித்யாநித்ய வஸ்துவிவேகம் ப்ரம்மவிசாரத்துக்கு பூர்வவ்ருத்தமாக எப்படியிருக்கக்கூடும்? மேலும், பதார்த்த தத்துவஜ்ஞானத்தாலே மோக்ஷம் வரும் என்று அந்த சாஸ்த்ரங்கள் சொல்லுகிறபடியாலே அந்த ஜ்ஞானத்தை ஸம்பாதித்தவனுக்கு ப்ரம்மவிசாரம் பண்ணவேண்டியதேயில்லை. அவன் ப்ரம்மவிசாரம் செய்வதாக வைத்துக்கொண்டு ஸாதநசது ஷ்டயத்தைப் பூர்வவ்ருத்தமாகச் சொல்லவேண்டியதில்லை.

(6) இதிஹாஸ புராணங்களாலே நாலு ஸாதநங்களையும் ஸம்பாதிக்கலாமே என்றால், அவைகளாலேயே ப்ரம்மஸ்வரூபத் தையும் அறியமுடியுமாகையால் ப்ரம்மவிசாரம்தான் வேண்டு மோ ? அவைகளில் ஸம்சயத்துக்கும், விபரீதஜ்ஞானத்துக்கும் இடம் மிகுதியாயிருப்பதால் ப்ரம்மவிசாரம் வேண்டியது என் றால், அதே காரணத்தால் அவைகளால் நித்யாநித்யவஸ்துவிவேக முமுண்டாகாது.

(7) இரண்டு விசாரங்களைச் சொன்ன வரிசையாய்ச் செய்ய வேண்டியது என்று வேதம் விதிக்கிறதோ என்றால், இல்லை. எந்த வரிசை தகுந்தது என்று செய்யும் விசாரத்தாலே இது ஏற்படு கிறது. "வரீக்ஷ்ய லோகாந்" என்கிற வாக்யம் இப்படி ஏற் பட்ட வரிசையை அநுவாதம் செய்கிறது. அது செய்யும் காரியம் சிஷ்யன் குருவினிடமே போகவேண்டியது என்று விதிப்பதுதான். (8)

அவ— கர்மவிசாரம் வேண்டாம் என்று அத்வைதி சொன்ன ஒரு காரணத்தைத் தூஷித்து, அவன் சொல்லும் மற்றக்காரணங் களை அநுவாதம் பண்ணி அவைகளுக்கு ஸ்ரீபாஷ்யத்திலேயே பரி ஹாரம் சொல்லியிருப்பதாகச் சொல்லுகிறார்—

[illegible] ॥ ॥௧॥

அடையவேண்டியதாகச் சொல்லப்படுவது நிர்விசேஷமான ப்ரம்மம்; அதுஎப்போதும் அடையப்பட்டேயிருக்கிறது. கழுத்தில் தரித்திருக்கிற தங்கநகையைப் போல அது புதிதாக அடையப்பட்டதாக நினைக்கப்படுகிறது. மித்யையாயிருப்பதைப் போக்குவது தான் செய்யவேண்டிய வியாபாரம். ஒரு வேதாந்த வாக்யத்தாலேஉண்டாகும் ப்ரத்யக்ஷஜ்ஞானத்தால் அதுபோகும். இப்படியிருக்க, கர்மவிசாரத்துக்கு எங்கே உபயோகம்? இது மாத்ரமன்று. கர்மம் ப்ரம்மவிசாரத்துக்கு விருத்தமுமானது. ஆகையால் ப்ரம்மவிசாரத்துக்குப் பூர்வவ்ருத்தம் நான்சொன்னவைகள் தான். இப்படிப் பூர்வபக்ஷி சொல்லுவதற்குப் பதில் ஸ்ரீபாஷ்யத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

குறிப்பு:— (1) அத்வைத மதத்தில், ப்ரம்மம் நிர்விசேஷம். அதாவது— அதைத்தவிர வேறொன்றுமில்லை, அதற்குக் குணமுமில்லை. வேறொன்று இருந்தாலும், அதற்குக் குணமிருந்தாலும் அது ஸவிசேஷமாகும்.

(2) மித்யை என்றால், முதலில் தோன்றி விசாரம் பண்ணினபோது போய்விடுவது. இங்கே மித்யாஹூதம் என்று சொல்லப்படுவது உண்மையில் வஸ்து இல்லாமல் அவித்யையினால் தோன்றி, அவித்யை போனவுடன் மறைந்துபோகும்ஜகத். மித்யையானதை ஜ்ஞானத்தாலே போக்க வேண்டியது. மித்யையான ஜகத்தைப் போக்குவது "தத்த்வமஸி" என்கிற வேதாந்த வாக்கியத்தாலே உண்டாகும்ப்ரத்யக்ஷஜ்ஞானத்தால். ஜ்ஞானத்தாலே போக்கவேண்டிய விஷயத்தில் கர்மத்துக்கு வேலையில்லை. அது பலவிதமான பேதங்களுடன் கலந்திருக்கிறது. ஆகையால் ப்ரம்மம் நிர்விசேஷம் என்று அறிவதற்கு அது விருத்தம்.

(3) ச்லோகத்தில் சொன்னது லகுபூர்வபக்ஷத்தின் விஷயம். இதற்குப் பதில் லகுஸித்தாந்தத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லப்படுகிறது. அதின் சுருக்கம்—ஜீவன் அடையவேண்டிய ப்ரம்மம் நிர்விசேஷம் அன்று. இரண்டு விபூதிகளுடன் கூடினவனும், எல்லாக் குணங்களுக்கும் இருப்பிடமுமான பரப்ரம்மம் என்று சொல்லப்படும் நாராயணனே. அவனுடன் எப்போதும் ஜீவன் சேர்ந்திருந்தாலும் வைகுந்தம் என்கிற தேசவிசேஷத்துக்குப் போய், அவனிடம் சேருவது ப்ராப்யம். அவித்யாநிவ்ருத்தி

மோக்ஷம் என்பது ஸ்ரீபாஷ்யத்தில் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் அவித்யை அத்வைதி சொல்லுகிறபடி பேதஜ்ஞானத்தை உண்டுபண்ணுகிற மித்யையானது (பொய் வஸ்து) அன்று. அது புண்யம் என்றும், பாபம் என்றும் சொல்லப்பட்ட இருவகைக் கர்மங்கள். அவைகளை உபாஸனம் என்கிற உபாயத்தால் போக்க வேண்டியது.

(4) தங்கநகை உதாரணத்தின் கருத்து— ஒருவன் அடைய வேண்டும் என்று ஆசைப்படுவது இருவகைப்படும். ஒன்று இது வரையில் அடையப்படாமல் புதிதாய் அடையவேண்டியதான க்ராமம் முதலானவைகள். மற்றொன்று— அடையப்பட்டிருந்தும் பிரமத்தினால் அடையப்படாததாக எண்ணப்படும் வஸ்து. இரண்டாவதற்கு உதாரணம்— ஒருவன் கழுத்தில் பூட்டிக்கொண்டிருக்கும் தங்கநகை. அது ஏற்கனவே அடையப்பட்டது. புதிதாய் அதை அடைவதற்குப் பிரயத்நம் பண்ணவேண்டியதில்லை. ஆனால் ப்ரமத்தினால் ஒருவன் அது அடையப்படவில்லை என்று எண்ணுகிறான். இந்தப்பிரமம் போவதற்குத்தான் ப்ரயத்நம்பண்ணவேண்டியது. அதுபோல, நிர்விசேஷமான ப்ரம்மம் அடையப்பட்டே இருக்கிறது. அது அடையப்படாததாக பிரமத்தால் தோன்றுகிறது. அதுவும் அவித்யையினால் உண்டாகிறது. ஆகையால் போக்கவேண்டியது அவித்யை. அது போனால் பிரமமும் போய் விடும்— என்பது.

(5) அத்வைதி வாக்யஜந்யஜ்ஞான (வேதவாக்கியத்தாலுண்டாகும் ஜ்ஞான) த்தாலே பேதஜ்ஞாநம் போகிறது என்று சொல்லுகிறான். தத்த்வமஸி என்கிற வாக்யத்தைக் கேட்டு அதன் அர்த்தம் தெரிந்தவுடன் பேதப்ரதீதி (பேதம் தோன்றுவது) போகவில்லை. பிறகும் பேதம் தோன்றுகிறது. இதற்கு அவன் இரண்டுவிதமாய் பரிஹாரம் சொல்லுகிறான்— (1) பேதப்ரதீதி பாதிதம். ஆனாலும் கொஞ்சகாலம் அதன் அநுவ்ருத்தி இருக்கிறது. கண்ணின் தோஷத்தால் இரண்டு சந்திரன்கள் இருப்பனவாகப் பார்க்கிறவனுடைய பேதஜ்ஞானம் ஆப்தனுடைய வாக்கியத்தாலே போனபோதிலும், இரண்டு சந்திரன்களின் தோற்றம் நிற்கிறது. அதுபோல—என்று. இது கூடாது, சந்த்ரனை இரண்டாகப் பார்க்கிறவனுக்குக் கண்ணில் ரோகமிருக்

கிறது. அது மித்யையன்று. அது வேண்டியவன் வாக்யத்தாலே போகாது. இந்த விஷயத்திலோ, பேதத்தைக்காட்டுகிற அவித்யை மித்யையாதலால், அவித்யையைப் போக்குகிற ஜ்ஞாநத்தாலேயே பேதத்தைப் பார்ப்பதும் போகவேண்டும். (2) வாக்யத்தைக் கேட்டவுடன் அவித்யையைப் போக்கும் ஜ்ஞானமுண்டாகவில்லை. வாக்யத்தின் அர்த்தத்தை மனனமும் தியானமும் செய்து, அதினுல் மனது நிர்மலமான பிறகு வாக்யார்த்த ஜ்ஞானமுண்டாகும். அப்போது அவித்யை போகும் என்பது அத்வைதிசொல்லும்இரண்டாவது பரிஹாரம். இதுவும் கூடாது. வாக்யார்த்த ஜ்ஞானமுண்டானுல் த்யானமுண்டாகும். த்யானமுண்டானுல் வாக்யார்த்தஜ்ஞானமுண்டாகும் என்று அந்யோந்யாச்ரயம் என்கிற தோஷம். இதை ஸமந்வயாதிகரணத்தில் தியானநியோகவாதி நிரூபணம் செய்கிருன். மேலும், பேதஜ்ஞானம் அநாதிகாலமாய் வந்துகொண்டிருக்கிறது. வேதவாக்யத்தாலுண்டாகும் அபேதஜ்ஞானம் அதைக்காட்டிலும் துர்பலம். இது அதனுல் ஒருபோதும் போகாது. மேலும், வாக்யார்த்த ஜ்ஞானத்தால் ப்ரத்யக்ஷ ஜ்ஞானமுண்டாகாது. இதையும் த்யானநியோகவாதி காட்டுகிருன்.

(5) அவித்யாநிவ்ருத்தி எதனுல் என்றுல், உபாஸநமான ஜ்ஞானத்தாலேதான். "வ்ருஹவிக"என்று சொல்லுகிறவிடத்தில் வேதநம் * ஸாமாந்யவிசேஷந்யாயத்தாலே உபாஸநத்தையே சொல்லுகிறது. ப்ரம்ம ப்ராப்திக்கு உபாயத்தைச் சொல்லுகிற இடங்களில் வேதநம் த்யாநம் த்ருவாநுஸ்ம்ருதி தர்சநம் பக்தி என்கிற சொற்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் அடுத்து மேலே சொல்லப்பட்டதைக் காட்டிலும் பொதுவானதாகவும் மேலே சொல்லப்பட்டது விசேஷமாயுமிருக்கின்றன. ஆகையால் வேதநம் ஆவ்ருத்தி பண்ணப்பட்ட த்யானத்தையும், அது

* பசுயாகத்தை விதிக்கிற வாக்யத்தில் பசு என்கிற பொதுவான சொல் இருக்கிறது.யாகத்தில் உபயோகப்படுகிற ஒரு மந்த்ரத்தில் ஹாக (வெள்ளாடு) என்று விசேஷத்தைச் சொல்லுகிற சொல் இருக்கிறது. ஆகையால் பொதுவான பசு என்கிற சொல்லுக்கு ஹாகம் என்கிற விசேஷமே பொருள் என்று மீமாம்ஸையில் ஆருவது அத்யாயத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஸாமாந்ய விசேஷ ந்யாயம் என்றும், சாகபசுந்யாயம் என்றும் பெயர்.

வேறு எண்ணம் நடுவில் கலக்காததாகிய த்ருவாநுஸ்ம்ருதியையும் அது கண்ணால் பார்ப்பதுபோல் தெளிவாயிருப்பதையும், அது பிரியமாயிருப்பதையும் சொல்லுகின்றன. ஆகையால் உபாயமான ஜ்ஞானம், நடுவில்வேறு எண்ணமில்லாமல் ஆவிருத்தி பண்ணப்பட்டதும் கண்ணால் பார்ப்பதுபோல் தெளிவானதும் மிகவும் பிரியமானதுமான ஜ்ஞானம்.

(6) கர்மங்களால் வேதனத்துக்கு ப்ரயோஜனமில்லையென்றும் அவைகள் அதுக்கு விருத்தங்கள் என்றும் அத்வைதிசொன்னது கூடாது. கர்மங்களை வேதனத்துக்கு அங்கங்களாக * "தமேதம் வேதாநுவசநேந" என்கிற வாக்யம் சொல்லுகிறது. பகவானுடைய ஆராதனமாக நினைத்து அவைகளைச் செய்வதால் பகவானுடைய ப்ரஸாதமுண்டாகி அதனால் உபாஸகனுக்கு ஒவ்வொரு நாளும் உண்டாகக்கூடிய ரஜஸ்ஸு தமஸ்ஸு என்கிற குணங்கள் அடங்கி ஸத்துவகுணம் மேலிடுகிறது. அதனால் உபாஸநம் வளர்கிறது. ஆகையால் அவைகள் வேதனத்துக்கு விருத்தங்கள் அன்று; அநுகூலங்களே.

(7) உத்கீதத்தின் உபாஸநம் ப்ரம்மகாண்டத்தில் சொல்லப்படுகிறபடியால் உத்கீதத்தை அறியவேண்டியது. அதற்காக கர்மவிசாரம் வேண்டியது என்று ஒருவன் ஆக்ஷேபிக்க, அத்

---

* தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந தபஸாऽநாசகேந. (ப்ரு—6-4-22) இதன் பொருள்-- ப்ராம்மணர்கள் கீழ்வாக்யத்தில் சொல்லப்பட்ட ப்ரம்மத்தை, வேதத்தை அடிக்கடி படிப்பதாலும், யஜ்ஞத்தாலும், தானத்தாலும், ப்ராணதாரணத்துக்கு மட்டும் வேண்டிய ஆஹாரத்தைச் சாப்பிடுவதாகியதபஸினாலும், வேதநத்தைச்செய்யவிரும்புகிறார்கள் என்பது. இங்கே மூன்றாவது விபக்தி ச்ருதி. அதினால் சொன்னவைகள் வேதநத்துக்கு அங்கங்கள் என்பது காட்டப்படுகிறது. அவைகள் வேதநத்தின் ஆசைக்கு அங்கங்கள் அல்ல. அச்வேந ஜிகமிஷதி (குதிரையால் போகவிரும்புகிறான்.) 'அஸிநா ஜிகாம்ஸதி' (கத்தியினால் கொல்ல விரும்புகிறான் என்கிற இடங்களில் குதிரை கமநத்துக்கும், கத்தி ஹநநத்துக்கும் ஸாதனங்கள்; அதுபோல இங்கே சொன்னவைகளும் வேதநத்துக்கு ஸாதனங்கள். இது ஸ்வரஸமாய்க் கிடைக்கும் அர்த்தம். இதற்குப்பாதம் சொல்லமுடியாது.

வைதி அந்த உபாஸநத்துக்கும் ப்ரம்மவிசாரத்துக்கும் ஸாக்ஷாத் ஸம்பந்தமில்லை என்று சொல்லுகிறான். இதுவும் ஸரியன்று. எந்த யஜ்ஞத்தில் உத்கீதத்தின் உபாஸநம் செய்யப்படுகிறதோ அந்த யஜ்ஞத்தின் பலன் கிடைப்பதற்கு விக்னங்கள் இருந்தால் போய்விடுகின்றன. யஜ்ஞம் உபாஸநத்துக்கு அங்கம். அதற்கு உபாஸநத்தின் பலனைத்தவிர வேறு பலன்கள் இல்லை. ஆகையால், உபாஸநத்துக்கு அங்கமான யஜ்ஞத்தைச்செய்கையில் உத்கிதோபாஸநம் செய்யப்பட்டால், அங்கியான உபாஸநம் வீர்யமுள்ளதாக ஆகும். அதின்பலன் தடைகள் இல்லாமல் கிடைக்கும். உபாஸநத்துக்கு ப்ரதிபந்தகங்கள் உண்டாகக்கூடும் என்று மூன்றுவது அத்தியாயம் நாலாவது பாதம் கடைசி அதிகரணத்தால் காட்டப்படுகிறது. மேலும், இந்த உபாஸநத்தில் உத்கீதத்தை ப்ரம்மமாக உபாஸிக்கவேண்டியது. ப்ரம்மம் இன்னது என்பதை ப்ரம்ம விசாரத்தாலேதான் அறியலாம். இந்த உத்கீதோபாஸநத்தைக் கர்மமும் தேடுகிறது. உபாஸநமும் தேடுகிறது. இப்படி ப்ரம்மோபாஸநத்துக்கு அது அங்கமாகிறபடியால் அதின் விசாரத்தை பிரம்மமீமாம்ஸையிலேயே சேர்க்கவேண்டியது. உபாஸநத்துக்கு வேண்டிய ப்ரம்மஜ்ஞானம் ப்ரம்மவிசாரத்தாலேயே ஏற்படும். இந்த இரண்டு காரணங்களாலே * உத்கிதோபாஸநத்தின் விசாரத்தை ப்ரம்மகாண்டத்திலேயே செய்யவேண்டியது. (9)

அவ:— கர்மமீமாம்ஸையும் ப்ரம்மமீமாம்ஸையும் ஒரு சாஸ்த்ரம் என்று வைத்துக்கொண்டு, அவைகளின் விசாரங்களை இன்னவரிசையாகச் செய்யவேண்டியது என்பது கீழ் மூன்று சுலோகங்களால் நிரூபிக்கப்பட்டது. அவைகள் ஒரேசாஸ்த்ரம் அன்று. என்று சிலர் ஆக்ஷேபிக்கிறார்கள் என்றும், அந்த ஆக்ஷேபங்கள் ஸரியல்ல என்றும் சொல்லுகிறார்:—

ஶ்ரேயாம்ஸாயா: ஸ்வாங்க்ய ஸதிவந ஜக்ஞஷ்வ பேதாஷ்வக
வ்ரம் ஷிஷ்டாஸ்ந்யே க்ஷேதாஷீவிப்ரேயாய்யே்ஷிதஷ
திஷ்டஶாஹ்யஸேவ்யஷ்டிஷீ: । வ்ஸாய்யாயாய்யாயகா

* உத்கீதம் என்பது ஐந்து பாகங்களுள்ள ஸாமங்களின் இரண்டாவது பாகம். அதை ப்ரணவபூர்வமாக உத்காதா என்கிற ருத்விக் செய்யவேண்டியது. அப்போது ப்ராணவத்தை ப்ரம்மமாக த்யானம் பண்ணவேண்டியது. இதுதான் உத்கீதோபாஸநம்.

कृत्स्ने स्वाध्यायविधिप्रेरणात् तावच्छास्त्रं कृत्स्ना-
वाप्तव्युत्पत्तौ किमिति कृतयः कृत्स्नविदां न कु-
र्युः ॥ ॥१०॥

மீமாம்ஸாசாஸ்த்ரத்தில் தலைபோன உடல்போலிருக்கிற ஒரு பாகத்தைச் சிலரும், உடலில்லாத தலைபோலிருக்கிற மற்றொரு பாகத்தைச் சிலரும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குள்ளே இருக்கும் விரோதத்தால் அவர்கள் புத்தி கலங்கியிருக்கிறது. இவர்களும் வேதத்தை ஒப்புக்கொள்ளாத பாஹ்யர்களைப்போலிருக்கிறார்கள். ப்ரமிக்கிற அவர்களால் என்ன ப்ரயோஜனம்? ஸ்வாத்யாயம் என்று சொல்லப்பட்ட வேதத்தை முழுவதும் அத்யயநம் பண்ணவேண்டியது. இந்த விஷயத்தில் அத்யயநம் பண்ணுகிற சிஷ்யனுக்கு விதியா? அத்யயநம் செய்விக்கும் ஆசார்யனுக்கு விதியா? என்கிற விசாரம் நிற்கட்டும். வேதம் முழுவதிலும் ஆபாதப்ரதீதி உண்டாகிறது. தெரிந்தவர்கள் முழு விசாரத்தையும் ஏன் செய்யமாட்டார்கள்.

குறிப்பு— (1) முதலில் சொல்லப்பட்டவர்கள் கர்மமீமாம்ஸகர்கள். அவர்கள் ப்ரம்மவிசாரத்தைத் தள்ளிவிட்டு கர்மவிசாரத்தையே எடுத்துக்கொள்ளுகிறார்கள். பின்னால் சொல்லப்பட்டவர்கள் அத்வைதிகள். அவர்கள் கர்மவிசாரம் செய்யவேண்டியதில்லையென்று சொல்லி ப்ரம்மவிசாரத்தையே எடுத்துக்கொள்ளுகிறார்கள். வேதத்தின் விசாரமான மீமாம்ஸைக்கு ப்ரம்மவிசாரம் தலைபோலவும், கர்மவிசாரம் உடல்போலவுமுள்ளது. ஆகையால் கர்மமீமாம்ஸகர்கள் கபந்தமீமாம்ஸகர்கள். அத்வைதிகள் ராஹு மீமாம்ஸகர்கள்.

(2) "स्वाध्यायोऽध्येतव्यः" (ஸ்வாத்யாயத்தை அத்யயநம் பண்ணவேண்டியது) என்பதைக்கொண்டு அத்யயந விதி சிஷ்யனுக்கு என்று பாட்டர்கள் என்கிற மீமாம்ஸகர்களும், "अष्टवर्षं ब्राह्मणमुपनयीत। तमध्यापयेत्" (எட்டு வயதுள்ள ப்ராம்மணனுக்கு உபநயனம் செய்து, அத்யயநம் பண்ணிவைக்கவேண்டியது.) என்பதைக்கொண்டு அத்யாபந விதி ஆசார்யனுக்கு என்று ப்ராபாகரர்கள் என்கிற மீமாம்

ஸகர்களும் சண்டைபோடுகிறார்கள். அந்தச்சண்டையை நாம் இப்போது கவனிக்கவேண்டியதில்லை. எப்படியானாலும் சிஷ்யன் ஸ்வாத்யாயம் முழுவதையும் அத்யயநம் பண்ணவேண்டும். முழுவதிலும் ஆபாதப்ரதீதி உண்டாகிறது. முழுவதிலும் பலனைப் பற்றி ஸந்தேஹமுண்டாகிறது. ஆகையால், அத்யயநம் பண்ணினவன் இரண்டு விசாரங்களையும் தானே செய்வன். ஆகையால் கீழே ஸ்தாபிக்கப்பட்ட வரிசைப்படி விசாரம் செய்யப்படவேண்டும்.

(3) அத்யயநவிஷயமாக ச்ருதப்ரகாசிகையில் சொல்லப்பட்ட விஷயங்கள் முதல் அநுபந்தத்தில் சுருக்கிக் காட்டப்படும். (10)

அவ:— இரண்டு விசாரசாஸ்த்ரங்களும் ஒரே சாஸ்த்ரம் என்று காட்டி, இதை ஆக்ஷேபிக்கிற வாதி சொல்லும் காரணங்களைத் தூஷிக்கிறார்—

[illegible] ||கக||

மீமாம்ஸை, முழு வேதத்தினுடைய அர்த்தவிஷயமான விசாரம். அதுக்கு வேண்டிய ப்ரயத்நம் ஒரேவிதமாயிருக்கிறது. அதனால் ஸித்திப்பது அதின் அர்த்தத்தை உள்ளபடி அறிவது. இதுவும் ஒரேமாதிரிதான். இந்த உபகாரத்தாலே மீமாம்ஸை என்பது ஒரே வித்யாஸ்தாநம். இப்படி ஏற்பட்டபிறகு இந்த மீமாம்ஸைகளுள் எந்த பாகம் முதலில், எந்த பாகம் பின்னால் என்கிற க்ரமத்தை ஏற்படுத்தும்படி இந்த இரண்டு மீமாம்ஸைகளுக்குப் பரஸ்பரம் * ஆகாங்க்ஷை (ஸங்கதிவிசேஷம்) இருப்பதால், இவை இரண்டும் சேர்ந்து ஒரே ப்ரபந்தம். இப்படியானால் விஷய பேதம் ப்ரயோஜந பேதம் முதலான பேதங்கள் இருக்கின்றனவே, அப்படியிருக்கலாமோ என்றால், அத்யாயங்களுக்குள்ளே இவ்விதமான அவாந்தர பேதங்கள் இருந்தபோதிலும், அவைகள் அத்யாயங்களை எப்படி வேறு சாஸ்த்ரங்களாகப்பிரிக்க

* ஸங்கதி விசேஷம் - ஒன்றுக்கொன்று ஸம்பந்தம்.

வில்லையோ, அப்படியே இங்கே ஏற்படும் பேதங்களும் மீமாம் ஸைகளை வெவ்வேறு சாஸ்திரங்களாகச் செய்யமாட்டா. கர்த் தாக்களின் பேதமும், விஷயபேதத்தையும் ப்ரயோஜன பேதத் தையும்போலவே சாஸ்திரத்தை வேறுபடுத்தாது. அர்த்தத்தில் விரோதமானது, கலி பலத்தால் கலங்கினவர்களால் கல்பிக்கப் பட்டது.

குறிப்பு— (1) ஒருவன் வேதம் முழுவதையும் அத்யயனம் செய்து அக்ஷரராசியை க்ரஹித்துப் பிறகு அதன் அர்த் தத்தை விசாரிக்க ப்ரயத்னப்படுகிறுன். பூர்வ மீமாம்ஸை வேதத்தில் பூர்வபாகத்தின் அர்த்தத்தையும், உத்தரமீமாம்ஸை ப்ரம்மபாகத்தின் அர்த்தத்தையும் விசாரித்து முழு வேதத் தின் அர்த்தத்தை ஸம்சயம் விபர்யயமில்லாமல் தீர்மானித் துக்கொடுத்து உபகாரம் செய்கின்றன. அதிகாரியினுடைய ப்ரயத்னமும், இருமீமாம்ஸைகளாலும் ஏற்படும் உபகாரமும் ஒரேவிதமாயிருக்கிறது. ஆகைபால் இரண்டையும் சேர்த்து "மீமாம்ஸா" என்று ஒரே வித்யாஸ்தானமாகப் பேசுகிறுர் கள். இப்படியே பாரதவசனமும் இருக்கிறது— "அங்கானி வேதாஸ்சத்வாரோ மீமாம்ஸா ந்யாயவிஸ்தர: | புராணம் தர்மசாஸ்த்ரம் ச வித்யா ஹ்யேதாஸ்சதுர்தச". இதில் மீமாம் ஸை என்று ஒரே சொல்லாலே கர்மவிசாரமும் ப்ரம்மவிசாரமும் சொல்லப்படுகின்றன. இவைகளை ஒரே வித்யாஸ்தானம் என்று ஒப்புக்கொள்ளாவிட்டால் வித்யாஸ்தாநங்கள் பதினன்கு என்று கணக்குப் பண்ணினது விரோதிக்கும்.

(2) ப்ரம்மவிசாரம், கர்மகாண்டத்தில் விசாரித்துச் சொல் லப்பட்ட நியாயங்களையும் உபமானங்களையும் தேடுகிறது. இந்த ஆகாங்க்ஷையினுல் கர்மவிசாரம் முன்னுலும் ப்ரம்மவிசாரம் பின் னுலும் வரவேண்டியது என்றும் அவையிரண்டும் ஒரே ப்ரபந் தம் என்றும் ஏற்படுகிறது.

(3) "இரண்டும் ஒரே ப்ரபந்தமானுல் விஷயபேதமும் ப்ர யோஜநபேதமும் எப்படியிருக்கக்கூடும் ? கர்மவிசாரத்திற்கு விஷயம் கர்மங்கள், ப்ரயோஜநம் அவைகளில் வெறுப்பு உண்டா வது. ப்ரம்மவிசாரத்தின் விஷயம் ப்ரம்மம்; ப்ரயோஜனம் அதை அடைய ஆசையுண்டாவது" என்று வாதி கேட்கிறுன்.

அவனுக்குப் பதில்— கர்மகாண்டத்தில் முதல் அத்யாயத்தின் விஷயம் ப்ரமாணங்கள்; இரண்டாவது அத்தியாயத்தின் விஷயம் கர்மங்கள். இவைகளின் ப்ரயோஜனங்கள்— வேதத்துக்கு விருத்தமான ஸ்மிருதியைத் தள்ளுவதும், இரண்டு இடத்தில் சொல்லப்படும் கர்மம் ஒரே கர்மமானால் ஓர் இடத்தில் சொன்ன அங்கங்களை அவைகளைச் சொல்லாத மற்ற இடத்துக்குக்கொண்டு போவதும். இப்படி பேதங்கள் இருந்தபோதிலும் இரண்டு அத்யாயங்களும் எப்படி இரண்டு க்ரந்தங்கள் ஆகவில்லையோ; அப்படியே இங்கேயும் சொன்ன பேதங்களாலே மீமாம்ஸை இரண்டு தனி க்ரந்தங்களாக ஆகாது.

(4) "கர்த்ருபேதம் இருக்கிறதே; கர்மமீமாம்ஸையைச் செய்தவர் ஜைமினி; ப்ரஹ்மமீமாம்ஸையைச் செய்தவர் பாதராயணர். அவைகள் எப்படி ஒரே க்ரந்தமாக இருக்கலாம்?" என்று மறுபடியும் வாதி கேட்கிறான். இதற்குப் பதில்:— ஒரு கார்யம் அநேகம் பேர்களால் செய்யப்படுகிறது. பெரிய கோபுரத்தைப் பல பேர்கள் சேர்ந்து செய்து முடிக்கிறார்கள். ரதத்தைப் பலபேர் செய்கிறார்கள். அவைகள் வெவ்வேறு கோபுரங்களாகவும், வெவ்வேறு ரதங்களாகவும் ஆகவில்லை. ஆபஸ்தம்பஸூத்ரத்திற்கு தூர்த்தஸ்வாமி, கபர்த்தி என்கிற இருவர்கள் வ்யாக்யாநம் செய்திருக்கிறார்கள். அப்படியே பாணிநி வ்யாகரணஸூத்ரங்களுக்கு வாமநன் ஜயாதித்யன் என்கிற இருவர்கள் காசிகாவ்ருத்தி என்கிற வ்ருத்தியைச் செய்திருக்கிறார்கள். இந்த வ்யாக்யாநங்கள் வெவ்வேறு க்ரந்தங்களாக ஆகவில்லை. வாதியும், ஜைமினியால் செய்யப்பட்ட பன்னிரண்டு அத்யாயங்களையும், காசக்ருத்ஸ்நர் செய்த மேல் நான்கு அத்யாயங்களையும் ஒரே க்ரந்தமாக எண்ணி அதைக் கர்மகாண்டம் என்று சொல்லுகிறான். ஆகையால் கீழ்க் குறிப்பில் சொன்ன ஆக்ஷேபத்தைப் போல் இதுவும் தள்ளத் தகுந்தது. (11)

அவ:— கீழ் சுலோகத்தில் அர்த்தவிரோதம் இரண்டு மீமாம்ஸைகளுக்கும் இல்லை, அது அறியாதவர்களால் கல்பிக்கப்பட்டது என்று சொன்னார். அவைகளில் ஒரு விரோதத்தைக் காட்டிப் பரிஹரிக்கிறார்:—

தத்தத்³வைஶிஷ்ட்யஹேத்வாத்³யகு³ணிவிஶிஷ்டா தே³வதா வசனபே⁴த³ஸம்ஜ்ஞாபே⁴தை³ஸ்தாத்³ருஶவிருத்³த⁴தாயி தயஸ்து வ்யூஹஜ்ஞ: । உத்³தே³ஶ்யாகாரபே⁴தா³த் ஸ்தை²ர்யமிஹ ஹவிஷாம் ஶக்திஹீனே பூர்வயோர்மம தௌ³ர்ப³ல்யம் க்வசிதே³வ த்³ரவ்யாங்கீ³காரதயா த்³ரவ்யதோ தே³வதாயா: ॥ ॥ ௧௨ ॥

தேவதைகளுக்குச் சொல்லியிருக்கும் சில விசேஷணங்களாலும், அந்த தேவதையை வெவ்வேறு சொற்களாலே சொல்லுவதாலும் அது ஒரு தேவதையன்று, தேவதைகள் வெவ்வேறு என்று பூர்வமீமாம்ஸையில் சொல்லப்படுகிறது. இதனால் எப்படி வேதத்தில் சொல்லப்பட்ட தேவதை இல்லையென்று சொல்லலாம். வெவ்வேறு விசேஷணங்களைச் சேர்த்தும், வெவ்வேறு பெயர்களைச் சொல்லியும், ஹவிஸைத் தேவதைகளுக்குக் கொடுக்கும்போது அந்தந்த தேவதைகளுக்குள்ள அந்தந்த ஆகாரங்கள் உத்தேசிக்கப்படுகின்றன. தேவதைகளுக்கு வெவ்வேறு ஆகாரங்கள் ஸித்திக்கின்றன. ஆனால் தேவதையின் ஸ்வரூபம் வேறாக ஆகவில்லை. மேலும், த்ரவ்யத்தைக்காட்டிலும் தேவதை துர்பலம் என்று பூர்வமீமாம்ஸையில் சொல்லப்படுகிறது. த்ரவ்யம் ப்ரத்யக்ஷத்தால் அறியப்படுவதாலும், தேவதை சப்தத்தாலே அறியப்படுவதாலும் தேவதையின் அறிவு தாமதித்துவருகிறது. ஆகையால்தான் அது துர்பலம்.

குறிப்பு— (1) இந்த்ரதேவதைக்கு ஹவிஸுக்களைக் கொடுக்கும்போது, மந்திரங்களில் இந்த்³ராய ராஜ்ஞே என்றும் இந்த்³ராயாதி⁴ராஜாய என்றும், இந்த்³ராய, மஹேந்த்³ராய என்றும் சொல்லப்படுகிறது. ராஜ்ஞே அதிராஜாய என்பவைகள் விசேஷணங்கள். இந்த்³ராய, மஹேந்த்³ராய, என்பவைகள் வெவ்வேறு சொற்கள். இந்த பேதத்தைக்கொண்டு சிலர் தேவதைக்கு அநேக ஆகாரங்கள் சொல்லியிருப்பதால் இன்னதுதான் ஆகாரம் என்று அறியமுடியாது; ஆகையால் தேவதையில்லையென்று ஜைமினியின் அபிப்ராயம் என்று தீர்மானம் செய்துகொண்டு, பாதராயணர் தேவதைகளினிருப்பை ஒப்புக்கொள்ளுவதால் அர்த்த விரோதம் வருகிறது என்று சொல்லுகிறார்கள். தேவதைகளின் இருப்பை வேதமே சொல்லும்போது அது எப்படியில்லையென்று சொல்லலாம் என்று ஆசார்யன் அவர்கள் சொல்லுவதைத் தூஷிக்கிறார்.

(2) பூர்வ மீமாம்ஸையின் கருத்தை ச்லோகத்தின் மூன்றுவது பாதத்தால் காட்டுகிறுர். தேவதையைச் சொல்லுகிற சொல்லுடன் விசேஷணத்தைச் சேர்த்தோ, அல்லது அந்த தேவதையை வேறு சொல்லாலே சொல்லியோ, ஒரு ஹவிஸைக்கொடுக்கும்போது, அந்த தேவதையின் ஆகாரம் வேறு. ஒரு ராஜா படுத்திருக்கும்போது ஒருவன் வீசுகிறுன்; சாப்பிடும்போது வேறெருவன் பரிமாறுகிறுன். இந்த வியாபாரங்களின் பலனை அவன் அநுபவிக்கிறுன். அந்தந்த அவஸ்தையில் அவன் ஆகாரம் வேறு. ஆனுல் அவன் வேறுபடவில்லை. அப்படியே தேவதையும், வெவ்வேறு ஆகாரமுள்ளதாய் அந்தந்த ஆகாரங்களில் தனக்குக் கொடுக்கப்பட்ட ஹவிஸைப் பெற்றுக்கொண்டு ஸந்தோஷப்படுகிறது. ஆனுல் தேவதை ஒன்றுதான்.

(3) ஜைமினி தேவதையை ஒப்புக்கொள்ளவில்லை என்பதற்கு த்ரவ்யத்தைக்காட்டிலும் தேவதை துர்பலம் என்று சொன்னதைக் காரணமாகச் சொல்லுகிறுர்கள். இது அவர் கருத்தை அறியாது சொன்னபடி. தேவதை என்று ஒன்று இல்லாதபோது, அதை எப்படி துர்பலம் என்று சொல்லலாம். ஜைமினியின் கருத்து என்னவென்றுல், த்ரவ்யம் கையிலிருப்பதால் ப்ரத்யக்ஷத்தாலே அறியப்படுகிறது. அதற்கு உத்தேச்யமான தேவதையை வேதமாகிய சப்த ப்ரமாணத்தாலே அறியவேண்டியது. த்ரவ்யத்தின் அறிவு உடனேயும், தேவதையின் அறிவு தாமதித்தும் வருகின்றன. இதனுல்தான் த்ரவ்யம் ப்ரபலம் என்று சொல்லுகிறது.

(4) இந்த ப்ராபல்ய தௌர்பல்ய விசாரத்திற்கு எங்கே இடம் என்றுல், ஒரு விக்ருதி யாகத்திற்கு எந்த ப்ரக்ருதி யாகத்திலிருந்து அங்கங்களை எடுத்துக்கொள்ளுவது என்று விசாரிக்கையில், த்ரவ்யஸாம்யத்தால் ஒரு யாகமும், தேவதாஸாம்யத்தால் வேறுயாகமும் சில இடங்களில் ப்ரக்ருதி யாகமாக ஏற்படுகின்றன. அப்போது தேவதை துர்பலமானதால், அதின் ஸாம்யத்தினுல் ஏற்படும் ப்ரகிருதி யாகத்தை விட்டுவிடவேண்டியது என்று பூர்வமீமாம்ஸையில் சொல்லப்படுகிறது. இது தான், வியாக்யானம் பண்ணின பின்புள்ளார் ப்ரமிப்பதற்குக் காரணம் (12)

அவ— கீழ் ச்லோகத்தில், அர்த்தத்தில் விரோதமிருக்கிறது என்று எண்ணுவதைத் தூஷித்தார்; இப்பொழுது உண்மையிலிருக்கும் சில விரோதங்களுக்குப்பரிஹாரம்சொல்லுகிருர்—

ஜைமிந்யுக்தம் விருத்தம் யதிஹ பஹுவிதம் தர்ஶி-
தம் ஸூத்ரகாரைஸ்ஸ்வார்தே த்வைகஶாஸ்த்ர்யம் ஹந்த க்ரு-
தமிதி ந ப்ரஹ்மஸம்வாதஶாஸ்த்ராத் । தஸ்மாத் தத்வ-
ஸைவைஷ விப்ரதிபத்திஃ காண்டவத் காண்டயோஃ
ஸ்யாத் பாஹ்யக்ஷேபார்த்தம் ஶ்ருத்யாஶயவதநகவத்
ப்ராஜ்ஞஶாஸ்த்ரீவிதீஶைஃ ॥ ||௧௩||

ப்ரம்மஸூத்ரம் செய்த பாதராயணர், ஜைமிநி சொல்லுவதை அநுவாதம் பண்ணி, அது தம் அபிப்ராயத்துக்கு விருத்தம் என்று பஹுவிதமாகக் காட்டியிருக்கிருர். ஆகையால் இரண்டு காண்டங்களும் ஒரே சாஸ்த்ரம் என்று சொல்லுவது ஸாஹஸமான காரியம் என்று ப்ரதிவாதி சொல்லுகிருன். இது அப்படியன்று. பாதராயணர், ப்ரம்மவிஷயத்தில் தாம் சொல்லுவதை ஜைமினியும் ஒப்புக்கொண்டிருக்கிருர் என்று சொல்லி, அதை உறுதிப்படுத்துகிருர். வேதத்தை ஒப்புக்கொள்ளாதவர்களைத் தூஷிப்பதற்காக ஜைமினி உண்மையான அர்த்தத்தை மனதில் வைத்துக்கொண்டு, அதை வெளிக்காட்டாமல், வேறுவிதமாய்ச்சொல்லியிருக்கிருர். ஆகையால் அவர் அபிப்ராயம், அவர் வாக்யத்தில் தோன்றுகிறபடியன்று. அவர்சொன்னதைக்கொண்டு உண்டாகும் ப்ரமம் இதனல் போகும். ஆகையால், ப்ரம்மகாண்டத்திலோ கர்மகாண்டத்திலோ தோன்றும் விரோதங்களுக்கு எப்படி இந்த வழியாய் பரிஹாரம் எற்படுகிறதோ, அப்படியே இரண்டு காண்டங்களுக்கும் விரோதங்கள் இருந்தால், அவைகளுக்கும் பரிஹாரம் நமக்கு ஏற்படுகிறது.

குறிப்பு— (1) ஜைமிநி சொன்னதைத் தம் அபிப்பிராயத்துக்கு விருத்தமாக பாதராயணர் ப்ரம்மஸூத்ரத்தில் சொன்ன இடங்கள்:—

1—பலாதிகரணம்—3—2—8. 3-2-37

ஜைமினி அபிப்ராயம் — பலன்களைக் கொடுக்கிறவைகள் கர்மங்கள்.

பாதராயணர் அபிப்ராயம்—பலனைக்கொடுக்கிறவன் பகவான்.

(2) புருஷார்த்தாதிகரணம். 3—4—1.

ஜைமினி — கர்மத்தால் புருஷார்த்தம். 3 4 2

பாத — வித்யையால். 3-4-8

(3) ஷ்டி.

ஜைமினி — க்ருஹஸ்தாச்ரமம் தவிர, வேறு ஆச்ரமங்கள் இல்லை. 3-4-18

பாத — உண்டு. 3-4-19

(4) மத்வதிகரணம்— 1—3—8.

ஜைமினி — மதுவித்யையில் சில தேவர்களுக்கு அதிகாரமில்லை.

பாத — உண்டு.

(2) பாதராயணர் அபிப்ராயத்தை ஜைமினி ஒப்புக்கொண்டது கார்யாதிகரணத்தில் (4–3–5) சொல்லப்படுகிறது. இதனால் இருவருக்கும் அபிப்ராயபேதமில்லையென்று காட்டப்படுகிறது. ஆகையால் கீழே காட்டிய விரோதங்களுக்கு ஜைமினியின் அபிப்ராயம் வேறு என்று பரிஹாரம் பண்ணவேண்டியது.

(3) பௌத்தர்கள், வேதம் ஒருவனால் செய்யப்பட்டது என்றும், ஆகையால் அதில் ப்ரமம்முதலான தோஷங்கள் இருக்குமாதலால் அது ப்ரமாணம் அன்று என்றும், அதை நம்பி அதில் சொல்லும் கர்மங்களைச் செய்வதில் ப்ரயோஜனமில்லையென்றும், வேதத்தில் தேவதைகள் இருப்பதாகச்சொல்லுவதாலே வேண்டுமானால், அவர்களையே உபாஸிக்கலாம் என்றும் சொல்லி, ஜனங்களுடைய மனதைக் கலக்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களைத் தூஷித்து ஜைமினி வேதம் ப்ரமாணம் என்றும்,கர்மங்களே பலன்களைக்கொடுக்கும் என்றும், அவைகளாலேயே புருஷார்த்தம் கிடைக்கும் என்றும், அவைகளைச்செய்ய இடங்கொடுக்கும் க்ருஹஸ்தாச்ரமமே ஆச்ரமம்,வேறு ஆச்ரமமே இல்லையென்றும் உபதேசம் செய்தார். உண்மையில் இவைகள் அவர் அபிப்ராயமன்று. ஏன் என்றால், ஜைமினியே, நைஷ்டிக ப்ரம்மசாரி ஒரு ஸ்திரீயுடன் சேர்ந்து இந்திரியம் நழுவினால், அதற்கு ப்ராயச்சித்தமாக ஒரு கழுதையைப் பசுவாக வைத்துக்கொண்டு ஒரு க்ரதுவைச் செய்யவேண்டியது என்று ஆறுவது அத்யாயத்தில் காட்டியிருக்கிறார். க்ருஹஸ்தாச்ரமம் தவிர வேறு

ஆச்ரமமில்லையென்று அவர் அபிப்ராயமானால், இதை எப்படிச் சொல்லக்கூடும்? ஆகையால் அபிப்ராயம் சொன்னபடியன்று.

(4) மதுவித்யையில் காட்டும் விரோதமானது மிகவும் அல்பமானது; ப்ரதாநம் அன்று. இதைக்கொண்டு இரண்டு மீமாம்ஸைகளும் ஒரே க்ரந்தமாயிருப்பதற்கு விரோதம் இல்லை. விரோதத்திற்குப் பரிஹாரமும் சொல்லலாம். கீழ்க் குறிப்பில் சொன்னபடி கர்மங்களைக்கொண்டு தேவதைகளை ஆராதிக்கவேண்டும், தேவதைகளைச் சொல்லுகிற பதங்கள் பரமாத்மாவரையில் செல்லும் என்பதைச் சொன்னால், தேவதைகளின் ஆராதநத்தில் விச்வாஸம் கொஞ்சம் குறையும் என்று ஜைமிநி அதை வெளியிடவில்லை. ஆகையால், வஸுக்கள் முதலானவர்களுக்கு மதுவித்யையில்அதிகாரமில்லைஎன்று அவர் ஒப்புக்கொள்ளவேண்டியதாயிருந்தது. இது எப்படியானாலும், தேவதைகளுக்கு ஒரு வித்யையில் அதிகாரமில்லை என்று சொல்வதாலேயே, தேவதைகள் இருக்கிறார்கள் என்பது ஜைமினி ஒப்புக்கொண்டதாக ஏற்படுகிறது.

அவ— இரண்டு காண்டங்களுக்கும் இருக்கும் விரோதங்களுக்குப் பரிஹாரத்தைச் சொன்னார். இப்பொழுது, முன் காண்டத்தில் சொன்னதையே பின் காண்டம் சொல்லுகிறது. இது எப்படிக்கூடும்? என்கிற ஆக்ஷேபத்துக்குப் பதில் சொல்லுகிறார்:—

𑌆𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌸𑌾𑌧𑌨𑍀𑌯𑌾𑌃 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑌿𑌹 𑌨𑌯𑌾𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵
𑌕𑌾𑌣𑍍𑌡𑌪𑍍𑌰𑌣𑍀𑌤𑌾𑌃 𑌕𑍍𑌵𑌾𑌪𑌿 𑌦𑍍𑌰𑌾𑌢𑌨𑍀𑌯𑌾𑌃 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑌪𑌵𑌦𑌨𑌂
𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑍌𑌤𑍍𑌸𑌰𑍍𑌗𑌿𑌕𑌸𑍍𑌯 । 𑌇𑌤𑍍𑌥𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑌿𑌤𑌮𑍍
𑌇𑌤𑌿 𑌸𑌹𑌿𑌤𑌾𑌂 𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌯𑌦𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌕𑍍𑌯
𑌸𑍌𑌨𑌾𑌤𑍍𑌕𑍍𑌯𑌪𑍍𑌰𑌹𑍍𑌯𑌤𑌿𑌵𑌿𑌹𑍍𑌯𑌤𑌿𑌃 𑌸𑌾𑌧𑌯𑌾𑌮𑍇𑌨𑌵𑌿
𑌹𑌾𑌵𑍍𑌯𑌾 ॥ ॥ கசு ॥

பூர்வகாண்டத்தில் தீர்மானிக்கப்பட்ட சில நியாயங்களுக்குப் பிறர் சொல்லக்கூடும் ஆக்ஷேபங்களைக்காட்டி, அவைகளுக்கு ஸமாதானம் சொல்லி அந்த நியாயங்கள் த்ருடப்படுத்தப்படுகின்றன. சில புது நியாயங்கள் விசாரம் செய்து காட்டப்படுகின்றன. சில இடங்களில் முன் காண்டத்தில் சொன்ன பொதுவான நியாயத்துக்கு விலக்குக் காட்டப்படுகிறது. இப்படி எல்லா

விஷயங்களிலும் விசாரம் செய்யவேண்டிய ப்ரகாரம். ஆகையால் ஒரு பக்ஷத்தில் அபிமானத்தைவிட்டு மத்யஸ்தர்களாயிருந்து விசாரம் செய்து, இரண்டு காண்டங்களும் ஒரே க்ரந்தமாயிருக்கிற விஷயத்தில் ஏற்படும் புநருக்தி முதலான விரோதங்களுக்குப் பரிஹாரங்களைக் கவனத்துடன் செய்யவேண்டும்.

குறிப்பு— (1) ஆக்ஷேபித்து ஸ்தாபிக்கப்படுகிற முன் காண்டத்தின் ந்யாயங்கள் மூன்று. அவைகளாவன— (1) வேதத்திற்கு விருத்தமான ஸ்ம்ருதி ப்ரமாணம் அன்று. (2) சூத்ரனுக்கு யாகங்களைச் செய்ய அதிகாரமில்லை. (3) இரண்டு இடங்களில் சொன்ன கர்மங்கள் விதி முதலானவைகள் ஒன்றாயிருந்தால் ஒரே கர்மம் என்பனவாம். இவைகளை ஸ்தாபிக்கும் இடங்கள், ஸ்ம்ருத்யதிகரணம், (2-1-1), யோகப்ரத்யுக்த்யதிகரணம் (2-1-2), அபசூத்ராதிகரணம், (1-3-9) பசுபத்யதிகரணம், (2-2-7), ஸர்வவேதாந்தப்ரத்யயாதிகரணம், (3-3-1) முன்பு தீர்மானிக்கப்பட்ட நியாயங்களைப் பற்றின ஆக்ஷேபங்களும் பரிஹாரங்களும் அங்கங்கே காட்டப்படும்.

(2) புநருக்தி என்கிற தோஷம் வராமலிருக்கட்டும். புதிதாய் ஒன்றையும் சொல்லாவிட்டால், ப்ரம்மகாண்டத்துக்கு என்ன ப்ரயோஜனம்? என்றால், இதிலும் சில நியாயங்கள் புதிதாய் காட்டப்படுகின்றன. அவைகளில் தத்க்ரது நியாயம் என்பது ஒன்று. *ஒரு புருஷன் இந்த உலகத்தில் எப்படி உபாஸிக்கிறவனாக இருக்கிறானோ, இங்கிருந்து போனபிறகு அப்படியேயாகிறான்- என்பது அந்த ந்யாயம். அதாவது—உபாஸிப்பதை எந்தக் குணமுள்ளதாக உபாஸிக்கிறானோ, அந்தக் குணங்கள் அவனுக்குக் கட்டாயம் வரும். பரமாத்மாவுக்குச் சரீரபூதமான ஜீவாத்மாவுக்கு அபஹதபாப்மத்வம் முதலான எட்டுக் குணங்கள் இருக்கின்றன. அந்தக்குணங்களுள்ளவனாகத் தன்னை உபாஸித்தால் கர்மத்தால் இப்போது மறைந்திருக்கும் தன்னுடைய அந்தக் குணங்கள் மோக்ஷம் அடையுங்காலத்தில் தோன்றும். இன்னும் ஒரு நியாயம் 77-வது சுலோகத்தில் காட்டப்படுகிறது. மூன்று

* யதாக்ரதுரஸ்மிந் லோகே புருஷோ பவதி ததேதஃ ப்ரேத்ய பவதி. (சாந்தோக்யம் 3-14-1)

வது நியாயம்— ஜீவனைச் சொல்லுகிற பதங்கள் பரமாத்மாவையே சொல்லுகின்றன என்பது. இது 'ஜ்யோதிர்தர்சநாத்' 'ஸ்வஷுப்த்யுத்க்ராந்த்யோர்பேதேந' ... என்கிற ஸூத்ரத்தில் காட்டப்படுகிறது.

(3) பொதுவான நியாயத்துக்கு விலக்கைக் காட்டுமிடம் ஸமந்வயாதிகரணம் (1-1-4). கர்மகாண்டத்தில் அர்த்தவாத வாக்யம் விதிவாக்யத்துடன் சேர்ந்து அதற்கு உதவி செய்து ப்ரமாணமாக ஆகிறது. தனியாகப் பிரமாணம் அன்று என்று தீர்மானிக்கப்பட்டது. இது பொதுவான நியாயம். "ப்ரம்மம் அளவில்லாத ஆநந்தம்" என்று சொல்லுகிற அர்த்தவாத வாக்யம் விதிவாக்யத்துடன் சேராவிட்டாலும் ப்ரமாணம் என்று பொதுவான நியாயத்துக்கு ப்ரம்மகாண்டத்தில் விலக்கு காட்டப்படுகிறது.

(4) கர்மகாண்டமும், ப்ரம்மகாண்டமும் ஒரே சாஸ்த்ரம் என்கிறவிஷயத்தில் ச்ருதப்ரகாசிகையில், வேறுஒரு ஆக்ஷேபமும் அதற்குப் பரிஹாரமும் சொல்லப்படுகின்றன. இரண்டும் ஒரு சாஸ்த்ரமானால், ஆரம்பத்தில், "அதாதோ வேதார்த்த ஜிஜ்ஞாஸா" என்று பொதுவான ப்ரதிஜ்ஞையிருக்கவேண்டும். அது இல்லை. என்று ஆக்ஷேபம். இதற்குப் பரிஹாரத்தை மூன்று விதமாய்ச்சொல்லலாம். (1)"அதாதோ ப்ரம்ஹஜிஜ்ஞாஸா" என்பதுதான் பொதுவான ப்ரதிஜ்ஞை. ப்ரம்மோபாஸநத்துக்குக் கர்மங்கள் அங்கங்கள் என்று ப்ரம்மகாண்டத்தில் மூன்றாவது அத்யாயம் நாலாவது பாதத்தில் சொல்லப்படுகிறது. அவைகளை அறிவதற்குக் கர்மவிசாரம் செய்யவேண்டியது. அதற்கு இடம் அந்த நாலாவது பாதம்தான். ஆனால், அதை வெகு விஸ்தாரமாகச் செய்யவேண்டியதாகையாலும், அதில் தீர்மானம் செய்யப்பட்ட நியாயங்கள் ப்ரம்மகாண்ட விசாரத்திற்கு வேண்டியிருப்பதாலும் அந்த விசாரத்தைத் தனியாக எடுத்து, பிரம்ம விசாரத்துக்கு முன்னாலே வைத்திருக்கிறது. இதற்கு உதாரணம் கௌதம நியாயஸூத்ரத்தில் பார்க்கலாம். (2) ஒவ்வொரு காண்டத்தின் ஆரம்பத்தில் அதற்கேயுள்ள ப்ரதிஜ்ஞை செய்யப்படுகிறது. இரண்டுக்கும் பொதுவான ப்ரதிஜ்ஞை அர்த்தாத் ஸித்திக்கிறது. இதற்கு உதாரணம் கர்மகாண்டத்திலேயே பார்க்கலாம். (3) "அதாதோ தர்மஜிஜ்ஞாஸா" என்

பதே பொதுவான ப்ரதிஜ்ஞை. தர்மம் என்பது வேதத்தைக் கொண்டே அறியவேண்டியதான ச்ரேயஸ்ஸுக்கு ஸாதனம். அந்த தர்மம் ஸித்தம் என்றும் ஸாத்யம் என்றும் இருவகைப் படும். கர்மம் ஸாத்யமான தர்மம். ப்ரம்மம் ஸித்தமான தர்மம். ஏனென்றால், அவனே பலனைக்கொடுக்கிறவன். '𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍' என்று பாரதத்தில்ப்ரயோகமுமிருக்கிறது. இதைப்பற்றி விஸ்தாரமாய் அறியவேண்டுமானல் ச்ருதப்ரகாசிகையையே ஸேவிக்கவேண்டியது. (14)

அவ— வ்ருத்தி க்ரந்தகாரருக்கும் பட்டருக்கும் இருக்கும் விரோதத்தைக்காட்டி, அதற்குப் பரிஹாரத்தைச் சொல்லு கிறார்:—

𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑍃𑌦𑍍𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍇 𑌜𑍈𑌮𑌿𑌨𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌤𑍍𑌵𑌮𑍁𑌦𑌿𑌤𑌂 𑌷𑍋𑌡𑌶
𑌶𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌸𑌙𑍍𑌕𑌰𑍍𑌷𑌃 𑌕𑌾𑌶𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤 𑌇𑌤𑌿
𑌕𑌥𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌰𑌤𑍍𑌨𑌾𑌕𑌰𑍋𑌕𑍍𑌤𑌿𑌃। 𑌕𑌰𑍍𑌤𑍃𑌭𑍇𑌦𑌸𑍍𑌯𑍋𑌕𑍍𑌤𑌿𑌃 𑌨 𑌵
𑌯𑌦𑌿𑌹 𑌏𑌤𑌾 𑌬𑌾𑌧𑌿𑌤𑌂 𑌕𑌿𑌂 𑌶𑌿𑌷𑍍𑌟𑍈𑌃 𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌹𑌸𑍍𑌤𑍁
𑌵𑍍𑌯𑌾𑌹𑌾𑌰𑌾𑌤𑍍 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑌿𑌹 𑌵𑌦𑌤𑍇 𑌹𑍍𑌯𑍇𑌕𑌤𑌾𑌤𑍍𑌪𑌰𑍍𑌯𑌯𑍋𑌗𑌃॥
॥ ௧௫ ॥

முதல் பதினறு அத்யாயங்கள் ஜைமினியால் செய்யப்பட்டன வாக வ்ருத்திக்ரந்தத்தில் காட்டப்படுகின்றன. தத்துவரத் நாகரத்தில் ஸங்கர்ஷகாண்டம் காசக்ருத்ஸ்நரால் செய்யப்பட்ட தாகச் சொல்லப்படுகிறது. இது எப்படிக்கூடும்? இந்த விஷ யத்தில் நாம் சொல்லுவதாவது— பெரியோர்கள் சொன்னதைப் பாதிப்பதற்கு நாம் தகுந்தவர்கள் அல்ல, பாதிப்பதற்கும் கார ணத்தைக் காணேம். இந்த விஷயத்தில் ஒருவர் சொல்லுவது உபசாரம் என்று நிர்வாஹம் பண்ணலாம். அப்போது இரு வருக்கும் ஒரே தாத்பர்யம் என்று ஸித்திக்கும்.

குறிப்பு— வ்ருத்திக்ரந்தத்தைச் செய்தவர் போதாயனர். தத்வரத்நாகரத்தைச் செய்தவர் பட்டபராசரர். நிர்வாஹப்ர காரம்:– போதாயனர் சொன்னது முக்யமாயிருந்தால் ஜைமினியே பதினறு அத்யாயங்களை எழுதினவர். தேவதாகாண்டமான நான்கு அத்யாயங்களை காசக்ருத்ஸ்நர் ப்ரவசனம் பண்ணினர்

என்று நிர்வாஹம். பட்டர் சொன்னது முக்யமானுல், காசக்ருத்ஸ்நரே தேவதா காண்டத்தைச் செய்தார். ஜைமினி செய்தது கர்மகாண்டவிசாரத்தில் பெரியபாகமாகையால் அதை நினைத்து எல்லாம் ஜைமினி சொன்னதாக வ்ருத்திகாரர் சொன்னது என்று நிர்வாஹம். தேவதாகாண்டத்துக்கு ஸங்கர்ஷகாண்டம் என்றும் பெயர். (15)

அவ— கர்மவிசாரம் செய்தபிறகு ப்ரம்மவிசாரம் செய்ய வேணுமென்கிற விஷயத்தில் உண்டான ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானம் சொல்லி, ப்ரம்மகாண்டத்தில் ஸூத்ரங்கள், அதிகரணங்கள், பாதங்கள் ஆகிய இவைகளில் சிலர் ஸங்க்யையை ஏறக்குறையச் சொல்லுகிறபடியால் அதின் உண்மையைத் தெரிவிக்கிறுர்.

ஸௌத்ரீ ஸங்க்2யா ஶராப்3தீ4ஷவ இதி க3ணநா
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ‖ ‖ ௧௬ ‖

ப்ரம்மகாண்டத்தில் ஸூத்ரங்களின் ஸங்க்யை ஶராப்3தீ4ஷவ: 545; அதிகரணங்களின் ஸங்க்யை. [illegible] 156. சில இடங்களில் ஒரு ஸூத்ரம் முன் ஸூத்ரத்துக்கு உதவி செய்கிறபடியால் அதற்கு அடுத்தபடி அதே அதிகரணத்தில் வரவேண்டியது. இப்படியிருக்க, அதை வேறு அதிகரணமாகப் பண்ணக் கூடாது. அதின் ப்ரயோஜநம் அல்பம். பாதங்களில் அதிகரண ஸங்க்யை — ருத்ர—இந்திரியங்கள். 11; ருது 6; திஶா (திக்) 10; அஹி (பாம்பு) எட்டு; காஷ்டா (திக்கு) 10; த்விப (திக் கஜங்கள்.) 8; ருஷி. (ருஷிகள்) 7; வஸுக்கள்- 8; ஊர்மி. 6; அத்ரி (மலை) 8; தத்துவங்கள்- 26; திதி 15; ருத்ர - இந்திரியங்கள் 11; ருத்ர- இந்திரியங்கள். 11; ப்ரயாஜங்கள் (ஹோமங்கள்) 5; ரஸங்கள் 6.

குறிப்பு— ஸூத்ரஸங்க்யையும் அதிகரணஸங்க்யையும் கடபயாதியால் சொல்லப்படுகிறது. க முதல் ஜ வரையில் உள்ள ஒன்பது எழுத்துக்களும், அப்படியே ட முதல் த-வரையிலுள்ள எழுத்துக்களும், 1-முதல் ஒன்பது லக்கங்களைக்காட்டுகின்றன. ப முதல் ம வரையில் உள்ள ஐந்து எழுத்துக்கள் 1-முதல் 5-வரையிலுள்ள லக்கங்களையும், ய முதல் ஹ வரையில் உள்ள எழுத்துக்கள், 1-முதல் 8-வரையிலுள்ள லக்கங்களையும், காட்டுகின்றன. ஞ-வும், ண-வும் சூன்யத்தைக் குறிக்கின்றன. ஶூஹாஶீ:, விந்ய என்பவைகளில் முதல் எழுத்து முதல் ஸ்தானத்திலுள்ளலக்கத்தையும், இரண்டாவது பத்தாம்ஸ்தானத்திலுள்ள லக்கத்தையும், மூன்றாவது எழுத்து நூறாம் ஸ்தானத்தின் லக்கத்தையும் காட்டுகின்றன. அதனால் ஸூத்ரங்கள் 545 என்பதும், அதிகரணங்கள் 156என்பதும் ஏற்படுகின்றன.

(2) ஊர்மி என்பது பசி, தாஹம், பிறப்பு, கிழத்தனம், மரணம் சோகம் ஆகிய துன்பங்கள். திக்கு மேலும் கீழும் உள்பட பத்து. அஹிகள் பூமியைத்தாங்கும் எட்டு நாகங்கள். அத்ரி. எட்டுக் குலாசலங்கள். தத்துவங்கள்—ப்ரக்ருதியின் விகாரங்கள் 23, ப்ரக்ருதி, ஜீவன், ஈச்வரன், ஆக 26. அதிஶக்வரீ ஊஹ்ருஸூ ஒவ்வொரு பாதங்களில் 15 அக்ஷரங்கள் உள்ளது. ரஸங்கள் ஆறு.

(3) அத்த்ரதிகரணத்தில் குஹாம் ப்ரவிஷ்டௌ- என்கிற ஸூத்ரம் அடுத்த முன் ஸூத்ரத்துக்குச் சேஷம். அதைச் சிலர் தனி அதிகரணமாகப் பண்ணுகிறார்கள். அதற்குப் பிரயோஜனம் மந்தம். (16)

அவ— ப்ரம்மகாண்டத்தின் அத்யாயங்களையும் *த்விகங்களையும் பிரித்து, அவைகளின் விஷயங்களைச் சொல்லுகிறார்:—

* த்விகம் என்பது இரண்டு அவயவங்களுள்ளது. முதல் இரண்டு அத்தியாயங்கள் ஒரு த்விகம்; மூன்றாவது நான்காவது அத்யாயங்கள் மற்றொரு த்விகம்.

ஶாஸ்த்ரம் வைதஸ்திக்யவிஹிதகாரணப்ராப்திஸித்தா
ப்யாயைநாஜ்யாயை: ஷோடஶாஸ்மிந் த்விகயுக்மஸித்தம்
ஷட்கேஷாஸீநீத்யா। தத்ராத்யம் வக்தி ஸித்தம் விஷய:
விவரம் தஸ்ய ப்ராப்திம் த்வியுக்மம் ஸ்வப்ராவே: ஸாயநம்
ச ஸ்வயத்ரிதி ஹி வரம் ஜ்ஞேயம் தத்ராவிவித்யு॥ ॥௧௭॥

இந்த சாஸ்திரத்தில் நான்கு அத்யாயங்கள் இருக்கின்றன. அவைகளின் விஷயங்கள் - ஸமந்வயம், விரோதமில்லாமை, உபாயம், ப்ராப்தி என்பன. இதில் பதினாறு பாதங்களும், இரண்டு த்விகங்களும் இருக்கின்றன. கர்மகாண்டத்தில் முதல் ஆறு அத்யாயங்கள் ஒரு ஷட்கமும், மேல் ஆறு அத்யாயங்களும் ஒரு ஷட்கமுமாக இருப்பதுபோல், முதலிரண்டு அத்யாயங்கள் ஒரு த்விகமும், மூன்று நான்கு அத்யாயங்கள் ஒரு த்விகமுமாக இருக்கின்றன. அவைகளில் முன் த்விகம் ஸித்தமான விஷயத்தையும், பின் த்விகம் அதற்கு எதிர்த்தட்டான ஸாத்யமான விஷயத்தையும் சொல்லுகின்றன. தன்னை அடைவதற்கு ப்ரம்மம் தானே உபாயம் என்கிற காரணத்தாலே அந்த த்விகத்திலும் ப்ரம்மமே விசாரிக்கப்படுகிறது.

குறிப்பு—(1) ஸமந்வயம் என்பதற்கு நன்றாய்ச் சேருவது என்பது பொருள். ஜகத்துக்குக் காரணமாயிருப்பதைச் சொல்லுகிற வாக்கியங்கள் எல்லாம் வேறொன்றைச் சொல்லாமல் ப்ரம்மத்தையே சொல்லுகிறது என்பது முதல் அத்யாயத்தில் காட்டப்படுகிறது. ப்ரம்மம் உபாதாந காரணமும் நிமித்த காரணமும் ஆகிறது. இதற்குச் சொல்லப்படும் விரோதங்களை இரண்டாவது அத்யாயம் தீர்க்கிறது. அவனை அடைவதற்கு உபாயத்தை மூன்றாவது அத்யாயமும், அந்த உபாயத்தின் பலனை நான்காவது அத்யாயமும் சொல்லுகின்றன. இப்படி நான்கு அத்யாயங்களுக்கும் விஷய பேதங்களை அறியவேண்டியது.

(2) ஒவ்வொரு அத்யாயத்திலும் நாலு நாலு பாதங்கள் இருப்பதால் பாதங்கள் பதினாறு.

(3) ஸித்தம் என்பது ஏற்கெனவே இருப்பது. ஸாத்யம் இனி உண்டுபண்ணப்படுவது. முதல் த்விகத்துக்கு விஷயம் ஸித்தமான ப்ரம்மம். இரண்டாவது த்விகத்துக்கு ஸாத்யமான

ப்ரம்மம். உபாயம் இருவகைப்படும்— ஸித்தம் என்றும் ஸாத்யம் என்றும். ஸித்தமான உபாயம் ப்ரம்மம். ஸாத்யமான உபாயம் உபாஸநம். பலனும் இருவகைப்படும்- ஸித்தம் என்றும், ஸாத்யம் என்றும். ஸித்தமான பலன் ப்ரம்மம். ஸாத்யமான பலன் அவன் அநுபவமும், அவன் கைங்கர்யமும். இந்த இரண்டாவது த்விகத்திலும் ப்ரம்மமே ப்ரதானமானஉபாயமாகவும் பலனாகவும் இருப்பதால்அதுவும் ப்ரம்மவிசாரமாயிருப்பதற்குக்குறையில்லை.

அவ— பாதங்களின் விஷயங்களைச் சொல்லுகிறார்—

तत्राद्येऽध्याये स्पष्टास्पष्टविस्पष्टविस्पष्ट-
जीवादिवाचः पादशस्त्वादिमेऽक्षतिरहितमतिः
खाद्युत्पत्तीन्द्रियादेः । दोषादोषौ तृतीये
ये संसृतीश्वरयोर्भक्तिरङ्गानि वा यो वा सारो
सहायोत्क्रान्तिसरणिमुक्तिस्थितिरन्ते ॥ १८ ॥

அந்த ப்ரம்மகாண்டத்தில் முதல் அத்யாயத்தில் ஜீவனையும் ப்ரக்ருதியையும் சொல்லுவதுபோல் தோன்றுகிற வாக்யங்கள் விசாரிக்கப்படுகின்றன. அவைகளுள் கொஞ்சமும் தெளிவில்லாத வாக்யங்கள் முதல் பாதத்திலும், தெளிவில்லாத வாக்யங்கள் இரண்டாவதுபாதத்திலும், தெளிவுள்ள வாக்யங்கள் மூன்றாவது பாதத்திலும், மிகவும் தெளிவுள்ள வாக்யங்கள் நாலாவது பாதத்திலும் விசாரிக்கப்படுகின்றன. இரண்டாவது அத்யாயத்தில், உபநிஷத்வாக்யங்களுக்குக் கபிலஸ்மிருதிமுதலான ஸ்மிருதிகளாலும் நியாயங்களாலும் பாதம் (பாய) ஏற்படாது என்பது முதல்பாதத்திலும்,எதிரி பக்ஷங்களின் தர்க்கங்களைத்தொலைப்பது இரண்டாவது பாதத்திலும், ஆகாசம் முதலியவைகளும் இந்திரியங்கள் முதலியவைகளும் கார்யங்கள் என்பது மூன்றாவது நாலாவது பாதங்களிலும் சொல்லப்படுகின்றன. மூன்றாவது அத்யாயத்தில், ஸம்ஸாரி ஜீவன்களின் தோஷங்களும், ப்ரம்மத்தின் தோஷமில்லாமையும் முதல் இரண்டு பாதங்களுக்கும், பக்தி மூன்றாவது பாதத்துக்கும், அதின் அங்கங்கள் நாலாவது பாதத்துக்கும் விஷயங்கள். நாலாவது அத்யாயத்தில், உபாஸநம் ஏற்பட்ட போது உண்டாகும் ப்ரபாவம் முதல் பாதத்திலும், மோக்ஷத்தை அடையும் ஜீவன் உடம்பைவிட்டு வெளிக்கிளம்புவது இரண்

டாவதுபாதத்திலும், அர்ச்சிராதி மார்க்கத்தில் போவது மூன்று வது பாதத்திலும், உபாஸநத்தின் பலன்கள் நாலாவது பாதத் திலும் விசாரிக்கப்படுகின்றன.

குறிப்பு— (1) முதல் பாதத்தில் — ஜீவனையோ ப்ரகிருதி யையோ இந்த வாக்கியம் சொல்லுகிறது என்பதற்கு பூர்வபக்ஷி காட்டும் அடையாளங்கள் கொஞ்சமும் இல்லை; அவனுல்கல்பிக்கப் பட்டவைகள். ஆகையால் அந்த வாக்கியங்கள் கொஞ்சமும் தெளிவில்லாதவைகள். இரண்டாவது பாதத்தில் — அவன் காட்டும் அடையாளங்கள் பரமாத்மாவுக்கும், அவைகளுக்கும் பொதுவாயிருப்பதால், அவைகள் தெளிவில்லாதவைகள். மூன் ருவது பாதத்தில் காட்டும் அடையாளங்கள் அவைகளுக்கே யுள்ளவைகள். நாலாவது பாதத்தில் காட்டும் வாக்யங்கள் ப்ரதிவர்திமதங்களின் வாக்யங்கள் போலிருக்கின்றன. ஆகை யால் அவைகள் மிகவும் தெளிவுள்ளவைகள். 81-வது சுலோகத் தைப் பார்க்க.

(2) இரண்டாவது அத்யாயம் முதல்பாதத்தில் உபநிஷத் வாக்யங்களைக்காட்டிலும் ப்ரபலங்களாக எண்ணப்படும் ஸ்ம்ருதி முதலானவைகளாலே அந்த வாக்யங்களுக்குப் பாதம் ஏற்படாது என்பது காட்டப்படுகிறது. இரண்டாம் பாதத்தில் வேதாந்த வாக்யங்களுக்கு ஸமபலமுள்ளவைகளாக எண்ணப்படும் விரோதி பக்ஷங்களின் தர்க்கங்கள் தூஷிக்கப்படுகின்றன. இதனுல், அவை கள் துர்ப்பலங்கள் என்பது காட்டப்படுகிறது. பாத (வாய)மா னது ஸமமான பலமுள்ளதாலே ஏற்படும். விரோதி பக்ஷங்க ளின் தர்க்கங்கள் துர்ப்பலங்களாகையாலே அவைகளால் வேதாந்த வாக்யங்களுக்குப் பாதம் ஏற்படாது.

(3) இரண்டாவது அத்யாயத்தில் முதல் இரண்டு பாதங் களில் காரணவிஷயமான விசாரம் செய்யப்படுகிறது; பின் இரண்டு பாதங்களால் கார்யவிஷயமான விசாரம். இவைகளில் மூன்றுவது பாதத்தில் ஆகாசம் முதலான அசேதநங்கள் விஷயமாகவும், ஜீவன்கள் விஷயமாகவும் விசாரமும், நாலாவது பாதத்தில் அவனுடைய உபகரணங்களான இந்திரியங்களுடை யவும் பிராணனுடையவும் விசாரங்களும் செய்யப்படுகின்றன. முதலிரண்டு பாதங்களின் விசாரம் பாஹ்யம். அதாவது வே

தத்துக்கு வெளிப்பட்டவைகளால் பாதமில்லையென்று காட்டுகிற விசாரம். பின் இரண்டு பாதங்களில் விசாரம் ஆந்தரம். வேத வாக்யங்களுக்குள்ளேயே தோன்றும் விரோதங்களுக்குப் பரிஹாரம் பண்ணுகிற விசாரம்.

(4) மூன்றுவது அத்யாயத்தில் அதிகாரத்துடனும் அங்கங்களுடனும் கூடின உபாஸனம் விசாரிக்கப்படுகிறது. அதில் முதல் இரண்டு பாதங்களுக்கு விஷயம் உபாஸனத்திற்கு அதிகாரம். அதிகாரம் என்பது— ஸம்ஸாரத்தில் கிடைக்கும் பலன்களில் ஆசையில்லாமையும், அதின்மேல் உண்டாகும் பகவானை அடையவேண்டும் என்கிற ஆசையும். முதல் பாதம் ஜீவன் வெவ்வேறு அவஸ்தைகளில் படும் கஷ்டங்களைக் காட்டி அவனுக்கு வைராக்யத்தை உண்டுபண்ணுகிறது. இரண்டாவது பாதம் பகவானிடம் ஒரு தோஷமுமில்லை என்றும், எல்லா நல்ல குணங்களும் அவனிடம் பொருந்தியிருக்கின்றன என்றும் காட்டுவதால் அவனை அடையவேண்டும் என்கிற ஆசை உண்டுபண்ணப்படுகிறது.

(5) நாலாவது அத்யாயத்தின் முதல் பாதம் காட்டும் உபாஸனத்தின் ப்ரபாவமாவது— முன்செய்த கர்மங்கள் நாசம் அடைவதும், புத்திபூர்வமில்லாமல் (இதைச் செய்யவேணும் என்கிற எண்ணமில்லாமல்) மேல் செய்யப்படும் கர்மங்கள் பலனைக் கொடுக்கா என்பதும். (18)

அவ:— கீழ் ச்லோகத்தில் சொன்னபடி ஒவ்வொரு பாதத்திற்கும் விஷயம் வெவ்வேறுயிருந்தால் அவைகளில் எல்லாம் ப்ரஹ்மவிசாரம் செய்வதாக எப்படி ஏற்படும் என்னும் கேள்விக்குப் பதில் சொல்லுகிறார்:—

ஸ்ரஷ்டா தேஹீ ஸ்வநிஷ்டோ நிரவதிமஹிமாபாஸ்த
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

பகவான் உலகத்தை உண்டுபண்ணுகிறவன்; உலகத்தை உடம்பாக உடையவன்; எல்லாவற்றிற்கும் தான் ஆதாரமாயி

ருந்தும் தனக்கு ஆதாரமில்லாதவன்; அளவில்லாதபெருமையை யுடையவன்; ஒருவிதமான பாத (வாய) மும் சொல்லமுடியா தபடி உலகத்துக்கு எல்லாவிதமான காரணமாயுமிருப்பவன்; ஆச் ரிதர்களுக்கு வேண்டியவன்; ஆகாசம் முதலானவைகளுக்கும் ஆத் மாக்களுக்கும் இந்திரியங்களுக்கும் ப்ராணனுக்கும் தகுந்தபடி பிறப்பைச் செய்கிறவன்; ஸம்ஸாரதந்த்ரத்தை நடத்துகிறவன்; தோஷமில்லாமை முதலியவைகளால் விரும்பக்கூடியவனுயிருப்ப வன்; பலவிதமான உபாஸனங்களுக்கு விஷயமானவன்; அவரவ ருடைய வர்ணுச்ரமங்களுக்குத் தகுந்த கர்மங்களால் ஸந்தோஷப் படுத்தத்தகுந்தவன்; உபாஸநம் பண்ணினவர்களின் பாபங்களைப் போக்குகிறவன்; முக்தி அடையப்போகிற ஜீவனை ப்ரம்மநாடி வழி யாய்ப் போகும்படிசெய்கிறவன்; ஆதிவாஹிகர்களால் அவனை வை குண்டத்துக்குக் கொண்டுபோகிறவன்; தன்னிடம் வந்த ஜீவனைத் தன்னைப்போல் செய்கிறவன். இப்படி இந்த சாஸ்த்ரத்தில் முழு வதும் அவனே சொல்லப்படுகிறுன் என்று அறியவேண்டியது.

குறிப்பு— (1) இதில் ஒவ்வொரு விசேஷணமும் ஒவ்வொரு பாதத்தின் அர்த்தம். "வாதூஷெ:......கூஜக" என்பது இரண்டாவது அத்தியாயத்தின் மூன்ருவது நான்காவது பாதங் களின் பொருள்.

(2) ஸம்ஸாரதந்த்ரத்தை நடத்துவதாவது— ஜீவனுடைய கர்மத்துக்குத் தகுந்தபடி ஸ்வர்க்கத்துக்கோ நரகத்துக்கோ அவனை அனுப்புவதும், ஸ்வப்னகாலத்தில் அவன் அநுபவிக் கும்படி பதார்த்தஸ்ருஷ்டி பண்ணுவதும், ஸ்வப்நமில்லாமல் தூங்கும் காலத்தில் அவனைத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டு பகலிலுண்டான களைப்பை மாற்றுவதுமாம். (19)

அவ— கர்மவிசாரத்தை முதலில் செய்து, பிறகு ப்ரம்ம விசாரத்தைச் செய்யவேண்டியது என்று சொல்லப்பட்டது. சிலர் கர்மவிசாரத்தைச் செய்யாமலே ப்ரம்மவிசாரத்தைச் செய் கிறுர்களே என்ருல், அதற்குக் காரணத்தைச் சொல்லுகிறுர்—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

ஸ்வாத்யாயத்தை அத்யயநம் பண்ணவேண்டும் என்கிற விதியைக்கொண்டு வேதங்களை ஒருவன் அத்யயநம் பண்ணுகிறான். இத்துடன் அந்த விதிக்குச் சக்தி போய்விடுகிறது. பிறகு (அங்கங்களையும் அத்யயநம் பண்ணினதால்) வேதத்தின் அர்த்தம் மேலெழுந்தவாறு தோன்றுகிறது. அதைப்பற்றி விசாரம் செய்யவேண்டும் என்கிற ஆசையுண்டாகிறது. அப்போது வரிசையாய் கர்மவிசாரத்தையும், ப்ரம்மவிசாரத்தையும் செய்கிறான். இது நியாயப்படி ஏற்பட்ட முக்யமான அதிகாரி செய்யும் வழி. ஆனால் இந்தக் கலியுகத்தில் உடம்பின் பலமும், புத்திபலமும், பிழைத்திருப்பதும் அளவுள்ளவைகளாயிருப்பதால் எந்த வேளை விக்நம் ஏற்படுமோ என்று பயந்து, சில பாக்யசாலிகள் வெகுகாலம் பொறுத்திருக்கமுடியாமல், கர்மவிசாரத்தைச் செய்யாமலே ப்ரம்மவிசாரத்தையே பிரீதியுடன் செய்கிறார்கள்.

குறிப்பு — (1) விதிக்குச்சக்தி போய்விடுவதாவது, அத்யயநவிதி வேதத்தில் அக்ஷரராசியை க்ரஹிப்பதைமாத்ரம் விதிக்கிறது. அதின் அர்த்தத்தையும் அறியவேண்டியதை விதிக்கவில்லை என்பது. அதின் அர்த்தம் அங்கங்களைப் படித்தவனுக்குத் தானாய்த் தோன்றும்.

(2) கர்மவிசாரம் செய்யாதவன் அதிலுள்ள நியாயங்களை எப்படி அறிவன்? அவைகள் ப்ரம்மவிசாரத்துக்கு வேண்டுமே என்றால், அவைகளை மூன்றுவிதமாய் அறியலாம். (1) நியாயங்களை மாத்திரம் ப்ரகரண க்ரந்தங்களிலிருந்து சுருக்கமாய் அறியலாம். (2) ப்ரம்மவிசாரம் செய்வதற்கு முன்னாலே குருவினிடமிருந்து அந்த நியாயங்களைக்கேட்டு அறியலாம். (3)ப்ரம்மவிசாரம் செய்கையில் ஒவ்வொரு இடத்திலும் வேண்டிய நியாயத்தைக் குரு சொல்லிக்கொடுக்க அறியலாம்.

(3)* "வெஷ்ஙயீ_த்ரூ ஸ்நாயாக்ஷ" என்று விதிஇருக்கிறதே. ஸ்நாநம் ஆனவுடன் க்ருஹஸ்தனுக ஆகி யாகங்களைச் செய்யவேண்டுமே. விசாரத்துக்கு எங்கே இடம் என்ருல், இந்த விதி வரிசையை மாத்திரம் சொல்லுகிறது. அத்யயனத்தை முடித்துக் கொண்டு உடனே ஸ்நாநம் பண்ணவேண்டும் என்று கருத்து அன்று. ஆகையால் விசாரத்தைச் செய்து ஸ்நாநம் செய்யலாம். அல்லது ஸ்நாநம் செய்து க்ருஹஸ்தன் ஆனபிறகு ஒழிந்த வேளைகளில் விசாரத்தைச் செய்யலாம். யாகங்களுக்கு வேண்டிய பொருளை ஸம்பாதிக்க எப்படி இடமுண்டோ, அப்படியே விசாரத்தைச்செய்து ஜ்ஞானத்தை ஸம்பாதிக்கவும் இடமுண்டு.

அவ— கீழ் ச்லோகத்தில், அத்யயநவிதி அர்த்தவிசாரத்தை விதிக்கவில்லை என்று சொல்லப்பட்டதே; அப்போது விசாரத்தை ஒருவன் புஸ்தகத்தைக்கொண்டே தானே செய்யலாமே; குருவினிடம் போகும் ச்ரமம் எதற்காக என்ருல், அதற்குப் பதில் சொல்லுகிருர்—

ஸாஹாநீ௰ாஂஸதெ வெக்ஷ ஹஸயக்ஷிஹ யதுதாஂ கிஂ ஹு
ஸுஙெணுத்ரூதி வெஹ ஹஜ்ஞாநாவுயெ ஹுவஙுஹிஹஃ
நவியெஷுந தவுதாவஷெஶாக்ஷ। ஸக்ஷிஷ்ரூாவாயஙுவெது
ஹுஶயதி வ வஸஹஹவிதிஂ தயாநூாவூாவாயஙா
ஷிதூயீெத (ஙிஙு)நியக்ஷவியிஸஸள நிஶ்விதொ நீதிவிஹீஃ ॥

ஒருவன் தன் ஆசையாலேயே விசாரத்தைச் செய்கிருன் என்று அன்ரேு தீர்மானம். அப்படியானுல், அந்த விஷயத்தில் தானே ப்ரயத்நம் பண்ணலாமே. (தானே புஸ்தகத்தைப்பார்த்து அறியலாமே) குரு சொல்லிக்கொடுக்கவேண்டுமென்பது எதற்காக என்ருல், அது கூடாது. (1) ப்ரம்மஜ்ஞானத்தை அடைய குருவினிடமே போகவேண்டியது என்கிற விதி இருக்கிறது. (2) குருவினுலேயே தத்துவம் உபதேசிக்கப்படுகிறது என்பது உலகத்திலும் பார்க்கப்படுகிறது. (3) "ஆசார்யனை அடைந்தவனுக்கே ப்ரம்மஜ்ஞானம் கிடைக்கிறது" என்பது ஸத்வித்யையைச்சொல்லுகிற இடத்தில் வெளியிடப்படுகிறது. (4) குருவி

* வேதத்தை அத்யயநம்பண்ணி ஸமாவர்த்தனம் என்கிற கர்மத்தைச் செய்யவேண்டியது.

னிடமிருந்தே அதை அடையவேண்டியது என்று வேறு வித்யையும் சொல்லுகிறது. இது நியமவிதி என்று நியாயம் அறிந்தவர்களால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பு— (1) ச்லோகத்தில் சொன்ன விதி முண்டகோப நிஷத்தில் இருக்கிறது-* "தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபி கச்சேத்" என்று. இங்கே 'ஸ:' என்று சொல்லப்பட்டவன் கர்மவிசாரத்தைச் செய்து கர்மங்களின் பலன்கள் அல்பங்கள் என்றும், நிலையில்லாதவைகள் என்றும், கர்மங்களாலே நித்யனான புருஷனை (பகவானை) அடையமுடியாது என்றும்அறிந்து, அவைகளில் வெறுப்பு உண்டானவன்.

(2) ஸத்வித்யை "ஆசார்யவாந் புருஷோ வேத" (சா-6-14-2) என்று சொல்லுகிறது. இவ்விடத்தில் ஆசார்யவாந் என்பதில் இருக்கும் மதுப் ப்ரத்யயமானது முறைப்படி அடைந்தவன் என்பதைக் காட்டுகிறது.

(3) அதே உபநிஷத்தில் ஷோடசகல ப்ரம்ம வித்யையில் "ஆசார்யாத்தைவ வித்யா விதிதா ஸாதிஷ்டம் ப்ராபத்" (சா. 4-9-3) என்று சொல்லியிருக்கிறது. அதின் பொருள்— ஆசார்யனிடமிருந்தே அடையப்பட்ட வித்யை மிகவும் நல்லதாயிருக்கையை அடையும் - என்பது. ஸாதிஷ்டம் - ஸாதுதமம் । ப்ராபத் என்பதற்கு ப்ராப்நுயாத் என்று அர்த்தம். "ஹ" என்கிற சொல் பிரஸித்தியைக் காட்டுகிறது.

(4) ஒரு வேலையைப் பலவழிகளால் ஒருவன் தானே செய்வதானால் அவைகளில் ஒன்றை விதிப்பது நியமவிதி. அந்த வழியாகவே அதைச் செய்யவேண்டியது என்பது விதிக்கப்படுகிறது. உதாரணம்— வ்ரீஹீந் அவஹந்தி (நெல்லைக்குத்தவேண்டியது) என்பது நியமவிதி. புரோடாசத்தைச் செய்வதற்காக நெல்லிலிருந்து உமியைப் போக்கவேண்டியது. இதை இரண்டுவிதமாய்ச் செய்யலாம். குத்தி உமியைப் போக்கலாம்; அல்லது அதை நகத்தாலே உரிக்கலாம். குத்தியே உமியைப் போக்கவேண்டியது என்பது விதி. (2)

* முண்டகம் I—2—12. அதை அறிவதற்கு அவன் குருவினிடமே போகவேண்டும்.

அவ:— கீழ்ச்லோகங்களில் வேதார்த்த விசாரத்தைச் செய்யும் க்ரமம் நிரூபணம் செய்யப்பட்டது. இப்போது ப்ரம்மவிசாரத்தை ஆரம்பிக்கவேண்டியதில்லை என்கிற சங்கை முதல் நாலு அதிகரணங்களால் நாலு நியாயங்களைக்கொண்டு தீர்க்கப்படுகிறது என்று சொல்லுகிறார்—

𑌸𑌿𑌦𑍍𑌧𑍇 𑌵𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑌾𑌦𑍍𑌯𑌾 𑌨 𑌭𑌵𑌤𑌿 𑌨𑌚 𑌯𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌾
𑌦𑍍𑌵𑍃𑌜𑍍𑌞𑌾𑌤𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑌿𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣𑌾𑌨𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑍇 𑌨𑌚 𑌨𑌿𑌶𑌮
𑌯𑌿𑌤𑍁𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌬𑍋𑌧𑍇 𑌫𑌲𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌵𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌤𑍍𑌵
𑌂 𑌨 𑌕𑌾𑌨𑌾𑌨𑍍𑌯𑌵𑌮𑌿𑌷𑍍𑌟 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 𑌤𑌤𑍍𑌵𑌾𑌦𑍇
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌂 𑌵𑌤𑌾𑌸𑍍𑌸𑍂𑌤𑍍𑌰𑌵𑌟𑌯𑌾𑌵𑌿𑌤𑍇𑌤𑌨𑍍𑌯𑌾𑌯
𑌹𑍇𑌤𑍇𑌶𑍍𑌚𑍍𑌤𑍍𑌵𑌾𑌹𑌿𑌷𑍍𑌟𑌃 ॥ ॥௨௨॥

ஸித்தமான வஸ்து விஷயத்தில் முதல் வ்யுத்பத்தி உண்டாகிறதில்லை. லக்ஷணவாக்யத்தால் அதன் ஜ்ஞாநம் கிடைக்காது. வேறு ப்ரமாணத்தாலே அது ஸித்திக்குமாஞல் சாஸ்திரத்தாலே என்ன ப்ரயோஜனம்? ஸித்தமானதை அறிவதினுல் இதைக் கேட்கிறவனுக்குப் பலன் கிடையாது. இந்தக் காரணங்களால் உபநிஷத்துக்கள் ப்ரம்மவிஷயத்தில் ப்ரமாணங்கள் அல்ல என்று ப்ரம்மவிசாரத்தின் ஆரம்பமானது தடுக்கப்பட்டபோது, முதல் நாலு ஸூத்ரங்கள் தகுந்த நாலு நியாயங்களால் ப்ரம்மவிசாரத்தை ஆரம்பிக்கலாம் என்று தீர்மானிக்கின்றன.

குறிப்பு— (1) ஸித்தம் என்பது ஏற்கெனவே இருப்பது. ஸாத்யம் என்பது செய்யப்படுவது. ப்ரம்மம் ஜகத் காரணம் என்கிற வாக்யம் ஸித்தமானதைச் சொல்லுகிறது. 'ஸோமயாகத்தைச் செய்' என்கிற வாக்யம் ஸாத்யமானதைச் சொல்லுகிறது. வ்யுத்பத்தி என்பது ஒரு சொல்லுக்கும் அதின் அர்த்தத்துக்கும் இருக்கும் ஸம்பந்தத்தை அறிவது. இது முதலில் ஸித்தத்தைச் சொல்லுகிற வாக்யத்தில் ஏற்படாது. உபநிஷத்துக்கள் ஸித்தமானவைகளையே சொல்லுவதால் அவைகளில் இருக்கும் சொற்களுக்கும் அர்த்தத்திற்கும் ஸம்பந்தம் அறியமுடியாது. அதனுல் சொற்களுக்கு அர்த்தங்களை அறியமுடியாது. அர்த்தங்களை அறியாமல் விசாரத்தைச் செய்ய முடியாது. இது முதலாவது சங்கை.

(2) உபநிஷத்துக்களின் சொற்களுக்கு அர்த்தம் தெரிந்தாலும், ப்ரம்மத்துக்குச் சொல்லும் லக்ஷணத்தாலே அதின் ஜ்ஞானம் கிடைக்காது. ஏன் என்றால், அந்த லக்ஷணவாக்யத்தில் ப்ரம்மத்துக்கு மூன்று விசேஷணங்கள் இருக்கின்றன. அவைகளாலே ப்ரம்மம் மூன்று என்று ஏற்படும். அப்போது ஜகத்தை உண்டுபண்ணும் ப்ரம்மம் எல்லாருக்கும் மேற்பட்ட ஒருவன் என்பது ஏற்படாது. எல்லாருக்கும் மேற்பட்டவன் அன்றோ அடையவேண்டியவன். இது இரண்டாவது சங்கை.

(3) ப்ரம்மத்தை அநுமானத்தாலே அறியலாம். சாஸ்த்ர விசாரம் வேண்டியதில்லை. வேறு ப்ரமாணத்தாலே அறியக்கூடாத விஷயத்தில் தானே சாஸ்த்ரம் ப்ரமாணம். இது மூன்றாவது சங்கை.

(4) ஸித்தமான வஸ்துவை அறிவதினாலே பலன் கிடைக்காது. எங்கே பலன் உண்டோ அங்கே "இதைச் செய்" என்கிற விதி இருக்கும். அவ்விதமான விதி இல்லாமையால் உபநிஷத் வாக்யங்களை விசாரித்து ஜ்ஞானம் கிடைப்பதால் ஒரு பலனையும் அடையமுடியாது. இது நாலாவது சங்கை.

(5) தகுந்த நியாயங்களாவன— ஸித்தபரவாக்யங்களிலும் முதல்வ்யுத்பத்தி உண்டாவதற்கு வழிகளிருக்கின்றன. லக்ஷண வாக்யத்தைக்கொண்டு ப்ரம்மத்தை அறியலாம். அநுமானத்தைக் கொண்டு ப்ரம்மத்தை அறியமுடியாது. விதியில்லாமலே ஸித்தத்தைச்சொல்லுகிற வாக்யத்தாலே புருஷார்த்தமான பலனைத் தெரிந்துகொள்ளலாம்— என்பவைகளாம்.

(6) இந்த முதல் நாலு அதிகரணங்களும் ஒரு பேடிகை (கூறு). ப்ரம்ம விசாரத்தைச் செய்யவேண்டியது என்று காட்டுவது அதின் பிரயோஜனம். இதற்குள்ளே முதல் இரண்டு அதிகரணங்கள் ஒரு பேடிகை. மற்ற இரண்டும் ஒரு பேடிகை. முதல் பேடிகையில் வ்யுத்பத்தி உண்டு என்று காட்டி, உபநிஷத்துக்கள் ப்ரமாணம் என்று ஸ்தாபிக்கப்படுகிறது. அதில் முதல் அதிகரணத்துக்கு விஷயம் உபநிஷத்து வாக்கியங்கள் முழுவதும். இரண்டாவது அதிகரணத்துக்கு ப்ரம்மத்துக்கு லக்ஷணம் சொல்லும் வாக்கியங்கள் மாத்திரம் விஷயம். மேல் பேடிகையில் வேதாந்தவாக்கியங்களுக்கு இந்தவிஷயத்தில் தாத்பர்யம் இருக்கிறது என்று காட்டும் அடையாளங்களால் அவைகள் ப்ரமாணங்கள்

என்பது ஸ்தாபிக்கப்படுகிறது. அந்த அடையாளங்களாவன:— (1) உபக்ரமம் உபஸம்ஹாரம் (ஆரம்பமும் முடிவும்), (2) அப்யாஸம் (ஒன்றைப் பல தடவை சொல்லுவது), (3) உபதேசிப்பது புதிதாயிருப்பது, (4) பலனைச் சொல்லுவது, (5) அர்த்தவாதம் (விதித்ததை ஸ்தோத்ரம்பண்ணுவது), (6) உபபத்தி (யுக்தியைக் காட்டுவது). மூன்றுமதிகரணத்தில் அநுமாநத்தாலே ப்ரம்மம் அறியமுடியாது என்று காட்டுவதால், [illegible] என்கிற லிங்கமும், நாலாவது அதிகரணத்தில் பலன் என்கிற லிங்கமும் காட்டப்படுகின்றன. இந்த அதிகரணங்களுக்குள்ளே மூன்றுவது அதிகரணத்தாலே சாஸ்த்ரத்துக்குப் பலன் உண்டு என்பதும், நாலாவது அதிகரணத்தாலே அதை அறிவதற்கு ப்ரயோஜனம் உண்டு என்பதும் காட்டப்படுகின்றன. (22)

அவ— கீழ்ச்லோகத்தில் சொன்ன சங்கைகளுக்கு *அப்யுபகமவாதத்தாலும் பரிஹாரம் சொல்லலாமே; அப்படிச் செய்யாமல் வேறுவிதமாய்ப் பரிஹாரம் பண்ணுவானேன் என்பதற்குக் காரணத்தைச் சொல்லுகிறார்:—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸித்தமான விஷயத்தில் முதல் வ்யுத்பத்தி உண்டாகாது என்பதை ஒப்புக்கொள்ளுவோம். ஆனபோதிலும் ப்ரம்ம விசாரம் செய்யத்தடையில்லை. 1 "[illegible]" என்று விதியிருக்கிறது. பலமான ஸ்வர்க்கம் இன்னது என்று வேறு வாக்யம் சொல்லுகிறது. அது ஸித்தத்தைச் சொல்லுகிற வாக்யம். அது விதிவாக்யத்

* வாதி சொல்லுவதை ஒப்புக்கொண்டு செய்யும் வாதம் அப்யுபகமவாதம்.

1 ஸ்வர்க்கத்தை ஆசைப்படுகிறவன் தர்சம் பூர்ணமாஸம் என்கிற யாகங்களைச் செய்யவேண்டும்.

திற்கு உதவி செய்வதாலே அதில் வ்யுத்பத்தி உண்டென்று மீமாம்ஸகன் ஒப்புக்கொள்ளுகிறன். அப்படியே "ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்" என்று உபநிஷத்துக்களில் விதிவாக்கியங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு ப்ரம்மத்தின் ஸ்வரூபம் முதலானவைகளைச் சொல்லுகிற வாக்யங்கள் உதவிசெய்வதால், அவைகளில் வ்யுத்பத்தியுண்டாகலாம். ப்ரம்மத்தை லக்ஷணவாக்யத்தால் அறிய முடியாது என்றாலும், வேறு வாக்யங்களைக்கொண்டு ப்ரம்மத்தை அறியலாம். அநுமானத்தால் ப்ரம்மத்தை அறியமுடிந்தாலும், அது ஸம்பந்தமான சில விஷயங்களைச் சாஸ்த்ரத்தாலேயே அறியவேண்டியது ப்ரம்மத்தைப் பற்றிய ஸித்தபரவாக்யங்கள் விதிக்குஉதவிசெய்யமேவ இருந்தபோதிலும், அவைகளில் சொன்ன விஷயங்களுக்குப்பாதம் இல்லாவிட்டால் அந்த வாக்யங்கள் ப்ரமாணங்களே. இப்படிச் சங்கைகளைத் தீர்க்கலாம். ஆனால் அந்த வழி சக்தியில்லாதவனால் அநுஸரிக்கத்தகுந்தது. ஸூத்ரகாரர் ருஜுவானவர். வாதத்தில் ஸமர்த்தர். அவர் அந்த வழியை ஸஹிக்கவில்லை.

குறிப்பு– (1)வ்யுத்பத்தி இல்லை என்கிற சங்கைக்கு ஸூத்ரகாரருக்கு இஷ்டமான பரிஹாரத்தைச் சொல்லி, பிறகு அங்வாருஹ்யவாதத்தாலே பரிஹாரமும் ஸ்ரீபாஷ்யத்தில் சொல்லப்படுகிறது. மற்றச் சங்கைகளுக்கு ஸ்ரீபாஷ்யத்தில் அங்வாருஹ்யவாதத்தாலே பரிஹாரம் சொல்லப்படவில்லை.

(2) புராணங்களில் ராவணன், யுதிஷ்டிரன், துர்யோதனன் முதலானவர்களுக்கு லக்ஷணங்கள் சொல்லப்படாத போதிலும், அவர்களை நாம் அறிகிறோம். அப்படியே லக்ஷணமில்லாவிட்டாலும் உபநிஷத்வாக்யங்களாலே ப்ரம்மத்தை அறியலாம். இது இரண்டாவது சங்கைக்குப் பதில். ப்ரம்மத்தை அநுமானத்தாலே அறிந்தபோதிலும், அது அளவில்லாத ஆனந்தம் என்பது முதலானவைகளைச் சாஸ்திரத்தாலேயே அறியவேண்டியது. இது மூன்றாவது சங்கைக்குப் பதில். விதிவாக்யத்துக்கு உதவி செய்யாத ஸித்தபரவாக்யம் பிரமாணமோ என்பது கடைசி சங்கை. இதை ஒப்புக்கொண்டு ஸித்தபரவாக்யங்களை உபாஸநத்தை விதிக்கும் வாக்யங்களுடன் சேர்த்து, இவைகளும் ப்ரமாணங்கள் என்று பதில் சொல்லலாம். இப்படி இந்தச் சங்கைகளுக்கு அங்வாருஹ்யவாதத்தில் பரிஹாரங்கள்.

(3) பூர்வபக்ஷி ஸித்தபரவாக்யம் விதிவாக்யத்துக்குச் சேஷமா? அல்லது ஸ்வதந்த்ரமா? என்று விகல்பித்துத் தோஷங்களைக் காட்டினான். விதிக்குச் சேஷமானால், அந்த வாக்யம் அர்த்தவாதம். அப்போது அதன் கார்யம் விதித்த கர்மத்தைச் செய்வதில் ஒருவனுக்கு ஆசையையுண்டுபண்ணுவது. இத்துடன் அதன் யோக்யதை போய்விடுகிறது. ஆகையால் அந்த வாக்யத்தில் சொன்ன விஷயங்கள் உண்மைகள் என்று கொள்ளக் கூடாது. இப்படி அவன் சொல்லுவதை ச்லோகம் தூஷிக்கிறது. சொல்லப்பட்ட விஷயங்களுக்குப் பாதமிருந்தால் அவைகளை ஒப்புக்கொள்ளக்கூடாதது தான்; பாதமில்லாவிட்டால் அதை ஏன் ஒப்புக்கொள்ளக்கூடாது? சொல்லப்பட்டவைகள் உண்மையானவைகள் என்று ஒருவன் நம்பித்தான் விதித்த கர்மத்தைச் செய்ய ஆரம்பிப்பன். அவைகள் பொய்யென்று அறிந்தால் அவனுக்கு ஒரு ப்ரவ்ருத்தியுமுண்டாகாது. இந்த விஷயம் தேவதாதிகரணத்தில் விரிவாய்ச் சொல்லப்படும். ஆகையால் பரமாத்மவிஷயமான ஸித்த பரவாக்யங்கள், தாங்கள் சொல்லுகிற விஷயத்தில் ப்ரமாணங்களே.

(4) எவனுடைய செய்கையும் வாக்கும் மனதும் ஒத்திருக்கின்றனவோ, அவன் ருஜுவானவன். ஸூத்ரகாரர் பூர்வபக்ஷிகள் சொல்லுவது தகுந்தது அன்று என்று தெரிந்தும், அது தகுந்தது என்று ஒப்புக்கொண்டு (அங்கீகாரவாதத்தாலே) பரிஹாரம் சொல்ல இஷ்டமில்லாதவர். ஆகையால் அவரை 'ருஜு:' என்று ச்லோகம் சொல்லுகிறது. (23)

அவ:— 22-வது சுலோகத்தில் முதல் நான்கு அதிகரணங்களின் விஷயங்கள் சொல்லப்பட்டன; அவைகளையே வேறு ப்ரகாரமாய்ச் சொல்லுகிறார்:—

ஆத்யாத்யாயே ப்ரதீதிப்ரஜநநகடிதம் ஸித்தரூபேபி வாக்யம்
பரஸ்மிந் ஆத்யாம் வைஷம்யஶங்கா தத ந பரி
ஹ்ருதா ஶாஸ்த்ரதஜ்ஞைர்ப்ரவ்ருத்த்யா: । ஔசித்யாதேக
ஸாக்ஷாத்பூர்வோக்தஸித்தீ ப்ராப்தநீ யதநீயம் ஶாஸ்த்ரா
ரம்பேணேதம் ஶ்ரீ தயிதம் பரம் ஶாஸ்த்ரசித்ராஹா
ரேகே ॥ ॥ ௨௪ ॥

ஸித்தரூபமான பரப்ரம்மத்தைப்பற்றி ஜ்ஞாநம் உண்டாகும் என்பது முதல் இரண்டு அதிகரணங்களால் சொல்லப்படுகிறது. பிறகு இரண்டு அதிகரணங்களால் சாஸ்த்ரத்திற்கும், அதினால் உண்டாகும் அறிவுக்கும் பலன்கள் இல்லை என்ற சங்கைகள் போக்கப்படுகின்றன. இந்த வழி ஔசித்யத்தால் ஏற்படுகிறது. ஸ்ரீபாஷ்யத்தின் பலவிடங்களிலும் ஸ்வாரஸ்யத்தை ஆலோசித்துப் பார்த்தால், இதுவே ஸ்ரீபாஷ்யகாரருக்கும் ஸம்மதம் என்றும் ஏற்படுகிறது. இது பழைய வழி (இப்படியே பூர்வாசார்யர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்). இங்கு முதல் அதிகரணம் மாத்ரம் உபோத்காதம், மற்ற மூன்று அதிகரணங்கள் சாஸ்த்ரம் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

குறிப்பு:— (1) 22-வது சுலோகத்தின் கீழ் 6-வது குறிப்பைப் பார்க்க. முதல் அதிகரணத்தில் ஸித்தபரவாக்யங்களில் வ்யுத்பத்தி உண்டு என்பதும், இரண்டாவது அதிகரணத்தில் ப்ரம்மத்தினுடைய லக்ஷணவாக்யத்தில் ஒரு தோஷமும் இல்லை, ஆகையால் அதைக்கொண்டு ப்ரம்மத்தை அறியலாம் என்பதும், ஸ்தாபிக்கப்படுகின்றன. இதனால் பரப்ரம்மம் ஸித்தமாயிருந்தபோதிலும், அதின் அறிவு உண்டாகலாம் என்பது இந்த விசாரத்தின் பலன். ஆகையால் இந்த இரண்டும் ஒரு பேடிகை. மூன்றாவது அதிகரணத்தாலே ப்ரம்மத்தைச் சாஸ்த்ரத்தாலேயே அறியவேண்டியது என்பதும், நான்காம் அதிகரணத்தாலே ஸித்தபரமான வேதாந்தவாக்யங்கள் உயர்ந்த புருஷார்த்தத்தைக் காட்டுவதால் ப்ரயோஜநமுள்ளவைகள் என்பதும் ஸ்தாபிக்கப்படுகின்றன. இதனால் சாஸ்த்ரத்திற்கும் பலன் உண்டு. அதனால் உண்டான அறிவுக்கும் பலன் உண்டு என்பது ஏற்படுகிறது. ஆகையால் இவை இரண்டும் ஒரு பேடிகை.

(2) "ஔசித்யம் என்பது அர்த்தத்தின் ஔசித்யம். ப்ரம்மத்தைப் பற்றி விசாரிப்பதற்கு அதை இன்னதென்றும், அதனால் ப்ரயோஜநமுண்டு என்றும் அறியவேண்டும். அதை உபநிஷத்துக்களைக்கொண்டே அறியவேண்டியதாகையால், அவைகளின் வாக்யங்களிலுள்ள பதங்களுக்கு அர்த்தமுண்டு என்று அறியவேண்டும். அறிந்தபிறகு அதற்கு லக்ஷணத்தைச் சொல்லும் வாக்யம் தோஷமில்லாததா? அதைக்கொண்டு அதை அறியலாமா? என்று பார்க்கவேண்டும். இவ்வளவு ப்ரயாஸம்

வேண்டியதில்லை. அநுமானத்தாலே அதை அறியலாம் என்று சொன்னால், அதைப்பற்றி விசாரிக்கவேண்டும். அநுமானத்தாலே அறியமுடியாது என்று தீர்மானித்த பிறகு, அதை அறிவதனால் ப்ரயோஜநம் உண்டா என்று நிரூபணம் செய்யவேண்டும். ஆகையால் முதல் நான்கு அதிகரணங்கள் உபோத்காதம் என்பதும், விசாரத்தை ஸூத்ரங்கள் இருக்கிறபடியே செய்யவேண்டியது என்பதும் ஏற்படுகின்றன. இதுதான் அர்த்தத்தின் ஔசித்யம்.

(3) சாஸ்த்ரத்தை ஆரம்பிக்கவேண்டியது என்பதை நிரூபணம் செய்வது உபோத்காதம். நாலு அதிகரணங்களிலும் இந்த விசாரம்செய்யப்படுவதால் நாலுஅதிகரணங்களுக்கும் விஷயம் ஒன்றே. ஆகையால் அவைகள் சேர்ந்து உபோத்காதம் ஆகின்றன.

(4) ப்ராக்தநீ என்பதில்சொல்லப்பட்ட பூர்வாசார்யர்கள், கிடாம்பி ஆச்சான், எங்களாழ்வான், (விஷ்ணுசித்தன்) நடாதூரம்மாள், அப்புள்ளார் என்பவர்கள்.

(5) ச்லோகத்தில் "வகை" என்று சொல்லப்பட்டவர்கள் மேகநாதாரிஸூரி முதலானவர்கள். மேகநாதாரிஸூரி ச்ருதப்ரகாசிகைக்கு முன்பு ஸ்ரீபாஷ்யத்துக்கு வ்யாக்யாநம் எழுதினவர். (24)

அவ— முதல் நாலு அதிகரணங்களும் உபோத்காதம் என்பதைப் பூர்வர்களின் ஸம்மதியால் விளக்குகிறார்:—

यत्तत्सेनेश्वरार्यैरभणि वकुलभृत्किंकरै-
रङ्गीकारि व्यासार्यैरन्वयासि च श्रुतप्रकाशि
विशदं विष्णुचित्तैर्विवव्रे । कल्प्रौढं शेष-
कल्पाद्गुरुवरविदुषा वादिहंसाम्बुवाहात्
नित्यायत्तस्य तत्रयतिकरणी श्रुत्वैवोद्य
तायता ॥ ॥ २५ ॥

ஸேநேச்வராசார்யரால் நாலு அதிகரணங்களும் உபோத்காதம் என்று எண்ணப்பட்டன. இது வகுளப்ருத்தாஸராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது; ஆசார்யரிடமிருந்து கேட்கப்பட்டது என்று வியாஸார்யரால் அவர் செய்த இரண்டு க்ரந்தங்களிலும் எழுதப்பட்டது; ஸ்ரீவிஷ்ணுசித்தரால் நன்றாய் விளக்கப்பட்டது; ஆதிசேஷனுக்கு ஸமமான ஜ்ஞானமுள்ள வாதிஹம்ஸாம்பு

வாஹர் என்கிற ஆசார்யரிடமிருந்து இப்படியே நான் கேட்டேன். ஆகையால் ப்ரம்மவிசாரம் செய்ய ப்ரயத்நம் பண்ணவேண்டும் என்பதை ஸ்தாபிப்பதற்காகவே முதல் நாலு அதிகரணங்களும் ஏற்பட்டன என்பது நிச்சயிக்கப்படுகிறது.

குறிப்பு— (1) ஸேநேச்வராசார்யர் என்பவர் ஸ்ரீரங்கநாதனுக்கு அந்தரங்க கைங்கர்யம் பண்ணினவர்; அவர் செய்த க்ரந்தம் சாரீரக சாஸ்த்ராதிகரணார்த்த ஸங்க்ரஹம். வகுளப்ருத்தாஸர் - வரதநாராயணபட்டர்; அவர் செய்த க்ரந்தம் நியாய ஸுதர்சநம் வியாஸார்யர் செய்த க்ரந்தங்கள்— ச்ருதப்ரதீபிகையும்,ச்ருதப்ரகாசிகையும். விஷ்ணுசித்தர்—சடமர்ஷணகோத்ரத்தில் பிறந்தவர். அவர் செய்த க்ரந்தங்கள் - ப்ரமேயஸங்க்ரஹம் முதலானவைகள். வாதிஹம்ஸாம்புவாஹாசார்யர் ஸ்ரீதேசிகனுடைய ஆசார்யர். அவர் செய்த க்ரந்தம் ந்யாயகுலிசம் முதலானவைகள். (25)

அவ—சிலர் நாலு ஸூத்ரங்களுக்கும் வேறுவிதமாய் ப்ரயோஜனங்கள் சொல்லுவதை அநுவாதம்பண்ணித் தூஷிக்கிறார்—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥௨௬॥

இதி ஶாஸ்த்ராவதார: ॥

சிலர் முதல் ஸூத்ரத்தால் ஏற்படும் நியாயத்தை நான்காவது ஸூத்ரத்திலும், நான்காவது ஸூத்ரத்தால் ஏற்படும் நியாயத்தை முதல் ஸூத்ரத்திலுமாக மாற்றிச் சொல்லுகிறார்கள். இது ஸரியன்று. ॥ அந்த வஸ்துவின் அறிவு ஸித்திக்காமலிருக்க, அதற்கு பலனுண்டோ என்று எப்படி விசாரம் ஒருவன் செய்வன்? அறிவு உண்டாகும் என்று வைத்துக்கொண்டு முன்னால் பலவிசாரம் செய்யலாம் என்றால், இந்தப் பதில் சிலாக்யமன்று. நடுவிலுள்ள இரண்டு அதிகரணங்கள் ஜகத்துக்கு ரூபங்களையும் நாமங்களையும் உண்டுபண்ணுவதைச் சொல்லுகின்றன என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். இதுவும் ச்லாக்ய

மன்று. ரூபங்களும் நாமங்களும் செய்யப்படுவதை வேதவாக்யமே சொல்லுகிறது. இரண்டையும் செய்வதைச் சொல்வது லக்ஷண வாக்யத்துக்கு வேண்டியிருக்கிறது. இப்படியிருக்க, நியாயஸூத்ரங்களில் ரூபங்களைச் செய்வதையும், நாமங்களைச் செய்வதையும் ப்ரயோஜநமில்லாமல் பிரித்துக்காட்டுவது தகுந்தது அன்று.

குறிப்பு— (1) உபநிஷத்வாக்யங்களில் வ்யுத்பத்தி உண்டு என்பது முதல் ஸூத்ரத்தாலும், இதனால் உண்டாகும் அறிவுக்கு ப்ரயோஜநம் உண்டு என்பது நாலாவது ஸூத்ரத்தாலும் ஸ்தாபிக்கப்படுகின்றனவாகக் கீழே சொல்லப்பட்டது. இந்த க்ரமத்தை மாற்றிச் சிலர், முதல் ஸூத்ரத்தில் ப்ரம்மத்தை அறிவதற்கு ப்ரயோஜநமுண்டென்றும், நாலாவது ஸூத்ரத்தில் ப்ரம்மவிஷயமான ஜ்ஞாநம் வேதாந்தவாக்யங்களால் உண்டாகும் என்றும் தீர்மானிக்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். இதை, ப்ரம்மஜ்ஞாநம் உண்டாகாமல் அந்த ஜ்ஞாநத்துக்குப் பலன் உண்டா? என்று எப்படி எவன் விசாரிப்பன் என்று தூஷிக்கிறார். இதற்கு அவர்கள் சொல்லக்கூடிய பதில்— ப்ரம்மவிஷயமான ஜ்ஞாநமுண்டாகும் என்று வைத்துக்கொண்டு அந்த ஜ்ஞாநத்துக்குப் பலன் உண்டோ என்று விசாரிக்கப்படுகிறது— என்பது. இப்படி வைத்துக்கொண்டு க்ரமத்தைத் தப்பி விசாரம் பண்ணுவதற்கு என்ன ப்ரயோஜநம்? அதைக் காட்ட முடியாது என்பது கருத்து.

(2) "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே" என்கிற வாக்யத்தாலே பூதங்கள் (கார்யங்கள்) ரூபங்களையும் நாமங்களையும் உடையவைகளாக உண்டாகின்றன என்பது சொல்லப்படுகிறது. இந்த வாக்யத்தின் அர்த்தத்தை அறிவதற்கு ரூபங்களும் நாமங்களும் உண்டுபண்ணப்பட்டன என்பது வேண்டியிருக்கிறது. அவைகளும் "நாமரூபே வ்யாகரவாணி" என்று சேர்ந்தே சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பிரிப்பதில் பிரயோஜநமில்லை. இதற்கு அவர்கள் சொல்லக்கூடிய பதில்— புராணங்களில் முதலில் பொதுவாகச் சொல்லிப் பிறகு அதைப் பிரித்துச் சொல்லுகிறதுமுண்டு; அப்படியே இங்கேயும்— என்பது. இதுவும் ஸரியன்று. புராணங்களில் அப்படிச் சொல்லலாம். இது நியாயங்களை நிரூபிக்கும் சாஸ்த்ரம். இதில் இப்படிச் செய்வது தகுந்தது அன்று. இதில் சொல்லுவது முழுவதும் பலனுள்ளதாகவே இருக்கவேண்டும். (26)

சாஸ்த்ராவதாரம் முற்றிற்று.

ஜிஜ்ஞாஸாதிகரணம். ॥ க ॥

[illegible] ॥ ॥க॥

வாக்யம் பூர்ணமாவதற்காக இதில் கர்தவ்யா என்கிற ஒரு பதத்தைச்சேர்க்கவேண்டியது. அறியவேணும் என்கிற இச்சை ஜிஜ்ஞாஸை. இச்சை விஷயத்தின் அழகைப்பார்க்கும்போது தானே உண்டாகும். அதை விதிக்கவேண்டியதில்லை. இங்கே விரும்பவேண்டியது ஜ்ஞாநம். ஆதலால் ஜ்ஞாநம் ப்ரதாநம். இங்கு அது விசார்ரூபமானது. ஸூத்ரத்திற்குத் திரண்ட பொருள்-கர்மவிசாரம் செய்த பிறகு, அதனால் கர்மங்கள் கொடுக்கும் பலன்கள் அல்பங்கள் என்றும், நிலையில்லாதவைகள் என்றும் அறிந்து, அவைகளில் வெறுப்புள்ளவனும், உபநிஷத்துக்களில் ப்ரம்மம் அளவில்லாத நிலையான ஆனந்தம் என்று சொல்லியிருப்பதை அறிந்து அதில் ஆசையுள்ளவனுமாக எவன் இருக்கிறானோ, அவன் ப்ரம்மவிசாரத்தைச் செய்யவேண்டியது— என்பது.

அவ:— இந்த அதிகரணத்தில் பூர்வபக்ஷத்தைப் ப்ராபாகரன் என்கிற மீமாம்ஸகன் சொல்லுகிறான். அந்தப் பக்ஷத்தை அநுவதித்து ஸூத்ரகாரரின் அபிப்ராயத்தை வெளியிடுகிறார்:—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ॥ உஎ ॥

கார்யத்தைச் சொல்லுகிற வாக்யத்தைக் கேட்கும்போது தான் முதல் வ்யுத்பத்தி உண்டாகிறது. ஸித்தபரமான வாக்யங்களில் இது உண்டாகாது. ஆகையால் எல்லா வாக்யங்களும் கார்யபரங்களாகவே (கார்யத்தைச் சொல்லுகிறவைகளாகவே) இருக்கின்றன. இது உலகநியாயம். வேதத்திலும் இதே நியாயம்தான் உண்டு. வேறு நியாயமில்லை. ஆகையால் உபநிஷத்துக்கள் ஊஷர பூமிபோல் ஒன்றுக்கும் உதவாமல் இருக்கின்றன. ஆகையால், அதனால் சொல்லப்பட்ட விஷயத்தைக் குறித்து விசாரிப்பது

தருந்தது அன்று- இப்படிப் பூர்வபக்ஷி சொல்ல, ஸித்தபரங்களான வாக்யங்களிலும் முதல்வ்யுத்பத்தி பலவிதமாய் உண்டாகும் என்பதை நிச்சயித்து, ஸூத்ரகாரர் ப்ரஹ்மத்தைப்பற்றி விசாரிக்கலாம் என்று சொல்லுகிறார்.

குறிப்பு– (1) 'கா3மாநய' (மாட்டைக்கொண்டு வா) என்று ஒருபெரியவர் சொன்னதைக்கேட்டு ஒருவன் மாட்டைக்கொண்டு வருகிறான். இதைப் பார்த்துக்கொண்டிருக்கிற மூன்றாவது மனிதன் கா3மாநய என்கிற வாக்யத்திற்கு 'மாட்டைக் கொண்டுவா' என்பது பொருள் என்று அறிகிறான். இப்படியே 'அஶ்வமாநய' (குதிரையைக் கொண்டு வா) முதலான வாக்யங்களைக் கேட்டும் குதிரையைக் கொண்டுவருவது முதலியவற்றைப் பார்த்தும் வருகிறான். பிறகு அவைகளைச் சேர்த்துப் பார்த்து, கோ3 என்பது மாட்டையும், அஶ்வ என்பது குதிரையையும், ஆநய என்பது கொண்டுவருவதையும் சொல்லுகின்றன என்று அறிகிறான். இப்படித்தான் முதல் வ்யுத்பத்தி உண்டாகிறது என்பது பூர்வபக்ஷியின் கருத்து.

(2) கார்யம்- க்ருதியினால்(ப்ரயத்நத்தால்) ஸாதிக்கப்படுவது.

(3) ஊஷரபூமியில் விதைக்கிறவனுக்குப் பலன் கிடைக்காது. ப்ரயாஸம் மாத்ரம் உண்டு. அப்படியே உபநிஷத்துக்களைப் பற்றி விசாரிப்பதால், ஒரு பலனும் கிடைக்காது. ச்ரமம்தான் உண்டாகும் என்பது இந்த உபமானத்தின் கருத்து. உபநிஷத்துக்களில் கார்யபரமான வாக்யமே இல்லை. எல்லா வாக்யங்களும் ஸித்தபரங்களே என்பது பூர்வபக்ஷியின் கருத்து. (27)

அவ:— முதல் வ்யுத்பத்தி உண்டாகும் விதங்களில் எல்லாரும் அறிந்த ஒரு விதத்தைச் சொல்லுகிறார்:—

அம்பா3தாதாதி3 நிர்தே3ஶ: ஶநை: ஶநை: ததா2ந்யகாம்
ஶிஶோ: ப்ரத்யக்ஷகோ3சரார்தா2ந் வ்யுத்பாத3யந்தி ஶப்3தா3ந்
ஶிக்ஷிதஜ்ஞாதஸம்ப3ந்த: ஸம்பா3த்3யஸ்ய பதா3நாம்
விஷயதி3 வ யியம் ஸ்வாமி ஸிக்ஷ விஶிஷ்ட ஸ்தத்ப்ரோ
ஸ்வாமி வேதி ஸ்வநிவி நியதி: ஶப்3த3ஶக்தே ஸ்ப்ருஹா ||

தாய் தகப்பன் முதலானவர்கள் குழந்தைகளுக்கு அந்தந்த வஸ்துவைக் கைவிரலினால் சுட்டிக்காட்டி அந்தந்த வஸ்துக்களைச்

சொல்லுகிற சொற்களைப் பிரயோகிக்கிறார்கள். இப்படித் தனித் தனி சப்தங்களுக்குத் தனித்தனி அர்த்தம் காட்டப்படுகிறது. இப்படியானபிறகு, சப்தங்களைச் சேர்த்து வாக்யமாகப்பிரயோகம் செய்தால், அந்த வாக்யத்தின் அர்த்தமும் தெரிந்துவிடும் என்று நினைத்து அந்த சப்தங்களைச்சேர்த்து வாக்யமாகவும்சொல்லுகிறார்கள். இப்படிச்சேர்த்துச் சொல்லப்பட்ட சொற்கள், விசிஷ்டத்தைச் சொல்லுகிறஸித்தபரவாக்யங்களிலும், கார்யபரவாக்யங்களிலும் முதல் வ்யுத்பத்தியை உண்டுபண்ணுகின்றன. இந்தக் காரணத்தால் கார்யத்தைச் சொல்லுகிற வாக்யங்களில்தான் முதல் வ்யுத்பத்தி உண்டாகிறது, ஸித்தபரவாக்யத்தில்உண்டாகிறதில்லை என்று ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தக்கூடாது.

குறிப்பு— (1) பெரியவர்கள் சிறுவர்களுக்கு ‘இதுமாடு’ என்று அதைக் கைவிரலால் காட்டி ‘கௌ:’ (மாடு) என்கிற சொல்லைச் சொல்லுகிறார்கள். இப்படிப் பலதடவை காட்டின பிறகு மாட்டைப் பார்க்கும்போது கௌ: என்கிற சொல்லின் நினைவும், அந்தச் சொல்லைக் கேட்கும்போது மாட்டின் நினைவும் சிறுவர்களுக்கு வருகின்றன. இப்படிச் சொற்களுக்கும் அவைகளின் அர்த்தங்களுக்கும் ஸம்பந்தம் அறியப்படுகிறது. இந்த ஸம்பந்தம் ஸம்யோகம் முதலான ஸம்பந்தங்கள் அல்ல. இந்தச் சொல் இந்த அர்த்தத்தைச் சொல்லவேண்டும் என்று ஸங்கேதம் பண்ணினவன் காணப்படாமையால் இது ஸங்கேதமுமன்று. ஆகையால் ஸம்பந்தம் வாச்யவாசகபாவம்தான் என்று அறியப்படுகிறது. வாச்யம் - சொல்லப்படும் அர்த்தம். வாசகம் - அதைச் சொல்லும் சொல்.

(2) ‘நான் மாட்டைப் பார்த்தேன்’ என்கிற வாக்யத்தில் மூன்று சொற்களின் அர்த்தங்களும் சேர்ந்திருக்கின்றன. இது விசிஷ்டமான அர்த்தம். ஒவ்வொரு தனிப்பதத்தின் தனியான அர்த்தம் விசிஷ்டமாகாது. (28)

அவ:— பெரியோர்கள் சிறுவர்களுக்கு மூன்று நான்கு தடவைகளில் கீழ்ச் சொன்னபடி சிக்ஷை செய்வதாலே எப்படி த்ருடமான வ்யுத்பத்தி உண்டாகும் என்றால், அதற்குப் பதில் சொல்லுகிறார்:—

ஸம்ஸாரே(அ)நாதிஸித்தே பஹுவிதாநுபவதஃ ஸம்ப்ரு
தாஃ ஸம்ஸ்க்ரியாஸ்ஸ்யுஃ ஸம்ஸ்காரோத்போதகாஶ்ச ப்ரவஹ
வந்நிவர்த்யஸ்ப்ருஷ்டஸ்வபாவாஃ ப்ரவாஹாத் ॥ தத்தஜ்ஜாதீயபே
தக்ரஹணஸஹக்ருதா வ்யுத்பத்திஸ்ஸந்நிதாநாத்ஸ்த்ராக்ஷி
காச்சித்வ்யவஹ்ருதிஷு ஶிஶோரங்குல்யாதிபோத்யாஃ ॥

ஆதியில்லாமல் வெகு காலமாக வருகிற ஸம்ஸாரத்தில் பல தடவை அநுபவங்களால் ஸம்ஸ்காரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நினைவுகளை உண்டாக்கும் ஸம்ஸ்காரங்களைத் தூண்டிவிடுபவைகள் ஆற்றின் பிரவாஹம்போல விடாமல் தொடர்ந்துவரும் காரணங்களால் தாமாகவே வருகின்றன. "இவை ஒரே மாதிரியானவை, இவை வேறுபட்டவை" என்று அறிவுக்குத்தகுந்த புத்தியின் வியாபாரங்களும் அந்த ஸம்ஸ்காரங்களாலேயே ஏற்படுகின்றன. ஆகையால் குழந்தைகளுக்குத் தாய்தந்தைகள் விரலால் சுட்டிக்காட்டிச் சொல்லும் வார்த்தைகளுக்கும் இன்னது அர்த்தம் என்ற ஜ்ஞாநம் அந்த ஸம்ஸ்காரவசத்தாலே உண்டாகிறது.

குறிப்பு- (1) அவதாரிகையில் சொன்ன கேள்விக்குப் பதில்— சிறுவர்கள் முன் பிறப்பில் சொற்களைச் சொல்லி, விரலால் சுட்டிக்காட்டி அவைகளின் அர்த்தங்களை அறிவிக்கப்பட்டிருந்தார்கள். அந்த அநுபவங்களாலே அவர்களுக்கு ஸம்ஸ்காரங்களுண்டாகிப் பலப்பட்டிருந்தன. அந்த ஸம்ஸ்காரங்களாலே மறு பிறப்பில் பெரியோர்கள் சிக்ஷை செய்யும்போது முன் அறிந்த வ்யுத்பத்தி நினைவுக்குவருகிறது. ஆகையால் வ்யுத்பத்தி உண்டாகக் குறைவில்லை.

(2) இது ச்லோகத்தின் மூன்று பாதங்களால் விவரிக்கப்படுகிறது. ஜீவன்களுக்குப் பிரளயத்திற்கு முன் பிறப்பில் அநுபவங்களால் ஸம்ஸ்காரங்கள் உண்டாயிருந்தன. பிரளயம் முடிந்து ஸ்ருஷ்டிகாலத்தில் உண்டானவர்களுக்கு இந்தஸம்ஸ்காரங்களால் தூண்டப்பட்டு முன் அநுபவித்த விஷயங்கள் நினைவுக்கு வருகின்றன. இதை எல்லாரும் ஒப்புக்கொள்ளவேண்டும். குழந்தை பிறந்தவுடன் தாயார் ஸ்தந்யத்தைச் சாப்பிடுகிறதே, இது முன் உண்டான ஸம்ஸ்காரத்தாலேயே ஏற்படுகிறது. இல்லாவிட்டால், குழந்தை தாயார் ஸ்தந்யத்தை ஸாப்பிடுவதற்கு வேறு காரணம்

சொல்லமுடியாது. ஸம்ஸ்காரங்கள் எப்படித் தூண்டப்படுகின்றன என்றால், ஜீவனுடைய கர்மப்ரவாஹங்களில் அவைகளைத் தூண்டும் காரணங்களும் இருக்கின்றன. ஜீவனுடைய கர்மப்ரவாஹங்கள் வெவ்வேறாயிருக்கிறபடியால் இந்தக் காரணங்கள் அவரவர்களுக்குத் தகுந்த காலங்களில் ஏற்படுகின்றன.

(3) 'ஸாப்பிட்டால் பசி தீரும், படுத்துக்கொண்டால் களைப்புத் தீரும்' என்று அநுமானத்தாலேதான் ஒருவன் அறியவேண்டியது. மலையில் நெருப்பிருக்கிறது, புகையிருப்பதால் என்று அநுமானத்தால் நெருப்பிருப்பதை அறிகிறோம். அதற்கு முன்னாலே புகையையும், நெருப்பையும், அவைகள் சேர்ந்திருப்பதையும் பார்த்திருக்கவேண்டும். அதுபோல ஸாப்பிட்டால் பசிதீருவதையும், தூக்கத்தாலே ஸுகமுண்டாவதையும் முன்னால் அறிந்திருக்கவேண்டுமே என்றால், இவைகள் முன் பிறப்புக்களில் அறியப்பட்டன. அதினால் ஸம்ஸ்காரங்கள் உண்டாயிருந்தன. அந்த ஸம்ஸ்காரங்களால் இப்போது அவைகளின் நினைவும், இவைகளும் அவைகள்போலவே என்ற எண்ணமும் உண்டாகின்றன. இப்படி ஜீவன்களின் வியாபாரங்கள் நடக்கின்றன.

(4) ஒரு பிறப்பிற்கு முன்னாலே பிறப்புக்கள் இருந்தன என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். ஏன் என்றால், ஸம்ஸாரத்திற்கு ஆதியில்லை. இதைச் ச்லோகம் "ஸம்ஸாரொzநாதிஸிஜெ" என்று சொல்லுகிறது. (29)

அவ:— வ்யுத்பத்தி லகுவாயுண்டாவதற்கு இன்னும் தெளிவான உதாரணத்தைக் காட்டுகிறார்:—

உலெகஷூாாயொரணாலெஷ்ரநூஜித விவிய ஷூயா
லொவயொலைெ: ஶிக்ஷாஷொ விவிதூா மஜவிஹமஜ
வாநு மூாஹயஜி: ஹூவ்யதூா: । தஸூாக வாயொூா
உநூஷுஹூஹூதிஷ வ தயாஹூ தஶிக்ஷாவிஶெஷ:
கூெவா ஹாஷுூாநிதொzயம் நயதி கயஉேஸள கூவதெz
ஹூூாzவி உரமூ: ॥ ॥ ௩௦ ॥

உலகத்தில் ஸமர்த்தனான யானைப்பாகன் யானைக்குப் பல சிக்ஷைகளைச் செய்கிறான். சிலர் கிளிகளுக்குச் சொற்களைச் சொல்

ல்பபழக்குகிறார்கள். இவர்கள் தாங்கள் எடுத்துக்கொள்ளும் ப்ரயாஸத்துக்குப் பலன் உண்டாகும் என்று ஊஹித்து அறிந்து சிக்ஷைகளைச் செய்கிறார்கள். அவைகளுக்குப் பலன் உண்டாவதையும் நாம் பார்க்கிறோம் இப்படித் திர்யக்குகள் விஷயத்தில் சிக்ஷைக்குப் பிரயோஜநம் உண்டானால், மனிதக்குழந்தைகள் விஷயத்தில் செய்யப்படும் வெவ்வேறு சிக்ஷைகளுக்குப் பலன்கள் ஏன் உண்டாகா? வ்யுத்பத்தி உண்டாவதற்குள்ள இந்த வழி ஸ்ரீபாஷ்யத்தில் சொல்லப்படுகிறது. இந்த வழியை ஒப்புக்கொள்ளாவிட்டால் வேறு வழியாலும் வ்யுத்பத்தி உண்டாகாது என்று சொல்லக் கூடும்.

குறிப்பு— ஸ்ரீபாஷ்யகாரர் சொன்ன விதத்தை ஒப்புக்கொள்ளாவிட்டால் பூர்வபக்ஷி சொல்லும்விதத்தாலும் முதல்வ்யுத்பத்தி உண்டாகாது என்று சொல்லக்கூடும். 'காமாநய' என்கிற வாக்யத்தைக் கேட்டவன் எழுந்திருப்பது, துணியைக் கட்டிக்கொள்ளுவது, கோலை எடுத்துக்கொள்ளுவது, தற்செயலாய்க் கிட்ட இருப்பவர்களுடன் பேசுவது, மாடு இருக்குமிடம் போவது, மாட்டைக்கொண்டு வருவது முதலான பல வியாபாரங்களைச் செய்கிறான். இவைகளில் எந்த வியாபாரம் பெரியவன் சொன்ன வாக்கியத்திற்கு விஷயம் என்று மூன்றுவது மனிதனுக்கு எப்படித் தெரியும்? ஆகையால் வ்யுத்பத்தி உண்டாகாது. அந்தக் கட்டளைக்கு இந்த வியாபாரம்தான் விஷயமென்பது *அந்வயவ்யதிரேகங்களால் அறியப்படுகிறது என்றால், அப்படி ஸித்தபரவாக்யத்திற்கும் அர்த்தம் தெரியலாம். (30)

அவ:— ஸித்தபரவாக்யங்களில் வ்யுத்பத்தி உண்டாகும் என்பதை வேறு விதமாயும் காட்டுகிறார்:—

கஂஷெஹஸீஸ ஸிஜஃயஃ்ம கஃவி கயுயிதஂ வெஷ்டயா
வொதஂத்ரூாநஹஸெஹ தஂ வக்தி தஜீஸஃவிஷயதயா ஶிக்ஷதெ தஃவொதந்யஃ। ஞூிஷெ்டா வொயநாயஃ்ம யதிஹ
விதநூதெ தத்ஃயஃ்ம ஹியஂஜஂ தஆாஜ்யாஸ ஸிஜ
வெதீ வூயதத ஐதி வெஷஸ்வநாஷெஶிகஂ தஸ ॥ ௩௧ ॥

*இது இருந்தால் அது உண்டாகும் என்பது அந்வயம். இது இல்லாவிட்டால் அது உண்டாகாது என்பது வ்யதிரேகம்.

ஒருவன் மௌனமாயிருந்துகொண்டு, ஏற்கெனவே ஏற்பட்டிருக்கும் (ஸித்தமான) ஒரு விஷயத்தை ஒருவனுக்குத் தன் சேஷ்டையால் (அபிநயத்தால்) தெரிவித்து, இந்த விஷயத்தைத் தூரத்திலிருக்கும் மற்றொருவனுக்குச் சொல்லும்படி அவனை அனுப்புகிறான். இவனும் அங்கே போய்த் தனக்குச் சேஷ்டையால் அறிவிக்கப்பட்ட விஷயத்தை வாக்யத்தால் சொல்லுகிறான். ஏவின இடத்திலிருந்த ஒரு சிறுவன் சேஷ்டையின் கருத்தைத் தெரிந்துகொண்டு விஷயத்தை அறிந்துகொள்ளுகிறான். இந்தச் சிறுவனும் கூடவே வந்து அனுப்பப்பட்டவன் சொன்ன வாக்யத்தைக் கேட்கிறான். பிறகு தான் அறிந்துகொண்டிருக்கும் ஸமாசாரமே அனுப்பப்பட்டவன் சொன்ன வாக்யத்துக்கு அர்த்தம் என்று வ்யுத்பத்தி சிறுவனுக்கு உண்டாகிறது. எதைத் தெரிவிக்கும்படி எவன் ஏவப்பட்டானோ, அவன் வாக்யத்துக்கு அதுதானே பொருளாயிருக்கத் தக்கது. இப்படி ஸித்தமான விஷயத்தைத் தெரிந்துகொண்ட பிறகு, அவன் செய்யும் பல காரியங்களும் தெரிந்துகொண்டதின் பலன்களையன்றி அந்த வாக்யத்தின் பொருள்களாகமாட்டா.

குறிப்பு— (1) ஒரு மௌனி "உனக்குப்பிள்ளை பிறந்திருக்கிறது" என்கிறஸமாசாரத்தைத்தூரத்திலிருக்கிற தகப்பனுக்குச் சொல்லு என்றுசாடையால்அறிவித்து ஒருவனை ஏவுகிறான். ஏவப்பட்டவன் அந்த ஸமாசாரத்தை "புத்ரஸ்தே ஜாத:" என்கிற வாக்கியத்தாலே சொல்லுகிறான். ஏவினவன் கூட இருந்தவனும் சேஷ்டையின் கருத்தை அறிந்தவனுமான ஒரு சிறுவன் அனுப்பின ஸமாசாரத்தை அறிந்து, ஏவப்பட்டவன் கூடப் போய் அவன் சொன்னவாக்யத்தைக்கேட்டு, இந்த வாக்யத்துக்கு இந்த ஸமாசாரம் விஷயம் என்று அறிகிறான். இப்படி ஸித்தபரமான வாக்யத்திலும் வ்யுத்பத்தி உண்டாகும்.

(2) இந்த வாக்யத்துக்குச் சொன்ன ஸமாசாரம்தான் விஷயம் என்று எப்படிச்சிறுவன் நிச்சயிக்கிறான் என்றால், எவனுக்கு எந்த வேலையிடப்படுகிறதோ, அவன் அந்த வேலையைச் செய்கிறான் என்பது உலகநியாயம். ஆகையால் ஏவினவன் சேஷ்டைமூலம் சொன்ன ஸமாசாரத்தையே ஏவப்பட்டவன் தெரிவிக்கிறான் என்று சிறுவன் அறிகிறான்.

(3) விசிஷ்டத்தைச் சொல்லுகிற ஸித்தபர வாக்யத்துக்கு இப்படி விசிஷ்டம் அர்த்தம் என்று தெரியலாம். அந்த வாக்கியத்திலுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் இது அர்த்தம் என்று எப்படி அறிகிறது என்ருல், கார்யபரமான வாக்யத்தால் எப்படிச்சொற்களின் அர்த்தங்கள் அறியப்படுகின்றனவோ, அப்படியே ஸித்த பரவாக்யங்களிலும் அறியலாம். இரண்டு பக்ஷத்திலும் அறியும்வழி ஆவாபத்தாலும் உத்வாபத்தாலும். ஆவாபம் என்பது ஒரு சொல்லை ஒரு வாக்யத்தில் சேர்ப்பது. உத்வாபம் என்பது ஒரு வாக்யத்திலிருந்த சொல்லை எடுத்துவிடுவது.

(4) ஸித்தபரம் என்று நீ சொன்ன வாக்யம் கார்யத்தையே சொல்லுகிறது. ஏன் என்ருல், அதைக்கேட்டவன் உடனே ஸ்நானம் ஜாதகர்மம் கோதாநம் முதலான வியாபாரங்களைச்செய்கிருன். ஆதலால் அந்த வாக்யமும் கார்யபரம்தான் என்ருல், அந்த வாக்யத்துக்கு இந்த வியாபாரங்களைச் செய் என்பது பொருள் அன்று. அவைகளை அவன் தானே செய்கிருன். பூர்வபக்ஷியும் அந்த வியாபாரங்களைச் செய்யும்படி அந்த வாக்யம் விதிக்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டே தீரவேண்டும். (31)

அவ:— ஸித்தபர வாக்யங்களில் வ்யுத்பத்தி உண்டாகும் மற்ருெரு ப்ரகாரத்தைச் சொல்லுகிருர்:—

புத்ரஸ்தே ஜாத இத்யாதிஷு வசநத:
ப்ரீதிப்ரீத்யாதி ஹேதுத்வ க்ரஹணம் தத்ஸ்வம்
விஷயநியதிராஸக்திவத்வேஷு: ஸ்வஸ்ய ஸ்வ ஸ்வ ।
ஆவாபோத்வாபயோகாத் ஸ்ருதிவசநியதா ஶக்திரவ்யு
த்ரவ்யே ஸ்வத்வாத் த்ருஷ்டாதிஸாஹாய்யகமிஹ வசஸ:
கார்யபக்ஷாவிஶிஷ்டம் ॥ ||௩௨||

“உனக்குப்பிள்ளை பிறந்திருக்கிறது” என்றும், “இது ஸர்ப்பம் அன்று” என்றும் சொல்லும் வாக்யங்களால் ஸந்தோஷமுண்டாவதையும், பயம் போவதையும் முகத்தெளிவாலும் திரும்பி வருவதாலும் ஊஹித்து அறிகிருேம். அந்த லிங்கங் (அடையாளங்) களாலே அவைகளை உண்டாக்கத் தகுந்த அர்த்தங்களை அந்த வாக்யங்கள் தெரிவிக்கின்றன என்று ஊஹிக்க வேண்டும். அப்போது வேறு காரணங்களில்லாமையாலும் இவைகளே

இருப்பதாலும் இவைகளைக் கேட்டவன் பிறகு செய்யும் காரியங்களாலும் அந்த வாக்யங்களால் சொல்லப்பட்ட விஷயம் இன்னது தான் என்பதை அறிந்துகொள்ள முடியும். கேட்ட வாக்யத்தில் ஒவ்வொரு சொல்லுக்கும் இன்னது அர்த்தம் என்பது அந்தந்தப் பதங்களின் ஆவாபத்தாலும் உத்வாபத்தாலும் அறியக் கூடும். பல ப்ரயோகங்களிலும் இப்படி ஒத்துக் காண்பது முதலானவைகள் சொற்களின் அர்த்தத்தை அறியும் விஷயத்தில் உதவி செய்கின்றன. கார்யபர வாக்யங்களாலேயே வ்யுத்பத்தி உண்டாகிறது என்கிற பக்ஷத்திலும் இந்தக் காரணங்கள் வேண்டியவைகளே.

குறிப்பு:— (1) வ்யுத்பத்தியை அடைய விரும்புகிற ஒரு சிறுவன் "உனக்குப் பிள்ளை பிறந்தது" என்கிற வாக்யத்தை ஒருவன் தகப்பனுக்குச் சொன்னதைக் கேட்கிறான். தகப்பனுடைய முகத்தில் ஸந்தோஷக் குறியையும் பார்க்கிறான். ஸந்தோஷத்திற்குக் காரணம் வாக்யத்தின் அர்த்தத்தை அறிந்தது தான் என்று நிச்சயித்து, அந்த வாக்யத்திற்கு 'உனக்குப் பிள்ளை பிறந்தது' என்பது அர்த்தம் என்று அறிகிறான். இப்படியே கயிற்றைப் பாம்பாகப் பிரமித்து ஓடுகிறவனுக்கு "இது பாம்பு அன்று" என்று வேறு ஒருவன் சொல்லுவதைச் சிறுவன் கேட்டு, அவன் ஓடாமலிருப்பதைப் பார்த்து, இந்த வாக்யத்தால் பயம் போய்விட்டது என்று நிச்சயித்து, இந்த வாக்யத்துக்கு "ஸர்ப்பமன்று" என்பது பொருள் என்று அறிகிறான். இது ஸித்த பர வாக்யத்தில் வ்யுத்பத்தி உண்டாகும் ப்ரகாரம்.

(2) பூர்வபக்ஷி கேட்கிறான்:— முதலில் சொன்ன வாக்கியத்தைக் கேட்டவுடன் ஒருவனுக்கு ஸந்தோஷமுண்டாகிறது. அது பிள்ளை பிறந்ததை அறிந்ததனால் தான் உண்டாயிற்று என்பதைச் சிறுவன் எப்படி அறியக் கூடும்? "உன் வீட்டில் புதையலிருக்கிறது" என்று சொன்னதாக நினைத்து ஸந்தோஷப்பட்டதாக நினைக்கலாமே. இப்படியே வழியிலிருக்கும்கயிற்றைப் பார்த்து "இது பாம்பு" என்று எண்ணி பயந்து ஓடுகிறவன் "இது பாம்பு அன்று" என்று ஒருவன் சொன்னால், பயம் நீங்கி ஓடாமல் திரும்புகிறான். இங்கு பாம்பில்லை என்று தெரிந்து

தான் பயம் போய்விட்டது என்று எப்படிச் சிறுவன் நிச்சயிக்கலாம்? "உன் வீட்டில் புலியில்லை" என்று சொன்னாலும் பயம் நீங்குமே. அப்படியே சொன்னதாகவும், அதனால் அவன் பயம் போய்விட்டதாகவும் ஏன் சிறுவன் ஊஹிக்கக் கூடாது—என்று.

பதில்— அந்தந்த வாக்யங்களைக் கேட்கும்பொழுது ஸந்தோஷமுண்டாவதற்கும், பயம் போவதற்கும் வேறுகாரணம் காணப்படவில்லை. பிள்ளைப்பிறப்பு முதலானவைகளே அப்போதிருந்தன. வாக்கியத்தைக் கேட்டவன் செய்யும் வியாபாரங்களைச் சிறுவன் பார்க்கிறான். ஸந்தோஷமுண்டானது முதலானவைகளுக்கு பிள்ளை பிறந்தது முதலானவைகளே காரணம் என்று அவன் தீர்மானம் செய்கிறான். பிறகு தான் கேட்ட வாக்யத்துக்குத் தான் தீர்மானம் பண்ணினதுதான் அர்த்தம் என்று தெரிந்து கொள்ளுகிறான்.

(3) "உனக்குப் பிள்ளை பிறந்தது" என்கிற வாக்யத்தைக் கேட்டவுடன், கேட்டவன் ஜாதகர்மம் கோதானம் முதலானவைகளைச் செய்வதால், பிள்ளை பிறந்ததை அறிந்ததுதான் ஸந்தோஷத்துக்குக் காரணம் என்று நிச்சயிக்கலாம். ஸந்தோஷத்துக்குக் காரணமாக அப்பொழுது வேறொன்றும் இல்லையே. இப்படியே கயிற்றைப் பாம்பாக ப்ரமித்து பாம்பு என்று சொல்லிக்கொண்டு ஓடினவன் "பாம்பு அன்று" என்று சொன்னதைக் கேட்டுத் திரும்பி வருவதால் பாம்பு அன்று என்பதை அறிந்ததுதான் பயம் போவதற்குக் காரணம் என்று நிச்சயிக்கலாம்.

(4) பூர்வபக்ஷியின் மறு கேள்வி:— சில வியவஹாரங்களை மாத்திரம் கொண்டு சிறுவனுக்கு வ்யுத்பத்தி உண்டாகுமோ என்றால், நாம் அப்படிச் சொல்லவில்லை. பல தடவை வியவஹாரங்களைக் கேட்பது தான் வ்யுத்பத்தி உண்டாவதற்கு உதவி செய்கிறது. இதைப் பூர்வபக்ஷியும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

அவ:— கார்யபரவாக்யங்களிலேயே முதல் வ்யுத்பத்தி உண்டாகும் என்கிற வாதத்தை ஒப்புக்கொண்டாலும், சொற்கள் கார்யத்தையே சொல்லுகின்றன என்று சொல்லுகிற வாதம் ஸரியன்று என்றும், ஸித்தபரவாக்யங்களில் வ்யுத்பத்தி வேறுவிதமாயுமுண்டாகிறது என்றும் காட்டுகிறார்—

கார்யே வ்யுத்பத்திராத்யா பவது ததபி கிம் ஶக்ததா
த்வய்யஸித்தே: ப்ராக்வ்யுத்பத்தி: க்ரியாயாம் த்வபவவஸி நிக
மே க்வாந்யே த்வத்யஹ்யவைஷி। ஸ்யாவ்யாதொऽநந்யதா
ஸித்யந்நர்த்தேஷ்வியதை: ஸம்ப்ரயோகைஷு ஶக்தி:
கோऽயம் ஸ பாஞ்சாலதத்யாத்யவிததமிதிகம் ஸித்த
மர்த்தம் வாக்யம் ॥ ॥௧௧॥

கார்யபரவாக்யத்தில்தான் முதல் வ்யுத்பத்தி உண்டாகிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். எல்லாச் சொற்களும் கார்யத்தையே சொல்லுகின்றன என்று தீர்மானம் பண்ணக் காரணம் என்ன? முதல் வ்யுத்பத்தி மனிதன் சொல்லில் (லோகத்தில்) கிரியையில் உண்டாவதாகவும், வேதத்தில் அது வேறு பொருளில் உண்டாவதாகவும் நீ ஒப்புக் கொள்ளுகிறாய். ஆகையால், அநந்யதாஸித்தி, அநுகமம் இவைகளுடன் சேர்ந்திருக்கிற பெரியோர்களின் ப்ரயோகங்களால் தான், இன்ன சொல்லுக்கு இன்னபொருள் என்பதை ஸ்தாபிக்கவேண்டியது. கோऽயம் (இவன் யார்) என்கிற கேள்விக்கு "பாஞ்சாலன்" என்று பதில் சொல்லப்படுகிறது. இதற்கு மேல் ஆகாங்க்ஷை இல்லை. இந்த இடங்களில் வாக்கியம் ஸித்தமான அர்த்தத்தையே சொல்லி முடிகிறது.

குறிப்பு:— (1) ப்ராபாகரன் விதியைச் சொல்லுகிற பதத்தில் இருக்கும் * லிங் என்கிற ப்ரத்யயம் காரியத்தைச் சொல்லுகிறது என்று சொல்லுகிறான். கார்யம் என்பது

---

* "யஜேத ஸ்வர்க்காம:" என்கிற விதி வாக்யத்தில் யஜேத என்பது விதியைச் சொல்லுகிறது. "யஜேத" என்கிற சொல்லில் யஜ் + அ + ஈத என்று மூன்று அம்சங்கள் இருக்கின்றன. யஜ் என்பது தாது. யாகம் அதன் பொருள். ஈத என்பது லிங் என்ற ஆக்யாதம் என்று சொல்லப்பட்ட விகுதி. அது ஆக்யாதம் என்ற முறைமையில் காலம் வசநம் முதலானவைகளைக் காட்டுகிறது, லிங் என்கிற முறைமையில் விதியைச் சொல்லுகிறது. அ என்பது தாதுவுடன் ஆக்யாதம் சேரும்போது நடுவில் வரும் விகுதி, அர்த்தம் கிடையாது.

க்ருதி ஸாத்யம் (ப்ரயத்னத்தாலே செய்யப்படுவது.) அது க்ரியை. லௌகிக வாக்யங்களில் கார்யமானது க்ரியை (செய்கை); வேதவாக்யங்களில் கார்யம் அபூர்வம். இப்படி லிங்குக்கு ஓரிடத்தில் க்ரியை அர்த்தம் என்றும், மற்றோரிடத்தில் அபூர்வம் அர்த்தம் என்றும் அவன் சொல்லுகிறான். இரண்டிடத்துக்கும் பொதுவான ஓர் அர்த்தத்தைச் சொல்லவில்லை. மேலும், வாக்கியங்களிலிருக்கும் சொற்கள் ஒன்றோடு சேர்ந்த அதன் அர்த்தங்களைச் சொல்லுகின்றன (அந்விதாபிதாநம்) என்று ஒரு மதம். இந்த மதத்தை வைத்துக்கொண்டு லிங்கைத் தவிர லௌகிக வாக்யத்திலிருக்கும் மற்றச் சொற்கள் க்ரியையோடு சேர்ந்த தங்கள் அர்த்தங்களைச் சொல்லுகின்றன என்றும், வேத வாக்யத்திலிருக்கும் மற்றச் சொற்கள் அபூர்வத்துடன் சேர்ந்த தம் அர்த்தங்களைச் சொல்லுகின்றன என்றும் சொல்லுகிறான். உதாரணம்:— "ஸ்தால்யாமோதநம் பசேத்" என்கிற வாக்யத்தில், ஸ்தாலி என்கிற சொல்லுக்குப் பாகத்துக்கு ஆதாரமான ஸ்தாலி என்பதும், ஓதநம் என்பதற்கு பாகத்துக்குக் கர்மமான ஓதநம் என்பதும் பொருள்கள். "ஸோமேந யஜேத" என்கிற இடத்தில் ஸோம என்கிற சொல்லுக்கு அபூர்வஸாதந மான ஸோமக்கொடி என்பதும் யஜ் என்பதற்கு அபூர்வ ஸாதநமான யாகம் என்பதும் பொருள். இப்படி அவன் சொற்களுக்கு அர்த்தம் சொல்லுவதில் இரண்டுவித வாக்யங்களுக்கும் பொருத்தமுள்ள ஓர் அர்த்தத்தைச் சொல்லவில்லை. இது பூர்வ பக்ஷியின் மதத்தில் தூஷணம். ச்லோகத்தில் "அந்யதா" என்பதற்கு அபூர்வத்தில் என்பது கருத்து.

(2) எப்படிச் சொற்களுக்குச் * சக்தியை அறியவேண்டியது என்பதை உத்தரார்த்தத்தில் சொல்லுகிறார். சக்தியை ஸத்ப்ரயோகங்களினால் அறியவேண்டியது. இதற்குப் பெரியோர்களின் ப்ரயோகங்கள் என்றும் நல்ல ப்ரயோகங்கள் என்றும் பொருள் கொள்ளலாம். எந்த ப்ரயோகங்களிலும் அர்த்தமானது அந்யதாஸித்தமன்று என்றும், அநுகதமாயிருக்கிறதா

* சக்தி என்பது சொல்லுக்கும் அதன் அர்த்தத்துக்குமுள்ள ஸம்பந்தம். சொல் சக்தம், பொருள் சக்யம். சக்தியையறிவது வ்யுத்பத்தி.

என்றும் பார்க்கவேண்டும். கங்காயாம் ஸ்நாயாத் என்கிற வாக்யத்தில் கங்கா என்கிற சொல் ப்ரவாஹத்தைச் சொல்லுகிறது. கங்காயாம் கோஷ: (கங்கையில் இடைச்சேரி) என்கிற வாக்கியத்தில் கங்கை என்கிற சொல்லுக்குக் கங்கையின் கரை என்பது பொருள். இது அந்யதாஸித்தம். கங்கை என்னும் சொல்லுக்குச் சக்தி ப்ரவாஹத்தில்தான். அதன் ஸம்பந்தத்தினால் கங்காயாம் கோஷ: என்கிறவிடத்தில் கங்கை என்கிற சொல்லுக்கு அதின்கரை என்பது பொருள். இப்படி லக்ஷணையினால் நிர்வாஹம் பண்ணக்கூடிய இடங்களில் புதிதாய்ச் சக்தியைக் கல்பிக்கக்கூடாது என்பது நியாயம். (ச்ருத + கை) ஐகரூப்யமாயிருப்பதாவது எல்லாப்ரயோகங்களுக்கும்பொருத்தமாயிருப்பது. சரீரம் என்கிற சொல்லுக்கு பஞ்சபூதஸங்காதம் (ஐந்து பூதங்களின் சேர்க்கை) பொருள் என்று சொல்லுகிறார்கள். "யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்" என்று பகவானுக்கு பிருதிவீ சரீரம் என்று சொல்லும் வாக்யத்துக்கு இது பொருந்தாது. இது பூதங்களின் சேர்க்கையன்று, லௌகிகவாக்யங்களுக்கும் வைதிகவாக்யங்களுக்கும் பொருத்தமான அர்த்தத்தைக் கொள்ளவேண்டும் என்பதும், அந்த அர்த்தம் இன்னது என்பதும் ஸ்ரீபாஷ்யத்தில் நவிலக்ஷணத்வாதிகரணத்தில் காட்டப்படுகின்றன.

(3) தெரியாத ஒருவனைக் குறித்து 'கோऽயம்' (யார் இவன்) என்று கூட இருப்பவனைக் கேட்கிறான். பாஞ்சால: (இவன் பாஞ்சாலதேசத்தவன்) என்று அவன் பதில் சொல்லுகிறான். இதில் க்ரியையுமில்லை. க்ரியையோடு சேர்ந்த சொல்லுமில்லை. க்ரியையைச் சொல்லாமலே வாக்யம் முடிகிறது. இந்தவிடத்தில் பாஞ்சாலன் என்று சொல்லப்பட்ட பதிலைக்கொண்டே கேட்டவன் திருப்தியடைந்துவிடுகிறான். இதற்கு மேல் கேள்வி பிறப்பதில்லை. *இங்குள்ள கேள்வியும் பதிலும் வெறும் குதூஹலத்தாலேயே கிளம்பின. இங்கே ஒரு கார்யத்தைச் சொல்லுவதில் கருத்து இல்லை. (33)

---

* இந்த ச்லோகத்தில் சொன்ன தூஷணங்கள் ஸ்ரீபாஷ்யத்தில் இல்லை. அதில் அபூர்வம் என்பதை இன்னது என்று நிரூபணம் பண்ணமுடியாது என்று காட்டுவதால், அதில் சக்தியைக் கல்பிப்

அவ:— ஸித்தபர வாக்யங்களில் வ்யுத்பத்தி உண்டாகலாம் என்பதை அந்வாருஹ்ய வாதத்தாலும் காட்டுகிறார்:—

> து:காஸம்பிந்நதேஶப்ரப்ருதி பலதயா சோதநாஸ்வேவ ஸித்தம் ப்ராஶஸ்த்யக்யாபநாயார்த்திக்யபி பவதி பலம் ராத்ரிஸத்ரே ப்ரதிஷ்டா । அர்த்தப்ராப்தா நிஷேத்யாநுக்ரஹணிதி ததாநயோக்தம் நிஷேதஸ்ய விதி ஶேஷத்வயுக்த: ஸ்யாத்விதேயவிஷயா ப்ரஹ்மதீரர்த்த வாதை: ॥ ॥௫௪॥

துக்கக் கலப்பில்லாத இடம் முதலானவைகள் விதி வாக்யங்களிலேயே பலன்களாக ஸித்திக்கின்றன. ஸத்ரயாகத்தில் ப்ரதிஷ்டையானது, அர்த்தவாத வாக்யத்திலே சொல்லப்பட்டிருந்த போதிலும ச்ருதியினால் சொல்லப்பட்டதாகையால் பலனாக ஆகிறது. விலக்க வேண்டியதை விலக்காமல் அதைச் செய்தால், அது அநிஷ்டத்தை உண்டுபண்ணும் என்கிற நிஷேதார்த்தவாதம் ‘ இதைச்செய்யாதே” என்று நிவ்ருத்தியைச் (ஒழிவதை) சொல்லும் நிஷேதவாக்யத்துக்கு பொருத்தமானது. இதை நாமும் ஒப்புக் கொள்ளுகிறோம். ஆகையால் விதிக்கு உதவி செய்கிற அர்த்தவாதங்களாலும் ப்ரம்மஜ்ஞானம் உள்ளபடி உண்டாகலாம்.

குறிப்பு:– (1) ஸ்வர்க்ககாமோ யஜேத என்கிற விதி வாக்யத்தில் ஸ்வர்க்கம் பலமாக ஏற்படுகிறது. ஸ்வர்க்கம் என்பது ஸித்த

பது கூடாது என்று ஏற்படுகிறது. ஸ்ரீபாஷ்யத்தில் காட்டியிருக்கும் ப்ரகாரம்— கார்யம் என்ன என்று பூர்வபக்ஷியைக் கேட்க, க்ருதிஸாத்யம் க்ருத்யுத்தேஶ்யம் என்று அவன் சொல்லுகிறான். க்ருத்யுத்தேஶ்யம் என்பது க்ருதிகர்மமா? புருஷாநுகூலமா? க்ருதிசேஷியா? க்ருதிப்ரயோஜநமா? என்று நாம் விகல்பித்தால், ஒரு கல்பத்திலும் அபூர்வம் என்கிற கார்யம் ஏற்படுகிறதில்லை. கார்யம் ஒவ்வொரு கல்பத்திலும் ஸுகமாகவோ துக்கநிவ்ருத்தியாகவோ இருக்கிறது. அபூர்வமோ அப்படியில்லை அபூர்வம் என்பது ஸுகம்தான் என்று சொல்ல அதற்கு ஒரு ப்ரமாணமுமில்லை என்பதாம்.

பரமான வேறு வாக்யத்தாலே துக்கக் கலப்பில்லாத ஸுகத்தைக் கொடுக்கும் இடம் என்று காட்டப்படுகிறது. ஸ்வர்க்கம் இன்னது என்பதைக் காட்டுவதற்காக இந்த ஸித்தபர வாக்யத்தில் வ்யுத்பத்தி உண்டென்று மீமாம்ஸகன் ஒப்புக்கொள்ளுகிறான். 1 "ராத்ரீருபேயாத:"(ஸத்ரயாகத்தைச்செய்யுங்கள்) என்கிற விதி வாக்யத்தில் பலனைச் சொல்லவில்லை. அத்துடன் சேர்ந்த அர்த்தவாத வாக்யத்தில் ப்ரதிஷ்டையைப் பலனாகச் சொல்லியிருக்கிறது. விதி வாக்யம் தேடுகிற பலனைக் காட்டுவதால் இந்த ஸித்தபரமான வாக்யத்திலும் வ்யுத்பத்தி உண்டு. என்று அவன் சொல்லுகிறான். விதி வாக்யத்தில் பலனைச் சொல்லவில்லையே அதைத்தேடுவானேன் என்றால், பலனில்லாத ஒரு வேலையை வேதம் சொல்லாது. 2 இது விச்வஜிந்நியாயத்தால் ஏற்படுகிறது.

ப்ராஹ்மணாய நாவகுரேத(ப்ராம்மணனை ஹிம்ஸிப்பதற்குக் கையை ஓங்காதே) என்பது நிஷேதவாக்யம். இப்படிக் கையைத் தூக்கினால் ஸுகத்தை அநுபவிப்பதற்கு விரோதமான நரகப்ராப்தி உண்டாகும் என்று "யோऽவகுரேத ஶதேந யாதயாத்" (எவன் கையைத் தூக்குகிறானோ அவனை சதயாதனை என்கிற நரகத்தை அநுபவிக்கும்படிச் செய்ய

---

1 இது ஸத்ரயாகமானதாலே "உபேயு:" என்று பஹுவசநமிருக்க வேண்டும். "ராத்ரீருபேயாத:" என்று உத்பத்தி வாக்யமொன்று இல்லை. "ஜ்யோதிஷ்டோமாய:" என்பதே உத்பத்திவாக்யம். (பாவப்ரகாசிகை.)

2 விஶ்வஜிதா யஜேத என்கிற விதிவாக்யத்திலாவது அர்த்தவாதவாக்யத்திலாவது பலன் சொல்லப்படவில்லை. ஆனால் ப்ரயோஜனமில்லாமல் ச்ரமத்தைக்கொடுக்கும் வியாபாரத்தை வேதம் சொல்லாது. ஆகையால் பலன் இருக்கவேண்டியது. பலன் எல்லாப் பலன்களா? ஒரு பலனா? என்றால், பல பலன்களைக் கல்பிப்பதில் கௌரவம் என்கிற தோஷம். ஆகையால் பலன் ஒன்றுதான் என்று கல்பிக்க வேண்டும். அந்த பலன் எது என்றால், எல்லாவற்றிற்கும் மேற்பட்ட ஸ்வர்க்கம் என்ற பலன். இது விச்வஜிந்நியாயம்.

வேண்டியது) என்கிற வாக்யம் காட்டி நிஷேதவாக்யத்திற்கு உதவி செய்து, அந்த வழியாய் விதிவாக்யத்துக்கும் உதவி செய்கிறது. இதையும் அவன் ஒப்புக்கொள்ளுகிறான்.

(2) கீழ்ச் சொன்ன நியாயங்களால் "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" என்கிற உபநிஷத் வாக்யத்தில் ப்ரம்மம் என்கிற சொல்லின் அர்த்தத்தையும், அவனை எப்படியுபாஸிக்கவேண்டும் என்பதையும், உபாஸநத்தின் பலன் இன்னது என்பதையும் காட்டி "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" என்று ஆரம்பிக்கிறமந்த்ரம் உதவிசெய்கிறது. ஆகையால் அது ஸித்தபரமானவாக்யமாயிருந்தாலும் அதில் வ்யுத்பத்தி உண்டு. அது சொல்லும்விஷயங்கள் உண்மையானவைகள். அவைகளைச்சொல்லுவதில் அதுக்குத்தாத்பர்யமுண்டு. தாத்பர்யமில்லாவிட்டால் உதவி செய்ய முடியாது. 'ப்ரஹ்மவிதாப்நோதி பரம்' என்பது விதிவாக்யம். 'பரப்ராப்திகாமோ ப்ரஹ்மவித்யாத்' (உயர்ந்ததை அடைய ஆசைப்படுகிறவன் பரப்ரம்மத்தை உபாஸிக்கவேண்டியது) என்பது அதின் பொருள். இங்கே விதிவாக்கியத்திலேயே பலன் சொல்லப்பட்டிருக்கிறது.

(3) "ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய:" என்னும் விதிவாக்யத்தில் உபாஸநத்தின் பலன் சொல்லப்படவில்லை. ஆனால், அத்துடன் சேர்ந்திருக்கிற ஓர் அர்த்தவாதவாக்யம் "ஆத்மநஸ்து காமாய பதி: ப்ரியோ பவதி" (ப்ரு-4-4-5)என்று பரமாத்மாவே தன் இஷ்டத்தை நிறைவேற்றுவதற்காக பதிக்குக் கொஞ்சம் பிரியத்துவத்தைக் கொடுக்கிறான் என்று சொல்லுகிறது. இதைக் கொடுக்கிற பரமாத்மா அளவில்லாத ப்ரியத்வமுள்ளவன். ஆகையால் பதி முதலானவர்களை விட்டுவிட்டுப் பரமாத்மாவை உபாஸிக்க வேண்டும் என்று தெரிவித்து இந்த வாக்யம் விதிக்கு உதவி செய்கிறது.

(4) ப்ரஹ்மவிதாப்நோதி என்கிற ப்ரகரணத்தில் "யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நுதரமந்தரம் குருதே । அத தஸ்ய பயம் பவதி" (தை-ஆ-7) என்று உபாஸநம் ஒருக்ஷணம் நின்றுவிட்டாலும் பயம் வரும் என்று ஒரு வாக்யம் சொல்லுகிறது. இங்கே

உபாஸநம் விதிக்கப்படுகிறது. அதின் பலனை அநுபவிப்பதற்கு விரோதி அது ஒரு க்ஷணமாவது நின்று விடுவது. இது ஏற்படக் கூடாது என்று காட்டி இந்த ஸித்தபர வாக்யம் “ப்ரஹ்மவிதாப்நோதி பரம்” என்கிற விதிவாக்யத்துக்கு உதவி செய்கிறது.

(5) விதிவாக்யம் உபாஸநத்தின் பலனை பரம் (உயர்ந்தது) என்று சொல்லுகிறது. அர்த்தவாதமான மந்திரமானது அந்த உயர்ந்த பரமாவது ப்ரம்மத்தையும் அவனுடைய எல்லா நல்ல குணங்களையும்அநுபவிப்பது என்றுகாட்டி அந்த உயர்ந்த பலனை மற்ற உயர்ந்த பலன்களிலிருந்து பிரித்து விதிவாக்யத்துக்கு உதவி செய்கிறது. இது முதல் திருஷ்டாந்தத்தாலும்,பலன் விதிவாக்யத்தில் சொல்லப்படாதபோதிலும் அர்த்தவாத வாக்யத்தில் அது சொல்லப்பட்டிருந்தால் அதில் தாத்பர்யமுண்டென்பது இரண்டாவது திருஷ்டாந்தத்தாலும், விதிக்கப்பட்ட பலனுக்கு விரோதி பலனுயிருந்தாலும் அது விதிக்கப்படுவதற்கு உபகாரம் செய்வதாயிருந்தால், அந்தப் பலனிலும் தாத்பர்யமுண்டென்பது மூன்றாவது திருஷ்டாந்தத்தாலும் காட்டப்படுகின்றன. கீழ்ப் பாராவில் காட்டியிருக்கிறபடி இவைகளை ப்ரக்ருதத்திலும் கண்டு கொள்வது.

இந்த அதிகரணத்தின் எட்டு ச்லோகங்களுக்கு விஷயங்களாவன— முதல் ச்லோகத்தில் ஸித்தபரவாக்யங்களில் வ்யுத்பத்தி இல்லையென்கிற பூர்வபக்ஷத்தைச் சொல்லி பலவிதத்திலும் ஸித்தபரவாக்யங்களில் வ்யுத்பத்தியை ஸ்தாபிக்கலாமென்பது ஸூத்ரகாரரின் அபிப்ராயம் என்று தெரிவிக்கிறார். 2-வது ச்லோகத்தில் உலகத்தில் வ்யுத்பத்தி உண்டாகும் விதத்தைக் காட்டுகிறார். அதில் உண்டான சங்கைகளை 3-வது 4-வது ச்லோகங்களில் தீர்க்கிறார். ஸித்தபரவாக்யங்களில் வ்யுத்பத்தி உண்டாகும் வழிகளை 5, 6 ச்லோகங்களில் காட்டுகிறார். 7-வது ச்லோகத்தில் கார்யத்தில்தான் சப்தசக்தி என்ற பக்ஷத்தைத் தூஷிக்கிறார். 8-வது ச்லோகத்தில் வ்யுத்பத்தி உண்டாகக்கூடும் என்பதை அந்வாருஹ்யவாதத்தாலும் ஸித்தபரவாக்கியங்களில் காட்டுகிறார். ஆகையால் எல்லா ச்லோகங்களாலும் உபநிஷத்வாக்யங்களில் வ்யுத்பத்தி உண்டு என்று ஸ்தாபிக்கப்படுகிறது. ப்ரம்மவிசாரம் செய்யலாம் என்பது இந்தத் தீர்மானத்திற்கு ப்ரயோஜநம். (34)

ஜந்மாதி-அதிகரணம் (2)

ஜந்மாத்யஸ்ய யத: ॥௨॥

இந்த ஸூத்ரத்தில் தத் ப்ரஹ்ம என்கிற சொற்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டியது. யத: என்கிற நிர்தேசத்துக்கு தத் என்பது ப்ரதிநிர்தேசம். ஆரம்பிக்கவேண்டிய ப்ரம்ம விசாரத்தைச் செய்ய ப்ரம்மத்தை அறியவேண்டியதாகையால் அதின் லக்ஷணத்தை இந்த ஸூத்ரம் சொல்லுகிறது. ஆகையால் 'ப்ரம்ம' என்கிற சொல்லை விதேயமாகச் சேர்க்கவேண்டும். இதற்கு (இந்த விசித்திரமான உலகத்துக்கு) பிறப்பு முதலானவைகள் எதிலிருந்து உண்டாகின்றனவோ, அது ப்ரம்மம் - என்பது ஸூத்ரத்தின் அர்த்தம்.

(2) ஜந்மாதி என்பது— ஜந்மத்தை முதலாவதாகவுள்ள ஒரு ஸமூஹம். அந்தஸமூஹத்தில் ஜந்மமும் சேருகிறது. இப்படிச்சேர்த்துச்சொல்லுகிற ஸமாஸத்துக்கு தத்குணஸம்விஜ்ஞாநபஹுவ்ரீஹி என்று பெயர். ஜந்ம என்பதை ஸமூஹத்தில் சேர்ப்பதின் பயன்—ஜந்மம், ஸ்திதி, லயம் இந்த மூன்றுக்கும் ஒன்றே காரணம் என்பது. அதைச் சேர்க்காவிட்டால், ஜந்மகாரணம் வேறு, மற்றவைகளின் காரணம் வேறு என்று ஏற்படுமாதலால், ப்ரம்மம் ஒன்றுதான் அளவில்லாத பெருமையை உடையது என்பது ஸித்திக்காது.

(3) யத: என்கிற பதம் உபாதாநகாரணத்தையும் நிமித்தகாரணத்தையும் சொல்லுகிறது. "ததைக்ஷத பஹுஸ்யாம்" என்கிற காரணவாக்யத்தில் இரண்டு காரணங்களும் ப்ரம்மம்தான் என்று சொல்லப்படுகிறது. "யதோ வா இமாநி பூதாநி" என்கிற விஷயவாக்யமும் ஸூத்ரமும் இதை அநுஸரித்திருக்கின்றன. யத: என்பதில் உள்ள பஞ்சமி * அபாதான பஞ்சமியன்று. அது ஹேதுபஞ்சமி.

* ஜநிகர்த்து: ப்ரக்ருதி: என்கிற வியாகரணஸூத்ரத்தாலே எதிலிருந்து ஒன்று உண்டாகிறதோ, அதற்கு அபாதானம் என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அபாதானத்துக்குப் பஞ்சமீ

(4) இந்த அதிகரணத்துக்கு விஷயவாக்யம்- யதோவா இமானி பூதானி ஜாயந்தே । யேந ஜாதானி ஜீவந்தி । யத் ப்ரயந்த்யபிஸம்விசந்தி । தத்விஜிஜ்ஞாஸஸ்வ । தத்ப்ரஹ்ம" (தை-ப்ரு 1-7) என்பது. இதனால், ஜகஜ்ஜந்மகாரணமும், ஜகத்ஸ்திதிகாரணமும், ஜகத்ப்ரளய காரணமுமானது ப்ரம்மம் -- என்பது சொல்லப்படுகிறது.

அவ:— அதிகரணத்தின் பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் சொல்லுகிறார் —

ஜந்மாத்யைச்ச்ருதிசேஷ்யம் பவதி பஹுதா தத்
ததோபலக்ஷ்யம் ப்ரவீதி ஜ்ஞாதாஜ்ஞாதாதித்ரைவித்யம் வ்ய
க்திஷஜதி நவாவக்ஷிதே ஸ்யாத் பரீக்ஷா । உக்திஷ்
ப்ரஹ்மவிந்தா ததஇஹ க்ஷயதிர்த்யுதோ ஹேதுரேவோபலக்ஷ்ய:
பஞ்சஸூக்தாதிஷ்வபிஸா க்ஷணிக்யமவஜீஷ் ப்ரஹ்ம
சப்தாயத் உக்த: ॥ ॥௧௫॥

ஜன்மம் முதலானவைகளால் ப்ரம்மம் விசேஷிக்கப்படுவதால் (மற்றவைகளிலிருந்து பிரித்துக் காட்டப்படுவதானல்),ப்ரம்மம் அநேகங்கள் என்று ஏற்படும். அவைகளால் அது உபலக்ஷ்யம்(இதுதான்என்று குறித்துக்காட்டப்படுகிறது)என்று சொல்லுகிறதானல், அப்பொழுது முன் அறியப்பட்ட ஆகாரம் அறிய வேண்டிய ஆகாரம் அதைக்காட்டுகிற அடையாளம்(உபலக்ஷணம்) என்கிற மூன்றைச் சொல்லவேண்டுமே. இங்கேயோ அவைகளைச் சொல்லமுடியாது. ஆகையால் இரண்டு வழியிலும் லக்ஷணத்தால் காட்டமுடியாத விஷயத்தை எப்படிப்பரீக்ஷிக்கிறது. ஆகையால் ப்ரம்மவிசாரம் எப்படி ஆரம்பிக்கப்படலாம் என்று பூர்வபக்ஷி சொல்லும்போது, புருஷஸூக்தம் முதலானவைகளில் ப்ரஸித்த

விபக்தி வருகிறது. இப்படி அபாதானபஞ்சமியாகக் கொண்டால் உபாதானகாரணம் என்பது மாத்திரமே ஏற்படும். ஹேது பஞ்சமியானல் ஹேது என்றமுறையில் இரண்டுகாரணங்களுமாக இருக்கலாம். மேலும், இது அபாதானபஞ்சமியாயிருந்து உபாதானகாரணத்தைமாத்திரம் காட்டினல், 'ஜந்மாதி' என்பதிலுள்ள 'ஆதி' என்பதால் சொல்லப்பட்ட ஸ்திதியும் லயமும் சேரமாட்டா.

மானவனை ஜகஜ்ஜன்மம் முதலானவைகளாலே காட்டி, அவன் நல்ல குணங்களுக்கு இருப்பிடமும் பாபத்தை ஜயித்தவனும் ப்ரம்மம் என்ற சொல்லுக்குப் பொருளும் ஆனவன் என்று சொல்லப்படுகிறான் என்று பதில் சொல்லப்படுகிறது.

குறிப்பு— (1) ஒரு வஸ்துவை லக்ஷணத்தாலே நாம் அறியும்பொழுது அந்த லக்ஷணம் விசேஷணமாகவோ அல்லது உபலக்ஷணமாகவோவிருக்கலாம். ப்ருதிவிக்கு கந்தம் * ஸமவாயம் என்கிற ஸம்பந்தத்தால் லக்ஷணமாகிறது. இங்கே ஜகத்தினுடைய ஜன்மம் முதலியவை கார்யகாரணபாவஸம்பந்தத்தால் லக்ஷணமாகின்றன.

(2) லக்ஷணமாகவிருக்கும் ஜகத்தின் ஜன்மம் முதலியவை விசேஷணங்களா? அல்லது உபலக்ஷணங்களா? என்று விகல்பித்து, இரண்டிலும் தோஷங்களைக் காட்டி லக்ஷணவாக்யத்தாலே ப்ரம்மத்தை அறியமுடியாது என்று சொல்லுகிறான் பூர்வபக்ஷி. விசேஷண பக்ஷத்தில் அவன் சொல்லும் தோஷம்— மூன்று விசேஷணங்களாலே மூன்று ப்ரம்மங்கள் ஏற்படும் என்பது. அவன் அபிப்ராயத்தில் எவ்வளவு விசேஷணங்கள் இருக்கின்றனவோ, அவ்வளவு விசேஷ்யங்கள் இருக்கவேண்டும். “கண்டோ முண்ட: பூர்ணஶ்ருங்கோ கௌ:” என்பது அவன் சொல்லும் உதாரணம். உபலக்ஷணபக்ஷத்தில் தோஷம்— முன்னால் ஓர் ஆகாரத்தால் அறியப்பட்டதை உபலக்ஷணத்தாலே மற்றொரு ஆகாரமுள்ளதாகக் காட்டவேண்டும். இங்கே முன்னாலே அறியப்பட்ட ஆகாரத்தைச் சொல்லமுடியாது என்பது.

(3) முதல் தூஷணத்துக்குப் பதிலை விஸ்தாரமாய்ச் சொல்லவேண்டியதாகையால் அதை மேல் ச்லோகங்களால் சொல்லப்போகிறவராய், இரண்டாவது தூஷணத்துக்குப் பதில் சொல்லுகிறார். முன்னாலே அறியப்பட்ட ஆகாரம் புருஷஸூக்தம் முதலியவற்றில் ப்ரஸித்தமானது. அறியப்படாத ஆகாரம் அளவில்லாத பெருமையையுடையவன் என்பது.

---

* ஒன்றை விட்டு ஒன்று பிரியாமல் சேர்ந்திருக்கும் இரண்டு வஸ்துக்களுடைய ஸம்பந்தம் ஸமவாயம். கார்யமாக இருக்கிற வஸ்துவுக்கும் காரணமாகவிருக்கும் வஸ்துவுக்கும் ஸம்பந்தம் கார்யகாரணபாவம்.

இந்தப் பெருமையாவது நல்ல குணங்களுக்கு இருப்பிடமாயும் பாபங்களை ஜயிப்பதாயுமிருப்பது. இது ப்ரம்மசப்தத்துக்குப்பொருள். இந்த ஆகாரம் காட்டப்படும் ஆகாரம். இந்த ஆகாரத்தைக் காட்டும் அடையாளம் ஜகஜ்ஜந்மாதி.

(4) உபலக்ஷணத்துக்கு இரண்டு ஆகாரங்களும் ஓர் அடையாளமும் வேண்டும் என்பதற்கு உதாரணம்— யத்ராயம் ஸாரஸஃ ஸ தேவதத்தகேதாரஃ (எதில் * ஸாரஸபக்ஷி இருந்ததோ, அது தேவதத்தன் வயல்) என்பது. இதில் பொதுவாக வயலாயிருப்பது (கேதாரத்வம்) முன்னாலே அறியப்பட்ட ஆகாரம். அது தேவதத்தன் வயல் என்பது காட்டவேண்டிய ஆகாரம். வயலுக்கும் ஸாரஸபக்ஷிக்குமிருந்த ஸம்பந்தம், அதைக் காட்டும் அடையாளம். (35)

அவ:— விசேஷணபக்ஷத்திலுள்ள தோஷத்தை விரிவாய்ச் சொல்லி, அந்தத்தோஷம் இல்லையென்று காட்டுகிறார்—

நாநா விஶேஷணாநி ஸ்வரஸவிஹததா ப்ரஹ்மணி
ஸ்யாத்³விஶேஷ்யே வர்ணோ ஃர்ணஸ் ஸௌபித்யவித³ந
ஸௌ யத்³ருஷ்டைகதாத்ரா । தேஷ்வேகம் வேத³ வ்ரு
ஷ்ராந்த்யஸ்தா²ஃபி ததை²வம் ஸ்யாத்³ருஷ்டே ஹாநேஃ வர்
ணாத்³ரிகோவ்யத்யஸவிஹதிதஃ வர்ணதாவிருத்³தே
ஷாஸ் ॥ ॥௩௬॥

விசேஷணங்கள் பலவாக இருந்தால், விசேஷ்யமான ப்ரம்மத்தில் 'வர்ணோ ஃர்ணஃ ஸம்பூர்ணோ கௌஃ' என்கிற வாக்யத்தில்போல பேதம் ஸ்வரஸமாக ஏற்படும். விசேஷ்யத்தைச் சொல்லுகிற ப்ரஹ்ம என்ற பதத்திலிருக்கும்

* அறியவேண்டியதை அறிவதற்கு உபாயம் லக்ஷணம். இது விசேஷணமாயும் உபலக்ஷணமாயும் இருக்கலாம். லக்ஷ்யத்தில் அடங்கி இருப்பது விசேஷணம். அதை விட்டு வெளியிலிருப்பது உபலக்ஷணம். சொன்ன உதாரணத்தில் ஸாரஸத்தின் ஸம்பந்தம் தேவதத்தனுடைய வயலில் ஏதோ ஒரு காலத்தில் இருந்தது. மற்ற காலங்களில்லை. ஆகையால் ஸாரஸத்தின் ஸம்பந்தம் தேவதத்தனுடைய வயல் என்பதில் அடங்கினதன்று.

ஏகவசநம் "வணோ ஶ்ருணோ + மௌ:" என்கிற வாக்யத்தில் 'மௌ:' என்கிற சொல்லிலிருக்கிற ஏகவசநத்துக்கு ஸமம். மூன்று விசேஷணங்களில் ஏதாவது ஒன்றே லக்ஷணமானால் மற்றவைகளுக்கு ப்ரயோஜநமில்லை. மூன்றும் சேர்ந்து லக்ஷணமானால் அதற்கும் ப்ரயோஜநமில்லை; ஏனென்றால் அவைகளுள் ஒவ்வொன்றாலும் விலக்கப்படவேண்டியது ஒன்றுமில்லை. மேலும் வண்டத்வம் முதலானவைகளைப்போலஒன்றோடொன்று விருத்தங்களான மூன்றும்சேர்ந்தோ, தனித்தோ லக்ஷணமாகா. இது பூர்வபக்ஷம். இது ஸரியானது அன்று. லக்ஷணவாக்யத்திலுள்ள விசேஷணங்களுக்கு ஒன்றோடொன்றுக்கு விரோதமில்லை. அவைகளுக்கும் வண்டத்வம் முதலானவைகளுக்கும் வித்யாஸமிருக்கிறது.

குறிப்பு– (1) "வணோ ஶ்ருண:" என்கிற வாக்யத்துக்கு மாடு ஒடிந்த கொம்புள்ளது, கொம்பில்லாதது, முழுக்கொம்புள்ளது—என்பது பொருள். இங்கே விசேஷணங்கள் மூன்றிருப்பதாலே விசேஷ்யங்களான மாடுகளும் மூன்று என்று ஏற்படுகிறது என்று பூர்வபக்ஷம்.

(2) லக்ஷணவாக்யத்தில் ப்ரஹ்ம என்கிற சொல் ஏகவசநத்தோடு முடிகிறது; ஆகையால் விசேஷ்யம் ஒன்றுதான், பல அல்ல என்றால், 'வணோ ஶ்ருண:' என்கிற வாக்கியத்திலும் மள: என்கிற சொல் ஏகவசனத்துடன் முடிகிறது. அது போலவேதான் லக்ஷணவாக்யத்திலுள்ள ஏகவசனமும். ஆகையால் விசேஷணங்கள் பலவாயிருப்பதாலே ஏகவசனம் பாதிக்கப்படுகிறது. அப்போது ஏகவசனத்துக்கு என்ன நிர்வாஹம் என்றால், 'ஸம்பநோ வ்ரீஹி:' என்னும் வாக்யத்தில் போல, அது கோஜாதியைப்பற்றியது. இங்கேயும் ஏகவசனம் ப்ரம்ம ஜாதியொன்று என்று காட்டுவதாகலாம். இது பூர்வபக்ஷம்.

(3) இதற்குப்பதில் ச்லோகத்தில் கடைசியில் சொல்லப்படுகிறது. 'வணோ ஶ்ருண:' என்கிற வாக்யத்தில் விசேஷணங்களுக்குள் விரோதமிருக்கிறது. ஒடிந்த கொம்புள்ளமாடு, மொட்டை மாடாகவும், முழுக்கொம்புள்ளமாடாகவும் இருக்க முடியாது. ஆகையால் மாடுகள் அநேகம். லக்ஷணவாக்கியத்திலோ இப்படி விரோதமில்லை. ப்ரம்மம் ஜகத்தை ஒருகாலத்தில் உண்டு

பண்ணி அதைரக்ஷித்துக் கடைசியில் அழிக்கலாம். விசேஷ்ய பதத்திலுள்ள ஏகவசனத்துக்குப் பாதம் இருந்தால் அதைத் தள்ளிவிட்டு, அது ஜாதியைப்பற்றியது என்று சொல்லவேணும். ஆகையால் விசேஷ்யத்தின் ஏகவசனத்தைப் பாதிப்பதற்கு பாத (வாய) மிருப்பது காரணம், விசேஷணங்கள் பலவாயிருப்பது அன்று.

(4) விசேஷணங்களுக்கு விசேஷ்யத்தை வெவ்வேறுக்கும் தன்மை பொதுவாகவுள்ளது என்பதை 'ஸரஸ' என்ற ஶப்தம் காட்டுகிறது. (36)

அவ— விசேஷ்யத்தை மற்றவைகளிலிருந்து பிரிப்பது விசேஷணம். பிரிக்கப்படுவது விசேஷ்யம் என்பது ப்ரஸித்தம். கீழ்ச்லோகத்தில் சொன்னபடியானல், இது எப்படி விசேஷணமாகும் என்றால், பதில் சொல்லுகிறார்:—

> தத்தத்ஸ்வப்ரத்யநீகவ்யபோஹநநியதம் லக்ஷ்ம நா-
> ந்யோந்யபாயி வ்யாகாத: கார்யலக்ஷ்மா பவதி ஜநநஸ்தா-
> பநத்வம்ஸநாநாம் । ப்ரத்யேகம் லக்ஷணத்வம் ஸம்பவ-
> தீஹ பஹுஷு ஶ்ருதிஷு ப்ரத்யேகம் ஸம்ஸ்தாபவ்யா-
> ஹாரமேகே ஹேதுவிவ ததா ஶங்கிதாயா வ்யுதாஸ: ॥

அந்தந்த விசேஷணமானது தனக்கு விருத்தமான ஆகாரத்தைத்தான் தடுக்கும் ஸ்வபாவமுள்ளது. தனக்கு விரோதமில்லாத ஆகாரங்களை விலக்கமாட்டாது. உண்டுபண்ணுவது, இருக்கும்படி செய்வது, நாசம்பண்ணுவது ஆகியஇவைகள் வெவ்வேறு காலங்களில் நடக்கிறபடியால் அவைகளுக்குள் விரோதமில்லை. மூன்று விசேஷணங்களுள் ஒன்றையே லக்ஷணமாகச் சொன்னாலும் குற்றமில்லை. அனேக லக்ஷணங்களைச் சொன்னது (சிஷ்யர்களுக்குத்) தெளிவான அறிவு உண்டாவதற்காக. சிலர் மூன்றும் சேர்ந்து லக்ஷணம் என்று சொல்லுகிறார்கள். அப்போது அதன் பலன், இந்த விஷயத்தில் உண்டாகக்கூடிய ஸந்தேஹத்தைத் தீர்ப்பது.

குறிப்பு— (1) 'வண்ணோ காண:' என்கிற உதாரணத்தில் வண்ண: என்பதற்கு ஒடிந்த கொம்புள்ளது என்பது பொருள்.

அந்த வணஃ என்ற விசேஷணம் அதற்கு விருத்தமான ஆகாரமுடையவைகளான மொட்டைமாட்டையும், முழுக் கொம்புள்ள மாட்டையும் விலக்குகிறது. "தேவதத்தஃ ஶ்யாமோ யுவா லோஹிதாக்ஷஃ" என்கிற வாக்யத்தில் ஶ்யாமஃ' என்பதற்குக் கறுப்பானவன் என்பது பொருள். இதற்கு விருத்தமான வெளுப்பு முதலான வர்ணமுடையவர்களிடமிருந்து தேவதத்தனைப் பிரித்துக்காட்டுகிறது. யுவா என்கிற சொல்லுக்கு யௌவநமுள்ளவன் என்பதுபொருள். யௌவநத்திற்கும் ஶ்யாமவர்ணத்துக்கும் விரோதமில்லை. ஆகையால் ஶ்யாமஃ என்கிற விசேஷணம் யுவா என்கிற விசேஷணத்தைப் பாதிக்கவில்லை. இரண்டு சொற்களால் சொல்லப்பட்ட தர்மங்கள் ஒருவனிடத்திலேயே இருக்கலாம்.

(2) லக்ஷணவாக்கியத்தில் சொல்லப்பட்ட ஜநகம், ஸ்தாபகம், ஸம்ஹாரம் ஆகிய இவைகள் பரஸ்பரம் விருத்தங்களல்லவா? இவை விசேஷ்யத்தைப் பலவாகக் காட்டுமே என்றால், காட்டா. வெவ்வேறு காலங்களில் நடக்கிறபடியால் இவைகளுக்குள் ஒன்றோடு ஒன்றுக்கு விரோதமில்லை. ஆகையால் மூன்றுக்கும் ப்ரம்மம் ஒன்றே காரணம்.

(3) உத்தரார்த்தத்தில் ஒவ்வொன்றும் லக்ஷணமா? மூன்றும் சேர்ந்து லக்ஷணமா? என்று பூர்வபக்ஷி கேட்டதற்குப் பதில் சொல்லுகிறார். ஜகத்தின் ஜன்மத்துக்குக் காரணம் ப்ரம்மம். ஜகத்தின் ஸ்திதிக்குக் காரணம் ப்ரம்மம். ஜகத்தின் நாசத்திற்குக் காரணம் ப்ரம்மம் என்று ஒவ்வொன்றையும் லக்ஷணமாகச் சொன்னாலும் ஒரு தோஷமுமில்லை. எது ஜகத்தின் ஜன்மத்துக்குக் காரணமோ, அதுவே ஜகத்தின் ஸ்திதிக்கும் ஜகத்தின் ப்ரளயத்திற்கும் காரணமென்று சிஷ்யனுக்குத் தெளிவான புத்தி உண்டாவதற்காக மற்ற லக்ஷணங்கள் சொல்லப்படுகின்றன. ஜகத்தினுடைய ஜன்மத்திற்கும் ஸ்திதிக்கும், நாசத்துக்கும் காரணமாயிருப்பது ப்ரம்மம் என்று மூன்றும் சேர்ந்து லக்ஷணம் என்றும் சொல்லலாம். அதற்குப் பிரயோஜநம்— ஒன்றைமாத்ரம் லக்ஷணமாகச் சொன்னால், ஜகத்தையுண்டுபண்ணுகிறவன் வேறு; ரக்ஷிக்கிறவன் வேறு; அழிக்கிறவன் வேறு என்று சங்கை உண்டாக

லாம். அதனால் ப்ரம்மம் அளவில்லாதபெருமையை உடையது என்பது நிச்சயமாக ஏற்படாது. இந்தச் சங்கையைத் தீர்ப்பதுதான்.

(4) லக்ஷணமான விஷயவாக்யத்தில் யதः யெந யதஂ என்கிற மூன்றுக்கும் ப்ரதிநிர்தேசமாக 'தஂ' என்பதை ஏகவசனத்தோடு முடிகிறதாய் ஒரே தடவையில் சொல்லியிருக்கிறது. அதுவும், ஸூத்ரத்தில் 'ஜந்மாதி' என்று ஜந்மாதிஸமுதாயத்தை நினைத்து ஏகவசனமாகச் சொல்லியிருப்பதும் இந்த இரண்டாவது பக்ஷத்துக்கு அநுகூலங்கள். (37)

அவ:— உபலக்ஷணபக்ஷத்தில் மறுபடியும் பூர்வபக்ஷி சொல்லுவதை அநுவாதம் பண்ணி, பதில் சொல்லுகிறார்—

ज्ञातं चेन्नोपलक्ष्यं न च यदि न तथा लक्ष्य-
योगात्प्रतीतेर्ज्ञाताज्ञातादिभेदस्सह दुर्वहि
श्चैवा लक्षणेनैव वेद्ये । ब्रह्मत्वं ब्रह्म-
शब्दार्थताविदिते ह्यत्र नो चेन्न शङ्का नै-
वं नानाविरोधिसंशयशमनतः श्रीमति ब्रह्म-
तोक्तेः ॥ ॥ ௩௮ ॥

ப்ரம்மம் அறியப்பட்டதானால் அதை உபலக்ஷணத்தாலே காட்டவேண்டியதில்லை. அறியப்படாததானால், உபலக்ஷணத்தாலே அதைக் காட்டமுடியாது. அதற்கு லக்ஷணத்துடன் ஸம்பந்தம் அறியப்படவில்லையன்றோ. ஓர் அம்சம் அறியப்பட்டது ஓர் அம்சம் அறியப்படவில்லை என்று பிரித்துச் சொல்லுவது, லக்ஷணத்தாலேயே அறியவேண்டிய விஷயத்தில் முடியாது. இந்த வஸ்து, அளவில்லாத பெருமையையுடையதாயிருப்பதும், ப்ரஹ்மசப்தத்திற்குப் பொருளாயிருப்பதும் அறியப்பட்டே யிருக்கின்றன. அறியப்படாவிட்டால் சங்கையே உண்டாகாது. இப்படிப் பூர்வபக்ஷம். இது ஸரியன்று. பலபல உபநிஷத்வாக்யங்களாலும் புராணவாக்யங்களாலும் உண்டாகும் ஸம்சயத்தைத் தீர்ப்பதற்காக ஸ்ரீமானிடத்தில் ப்ரம்மத்வம் இருக்கிறது என்பது சொல்லப்படுகிறது.

குறிப்பு— (1) பூர்வபக்ஷி கேட்கிறான்— ப்ரஹ்மம் அறியப்பட்டதா? அறியப்படாததா? அல்லது ஓர் ஆகாரத்தில் அறி

யப்பட்டு வேறு ஆகாரத்தில் அறியப்படாததா?— என்று. ஒவ்வொரு கல்பத்திலும் தோஷத்தைக் காட்டுகிறுன். முதல் கல்பத்தில் ப்ரஹ்மம் அறியப்பட்டபடியால் அதை லக்ஷணத்தால் அறிய வேண்டியதில்லே. இரண்டாவது கல்பத்தில் அறியப்படாவிட்டால் லக்ஷணம் சொல்லுவதற்கு இடமேயில்லே. கேதாரஉதாரணத்தில் கேதாரம் முன்னுல் அறியப்பட்டது. அதினுல்தான் ஸாரஸபக்ஷியின் ஸம்பந்தம் அதற்கு உபலக்ஷணமாயிற்று. அதைக் கொண்டு அறியப்பட்ட கேதாரம் தேவதத்தனுடைய கேதாரம் என்று அறிவிக்கப்படுகிறது. இங்கே ப்ரம்மம் அறியப்படாமையால், அதற்கும் லக்ஷணத்துக்கும் ஸம்பந்தம் அறியமுடியாது. அதைக் கொண்டுதானே ப்ரம்மத்தைக் காட்டவேண்டியது. மூன்ருவது கல்பத்திலும் தோஷமிருக்கிறது. ப்ரம்மத்தை லக்ஷணத்தாலேயே இப்பொழுதுதான் அறியவேண்டியதாயிருக்கிறது. ஆகையால் அவனிடத்தில் இது தெரிந்த அம்சம், இது தெரியாத அம்சம் என்று அம்சங்களைப் பிரிக்கமுடியாது. மேலும், ஸ்ரஹக்ஷம் அல்லது ஸ்ரஹஶஸ்ரவாவுக்ஷம் புதிதாக அறிவிக்கப்படுகிறபடியால் உவலக்ஷ்யா(ஜ்ஞாவ்யா)காரம் என்று பேசப்படுகிறது. அதுவும் ஸரியன்று.இந்த இரண்டு ஆகாரங்களும் புராணம் முதலியவைகளால் முன்னமே அறியப்பட்டவைகள் தாம். அவைகளைப் பற்றி விசாரிக்கவேண்டியதில்லே. இல்லாவிடில் தசு ஸ்ரஹ கீஷ்ரஶம் (அந்த ப்ரஹ்மம் எப்படிப்பட்டது) என்றுஜிஜ்ஞாஸெயே(அறிய விருப்பமே) உண்டாகமாட்டாது. ஜிஜ்ஞாஸெ பிறக்காவிட்டால் விசாரத்தில் இறங்கவே முடியாது. இப்படிப் பூர்வபக்ஷம்.

(2) முதல் இரண்டு கல்பங்களுக்குப் பதில் சொல்லவேண்டியதில்லே. மூன்ருவது கல்பம்தான் ஸ்தாபிக்கப்படுகிறது. நாம் விசாரிக்கும் வஸ்துவில் அறியப்பட்ட ஆகாரமும் அறியப்படாத ஆகாரமும் இரண்டுமிருக்கின்றன. பெருமையையுடைமை என்ற ப்ரம்மத்வமும், ப்ரம்மம் என்கிற பதத்திற்குப் பொருளாயிருக்கையும் அறியப்பட்ட ஆகாரங்களே. ஆனுல் ப்ரஹ்மாவும், விஷ்ணுவும், ருத்ரனும் பெருமையையுடையவர்களாகச் சொல்லப்படுகிறபடியால் இவர்களில் எவன் ப்ரம்மம் என்று ஸம்சயமுண்டாகிறது. லக்ஷணவாக்யம் லக்ஷ்மீபதிதான் இந்தப் பெருமையை அளவில்லாதபடி உடையவன் என்றும், அவனேத்தான்

ப்ரம்மம் என்கிற சொல்லால் சொல்லவேண்டியது என்றும் காட்டுகிறது. இங்கே அறிந்த ஆகாரம் அளவில்லாத பெருமையை உடையவனாயிருப்பதும், ப்ரஹ்மம் என்கிற சொல்லாலே சொல்லப்படுவதும்; அறியவேண்டிய ஆகாரம் லக்ஷ்மீபதியாயிருப்பது. வேதவாக்யங்களும் புராணங்களும் ஆகமங்களும் ஒரே தேவதையைப் பெருமையுள்ளவன் என்றும், ப்ரம்மம் என்னும் பதத்தின் பொருள் என்றும் சொல்லுகின்றன. அவைகளில் சில அவன் ப்ரம்மா என்றும், சில அவன் விஷ்ணுவென்றும், வேறு சில அவன் ருத்ரன் என்றும் சொல்லுகின்றன. இவர்களில் எவன் ப்ரம்மம் என்று இந்த லக்ஷணவாக்யத்தைக் கொண்டு விசாரிக்கவேண்டும். அந்த வாக்யத்திலுள்ள 'யத:' என்னும் பதத்தாலே அந்த வாக்யம் அநுவாதம் என்று காட்டப்படுகிறது. அப்போது இது எந்த வாக்யத்தின் அநுவாதம் என்று விசாரிக்கவேண்டும். சாந்தோக்யத்திலிருக்கும் வாக்யமே அந்த வாக்யம் என்று சொல்லவேண்டியதில்லை. புருஷஸூக்தத்தில் உள்ள காரணவாக்யத்தையும் அந்த வாக்யமாக எடுத்துக்கொள்ளலாம். அந்த வாக்யத்தாலே சொல்லப்பட்டவன் ஸ்ரீமானான நாராயணன் என்று "ஹ்ரீஶ்ச தெ லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ". என்கிற வாக்யம் தெரிவிக்கிறது. ஆகையால் அவன்தான் ப்ரம்மம். மற்றவர்கள் அல்ல என்பது ஸித்திக்கிறது. இங்கே முன்பு அறியப்பட்ட ஆகாரம் ப்ரம்மமாயிருப்பது. உபலக்ஷ்யாகாரம் ஸ்ரீமன் நாராயணனான ப்ரம்மமாயிருப்பது. உபலக்ஷணம் ஜகத்காரணத்வம். வயல்போல் ப்ரம்மமாயிருப்பது. தேவதத்தனுடைய வயல்போல் நாராயணனாயிருப்பது. வயலுக்கு ஸாரஸஸம்பந்தம் போல ஜகத்காரணத்வம்.

(3) இந்த அதிகரணத்தின் இரண்டாவதுசுலோகத்தில் அளவில்லாத பெருமையை உடையவன் என்கிற ஆகாரம் உபலக்ஷ்யமான ஆகாரம் என்று சொல்லப்பட்டது. இங்கே லக்ஷ்மீபதியாயிருப்பது உபலக்ஷ்யமான ஆகாரம் என்று காட்டப்படுகிறது.

அவ:— ஒன்றே விசேஷணமாகவும் உபலக்ஷணமாகவும் இருக்கமுடியாதே; ஒன்று விசேஷ்யத்தில் அடங்கியது; மற்றொன்று அதில் அடங்காதது. ஒன்றே இரண்டு விதமாயும் லக்ஷணமாகலாம் என்று வைத்துக்கொண்டு எப்படி ஸ்ரீபாஷ்யத்தில் பரிஹாரம் சொல்லப்பட்டது? என்பதற்குப் பதில் சொல்லுகிறார்:—

𑌯𑌾𑌵𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌵𑌬𑍋𑌧𑌂 𑌯𑌦𑌵𑌗𑌤𑌿𑌰𑌤𑍋 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌤𑌦𑍍𑌵𑌿
𑌶𑍇𑌷𑍍𑌯𑌂 𑌯𑌸𑍍𑌯𑌾𑌵𑌬𑍋𑌧𑍇𑌽𑌪𑌿 𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑌧𑍍𑌯𑌵𑌗𑌤𑌿𑌰𑌿𑌹𑌂
𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌂 𑌤𑍇𑌨𑍋𑌪𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑍍 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌭𑍇𑌦𑍇𑌽𑌪𑌿 𑌸𑌾
𑌧𑍍𑌯𑍇𑌽𑌨𑍁𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌰𑌨𑍁𑌵𑌿𑌧𑍇𑌤𑍍𑌯𑌾𑌶𑌯𑌾𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌭𑌾𑌷𑍍𑌯𑌂
𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯𑍋𑌪𑌾𑌸𑍍𑌯𑌭𑍇𑌦𑍇 𑌹𑍍𑌯𑍁𑌭𑌯𑌮𑌪𑌿 𑌸𑌮𑍇𑌤𑌿
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌾𑌤𑍍 ॥ ॥ ௩௧ ॥

எந்த லக்ஷ்யத்தின் அறிவு வரும்போதெல்லாம் எதின் (எந்த தர்மத்தின்) அறிவு வந்துகொண்டிருக்குமோ, லக்ஷணமான அது (அந்ததர்மம்) விசேஷணமாயிருந்துகொண்டு அந்த லக்ஷ்யத்தை விசேஷிப்பிக்கிறது (பிரித்துக்காட்டுகிறது). (உபலக்ஷணத்தால் உபலக்ஷ்யத்தை அறிந்த) பிறகு எதின் (உபலக்ஷணத்தின்) அறிவு இல்லாதபோதிலும், எந்த வஸ்துவின் அறிவு உண்டாகுமோ, அந்த வஸ்து அதனல் (உபலக்ஷணத்தால்) உபலக்ஷிக்கப்படுகிறது (குறித்துக் காட்டப்படுகிறது). இப்படி ஒன்ருேடு ஒன்று விரோதமுள்ள இரண்டு பக்ஷங்களையும் ஒப்புக்கொண்டு ஸ்ரீ பாஷ்யகாரர் இருவகையிலும் லக்ஷணம் பொருந்தும் என்று சொன்னது ஸரியன்று—என்று பூர்வபக்ஷி கேட்கிருன். இது ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவுள்ளத்தை அறிந்துகொள்ளாதவனுடைய கேள்வி. பதில்—ப்ரம்மவித்யைகள் பலவகைப்பட்டவைகள். அந்தந்த ப்ரம்மவித்யைக்குத் தகுந்தபடி, மோக்ஷத்திற்காக உபாஸிக்கப்படும் ப்ரம்மத்தின் ரூபங்களிலும் பேதம் ஏற்படுகிறது. ஆகையால் இங்கே இரண்டு பக்ஷங்களும் நல்ல பொருத்தம் உள்ளவைகளே.

குறிப்பு— (1) சுலோகத்தில் முதலில் விசேஷணத்துக்கும் உபலக்ஷணத்துக்கும் பேதம் காட்டப்படுகிறது. ப்ருதிவிக்குக் கந்தம் விசேஷணமான லக்ஷணம். ப்ருதிவியை அறியும்போதெல்லாம் கந்தமும் அறியப்படுகிறது. கந்தம் அறியப்படாமல் பிருதிவி அறியப்படமாட்டாது. தேவதத்தன் கேதாரத்தை அறிவதற்கு ஸாரஸபக்ஷியின் ஸம்பந்தம் உபலக்ஷணமான லக்ஷணம். கேதாரத்தை முதலில் பார்க்கும்போது அதில் அந்தப் பக்ஷி இருந்து, கேதாரத்துடன் அறியப்பட்டது. பிறகு தேவதத்தன் கேதாரம் எது என்று விசாரிக்கையில் ஸாரஸ ஸம்பந்தமிருந்த கேதாரம் தேவதத்தன் கேதாரம் என்று சொல்லப்பட்டு, தேவதத்தன்

கேதாரம் இன்னதுதான் என்று தெரிந்துவிட்டது. பிறகு தேவதத்தனுடைய கேதாரத்தின் அறிவு வர, ஸாரஸபக்ஷியின் ஸம்பந்தஜ்ஞானம் வேண்டுவதில்லை. இப்படி விசேஷணத்துக்கும் உபலக்ஷணத்துக்கும் பேதம் இருக்கையில், ஒரே லக்ஷணத்தை இரண்டு விதமாக ஸ்ரீபாஷ்யத்தில் சொன்னது எப்படி என்று பூர்வபக்ஷி கேட்கிறான்.

(2) ப்ரம்மவித்யைகள் பலவிதமாயிருக்கின்றன. எல்லாவற்றிலும் ப்ரம்மம் ஒன்றே உபாஸனத்திற்கு விஷயமாயிருந்தாலும், ஒரு வித்யையில் சில குணங்களுள்ளவனையும் வேறு வித்யையில் வேறு குணங்களுள்ளவனையும் உபாஸிக்கவேண்டியது. எந்த வித்யையில் ஜகத்காரணமாயிருப்பதான குணத்துடன் உபாஸிக்கவேண்டியதோ, அந்த இடத்தில் ஜகத்காரணத்வம் விசேஷணம். எந்த உபாஸனத்தில் இந்த குணத்துடன் உபாஸிக்கவேண்டியதில்லையோ, அந்த அடத்தில் இந்தக் குணம் உபலக்ஷணம். உதாரணம்— மைத்ரேயிக்கு உபதேசம் பண்ணப்பட்ட வித்யையில் ஜகத்காரணத்வத்தையும் சேர்த்து உபாஸிக்க வேண்டும். அவ்விடத்தில் இது விசேஷணம். வ்யாஹ்ருதி வித்யையில் இந்தஜகத்காரணத்வம் உபாஸிக்கவேண்டிய ரூபத்தில் சேரவில்லை. இது உபாஸிக்கப்படும் ப்ரம்மத்தின் ஸ்வரூபத்தை மாத்திரம் தெரிவிக்கிறது. ஆகையால் அங்கே இது உபலக்ஷணம்.

அவ:— ப்ரம்மத்திற்கு வேதம் சொல்லும் இரண்டு லக்ஷணங்களின் ப்ரயோஜனங்களைச் சொல்லி ப்ரம்மம் நிர்விசேஷம் என்று சொல்லும் மதத்தைத் தூஷிக்கிறார்:—

வநெ௵ ஸாவெவ ஸாஜெ ஃஹவி தடிம தம் லக்ஷ
ணம் காரணகூம் ஸத்யஜ்ஞாநாதிவாக்யைரவரூழிதமூ
ணம் தவிஹாதீகி வி௸ஃ । ஸாகத்ராயெ௶ விஶெஷெ
வூதிவடிமியதாவஜ௶த த ஹிஜித ஆரா வரதிம் வஷா
நாஜிஹ விஷாராரணாஷ்௵க்விவஷ௵ாயவஜஷாஃ ॥ ௨௦ ॥

“சந்திரனைக் காட்டும் விஷயத்தில் மரக்கிளைபோல், நிர்விசேஷமும் ஸ்வயம் ப்ரகாசமுமான ப்ரம்மத்தின் விஷயத்தில் ஜகத்

காரணமாயிருப்பது * தடஸ்தலக்ஷணம். (குறிப்பிட்டுக் காட்டுவதற்கு வழியாயிருக்கிற லக்ஷணம்). ஸத்யம் ஜ்ஞாநம் என்கிற வாக்யத்தாலே குணம் ஒன்றுமில்லாததாய் அது விளங்குகிறது"– இப்படி அறியாதவர்கள் சொல்லுகிறார்கள். பதங்கள் விசேஷ்யமான ஒரே அர்த்தத்தைத் தெரிவிக்கையில், அந்தச் சொற்களுக்கே உள்ளதும், அவைகளை விட்டுப் பிரிக்கமுடியாததுமான அந்த அந்த தர்மத்தை முன்னிட்டுக்கொண்டே விசேஷ்யமான அந்த அர்த்தத்தைச் சொல்லுகின்றன. இந்த ரீதியை (அருணாதிகரணத்தில்) "அருணயா" முதலிய விசேஷணங்களில் கண்டிருக்கிறோம். ந்யாயம் அறிந்த பெரியோர்களும் இப்படியே அபிப்ராயப்படுகிறார்கள்.

குறிப்பு— (1) அத்வைதி சொல்லுகிறான்– யதோ வா இமாநி என்கிற வாக்யம் ப்ரம்மத்தைக் காட்டுவதற்குத் தடஸ்த லக்ஷணம். ஸத்யம் ஜ்ஞாநம் என்கிற வாக்யம் ஸ்வரூபலக்ஷணம். சந்திரனைக் காட்டுவதற்கு சாகை வழியாயிருப்பதுபோல் ப்ரம்மத்தைக் காட்டுவதற்கு ஜகத்காரணத்வம் வழியாயிருக்கிறது. சந்த்ரனிடத்தில் எப்படி சாகையில்லையோ, அப்படியே ப்ரம்மத்தினிடத்தில் ஜகத்காரணத்வம் இல்லை. ஸத்யம் ஜ்ஞாநம் என்கிற வாக்யத்தில் ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் என்கிற சொற்கள் ஸத்யத்வம் முதலான தர்மங்களைச் சொல்லும் விசேஷணங்கள் அல்ல. அப்படியானால் ப்ரம்மம் ஸவிசேஷமாக ஆகும். ஆகையால் ஸத்யம் முதலான பதங்கள் தங்களால் காட்டப்படும் ஸத்யத்வம் முதலிய ஆகாரங்களுக்கு விருத்தங்களான அஸத்யத்வம் முதலிய ஆகாரங்களையுடைய வஸ்துக்களைக்காட்டிலும் வேறுபட்டதாக ப்ரம்மத்தைக் காட்டுகின்றன. அதாவது— ஸத்யபதம் அஸத்யத்தைக் காட்டிலும் வேறாயிருப்பதைக் காட்டுகிறது. இதுபோலவே மற்றப் பதங்களும். இப்படி விலக்குதலும் ப்ரம்மஸ்வரூபம். அது அதைக்காட்டிலும் வேறான தர்மம்அன்று.ஆகையால்

*தடஸ்தம் என்பதற்குக் கரையிலுள்ளது என்பது பதப்பொருள். அதாவது— ஒன்றிலும் சேராமல் (உதாஸீநமாய்) இருப்பது என்பது கருத்து. கரையோடு சேர்ந்திருக்கும் ப்ரவாஹத்தில் சேராமல் கரையிலிருப்பது. லக்ஷணத்தால் தெரிவிக்கப்படுவதிலில்லாமல் பக்கத்திலிருந்து அதைக் காட்டுவது.

ப்ரம்மம் நிர்விசேஷம் என்று சொல்லத்தடையில்லை. ப்ரம்மம் நிர்விசேஷமாகையால் காரணத்வம் என்பதை விசேஷணமான லக்ஷணமாகச் சொல்லமுடியாது.

(2) ஸித்தாந்திபோல் ஒருவன் கேட்கிறான்— ஜகத்காரணத்வம் ப்ரம்மத்தைக் காட்டுவதற்கு, மரக்கிளைச் சந்த்ரனைக் காட்டுவதை உதாரணமாகச் சொன்னாய். சந்த்ரனிடத்தில் ப்ரகாசம் எப்போதுமிருக்கிறதே. அதுபோல ப்ரம்மத்தினிடத்திலும் ஸர்வஜ்ஞனாயிருப்பது முதலான குணங்கள் எப்போதும் இருக்க வேண்டுமே. ப்ரம்மத்தை எப்படி நிர்விசேஷம் என்று சொல்லலாம்? என்று. அத்வைதி பதில் சொல்லுகிறான்—சந்திரனிடத்தில் ப்ரகாசமிருப்பதை ப்ரத்யக்ஷப் பிரமாணத்தாலே அறிகிறோம். அதற்குப் பாதம் ஏற்படவில்லை. ப்ரம்மத்தையோ ஒரு ப்ரமாணத்தாலும் அறியமுடியாமையாலும், ஸத்யம் ஜ்ஞாநம் என்கிற வாக்யத்தாலே அது நிர்விசேஷம் என்று காட்டப்படுவதாலும் நீ சொல்லுகிற குணங்கள் அதனிடத்தில் இல்லை — என்று.

(3) இதைச் சுலோகம் தூஷிக்கிறது. பதங்கள் ஓர் ஆகாரத்தையோ அல்லது குணத்தையோ, முன்னிட்டு வஸ்துக்களைச் சொல்லுகின்றன. நீலோத்பலம் என்கிற வாக்கியத்தில் நீலம் என்கிற சொல் நீலம் என்கிற குணத்தைச் சொல்லி அதை உடைய வஸ்துவைக் காட்டுகிறது. உத்பலம் என்கிற சொல் உத்பலத்வம் என்ற ஜாதியைச் சொல்லி ஒரு வஸ்துவைக் காட்டுகிறது. இது பதங்களின் ஸ்வபாவம். இரண்டும் சேர்ந்து ஒரு வஸ்துவைத் தெரிவிக்கும்போது நீலம் என்கிற குணத்தையும் உத்பலத்வம் என்கிற ஜாதியையுமுடைய ஒரு வஸ்துவைக்காட்டுகின்றன. இப்படியே வியாகரணகாரர் *ஸாமாநாதிகரண்யத்துக்கு லக்ஷணம் சொல்லுகிறார்கள். அந்த லக்ஷணத்தை சுலோகம் அநுவாதம் பண்ணுகிறது. இப்படியே ஸத்யம் ஜ்ஞாநம் என்கிற வாக்யமும் ஸத்யத்வம் ஜ்ஞாநத்வம் அநந்தத்வம் என்கிற மூன்று தர்மங்களையுமுடைய ஒரு தத்துவத்தைக் காட்டுகிறது. லக்ஷண

* ஒரே விபக்தியுள்ளவைகளாய் ஒரே அர்த்தத்தைச் சொல்லுகிற சொற்கள் ஸமாநாதிகரணச் சொற்கள். பல சொற்கள் ஒரே விபக்தியுள்ளவைகளாய் ஒரே அர்த்தத்தைத் தெரிவிப்பது ஸாமாநாதிகரண்யம்.

வாக்யம் அந்த தத்வம் ப்ரம்மம்என்று சொல்லுகிறது. ஆகையால் ப்ரம்மம் நிர்விசேஷம் என்கிற வாதம் ஸாமாநாதிகரண்யலக்ஷணத்துக்கு விருத்தம். அந்த லக்ஷணத்தைச் சொல்லுகிறவர் எல்லா ஸித்தாந்திகளுக்கும் பொதுவானவர்.

(4) சுலோகத்தில் "வூதிவஷநியதாவஜ-ிூ தத்ஷிஜி ஆரா" என்பதின் பொருள்:— ஸம்ஜ்ஞைகள் அல்லாத சொற்கள் ஓர் ஆகாரத்தையோ குணத்தையோ முன்னிட்டுக்கொண்டுதான் ஓர் அர்த்தத்தைக் காட்டுகின்றன. இது அவைகளின் ஸ்வபாவம். இதை 'நியத' என்கிற சொல் தெரிவிக்கிறது. அத்வைதி ஸமாநாதிகரணச் சொற்கள் குணத்தையோ ஆகாரத்தையோ சொல்லவில்லை. அவைகள் உண்மையில் இல்லை என்று சொல்லுகிறான். மீமாம்ஸகன் அவைகளைச் சொல்லுவதில் கருத்தில்லை. கருத்திருப்பதாக ஒப்புக்கொண்டால் சில தோஷங்கள் வரும் என்று சொல்லுகிறான். அவர்கள் சொல்லியபடி குணங்களையும் ஆகாரங்களையும் தள்ளமுடியாது என்பதைக் காட்டுகிறது 'ஊவஜ-ிூ' என்கிற சொல். அவர்கள் சொல்லுவதும் அதற்குத் தூஷணமும் ஆநந்தமயாதிகரணபாஷ்யத்தில் தெளிவாய் விளங்கும்.

(5) அருணாதிகரணந்யாயமாவது— "ஊரு ணயெகஹாயநுா விஜ்ஞாக்ஷுா ஸொமம் கீ ணாதி" என்று ஓர் விதிவாக்யம் இருக்கிறது. ஊரு ணயா என்கிற சிகப்புவர்ணத்தைச் சொல்லுகிற சொல் அந்த வர்ணத்தையுடைய பிராணியைச் சொல்லுகிறது. அதுவும், மூன்றுவது விபக்தியுள்ள மற்ற இரண்டு சொற்களும் ஸமாநாதிகரணங்களாகையாலே சிகப்பு வர்ணத்தையும் ஒருவயதையும் பூனைக் கண்ணையுமுடைய ஒரு பிராணியைச் சொல்லுகின்றன. அந்தப் பிராணியான பசுமாட்டை க்ரயமாகக்கொடுத்து ஸோமத்தை வாங்கு என்று அந்த வாக்யம் விதிக்கிறது. ஸமாநாதிகரணச்சொற்கள் சொல்லுவதைப் பூர்வமீமாம்ஸையில் விசாரித்திருக்கிறார்கள். அதில் சொல்லும் பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் தூஷித்து, சரியான பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் ஆநந்தமயாதிகரணபாஷ்யம் காட்டுகிறது. அதைப் பார்க்க. (40)

(நிகமநம்) 1 ப்ரம்மத்துக்கு வேதம் இரண்டுலக்ஷணங்களைச்சொல்லுகிறது. அவைகளில் "யதோ வா இமாநி" என்கிற வாக்கியம்

ப்ரம்மத்தினுடைய விசிஷ்டாகாரத்தின் (ஸூக்ஷ்மவிஷ்விஸிஷ்டப்ரம்மத்தின்)லக்ஷணம்.ஸத்யம் ஜ்ஞாநம் என்பது ஸ்வரூபத்தின் லக்ஷணம். ஸ்வரூபலக்ஷணத்தை விட்டு விசிஷ்டலக்ஷணத்தை ஸூத்ரகாரர் விசாரித்ததற்குக் காரணம்— ஸ்வரூபலக்ஷணத்தை விசாரித்தால் உபாஸிக்கப்படும் ப்ரஹ்மத்தின் குணங்கள் மாத்திரம் அறியவேண்டியவைகளாக ஏற்படும்; * விபூதிகள் விடப்படும். விசிஷ்டலக்ஷணத்தை விசாரித்தால் உபாஸிக்கவேண்டியவைகளாய் விபூதிகளும் ஏற்படும். அவைகளுக்கு ஆதாரமாயிருந்து அவைகளை நியமநம் பண்ணுவதாலே, ப்ரம்மத்தின் குணங்களும் உபாஸிக்கவேண்டியவைகளாய் ஏற்படும். ப்ரம்மஸ்வரூபத்தை உபாஸிப்பதுபோல அதை விபூதிகளுடன் கூடவும் உபாஸிக்கவேண்டும் என்பது 'உபாஸா த்ரைவித்யாத்' (1-1-32) என்கிற ஸூத்ரத்தில் காட்டப்படுகிறது.

II ஸ்வரூபலக்ஷணத்தில் ஒவ்வொரு விசேஷணத்தாலே எது எது விலக்கப்படுகிறது என்பதும், ப்ரஹ்மம் எல்லாவற்றைக் காட்டிலும் விலக்ஷணம் என்பதும் ஸ்ரீபாஷ்யத்தில் இந்த அதிகரணத்தின் கடைசியில் நிரூபிக்கப்படுகிறது. குடத்தின் ஆகாரம் அதை மற்ற எல்லா வஸ்துக்களிலிருந்தும் பிரிக்கிறது. ஆனால் இது எந்த ஜாதி வஸ்து ? ஜலஜாதியில் சேர்ந்ததோ என்கிறஸந்தேஹம் நீங்குகிறதில்லை. அதிலிருக்கும் கந்தம் என்னும் குணம், அது ப்ருதிவீ வகுப்பில் சேர்ந்தது, ஜலவகுப்பில் சேரவில்லை என்று காட்டி இந்த ஸந்தேஹத்தைத் தீர்க்கிறது. இங்கே குடத்தின் ஆகாரமும், கந்தம் என்னும் குணமும் லக்ஷணங்கள். இரண்டுக்கும் ப்ரயோஜநமிருக்கின்றன. அப்படியே ப்ரம்மத்தினுடைய இரண்டு லக்ஷணங்களுக்கும் ப்ரயோஜநங்கள் உண்டு. ஜகத்காரணத்வம் என்பது ப்ரம்மத்தை எல்லா வஸ்துக்களிலிருந்தும் பிரிக்கிறது. ஆனால் அதுக்கு ஸமான ஜாதிவஸ்து இருக்கிறதோ என்று ஸந்தேஹமுண்டாகலாம். ஸத்யம் ஜ்ஞாநம் என்னும் லக்ஷணம், அது ஒரு ஜாதியிலும் சேர்ந்தது அன்று என்று காட்டி இந்த ஸந்தேஹத்தைத் தீர்க்கிறது.

* விபூதிகள்— சேதநர்கள், அசேதநங்கள் அடங்கிய இந்த லோகமும் பரலோகங்களும் ஸ்ரீவைகுண்டமும்.

III இந்த அதிகரணத்தில் செய்யும் விசாரத்தின் பலன்கள்—லக்ஷணவாக்யத்தில் ஒரு தோஷமுமில்லை என்பதும், அதனால் ப்ரம்மத்தை அறியலாம் என்பதும். ப்ரம்மவிசாரத்தைச் செய்ய முடியும் என்பது முதலிரண்டு அதிகரணங்களாலே ஏற்படுகிறது.

சாஸ்த்ரயோநித்வாதிகரணம். 3.

ஶாஸ்த்ரயோநித்வாத் ॥ ॥௩॥

இந்த ஸூத்ரம் ஹேதுவைச் சொல்லுகிறது. இதற்கு ப்ரதிஜ்ஞை—ப்ரம்ம விசாரம் செய்யவேண்டியது என்று முதல் ஸூத்ரத்தில் சொல்லப்பட்டது. ப்ரம்மத்தைச் சாஸ்த்ரத்தைக்கொண்டே அறியவேண்டியதாகையால் என்பது ஸூத்ரத்தின் அர்த்தம். ஶாஸ்தி ஶாஸ்த்ரம் வேத:. உபாதாநகாரணத்தைச் சொல்லும் யோநி என்கிற சொல் இங்கே பொதுவாய் காரணத்தைச் சொல்லுகிறது. காரணம் இரண்டு விதம்—உத்பத்திகாரணம்(உண்டாகைக்குக்காரணம்)என்றும்,ஜ்ஞப்திகாரணம் (அறிகைக்குக் காரணம்)என்றும். இங்கே ஜ்ஞப்திகாரணத்தைச் சொல்லுகிறது.

அவ:—இந்த அதிகரணத்துக்கு விஷயம் ப்ரம்மவிசாரத்தைச் செய்யவேண்டியதா இல்லையா என்பது. வைசேஷிகன் பிரம்மத்தை அநுமானத்தாலேயே அறியலாம். சாஸ்த்ரத்தால் அறிய விசாரம் செய்யவேண்டியதில்லை. வேறு பிரமாணங்களாலே அறியமுடியாதபோதுதான் சாஸ்த்ரம் ப்ரமாணம் என்று அநுமானங்களைச்சொல்லுகிறான். அவைகளை அநுவாதம்பண்ணி ஸூத்ரகாரர் அவைகளை ஒப்புக்கொள்ளவில்லை என்கிறார்:—

வீதாவீதவ்யோமக்லுப்தைர்நியதிபிரநுமா கார்யதா விஶ்வ-
ஹேதுஸ்தத்வஜ்ஜ்ஞேந த்ருஷ்டம் நயதி விதிவஶாத்
ஶாஸ்த்ரைர்விப்ரவாஸ: । இத்யுக்தீஸ்தத்ர [illegible]
[illegible] க்லுப்தைஶ்வர்யப்ரஸக்த்யா விஶ்வாதிஷ்டாத்ரு-
ஸித்தி விஹதிமிஹ ஸூத்ரயத்யாஸ்த்ரவேதீ ॥* ॥௪௧॥

---

* "க்லுப்தைஶ்வர்யப்ரஸக்தே விஶ்வாதிஷ்டாத்ருஸித்தி:" என்று வேறு பாடமுமுண்டு.

அந்வயவ்யாப்தியும் வ்யதிரேகவ்யாப்தியுமுள்ள கார்யத்வம் என்கிற ஹேதுவானது, இந்த ஜகத்து ஸர்வஜ்ஞனால் உண்டு பண்ணப்பட்டது என்பதை ஸாதிக்கிறது. இந்த விஷயத்தில் சாஸ்த்ரங்களால் விசாரம் செய்வதற்குப் பலன் இல்லை. இப்படிப் பூர்வபக்ஷி சொல்ல, அநுமிதியால் ஸாதிக்கப்படும் கர்த்தா விச்வாமித்ரர் முதலியவர்களைப்போல் கர்மங்களாலே உண்டுபண்ணப்பட்ட ஐச்வர்யங்களோடு கூடிய ஜீவன் என்று லாகவந்யாயத்தாலே ஏற்படும். ஆகையால் பகவான் சாஸ்த்ரத்தாலேயே அறியப்படவேண்டியவன் என்று ஸூத்ரகாரர் ஸூத்ரத்தைச் செய்திருக்கிறார்.

குறிப்பு— (1) வைசேஷிகன்— முதலில் ஜகத் கார்யம் என்று ஸாதிப்பதற்கு மூன்று ஹேதுக்களைச் சொல்லுகிறான். ஸாவயவத்வாத் (அவயவங்களுள்ளதாயிருப்பதாலே), மஹத்த்வே ஸதி க்ரியாவத்த்வாத் (மஹத்தாயிருந்து கிரியையையுடையதாய் இருப்பதாலே), மஹத்த்வே ஸதி மூர்த்தத்வாத் (மஹத்தாயிருந்து அளவுள்ளதாயிருப்பதால்) என்று. இவைகளுக்குக் குடம் உதாரணம். இவைகளால் ஏற்பட்ட கார்யத்வம் (காரியமாயிருப்பது) என்கிற ஹேதுவைக்கொண்டு ஜகத் ஸர்வஜ்ஞனைக் கர்த்தாவாக உடையது என்று அநுமாநம் சொல்லுகிறான்— விவாத விஷயமான ஜகத் ஸர்வஜ்ஞகர்த்ருகம், கார்யத்வாத்—என்று. இதற்கு அந்வயவியாப்தி—எது கார்யமோ, அது அதுவிஷயமான எல்லாவற்றையும் அறிந்தவனால் செய்யப்படட்டது-என்பது. வ்யதிரேகவ்யாப்தி— எது எல்லாம் அறிந்தவனால் செய்யப்படவில்லையோ, அது கார்யம் அன்று—என்பது. இந்த அநுமாநத்தால் ப்ரம்மம் ஜகத்துக்குக் காரணம் என்று ஏற்படுகிறது என்று சொல்லுகிறான்.

(2) இதற்குத் தூஷணம்— இந்த அநுமாநத்கால் ஜகத்துக்குக் கர்த்தா ஒருவன் இருக்கிறான் என்பதுமாத்திரம் ஏற்படும். அவன் ஜீவனாயிருக்கலாம். அவனுக்கு ஸ்ருஷ்டிக்கு வேண்டிய ஜ்ஞானமும் சக்தியும் ஜ்யோதிஷ்டோமங்கள் முதலான பல கர்மங்களைச் செய்வதால் விச்வாமித்ரனுக்குப்போல உண்டாயிருக்கலாம். உன் பக்ஷத்தில் அறியப்படாத தர்மியான ப்ரம்மத்தையும், அது ஸர்வஜ்ஞம் ஸர்வசக்தி என்கிற தர்மங்

களையும் கல்பிக்கவேண்டியது. ஜீவனே ஏற்கனவே இருக்கிறான். அவனுக்கு ஜ்ஞானம் சக்தி ஆகிய தர்மங்களிருப்பதாகிய ஒன்றையே கல்பிக்கவேண்டியது. இது லாகவந்யாயம்.

(3) பல அண்டங்களையும் ஸ்ருஷ்டிக்கப் பல பேர்கள் வேண்டியிருக்கும். அப்பொழுது ஜகத்கர்த்தா ஒருவன் என்று ஏற்படாது. இதற்குப் பதிலாக வைசேஷிகன் ஜகத்தை ஒருவனே ஸ்ருஷ்டிக்கவேண்டியது என்று அநுமாநம் சொல்லுகிறான். அந்த அநுமாநமாவது— [illegible] என்பது. இதுவும் ஸரியானதன்று. ஒரு கோபுரத்தை அனேகம் பேர்கள் செய்கிறார்கள். அதில் ஸாத்யமில்லை. கார்யத்வம் என்கிற ஹேது இருக்கிறது. இந்த அநுமாநத்துக்கு வ்யபிசாரம் என்கிற தோஷம் வருகிறது. பாத (பாய)முமிருக்கிறது. குடம் எப்படி ஒருவனாலேயே ஒரே காலத்திலேயே செய்யப்படுகிறதோ, அப்படியே ஜகத்து ஒரே கர்த்தாவாலே ஒரே காலத்திலேயே செய்யப்பட்டதாகச்சொல்ல முடியாது. “ரதகாரன் பிறந்தான், கும்பகாரன் பிறந்தான்” என்று உலகத்தில் சொல்லுகிறபடியாலே ரதத்தைச் செய்கிறவன் வேறு, கும்பத்தைச் செய்கிறவன் வேறு என்று ஏற்படுகிறதன்றோ. (41)

அவ:— ஜீவனுக்கு அணு அத்ருஷ்டம் முதலானவைகளின் அறிவில்லையே, அவன் எப்படி ஜகத்காரணமாயிருக்கக் கூடும்? என்று பூர்வபக்ஷி சொல்லுவதை அநுவாதம் பண்ணித் தூஷிக்கிறார்:—

[illegible] ॥ ௪௨ ॥

பூமி முதலானவைகள், ஒரு கர்த்தாவால் செய்யப்பட்டவை, கார்யமாயிருப்பதாலே, கைவளைபோல, கிரீடம்போல. இந்த அநுமானத்தாலே ஏற்படும் கர்த்தா அணு அத்ருஷ்டம் முதலான

காரணங்களை அறிந்தவனாகவும் எதையும்செய்யச் சக்தியுள்ளவனாகவும் ஸித்திக்கலாம் என்பது பூர்வபக்ஷியின் வாதம். இது கூடாது. காதாலே வாஸனையை அறிய ஆசைப்படுவதுபோல் இருக்கிறது இது. அவன் சொல்லுகிற விதமாய் ஹேதுவிற்கும் ஸாத்யத்திற்கும் வ்யாப்தி இல்லாமையாலே. குடத்தைச் செய்கிறவன் குடத்துக்குள்ள எல்லாக் காரணங்களையும் அறியவில்லை. இதனால் அவன் கர்த்தா அன்று என்று சொல்லலாமா?

குறிப்பு– (1) வைசேஷிகன் சொல்லுகிறான்— நீர் சொன்னபடி ஜீவன் உலகத்தை ஸ்ருஷ்டிக்க முடியாது. அதற்கு உபாதாநகாரணம் பரமாணுக்கள். அவைகள் சேர்ந்து ஜகத்து ஆவதற்கு ஜீவனுடைய அத்ருஷ்டங்கள் நிமித்தகாரணம். அத்ருஷ்டங்களாலே பரமாணுக்களில் க்ரியை உண்டாகி அவைகள் சேர்ந்து ஜகத்தை உண்டுபண்ணவேண்டும். அத்ருஷ்டங்களையும் பரமாணுக்களையும் ஜீவன்கள் அறியமுடியாது. ஈச்வரனை அநுமாநத்தாலே ஸாதிக்கும்போது இவைகளை அறிந்தவனாகவும் எதையும் செய்யச் சக்தியுள்ளவனாகவும் ஸாதிக்கிறோம். அநுமாநமாவது—* ஜகத் ஸமஸ்தவஸ்த்வாதிகாரணஜ்ஞாநஶக்திமத்கர்த்ருகம், கார்யத்வாத்— என்பது. குடத்தைச் செய்கிற குயவனுக்கும் கிரீடத்தைச் செய்கிற தட்டானுக்கும் அவைகளின் காரணங்களைப் பற்றிய ஜ்ஞாநமும், அவைகளைச் செய்யச் சக்தியும் இருக்கின்றன. அதுபோல- என்று சொல்லுகிறான்.

(2) இதைத் தூஷிக்கிறார்— அநுமாநத்தாலே இதை ஸாதிக்கமுடியாது. அதை ஸாதிக்க ஆசைப்படுவது ச்ரோத்ரேந்திரியத்தாலே வாஸனையை அறியவும், க்ராணேந்திரியத்தாலே சப்தத்தைக் கேட்கவும் ஆசைப்படுவதுபோலிருக்கிறது. ஒவ்வொரு ப்ரமாணமும் இன்னதைத்தான் அறிவிக்கும் என்று ஒரு நியமமிருக்கிறது. அதை அது மீறாது. சொன்ன அநுமாநத்தில் என்ன தோஷம் என்றால், ஸாத்யத்திற்கு ப்ரஸித்தியில்லை. அது

* ஸ்ரீபாஷ்யத்தில் ஸாத்யத்தை ஜகத்தினுடைய உபாதாநோபகரண ஸம்ப்ரதாந ப்ரயோஜநாபிஜ்ஞ கர்த்ருகம் என்று சொல்லியிருக்கிறது. இதையே சுருக்கமாக ஸமஸ்த வஸ்த்வாதி ஜநகஜ்ஞ என்று சுலோகம் சொல்லுகிறது.

இருக்கும் ஓர் இடத்தையும் காட்டமுடியாது. ஆதலால் அதற்கும் கார்யத்வம் என்கிற ஹேதுவுக்கும் வ்யாப்தியில்லை. அவன் சொல்லும் த்ருஷ்டாந்தங்களில் கர்த்தாக்களான குயவனும் தட்டானும் குடத்தையும் கிரீடத்தையும் உண்டுபண்ணும் பரமாணுக்களையாவது அவைகளில் க்ரியையை உண்டுபண்ணும் அத்ருஷ்டங்களையாவது பார்க்கவில்லை. இவைகள் இருக்கின்றன என்கிற ஜ்ஞாநமே போதும். இவைகளைப் பாராமையாலே அவர்களைக் கர்த்தாக்கள் அல்ல என்றும் சொல்லக்கூடாது. அவர்கள் அவைகளைச் செய்வதை எல்லாரும் பார்க்கிறோம். (42)

அவ:— அந்வயவ்யாப்தி இல்லாவிட்டாலும் வ்யதிரேகவ்யாப்தி இருக்கிறது. அதைக்கொண்டு கர்த்தாவைச் சொன்னபடியே ஸாதிக்கலாம் என்று பூர்வபக்ஷி சொல்வதைத் தூஷிக்கிறார்:—

கார்யத்வாத் ஸ்யாத் விவாதாஸ்பதமிதமகிலம் ஸர்வவித்க
ர்த்ருகம் யந்நைவம் தந்ந நைவம் வ்யதிரேகவ
தீதி நாநந்யதாஸித்த்யபாவாத் । ஹேதாவேதாத்ருசாத்ர
ந்யவிபக்ஷவ்யாவ்ருத்த்யஸித்த்யாதிகபஹுதோஷம் தத்ஜ்ஞை
லக்ஷணாநாமேணி பரிகா தத்த்வமுக்தாகலாபே ।௪௩॥

"விவாதத்திற்கு விஷயமான இந்த ஜகத்முழுவதும், எல்லாம் அறிந்த கர்த்தாவால் செய்யப்பட்டது, கார்யமாயிருப்பதாலே, எது இப்படியில்லையோ, அது கார்யம் அன்று ஜீவனைப்போல" என்கிற பூர்வபக்ஷம்கூடாது. சொல்லும் அநுமாநம் அநந்யதாஸித்தமல்லாமையால்; இவ்விதமான (வ்யதிரேகி) ஹேதுவில் வ்யாப்தி சொல்லமுடியாது என்கிற தோஷம் முதலிய பல தோஷங்களும் இருப்பனவாகப் பெரியோர்கள் நினைக்கிறார்கள். வ்யதிரேகிஹேது இல்லாவிட்டாலும் லக்ஷணங்களைச் சொல்லமுடியும் என்று தத்த்வமுக்தாகலாபத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பு— (1)ச்லோகத்தில் முதலில் வ்யதிரேகி அநுமாநம் காட்டப்படுகிறது. எது ஸர்வஜ்ஞனால் செய்யப்படவில்லையோ, அது கார்யம் அன்று, ஜீவனைப்போல். ஜீவன் ஸர்வஜ்ஞனால் செய்யப்பட்டவன் அன்று, அவன் கார்யமும் அன்று. கார்யமானவைகளுக்கு அவயவங்கள் உண்டு. அவனுக்கு அவயவங்க

ளில்லை. அவன் நித்யன் என்று பௌத்தன் தவிர எல்லா ஸித்தாந்திகளும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இது பூர்வபக்ஷியின் வாதம்.

(2) அநந்யதாஸித்தியாவது— அந்யதாஸித்தியில்லாமை. அந்யதாஸித்தி என்பது பல தூஷணங்களுக்குப் பொதுவான பெயர். இங்கே அநுகூலதர்க்கமில்லாமை தோஷம். ஆகையால் உன் அநுமானத்தை ஒப்புக்கொள்ளமுடியாது. ஹேது இருக்கட்டும், ஸாத்யம் இருக்கவேண்டாம் என்றால் இதைப் பரிஹரிக்க, ஸர்வவித்கர்த்ருகத்வம் என்கிற ஸாத்யமில்லாவிட்டால் கார்யத்வம் என்கிற ஹேது இருக்கமுடியாது என்று அவன் அநுகூலதர்க்கம் சொல்லவேண்டும். இது ஸரியான தர்க்கம் அன்று. எல்லாமறியாத குயவனால் செய்யப்படும் குடத்தில் ஸர்வவித்கர்த்ருகத்வம் என்கிற ஸாத்யமில்லை. அங்கே கார்யத்வமென்கிற ஹேது இருக்கிறது. மேலும், ஸகர்த்ருகம் அல்லாவிட்டால் கார்யமன்று என்றே சொல்லலாமே. ஸகர்த்ருகத்வமே கார்யத்வத்திற்கு ப்ரயோஜகம், ஸர்வவித்கர்த்ருகத்வம் என்பது பிரயோஜகமன்று. ஸர்வவித் என்கிற விசேஷணத்துக்கு ப்ரயோஜனமில்லை. விசேஷணத்தை விட்டுவிட்டு ஸகர்த்ருகம் என்பது ஸாத்யமானால் உபாதி என்கிற தோஷமிருக்கிறது. ஶரீரஜந்யத்வம் (உடம்பாலுண்டு பண்ணப்படுவது) என்பது உபாதி. இது உதாரணமாகச் சொல்லப்பட்ட குடத்தில் இருக்கிறது. குடத்தில் ஸகர்த்ருகம் என்கிற ஸாத்யமுமிருக்கிறது. எது எது ஸகர்த்ருகமோ அதெல்லாம் சரீர ஜந்யமாகவே இருக்கின்றன. பக்ஷத்தில் அடங்கிய முளை முதலானவைகளில் இந்த உபாதியில்லை. எது எது கார்யமோ அது சரீரஜந்யமாயிருக்கவேண்டியதில்லை. முளை கார்யமானாலும் அது சரீரத்தினாலுண்டுபண்ணப்படவில்லை.

(3) வ்யதிரேகவ்யாப்தியைக் காட்டமுடியாது. வ்யதிரேக வ்யாப்தி— ஸாத்யாபாவமும் ஹேதுவின் அபாவமும் சேர்ந்திருப்பது. அதை ஓரிடத்திலாவது காட்டவேண்டும். ஸாத்யத்துக்குப் பிரஸித்தியில்லாமையால் ஸாத்யாபாவத்தைக் காட்டமுடியாது. ஸாத்யம் பக்ஷத்தில் ப்ரஸித்தமானால் ஸித்தஸாதனம். வேறிடத்திலானால் அது ஸபக்ஷமாகிவிடுவதால் அந்வய வ்யாப்தியே சொல்லிவிடலாமே.

(4) வ்யதிரேகவ்யாப்தியை இப்படித் தள்ளிவிட்டால், இன்னதற்கு இன்னது லக்ஷணம் என்று எப்படிச் சொல்லமுடியும்? லக்ஷணமென்பது லக்ஷ்யவஸ்துவை மற்றவைகளிலிருந்து பிரித்துக் காட்டுவது. இந்தப்பிரிவை (இதரபேதத்தை) கேவல வ்யதிரேகி அநுமானத்தால்தானே ஸாதிக்கவேணும். கேவல வ்யதிரேகி ஹேதுவை ஒப்புக்கொள்ளாவிட்டால் ஒன்றையும் லக்ஷணமென்று சொல்லமுடியாது. உதாரணம்— ப்ருதிவீ கந்தவதீ என்கிறவிடத்தில் கந்தம் என்கிற லக்ஷணத்துக்கு இதரபேதத்தை ஸாதிக்கும்பொழுது அந்வயவ்யாப்தி கிடையாது. ஏன் என்றால், கந்தம் ப்ருதிவியில் மாத்ரமிருக்கிறது. ஆகையால், ப்ருதிவீ மற்ற த்ரவ்யங்களிலிருந்து வேறுபடுகிறது. கந்தமுள்ளதாயிருப்பதாலே, எது (பிருதிவியைத்தவிர) மற்ற த்ரவ்யங்களிலிருந்து வேறுபடவில்லையோ, அதில் கந்தமில்லை என்கிற வ்யதிரேகவ்யாப்தியைக்கொண்டே அநுமாநம்சொல்லவேண்டும் என்று வைசேஷிகன் ஆக்ஷேபிக்க, இதற்குப் பதில்* தத்வமுக்தா கலாபத்தில் சொல்லியிருப்பதைப் பார் என்று சொல்லுகிறார்.

அவ:— ஒருவன் மற்றொருவனைப் பார்த்து, இந்த உன் சரீரம், ஆத்மாவோடு கூடியது, ப்ராணன் முதலானவைகளையுடையதாயிருப்பதாலே— என்று அநுமாநம் சொல்லுகிறான். அதை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்கள். இப்படி பராத்மாநுமாநத்தை ஒப்புக்கொள்ளும் நீங்கள் ஈச்வரவிஷயமான அநுமாநத்தை ஏன் ஒப்புக்கொள்ளக்கூடாது? ஈச்வரனும் பராத்மாதானே. இதை ஒப்புக்கொள்ளாவிட்டால், அதையும் ஒப்புக்கொள்ளக்கூடாது என்று வைசேஷிகன் சொல்வதற்குப்பதில் சொல்கிறார்—

𑌯𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌯𑌤𑍇 𑌹𑍍𑌯𑌨𑍁𑌮𑌿𑌤𑌿𑌰𑌨𑌘𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌦𑍇-
𑌶𑍍𑌯𑌾𑌪𑌿 𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑍈𑌷𑌾 𑌨 𑌵𑌶𑍍𑌯𑌾𑌂 𑌶𑌿𑌯𑌿𑌵𑌿
𑌤𑌾 𑌕𑍍𑌵𑌾𑌤𑍍𑌵𑌿𑌤𑍍𑌵𑌕𑍍𑌷𑌸𑍇𑌷𑌾 । 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌯𑍇 𑌕𑍍𑌵𑌹𑍍𑌯𑍇𑌤𑌾𑌦𑍍𑌭𑍁
𑌭𑌵𑌤𑌿 𑌵𑌿𑌧𑌯𑌾 𑌤𑌾𑌦𑍃𑌶𑌾𑌧𑍍𑌯𑌾𑌕𑍃𑌤𑍍𑌯𑌾 𑌬𑌾𑌧𑌾𑌭𑌾𑌵𑌾𑌦𑌿
𑌸𑌾𑌧𑍍𑌯𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌦𑍃𑌷𑍍𑌟𑌿 𑌸𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌾𑌕𑌵𑌦𑍍𑌗𑍃𑌣𑌤𑌾𑌦𑌿॥ ॥ ௪௪ ॥

* தத்வமுக்தா கலாபத்திலும் மற்ற க்ரந்தங்களிலும் சொல்லியிருக்கிற வழியை யதீந்த்ரமததீபிகையின் தமிழ்மொழி பெயர்ப்பில் 54-ம் பக்கத்திலுள்ள குறிப்பில் காட்டியிருக்கிறது.

ஒருவன் உடம்பில் ஆத்மா இருப்பதை மற்றொருவன் சில ஹேதுக்களைக்கொண்டு அநுமாநத்தாலே ஸாதிக்கிறான். அதில் தோஷமில்லை. அந்த இடத்தில் ப்ரத்யக்ஷத்தாலே வ்யாப்தியை அறிகிற க்ரமத்துக்கு ஓரிடத்திலும் பாதமில்லை. * ஆப்தனால் சொல்லப்படுவது ஆச்சர்யமாக இருந்தாலும் எப்படிப் பொய்யாவதில்லையோ, அப்படியே வேதத்தில் சொன்ன ஆச்சர்யமான விஷயமும் பொய்யன்று. வாதமிருப்பதும் வாதமில்லாமையும் லோகவேதங்களிரண்டிலும் ஸமம். வாதமுள்ள விஷயத்தில் லோகத்தில்போலவே சொற்களுக்குக் கௌணமான அர்த்தத்தை எடுத்துக்கொள்ளவேண்டும்.

குறிப்பு— (1) அவதாரிகையில் சொன்ன அநுமாநத்துக்கும் ஈச்வரவிஷயமான அநுமாநத்திற்கும் வித்யாஸம் இருக்கிறது. அந்த அநுமாநத்தில் எது ப்ராணன் முதலானதை யுடையதோ, அது ஆத்மாவையுடையது என்பது வ்யாப்தி. இது ப்ரத்யக்ஷத்தாலே தன் சரீரத்தில் அறியப்படுகிறபடியால், அந்த அநுமாநத்தில் தோஷமில்லை. ஈச்வரவிஷயமான அநுமாநத்தில் வியாப்தியைக் கீழ் ச்லோகங்களில் சொன்னபடி அறியமுடியாது. அதில் தோஷமிருக்கிறது. ஆகையால் அந்ய ஆத்ம விஷயமான அநுமானத்தை ஒப்புக்கொண்டு ஈச்வரவிஷயமான அநுமாநத்தைத் தள்ளிவிடுகிறோம்.

(2) ஈசுவரனை அநுமானத்தாலே ஸாதிக்க முடியாது என்று காட்டினீர். அப்போது அவனை வேதத்தைக்கொண்டே அறியவேண்டும். அதில் சொல்லப்பட்டப் பல விஷயங்கள் ஆச்சர்யமும், இதுவரையில் அறியப்படாதவைகளுமாக இருக்கின்றன. அவைகளை எப்படி நம்பலாம்? என்கிற கேள்விக்கு உத்தரார்த்தம் பதில் சொல்லுகிறது. ஓர் ஆப்தன் தூரதேசத்திலிருந்துவந்து ஆச்சர்யமான ஒரு விஷயத்தைச் சொன்னால் அந்த விஷயத்தை எப்படி நம்புகிறோமோ, அப்படியே வேதம்சொல்லுவதையும் நம்பவேண்டியது. அவன்சொல்லுவது எப்படிப்பொய்யன்றோ, அப்படியே வேதம் சொல்லுவதும் பொய்யன்று. வேதம்சொல்லுவதில் சில இடங்களில் பாதமிருக்கிறதே என்றால், ஆப்தன் சொல்வதி

* ஆப்தன்—விஷயத்தை நன்றாய்ப் பார்த்து, பார்த்தபடியே உண்மையைப் பேசுகிறவன் என்று அறியப்பட்டவன்.

லும் பாதமிருக்கிறது. பாதமுள்ளவிடத்தில் வேறு அர்த்தம் பண்ணுகிறோம். பாதமில்லாததை ஒப்புக்கொள்ளுகிறோம். அப்படியே வேதத்திலும் பாதமுள்ளவிடத்தில் கௌணமாக வேறு அர்த்தம் பண்ணுகிறோம். "ஆதித்யோ யூப:" என்கிற வாக்யத்தில் *யூபம் ஆதித்யன் அன்று. ஆகையால் இந்த வாக்யம் பாதிதம். ஆதித்யன் என்கிற சொல்லுக்கு ஆதித்யன்போல் ப்ரகாசிக்கிறதென்று பொருள் கொள்ளுகிறோம். இதை உலகத்திலும் பார்க்கலாம். கங்காயாம் கோஷ: என்கிற வாக்யம் பாதிதம். ப்ரவாஹத்தில் கோஷம் இருக்கமுடியாது. கங்கை என்கிற சொல்லுக்கு ப்ரவாஹம் என்கிற முக்யமான அர்த்தத்தை விட்டுவிட்டு கங்கையின்கரை என்கிற அர்த்தத்தைக் கொள்ளுகிறோம்.　(44)

அவ:— ஈச்வர விஷயமான அநுமானத்தைத் தள்ளிவிட முடியாது என்று வைசேஷிகன் சொல்லும் வாதத்தைத் தூஷிக்கிறார்:—

𑌨𑍍𑌯𑌾𑌯𑍍𑌯𑌪𑍍𑌰𑌾𑌯𑌾𑌣𑌾𑌂 𑌕𑍍𑌷𑌿𑌤𑍍𑌯𑌨𑌕𑍍𑌷𑌯𑌣𑌤𑍍𑌵𑌸𑍍𑌥𑌾𑌪𑌨
𑌸𑌂𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑍈𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑍈𑌃 𑌕𑌰𑍍𑌤𑍍𑌰𑌨𑍁𑌮𑍇𑌯𑌃 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑌿𑌤𑌿 𑌤𑌦𑌵𑌿
𑌦𑍍𑌯𑍋𑌤𑌿 𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑍈𑌃 । 𑌤𑌸𑍍𑌯𑌾𑌧𑍀𑌶𑌾𑌨𑍁𑌮𑌾𑌨𑌤𑍍𑌯𑌜𑌨
𑌮𑌨𑍁𑌵𑌿𑌹𑌿𑌤𑌂 𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍍𑌭𑌿𑌰𑍇𑌵 𑌕𑌾𑌵𑍍𑌯𑌜𑍍𑌞𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵
𑌦𑍍𑌯𑍈𑌸𑌾𑌧𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌚 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌿𑌵𑌿𑌦𑍍𑌗𑌾𑌨𑍁𑌵𑌾𑌦𑌾𑌃 ॥௪௫॥

வேதத்தை முக்யமான ப்ரமாணமாக ஒப்புக்கொள்ளுகிறவர்கள்கூடச் சில க்ரந்தங்களில், நம்மால் முடியாத காரியங்களாலே விலக்ஷணமான கர்த்தாவை அநுமானத்தாலே அறியமுடியும் என்று சொல்லுகிறார்கள். யதோ வா இமாநி என்ற வாக்யம் இப்படி அநுமாநத்தாலேற்பட்டதை அநுவாதம் பண்ணுகிறது. ஆகையால் ஈச்வரன்விஷயமான அநுமாநத்தை வைதிகன் தள்ளிவிடுவது தகுந்தது அன்று. இது பூர்வபக்ஷியின்வாதம். அவன் சொல்லுகிற இடங்களில், கார்யம் என்கிற ஹேதுவைக் கொண்டு அநுமாநத்தாலே ப்ரம்மத்தையறியவேண்டியது என்று பெரியோர்கள் சொல்லியிருப்பது, விலக்ஷணமான ஜகத்தை வில

* யூபம் - யாகபசுவைக் கட்டுகிற கம்பம். ஆதித்யன் - ஸூர்யன். கோஷம்—இடைச்சேரி.

க்ஷணமான ப்ரம்மம்தான் ஸ்ருஷ்டிப்பது தகுந்தது என்று ஒரு யுக்தியை உபதேசிப்பதற்காகவே. யதோவா இமாநி என்கிற வாக்யம் அநுமாநத்தாலே ஏற்பட்டதை அநுவாதம் பண்ண வில்லை. ஸத்வித்யை முதலான காரணவாக்யங்களாலே சொன்னதையே அநுவாதம் பண்ணுகிறது. (45)

(நிகமநம்) ஸ்ரீபாஷ்யம், வைசேஷிகன் சொல்லும் பூர்வபக்ஷத்தைச் சொல்லுவதற்கு முன்னாலே அவன்மதத்தில் அபிமானமுள்ளவன் சொல்லும் பூர்வபக்ஷத்தையும், அதற்கு மீமாம்ஸகன் சொல்லும் தூஷணங்களையும் காட்டுகிறது. அந்தப் பூர்வபக்ஷமாவது (1) ஜகத் - அதினுடைய உபாதாந- உபகரண- ஸம்ப்ரதான-ப்ரயோஜநங்களை அறிந்த கர்த்தாவாலே செய்யப்பட்டது. கார்யமாயிருப்பதாலே; (2) ஜகத் - அசேதனத்திலிருந்து உண்டுபண்ணப்பட்டபடியாலே ஒரு சேதநனுக்கு அதீநமாயிருக்கிறது-என்பது. இவைகளுக்கு மீமாம்ஸகன் சொல்லும் தூஷணங்கள்— முதல் அநுமாநத்துக்கு ஸித்தஸாதனம், ஹேது ஸோபாதிகம், விருத்தம் என்பவைகள். இரண்டாவது அநுமானத்தில் ஹேதுவைச் சொல்லுகிற வாக்யத்தை விகல்பித்துப் பல தோஷங்கள் காட்டப்படுகின்றன. இந்த தோஷங்கள் ஏறுகிறபடியால் வைசேஷிகன் அவைகளுக்குப் பதில் சொல்லவில்லை. முதல் அநுமானத்துக்குச் சொன்ன தூஷணங்களுக்குப் பரிஹாரம் சொல்லுகிறான். ஹேது ஸோபாதிகம் என்கிற தூஷணத்துக்கு அவன் பதில் சொல்லுவது சரியாயிருக்கிறபடியால், மற்ற இரண்டு தூஷணங்களின் பரிஹாரத்தை மாத்திரம் ஸ்ரீபாஷ்யம் தூஷிக்கிறது. ஸாவயவம் ஸ்வாஸித்தக்த்ருகத்வமாயிருந்தால் ஸித்தஸாதநம். ஸ்வாஸித்தேதரக்த்ருகத்வமாயிருந்தால் வியபிசாரம் என்கிற தோஷம். ஸர்வஜ்ஞ ஸர்வசக்திமத் கர்த்ருகத்வமானால் அப்ரஸித்த விசேஷணம் என்கிற தோஷம். இவைகளில் முதல் தூஷணத்தை முதல் சுலோகத்திலும், இரண்டாவதை அதின் கீழ் குறிப்பிலும், மூன்றாவதை இரண்டாவது சுலோகத்திலும் காட்டியிருக்கிறது. விருத்தம் என்கிற தூஷணம்— குடத்தை த்ருஷ்டாந்தமாக உடைய அநுமாநத்தால் ஜகத்தை உண்டுபண்ணுகிறவன், கர்மத்தாலேற்படும் சரீரமுள்ளவன், குறைந்த ஜ்ஞாநசக்தியுடையவன், ப்ரயோஜநத்தைத் தேடுகிறவன், ஈசுவரன் அல்லாதவன், பரிக்ரஹத்தையுடையவன்

என்று ஏற்படும் என்பது. இது அநுமாநம் சொல்லுகிறவனுடைய அபிப்பிராயத்துக்கு விருத்தம். வைசேஷிகன் ஸபக்ஷத்தில் ஹேதுவுடன் சேர்ந்தவைகளெல்லாம் கார்யத்துக்கு ஹேதுக்கள் அன்று என்று உபபாதநம் பண்ணுகிறான். இது ஸித்தாந்தத்தில் தூஷிக்கப்படுகிறது. உலகத்தில் கார்யத்தைச் செய்கிறவர்களிடத்தில் ஸுகதுக்காநுபவமும் மோஹமும் பார்க்கப்படுகின்றன. இவைகள் ஸத்துவம், ரஜஸ், தமஸ்ஸு என்கிற குணங்களால் உண்டாகின்றன என்பதைச் சாஸ்த்ரம் சொல்லுகிறது. அவைகளுக்குக் கார்யங்களுடன் ஸம்பந்தம் அந்தக்குணங்களையுடைய மனிதன் வழியாக ஏற்படுகிறது. இந்த ஸம்பந்தம் புண்யபாப ரூபங்களான கர்மங்களாலே ஏற்படுகிறது. ஆகையால் அநுமானத்தாலே ஏற்படுகிற கர்த்தா கர்மத்துக்கு உட்பட்டவன் என்று ஏற்படும். இது அநுமாநத்தால் ஈச்வரனை ஸாதிக்கிறவன் அபிப்பிராயத்துக்கு விருத்தமாயிருக்கிறது. இந்த தூஷணத்தை ஸ்ரீ தேசிகன் * இங்கே சொல்லவில்லை. (45)

ஸமந்வயாதிகரணம். (4)

தத்து ஸமந்வயாத் ॥ ௪ ॥

தத் என்கிற சொல் முன் ஸூத்ரத்தில் சொன்ன சாஸ்த்ரயோநித்வம் என்பதைக் காட்டுகிறது. து - என்கிற சொல் உண்டாகும் சங்கையைத் தீர்க்கிறது. சங்கையாவது— ப்ரம்மத்தை சாஸ்த்ரத்தினுலேயே அறியவேண்டியதாயிருந்தாலும், அது புருஷார்த்தமோ? அதற்காக சாஸ்த்ரவிசாரம் பண்ணவேண்டுமோ என்பது. வாக்யத்தைப் பூர்த்தி பண்ணுவதற்காக 'ஸம்பவதி' என்கிற சொல்லைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

* இதற்குக் காரணம் மேலே சொல்லப்போகிறபடி இருக்கலாம். அதாவது ஸுக துக்க மோஹங்கள் ஸத்துவம் முதலான குணங்களின் கார்யங்கள் என்று சாஸ்த்ரம் சொல்லுகிறது. சாஸ்த்ரார்த்தத்தை ப்ரமாணமாக வைத்துக்கொள்ளாமல் யுக்திகளைக் கொண்டே வைசேஷிகனைத் தூஷிக்கும்போது சாஸ்த்ரத்தைக்கொண்டு தூஷிப்பது தகுந்தது அன்று. ஸ்ரீபாஷ்யத்திலோ சிஷ்யர்களுக்கு ஜ்ஞாநம் உண்டாவதற்காக இது சொல்லப்பட்டது என்பதாம்.

அப்போது ஸூத்ரத்தின் அர்த்தம்— ப்ரமத்தைச் சாஸ்த்ரத்தாலே அறியவேண்டும் என்பது ஸம்பவிக்கிறது. இதில் ஸந்தேஹமில்லை என்று ஏற்படுகிறது. இதற்கு ஹேது ஸமந்வயாத் என்கிற பதத்தால் சொல்லப்படுகிறது. நல்ல ஸம்பந்தம் என்பது ஸமந்வயம் என்பதின் பொருள். மிகவுமுயர்ந்த புருஷார்த்தமான ப்ரம்மத்துடன் உபநிஷத் வாக்யங்களுக்குள்ள நல்ல ஸம்பந்தம் ஸமன்வயம். ஸம்பந்தமாவது வாச்யவாசகபாவம். வாக்யங்கள் வாசகங்கள் (சொல்லுகிறவைகள்); ப்ரம்மம் வாச்யம் (சொல்லப்படுகிறது). ஸூத்திரத்தின் திரண்ட பொருள்— உபநிஷத்வாக்யங்கள் ப்ரம்மத்தை மிகவும் உயர்ந்த புருஷார்த்தமாகச் சொல்லுகிறபடியால், அந்தப் ப்ரம்மத்தைச் சாஸ்த்ரத்தாலேயே அறியவேண்டுமென்பது ஸம்பவிக்கிறது—என்பது.

அவ— இந்த அதிகரணத்தின் பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் சொல்லுகிறார்—

> கார்யத்வே ஹ்யர்த்தஸித்தே: நியமிதவிஷயம் ஸித்தரூ-
> பே தாந ஸ்யாத் ப்ரீத்யா ஸாமர்த்ய ஸித்தௌ விதய-
> தி வச: கிம் ந த்ருஷ்டம் ததர்த்தம் | வித்யார்த்தேநாந்ய
> த்ருஷ்டே விஷயவதந்யதம் தத்பரீக்ஷ்யம் ந ஹாநி த்யா-
> க்ஷேபேநாந்யசேஷே நிரவதிகஸுகே ஸாக்ஷாத்
> த்வ்யர்த்தாத் || || சசு ||

ஒரு வாக்யத்தாலே இதைச் செய் என்று சொல்லும்போது அந்த வாக்யத்தைக் கேட்கிறவனுக்கு ஒரு பலன் ஏற்படுகிறது. ஸித்தமானதைச் சொல்லுகிற வாக்யத்தாலே பலன் ஏற்படுகிறதில்லை. வாக்யத்தைக் கேட்டவனுக்குப் ப்ரீதி உண்டாவதாலே அதுவே பலனாகிறது என்று சொல்லக்கூடாது. ப்ரீதி உண்டாவதற்காக இல்லாத விஷயத்தையும் வாக்யத்தால் சொல்லலாம். இப்படி உலகத்தில் பார்க்கப்படவில்லையா? த்யாநவிதிக்கு விஷயமான (த்யேயமான) ப்ரம்மத்தை ஸித்தபரவாக்கியம் தெளிவாக்கிறபடியால், அந்த இரண்டு வாக்கியங்களும் சேர்ந்து ஏகவாக்கியமாகின்றன. ஆகையால் ப்ரம்மம் த்யாநவிதிக்குச் சேஷமாகிறபடியால் விசாரிக்கத்தகுந்ததென்கிற பக்ஷமும் கூடாது. ஒரு பலத்துக்காக ப்ரம்மதிருஷ்டி விதிக்கிறவிடங்களில் எப்படி

விஷயம் பொய்யோ அப்படியே இங்கும் விஷயம் பொய்யாக இருக்கலாம். ஆகையால் ப்ரமாணத்தைக்கொண்டு ப்ரம்மத்தை பரீக்ஷை (விசாரம்) செய்வது முடியாது. இப்படிப் பூர்வபக்ஷம் சொல்லப்படுகையில் தியாநவிதி வாக்கியத்துக்குச் சேஷமாயிராமல் ஸ்வதந்திரமாயிருப்பதும், அளவில்லாத ஆநந்தமாயிருப்பதுமான ப்ரம்மத்தைச்சொல்லுவதில் உபநிஷத்வாக்யங்களுக்குக் கருத்து இருக்கிறதென்பதை ஸூத்ரகாரர் சொல்லுகிறார்.

குறிப்பு— (1) ச்லோகத்தில் முதலில் பூர்வபக்ஷம் சொல்லப்படுகிறது. "யஜேத ஸ்வர்ககாம:" என்று யாகத்தைச் செய்யவேண்டியதாகச் சொல்லும்போது இதைக் கேட்கிறவன் யாகத்தைச் செய்வதினால் ஸ்வர்க்கம் என்கிற பலன் கிடைக்கும் என்று அறிகிறான். "காக்கைக்கு எட்டுப் பற்கள் இருக்கின்றன" என்பது முதலான ஸித்தபரவாக்யங்களில் அவைகளைக் கேட்கிறவனுக்கு ஒரு பலனுமில்லை. இதுவே உலகத்தின் ரீதி. வேதத்திலும் இந்த ரீதியையே ஒப்புக்கொள்ளவேண்டியது. ஆகையால் உபநிஷத்வாக்யங்களை விசாரிப்பது ஊஷரபூமியில் பயிரிடுவதுபோல் ப்ரயோஜநமற்றது. இப்படிப் பூர்வபக்ஷி சொல்லுகிறான். ஒருவன் அவனைக் கேட்கிறான். "உன் வீட்டில் புதையிலிருக்கிறது", 'உன் தகப்பன் ஸுகமாயிருக்கிறான்' என்கிற ஸித்தபர வாக்யங்களைக் கேட்கிறவனுக்கு ஸந்தோஷம் உண்டாகவில்லையா? இதுவே பலன் அன்றோ? என்று. பூர்வபக்ஷி பதில் சொல்லுகிறான்— சொன்ன வாக்யங்கள் உண்மையிலிருப்பவைகளைச் சொல்லாவிட்டாலும் அவைகளைக் கேட்டவனுக்கு ஸந்தோஷமுண்டாகலாம். ஆகையால் உபநிஷத்துக்களிலுள்ள ப்ரம்மம் ஆநந்தம் என்பது முதலான வாக்யங்களால் ஸந்தோஷமுண்டாகிறது. ஆனாலும் அது உண்மையில் ஆநந்தமாக இல்லாமலிருக்கலாம்.

(2) ஸித்தபரவாக்யங்கள் தனியாயிருந்து ப்ரமாணமாக வேண்டாம். விதிவாக்யங்களுக்கு உதவிசெய்து அவைகளுடன் சேர்ந்து ப்ரமாணமாகலாமே என்றால், பூர்வபக்ஷி சொல்லுகிறான்—அப்போது அவைகள் அர்த்தவாதங்களாய் விதிவாக்யங்களில் சொன்னவைகளை ஸ்தோத்ரம் பண்ணுகிறவைகளாய் முடிகின்றன. அவைகளின் சக்தி இத்துடன் நின்றுவிடுகிறது. ஆகையால் அவைகளுக்குச் சொல்லுகிற விஷயங்களின் உண்மையில் கருத்து

இல்லை. 'ஜநோ ப்ரஹ்மேத்யுபாஸீத' (மனதை ப்ரம்மமாக த்யானம் பண்ணு) என்கிற இடத்தில் மனது உண்மையில் ப்ரம்மம் அன்று. அதுபோல விதிக்குச் சேஷமான வாக்யங்களிலும் சொல்லப்பட்ட விஷயங்கள் உண்மையாக இருக்கவேண்டியதில்லை.

(3) முதலிரண்டு குறிப்புகளில் சொன்ன பூர்வபக்ஷியின் ஆக்ஷேபங்களில் முதல் குறிப்பில் சொன்னதற்கு ஸூத்ரகாரர் ஸூத்ரத்தாலே பதில் சொல்லுகிறார். இரண்டாவது குறிப்பில் சொன்னதை இரண்டு மாயாவாதிகளைக்கொண்டு வாதிக்கச் செய்து, அதற்குப் பூர்வபக்ஷியின் பதிலைக் காட்டி, அவன் சொல்லுவதையும் ஸ்ரீபாஷ்யம் தூஷிக்கிறது. இந்தப் பக்ஷமும் சொல்லக் கூடியதாகையால் அதற்குப் பரிஹாரம் சொல்லப்படுகிறது.

அவ:— ஸித்தபரவாக்யம் விதிவாக்கியத்திற்கு உதவிசெய்யும் பக்ஷத்திலும் தோஷம் ஒன்றுமில்லை என்று சொல்லுகிறார்—

தாத்பர்யம் ப்ரஹ்மதத்த்வே விதியிதரவ்யபேக்ஷ
வாக்யைகவாக்யே ஹேதௌ ஸாத்யஸித்தௌ ஹவதி
பஹிர்பூதஸம்வ்யாப்திஸாத்யே ஸாத்யாத்வம் ஶ்ரு.
ஷாம்யக்ஷமிதி ந ஶ்ரேஷ்டப்ரஹ்மநே வ்ருத்யோர
த்ராயோபவத்நாஸித்தி விஷயதயாஹாவபூர்வேர்த்ய
ஹஷ்டும் ॥ ॥ ௭௭ ॥

ஸித்தபரவாக்யம் பாதமில்லாதவிதிவாக்யத்துடனே ஒருவாக்யமாக இருக்கிறது என்கிற பக்ஷத்திலும், ப்ரம்மதத்துவத்தின் விஷயத்திலும் அந்த வாக்யத்திற்குத் தாத்பர்யமிருக்கிறதாகச் சொல்லலாம். அப்படிச்சேராமல் வேறு வாக்யமாக இருக்கும் பக்ஷத்திலும் அந்த வாக்யத்தாலும் ப்ரீதி உண்டாகிறபடியால் அது "காக்கைக்கு எட்டுப் பற்கள்" என்கிற வாக்யத்தைப்போலன்று. ப்ரீதி உண்டாக்குவதாகச் சொல்லப்பட்ட வாக்யம் உண்மையில்லாத விஷயத்தைத்தான் சொல்லுமென்பது இல்லை. பொய்யான விஷயம் ப்ரீதியை உண்டுபண்ணுமென்பது பொருந்தாது. குழந்தைகளை மருந்து சாப்பிடுவதற்காகச் சொல்லும் ஆசை வார்த்தைகளும், சொன்ன விஷயம் உண்மையாயிருக்கிறது என்கிற புத்தியை உண்டுபண்ணி அவர்களுக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணுகின்றன.

குறிப்பு— (1) "யஜேத ஸ்வர்க்காம:" என்கிற விதி வாக்யத்துடன் ஸ்வர்க்கத்தின் ஸ்வரூபத்தைச்சொல்லுகிற ஸித்த பரவாக்யத்தைச் சேர்த்து அதில் சொல்லுகிற விஷயங்களில் தாத்பர்யமிருக்கிறது என்று பூர்வபக்ஷியான மீமாம்ஸகன் ஒப்புக்கொள்ளுகிறான். அப்படியே "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" என்கிற விதிவாக்யத்துடன் 'ஸத்யம் ஜ்ஞாநம்' என்கிற வாக்யத்தைச் சேர்த்து அதில் சொல்லுகிற விஷயத்தில் தாத்பர்யம் இருக்கிறது என்று சொல்லலாம். இதை அவனும் ஒப்புக் கொள்ளவேண்டும்.

(2) விதிவாக்யத்துடன் சேராத ஸித்தபரவாக்யத்திலும் அதைக் கேட்கிறவனுக்கு ஸந்தோஷம் உண்டாகும்போது அந்த வாக்யம் சொல்லும் விஷயத்தில் தாத்பர்யமிருக்கிறது என்று ஒப்புக்கொள்ளவேண்டும். "காக்கைக்கு எட்டுப் பற்கள்" என்கிற வாக்யத்தால் ஒரு ப்ரயோஜநமும் ஏற்படாது. ஆகையால் அதைக் கேட்கிறவனுக்கு ஸந்தோஷமுண்டாகாது. ஆகையால் அந்த வாக்யத்தைப்போல் அன்று 'ஸத்யம் ஜ்ஞாநம்' என்கிற வாக்யம்.

(3) இதற்குப் பூர்வபக்ஷி பதில் சொல்லுகிறான்— ஸந்தோஷம் உண்டாகலாம். அதினால் வாக்யம் உண்மையான விஷயங்களைச் சொல்லுகிறது என்று எப்படி ஏற்படும்? குழந்தைகளுக்கு மருந்தில் ருசியுண்டாவதற்காகப் பொய்யான விஷயங்களையுடைய வாக்யம் சொல்லப்படுகிறது. அதுபோல-என்று. இதற்குச் சுலோகம் பதில் சொல்லுகிறது. சொல்லும் வாக்யம் உண்மையான விஷயங்களைச் சொல்லுகிறது என்று நம்பியே அதைக் கேட்கிறவன் ஸந்தோஷப்படுகிறான். அதைப் பொய் என்று அறிந்தால் ஸந்தோஷமுண்டாகாது. பிறகு விஷயம் பொய்யென்பதும் உண்மையென்பதும் ப்ரமாணாந்தரத்தால் அறியப்படுகிறது.

"ஜவிஹ‌தவியிநா" என்பது த்ருஷ்டிவிதியை விலக்குவதற்காக. (47)

அவ:- ப்ரீதிக்காகச் சொன்ன வாக்யம் உண்மையைச்சொல்லுவதில்லை என்று பூர்வபக்ஷி சொன்னதைத் தூஷிக்கிறார்:—

யத்ப்ரீத்யர்த்தம் வஸ்துந்யவித்யமாநேऽபி த்ருஷ்டம் ப்ராய
வாக்யம் ஸத்யாஸத்யாநந்தஸ்யைஷாம் ச விஹதிபி
ஹாயப்ரத்யக்ஷதஃ ஶாஸ்த்ரதோ வா । தேநாநந்யார்த்தபரவி
ஶேஷாத்யந்ருதவிஷயதாஶங்காநஸ்தேநேந ஸத்யஜ்ஞாந
த்யநித்யாஶ்சர்யதபரப்ரஹ்மநிஷ்டாஃ ப்ரமாணம் ॥

ப்ரீதிக்காகச் சொல்லப்பட்ட வாக்யமெல்லாம் பொய்யைச் சொல்லுகிறது என்பது சிறுபிள்ளைபோன்றவனின் வார்த்தை. உண்மையைச் சொல்லும் வாக்யத்தாலே ஸந்தோஷமுண்டாவதையும் பார்க்கிறோம். நாம் விசாரிக்கிற உபநிஷத்வாக்யங்கள் விஷயத்தில் ப்ரத்யக்ஷத்தாலோ சாஸ்த்ரத்தாலோ பாதம் ஏற்படுகிறதில்லை. வேறு ப்ரமாணத்தால் பாதம் ஏற்பட்ட விடத்தில் அதைச் சொல்லுகிற வாக்யத்தில் சொல்லப்பட்ட விஷயம் பொய்யானதென்று தீர்மானிக்கிறோம். விதிக்கு உதவிசெய்யாத ஸ்வதந்த்ரமான ஸித்தபரவாக்யத்தின் விஷயங்கள் பொய்யாயிருக்குமோ என்கிற ஸந்தேஹம் இப்படித் தீர்க்கப்படுகிறபடியால், ஸத்யமாயும், நித்யமாயும், ஆச்சர்யமாயும், அதிக ஆநந்தமாயுமிருக்கும் ப்ரப்ரம்மத்தைச் சொல்லும் வேதாந்தவாக்யங்கள் ப்ரமாணங்களே.

குறிப்பு— பூர்வபக்ஷியைக் கேட்போம். ப்ரீதிக்காகச் சொல்லப்பட்ட எல்லா வாக்யங்களும் பொய்யான விஷயங்களைச் சொல்லுகின்றனவா ? அல்லது சில வாக்யங்கள்தானா ? முதல் பக்ஷம் கூடாது; சில வாக்யங்கள் உண்மையான விஷயங்களைச் சொல்லி ப்ரீதியை உண்டுபண்ணுகின்றன. ஆகையால் ப்ரீதியை உண்டு பண்ணச் சொல்லப்படும் வாக்யங்களெல்லாம் பொய்யான விஷயங்களையே சொல்லும் என்கிற நியமமில்லை. சில வாக்யங்களே பொய்யான விஷயங்களைச் சொல்லுகின்றன என்கிற பக்ஷத்தில், அவைகள் பொய்யான விஷயங்களைச் சொல்லுகின்றன என்பது எப்படி அறியப்படுகிறது என்று கேட்கிறோம். விரோதமிருப்பதாலே என்றால், விரோதமில்லாத இடங்களில் அவைகள் உண்மையான விஷயங்களைச் சொல்லுகின்றன என்று தீர்மானம் பண்ணலாமே. இதை உலகத்திலும் பார்க்கலாம். "உன் தகப்பன் ஸுகமாயிருக்கிறான்" என்கிற வாக்யம் அவன் ஸுகமாயிருக்க

வில்லை என்று அறிந்தபிறகு, விரோதத்தாலே பொய்யைச் சொல்லிற்று என்று முடிவுசெய்கிறோம். இப்படி விரோதம் ஏற்படாத இடங்களில் வாக்யங்கள் உண்மையைச் சொல்லுகின்றன என்று நம்பப்படுகின்றன. உபநிஷத்துக்களிலும் வாக்யங்கள் சொல்லுகிறபடி இருப்பதற்கு ஒரு ப்ரமாணத்தோடும் விரோதமில்லை. ஆகையால் அவைகள் ப்ரம்மம் ஸத்யம், நித்யம், ஆச்சர்யமானது, அதிக ஆநந்தமானது என்கிற விஷயத்தில் ப்ரமாணங்களே. (48)

அவ:--ஸ்ரீபாஷ்யம் சில பக்ஷங்களைச்சொல்லித் தூஷிக்கிறது. அந்த விஷயத்தில் நாம் செய்யவேண்டியது ஒன்றுமில்லை என்று சொல்லுகிறார்:—

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌿𑌷𑍍𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑍀𑌕𑌰𑌣𑌵𑌿𑌧𑌿𑌵𑌿𑌷𑌯𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌵𑌿
[illegible]
𑌤𑌤𑍍𑌰 [illegible] 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮[illegible] । 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑍍𑌵𑌪𑌕𑍍𑌷
𑌸𑍍𑌵𑌵𑌚𑌨𑌵𑌿𑌹𑌤𑌿 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾[illegible]
[illegible] ॥ ௪௮ ॥

சிலர் "ஸப்ரபஞ்சமாக இருக்கிற ப்ரம்மத்தை நிஷ்ப்ரபஞ்சமாகச் செய் என்கிற விதிவாக்யமிருக்கிறது. அதற்கு விஷயமாக ப்ரம்மம் ஸித்திக்கிறது" என்றும், வேறு சிலர் "த்யானவிதிக்குச் சேஷமாக ப்ரம்மம் ஸித்திக்கிறது" என்றும், வேறு சிலர் "தர்மம்ஒன்றுமில்லாமலும் இரண்டாவதுவஸ்துஇல்லாமலுமுள்ள வஸ்துவைச் சொல்லுகிற வாக்யம் லக்ஷணையால் சொல்லுவதால் ப்ரம்மம் ஸித்திக்கிறது" என்றும் சொல்லுகிறார்கள். இவர்களுடைய வார்த்தைகள் அவர்கள் மதத்திற்கு விருத்தங்கள், தங்கள் வசனத்திற்கு விருத்தங்கள் என்னும் தோஷங்களையுடையவைகள்; வேதத்தை ஒப்புக்கொள்ளாதவன் பக்ஷங்களைப் போன்றவைகள். இவைகள், நன்றாய்ச் சிக்ஷிக்கப்பட்ட புத்தியையுடையவர்கள் ஸபையில் ஸிம்மாஸனம் ஏறும் பெரியோர்களால் நாசம் பண்ணப்பட்டன.

குறிப்பு– (1) இந்த அதிகரணத்தில் பூர்வபக்ஷியான மீமாம்ஸகன் உபநிஷத்துக்களிலிருக்கும் ஸித்தபர வாக்யங்கள் ஒரு ப்ர

யோஜனத்தையும் காட்டவில்லை. ஆகையால் அவைகள் ப்ரமாணங்களல்ல என்று சொல்ல, அவைகள் விதிவாக்யங்களுடன் சேர்ந்து ஓர் வாக்யமாய் ப்ரமாணங்கள் என்று இரண்டு மாயாவாதிகள் காட்டினார்கள். அவர்களில் ஒருவன் ப்ரபஞ்சத்துடன் கூடினதாகத்தோன்றுகிற ப்ரம்மத்தைப் பிரபஞ்சமில்லாததாகச் செய் என்று விதிக்கிற ஒரு வாக்யமிருக்கிறது என்றும், *நியோகத்தையுண்டுபண்ணி அதைச் செய்யவேண்டும் என்றும் சொல்லுகிறான். “யாகத்தாலே ஸ்வர்க்கத்தை அடையவேண்டும்” என்கிற விதியாலே யாகமும், அதினுலுண்டாகும் நியோகமும், நியோகம் கொடுக்கும் ஸ்வர்க்கமாகிய பலனும் காட்டப்படுகின்றன. அதுபோல இவைகளை இங்கே பிரித்துக் காட்டமுடியாது என்று இந்த மாயாவாதி பக்ஷத்தை மீமாம்ஸகன் தூஷிக்கிறான்.

(2) இரண்டாவது மாயாவாதி “𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍀𑌤” என்கிற விதியோடு உபநிஷத்து வாக்யங்களைச் சேர்த்து அவைகள் ப்ரமாணங்கள் என்றும், தியானத்தாலே நியோகமுண்டாகிறது, நியோகத்தாலே அவித்யையைப் போக்கும் ப்ரத்யக்ஷ ஜ்ஞானமுண்டாகிறது என்றும் சொன்னான். அதைப் பூர்வபக்ஷி தூஷித்து, விதியுடன் சேர்க்கப்பட்ட வாக்யங்கள் அர்த்தவாதங்கள் என்றும், அவைகளில் சொன்ன விஷயங்களில் தாத்பரியமில்லையென்றும் தூஷித்தான்.

(3) இரண்டாவது மாயாவாதி நியோகத்தால் உண்டாகும் ப்ரத்யக்ஷஜ்ஞானத்தாலே அவித்யை போகும் என்று சொன்னதைப் பொறுக்காமல், சங்கரன் அவன் சொன்னதைத் தூஷித்துத் தன் மதத்தைச் சொல்லி, வாக்யத்தைக் கேட்டவுடன் உண்டாகும் ப்ரத்யக்ஷஜ்ஞானத்தாலே அவித்யை போகும் என்று சொன்னான். அதை இரண்டாவது மாயாவாதி தூஷித்து வாக்யத்தைக் கேட்டவுடன் அவித்யை போகாததையும், த்யானத்தால் தெளிந்த மனதில் அந்த ஜ்ஞானம் தோன்றும் என்கிற பக்ஷத்தில் அந்யோந்யாச்ரயதோஷமிருக்கிறது என்பதையும் காட்டி, ஜீவந்முக்தி என்று அத்வைதி சொன்னதையும் தூஷித்தான். பாஸ்கரமதத்தையும் மாயாவாதி அநுவாதம் செய்து தூஷித்தான். இந்த அம்சங்களைச் சுலோகம் சொல்லவில்லை.

* நியோகம் — அபூர்வம்.

(4) இந்த மதங்களில் ஸ்ரீபாஷ்யகாரர், மீமாம்ஸகன் மதத்தை நேரிலும், அவனைக்கொண்டு இரண்டு மாயாவாதிகளின் பக்ஷங்களையும், இரண்டாவது மாயாவாதியைக் கொண்டு சங்கரனுடையவும் பாஸ்கரனுடையவும் வாதங்களையும் தூஷிக்கிறார். இவர்கள் வாதங்களுக்கு அதிகரணத்துடன் நேராக ஸம்பந்தமில்லாவிட்டாலும் அவைகளையும் தூஷிக்கவேண்டியதாகையால் இந்த அதிகரணத்தில் அவைகளைத் தூஷிக்கிறார். (49)

அவ— பூர்வமீமாம்ஸைக்கும் உத்தரமீமாம்ஸைக்கும் விரோதமிருப்பதாகத் தோன்றுவதற்குப் பரிஹாரம் சொல்லுகிறார்—

[illegible] ||௫௦||

அர்த்தவாதம் விதிவாக்யத்துக்காகவே இருக்கிறது. ஏன் என்றால், அது ஸ்தோத்ரம்முதலானவைகளைச் செய்து, விதிவாக்யத்துக்கு உதவி செய்கிறது. இப்படி முன்காண்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இப்போது அது விதிவாக்யத்துடன் சேராமல் தனியாகவே ப்ரமாணமாகச் சொல்லப்படுகிறது. ஆகையால் இரண்டு காண்டங்களுக்கும் விரோதமுண்டாகிறது என்று ஆக்ஷேபம் ஏற்பட, பதில் சொல்லப்படுகிறது— அர்த்தவாத வாக்யமும் ப்ரமாணம் என்று காட்டுவதற்காக, அது விதிவாக்யத்துடன் ஒரு வாக்யமாக இருக்கிறது என்று பொதுவாக முன்னாலே சொல்லப்பட்டது; இங்கே அர்த்தவாத வாக்யங்கள், அறிவதாலேயே புருஷார்த்தமாகி மனதைஇழுக்கும் ப்ரம்ம வஸ்துவைத் தெரிவிக்கிறபடியால், தனியாகவே ப்ரமாணங்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் இரண்டு காண்டங்களுக்கும் விரோதமில்லை என்று.

குறிப்பு:— (1) அர்த்தவாதவாக்யம் விதிவாக்யத்துடன் சேர்ந்து, அதற்கு உதவி செய்து, ப்ரமாணமாகிறது என்று முன்காண்டத்தில் சொல்லப்பட்டது. இதனால் இப்படி விதி

வாக்யத்துடன் சேராத அர்த்தவாத வாக்யம் ப்ரமாணம் அன்று என்று ஏற்படுகிறது. இப்போது அது ப்ரமாணம் என்று சொல்லப்படுகிறபடியால், இரண்டு காண்டங்களுக்கும் விரோதம் ஏற்படுகிறது என்பது ஆக்ஷேபம்.

(2) விரோதமில்லை. முன் காண்டத்தில் சொல்லப்பட்டது பொதுவானது(உத்ஸர்கம்). இப்போது சொல்லுகிறது அதற்கு விலக்கு (அபவாதம்). முன் காண்டத்தில் "யதாஹவநீயெஜுஹோதி" என்று எல்லா ஹோமங்களையும் செய்யுமிடம் ஆஹவநீயம் என்று விதித்து, *"பதெ ஜுஹோதி" என்று அதற்கு விலக்குச் சொல்லப்படுகிறது. அதுபோல இங்கும்.

(3) ஒருவன் கேட்கிறான்— உபநிஷத்துக்களில் விதிவாக்யத்துடன் சேராமல் தனியாகவே அர்த்தவாத வாக்யமில்லை. "ஸத்யம் ஜ்ஞாநம்" என்கிற அர்த்தவாதவாக்யம் "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" என்கிற விதி வாக்யத்துடன் சேர்ந்திருக்கிறது. எல்லாவிடங்களிலும் இப்படியிருக்க ஏதோ ஆக்ஷேபமிருப்பதுபோல் பதில் சொல்லுகிறீரே—என்று. பதில்— ஸஹஸ்ரசீர்ஷா முதலான வாக்யங்கள் இருக்கின்றன. அவைகளில் விதியே இல்லை. ஆனாலும் அவைகள் தனியாகவே ப்ரமாணங்கள்.

(4) மொக்ஷாத்துபயோகாத்-மற்றவைகளைச் செய்வதால் புருஷார்த்தம் ஏற்படும். நிரவதிக ஆநந்த ரூபமான இந்தப் ப்ரம்மத்தைத் தெரிந்துகொள்வதே புருஷார்த்தம். (50)

அவ:— இந்த அதிகரணத்தில் செய்யும் தீர்மானத்திற்குக் கல்பஸூத்ரங்களுடன் விரோதமிருப்பதாகச் சொல்லுவதற்குப் பதில் சொல்லுகிறார்—

ஶ்ரௌதா ஸந்த்யேவ நியததிஹஜநே ஹொஷநா ஶ்ரேஷ்ஹொஷெஸ்மஸ்மாத்... ப்ரஹ்மணாம்ஶஸ்ய ஶேஷா꞉ । ஸூத்ராதஷெஷ

---

* ஸோமத்துக்கு க்ரயமாகக் கொண்டுபோகப்படும் பசுமாட்டின் ஏழாவது அடியில் இருக்கும் மண்ணைக் குவித்து அதில் ஹோமம் செய்யும்படி விதியிருக்கிறது. இது பதஹோமம்.

தொகுதள ஸ்ரு திஹ திரிதி வெஷிஷி உதொதூரம் தகூ
ஸாஸொந்யாக்ஷிஹி செயம் தத உவரி யயா ஜநுவிய்ர
நரொதாக்ஷி: ॥ ॥ ருக ॥

வேதம் முழுவதிலும் விதி முதலான அம்சங்களாலே வாக்யங்கள் மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் நாலுவிதங்களான அர்த்தவாதங்கள் ப்ராம்மணங்களுக்காகவே இருக்கின்றன. இப்படி ருஷிகளால் சொல்லப்படுகிறது. இங்கு அவைகள் அவைகளுக்குச் சேஷமல்ல என்று சொன்னால், அவர்களால் செய்யப்பட்ட ஸ்மிருதிகளுடன் விரோதம் ஏற்படுகிறது என்றால், இதற்குப் பதில் சொல்லப்படுகிறது— ஸ்மிருதிகளில் சொன்னது பொதுவானது—என்று. "அர்த்தவாதத்தையும் ப்ராம்மணத்தையும் காட்டிலும் மந்திரம் வேறு" என்று ஆபஸ்தம்பஸூத்ரத்தில் மேலே சொன்னதுபோல.

குறிப்பு— (1) வேதவாக்யங்கள் ப்ராம்மணம் (விதி) மந்த்ரம், அர்த்தவாதம் என்று மூன்று கூறுகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவைகளில் அர்த்தவாதவாக்யங்கள் ஸ்தோத்ரம், நிந்தை, பரக்ருதி, புராகல்பம்— என்று நான்குவகைப்படும் என்றும், அவைகள் எல்லாம் ப்ராம்மணவாக்யங்களுக்கு உதவிசெய்து, அவைகளுக்குச் சேஷமாயிருக்கின்றன என்றும் ஆபஸ்தம்பர் சொல்லுகிறார். இங்கே அந்த வாக்யங்களில் சில வாக்யங்கள் தனியாய் ப்ரமாணங்கள் என்று சொல்லுவது அவருடைய ஸ்மிருதியுடன் விரோதிக்கும். இப்படி ஓர் ஆக்ஷேபம்.

(2) இதற்குப் பதில் கீழ் சுலோகத்தில் சொல்லப்பட்ட ரீதியை அநுஸரித்துச் சொல்லிவிடவேணும். ஆபஸ்தம்பர் சொன்னது உத்ஸர்கம், இங்கே சொன்னது அபவாதம். ஆகையால் விரோதமில்லை. இதற்கு உதாரணத்தை அவர் ஸ்மிருதியிலேயே பார்க்கலாம். ஆபஸ்தம்பர், ப்ராம்மண சேஷம் அர்த்தவாதம் என்று சொன்னதிற்கு மேல் "மந்திரங்கள் அர்த்தவாதத்தையும் ப்ராம்மணத்தையும் காட்டிலும் வேறு" என்று சொல்லியிருக்கிறார். அது உத்ஸர்க்கம். ஏன் என்றால், சில மந்திரங்களும் ப்ராம்மணங்களைப்போலக் கர்மங்களை விதிக்கின்றன என்று யாஜ்ஞிகர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால் கர்மத்தை விதிக்கும் ப்ராம்மணத்தைக்காட்டிலும் மந்திரம் வேறு என்று சொன்னது

எப்படி உத்ஸர்க்கமோ, அதுபோல அர்த்தவாதங்கள் விதிகளுக்குச் சேஷம் என்று சொன்னது உத்ஸர்க்கம். ஸ்வதந்திரமாயிருப்பது அபவாதம் என்பது ஏற்படுகிறது. (51)

அவ:— ஈச்வரனை ஒப்புக்கொள்ளாத மீமாம்ஸகன் சொல்லும் தூஷணத்திற்கு உபநிஷத்வாக்யங்களின் விஷயத்தில் இடமில்லை என்று சொல்லுகிறார்:—

ரூஹாமெதெமெரஷிகாமெயெ-ுரவிஹ-ண ஸஹமெயெ:
ஶாக-நஜெ்ளதிஷாமெஷெ்ர: வாரதி்ரு்கு்ா ஷுவ்ரத்தெ்ா
வ்ருதிநிவ-ணயியாஶாஹஶாஶாஸஸிஜள । ஶஹெ
தஜாவ வொமெய ஸதி வரவிஷயெ ஷொஷவாயவ்ு
வெமெத ஶாநம் தத்ரு ஷுதொzஸள ந கயஶிதரயா
மெநஹஶாயுாவயாவ: । ॥ ருஉ ॥

இந்த உலகத்தில் அநுபவிக்கும்படியான பலன்களுக்கும் ஸாதனங்களை வேதம் சொல்லுகிறது. அவைகளைக் குறைவில்லாமல் செய்தால் பலன்கள் கிடைக்கின்றன. வேதம் சொல்லுகிற சகுனங்களையும் ஜ்யௌதிஷத்தையும் கவனித்துக் கார்யங்களைச் செய்தால் அவைகளால் காட்டப்படும் பலன்கள் கிடைக்கின்றன. மிகவும் உயர்ந்த புத்தியையுடையவர்கள் பரலோகங்களில் அடையக்கூடிய பலன்களுக்காக ப்ரவ்ருத்திக்கிறார்கள். இந்தக் காரணங்களால் வேதம் சொல்லுவதில் நம்பிக்கைவைக்கலாம் என்பது ஏற்படுகிறது. இந்த நம்பிக்கையை உபநிஷத்துக்களிலும் வைக்கலாம். ப்ரம்மத்தைப் பற்றிச் சொல்லுகிற வாக்யங்களுடைய அர்த்தம் அறியப்படுகிறது. அவைகளில் காரணதோஷமில்லை. பாதமும் இல்லை. ஆதலால் உபநிஷத் வாக்யங்கள் தாங்களாகவே ப்ரமாணங்களாக ஏன் ஆகக்கூடாது? இதை ஒப்புக்கொள்ளாவிட்டால் வேதத்தில் முன் காண்டத்தையும் ப்ரணமாக ஒப்புக்கொள்ளக் கூடாது என்று ஏன் சொல்லக்கூடாது?

குறிப்பு— (1)வேதத்தில் சொல்லுவதை நம்புவதற்கு மூன்று காரணங்கள் ச்லோகத்தில் சொல்லப்படுகின்றன. (1)இந்த உலகத்தில் மழையை வேண்டுகிறவர்கள் காரீரிஎன்கிற இஷ்டியைச்செய்கிறார்கள். உடனே மழை பெய்கிறது. பெய்யாத இடங்களில்,

செய்யப்படுகிற கர்மத்திலோ அதைச் செய்கிறவனிடத்திலோ, அதனுடைய ஸாதனங்களிலோ குறைவிருக்கவேண்டும். (2) இந்த சகுனம்நேரிட்டால் பலன்கிடைக்கும் என்றும், இந்த வேளையில் புறப்பட்டால் கார்யம் ஸித்திக்கும் என்றும் வேதம் சொல்லுகிறது. இவைகளைக்கவனித்து நடந்தால் பலனும் கிடைக்கிறது. கார்யமும் ஸித்திக்கிறது. (3) மஹாபுத்திமான்கள் ஸ்வர்க்கத்தில் போகத்தை அநுபவிப்பதற்காக அதிக ப்ரயாஸத்தை எடுத்துக்கொண்டு த்ரவ்யத்தைச் செலவுசெய்கிறார்கள். அவர்கள்விரும்பும் பலன் கிடைக்கும் என்றே நம்பி பிரவிருத்திக்கிறார்கள். இந்தக்காரணங்களாலே வேதம்சொல்லுவதை நம்பலாம் என்று ஏற்படுகிறது.

(2) இப்படியிருக்க, உபநிஷத்துக்களை நம்பக் கூடாது என்று ஏன் மீமாம்ஸகன் சொல்லுகிறான்? அதற்குக் காரணம் என்ன என்று அவனைக் கேட்போம். வாக்யங்களிலிருக்கும் சொற்களுக்கு அர்த்தமாகாதா ? முதல் அதிகரணத்தில் அர்த்தமாகும் என்று தீர்மானிக்கப்பட்டுவிட்டது. காரணதோஷமா? வேதம்ஒருவராலும் செய்யப்படாததாகையால் அதில் ஒரு தோஷமுமில்லை. அர்த்தத்தில் பாதமிருக்கிறதா ? உபநிஷத் சொல்லுவது வேறு ப்ரமாணத்தால் அறியப்படாமையால் அதற்கு பாயம் சொல்ல முடியாது. ஆகையால் பரப்ரம்மத்தைப் பற்றின உபநிஷத் வாக்யங்களைப் பூர்ணமாக நம்பலாம். இதை மீமாம்ஸகன் ஒப்புக்கொள்ளவேண்டும். ஒப்புக்கொள்ளாவிட்டால் அவன் நம்புகிற கர்மகாண்டத்துக்கும் ஸ்வத: ப்ராமாண்யமில்லையென்று சொல்லி, அது பலன்களுக்காகக் காட்டும் வழிகளும் ஸரியானவைகள் அல்ல என்று ஏன் சொல்லக்கூடாது ? (52)

அவ:— முதல் நான்கு அதிகரணங்களுக்குப் பொதுவான அர்த்தத்தைச் சொல்லி, அவைகளில் சொல்லப்பட்ட இரண்டு விஷயங்கள் மேலே ஸ்தாபிக்கப்படுகின்றன என்று காட்டுகிறார்—

𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑍈 𑌚𑌤𑍁𑌰𑌧𑌿𑌕𑌰𑌣𑍀 𑌪𑍇𑌟𑌿-
𑌕𑍇𑌯𑌂 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍍𑌯𑍋𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌦𑍍𑌵𑌯𑌮𑌿-
𑌹 𑌪𑌠𑌿𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑌣𑍋𑌪𑌜𑍀𑌵𑌿 । 𑌸𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌰𑍇-
𑌷𑍍𑌯𑌃 𑌪𑌰 𑌇𑌤𑌿 𑌹𑌿 𑌵𑌦𑍇𑌤𑍍𑌕𑌾𑌰𑌣𑌤𑍍𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍍𑌵-
𑌸𑍍𑌯 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌦𑍍𑌯𑌧𑌿𑌕𑍃𑌤𑌿𑌷𑍁 𑌪𑌰𑌾𑌨𑌨𑍍𑌤𑍍𑌯𑌸𑌾𑌨𑌨𑍍𑌦𑌤𑌾𑌦𑌿 ॥

𑌇𑌤𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌪𑍇𑌟𑌿𑌕𑌾 ॥

நாலு அதிகரணங்களாலாகிய இந்தப்பேடிகை சாஸ்த்ரத்தை ஆரம்பிப்பது தகுந்தது என்று காட்டுவதற்காக வந்தது. லக்ஷணத்தாலே காட்டவேண்டிய ப்ரம்மத்தினுடைய இரண்டு தர்மங்களும், மேலே சொல்லப் போவதை ஸித்தமாக வைத்துக் கொண்டு இங்கே சொல்லப்பட்டன. ஸத், ப்ரம்மம் முதலிய சொற்களாலே பரப்ரம்மமே அறிவிக்கப்படுகிறது என்று காரணத்வாதிகரணம் சொல்லப்போகிறது. அவ்விதமான (எல்லையில்லாத) ஆநந்தம் முதலியவைகள் உபயலிங்காதிகரணம் முதலிய அதிகரணங்களில் சொல்லப்படப்போகின்றன.

குறிப்பு:— முதல் இரண்டு அதிகரணங்களால் ப்ரம்ம விசாரத்தைச் செய்யமுடியும் என்றும், மேல் இரண்டு அதிகரணங்களாலே அதைச் செய்யவேண்டியது என்றும் காட்டினபடியால், ப்ரம்மவிசாரத்தைச் செய்வதற்கு ஒரு தடையுமில்லை என்று ஏற்படுகிறது. ஆதலால் இந்த நான்கு அதிகரணங்களும் ஒரே பேடிகை. விசாரிக்கவேண்டிய ப்ரம்மத்தினிடம் இரண்டு தர்மங்கள் சொல்லப்பட்டன. ஒன்று— ஜகத்காரணமாயிருப்பது; அப்படியிருப்பவன் நாராயணன் என்பது; மற்றொன்று— அளவில்லாத ஆனந்தமுள்ளவனாய் இருப்பது. முதல் தர்மமானது காரணத்வாதிகரணத்திலும், இரண்டாவது உபயலிங்காதி கரணத்திலும் ஸ்தாபிக்கப்படுகின்றன. ப்ரம்மவிசாரத்தை ஆரம்பிக்கலாம் என்பதற்காக அவைகளை இங்கே சொன்னது. (53)

சாஸ்த்ரா’ரம்ப பேடிகை முற்றிற்று.

அவ— இப்படி ப்ரம்மவிசாரம் செய்வது தகுந்தது என்று நிருபணம் செய்து அடுத்த பேடிகையில் அந்த விசாரம் ஆரம்பிக்கப்படுகிறது என்று ஸங்கதியைச் சொல்லுகிறார்—

ஸத்த்வேநாஸ்வம் வாரஹீநகூத ஜதி 8தெ விஸ்வஹேத-
கவலக்ஷ்ய ஸாஷெஷ்ஷூகஸூாவ நீயெ நிரவயிவார8
வெநூயொமே ஹூஸகெத । ஸாஷ்ரூகூ ஸா்தாா
ஹஃம் ஹூக்குதிவாரஷயொ நட்ாநா8ாநாஷ்யொ
ஒரூ கீவாஸ்ரஷ வ தாவிதுயவாரகய நம் ஷெய
வீதி கூ8ண ॥ ॥ ௩௪ ॥

பரமாத்மா உண்டுபண்ணப்படாதவன் என்று அறியப்பட்டவன் என்றும், ஜகத்காரணமாயிருப்பது என்ற லக்ஷணத்தாலே அறியவேண்டியவன் என்றும், சாஸ்த்ரத்தைக்கொண்டே அறியத்தகுந்தவன் என்றும், அளவில்லாத உயர்வுள்ள ப்ரீதிக்கு விஷயமாகத் தகுந்தவன் என்றும் தீர்மானம் செய்து, இப்படி ப்ரம்மத்தை ப்ரஸ்தாபித்த பிறகு, இவைகள் ப்ரக்ருதியிடத்திலும் புருஷனிடத்திலும் அவைகளுக்குத் தகுந்தபடி இருக்கின்றனஎன்னும் பூர்வபக்ஷங்களை, அவைகள் அநுமாநம் முதலானவைகளால் அறியத்தகாதவைகள் அல்லவென்றும், துக்கத்தினல் தொடப்படாதவைகள் அல்லவென்றும் காட்டி, மேல்பேடிகை மற்றவர்கள் சொல்லுவதை வரிசையாய் நன்ருய் உதறித்தள்ளுகிறது.

குறிப்பு— (1) பூர்வார்த்தத்தில் முதல் பேடிகையில் ஸித்தமானதைச் சொல்லி, உத்தரார்த்தத்தாலே மேல்பேடிகை செய்யப்போவதைச் சொல்லுகிறார்.

(2) நான்கு விசேஷணங்களாலே நான்கு அதிகரணங்களின் விஷயங்கள் காட்டப்படுகின்றன. 'கூத ஜதி 8தெ' என்பதால் உபநிஷத் வாக்யங்களில் வ்யுத்பத்தி உண்டு, ஆதலால் 'நாஸ்த்யகூதஃ கூதெந' என்கிற முண்டகவாக்யத்தாலே பரமாத்மா நித்யன் என்று முதல் அதிகரணத்தில்சொன்ன அர்த்தமும், 'விஸ்வஹேதுகவலக்ஷ்ய' என்பதாலே 'யதொவா ஜமாநி' என்கிற வாக்யம் சொல்லும் லக்ஷணத்தாலே அவனை அறியலாம்

என்கிற இரண்டாமதிகரணத்தின் அர்த்தமும், "ஶாஸ்த்ரைக வேத்யன்" என்பதாலே மூன்றாவது அதிகரணத்தின் அர்த்தமும், "நிரவதிக ஆனந்தம்" என்பதாலே அவன் மிகவும் உயர்ந்த புருஷார்த்தம், ஆகையால் அவனிடத்தில் அளவில்லாத ப்ரீதியைப் பண்ணலாம் என்னும் நாலாவது அதிகரணத்தின் அர்த்தமும் காட்டப்படுகின்றன.

(3) ஐந்தாவது அதிகரணம் முதல் நாலாவது பாதம் நான்காவது அதிகரணம் முடிய பூர்வபக்ஷம் சொல்லுகிறவன் ஸாங்க்யன். அவன் மதத்தில் ப்ரக்ருதியும் ஜீவன்களுமிருக்கிறார்கள். பரமாத்மா இல்லை. அவன் முதல்பேடிகையில் சொன்ன தர்மங்கள் ப்ரக்ருதியினிடத்திலோ ஜீவன்களிடத்திலோ பார்க்கலாம் என்றும், அவைகளில் ஒன்று ஜகத்காரணமாயிருக்கலாம் என்றும் வாதிக்கிறான். அநுமானத்தாலேயே அறியமுடியாது என்பதும், மிகவும் உயர்ந்த புருஷார்த்தம் என்பதும் அவைகளிடத்தில் இல்லை என்று காட்டி, அந்தப் பக்ஷம் மேல் பேடிகையில் தூஷிக்கப்படுகிறது. (54)

ஈக்ஷதி-அதிகரணம். (5)

ஈக்ஷதேர்நாஶப்தம் ॥ ௫ ॥

(1) அஶப்தம் என்கிற சொல்லுக்கு, எதற்குச் சப்தம் ஒன்றே ப்ரமாணம் அன்றோ அது என்பது பொருள். ஸாங்க்யன் சொல்லுகிற ப்ரக்ருதி அநுமாநத்தால் அறியப்படுகிறபடியால் அது இங்கே 'அஶப்தம்' என்று சொல்லப்படுகிறது. அது ஜகத்காரணத்தைச் சொல்லுகிற வாக்யத்தால் சொல்லப்படவில்லை. ஈக்ஷணம் என்றும் பதம் காணப்படுவதால். அந்த வாக்யமாவது- * "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்வி

---

* (சா- 6- 2- 1, 3) ஸோமத்துக்குத் தகுந்தவனே! (ஸ்ருஷ்டிக்கு) முன்னாலே இது ஸத்தாகவே யிருந்தது; ஒன்றாகவே யிருந்தது; இரண்டாவது இல்லாததாயிருந்தது. அது 'பஹுவாக ஆவேன்; அதற்காக ஸ்தூலமான தத்துவங்கள் ரூபமாக ஆவேன்' என்று ஸங்கல்பித்து,

தீயழ்”, “தமெஷக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயெயெதி தமெத்த ஜோஸ்ருஜத’ என்பது. இந்த வாக்யத்தில் “மெனக்ஷத” என்று ஸங்கல்பத்தைச் சொல்லுவதாலும், அது அசேதநத்தால் முடியாததாலும் ப்ரக்ருதி ஜகத்காரணம் அன்று.

(2) பூர்வபக்ஷி ஆக்ஷேபிக்கிறான்— மேலே “தெஜமெனக்ஷத; (சா-6-2-3)ஆப-மெனக்ஷந்த” (சா-6-2-4) என்று சொல்லியிருக்கிறது. அவைகள் அசேதநங்கள்; ஸங்கல்பத்தைச் செய்யமுடியாதவைகள்; ஆகையால் அங்கே ஈக்ஷணத்துக்குக் கௌணமாக அர்த்தம் பண்ணவேண்டும். அந்தக் கௌணஈக்ஷணங்களுடன் சேர்த்து ஸத்தின் ஈக்ஷணத்தையும் சொல்லியிருப்பதாலே இதுவும் கௌணம்—என்று. இதை ஸூத்ரம் அநுவாதம் பண்ணித் தூஷிக்கிறது.

அது தேஜஸை ஸ்ருஷ்டித்தது-என்பது பொருள். “ஸதேவ” என்கிற விடத்தில் ஏவ என்கிற சொல், இது அஸத்தாக இல்லையென்று காட்டுகிறது. சிலர் முதலில் உலகமில்லை, பிற்பாடு உண்டாயிற்று என்று சொல்லுகிறார்கள். அது பிசகு என்று காட்டுகிறது. அது முன்னாலும் இருந்தது. அது எப்படி இருந்ததென்றால் ஒன்றாகவே இருந்தது. ‘பஹுவாக ஆவேன்’ என்று ஸங்கல்பித்ததாலே அது முன்பு பஹுவாயில்லை என்பது ஏற்படுகிறது; மேல் நாமங்களையும் ரூபங்களையும் செய்வேனென்று சொல்லுகிறபடியால். பஹுவாகவாவதாவது— பல ரூபங்களையும் பல நாமங்களையும் உடையதாக ஆவது. ‘ஏகமேவ’ என்பதாலே அப்போது நாமங்களும் ரூபங்களும் இல்லை என்பது காட்டப்படுகிறது. இப்போது காணப்படுகிற ப்ரக்ருதியின் காரியங்கள் ஸூக்ஷ்மங்களாய் தமஸ் என்று சொல்லப்பட்ட அவஸ்தையை அடைந்திருந்தன. சேதநர்களுக்கு உடம்புகளில்லாமையால் அவர்கள் ஒரே விதமாயிருந்தார்கள். அசேதனங்களும் சேதநங்களும் ப்ரம்மத்தை விட்டு மனதாலும் பிரிக்க முடியாதபடி சேர்ந்திருந்தன. இது முன்னாலே ஸத்தாக இருந்தது என்பதாலே ஸத்து உலகத்துக்கு உபாதானகாரணமென்று விளங்குகிறது. அப்போது நிமித்த காரணம் எது என்று கேள்வியுண்டாக, இரண்டாவது இல்லை, அதுவே நிமித்த காரணம் என்று “அத்விதீயம்” என்கிற சொல் காட்டுகிறது. இப்படி ஸத் உபாதான காரணமாயும் நிமித்தகாரணமாயும் இருந்தது. இதையே “தமெஷக்ஷத பஹு ஸ்யாம்” என்பதும் காட்டுகிறது. ‘பஹு ஸ்யாம்’என்பதாலே உபாதாநகாரணமும், ‘மெனக்ஷத’ என்பதால் நிமித்தகாரணமும் சொல்லப்படுகின்றன.

மௌணஸ்ரவணாத்ஸவாச ॥ ௬ ॥

ஈக்ஷணம் கௌணம் என்றால், அது இல்லை; ஆத்ம என்கிற சொல்லாலே ஸத்தைச் சொல்லியிருக்கிறபடியால். இதைச் சொல்லுகிற வாக்யம் 1"ஸ ஆத்மா தத்த்வமஸி ஶ்வேதகேதோ" என்பது. ஐதம் ஸர்வம் என்பதில் ப்ரக்ருதியும் சேர்ந்திருக்கிறது. ஆகையால் அதுவே ஆத்மாவாயிருக்கமுடியாது. ஆகையால் ஸத் என்று சொல்லப்பட்டது ப்ரக்ருதியன்று.

(3) இந்தத் தீர்மானத்தை மேலே ஐந்து ஹேதுக்களாலே உறுதிப்படுத்துகிறார்:—

தந்நிஷ்஠ஸ்ய மோக்ஷோபதேஶாத் ॥ ௭ ॥

தத் என்பது முன் சொல்லப்பட்ட ஸத். அதை வேறு எண்ணம் கலவாமல் உபாஸிக்கிறவனுக்கு மோக்ஷம் பலனாகச் சொல்லுகிறபடியால். இதைச்சொல்லும்வாக்யம் 2"தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே; அத ஸம்பத்ஸ்யே" என்பது.

ஹேயத்வாவசநாச்ச ॥ ௮ ॥

ஸத்து அசேதநப்ரக்ருதியாயிருந்தால் அதை உபாஸிப்பதனால் ப்ரகிருதி ஸம்பந்தமாகிய ஸம்ஸாரமே தொடர்ந்து வரும். மோக்ஷம் கிடைக்காது. அசேதநத்தை உபாஸிப்பது ஹேயம். ஸத் ஹேயம் (விலக்கத்தகுந்தது) என்று இங்கே சொல்லப்படவில்லை. இந்த இரண்டு ஸூத்ரங்களும் சேர்ந்து அந்வயமுகத்தாலும், வ்யதிரேகமுகத்தாலும் ஒரே ஹேது என்று காட்டுவதற்காக 'ச்'என்கிற சொல் 4-வது ஸூத்ரத்தில் சேர்த்திருக்கிறது.

---

1 (சா-6-8-7)ஸ ய ஏஷோऽணிமைததாத்ம்யமிதம் ஸர்வம், தத் ஸத்யம், ஸ ஆத்மா, தத்த்வமஸி. இதுவே இவைகள் எல்லாவற்றிற்கும் ஆத்மா. இது என்பது முன்னாலே சொல்லப்பட்ட ஸத்.

2 (சா– 6- 14- 2.) ஆசார்யவானாக இருந்து ஸத்தை உபாஸிக்கிறவன் எதுவரையில் உடம்பை விட்டுப் பிரிக்கப்படுகிறானில்லையோ, அதுவரையில்தான் தாமதம். பிரிக்கப்பட்ட பிறகு ப்ரஹ்மத்தை அடைகிறான். விடப்படுவது உடம்பு என்றும், அடையப்படுவது ப்ரம்மம் என்றும், 'அஶ்வ இவ ரோமாணி விதூய' என்கிற வேறு வாக்யம் காட்டுகிறது.

(4) பூர்வபக்ஷி ஆக்ஷேபிக்கிறான்— "ஸதேவ ஸொம்ய" என்கிற வாக்யம் அசேதநத்தை ஜகத்துக்கு உபாதாநகாரணமாகச் சொல்லுகிறது. இது முதலில் இருப்பதால். பின்னால் சொல்லப்படுகிற ஹேதுக்கள் பாதிக்கப்படுகின்றன— என்று. இதற்குப் பதில் சொல்லுகிறார்—

ப்ரதிஜ்ஞாவிரோதாத் ||௯||

பூர்வபக்ஷி காட்டின வாக்யத்துக்கும் முன்னாலே ஒரு வாக்யமிருக்கிறது. அது * தமாதேசமப்ராக்ஷ்ய யேநாச்ருதம் ச்ருதம் பவதி" என்பது. உபாதான காரணத்தை அறிவதாலே அதின் காரியங்கள் அறியப்படுகின்றன என்பது இதினால் காட்டப்படுகிறது. ஸத் அசேதனமாயிருந்தால் அதை அறிவதனால் அசேதனமான கார்யங்களை மாத்திரம் அறியலாம். சேதநர்களை அறியமுடியாது. "அச்ருதம்" என்கிற சொல்லில் சேதநர்கள் அடங்கியிருக்கிறார்கள். இந்த வாக்யத்தில் ஸர்வம் என்கிற சொல் இல்லாவிட்டாலும் இதே விஷயமான வேறு உபநிஷத் வாக்யத்திலிருந்து இதைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஸத் என்பது ப்ராக்ருதியாயிருந்தால் சொல்லப்பட்ட ப்ரதிஜ்ஞைக்கு விரோதமுண்டாகும்.

(5) இன்னுமொரு ஹேதுவைச் சொல்லுகிறார்:—

ஸ்வாப்யயாத் ||௧०||

ஸ்வப்னமில்லாமல் (ஸுகமாய்) தூங்குகிறவனைப்பற்றி இரண்டு வாக்யங்கள் இருக்கின்றன-"ஸதா ஸொம்ய ததா ஸம்பந்நோ பவதி, ஸ்வமபீதோ பவதி" (சா-6-8-1) என்று. ஸுஷுப்தி ஸ்தானத்தை ஸத்து என்றும், ஸ்வம் என்றும் சொல்லுகிறபடியால் இரண்டு சொற்களுக்கும் ஒரே அர்த்தம் சொல்ல

* (சா. 6. 1-3) எதைக் கேட்பதாலே கேட்கப்படாதது (எல்லாம்) கேட்கப்பட்டதாகிறதோ, அந்த ப்ரசாஸநம் பண்ணுகிறவனைப்பற்றி நீ கேட்டாயா? இதில் "யேந" என்று ஆரம்பிக்கிற வாக்யத்தாலே உபாதாநகாரணமும், "ஆதேசம்" என்பதாலே நிமித்தகாரணமும் சொல்லப்படுகின்றன. ஆதேசம் என்பதற்கு ப்ரசாஸநம்-கட்டளையிடுகிறவனை என்பது பொருள.

வேண்டும். ஸ்வ என்கிற சொல்லுக்கு தன்னுடைய ஆத்மா என்பது பொருள். இரண்டு வாக்யங்களுக்கும், தூங்குகிறவன் தன்னுடைய ஆத்மாவான ஸத்தினிடத்தில் லயத்தை அடைகிறுன் என்பது பொருள். லயத்தை அடைவது காரணத்திலே; ஜீவனுக்குக் காரணம் ப்ரக்ருதியன்று. ஆகையால் ஸத் என்பது ப்ரக்ருதி அன்று.

(6) அடுத்த ஹேது—

गतिसामान्यात् ॥௧௧॥

உபநிஷத் வாக்யங்களுக்கு ப்ரவ்ருத்தி ஸமம். அதாவது - எல்லாம் ஒரே விஷயத்தைச் சொல்ல வேண்டும். வேறு உபநிஷத்தில் ஆத்மாவை ஜகத்காரணமாகச் சொல்லியிருக்கிறது. ஆகையால் இதில் சொல்லப்பட்ட ஸத் ஆத்மா என்றும், அசேதநமான ப்ரக்ருதி அன்று என்றும் ஏற்படுகிறது.

(7) கடைசி ஹேது—

श्रुतत्वाच्च ॥௧௨॥

இந்த உபநிஷத்திலும் ஸத்து ஆத்மா என்று சொல்லப்படுகிறது. இந்த ஸூத்ரத்தில் இருக்கிற “ச” என்கிற சொல் கீழே சொன்ன ஹேதுக்களையெல்லாம் ஒன்று சேர்க்கிறது.

அவ:— பூர்வபக்ஷத்தை அநுவாதம் செய்து அதைத் தூஷிக்கிறுர்:—

गौणेक्षासाहचर्यात्सति बहुभवनप्रेक्ष-
णं नैव मुख्यं दृष्टान्ताद्यैस्सहायैस्त्वनु-
मितिरिह [illegible] । [illegible]
प्रकृतिविकृति व्याहतेरित्ययुक्तं श्रुत्या
न्येषां [illegible] ॥

கௌணங்களான ஈக்ஷணங்களுடன் சேர்ந்திருப்பதாலே ‘பஹு ஆவேன்’ என்று ஸத் செய்த ஈக்ஷணமும் முக்யம் அன்று. த்ருஷ்டாந்தம் முதலானவைகளாலே இங்கே அநுமாநம் தோன்றுகிறது. அசேதநமான கார்யவர்க்கம் அதுபோன்ற அசேதநத்திலிருந்து உண்டாவது தகுந்தது. ஆகையால் ஸத் என்கிற

பதம் விகாரத்தை அடையாத மூலப்ரக்ருதியைச் சொல்லுகிறது. இப்படிப் பூர்வபக்ஷம். இது தருந்ததன்று. சுருதியானது (ப்ரம்மத்தைத் தவிர) மற்றவைகளை ஜகத்காரணங்களல்ல என்று தடுத்துவிடுகிறது. மேலும், பூர்வபக்ஷியின் அபிமதத்தை அவமதிக்கும் லிங்கம் (அடையாளம்) முதலியவைகளுமிருக்கின்றன.

குறிப்பு–(1)ப்ரம்மவிசாரத்தைச் செய்ய ஆரம்பித்து, ஜகத்துக்குக் காரணமான தத்துவம் எது என்று அறிவதற்காகக் காரணவாக்யங்களைப் பார்க்கவேண்டும். அந்த வாக்யங்கள் சாந்தோக்யத்தில் ஸத்வித்யையிலும், தைத்திரீயத்தில் ஆநந்தவல்லியிலும், இருக்கின்றன. அசேதநமான ப்ரக்ருதி எங்கும் இருப்பதால் அது ஜகத்காரணம் ஆகுமோ என்று ஸம்சயமுண்டாகிறது. அது ஜகத்காரணம் அன்று என்று காட்டுகிற ஸத்வித்யா வாக்யம் முதலில் விசாரிக்கப்படுகிறது.

(2) பூர்வபக்ஷி மூன்று ஹேதுக்கள் சொல்லுகிறான்— (1) முதல் ஹேது கௌணமான ஈக்ஷணத்தைச் சொல்லுகிற ப்ரகரணத்தில் இருப்பதாலே ஸத்தின் ஈக்ஷணமும் முக்யம் அன்று. அது கௌணம். ஆகையால் ஸத்து அசேதநம். இதைப் பற்றி ஸூத்ரத்தின் அர்த்தத்தில் 2-வது பாராவைப் பார்க்க. (2) இரண்டாவது ஹேது த்ருஷ்டாந்தம் முதலானவைகள் சொல்லப்படுகின்றன என்பது. த்ருஷ்டாந்தங்கள்— ம்ருத்பிண்டம், லோஹமணி, (தங்கம்) நகநிக்ருந்தநம்-(இரும்பு) 'ஸூ' என்கிற சொல்லாலே "யெநாஶ்ருதழ" என்று சொல்லப்படுகிற ப்ரதிஜ்ஞை சொல்லப்படுகிறது. ப்ரதிஜ்ஞையும் த்ருஷ்டாந்தமும் அநுமாநத்தின் அவயவங்கள். அவைகளாலே அநுமாநமும் தோன்றுகிறது. அந்த அநுமாநத்தால் அறியப்படுகிற ப்ரக்ருதி ஜகத்காரணம் என்று ஏற்படுகிறது. (3) மூன்றாவது ஹேது காரணமும் கார்யமும் ஒரே ரூபமுள்ளவைகளாயிருக்கவேண்டியவைகள். கார்யங்களில் ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்கிற மூன்று குணங்களும் இருக்கின்றன. ஆகையால் காரணமும் ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்கிற த்ரவ்யங்களின் ஸமூஹமான ப்ரதாநம்.

(3) இவைகளுக்குள் முதல் ஹேது ச்லோகத்தில் தூஷிக்கப்படுகிறது. உபநிஷத்தில்சொல்லப்படுகிற ஈக்ஷணமும், ஸூத்ா என்கிற சொற்களும் ச்ருதிகள். பூர்வபக்ஷி முதல் ஹேதுவால் ப்ரகரணத்தைக் காட்டுகிறான் ச்ருதி ப்ரகரணத்தைக் காட்டிலும் ப்ரபலம்.

ஆகையால் ஸத்தின் ஈக்ஷணம் முக்யமானது. அது அசேதநமான ப்ரக்ருதியன்று. ஆத்மா என்கிற சொல் ச்ருதி என்று காட்டுவதற்காக ஸூத்ரம் 'ஆத்மஶப்தாத்' என்றுசொல்லுகிறது. இதை அநுஸரித்து முதல் ஸூத்ரத்திலிருக்கும் 'ஈக்ஷதே:' என்கிற சொல்லுக்கு '<u>ஈக்ஷதேர்தாதோ: ஶ்ரவணாத்' என்று ஸ்ரீபாஷ்யம் வ்யாக்யாநம் பண்ணுகிறது.</u> இதையே வேறு ப்ரமாணங்களும் உறுதிப்படுத்துகின்றன. ஸத்தை உபாஸிக்கிறவனுக்கு மோக்ஷம் கிடைக்கும் என்பது லிங்கம். 'ஸதேவ ஸோம்ய' என்கிற வாக்யத்தைக் கேட்கும்போது 'ததைக்ஷத' என்கிற வாக்யத்தின் நினைவு வருகிறது. இரண்டும் ஜகத்காரணத்தைச் சொல்லுவதாலே அவைகள் இரண்டும் ப்ரகரணம். இதுவும் ஜகத்காரணம் அசேதநம் அன்று என்று காட்டுகிறது. ஸ்தாநம் என்கிற ப்ரமாணமும் இருக்கிறது. ஸுஷுப்தியைச் சொல்லுகிற இடத்தில் 'ஸத்' என்கிற இடத்தில் ப்ராஜ்ஞ என்று சொல்லியிருப்பதால் ஸத் அசேதநம் அன்று. ஸூத்ரார்த்தத்தில் 5-வது பாராவைப் பார்க்க. 'கதிஸாமாந்யாத்' என்கிற ஸூத்ரமும் இதே ப்ரமாணத்தைக்காட்டுகிறது. ஆகையால் எல்லா ஸூத்ரங்களாலும் அவைகளின் விஷயவாக்யங்களாலும் ஸத் அசேதநம் அன்று என்பது ஸ்தாபிக்கப்படுகிறது. <u>ஸூத்ரங்களும் ப்ரமாணங்களுடைய வரிசைப்படி சொல்லப்படுகின்றன. ப்ரமாணங்களின் வரிசை ச்ருதி, லிங்கம், வாக்யம், ப்ரகரணம், ஸ்தாநம், ஸமாக்யை.</u>

(4) இரண்டாவது ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட சங்கை எப்படி உண்டாகும்? ஸத்தின் ஈக்ஷணம் வாக்யத்தில் முதலில் இருக்கிறபடியாலே அதற்குத் தகுந்தபடி மற்ற ஈக்ஷணங்களுக்கு அர்த்தம் பண்ணவேண்டும். அவைகளின் ஈக்ஷணத்தைக்கொண்டு முதல் ஈக்ஷணத்தை மாற்றக்கூடாதே என்றால், ஸத் என்னும் பதம் நபும்ஸகலிங்கமுள்ளதாயிருப்பதால் அது அசேதநமோ என்று ஸந்தேஹமுண்டாகிறது. ஆகையால் அதை மற்றவிரண்டு ஈக்ஷணங்களைக்கொண்டு தீர்க்கவேண்டும். *ஆகையால் பூர்வபக்ஷத்தைச் சொல்லுவது தகுந்ததுதான்.

* இது ப்ராயபாடம் என்னும் நியாயப்படி. அந்த நியாயமாவது:- அக்னிஹோத்ர ப்ரகரணத்தில் "தத்நா ஜுஹோதி" என்னும்

அவ— பூர்வபக்ஷத்தில் சொன்ன மற்ற ஹேதுக்களைத் தூஷிக்கிறார்:—

𑌜𑍍𑌞𑌾𑌤𑍇 𑌹𑍍𑌯𑍇𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑌿𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑍈𑌕𑍍𑌯
𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾 𑌮𑍃𑌤𑍍𑌤𑌤𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑍍𑌰𑌯 𑌇𑌹 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌤𑌹𑍇𑌤𑌵𑌃 । 𑌤𑍇𑌨𑌾𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌨𑍁𑌮𑌾
𑌨𑌂 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌵𑍍𑌯𑍋𑌤𑍍𑌕𑍍𑌷𑍍𑌣𑌿𑌤𑌂 𑌹𑍇𑌤𑍍𑌵𑌨𑍁𑌕𑍍𑌤𑍇𑌃 𑌸𑌾
𑌰𑍂𑌪𑍍𑌯𑌾𑌦𑍇𑌶𑍍𑌚 𑌹𑍇𑌤𑍋𑌰𑌪𑌿 𑌪𑌰𑌿𑌹𑍃𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍
𑌸𑌂𑌭𑌾𑌵𑌨𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌤𑌃 ॥ ॥௫௯॥

கார்யமும் காரணமும் ஒன்று என்று காட்டுவதற்காக ஒன்று அறியப்பட்டபோது எல்லாம் அறியப்படுகிறது என்று ப்ரதிஜ்ஞை இருக்கிறது. இந்த விஷயத்தில் மண்கட்டியும் அதின் கார்யங்களும் முதலான மூன்று உதாரணங்கள் இங்கு சொல்லப் படுகின்றன. ஆகையால் அவ்யக்தம் காரணம் என்பதற்கு அநுமானம் சொல்லப்படுகிறது. இது பூர்வபக்ஷம். இந்த ஆசை நிறைவேறாது. ஏன் என்றால், ஹேதுவைச்சொல்லவில்லை. கார்யமும் காரணமும் ஸரூபமாக இருக்கவேணும் என்கிற ஹேதுவோ மேலே தூஷிக்கப்படுகிறது. இங்கே த்ருஷ்டாந்தங்களைச் சொன்னது ஒன்றை அறிவதனால் எல்லாவற்றையும் அறிவது பொருந்தும் என்பதைக்காட்டுவதற்காக.

குறிப்பு:— (1) 55-வது ச்லோகத்தின்கீழ் 2-வது குறிப்பைப் பார்க்க.

(2) ஹேது அநுமாநத்துக்கு முக்யமான அவயவம்; அதைச் சொல்லாமையால் இங்கே அநுமாநமேயில்லை. ப்ரதிஜ்ஞை உதார

ஓர் வாக்யம் இருக்கிறது. 'ஆலபேத'' என்னும் பதத்துக்கு தொடவேண்டியது என்றும், ஹிம்ஸை செய்யவேண்டியது என்றும் பொருள். இந்தவிடத்தில் எந்தப் பொருளைக் கொள்ளவேண்டுமென்று ஸந்தேஹமுண்டாக, அக்னிஹோத்ரத்தினுடைய அங்கங்களின் ஸம்ஸ்காரங்கள் இவ்விடத்தில் சொல்லப்படுகிறபடியால், வத்ஸத்தைத் தொடுவதும் ஸம்ஸ்காரம் என்று தீர்மானித்திருக்கிறார்கள். வத்ஸம்-கன்றுக்குட்டி. இவ்விடத்திலும் இரண்டு ஈக்ஷணங்கள் கௌணங்களாய் இருப்பதால் ஸத்தினுடைய ஈக்ஷணமும் கௌணம் என்று பூர்வபக்ஷியின் வாதம்.

ணம் என்னும் அநுமானத்தின் இரண்டு அவயவங்களை இங்கே சொல்லுகிறபடியால் ஹேதுவை ஏன் கல்பிக்கக்கூடாது? என்றால் சொன்ன அவயவங்களுக்கு வேறு ப்ரயோஜனம் (அந்யதாஸித்தி) இல்லாவிட்டால், அப்படிக் கல்பிக்கலாம். ப்ரதிஜ்ஞை என்பது அநுமானத்துக்கு மாத்திரமன்று; எந்த ப்ரமாணத்திலும் அதனால் அறியப்படும் விஷயத்தை முதலில் குறிப்பிடலாம். இங்கே த்ருஷ்டாந்தங்களும் அநுமாநத்துக்காகச் சொல்லப்பட்டவைகளல்ல. ஒன்றை அறிந்தால் எல்லாம் அறியப்படும் என்று ஆசார்யன் சொன்னபோது சிஷ்யனுக்கு அது எப்படிக்கூடும் என்று ஸம்சயமுண்டாயிற்று; அதைத் தீர்த்து அதனைத் தெளிவிப்பதற்காகச் சொல்லப்பட்டவைகள். இது ச்லோகத்தில் உள்ள "ஸம்ஹாவதொநாகெதூ:" என்பதின் அர்த்தம். (56)

அவ:— இப்படி பூர்வபக்ஷி சொல்லும் ஹேதுக்களைத் தூஷித்து, ஸித்தாந்தத்துக்கு அநுகூலமான வாக்யங்களின் அர்த்தங்களைச் சொல்லுகிறார்:—

ஸூக்ஷெஶாத்ம ஷூஶஶெப்ரதிதர ஶரணெஸ்ம தஶெ
ஷெவ்ராவஶெஶாஜீவெநா ஷூநா ஸாஹம்கரணசநஹ.
ஶொரஜிஷணஸ்ய ஷ்ஶவெஶாக | ஸகஜ்ஞாநெநா ஸவதும்
விஜிதஜிகி மிரா ஸவுதாஷாத்வாவா ஶாவாவிஷ்யாஷ
ராஷெரவீ பஹுஹவிதா விஶ்விஜிஶ்வசஒதிடு: ||ருள||

எல்லாம் தெரிந்தவனும், எல்லாவற்றையும் சரீரமாகவுடையவனும் ஆனவன்தான் 'பஹு ஸ்யாம்' என்று பஹுவானவன். ஏனென்றால், 'ஸூக்ஷெஶ, ஸூத்ம, ஷூஶ' என்கிற சொற்கள் அவனைத் தவிர வேறொன்றையும் சொல்லத் தகுந்தவைகள் அல்ல. ஸ்வம், தஜ என்று சொல்லப்பட்டவைகள் ஒன்று என்று சொல்லியிருக்கிறது. ஸத்தானது 'ஜீவெநாத்மநா' என்று தன்னை ஜீவனாகச் சொல்லி, அஹம் என்று சொல்லிக்கொண்டு, அஹம் என்கிற சொல்லுக்குப் பொருளல்லாத அசித் கூட்டங்களில் ப்ரவேசிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒன்றின் ஞானத்தால் எல்லாம் அறியப்படுகிறது என்றும், அது எல்லாமாயிருக்கிறது என்றும் சொல்லும் வாக்யங்கள் இருக்கின்றன. வேறு சாகைகளுடனும், இந்த உபநிஷத்திலேயே வேறு வித்யைகளுடனும் ஸ்ம்ருதி புராணங்களுடனும் ஒற்றுமையிருக்கிறது.

குறிப்பு— (1) ஸத்வித்யையின் ஆரம்பத்தில் ஆதேஶம் என்கிற சொல் இருக்கிறது. இதற்கு ஆதேஷ்டாரம் (நியமநம் பண்ணுகிறவனை) என்பது பொருள். மேலே "ஸ ஆத்மா" என்று ஸத்து ஆத்மாவாகச்சொல்லப்படுகிறது. ஆத்மா என்கிற சொல்லுக்கு ஒன்றுக்குள்ளே ப்ரவேசித்து, அதை நியமனம் பண்ணுகிறவன் என்பது பொருள். அதற்கு மேலே "ஸ்வமபீதோ பவதி" என்று ஸ்வ என்கிற சொல்லாலே சொல்லப்பட்டது ஜீவன் தூங்குகிற இடமாகச் சொல்லப்படுகிறது. நியமநம் பண்ணுவதும், ஸுஷுப்திக்கு இடமாயிருப்பதும் அசேதநமான ப்ரக்ருதிக்கு இல்லை. இதனால் இரண்டாவது, ஆறுவது ஸூத்ரங்களின் அர்த்தங்கள் சொல்லப்பட்டன. இந்த மூன்று சொற்களும் அசித்தைச் சொல்வதானால் கௌணவிருத்தியால் பொருள் கொள்ளவேணும். அது கூடாது.

(2) * தத்த்வமஸி என்கிற வாக்கியத்தில் த்வம் என்பது உபதேசத்தைப் பெற்றுக்கொண்ட ஜீவனைச் சொல்லுகிறது. தத் என்பது முன் சொல்லப்பட்ட ஸத்தைச் சொல்லுகிறது. ஸத் அசேதநமாயிருந்தால் ஜீவனையும் அசேதநத்தையும் ஒன்றாகச் சொன்னதாக ஏற்படும். * "அநேந ஜீவேநாத்மநாநு

* (சா-6-8-7) பரமாத்மா எல்லா வஸ்துக்களிலுமிருப்பதாலே அவன் எல்லாச்சொற்களாலும்சொல்லப்படுகிறான். தத்த்வமஸி(தத்-த்வம் அஸி) என்பதில் தத் என்பது உபநிஷத்தில் கீழே ஜகத்காரணமாகச் சொல்லப்பட்ட ஸத். த்வம்-என்பது உபதேசத்தைப் பெற்றுக்கொண்டிருக்கும் ச்வேதகேதுவாகிய ஜீவன். அந்தச் சொல் அவனுக்கு ஆத்மாவான ஸத்தைச்சொல்லுகிறது. வாக்யத்துக்குப் பொருள்—ஸத் உன்னுடைய ஆத்மா என்பது. இப்படி ச்வேதகேது உபாஸிக்கவேண்டும் என்பது கருத்து. "அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய" (சா-6-3-3) என்னுமிடத்திலும் 'ஜீவன்' என்னும் பதம் ஜீவனுக்கு ஆத்மாவான பரமாத்மாவைச் சொல்லுகிறது. 'ஜீவேந' என்று ஏகவசனத்துடன் முடிந்தாலும் ஜீவஜாதியைச் சொல்லுவதால் எல்லா ஜீவன்களும் சொல்லப்படுகிறார்கள். "ஆத்மநா என்பதற்கு மயா (என்னாலே) என்பது பொருள். அப்போது வாக்யத்துக்கு, இந்த அண்டத்திலுள்ள ஜீவன்களுக்கு ஆத்மாவாக இருந்து நான் இந்த தத்துவங்களுக்குள்ளே ப்ரவேசித்து - என்பது பொருள்.

விஶ்ய” என்று ஜீவனும் ஸத்தும் ஒன்று என்றும் சொல்லி, அசேதனங்களான தேஜஸ், அப்பு, பிருதிவீ இவைகளில் ஸத்தின் ப்ரவேசம் சொல்லப்படுகிறது. ஜீவேந என்று சொல்லி, அசேதநங்களுக்குள்ளே ப்ரவேசம் அசேதநமான ப்ரகிருதியால் முடியாது.

(3) ஒன்றை அறிவதாலே எல்லாம் அறியப்படும் என்கிற வாக்யம் ஆரம்பத்திலிருக்கிறது. எல்லாம் என்பதில் ஜீவன்களும் அடங்கியிருக்கிறார்கள். ஆதேசம் அசேதநமான ப்ரக்ருதியாயிருந்தால், அதை அறிவதனால் ஜீவன்களை அறியமுடியாது. ஜீவனுக்கு அது உபாதானகாரணம் அன்று. ப்ரதிஜ்ஞைக்கு விரோதம்வரும். ஸத்தையும் ஆதேசத்தையும் உபாதாநகாரணமாகச் சொல்லுகிறபடியால் ஸூக்ஷ்மம்தான் மேலேசொல்லப்படுகிற ஸத். இது “ப்ரதிஜ்ஞாவிரோதாத்” என்கிற ஸூத்திரத்தின் அர்த்தம்.

(4) “ஐததாத்ம்யமிதம் ஸர்வம்” என்று ஸத்தையும் ஜகத்தையும் ஒன்றாகச் சொல்லியிருக்கிறது. அதில் ‘எல்லாம்’ என்பதில் ஜீவன்களும் அடங்கியிருக்கிறார்கள். ஸத் ப்ரக்ருதியாயிருந்தால் அதுவும் ஜீவன்களும் ஒன்று என்று ஏற்படும். இது கீழே சொன்னபடி கூடாது.

(5) “ஸாக்ஷாச்சோபயாம்நாநாத்” என்பது கடைசி இரண்டு ஸூத்ரங்களின் அர்த்தம்.

(6) ச்லோகத்தில் உள்ள ‘விச்வமூர்த்தி” என்னும் பதத்திற்கு, விச்வம்— ஜகத்து எவனுக்குச் சரீரமோ அவன் என்பது பொருள். ஸூக்ஷ்மமான சரீரத்தோடு கூடிய பரமாத்மா ஸ்தூலமான ஜகத்தாகிறான். ஆகையால் அவன் உபாதாநகாரணமாகத் தகுந்தவன். ஜகத் என்பதில் அசேதநங்களும் சேதனர்களும் அடங்கியிருக்கிறார்கள். இப்படியாவதற்கு அவன் எல்லாம் அறிந்தவனாயிருக்கவேண்டும். ஆகையால் அவனே நிமித்தகாரணமாகத் தகுந்தவன். அதை “ஸர்வவித்” என்னும் பதம் காட்டுகிறது. (57)

ஆநந்தமயாதிகரணம். (6)

ஆநந்தமயோ(அ)ப்யாஸாத் ॥ ௧௩ ॥

ஜகத்காரணமானது அசேதநமான ப்ரக்ருதியாயிருக்கவேண்டாம். ஜீவனாக இருக்கலாமே. அவனுக்கு முக்யமான ஈக்ஷணம் கூடுமே என்கிற சங்கையை இந்த அதிகரணம் தீர்க்கிறது. இந்த அதிகரணத்தின் விஷயவாக்யம் "ஸோ(அ)காமயத" என்னும் காரணவாக்யம். அதில் 'ஸ:' என்கிற சொல் கீழே சொல்லப்பட்ட ஆநந்தமயனைக் காண்பிக்கிறது. ஆகையால் ஆநந்தமயனைப்பற்றி விசாரம் செய்யப்படுகிறது.

அந்தரதிகரணத்தில் (1-1-7) இரண்டாவது ஸூத்ரத்தில் உள்ள ஆநந்த: என்கிற சொல்லை இந்த அதிகரணத்தில் விதேயமாகச்சேர்த்துக் கொள்ளவேண்டும். ஸூத்ரத்தின் அர்த்தம்:—ஆனந்தமயன் ஜீவனைக் காட்டிலும் வேறு, அளவில்லாத ஆனந்தத்தையுடையவனாக இருக்கிறபடியால் அப்யாஸ என்னும் பதத்திலுள்ள 'அ' என்னும் விகுதிக்கு (வஞ்) ப்ரத்யயத்துக்கு) கர்மம் அர்த்தம். அப்யஸ்யமாந என்பது பொருள். தைத்திரீயம், எல்லாவிதத்திலும் நன்றாயிருக்கிற மனிதனுடைய ஆனந்தத்தை ஒன்று என்று சொல்லி, அதை நூறாலே பெருக்கி, அது மனுஷ்ய கந்தர்வன் ஆனந்தம் என்று சொல்லி, இப்படிச் சொல்லிக்கொண்டுபோய், ப்ரஜாபதியின் நூறு மடங்கு ஆனந்தம் ப்ரம்மத்தின் ஓர் ஆனந்தம் என்று சொல்லி, அதுக்கும் அளவில்லை என்று முடிக்கிறது. "அப்யாஸாத்" என்கிற பதத்துக்கு இவ்விதமான ஆனந்தத்தையுடையவனாயிருப்பதாலே என்பது பொருள். இந்த ஸூத்ரத்தாலே ஆனந்தமயன் பத்தஜீவன் அன்று; என்று சொல்லப்படுகிறது. முக்தனுக்கு இவ்விதமான ஆனந்தமிருக்கிறபடியால் சொன்ன ஹேதுவைக்கொண்டு அவனை விலக்க முடியாது. அவனை விலக்காமையால் த்ருஷ்டாந்தமும் கிடைக்கிறது. ஆனந்தமயன், பத்த ஜீவனைக் காட்டிலும் வேறு, அளவில்லாத ஆனந்தமுள்ளவனாய் இருப்பதால், முக்தனைப் போல.

விகாரஶப்³தா³ந்நேதி சேந்ந ப்ராசுர்யாத் ॥௧௪॥

ஆனந்தமய: என்கிற பதத்தில் மய (மயட்) என்கிற விகுதி விகாரம் என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறது. ஆனந்தமயன் என்கிற சொல்லுக்கு குறைவதையும் பெருகுவதையுமுடைய ஆனந்தத்தையுடையவன் என்று பொருளாகையால், அது அவ்விதமான ஆனந்தத்தையுடைய ஜீவனைச்சொல்லுகிறது. ஆகையால் ஜீவன் அன்று என்பதுகூடாது. இப்படிபூர்வபக்ஷி ஆக்ஷேபிக்க, இந்த ஆக்ஷேபத்தை, மயட்-என்பதற்குப்ராசுர்யம் (மிகுதி) என்கிற அர்த்தத்தைக் காட்டி மறுக்கிறார்.

தத்³தே⁴துவ்யபதே³ஶாச்ச ॥௧௫॥

தச் என்கிற சொல் ஆநந்த³ய: என்கிற சொல்லிலடங்கிய ஆனந்தத்தைக் காட்டுகிறது. ஜீவனுடைய ஆனந்தத்துக்கு ஹேதுவாக ஆனந்தமயன் சொல்லப்படுகிறபடியால் என்பது ஸூத்ரத்தின் பொருள். ஆனந்தத்தைக் கொடுக்கிறவன் ஆநந்தத்தைப் பெற்றுக்கொள்ளுகிறவனாயிருக்க முடியாது. இதற்கு விஷயவாக்யம் "ஏஷ ஹ்யேவாநந்த³யாதி" (தை ஆ-7-1) என்பது.

மாந்த்ரவர்ணிகமேவ ச கீ³யதே ॥௧௬॥

பூர்வபக்ஷி கேட்கிறான்.— ப்ரம்மத்தை அன்றோ அளவில்லாத ஆனந்தமுடையவன் என்று ச்ருதி "ஸ ஏகோ ப்³ரஹ்மண ஆநந்த³:" என்றும், "ஆநந்த³ம் ப்³ரஹ்மணோ வித்³வாந்" என்றும் சொல்லுகிறது. ஆனந்தமயன் இவ்விதமான ஆனந்தம் உடையவன் என்பது எப்படி ஏற்படும்— என்று. ப்ரம்மத்தைத் தான் ஆனந்தமயன் என்று சொல்லுகிறது என்பது பதில். "ஸத்யம் ஜ்ஞாநம்" என்ற மந்திரத்தில் சொல்லப்பட்ட ப்ரம்மம்தான் ஆனந்தமயன் என்று சொல்லப்படுகிறது என்பது ஸூத்ரத்தின் அர்த்தம். இந்தஸூத்ரத்திலும் முன்ஸூத்ரத்திலுமுள்ள 'ச' என்கிறசொற்கள், இந்த ஸூத்ரங்களிலும் முதல் ஸூத்ரத்திலும் சொல்லப்பட்ட ஹேதுக்களைச்சேர்க்கின்றன. இரண்டாவது ஸூத்ரம் முதல்ஸூத்ரத்துக்குச் சேஷமாயிருப்பதாலே அதில் 'ச' என்கிறசொல் இல்லை.

நேதரோऽநுபபத்தே: ॥௧௭॥

முதல் நாலு ஸூத்ரங்களாலே ஆனந்தமயன் பத்த ஜீவன் அன்று என்று தீர்மானிக்கப்பட்டது. அவன் முக்த ஜீவனாக இருக்கக்கூடாதோ என்கிற சங்கைமேல் நான்கு ஸூத்ரங்களாலே தீர்க்கப்படுகிறது. ஆனந்தமயன் அவனைக் காட்டிலும் வேறான முக்தனான ஜீவன் அன்று; ஆனந்தமயனைப்பற்றிச் சொல்லும் தர்மங்கள் முக்த ஜீவனிடத்தில் பொருந்தமாட்டாவாகையால். அந்த தர்மங்களாவன:— விபச்சித்தாயிருப்பது, ஸங்கல்பத்தாலேயே ஸ்ருஷ்டிபண்ணுவது, பயத்துக்கும் அபயத்துக்கும் ஹேதுவாயிருப்பது, வாயுமுதலானவர்களை நியமனம் பண்ணுவது, மற்றவர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பது முதலானவைகள்.

பேதவ்யபதேசாச்ச ॥௧௮॥

பூர்வபக்ஷி கேட்கிறான்— சொன்ன தர்மங்கள் முக்த ஜீவனுக்குமுண்டு. ப்ரக்ருதி ஸம்பந்தம் போன ஜீவன்தான் ப்ரம்மம். இதை 'தத்தர்ஶீ' என்கிற வாக்யம் காட்டுகிறது— என்று. மேல் மூன்று ஸூத்ரங்கள் இந்த தர்மங்கள் ஜீவனிடத்தில் இல்லையென்று காட்டுகின்றன. ஜீவனைக் காட்டிலும் ஆநந்தமயனுக்குப்பேதஞ் சொல்லப்படுகிறபடியால் என்பது ஸூத்ரத்தின் அர்த்தம். இதைச் சொல்லுகிற வாக்யம் "வா தஸ்மாத் விஜ்ஞாநமயாத் அந்யோऽந்தர ஆத்மாऽநந்தமய:"(தை-ஆ-5-2)என்பது. தத்தர்ஶீ என்கிற வாக்யம் ஸ்வரூபஐக்யத்தைச் சொல்லவில்லை என்று ஸ்ரீபாஷ்யத்தில் நிரூபணம் செய்யப்படுகிறது. இது இரண்டாவது அநுபந்தத்தில் சுருக்கமாய்க்காட்டப்படுகிறது. எப்படி ஆனந்தமயன் பத்த ஜீவன் அன்றோ, அப்படியே முக்த ஜீவனும் அன்று. சொன்ன வாக்யத்தில் பத்தன் அவஸ்தையையோ முக்தன் அவஸ்தையையோ பற்றிப் பேச்சு இல்லை. ஸ்வரூபம்தான் சொல்லப்படுகிறது. இதைக் காட்டுவதற்காகவே ஸூத்ரம் முக்தன் விஷயமாயிருந்தாலும், ஸ்ரீபாஷ்யம் "உபயாவஸ்தாஸ்வரூபமாத்ரநி:" என்று சேர்த்துச்சொல்லுகிறது.

காஶாவு நாநுஶா நாவெகூஷா||தகூ||

ஸங்கல்பத்தாலே ஸ்ருஷ்டி முக்த ஜீவனாலே முடியாது. என் னென்றால், * கரணகளேபர ரூபமான அசித் ஸம்ஸர்க்கம் ஸ்ருஷ்டி காலத்தில் அவனுக்கு இல்லை. ஆனந்தமயனுக்கோ அவைகளின் ஸம்ஸர்க்கம் வேண்டியதில்லை. ஸூத்ரார்த்தம்— ஆனந்தமயனு டைய ஸங்கல்பத்தாலேயே ஸ்ருஷ்டி உண்டாகிறது. அவனுக்கு அநுமானத்தால் ஸித்திக்கிற கரணகளேபரரூபமான அசேதநத் தின் ஸம்பந்தம் வேண்டியதில்லை. இது பத்த ஜீவனாலே எப்படி முடியாதோ, அப்படியே முக்த ஜீவனாலும் முடியாதென்று காட்டு வதற்காக "ஜீவாநுநு" என்று ஸ்ரீபாஷ்யத்தில் பொதுவாய்ச் சொல்லியிருக்கிறது.

சுஸ்ரீஷஸ்ஸு வ தஜெஷூாமம் ஶாஹூ ||ஓ०||

ஆனந்தமயனை அடைந்தபோது ஜீவனுக்கு ஆனந்தத்தின் ப்ராப்தியைச் சாஸ்த்ரம் சொல்லுகிறது. இதைச் சொல்லுகிற வாக்யம்— "ரஸொ வெ ஸஃ.ரஸம்ஹெஹ்யவாயம் லப்ஸா ரூநந்தீ ஹவதி" (தை-ஆன-7-1) என்பது. முக்தனுக்கு அளவில்லாத ஆனந்தம் வருவது ஆனந்தமயனை அடைந்த பிறகுதான். அது அவனுக்கு இயற்கையாக இல்லை. அது ஆனந்தமயன் கொடுத்து வருகிறது. ஆனந்தமயனுக்கோ இயற்கையாகவே இருக்கிறது. ஆகையால் ஆனந்தமயன் முக்த ஜீவன் அன்று.

அவ— ஸங்கதியுடன் அதிகரணத்தின் அர்த்தத்தைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறார்:—

ஶாவெஷா யஷுஷ்ஷா ஹவதூ தஷுஷிதெ ஸா
வுநஜீவதமித ஸஷிஷுாயாம் ஹி ஶவெஷிஸிரூ
வஸி ஸதஸஸு ஜீவெகூஶஃகதுஃ । ஐதஹாஷுஜி
ஹாநம் வுஶஷிதூஷெ வுஸுதொ விஶுகூதூா ஜீவ
ஸுாவுஷுராதூா நிரவயிகஶஹாநஷுயூஃ ஷூாவுதெ
zது || ||ருஅ||

ஈக்ஷணம் என்ற பதத்துக்கு முக்யமான ஈக்ஷணம் என்பதுஇஷ் டமான பொருளானால்,அது ஜீவதத்வத்தில் இருக்கலாம்.அதற்கு

* கரணம் – இந்திரியம், களேபரம் – சரீரம்.

அவன் தகுந்தவன். ஸத்தைப்பற்றிச் சொல்லி ஸத்வித்யாப்ரகரணத்தில் மேலே "தத்த்வமஸி" என்று மூன்று பதங்களாலே அந்த ஸத்தும் ஜீவனும் ஒன்று என்பது சொல்லப்படுகிறது. இப்படி ஊஹித்து பூர்வபக்ஷி ஜகத்காரணம் ஜீவன் என்று வாதிப்பதைத் தூஷிப்பதற்காக, கீழே சொல்லப்பட்ட ஜகத்காரணம், ஜீவனுக்கும் ஆத்மாவாயும் அளவில்லாத ஆனந்தத்தையுடையவனாயும் இருக்கிறவன் என்று இந்த அதிகரணத்தில் ஸ்தாபிக்கப்படுகிறது.

குறிப்பு— சுலோகத்தில் பூர்வபக்ஷத்துக்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன— ஜீவனுக்கு முக்யேக்ஷணம் கூடுமாகையாலே ஜகத்காரணம் பத்தஜீவனாக இருக்கலாம் என்பதும், "தத்த்வமஸி" என்றுசொல்வதாலே அவன் முக்த ஜீவனாக இருக்கலாமென்பதும். ஜகத்காரணம் ஆனந்தமயன்என்பதாலே அவன் பத்த ஜீவன் அன்று என்றும், ஜீவனுக்கும் ஆத்மா என்பதாலே அவன் முக்த ஜீவன் அன்று என்றும் பதில் சொல்லப்படுகிறது. அளவில்லாத ஆனந்தமுடையவன் என்பது முதல் ஸூத்ரத்தின் அர்த்தம். ஜீவனுக்கும் ஆத்மா என்பது ஆறுவது ஸூத்ரத்தின் அர்த்தம். (58)

அவ:— பூர்வபக்ஷி சொல்லும் ஒரு யுக்திக்குப் பதில் சொல்லுகிறார்:—

[illegible]

மயட் என்ற ப்ரத்யயம் முதல் பர்யாயத்தில் விகாரம் என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறது என்பது காணப்படுகிறது. ஆகையால், ஆனந்தமயன் என்கிற கடைசிப்பதத்திலும் 'மய' என்பது அந்த அர்த்தத்தையே சொல்லவேண்டும். இது பூர்வபக்ஷியின் வாதம். இது தகுந்ததன்று. ஏன் என்றால், நடுப்பர்யாயங்களில் இந்த அர்த்தம் விடப்படுகிறது. மயட் என்ற விக்ருதி மிகுதியாயிருப்பதையே சொல்லுகிறது. ஆனந்தமயனைக் காட்டிலும்

வேறு உயர்ந்தவன் இல்லை. ஆகையால் விகாரம் என்ற அர்த்தம் பொருந்தாது. ஆனந்தம் மிகுதியாயிருப்பதற்கு எல்லையானது, ஆனந்தமீமாம்ஸையில் சொல்லப்பட்ட மற்றவர்களின் ஆநந்தம் அல்பமாயிருப்பதாலே ஏற்படுகிறது. ஆனந்தமயன் என்கிற சொல்லால் ஜகத்காரணமான வஸ்துவில் துக்கம் கொஞ்சம் இருக்கிறது என்பது ஏற்படாது. ஏனென்றால், மற்றவர்களுடைய துக்கத்தைப் போக்குகிறவனும் எல்லாரையும் நியமனம் பண்ணுகிறவனுமான அவனிடத்தில் துக்கமிருப்பது விருத்தம்.

குறிப்பு— (1) ஆனந்தவல்லியில் ஐந்து பர்யாயங்களில் அந்நரஸமயன், ப்ராணமயன், மனோமயன், விஜ்ஞானமயன், ஆநந்தமயன் என்று ஐந்து பதங்கள் வரிசையாய் இருக்கின்றன. அந்நரஸமயன் என்கிற முதல் பதத்தில் 'மய' என்கிற விகுதிக்கு விகாரம் அர்த்தம் என்று எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. உடம்பு அன்னத்தாலும் ரஸத்தாலும் உண்டாகிறது. ஆகையால், கடைசிப் பதமான ஆனந்தமயத்திலும் அந்த விகுதிக்கு அதே பொருள்கொள்ளவேண்டும். அப்போது ஆனந்தமயன் என்கிற பதத்துக்குக் குறைந்தும் பெருகியுமிருக்கும் ஆனந்தத்தையுடையவன் என்பது பொருளாகும். இவ்விதமான ஆனந்தத்தையுடையவன் ஜீவன்தான். இது பூர்வபக்ஷம். இது கூடாது; ஏன் என்றால், நடுவிலுள்ள ப்ராணமயன், மனோமயன், என்கிற பதங்களின் விகுதிகளுக்கு இந்த அர்த்தம் பொருந்தாது. அந்தப் பதங்களுக்குப் ப்ராணன், மனது என்பது தான் பொருள்.

இரண்டாவது தூஷணம் 'மய' என்கிற விகுதி மிகுதி என்கிற அர்த்தத்திலும் வருகிறது. மூன்றாவது தூஷணம்— ஆனந்தமயனுக்கு மேற்பட்ட ஆனந்தமுள்ளவனிருந்தால், ஆனந்தமயனுடைய ஆனந்தம் குறைந்தது என்றும் மயட் என்கிற விகுதிக்கு விகாரம் அர்த்தம் என்றும் சொல்லலாம். அவனுக்கு மேற்பட்ட ஆனந்தமுள்ளவன் இல்லையென்று ஆனந்த மீமாம்ஸை காட்டுகிறது.

(2) பூர்வபக்ஷி சொல்லுகிறான்—'மயட்' என்கிற விகுதிக்கு மிகுதி அர்த்தமானாலும் உங்கள் இஷ்டம் ஸித்திக்காது. ஏன் என்றால், ஆனந்தம் மிகுந்தது என்றால், துக்கம் குறைந்திருக்கிறது என்று ஏற்படும். துக்கத்துடன் சேர்ந்த ஆனந்தமுள்ள

வன் ஜீவன்—என்று. இதற்குப் பதில்— ஆநந்தமயனுடைய ஆநந்தம் அதிகம் என்றால், எவனுடைய ஆனந்தத்தைக்காட்டிலும் அதிகம் என்று கேள்வி உண்டாகிறதோ; அவனுடைய ஆநந்தம்தான் எல்லை. ஆனந்த மீமாம்ஸையில் சதுர்முகப் பிரம்மாவின் ஆநந்தத்துக்கு நூறு மடங்கு ப்ரம்மத்தின் ஓர் ஆனந்தம் என்று சொலலியிருக்கிறது. சதுர்கமுகப் பிரம்மாவின் ஆநந்தம் எல்லை என்று ஏற்படுகிறது.

(3) பூர்வபக்ஷி மறுபடியும் கேட்கிறான்— ப்ரம்மத்தினிடத்திலேயே ஆனந்தம் அதிகம், துக்கம் கொஞ்சம் என்று ஏன் சொல்லக்கூடாது—என்று. இதற்குப் பதில்— ஆநந்தமயன் ஸம்ஸார பயம் போவதை ஆசைப்படுகிறவனுக்கு அபயத்தைக் கொடுக்கிறான் என்பது இதே உபநிஷத்தில் சொல்லப்படுகிறது. ஆகையால் அவனுக்குத் துக்கமிருக்கக்கூடாது. துக்கமுள்ளவன் மற்றவர்கள் துக்கத்தைப் போக்கத்தகுந்தவன் அன்று. சிறைச் சாலையிலிருக்கிறவன் அதிலிருக்கும் மற்றவர்களை விடுவிக்கமுடியுமோ? மேலும் "ஹீஷாஸ்மாத் வாத꞉ பவதே" (தை-ஆன-8-1) என்று வாயு முதலானவர்களை நியமனம் பண்ணுகிறான் என்பது சொல்லப்படுகிறது. அவனை நியமனம் பண்ணுகிறவன் ஒருவனுமில்லை. ஒருவனுக்கு உட்பட்டவனுக்குத்தான் பயமும் துக்கமும் உண்டு. ஆகையால், ஆனந்தமயனிடத்தில் துக்ககந்தமே இல்லை.

(4) "ஆநந்தமய꞉" என்கிற சொல்லின்மேல் விகாரம் என்கிற அர்த்தத்தில் மயட் வருவதற்கு வியாகரணத்தில் ப்ரமாணமில்லை. "மயட்வைதயோர்பாஷாயாமபக்ஷ்யாச்சாதநயோ꞉" (விகாரம் அவயவம் என்கிற இந்த இரண்டு அர்த்தங்களில் மயட் விகல்பமாக லோகத்தில் வரும்) என்று சொல்லி "நித்யம் வ்ருத்தசராதிப்ய꞉"(*வ்ருத்தமான சொற்களிலும் சரம் முதலான சொற்களிலும் இந்த மயட் ப்ரத்யயம் நித்யமாய்வரும்) என்று சொல்லியிருக்கிறது. ஆநந்தம் என்கிற சொல்லில் முதல் ஸ்வரம் விருத்தியாயிருப்பதினால் இந்த ஸூத்ரத்தால் ஆநந்தமயன் என்கிற சொல் ஏற்படும். ஆனால் முதல் ஸூத்ரத்தில்

* எந்தப் பதத்தின் முதல் உயிரெழுத்து, வ்ருத்தி (ஆ ஐ ஔ) ஆகவிருக்கிறதோ, அதுக்கு வ்ருத்தம் என்று பெயர்.

இருக்கும் பாஷாயாம் (லோகத்தில்) என்கிற சொல்லை இந்த ஸூத்ரத்திலும் சேர்த்துக்கொள்ள வேண்டியபடியால் ஆநந்தமயன் என்கிற சொல் வேதத்தில் விகாரார்த்தத்தில் ஏற்படாது. வேதத்துக்கு "த்வ்யச்சந்தஸி" என்கிற ஸூத்ரமிருக்கிறது. அதின் பொருள்— இரண்டு அச்சுக்கள் உள்ள சொற்களுக்கு விகாரம் என்கிற அர்த்தத்தில் மயட் வரும் வேதத்தில் என்பது. இதுவும் வரமாட்டாது. ஆனந்த என்கிற பதம் மூன்று அச்சுக்களுள்ளது. ஆகையால் வேதத்தில் விகாரார்த்தத்தில் ஆநந்தமயன் என்கிற பதம் ஏற்படாது. (59)

அவ:— பூர்வபக்ஷி சொல்லும் வேறு சில தூஷணங்களுக்கும் பதில் சொல்லுகிறார்:—

ஆத்மா தஸ்யைஷ ஏவேத்யபிஹிதமிதராத்மத்வநிஷே-
த்ஸ்யைவ வக்தும் ஶாரீரோக்திஸ் தஸ்மிந்நிகிலதநு-
தயா ஸ்யாந்ந ஸங்கோசவ்ருத்தி: । ஶாஸ்யத்வம் ததநுக்ர-
ஹேணேதி விஶேஷஸ்தஸ்ய ஸாத்யத்வமாத்ரம் ப்ராப்யே
ஸித்தே ப்ராப்திரூபா பரமிஹ உபஸங்க்ராந்திராநந்த-
ஸிந்தோ: ॥ ॥௬௦॥

"தஸ்யைஷஏவ ஶாரீர ஆத்மா" (தை. ஆ. 6. 1) என்று சொன்னது ஆநந்தமயனுக்கு வேறு ஆத்மா இல்லையென்பதைச்சொல்வதற்காக. "ஶாரீர:" என்று சொல்வது எல்லாவற்றையும் உடம்பாகவுடையவனாகையாலே ஸங்கோசம் இல்லாமல் அவனுக்குமிகவும் தகுந்தது. "ஏஷ ஶாம்யஹ்ஞாய"(தை. நா. 48) என்பது விபுவானவன் என்னிடத்தில் ப்ரஸாதமுள்ளவனாய் இருக்கவேண்டும் என்பதைச் சொல்லுகிறது. ஏன் என்றால் அர்த்தத்தை அந்தந்த இடத்துக்குத் தகுந்தபடி பண்ணவேண்டும். "ஆநந்தமயமாத்மாநமுபஸங்க்ரம்ய" (தை. ப்ரு. 10. 5) என்பது ப்ரம்மத்தை உபாஸிக்கிறவனுக்குக் கிடைக்கவேண்டிய ஆநந்த ஸமுத்ரமான அவனுடைய ப்ராப்தியைச் சொல்லுகிறது.

குறிப்பு— (1) இந்த உபநிஷத்தில் "தஸ்யைஷஏவ ஶாரீர ஆத்மா । ய: பூர்வஸ்ய" என்கிற வாக்யமிருக்கிறது.

இதன் பொருள்— எவன் முன்னால் சொல்லப்பட்ட கூட்டத்துக்கு ஆத்மாவாக இருக்கிறானோ, அவனே அவனுக்கு (ஆனந்தமயனுக்கு) சரீரஸம்பந்தியான ஆத்மா என்பது. ஆனந்தமயனுக்கு வேறொருவன் ஆத்மா என்பது விருத்தம். இது பூர்வபக்ஷியின் தூஷணம். இது தூஷணம் அன்று. விஜ்ஞானமயனுடன் முடிகிற கூட்டம் முன்னாலே சொல்லப்பட்டது. அதற்கு ஆநந்தமயன் ஆத்மா என்று சொல்லப்படுகிறது. இதனால் ஆநந்தமயன் தனக்கே ஆத்மா என்று பலிக்கிறது. இதனால் அவனுக்கு வேறு ஆத்மா கிடையாது என்பது ஸித்தம்.

(2) “𑌶𑌾𑌰𑍀𑌰 𑌆𑌤𑍍𑌮𑌾” என்கிறவிடத்தில் 𑌶𑌾𑌰𑍀𑌰 என்பதற்குச் சரீரமுடையவன் என்பது பொருள். சரீரம் கர்மத்தின் பலனை அநுபவிப்பதற்காக வருகிறது. இவ்விதமான சரீரமுடையவன் ஜீவன். ஆகையால் ஆனந்தமயன் ஜீவன் என்று ஏற்படும் என்பது இரண்டாவது தூஷணம். இது ஏறாது. ஏன் என்றால், ஆநந்தமயன் எல்லாவற்றுக்கும் ஆத்மாவாகையால் எல்லாம் அவனுக்குச் சரீரம். ஆகையால் அவனை ‘சாரீர:’ என்று சொன்னதில் ஒரு தோஷமுமில்லை. இன்னது சரீரம் என்று காட்டாமையால் எல்லாம் அவன் சரீரம் என்று கொள்ளவேண்டும்.

(3) 𑌅𑌨𑍍𑌨𑌮𑌯𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌯𑌮𑌨𑍋𑌮𑌯𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑌾 𑌮𑍇 𑌶𑍁𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌮𑍍” என்பது நாராயணத்தில் 48-வது அநுவாகத்தில் இருக்கிறது. ஸந்யாஸம் செய்யப்போகிறவன் ஹோமம் செய்வதற்கு வேண்டிய மந்த்ரங்களில் ஒரு மந்த்ரத்தில் இது இருக்கிறது. ஹோமம் பண்ணுகிறவன், ஸ்வயம்ப்ரகாசனான நான் ரஜஸ் தமஸ் என்கிற குணங்களால் தொடப்படாமல் பாபமில்லாமல் ஆகவேண்டும் என்று ப்ரார்த்திக்கிறான். இந்த வாக்யத்தைக்கொண்டு பூர்வபக்ஷி ஆநந்தமயனிடத்தில் தோஷமிருக்கிறதாகவும் அது போகவேண்டும் என்று ப்ரார்த்திக்கப்படுகிறதாகவும் அர்த்தம் பண்ணித் தூஷிக்கிறான். இந்த இடத்துக்கு அது பொருத்தமான அர்த்தம் அன்று. சரியான அர்த்தம்—நான் செய்கிற பக்தியாலோ ப்ரபத்தியாலோ ஆநந்தமயன் ஸந்தோஷப்பட்டு என்னிடத்தில் ப்ரஸாதமுள்ளவனாய் இருக்கவேண்டும்—என்பது.

(4) "ஆநந்தமயோ த்மாநமுபஸங்க்ராமதி" என்பது ப்ருகுவல்லியில் கடைசியில் இருக்கிறது. உபாஸனை செய்து முக்தி அடைகிறவன் ஆநந்தமயமான ஆத்மாவை அடைந்து (உபஸங்க்ராமதி)ஸாமகானம்பண்ணிக்கொண்டிருக்கிறான் என்று சொல்லுகிறது. இதற்குப் பூர்வபக்ஷி சொல்லும் தூஷணம்—பரமாத்மாவினிடத்தில் ஜீவன் எப்போதுமிருக்கிறானே. அவனை ஜீவன் புதிதாய் அடைவது எப்படி-என்று. இதற்குப்பதில்-இதுவரையில் உபாஸிக்கிறவனுக்குப் பரமாத்மாவின் அநுபவம் இல்லாமலிருந்து இப்போது இந்தப்பிரகிருதியில் அது உண்டாகிறபடியால் அவனை ஜீவன் அடைகிறான் என்று சொல்லுவதில் ஒரு விரோதமுமில்லை. வேறுவிதமாயும் பொருள் சொல்லலாம். நம்முடைய ஸித்தாந்தப்படி முக்தியை அடைகிறவன் வைகுந்தம் என்று சொல்லப்படுகிற ஒரு தேசத்துக்குப் போய் பரமாத்மாவைக்கிட்டி அவனை அநுபவிக்கிறான்.இப்படி அவனைக்கிட்டுவதை "உபஸங்க்ராமதி" என்று சொல்லுகிறது. (60)

அவ:— ஆநந்தமயன் ப்ரம்மம் அன்று, புச்சமே ப்ரம்மம் என்கிற அத்வைதியின் வாதத்தைத் தூஷிக்கிறார்—

நிஷேதோ ஹ்யஸ்தி ஸிரஸ்ஸோ நஹி பவதி ஸிரஃபக்ஷ
பக்ஷாதி கிஞ்சித்தஸாக பக்ஷம் ப்ரதிஷ்டேத்யாதி தஸிஹ
பரம் ப்ரஹ்ம ஹாதீதி பெள ! பொஷா பக்ஷகாகா
ஷ்யயுக்தி க்யஸிதராணா நாஹோ நூத க்லுப்தம் ப்ரஹ்மணோ த்
ப்ரதிஷ்டாபவநஸிதராயாஸ தாவ்யாவ நாய ॥ ॥ கூக ॥

ப்ரம்மத்துக்கு உடம்பில்லை; அவயவங்களுமில்லை. ப்ரம்மத்தை தலை, பக்ஷங்கள், உடல் புச்சம் ஆகிய அவயவங்கள் உள்ளதாகச் சொல்லுவது கூடாது. ஆதலால் "ப்ரஹ்ம புச்சம் ப்ரதிஷ்டா" என்று சொல்லப்பட்டது பரம் ப்ரம்மம் என்று தோன்றுகிறது. இது பூர்வபக்ஷம். இது சரியன்று. ப்ரம்மத்தைப் புச்சமாக ஒப்புக்கொள்ளுவதானால் கல்பிக்கப்பட்ட மற்றவைகளையும் ஏன் ஒப்புக்கொள்ளக்கூடாது? ப்ரம்மம் தன்னையே ஆதாரமாகவுள்ளது என்று சொன்னது, வேறொருவனும் அவனுக்கு ஆதாரமில்லையென்று காட்டுவதற்காக.

(1) குறிப்பு— உபநிஷத்தில் "தஸ்ய ப்ரியமேவ சிர: மோதோ தக்ஷிண: பக்ஷ:। ப்ரமோத உத்தர: பக்ஷ:। ஆனந்த ஆத்மா। ப்ரஹ்ம புச்சம் ப்ரதிஷ்டா" என்று வாக்யமிருக்கிறது. ஆத்மா என்பது உடல் (மத்யகாயம்). தஸ்ய என்பதற்கு ஆனந்தமயஸ்ய என்று அர்த்தம்.

(2) இந்த வாக்யங்களைக்கொண்டு அத்வைதி ஆநந்தமயன் வேறு, ப்ரம்மம் வேறு என்று சொல்லுகிறான். அதற்கு அவன் சொல்லும் காரணங்களும், அவைகளின் தூஷணங்களும்:-தஸ்ய(ஆனந்தமயஸ்ய)புச்சம் என்பதில் ஆறுவதுவேற்றுமை ஸம்பந்தத்தைச் சொல்லுகிறது. ஸம்பந்தத்துக்கு இருவர் வேண்டும். ஆகையால்ஆநந்தமயன் வேறு, ப்ரம்மம்வேறு. இதுபூர்பக்ஷி சொல்லும் முதல் ஹேது. இதற்குத் தூஷணம்- "ப்ரஹ்மவிதாப்னோதி பரம்" என்னும் விதிவாக்யத்தில் சொல்லப்பட்ட ப்ரம்மத்தை மேல் மந்த்ரத்தாலே எல்லாவற்றைக் காட்டிலும் வேறு என்று காட்டி, 'தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந:' என்னும் வாக்யத்தாலே அதை ஆத்மா என்று சொல்லி, அப்படி ஆத்மாவாயிருக்கிறவன் எவன் என்று விசாரித்து, 'அன்யோऽந்தர ஆத்மாऽऽநந்தமய:' என்று ஆனந்தவல்லி முடிக்கிறது. ஆகையால் ஆநந்தமயன்தான் ப்ரம்மம்; அவனைக் காட்டிலும் வேறு அன்று. ஆறுவதுவேற்றுமைக்கு என்ன கதி என்றால், தலைகைகள் முதலான கூட்டத்தைக் காட்டிலும் அதில் ஒன்றான கால்கள் வேறானபடியால் அந்த ஆறும்வேற்றுமை தகுந்ததுதான். ஆனந்தமயனைக் காட்டிலும் ப்ரம்மம் வேறானால் "தஸ்மாத்வா ஏதஸ்மாத் ஆநந்தமயாதன்யோऽந்தர ஆத்மா ப்ரஹ்ம" என்று மேலே இருக்கவேண்டும். அப்படியில்லை.

(3) பூர்வபக்ஷியின் இரண்டாவது ஹேது— ஆநந்தமயனைச் சொல்லி, மேல் அநுவாகத்தாலே ப்ரம்மஜ்ஞாநமுள்ளவனை 'ஸந்' (இருக்கிறவன்) என்றும், அந்த ஜ்ஞாநமில்லாதவனை 'அஸந்' (இல்லாதவன்) என்றும் சொல்லியிருக்கிறதே, ஆநந்தமயனைச் சொல்லவில்லையே என்பது. தூஷணம்— இரண்டாவது மூன்றாவது நான்காவது பர்யாயங்களில் புச்சங்களாகச் சொல்லப்பட்ட ப்ருதிவீ, அதர்வாங்கிரஸ:, மஹ: இவைகள் அடுத்த சுலோகங்

களில் ஸ்தோத்ரம் பண்ணப்படவில்லை. ஸ்தோத்ரம் பண்ணப்பட்டவைகள் ப்ராணனும், மனதும், விஜ்ஞாநமும். விஜ்ஞாநம்—ஜீவாத்மா. அதுபோல ஆநந்தமயனைச் சொல்லும் வாக்யத்திற்கு மேலிருக்கும் பூர்வபக்ஷி காட்டும் வாக்யம் புச்சத்தை ஸ்தோத்ரம் பண்ணவில்லை. ஆநந்தமயனையே ஸ்தோத்ரம் பண்ணுகிறது. அவனை ப்ரம்மம் என்னும் பதத்தினாலே ஸ்தோத்ரம் பண்ணுவதால், ஆநந்தமயனும் ப்ரம்மமும் ஒன்றுதான் என்பது ஸித்தம்.

(4) இந்தத் தூஷணத்துக்குப் பூர்வபக்ஷி பதில் சொல்லுகிறான்- ப்ரம்மத்தைஅறியாதவன் இல்லாதவன் என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும்? உம்முடைய பக்ஷத்தில் ஆநந்தமயன்தானே ப்ரம்மம். ஆனந்தம் என்பது எல்லாருக்கும் தெரியுமே— என்று. இதற்குப் பதில்— ஆனந்தமயனை ப்ரியம், மோதம், ப்ரமோதம், ஆனந்தம் என்று அறிந்தாலும் அவன் அளவில்லாத ஆனந்தம் உள்ளவன் என்று தெரியாது. வேதத்தால் அப்படி அறிந்தவனை ஸ்தோத்ரம் பண்ணுவதும், அறியாதவனை நிந்திப்பதும் தகுந்தவைகள்தான். இந்தப் பதிலைப் பூர்வபக்ஷியும் ஒப்புக்கொள்ளவேண்டும். புச்சமான ப்ரம்மம் அளவில்லாத ஆனந்தமென்று அறியப்படாதது என்றே அவனும் சொல்லவேண்டும்.

(5) பூர்வபக்ஷியின் மூன்றாவது ஹேது— ப்ரம்மத்துக்குத் தலை கைகள் கால்கள், உடல் ஆகிய அவயவங்கள் இல்லையே. ஆனந்தமயனுக்கோ அவைகள் சொல்லப்படுகின்றன. எப்படி ப்ரம்மம் ஆனந்தமயனாயிருக்கக் கூடும்? என்பது.

பதில் கேள்வி— உன் மதத்திலும் ப்ரம்மத்துக்குப் புச்சமும் (கால்களும்) இல்லையே?

அத்வைதி— ப்ரம்மத்துக்குக் கால்கள் இல்லை என்பது உண்மையே. ஜகத்திருக்கிறது என்னும் ப்ரமத்துக்கு ப்ரம்மம் அதிஷ்டானம். இதைக் காட்டுவதற்காக ப்ரம்மத்தைப் புச்சம் என்று சொல்லுகிறது. இது ரூபணம் மாத்ரம்.

பதில்— ஆனந்தமயனுக்கும் தலை முதலானவைகள் இருப்பது ரூபணம் மாத்ரம். "ஸத்யம் ஜ்ஞாநம்" என்னும் வாக்யத்தால் காட்டப்பட்ட ப்ரம்மம் ஸுகமல்லாத வஸ்துக்களைக் காட்டிலும் வேறு, அது அளவில்லாத ஆனந்தம் என்று காட்டுவது இந்த ரூபணத்தின் ப்ரயோஜனம்.

(6) ஆனந்தமயனே ப்ரம்மம் என்னும் ஸித்தாந்தத்துக்கு இன்னொரு ஹேதுவுமிருக்கிறது. 'ஸோऽகாமயத' என்னும் காரணவாக்யத்தில் 'ஸ:' என்னும் பும்லிங்கபதத்தால் ஆனந்தமயன் காட்டப்படுகிறான். அவனை ஜகத்காரணம் என்று சொல்லுவதாலும், லக்ஷணவாக்யத்தால் ப்ரம்மம் ஜகத்காரணம் என்று அறியப்படுவதாலும் ஆனந்தமயனே ப்ரம்மம்.

அத்வைதி— 'ஸ:' என்னும் பதம் ப்ரம்மத்தையே காட்டுகிறது. பும்லிங்கபதம் 'தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந:' என்னும் வாக்யத்திலிருக்கும் ஆத்மா என்னும் பதத்தைக்கொண்டு ஏற்படுகிறது.

பதில்—நீ சொல்லும் ஆத்மா என்னும் பதம் தூரத்திலிருக்கிறது. கிட்ட இருக்கும் ஆனந்தமயனையே அது காட்டுகிறது.

அத்வைதி- நீர் காட்டும் வாக்யத்தைக் காட்டிலும் 'தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா' என்னும் வாக்யம் கிட்ட இருப்பதால் அதிலுள்ள ஆத்மசப்தத்தை 'ஸ:' என்னும் பதம் காட்டுகிறது.

பதில்— இந்த ஆத்மா என்னும் பதம் கீழ் எல்லாப் பர்யாயங்களிலும் இருக்கிறபடியால் இந்தப் பர்யாயத்துடனேயே சேர்ந்தது அன்று. ஆகையால் அது ப்ரதானமன்று. ஆனந்தமயனே ப்ரதானன். அவனைத்தான் பிரதானமாயும் ப்ரகிருதமாயும் இருக்கும் விஷயத்தைக்காட்டுகிற 'ஸ:'என்கிற பதம் நினைவுக்குக் கொண்டு வருகிறது.

(7) ஆனந்தமயனே ப்ரம்மம் என்பதற்கு இன்னும் ஒரு தெளிவான ஹேதுவிருக்கிறது- ப்ருகுவல்லியில் 'ஆநந்தம் ப்ரஹ்மேதி வ்யஜாநாத்' (ஆநந்தத்தை ப்ரம்மம் என்று அறிந்தான்) என்று ஒரு வாக்யம் இருக்கிறது. ஆனந்தம் என்னும் பதத்திற்கு ஆனந்தமயன் என்றே பொருள். இதற்கு ப்ரமாணம்— "விஜ்ஞாநம் ப்ரஹ்மேதி வ்யஜாநாத், ஆநந்தோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத்" என்னும் வாக்யங்களும், "விஜ்ஞாநமயமாத்மாநமுபஸங்க்ராமதி, ஆநந்தமயமாத்மாநமுபஸங்க்ராமதி" என்னும் வாக்யங்களும். ஸ்தானம் என்னும் ப்ரமாணத்தாலே எப்படி விஜ்ஞானம் விஜ்ஞானமயனோ, அப்படி ஆனந்தமும் ஆனந்தமயன் தான். (61)

அந்தரதிகரணம். (7)

இந்த அதிகரணம் கீழ் அதிகரணத்துக்குச் சேஷமானது. இதில் ஜகத்காரணமான ப்ரம்மம் உபாஸகன் ஹ்ருதயத்திலிருப்பதாகவும், அவனே ஆதித்யனிடத்திலிருப்பதாகவும் சொல்லியிருக்கிறது. அந்தராதித்யவித்யையைச் சொல்லுமிடத்தில் ஆதித்யனிடத்திலிருப்பவனுக்குக் கண்களும் கேசமும் நகங்களுமுள்ள உடம்பிருப்பது சொல்லப்படுகிறது. இவ்விதமான உடம்பையுடையவன் ஜீவன். ஆகையால் கீழ் அதிகரணத்தில் சொல்லப்பட்டவனும் ஜீவன் தான் என்று பூர்வபக்ஷி ஆக்ஷேபிக்க, அதற்குப் பதில் சொல்லி, முன் செய்த தீர்மானத்தை இந்த அதிகரணம் உறுதிப்படுத்துகிறது.

கீழ் அதிகரணத்தில் ஆநந்தமயனை 'ஶாரீர ஆத்மா' என்று சொல்லியிருப்பதாலே அவன் ஜீவன் என்று சொன்னது தூஷிக்கப்பட்டதே. சரீரமுள்ளவனுயிருப்பதைக்கொண்டு மறுபடியும் இங்கே பூர்வபக்ஷம் சொல்லக்கூடுமா? என்றால், அங்கு சொன்ன உடம்புகள் வேறு, இங்கே சொல்லப்பட்ட உடம்பு வேறு. அவைகள் - அன்னரஸமயன் என்று சொல்லப்பட்ட உடம்பு, பிராணன், ஜீவன் ஆகியவைகள். அவைகளில் கண்கள் முதலான அவயவங்கள் இல்லை. இங்கே சொன்ன உடம்பில் அவ்விதமான அவயவங்கள் இருக்கின்றன. அவைகளுக்கும் ப்ரம்மத்துக்கும் ஸம்பந்தங்கள்— *நியாம்யநியாமகபாவமும், சேஷசேஷிபாவமும். இங்கே சொன்ன உடம்புக்கும் ஆதித்யமண்டலபுருஷனுக்கும் ஸம்பந்தம்—உபகரண உபகரணிபாவம்.

அந்தஸ்தத்₃த₄ர்மோபதே₃ஶாத் ॥ ௨௧ ॥

இதற்கு விஷயவாக்யங்கள்—1"ய ஏஷோऽந்தராதி₃த்யே ஹிரண்மய: புருஷோ த்₃ருஶ்யதே ஹிரண்யஶ்மஶ்ருர்ஹி

* நியாம்யம்- ஏவப்பட்டது; நியாமகன் ஏவுகிறவன்; இவைகளின் ஸம்பந்தம் நியாம்யநியாமகபாவம். சேஷன்- ஸொத்து; சேஷி- ஸொத்துக்காரன்; இவர்களுடைய ஸம்பந்தம் – சேஷசேஷிபாவம். உபகரணம்- வேலையைச் செய்வதற்கு வேண்டிய கருவி. அதை உடையவன் உபகரணி. இவர்களுடைய ஸம்பந்தம் உபகரண உபகரணிபாவம்.

1 (சா- 1-6-6) ஸூர்யமண்டலத்துக்குள் தங்கமயமானவனும் தங்க மீசையுள்ளவனும், தங்கமான தலைமயிருள்ளவனும், நகங்களுள்பட முழுவதும் தங்கமுமான எந்தப்புருஷன் (யோகிகளால்) பார்க்கப்படுகிறானோ,

ரண்யெகெஶ ஷூவ்ஹணவாஜுவ_ கூவ ஸுவண:'' * "அயம் ய வஷொஉதாக்ஷிணி வூரா ஷெஊஶ்யதெ'' என்பன. இவைகளிரண்டையும்சேர்த்து விசாரிப்பதற்காக 'ஆஹிதெ' என்றே, 'அதாக்ஷிணி' என்றே சொல்லாமல் 'அஷ:' என்று பொதுவாக ஸூத்ரம் சொல்லுகிறது. ஸூத்ரத்தினர்த்தம்- ஆதித்யனிடத்திலும் கண்ணிலும் இருக்கும் புருஷன் ஜீவனைக் காட்டிலும் வேறானவன், பரமாத்மா; அவனுடைய தர்மங்கள் சொல்லப்படுகிறபடியால்.

ஹெஃவ்யவஷெஶாவ்ரா நூ: ॥ உஉ ॥

ஆதித்யன் முதலான ஜீவன்களைக் காட்டிலும் அவனுக்குப் பேதம் சொல்லுகிறபடியாலும் அவன் அவர்களைக் காட்டிலும் வேறு. அந்தர்யாமி ப்ராம்மணத்தில் 'ய ஆஹிதெ திஷ்டந்' என்று அம்ருதனை அந்தர்யாமி சொல்லப்படுகிறான். அவன் ப்ருதிவி முதலான எல்லாவற்றிலும் இருக்கிறபடியாலும் அம்ருதன் என்று மரணம் முதலான ஸம்ஸாரி தர்மங்களில்லாதவனுகச் சொல்லப்படுகிறபடியாலும். அவன் ஜீவனைக் காட்டிலும் வேறானவன். ஆகையால் ஆதித்யமண்டலத்திலிருக்கிற புருஷன் ஜீவன் அன்று.

அவ:— அதிகரணத்தின் பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் சொல்லுகிறார்—

ஊயிஷ்டாநஜவணொவயவயஸ்ஹா ஶதவ வெயாகுஹ ஶாஂ ஶக்ஷிநாயதஸ்ாதிஶண தந ஹ்ரதாஸீஶாணாஂ வூவாஹ: । தணாக்ஷெயாஷிவா க்ஷிஜநிஃஹிஶா ஶாஸிதா ஸவுவஂஸாஂ நிதிஶ்ரீ ஹ்யுலிஜெ ஶத உதி ஸய ஜதகு வஜெஷவணக: ॥   ॥ ஊஉ ॥

முக்குணமுள்ள சரீரத்திலுள்ள சிலர், மிகவும் உயர்ந்த கணக்கில்லாத புண்யங்களின் கூட்டத்தின் பலத்தாலே இந்த்ரன் முதலியவர்களைப்போல முன்னலே சொல்லிய ஐச்வர்யத்தை

*(சா-1-7-6) எந்தப் புருஷன், கண்ணில் (யோகிகளால்) பார்க்கப்படுகிறானே.

அடைந்து, ஈச்வரர்களாக இருக்கலாம். ப்ரவாஹம்போல் ஒருவர் பின் ஒருவர் வந்து உலகத்தை உண்டுபண்ணலாம். இது சரியன்று. ஆதித்யமண்டலத்தில் இருப்பதாகச் சொல்லப்பட்டவன், கர்மத்தாலே உண்டாகாத திவ்யசரீரத்தையும் பிறப்பையும் மஹிமையையும் உடையவன்; எல்லாரையும் நியமனம் பண்ணுகிறவன்; எப்போதும் ஸ்ரீயுடன் சேர்ந்திருக்கிறவன். ஆகையால் இவனும் "ஸ யஶ்சாயம் வாதித்யே" என்று ஆநந்த வல்லியில் சொல்லப்பட்டவனும் ஒன்று.

குறிப்பு - (1) பூர்வபக்ஷி ஆதித்யமண்டலத்திலிருக்கிற புருஷன் ஜீவன் என்று சொல்லுவதையும், அவன் எப்படி ஜகத்தை ஸ்ருஷ்டிக்கக் கூடும் என்கிற சங்கையையும், அவன் அதைத் தீர்க்கும் ப்ரகாரத்தையும் ச்லோகத்தின் முதல் பாதி (பூர்வார்த்தம்) அநுவாதம் பண்ணுகிறது.

(2) பூர்வபக்ஷி ஆதித்யமண்டலத்திலிருக்கும் புருஷனை ஜீவன் என்று சொல்லுவதற்கு யுக்தி, அவனுடைய சரீரம் கண் முதலான அவயவங்களை உடையது என்பது. இதை ச்லோகம் தூஷிக்கிறது. அது கர்மத்தாலே உண்டானது அன்று என்றும், அவன் அவதாரங்கள் கர்மபலன்களை அநுபவிப்பதற்கு வந்தவைகளல்ல என்றும், அப்படி அவதரிக்கும் ஸமயத்திலும் அவன் பெருமைக்கு ஒரு குறைவுமில்லை என்றும் சொல்லுகிறது. இதற்கு ப்ரமாணம்- 1 'ஸ ஏஷ ஸர்வேப்ய: பாப்மப்ய உதித:", என்பது. 2 "ஸ ஏஷ யே சாமுஷ்மாத் பராஞ்சோ லோகாஸ்தேஷாம் சேஷ்டே தேவகாமாநாம் ச", 3 "ஸ ஏஷ யே சைதஸ்மாதர்வாஞ்சோ லோகாஸ்தேஷாம் சேஷ்டே மநுஷ்யகாமாநாஞ்சேதி" என்று எல்லாரையும் நியமனம் பண்ணுவது அந்த இடத்திலேயே சொல்லப்படுகிறது. (62)

1 (சா—1-6-7) அவன் எல்லாப் பாபங்களிலிருந்தும் மேலே கிளம்பினவன்.

2 (சா- 1- 6- 8.) அந்தப் புருஷன் இந்த உலகத்துக்கு மேலுள்ள உலகங்களையும், தேவர்கள் காமங்களையும் நியமனம் பண்ணுகிறான்.

3 (சா- 1- 7- 6.) அந்தப் புருஷன் இந்த உலகத்துக்குக் கீழுள்ள உலகங்களையும், மனிதர்களின் காமங்களையும் நியமனம் பண்ணுகிறான்.

அவ:— "ஸர்வேப்ய: பாப்மப்ய உதித:" என்கிற வாக்யத்தைக் கொண்டு ஆதித்யமண்டலபுருஷன் ஜீவன் என்று பூர்வபக்ஷி சொல்லுவதை அநுவாதம் பண்ணித் தூஷிக்கிறார்—

ஸர்வேப்ய: பாப்மப்ய உதித இதி வசநாத் ஜீவோ(அ)யம் இதி சேந்ந; ஸர்வஸ்மின்ந் ஸம்பந்தாபாவேப்யேகஸ்மின்ந் விஶேஷப்ரதிஷேதே ஶேஷாப்யநுஜ்ஞாநாத்...

|| ௬ ||

ஆதித்யமண்டலத்தில் இருக்கும் புருஷன் எல்லாப் பாபங்களிலிருந்தும் வெளிக்கிளம்பினவன் என்று இந்த அந்தராதித்ய வித்யை சொல்லுகிறது. * சேர்ந்திருக்கிற வஸ்துக்களுள் ஒன்று இல்லை என்றால், மற்றவையெல்லாம் இருக்கின்றன என்று ஏற்படும். இது ந்யாயம். ஆகையால் பாபங்கள் இல்லை என்றால், புண்யத்தின் ஸம்பந்தம் இருப்பதாக ஏற்படுகிறது. (ஆகையால் அவன் ஜீவன்தான்). இது பூர்வபக்ஷியின் ஆக்ஷேபம். அது அப்படியன்று. ஏன் என்றால், அவன் ஒருவனாலும் நியமனம் பண்ணப்படுகிறவன் அல்லன் என்று வேதம் சொல்லுகிறது. மற்றவர்கள் அடையும் பலன்கள் அவன் வசத்திலிருக்கின்றன. அவன் ஸாதுவான கர்மத்தைச் செய்வதனால் உயர்ந்தவன் ஆகிறதில்லை. புண்யத்திலும் பாபத்தின் லக்ஷணம் இருக்கிறபடியால் பாபமென்கிற சொல்லால் புண்யத்தையும் சொல்லலாம். இதையே 'ந ஸாதுநா ந சாஸாதுநா' ... என்கிற வாக்யம் காட்டுகிறது.

குறிப்பு— (1) ஒருவனை நியமநம் பண்ணுகிறவன் இருந்தால், நியமனம் பண்ணுகிறவன் கட்டளைப்படி நடந்தால் ஸுக்ருதமும், அதைச் செய்யாவிட்டால் துஷ்க்ருதமுமுண்டாகும். பரமாத்மாவை ஒருவனும் நியமனம் பண்ணவில்லை. அவனை 'ஸ்ருஷ்டிஸ்ரஷ்டா' (நாரா- 11-அநுவாகம்) என்று வேதம் சொல்லு

* விஶேஷநிஷேதே ஶேஷாப்யநுஜ்ஞாநம் என்பது நியாயம்.

னுகிறது. தானே தனக்கு ஈச்வரன், அதாவது– வேறு ஈச்வரன் நியந்தா இல்லை என்பது இதன் பொருள். அவனே எல்லா உலகங்களையும் நியமனம் பண்ணுகிறவன் என்று கீழே சொல்லப்பட்டது. ஆகையால் அவன் செய்வது புண்யமும் அன்று, பாபமும் அன்று. இது ஒரு ஹேது.

(2) கீழே அவனே தேவர்களுடைய காமங்களையும், மனிதர்களுடைய காமங்களையும் கொடுக்கிறவன் என்று சொல்லப்பட்டது. அவனுக்குப் பலன் கொடுக்கிறவன் ஒருவனுமில்லை. இது இரண்டாவது ஹேது.

(3) அவன் உலகத்தார் ஸாதுவாக எண்ணுகிற கர்மத்தைச் செய்தால், அவனுக்குப் பெருமையில்லை. ஸாதுவல்லாத கர்மத்தைச் செய்தால் அவனுக்குக் குறைவும் இல்லை என்று *'ஸ ந ஸாயுநா கமணா ஹூயாநொ வவாஸாயுநா கனீயாநு' (கௌஷீ-உ) என்ற வாக்யம் சொல்கிறது. இது மூன்றுவது ஹேது.

(4) புண்யமும் பாபம் என்று சொல்லப்படுகிறது. ஏன் என்றால், பாபத்தின் லக்ஷணமான கநிஷ்டஃலஸாயநகவும் (இஷ்டமல்லாத பலனைக் கொடுப்பது) புண்யத்திலுமிருக்கிறது. ஸ்வர்க்கம் சிலருக்கிஷ்டம், மோக்ஷத்தைவேண்டுகிறவனுக்கு அது அநிஷ்டம் தான். ஆகையால் அதைக்கொடுக்கிற ஜ்யோதிஷ்டோமம்முதலான கர்மங்கள்பாபங்கள்தான். இப்படியே வேதத்தில்ப்ரயோகமிருக்கிறது. *"நைதம் ஸேதுமஹோராத்ரே தரதஃ ....ந ஸுக்ருதம் ந து்ஷ்க்ருதம் ஸவெ பாப்மாநோ தோ நிவதந்தெ" இங்கே வதம் என்பது பரமாத்மாவைச் சொல்லுகிறது. இந்த வாக்யம் ஸுக்ருதத்தையும் துஷ்க்ருதத்தையும் 'பாப்மாநஃ' என்று சொல்லுகிறது. (63)

அவ:— ஆதித்யமண்டலபுருஷனுக்குக் கண் முதலான அவயவங்கள் உள்ள உடம்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறபடியால் அவன் கர்மவச்யனான ஜீவன்—என்று பூர்வபக்ஷி சொன்னதைத் தூஷிக்கிறார்:—

* (சா—8-4-1) அவனைப் பகலும் இரவும் அளவுபடுத்தச் சேருகிறவைகள் அல்ல. ...... பாபமும் புண்யமும் சேருகிறவைகள் அல்ல. எல்லாப் பாபங்களும் அவனை அடையாமல் அவனிடமிருந்து திரும்புகின்றன.

𑌪𑍍𑌰𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 [illegible]
[illegible]
𑌤𑌥𑌾 𑌶𑍇𑌷𑌶𑍇𑌷𑌾𑌶𑌨𑌾𑌦𑍇𑌃। 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌤𑌤𑍍𑌸𑍂𑌰𑌿𑌸𑍇-
𑌵𑍍𑌯𑌂 [illegible] 𑌦𑍇𑌵𑌃 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 𑌸𑌂-
𑌸𑌾𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑍈 𑌵𑌿𑌪𑌰𑌿𑌣𑌮𑌯𑌤𑌿 [illegible]
[illegible] ॥　　॥ [illegible] ॥

சுத்த ஸத்துவம் என்று ஒரு த்ரவ்யம் ப்ரஸித்தமாயிருக்கிறது. அதில் ஸம்ஸாரத்துக்குக் காரணமாயிருக்கும் ஒரு தோஷமும் இல்லை. அதின் பெருமையை இவ்வளவு என்று சொல்ல முடியாது. அது மூன்று குணமுள்ள ப்ரக்ருதியைக் காட்டிலும் வேறான த்ரவ்யம். அந்த த்ரவ்யத்தாலானது ஸர்வேச்வரனுடைய ரூபம் (திருமேனி). அது வைகுண்டம் என்கிற தேசத்தில் ப்ரகாசிக்கிறது. ஆதிசேஷன் விஷ்வக்ஸேனர் முதலானவர்களின் சரீரங்களும் அவ்விதமானவைகளே. பரமாத்மாவினுடைய அந்த சரீரம் நித்யமானது. ஸூரிகளால் எப்போதும் ஸேவிக்கப்படுகிறது. அது மிகவும் உயர்ந்தது. ஜீவன்களுடைய ஸம்ஸாரத்தைப் போக்குவதற்காக அந்தத் தேவன் தன் ஸ்வபாவங்களில் ஒன்றையும் விடாதவனாய் அந்த ரூபத்தை வ்யூஹம் முதலான பேதங்கள் உள்ள ரூபங்களாய்ச் செய்கிறான்.

குறிப்பு— (1) 𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍍 என்றால்— ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்கிற மூன்று குணங்களில் ஸத்துவம் என்கிற ஒரே குணமுள்ளது, மூன்று குணங்களையுமுடைய ப்ரக்ருதியைக் காட்டிலும் அது வேறு. இந்த சுத்தஸத்துவத்தினால் ஆகியது ஸர்வேச்வரனுடைய ரூபம். இதற்கு ப்ரமாணம்— "[illegible] தமஸ: பரஸ்தாத்" என்கிற வசனம். தமஸ் என்பது ஸூக்ஷ்மமான ப்ரக்ருதி. பரஸ்தாத் என்பதாலே தமஸ் இருக்கிற இடத்துக்கு வேறான இடத்தில் அந்த ரூபமிருக்கிறது என்று காட்டப்படுகிறது. ஆகையால் அந்த ரூபம் தமஸ்ஸின் கார்யம் அன்று. அது நித்யம் என்பதற்கு ப்ரமாணம்— 'ஸதா பச்யந்தி ஸூரய:' என்பது. அது அநித்யமாயிருந்தால் அதை நித்யஸூரிகள் சில காலங்களில்தான் பார்க்கலாம். எப்போதும் பார்ப்பது முடியாது.

(2) இந்த ரூபம் வைகுந்தத்தில் இருப்பதாகச் சொல்லுகிறீர். ஆதித்யமண்டலத்திலிருக்கிற ரூபம் இந்த ரூபம்தான் என்று எப்படி ஏற்படும் என்றால், வைகுந்தத்திலுள்ள ரூபத்திலிருந்தே சில பாகங்களை எடுத்துக்கொண்டு அவைகளை அவதாரரூபங்களாக ஸர்வேச்வரன் செய்துகொள்ளுகிறான். இப்படிச் செய்வதன் ப்ரயோஜநம் ஸம்ஸாரி ஜீவன்களுடைய ஸம்ஸாரத்தைப் போக்குவதுதான்.

(3) வைகுந்தத்திலிருக்கும் ரூபத்துக்குப் பரரூபம் என்று பெயர். அதிலிருந்து நாலு அவதாரரூபங்கள் ஏற்படுகின்றன. இவைகளை 'ஃஸ௱வாரெ' (நா- 1- 1.) என்று ஆரம்பிக்கிற வாக்யம் சொல்லுகிறது. கரையில்லாத ஸமுத்ரத்திலும், புவநத்தின் மத்யத்திலும், துக்கம் கலப்பில்லாத இடமான வைகுந்தத்திலுமிருக்கிறான் என்பது அதின் பொருள். ஸமுத்ரம் என்பது திருப்பாற்கடல். அங்கிருப்பது ப்ரத்யும்னன் என்கிற வ்யூஹ ரூபம். புவநத்தின் மத்யமாவது ஸூர்யமண்டலம்.

(4) அவதாரங்களில் ஸர்வேச்வரன் ஐச்வரமான தன் ஸ்வபாவங்களில் ஒன்றும் விடுகிறதில்லை என்பது "ஃஜஹஃஸ்வ ஸ்வஹாவஃ" என்பதின் பொருள்.

(5) பூர்வபக்ஷி ஆதித்யமண்டலபுருஷனுடைய சரீரம் கர்மக்ருதம் என்று சொல்லுகிறான். அதற்குப்பிரமாணமாக அவன் சொல்லும் அநுமாநம்—விவாத விஷயமான ரூபம் கர்மத்தால் உண்டுபண்ணப்பட்டது. கண் முதலான அவயவங்களுள்ளதாகச் சொல்லப்படுகிறபடியால்- பத்தஜீவனின் சரீரம்போல—என்பது. இதற்குத்தூஷணம்—முக்தன் தன் இச்சையாலே எடுத்துக்கொள்ளுகிற சரீரங்களில் கர்மத்தால் உண்டுபண்ணப்படுவது என்கிற ஸாத்யமில்லை. அதில் ஹேது இருக்கிறது. ஆதலால் வ்யபிசாரம் என்கிற தோஷம் இருக்கிறது. (65)

அவ:— பரமாத்மாவினுடைய ரூபங்களைப்பற்றி உண்டாகும் சங்கையை அநுவாதம் செய்து தூஷிக்கிறார்:—

ஷெஹகுவாஃ ஸவுயாதஂ தி ஃஒஃவெஹவஂ ஊஂஃவகூ
ஞாஶயஂகதஂ ஸாஂஶகுவாஷெஶு ஹெதொஸிதி தஃவி
ந ஸஃஇ ஃஃநெந பாயாஃ। பாயஶுாஷெைஃகவெ

ஷெ௱ க்ஷிஷவி ந ஹெவெஷ நூயாzதிவூஸஜாஷூ்த்
ஷெஷாவதாஜெஷ ஷிநயதி தஷவு௱ாஸ௱ஜொவஷூவா
யடீ௰ ॥　　॥ ௬௬ ॥

பரமாத்மாவின் ரூபம் தேஹமாயிருப்பதாலே, ஏழு தாதுக்களுள்ளது; மூன்று மலங்களுள்ளது; பாபத்தால் உண்டானது; துக்கத்தைச் செய்வது; அவயவங்களுள்ளதாகையால் நாசத்தை அடையும் தன்மையது என்று சங்கை. இதுவும் சரியன்று. எந்த ப்ரமாணத்தாலே அந்த ரூபம் இருப்பதாக ஏற்படுகிறதோ. அந்த ப்ரமாணத்தாலேயே இது பாதிக்கப்படுகிறது. சாஸ்த்ரத்தாலேயே அறியவேண்டிய எந்த விஷயத்திற்கும் பாதமுண்டாகாது. இதை ஒப்புக்கொள்ளாவிட்டால், அதிப்ரஸங்கம் வரும். தன் இச்சையாலேயே செய்யும் அவதாரங்களில் அவன் அபினயம் பண்ணுவது ஆஸுரஸ்வபாவமுள்ளவர்களை நாசம் பண்ணுவதற்காக.

குறிப்பு— (1) இங்கே இரண்டு அநுமானங்கள் சொல்லப்படுகின்றன. அவைகள்-(1) பரமாத்மாவின் ரூபம் சொல்லப்பட்ட தோஷங்களையுடையது; தேஹமாயிருப்பதால், நம்முடைய தேஹம் போல், (2) அது, நாசத்தை யடையும் தன்மையது, அவயவங்கள் உள்ளதாகையால், நம்முடைய தேஹம்போல், என்பன. இந்தச் சங்கைக்குப் பதில்— இவைகள் சாஸ்த்ரத்தினால் பாதிக்கப்படுகின்றன என்று. இந்த ரூபம் இருப்பதற்கும், அது நித்யம் என்பதற்கும் ப்ரமாணங்களை 64-வது ச்லோகத்தின் 3-வது குறிப்பில் பார்க்க.

(2) சாஸ்த்ரத்தைக்கொண்டே எதை அறியவேண்டியதோ, அதை வேறு ப்ரமாணத்தாலே பாதிக்கக்கூடாது. இந்த ந்யாயத்தை ச்ருதலக்ஷணாதிகரணத்தில் (2—1—9) ஸூத்ரகாரர் காண்பிக்கிறார். இந்த ந்யாயத்தை ஒப்புக்கொள்ளாவிட்டால் வேதத்தில் முன்காண்டத்தில் விதிக்கப்பட்டதற்கும் அநுமாநத்தைக்கொண்டு ஆக்ஷேபம் சொல்லலாம்.

(3) பரமாத்மாவினுடைய அவதாரங்களில் அவன் ரூபம் பரரூபத்தின் பரிணாமம் என்று சொல்லப்பட்டதே? ராமாவதாரத்தில் ஸீதையை விட்டுப் பிரிந்து அவன் துக்கப்படவில்லையா? அவனுடைய அவதாரசரீரம் இந்தத் துக்கத்துக்குக்

காரணம் அன்றோ? என்றால், அது அபிநயமாத்ரம் என்று சொல்லுகிறார். உண்மையில் துக்கப்படவில்லை. துக்கப்பட்டவன் போல் தன்னைக் காண்பித்தது மாத்ரம். இதன் ப்ரயோஜனம்— அஸுரஸ்வபாவமுள்ளவர்கள் அவனை வெறும் மனிதன் என்று எண்ணுவதும், அவர்கள் அந்த எண்ணத்தால் அபராதங்களைச் செய்வதும், அவைகளை வ்யாஜமாக வைத்துக்கொண்டு அவன் அவர்களை நாசம் செய்வதும். இப்படி ஸாதுக்களை ஹிம்ஸைசெய்கிறவர்களை நாசம்பண்ணுவது ஸர்வேச்வரனுடைய கடமை. (65)

(4) நிகமனம்— இந்த அதிகரணவிஷயவாக்யத்தில் பரமாத்மா ஜகத்காரணம் என்பது சொல்லப்படவில்லையே; ஜகத்காரணமான ப்ரம்மத்தைப்பற்றி விசாரிக்கிற இடத்தில் இந்த வாக்யத்தை விசாரிப்பது எப்படிப் பொருந்தும் என்றால் இந்த விஷயவாக்யத்தையும் ஆனந்தவல்லியிலுள்ள "ஸ யச்சாயம் புருஷே | யச்சாஸாவாதித்யே" என்னும் வாக்யத்தையும் சேர்த்துப் பூர்வபக்ஷி கீழ் அதிகரணத்தில் செய்த தீர்மானம் சரியன்று என்று ஆக்ஷேபிப்பதற்கு இந்த அதிகரணம் பதில் சொல்லுகிறது. ஆகையால் இது கீழ் அதிகரணத்துக்குச் சேஷம். மேல் அதிகரணங்கள்போல் இது ஸ்வதந்த்ரமன்று.

ஆகாசாதிகரணம், (8)

அவ— கீழ் மூன்று அதிகரணங்களும் ஒரு பேடிகை என்றும், மேல் முதல் அத்யாயம் முழுவதற்கும் இன்னது விஷயமென்றும் காட்டுகிறார்:—

உக்தம் வித்யாத்ரயேண ஸ்திரசரவபுஷோ ஹேதுதா ஸ
ர்வஹேதோஸ்தாவத்ஸூத்ராஜ்ஞக்ஷ்வாதிதி ஸமயிகதா யத்ரவி
த்யாத்ரயாவி | உக்தாந்யாநிகாசாம் க்ருத இஹ ப்ர
த்யுத்வக்ராது க்ருத்யநிர்ஷ்டாநத்யாயெஸ்மிந்நாவ
ஹயிகரணமதெணஸ்த்ரூணாநிஷ்ருணாதி || ௬௬ ||

இப்படி மூன்று வித்யைகளினால், ஸ்தாவரங்களையும் ஜங்கமங்களையும் சரீரமாக உடையவனும் எல்லாவற்றிற்கும் காரண

மாயுமிருப்பவன் ப்ரக்ருதியையும் ஜீவக்கூட்டத்தையும் காட்டிலும் வேருனவன் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனபோதிலும், இந்தத் தீர்மானத்திற்குச் சில ஆக்ஷேபங்கள் வெவ்வேறு வழியாய் சொல்லப்படுகின்றன. இந்த அத்யாயத்தில் மற்ற அதிகரணக்கூட்டங்களால் அவைகளைத் தீர்க்கிருர். அவர்கள் சொல்லும் ஆக்ஷேபங்களில் ம்ருதுவாயிருப்ப(பலமில்லாத)வைகளைமுதலிலும், நடுத்தரமான (பலமுள்ளது போல் தோன்றுகிற)வைகளை பிறகும், க்ரூரமாயிருப்பவைகளை (உஹாபலமுள்ளதுபோல் தோன்றுகிறவைகளை)க் கடைசியிலும் வரிசையாய்த் தீர்க்கிருர். இத்துடன் பரமாத்மாவின் குணங்களையும் நன்ருய்க் காட்டுகிருர்.

குறிப்பு— (1) சொன்ன மூன்று அதிகரணங்களில் முதல் அதிகரணத்தாலே பரமாத்மா ஈக்ஷணம் என்கிற குணத்தாலே ப்ரக்ருதியைக் காட்டிலும், வேறு என்றும், இரண்டாவது அதிகரணத்தாலே அளவில்லாததும் இயற்கையாயுள்ளதுமான ஆனந்தம் என்கிற குணத்தாலே ஜீவனைக் காட்டிலும் வேறு என்றும் தீர்மானிக்கப்பட்டது. மூன்ருவது அதிகரணத்தின் விஷயவாக்யத்தில் அப்போது அலர்ந்த தாமரைப்பூபோன்ற கண்களையுடையவன் என்று சொல்லப்படுகிறபடியால் அவன் ஸ்ரீமாளுன நாராயணன் என்று ஏற்படுகிறது. ஆகையால் இந்த மூன்று அதிகரணங்களும் ஒரு பேடிகை.

(2) இந்தத் தீர்மானத்துக்குச் சொல்லப்படும் ஆக்ஷேபங்களை இந்த அத்யாயத்திலுள்ள மற்ற அதிகரணங்கள் தீர்க்கின்றன. சண்டையில் எதிரிகள் முதலில் பலமில்லாத ஸேனையை அனுப்பி, பிறகு அதைக் காட்டிலும் பலமுள்ள ஸேனையை அனுப்பிக் கடைசியில் மிகவும் பலமுள்ளதை அனுப்புவது உலக வழக்கம். அவைகள் எதிரிகளால் வரிசையாய் நாசம் பண்ணப்படுகின்றன. அதுபோல சிலர் சொல்லும் மிருதுவான ஆக்ஷேபங்களையும், பிறகு வேறு சிலர் சொல்லும் பலமான ஆக்ஷேபங்களையும், பிறகு மிகவும் பலமான ஆக்ஷேபங்களையும் வரிசையாய்ப் போக்குகிருர். இது மாத்திரமன்று. பரமாத்மாவினுடைய குணங்களையும் வெளிப்படுத்துகிருர். (66)

அவ:— இது முதல் நாலு அதிகரணங்கள் ஒரு பேடிகை என்பதையும், அதன் விஷயத்தையும் சொல்லுகிருர்:—

ஶப்தை: ஸத்ப்ரஹ்மாத்யை: ஶ்ருதிஶிரஸி ஸித்தம்
காரணம் கிஞ்சிதேகம் ஸங்கல்பாப்யாஸரூபைரத
நநாராயணைஶ்சிந்திதஶ்சித்விஶேஷ: । பூதாகாஶாதி
ஶங்காஜநநவஸதிவிதேதநார்தைர்ஹி: காரணத்வை: க்ஷி
த்வா தத்வாதிஶேஷே ஶ்ருதிஸாமஞ்ஜஸ்யநாஸம்ஹவொஶக்த்யா
ஹாநக்தி ॥ ॥ ௬௭ ॥

ஸத் ப்ரம்மம் முதலான பதங்களாலே உபநிஷத்துக்களில் ஏதோ ஒன்று காரணமாக சொல்லப்படுகிறது. மற்றவைகளில் இருக்கத்தகாதவைகளான ஸங்கல்பம்,(ஆனந்தத்தின்)அப்யாஸம், ரூபம் என்கிற குணங்களாலே அந்த வஸ்து விசாரிக்கப்பட்டு ஓர் சேதநவிசேஷம் என்று முடிவு செய்யப்பட்டது. காரணவாக்யங்களில் இருக்கிறவைகளும் பூதாகாசம் முதலானவைகள் காரணங்களோ என்று ஸந்தேஹத்தை உண்டுபண்ணத் தகுந்தவைகளுமான பெயர்களைக்கொண்டு முன் பேடிகையில் காட்டப்பட்ட லிங்கங்களை ஆக்ஷேபித்து ஆகாசம் முதலான ச்ருதிகளின் கூட்டத்துக்குப் பூர்வபக்ஷி சொல்லும் சக்தியில்லை என்று சொல்லி, முன் செய்த தீர்மானத்தை ரக்ஷிக்கிறார்.

குறிப்பு— (1) காரணவாக்யங்களாலே ஜகத்காரணம் ஒன்றாகவே இருக்கவேண்டும் என்று ஸித்திக்க, அது எது என்று விசாரிக்கப்பட்டது. ஸங்கல்பம், அப்யாஸம் பண்ணப்பட்ட ஆனந்தம், விலக்ஷணமான ரூபம் ஆகிய லிங்கங்களால் அசேதனத்துக்கும் ஜீவன்களுக்கும், மிகுந்த புண்யம் பண்ணின ஜீவன்களுக்கும் அந்த ஜகத்காரணத்வம் இல்லையென்று வரிசையாய்க்காட்டி, அவைகளால் அந்தக் காரணம் ஒரு சேதநவிசேஷம், அதாவது— ஸ்ரீமானை நாராயணன் என்று தீர்மானிக்கப்பட்டது.விசாரிக்கப்படாத வேறு காரணவாக்யங்களில் பஞ்சபூதங்களில் ஒன்றான ஆகாசத்தையும்ப்ராணனையும், அக்நியையும், இந்த்ரன் என்கிற ஜீவனையும் காட்டும் பதங்களிருக்கின்றன. இவைகளால் இவைகளில் ஏதோ ஒன்று ஜகத்காரணமாயிருக்கலாம் என்று ஸந்தேஹம் உண்டாகும். அதைப் பூர்வபக்ஷியைக்கொண்டு விசாரிக்கச் சொல்லி, அந்தச் சொற்களுக்கு ரூடியால் ஏற்பட்ட அர்த்தங்களைச்சொல்லச் சக்தியில்லை என்று காட்டி, லிங்கங்களால் ஏற்பட்ட தீர்மா

னத்தை ஸூத்ரகாரர் ரக்ஷிக்கிறார். ச்ருதி லிங்கத்தைக் காட்டிலும் ப்ரபலம். ஆகையால் லிங்கத்தைக்கொண்டு செய்யப்பட்ட தீர்மானம் சரியன்று என்பது பூர்வபக்ஷம். அந்தப் பதங்களுக்கு அந்தந்த இடங்களில் ரூடியால் ஏற்பட்ட அர்த்தங்களைச் சொல்லச் சக்தியில்லை. ஆகையால் அவைகள் துர்பலங்கள். அவைகள் லிங்கத்தைப் பாதிக்கமாட்டா என்பது ஸித்தாந்தம். பூர்வபக்ஷி சொல்லுகிற ந்யாயங்கள்-ரூடியோகவிரோதத்தில் ரூடி ப்ரபலம் என்பதும், ச்ருதி லிங்கத்தைக்காட்டிலும் ப்ரபலம் என்பதும். ஸித்தாந்தியின் ந்யாயம்— லிங்கம் துர்ப்பலமான ச்ருதியைக்காட்டிலும் ப்ரபலம் என்பது. ச்ருதி துர்ப்பலமாயிருப்பதற்குக் காரணங்கள் அந்தந்த அதிகரணங்களில் காட்டப்படும்.

(2) ச்ருதியைக் கொண்டு லிங்கத்தைப் பாதித்து முன் செய்த தீர்மானத்தை மாற்றவேண்டும் என்பது பூர்வபக்ஷியின் வாதம். ஆகாசம், ப்ராணன், ஜ்யோதிஸ், இந்த்ரன் ஆகிய சொற்கள் விசேஷசப்தங்கள். ஸத், ப்ரம்ம, ஆத்மா- ஆகிய சொற்கள் ஸாமாந்ய (பொதுவான) சொற்கள். இந்த இரண்டுவிதமான சொற்களை ஒரே விஷயத்தில் உபயோகிக்கும்போது ஸாமாந்ய சப்தங்கள் விசேஷசப்தங்களின் அர்த்தத்தைச் சொல்லுகின்றன. இது *சாகபசுந்யாயம். இதனாலும் முன் செய்த தீர்மானத்தை மாற்றவேண்டும். (67)

அவ:— மேல் பேடிகையில் இரண்டு த்விகங்கள் இருக்கின்றன என்பதையும், அவைகளுக்குள்ள ஸங்கதியையும் சொல்லுகிறார்:—

ஆகாசப்ராணசப்தாவிதரபரிகதௌ ரூடிஹீநௌ
ந யத்வஜ்ஜ்யோதிஶ்ஶப்தஶ் ச ரூட்யா ப்ரயததி வசஸாம்
ஶ்ரீவ்யதேஜோவிஶிஷ்ட: । ப்ராண்யாதீந்த்ராதிஶப்தஶ்
ச ந நியதிதஸ்ஸிவிஶிஷ்டப்ரவ்ருத்தேர் த்ருவம் ஸ்யாத்
பதிரிதி கதிதா ஶ்ருதிகயாநஹேதோ: ஶப்தவ்ருத்திக்ரமேண ॥

* அந்த ந்யாயமாவது— ‘பசுநா யஜேத’ என்கிற விதியினால் செய்யப்பட்ட யாகத்தில் பசுவின் வபையை ஹோமம் பண்ணும்போது ‘சாகத்தின் வபைக்குத் தகுந்த மந்த்ரத்தைச் சொல்’ என்று ஹோதா ஏவப்படுகிறான். இங்கே பசுவை சாகம் என்று சொல்லியிருப்பதாலே, பசு என்கிற ஸாமாந்யசப்தத்துக்கு சாகம் என்கிற விசேஷம் பொருள். சாகம் வெள்ளாடு.

ஆகாசம் ப்ராணன் என்கிற பதங்கள் அவைகளின் அர்த் தங்களைச் சொல்லத் தகுந்தவைகள் அல்லாமையால் ரூடியைத் தள்ளிவிட்டு யோகத்தால் அர்த்தம் பண்ணிப் பரமாத்மாவைச் சொல்லுகின்றன என்று கொள்ளவேண்டியது. ஜ்யோதிஸ் என் கிற சொல்லோ அளவில்லாத ப்ரகாசத்தோடு கூடிய புருஷனை (பரமாத்மாவை) ரூடியினாலேயே சொல்லுகிறது. இதற்குமேல், இந்த்ரன் முதலானவர்களைச் சொல்லுகிற பிரஸித்தமான சொற் கள் இந்த்ரன் முதலானவர்களை விசேஷணமாக உடையவனைச் சொல்லிப் பரமாத்மாவையே காட்டுகின்றன. சப்தங்கள் அர்த் தங்களைச் சொல்லுகிற க்ரமத்தாலே இந்தப் பேடிகை இரண்டு த்விகங்களை உடையது.

குறிப்பு— த்விகம் என்பது இரண்டு அவயவங்களை உடை யது. ஆகாசாதிகரணத்திலும் ப்ராணாதிகரணத்திலும், ஆகாசம், ப்ராணன் என்கிற பதங்கள் ரூடியினால் ஏற்பட்ட அர்த்தங் களை விட்டுவிடுகிறபடியால், அவைகள் ஒரு த்விகம். மற்ற இரண்டு அதிகரணங்களில் ரூடியால் ஏற்பட்ட அர்த்தங்களை விடாதபடி யால் அவைகள் இரண்டும் ஒரு த்விகம் இப்படி இந்தப் பேடிகை யில் இரண்டு த்விகங்கள் இருக்கின்றன. (68)

ஆகாஶஸ்தல்லிங்காத் ॥ உஉ ॥

ஆகாசம் என்கிற சொல்லாலே சொல்லப்பட் டவன் பூதாகாசத்தைக் காட்டிலும் வேறானவன். அதாவது— பரமாத்மா, அவனுக்கேயுள்ள லிங்கத்தை (அடையாளத்தை)ச் சொல்லுகிறபடியால். விஷயவாக்யம்— * "ஸர்வாணி ஹவா இமாநி பூதாநி ஆகாஶாதேவ ஸமுத்பத்யந்தே । ஆகாஶம் ப்ரத்யஸ்தம் யந்தி । ஆகாஶோஹ்யேவைப்யோ ஜ்யாயாநாகாஶ: பராயணம்।" என்பது. லிங்கம் என்பது வேறு ப்ரமாணத்தாலே ஒரு வஸ்துவில் இருப்பதாகக் காட்டப் படும் அடையாளம். ஜகத்காரணமாயிருப்பது காரணவாக்யத் தால் பரமாத்மாவினிடத்திலிருப்பதாகக் காட்டப்படுகிறது.

* (சா—1-9-1) இந்த எல்லாப் பூதங்களும் ஆகாசத்திலிருந்தே உண்டாகின்றன. ஆகாசத்தை அடைந்து நாசத்தை அடைகின்றன; ஆகாசம் இவைகளைக் காட்டிலுமுயர்ந்தது அன்றோ. ஆகாசம் அடைய வேண்டியவைகளில் மிகவும் உயர்ந்தது. பூதம்— உண்டுபண்ண பட்டது.

அதை இந்த வாக்யம் அநுவாதம் பண்ணி, ஆகாசம் என்று சொல்லப்பட்டதில் அது இருப்பதாகச் சொல்லுகிறது. வேறிடத்தில் புகை நெருப்போடு கூடியிருப்பதைப் பார்த்திருப்பதால் மலையில் புகையைப் பார்த்தவுடன் அங்கே நெருப்பு இருக்கிறது என்று சொல்லுவதுபோல் இங்கேயும். ஆகையால்தான் 21-வது ஸூத்ரத்தில்போல், 'தஸ்மாத் வா ஏதஸ்மாத்' என்று சொல்லாமல், 'தஸ்மாத்' என்று சொல்லியிருக்கிறது. விஷயவாக்யத்திலுள்ள 'ஸர்வாணி' என்ற பதம் ஆகாசத்தை விட்டுவிட்டு வாயுமுதலான மற்ற பூதங்களை மாத்திரம் சொல்லவில்லை. ஏன் என்றால், ஸர்வாணி என்ற சொல்லின் அர்த்தத்தை இங்கே ஸங்கோசம் பண்ணுவதற்கு (குறைப்பதற்கு) ந்யாயமில்லை.

அவ:— அதிகரணத்தின் பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் சொல்லுகிறார்—:

> அத்ராகாஶஸ்ஸகலஶஶ்வதுதயவிலயஸ்தாநம் ஸாந்த்ர த்ருஷ்ட:
> ஸ்வஸ்நாந்த்ர நிஷ்க்ருஷ்டஶைத்தீரீயேzவ்யநிதரஜநித:
> ஸ்வாத்மந: ஸம்ஸ்மோக்த்யா । நைவம் ஸிதாநுவாதா
> ஹ்யயநே ச வரஸ்யாவ்யதாஷிநா த்வீம்ஸ்ஸ்தக்தத்ராத்மா
> விவஶ்ச்வரா மித இதி விஹதா ஸ்வாத்மநஸ்தஸ்ய ஸூக்தி: ॥

இந்த அதிகரணத்தின் பூர்வபக்ஷம் —பூதாகாசம், எல்லாம் உண்டாவதற்கும் லயத்தை அடைவதற்கும் இடம் என்று ஆகாசம் என்கிற பதத்தாலே சாந்தோக்யத்தில் சொல்லப்படுகிறது. தைத்திரீயத்திலும் தன்னிடத்திலேயே உண்டாகிறது என்று சொல்லப்படுகிறபடியால், அதை வேறு ஒன்றும் உண்டு பண்ணவில்லை என்று ஏற்படுகிறது—என்பது. இது சரியன்று. இந்த வாக்யம் வேறு வாக்யங்களால் ஸித்தமானதை அநுவாதம் பண்ணுகிறது. மேலும், மற்றவர்களால் அடையப்படுவது முதலானவைகள் அதனிடத்திலில்லை. அதை உண்டுபண்ணினவன் ஆத்மா என்றும், விபச்சித் என்றும் சொல்லி இருக்கிறது. ஆகையால் தன்னிடத்திலிருந்து அது உண்டாயிற்று என்பது பொருத்தமுள்ளதன்று.

குறிப்பு— (1) பூதாகாசமே ஜகத்காரணம் என்று சொல்லுவதற்குப் பூர்வபக்ஷி இரண்டு காரணங்களைச் சொல்லுகிறான். அவைகளாவன:— (1) அதினிடத்திலிருந்து எல்லாம் உண்டாகின்றன, எல்லாம் லயத்தை அடைகின்றன; (2) அது தன்னிடத்திலிருந்தே உண்டாகிறது, அதாவது— அதற்கு ஸூக்ஷ்மம், ஸ்தூலம் என்று இரண்டு அவஸ்தைகள் இருக்கின்றன. ஸூக்ஷ்மமான அவஸ்தையில் அது காரணம். ஸ்தூலமான அவஸ்தையில் அதுகார்யம். இது 'ஸ்வஸ்மாத் ஸ்வஸம்பூதி:' என்பதின் பொருள். வேறென்றால் உண்டுபண்ணப்படாமல் மற்றவைகளை உண்டுபண்ணுவது ஜகத்காரணமாயிருக்கத் தகுந்தது. ஆகாசம் என்கிற சொல் ச்ருதி. அது லிங்கத்தைப் பாதிக்கிறபடியால் நாராயணனே ஜகத்காரணம் என்று தீர்மானம் பண்ணினது சரியன்று. இது பூர்வபக்ஷம்.

(2) இதைத்தூஷிக்கிறார்—விஷயவாக்யத்திலிருக்கிற 'ஹவை' என்ற பதங்களாலே அந்த வாக்யம் வேறு வாக்யங்களால் ஸித்தமானதை அநுவாதம் பண்ணுகிறது என்று காட்டப்படுகிறது. ஆகையால் அது ஆகாசம் ஜகத்காரணமாயிருப்பதற்கு ப்ரமாணம் அன்று. ஆதலால் இந்த வாக்யத்திலிருக்கிற ச்ருதி துர்ப்பலம். ஈக்ஷணம் என்று கீழே சொல்லப்பட்ட லிங்கம் ப்ரபலம். ஸித்தாந்தத்திற்கு இது ஒரு ஹேது.

(3) மேலும் விஷயவாக்யம் ஆகாசத்தைப் பராயணம் என்று சொல்லுகிறது. பராயணம்— அடையவேண்டியவைகளில் மிகவுமுயர்ந்தது. ஆகாசம் அசேதநமாகையால் பராயணம் அன்று; இது இரண்டாவது ஹேது.

(4) ஆகாசத்தை உண்டுபண்ணினவனே ஆத்மா என்றும், விபஶ்சித் என்றும் தைத்திரீயம் சொல்லுகிறது. விபஶ்சித்-ஸர்வஜ்ஞன். இந்தத் தர்மம் அசேதனமான ஆகாசத்திலில்லை. அது ஆத்மாவும் அன்று. ஆத்மாவென்பது ஒன்றுக்குள் ப்ரவேசித்து அதை நியமநம் பண்ணுவது. ஆகாசம் அசேதனமாகையால் ஒன்றை நியமநம் பண்ணச் சக்தியில்லாதது. இது மூன்றாவது ஹேது.

(5) பூர்வபக்ஷி ஆகாசம் தன்னிடமிருந்தே உண்டானது என்று சொன்னதற்கு என்ன பதில் என்றால், அவனைக்

கேட்போம். ஸூத்ரா என்கிற சொல்லுக்குப் பொருள் முக்ய மானதா? அல்லது லக்ஷணையினால் கிடைத்ததா? முக்யமான அர்த்தம் கீழே சொன்னபடி ஒன்றுக்குள் ப்ரவேசித்து நியமநம் பண்ணுவது. அது ஆகாசத்தில் பாதிதம். லக்ஷணையினால் கிடைத் ததானால் அதுவே தோஷம். ஸூவ்ருணோதி (வியாபிக்கிறது) இதி ஸூத்ரா என்கிற வ்யுத்பத்தியினால் ஆகாசத்தையும் ஆத்மா என்று சொல்லலாம் என்றால்; ஆத்மா என்கிற பதத்தின் அர்த்தத்தில் வியாபிப்பது, நியமநம் செய்வது என்கிற இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஓர் அம்சத்தை எடுத்துக்கொண்டு மற்றோர் அம்சத்தை விட்டுவிடுவது லக்ஷணை. அது கீழே சொன்னபடி தோஷம்.

(6) ரூடியால் ஏற்பட்ட அர்த்தத்தைத் தள்ளிவிட்டு, யோகத்தால் ஏற்பட்ட அர்த்தத்தைக் கொள்ளுவதற்கு ப்ர மாணம் * ஐந்த்ரீ நியாயம்.

(7) ஆகாசம் என்கிற சொல்லுக்கு யோகத்தால் கிடைக்கும் அர்த்தம்— ஆகாஶதே-வ்யாகாஶதே, ஆகாஶயதி-வ்யாகாஶயதி (எங்கும் ப்ரகாசிக்கிறது, எல்லாவற்றையும் ப்ரகாசிக்கச் செய்கி றது) என்பது. இந்த தர்மத்தையுடையவன் பரமாத்மா. (69)

* "ஐந்த்ர்யா கார்ஹபத்யமுபதிஷ்டதே" என்று கார்ஹபத்யம் என்கிற அக்னியை இந்திரனைச் சொல்லுகிற ருக்காலே ஸ்தோத்ரம் பண்ணுவது விதிக்கப்படுகிறது. இந்த அக்னியின் ஸ்தோத் ரத்துக்கும் இந்திரனுடைய ருக்குக்கும் பொருத்தமில்லை. ஆகையால் இந்த்ரன் என்கிற பதத்தின் முக்யமான அர்த்தத்தை விட்டுவிட்டு 'இதி பரமைஶ்வர்யே' என்கிற தாதுவின் அர்த்தத்தைக் கொண்டு உயர்ந்த ஈசுவரன் என்று சொல்லுகிறது. மூன்று அக்னி களுக்குள்ளே கார்ஹபத்யம் மிகவுமுயர்ந்ததாகையால் இந்த அர்த்தம் அதற்குப் பொருந்தும்.

ப்ராணுதிகரணம் (9)

அத ஏவ ப்ராண: ॥ ௧-௧-௨௩ ॥

ப்ராணன் என்கிற சொல்லாலே சொல்லப்பட்டது (பிர ஸித்த) ப்ராணனைக் காட்டிலும் வேறானது; அதே ந்யாயத் தாலேயே. இதற்கு விஷயவாக்யம்- *"ஸர்வாணி ஹவா இமானி பூதானி ப்ராணமேவாபிஸம்விசந்தி । ப்ராணமப்யுஜ்ஜிஹதே" என்பது. இதிலும் 'ஹ' 'ஏவ' என்கிறசொற்கள் இருக் கிறபடியால் இதுவும் அநுவாதவாக்யம்.

அவர் பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் சொல்லுகிறார்:-

ப்ராணாயத்தம் ஹி தேஹாதிகமிஹ விதிதம் தேந தஜ்ஜ்ஞா காரணத்வம் ச்ருத்யுக்தம் ரூடிசக்த்யா ஸ்திரயதி ந தத: வ்யோமவத் வாதநீயம் । தஸ்ய ப்ராணஸ்ய காஷ்டாதிஷு மஹிமஹதி: பூர்வவத் அநுவாதாதாகாசோ க்தேரிவோக்த்யா ஸ்வவதி நிகிலப்ராணநஸ்யாபி ச்ருதே: ॥ ॥ ௭௦ ॥

தேஹம் முதலானவைகள் ப்ராணனுக்கு அதீனங்களாயிருக் கின்றன என்பது இந்த உலகத்தில் நன்றாய் அறியப்படுகிறது. ஆகையால் அது ஜகத்காரணமென்று ச்ருதியினால் சொல்லப் பட்டது ரூடி சக்தியாலே உறுதிப்படுத்தப்படுகிறது ஆகை யால் ஆகாசம் காரணம் என்பதைப் பாதித்ததுபோல் ப்ரா ணன் காரணம் என்பதைப் பாதிக்கமுடியாது. இது பூர்வ பக்ஷம். இது சரியன்று; கட்டை கல் முதலானவைகளில் ப்ரா ணனுடைய பெருமை குறைந்திருக்கிறது; முன் அதிகரணத்தில் விசாரிக்கப்பட்ட வாக்யம்போல் இதன் விஷயவாக்யமும் அநுவா தம்; ஆகாசம் என்கிற பதம் பரமாத்மவிஷயமாக வேதத்திலும் அங்கங்கே சொல்லப்படுவதுபோல், ப்ராணன் என்கிற பதமும் அப்படியே சொல்லப்படுகிறது. எல்லாப் பிராணிகளையும் உயி ரோடிருக்கும்படி செய்யும் தன்மையானது பரமாத்மாவினிடமே இருக்கிறது.

* (சா—1-11-4) இந்த எல்லாப் பூதங்களும், ப்ராணனிடத்தில் லயத்தை அடைகின்றன; அதிலிருந்து உண்டாகின்றன.

குறிப்பு:— (1) இந்த இரண்டு அதிகரணங்களிலும் விஷய வாக்யங்கள் ஒரேவிதமாக அநுவாதங்களாயிருக்கின்றன. பூர்வ பக்ஷமும் ஸித்தாந்தமும் ஒரேவிதம். ஆகையால் கீழ் அதிகரணத்தின் நியாயப்படி இங்கே தீர்மானம் செய்யவேண்டியதாயிருக்க, வேறு அதிகரணம் ஆரம்பிப்பதற்குக் காரணத்தைப் பூர்வபக்ஷி மூலம்சொல்லுகிறார். எல்லாம் ஆகாசத்திலிருந்து உண்டாவதைப் பிரத்யக்ஷத்தால் ஒருவனும் பார்க்கவில்லை. பிராணன் விஷயத்தில் அப்படியன்று. எல்லாம் அதற்கு அதீனமாயிருப்பதை எல்லாரும் பார்க்கிறோம். ஆகையால் ப்ராணன் ஜகத்காரணமாயிருக்கத் தகுந்தது. இது லிங்கம். ப்ராணன் என்பது ச்ருதி. ஸித்தாந்திக்கு இது ப்ரதிகூலம். இப்படி இங்கே ஓர் அதிக சங்கை உண்டாகிறது.

(2) இதற்குப் பதில் மூன்று ஹேதுக்களைக் கொண்டு சொல்லப்படுகிறது. (1) எல்லாம் ப்ராணனுக்கு அதீனம் என்று சொன்னது சரியன்று. பாராங்கல்லிலும் பட்டமரத்திலும் ப்ராணனிருக்கிறது. ஆனால் அது ஸூக்ஷ்மமாயிருக்கிறது. சொல்லப்பட்ட அதன் காரியம் காணப்படவில்லை. (2) இந்த வாக்யமும் அநுவாதம் என்பது: "ஹைவ" என்கிற பதங்களாலே காட்டப்படுகிறது. (3) பரமாத்மா தான் எல்லாப் பிராணிகளையும் உயிரோடிருக்கும்படி செய்கிறான். ஆகையால் அவனைப் ப்ராணன் என்று உபநிஷத்துக்கள் சொல்லுகின்றன. பரமாத்மா எங்கும் ப்ரகாசிப்பதாலும், எல்லாவற்றையும் ப்ரகாசிக்கும்படி செய்வதாலும் அவனை உபநிஷத்துக்கள் ஆகாசம் என்று எப்படிச் சொல்லுகின்றனவோ, அப்படியே இங்கும். ஆகையால் ரூடியால் ஏற்பட்ட அர்த்தத்தை விட்டுவிட்டு, ப்ராணயதீதி ப்ராண: என்கிற யோகத்தாலே ஏற்படும் அர்த்தத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். (70)

ஜ்யோதிரதிகரணம் (10)

அவ— கீழ்ப்பேடிகைக்கும் மேல் பேடிகைக்கும் ஸங்கதியைக் காட்டுகிறார்:—

[illegible]

பூர்வபக்ஷி சொல்லுகிறான்— முன் இரண்டு அதிகரணங்களில் ஜகத்காரணத்வம் என்கிற லிங்கம் ஆகாசம் ப்ராணன் என்கிற விசேஷசப்தங்களைப் பாதித்தன. மேலே விசாரிக்கப்போகிற இரண்டு அதிகரணங்களில்இப்படிப்பாதிக்கும்படியான ஒரு லிங்கமுமில்லை. விஷய வாக்யங்களில் ரூடியால் சொல்லப்பட்ட தத்துவங்களுக்கு அநுகூலமான லிங்கங்கள் இருக்கின்றன. ஜ்யோதிஸ் இந்திரன் என்பவைகளோ ரூடியுள்ள சப்தங்கள். யோகத்தாலே வேறு அர்த்தத்தைச் சொல்லவேண்டிய நிர்ப்பந்தமில்லை. இது ச்ருதி. ஆகையால் பரமாத்மா இந்தப் பதங்களால் அறியத்தகுந்தவன் அன்று. ஜகத்தின் உத்பத்தி இந்த அதிகரண விஷயவாக்யங்களில்சொல்லப்படவில்லையே என்றால், அதைக்காட்டும் லிங்கங்கள் இருக்கின்றன— என்று. ஜகத்தின் உத்பத்திக்கு அநுகூலமான சேதனர்களுடனும் அசேதனங்களுடனும் சேர்ந்திருப்பது என்கிற யுக்தியைக்கொண்டு இரண்டு அதிகரணங்களால் பூர்வபக்ஷி சொல்லுவதை நிராகரிக்கிறார்.

குறிப்பு— (1) பூர்வபக்ஷி தனக்கு அநுகூலமாக மூன்று ஹேதுக்களைச் சொல்லுகிறான்— I முன் இரண்டு அதிகரணங்களிலிருந்த லிங்கம் ஜகத்காரணத்வம் என்பது. அது அநுவாதமான வாக்யங்களிலிருக்கும் ஆகாசம், ப்ராணன் என்கிற ச்ருதிகளைப் பாதித்தது. மேல் இரண்டு அதிகரணங்களில் ஜ்யோதிஸ் இந்திரன், ப்ராணன் என்கிற ச்ருதிகளைப் பாதிக்கும் ஒரு லிங்கமுமில்லை. II அந்தப் பதங்களால் சொல்லப்பட்ட தத்துவங்கள்தான் ஜகத்காரணங்கள் என்று காட்டுவதற்கு வேண்டிய லிங்

கங்கள் இருக்கின்றன. இவைகள் மேல் அதிகரணங்களில் காட்டப்படும். III இந்தப் பதங்கள் ரூடியினால் ஜ்யோதிஸ்ஸையும் இந்திரனையும் ப்ராணனையும் சொல்லுகின்றன. ஆகையால் பூர்வ பக்ஷத்துக்கு ச்ருதியும் லிங்கமுமிருக்கின்றன. ஸித்தாந்தத்துக்கு அநுகூலமான லிங்கமில்லை.

(2) இங்கே ஜகத்காரணம் எது என்று விசாரிக்கிறோம். ஜ்யோதிஸ்ஸும், இந்திரனும், பிராணனும் ஜகத்காரணங்கள் என்று விஷயவாக்யங்களால் ஏற்படவில்லையே என்கிற ஆக்ஷேபத்துக்கு அவன் பதில் சொல்லுவதாவது— இங்கே சில லிங்கங்கள் இருக்கின்றன. அவைகளைக்கொண்டு இவைகளிடத்தில் காரணத்வமிருக்கிறது என்று காட்டுகிறேன் என்பதாம். (71)

ஜெ்யாதிஶ்்வரணாஹியாநாசூ ‖ உ௫ ‖

ஜ்யோதி: என்கிற சொல்லாலே சொல்லப்பட்டவன் ப்ரஸித்தமான ஜ்யோதிஸ்ஸைக் காட்டிலும் வேறான பரமாத்மா. எல்லாப் பூதங்களையும் அவனுடைய பாதங்களாகச் சொல்லியிருக்கிறபடியினால். இதற்கு விஷயவாக்யம்– 1 “அய யதஃ வரொ தியொ ஜெ்யாதிீ-ீவ்யெத விஶ்்வதஃ வ்ருஷெ்ஷு ஸவ-ீதஃ வ்ருஷெ்ஷ்வநுத்தமெஷூத்தமெஷு லொகெஷ்விஷம் வாவ தஷ்யிஷஉஸ்மிஹஜுஃவு ஷெ ஜெ்யாதிஃ” என்பது. எல்லாப் பூதங்களையும் அதன் பாதமாகச் சொல்லும் வாக்யம் 2 “வாஷொஸ்ய ஸவாா ஹூதாநி, த்ரிவாஷஸ்யாமெ்ருதம் திவி” என்பது.

ஹஷொஉஹியாநாஷெநி வெநு தயா வெஷொ வ-ீணநிமஊா்துயாஹி உஶ-ீநழ ‖ உ௬ ‖

I (சா—3-13-7) வ்யஷ்டிஸிருஷ்டிக்குமேலும் ஸமஷ்டிஸிருஷ்டிக்குமேலும் அப்ராக்ருதஸ்தானத்தில் மேல் இதற்கு மேல்பட்டது இல்லாமல் எல்லாவற்றுக்கும் மேல்பட்ட உயர்ந்த லோகங்களில் எந்த ஜ்யோதிஸ்ஸு ப்ரகாசிக்கிறதோ,அதுதான் புருஷனுக்குள்ளேயிருக்கும் ஜ்யோதிஸ்ஸு.

2 (சா—8-12-9) எல்லாப் பூதங்களும் அவனுடைய ஒரு பாதம்; நாசமில்லாத அவனுடைய மூன்று பாதங்கள் அப்ராகிருதஸ்தானத்தில் இருக்கின்றன.

சொன்ன வாக்யம் காயத்ரி என்கிற சந்தஸைச்சொல்லுகிறபடி யால் கீழ்ஸூத்ரத்தில் சொன்னபடி அன்று என்றால், இல்லை; அப்படி(பரமாத்மாவைக்காயத்ரீ சந்தஸாக)த்யானம் பண்ணுவது உபதேசிக்கப்படுகிறபடியால். அப்படியே வேறிடத்திலும் பார்க்க லாம். அந்த இடம் "𑌸𑍈𑌷𑌾 𑌵𑌿𑌰𑌾𑌡𑌨𑍍𑌨𑌾𑌦𑍀𑌤𑌿" (சா-4-3-8) என்பது.

𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌪𑌾𑌦𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌶𑍍𑌚𑍈𑌵𑌮𑍍 ॥ ௨௭ ॥

பூதம் முதலானவைகளைப் பாதங்களாகச் சொல்லுகிறபடியா லும், பரமாத்மாவைக் காயத்ரியாகத் தியானம் பண்ணச் சொன் னது தகுந்தது. பூதம் முதலானவைகள்— பூதங்கள் ப்ருதிவீ, சரீ ரம், ஹ்ருதயம் என்பவைகள். இவைகள் பாதங்களாக அதே கண் டத்தில் முதல் நாலு மந்த்ரங்களில் சொல்லப்படுகின்றன.

𑌉𑌪𑌦𑍇𑌶𑌭𑍇𑌦𑌾𑌨𑍍𑌨𑍇𑌤𑌿 𑌚𑍇𑌨𑍍𑌨𑍋𑌭𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌪𑍍𑌯 𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌤𑍍 ॥ ௨௮ ॥

விஷயவாக்யத்தில் "𑌦𑌿𑌵𑌃" என்றும், மற்ற வாக்யத்தில் '𑌦𑌿𑌵𑌿 என்றும் பதங்களுக்குப் பேதம் இருக்கிறபடியால் அந்த வாக் யத்தின் ப்ரத்யபிஜ்ஞை இல்லை என்றால், இது சரியன்று. இரண்டு விதமாகச் சொல்வதிலும் விரோதமில்லாமையால்.

அவ:— பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் சொல்லு கிறார்:—

𑌕𑍌𑌕𑍍𑌷𑍇𑌯𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑍈𑌕𑍍𑌯𑌂 𑌕𑌥𑌿𑌤𑌮𑌿𑌹 𑌪𑌰𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌵𑌿𑌹𑌿𑌤𑌤𑌃
𑌕𑌾𑌰𑌣𑌂 𑌵𑌹𑍍𑌨𑌿𑌰𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 । 𑌨𑍈𑌵𑌂 𑌪𑍁𑌂𑌸𑍂𑌕𑍍𑌤𑌵𑌾𑌕𑍍𑌯𑍋𑌦𑌿𑌤𑌪𑌰𑌪𑍂𑌰𑍁𑌷𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌾𑌤𑍍 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑍁 𑌸𑌾𑌮𑍍𑌯𑌾𑌦𑌿𑌵 𑌨𑌿𑌗𑌦𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌪𑌾𑌦𑌾𑌃 ॥

பரமான ஜ்யோதிஸ் என்று சொல்லப்பட்டதற்கு, ஜாட ராக்னியுடன் ஐக்யம் இங்கே சொல்லப்படுகிறது. அது ஜகத் துக்கு உபாதாநகாரணமாயிருப்பது வேறு வித்யையில் அறியப் படுகிறது. ஆகையால் அக்நி ஜகத்காரணம். இது பூர்வபக்ஷம். இது கூடாது. புருஷஸூக்த வாக்யத்தால் சொல்லப்பட்ட

பரமபுருஷனுடைய ப்ரத்யபிஜ்ஞை இங்கே வருகிறது. அதற்குப் பாதமில்லை. பரமாத்மாவைக் காயத்ரி என்று சொன்னதற்குக் காரணம் நாலுபாதங்களிருப்பதாகிய ஒற்றுமை. அந்த இடத்தில் பூதம் முதலானவைகள் காயத்ரிக்கு (பரமாத்மாவுக்கு)ப் பாதங்களாகச் சொல்லப்படுகின்றன.

குறிப்பு— (1) விஷயவாக்யத்தில் ஆகாசத்துக்கு மேலேயிருக்கிற ஜ்யோதிஸைச் சொல்லி, புருஷனுக்குள்ளேயிருக்கிற ஜாடராக்னியும் அதுவும் ஒன்று என்று சொல்லியிருக்கிறது. விசாரிக்கப்படுகிற ஜ்யோதிஸு ப்ரஸித்தமான ஸூரியன் முதலான தேஜஸுகள். அவைகள் பிரகிருதியின் கார்யங்கள். ஜாடராக்னியும் அதே ஜாதி. ஆகையால் ஸமானாதிகரணமான பதங்களால் ஜ்யோதிஸ்ஸையும் ஜாடராக்னியையும் சொல்லியிருக்கிறது. ஆகையால்ஜ்யோதிஸ் அக்னிதான். இது பூர்வபக்ஷம். இங்கேசொன்னது லிங்கம். ஜ்யோதிஸ் என்பது ச்ருதி. இந்த இரண்டையும் பூர்வபக்ஷிதனக்குஅநுகூலமான காரணங்களாகச்சொல்லுகிறான்.

(2) ஜ்யோதிஸ்ஸை ஜகத்காரணமாக இங்கே சொல்லவில்லையே, அதை எப்படி ஜகத்காரணமாகச் சொல்லலாம் என்றால், அவன் பதில் சொல்லுகிறான்— அக்ஷரவித்யையில் (முண்டகம் 2- 2- 11) அக்ஷரத்தை ஜகத்காரணமாகவும் அளவில்லாத ஜ்யோதிஸ்ஸையுடையதாகவும் சொல்லியிருக்கிறது. ஆகையால் இங்கே சொன்ன ஜ்யோதிஸ்ஸும் ஜகத்காரணம்.

(3) விஷயவாக்யத்திலிருக்கிற 'யக்ஷ' என்கிற பதம், வேறிடத்தில் ப்ரஸித்தமானதை இந்த வாக்யம் சொல்லுகிறது என்பதைக் காட்டுகிறது. ஆகையால் ஜ்யோதிஸ் என்கிற பதம் ச்ருதியாயிருந்தாலும் துர்பலம். பூர்வபக்ஷி சொல்லுகிற லிங்கமுமில்லை. சொல்லப்பட்ட ஜ்யோதிஸ் இருக்கிற இடத்தை விஷயவாக்யம் "விஶ்வத꞉ ப்ருஷ்டேஷு ஸர்வத꞉ ப்ருஷ்டேஷு" என்று சொல்லுகிறது. விச்வம் என்பது வ்யஷ்டி ஸ்ருஷ்டியில் உண்டு பண்ணப்பட்டவைகள். ஸர்வ என்பது ஸமஷ்டிஸ்ருஷ்டியில் உண்டுபண்ணப்பட்டவைகள். இந்த இரண்டு பதங்களாலே அந்த இடம் ப்ரக்ருதிமண்டலத்துக்கு மேலே இருக்கிறது என்று ஏற்படுகிறது. ஆகையால் அங்கிருக்கும் ஜ்யோதிஸ் ப்ரக்ருதியின் கார்யம் அன்று. ஜாடராக்னி ப்ரக்ருதியின்கார்யம். ஆகையால்

இரண்டும் ஒன்ருயிருக்கமுடியாது. ஆகையால் இரண்டையும் ஒன்ருகச் சொன்னதற்குக் கருத்து.—ஜ்யோதிஸ்ஸான பரமாத்மாவை ஜாடராக்னிக்கு ஆத்மாவாக த்யாநம் பண்ணவேண்டும் என்பது. இந்த த்யானத்துக்குப் பலனும் மேல்வாக்யத்தில் சொல்லப்படுகிறது.

(4) ஈக்ஷத்யதிகரணத்தில் சொல்லப்பட்ட தீர்மானத்துக்குப் பாதம் (வாயம்) ஏற்படவில்லை. அநுகூலமாக லிங்கங்களும் ப்ரகரணம் என்கிற ப்ரமாணமுமிருக்கின்றன. விஷயவாக்யத்திலிருக்கிற 'திவ:' என்கிற பதம் 'வாஜொzஸ்ய ஸவ-ூா ஹ-ூ தாநி' என்கிற வாக்யத்திலிருக்கும் ' திவி ' என்கிற பதத்தை நினைவுக்குக்கொண்டுவந்து, இரண்டுவாக்யங்களாலும்காட்டப்பட்டதுஒன்று என்றுகாட்டி, இரண்டு வாக்யங்களையும் ஒரு ப்ரகரணமாகச்செய்கிறது. அந்தவாக்யம் புருஷஸூக்தத்திலிருந்து இங்கே உதாஹரணமாகச் சொல்லப்பட்டது. அதில் சொல்லப்பட்டவன் பரமாத்மா. ஆகையால் 'திவ:'என்னும் பதம் பரமாத்மாவின் ப்ரத்யபிஜ்ஞையை உண்டுபண்ணி, விசாரிக்கப்படும் ஜ்யோதிஸ் பரமாத்மா என்று தெரிவிக்கிறது. ஊ்ூலோகத்தின் ஸம்பந்தம் லிங்கம். இரண்டு வாக்யமும் ஒன்ருயிருப்பது ப்ரகரணம்.

(5) பூர்வபக்ஷி கேட்கிருன்— முன் வாக்யம் காயத்ரீ என்கிற சந்தஸ்ஸை யன்ருே சொல்லுகிறது; ஆதலால் பரமாத்மாவின் ப்ரத்யபிஜ்ஞை எப்படி வரும்—என்று. பதில்— காயத்ரீ என்கிற பதம் பரமாத்மாவையே சொல்லுகிறது. அவனுக்கும் காயத்ரிக்கும் நாலுபாதங்களிருக்கிறபடியால் அவைகளுக்கு ஒற்றுமை இருக்கிறது. இந்த ஒற்றுமையைக்கொண்டு பரமாத்மாவை காயத்ரியாக உபாஸிக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது.நாலு பாதங்களுள்ளகாயத்ரிஇருக்கிறது–" ஊ்ூவீவதிஃ। வடிெந வீயிதஃ। ஊ்ூவெநா வுஷா। ஸதிஷூ ஸாவஸஹிஃ" என்று. பரமாத்மாவுக்குப் பூதங்கள் (பத்தஜீவன்கள்) ப்ருதிவீ, சரீரம், ஹ்ருதயம்- ஆகிய நாலு பாதங்கள் இருக்கின்றன என்று இந்த உபநிஷத்தே காட்டுகிறது.

(6) பூர்வபக்ஷி மறுபடியும் கேட்கிருன்— 'திவ:, திவி' என்கிற சொற்களுக்குப் பேதமிருக்கிறது. எப்படி ப்ரத்யபிஜ்ஞை

உண்டாகும்?—என்று. இதற்கு விரோதமில்லை என்று கடைசி ஸூத்ரம் சொல்லுகிறது. எப்படி என்றால், 'திவி' என்பதிலுள்ள ஏழாம் வேற்றுமை அதற்கு வெளியிலிருப்பதைச் சொல்லுகிறது. அது மேலாகவோ கீழாகவோ இருக்கலாம். 'திவ:' என்பதிலுள்ள ஐந்தாம் வேற்றுமை 'பர:' என்னும் சப்தத்துடன் சேர்ந்திருப்பதாலே மேலிருப்பதையே காட்டுகிறது. முதல் சொன்னது பொதுவானது; இரண்டாவது விசேஷமானது. இரண்டையும் சேர்த்து ப்ரயோகிக்கும்போது பொதுவானது விசேஷத்தையே தெரிவிக்கும். ஆகையால் விரோதமில்லை. வ்ருக்ஷாக்ரே ஶ்யேந:, வ்ருக்ஷாக்ராத் பரத: ஶ்யேந: என்பது உதாரணம். இதின் பொருள்— மரத்தின் நுனியில் கழுகு, மரத்தின் நுனிக்குமேலே கழுகு—என்பது.

(7) ஜ்யோதிஸ் என்கிற சொல் எதைச் சொல்லுகிறது என்றால், அது அளவில்லாத ப்ரகாசமுள்ள திருமேனியையுடைய பரமாத்மாவைச் சொல்லுகிறது. இது பூர்வபக்ஷி சொன்ன வாக்யத்தாலேயே ஏற்படுகிறது. அந்த வாக்யம்— "ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம் நேமா வித்யுதோ பாந்தி குதோऽயமக்நி:" (கட-5-15) என்பது. இதில் தத்ர என்பதுகீழே சொல்லப்பட்ட ஜகத்காரணமான அக்ஷரத்தைக்காட்டுகிறது. வாக்யத்தின் பொருள்—அக்ஷரம் ப்ரகாசிக்கையில் ஸூரியன்ப்ரகாசிக்கிறதில்லை. சந்திரனும் நக்ஷத்ரங்களும் பிரகாசிக்கிறதில்லை. இந்த மின்னலும் பிரகாசிக்கிறதில்லை. இந்த அக்னி எப்படிப்ரகாசிக்கும் என்பது. இதனால் அக்ஷரத்தின் தேஜஸ்ஸுக்கு அளவில்லையென்றும், மற்ற தேஜஸ்ஸுகளைத் தெரியாதபடி அது செய்கிறது என்றும் ஏற்படுகிறது. அக்ஷரம் பரமாத்மா என்பது இரண்டாவது பாதம் 5-வது அதிகரணத்தில் ஸ்தாபிக்கப்படுகிறது. அங்கே சொல்லப்படுகிற காரணங்களில் அளவில்லாத தேஜஸ்ஸு சேரவில்லை. ஆதலால் அந்யோந்யாச்ரயமில்லை. (72)

அவ:— ஸ்ரீபாஷ்யபங்க்தியில் விரோதமிருப்பதாகத் தோன்றுவதற்குப் பரிஹாரம் சொல்லுகிறார்—

உக்தம் ஜ்யோதிராத்யதிகரணயுகளே காரண
த்வஸ்தலிங்காதிதி பாஷ்யாந்த்யலிங்கம் ஸ்வவசனவிஹிதம்
நேதி பாஷ்யம் கதம் ஸ்யாத் । உக்தம் விஶ்வாதிலிங்கம் ஸ
திஹ நது பராம்ருஷ்டலிங்கம் ஸ்வஸித்த்யை த்வஶ்யந்து பூ
ர்வபக்ஷீ வ்யவஹரதி ததா வ்யாஹதிஸ்த்வத்ர ஶங்க்யா ॥௭௮॥

ஜ்யோதிஸ் முதலான இரண்டு அதிகரணங்களில் காரணத்வத்துடன் சேர்ந்திருக்கிற லிங்கத்தைக்கொண்டு பூர்வபக்ஷம் சொல்லப்படுகிறது என்று ஸ்ரீபாஷ்யம் முதலில் சொல்லி, பிறகு "தன் வசனத்தால் பரமாத்மலிங்கம் சொல்லப்படவில்லை" என்று சொன்னது எப்படிப் பொருந்தும்? இப்படி-விஶ்வதஃ என்பது முதலான சொற்களாலே சொல்லப்பட்ட லிங்கமிருக்கிறது. ஆனால் ஸித்தாந்திக்கு இஷ்டமான ஜகத்காரணத்வத்தைக் காட்டக்கூடிய பரமாத்மலிங்கமில்லை என்று எண்ணி பூர்வபக்ஷம் சொல்லுகிறான் பூர்வபக்ஷி. ஆதலால் விரோதமிருப்பதாகச் சங்கிக்கவேண்டாம்.

குறிப்பு— ஜகத்காரணத்வத்தோடு சேர்ந்திருக்கும் ஒரு லிங்கத்தைக்கொண்டு பூர்வபக்ஷம் சொல்லப்படுகிறது என்று அவதாரிகையில் ஸ்ரீபாஷ்யத்தில் சொல்லியிருக்கிறது. இந்தவிடத்தில் அளவில்லாத தேஜஸை உடையவனாயிருப்பது சொல்லப்பட்டிருக்கிறது. இது ஜகத்காரணத்வத்தோடு சேர்ந்திருக்கும் லிங்கம் தானே. இப்படியிருக்க, பரமாத்மலிங்கமில்லை என்று மேலே ஸ்ரீ பாஷ்யத்தில் சொன்னது எப்படி? இரண்டுக்கும் விரோதமிருக்கிறதேயென்றால், விரோதமில்லை. அவதாரிகையிலுள்ள ஸித்தாந்திவாக்யத்துக்கும், பிறகுள்ள பூர்வபக்ஷியின் வாக்யத்துக்கும் கருத்து வெவ்வேறு. பூர்வபக்ஷியின் கருத்தோ வருமாறு— ஜ்யோதிஸ் ஜகத்காரணம் என்று ஸாதிப்பதற்குத் தகுந்த லிங்கம் விஷய வாக்யத்திலிருப்பது உண்மைதான். அந்த லிங்கம் காரணத்வத்தைப் பொதுவாய் காட்டுமே தவிர, பரமாத்மா உபாதாந காரணமும் நிமித்த காரணமும் என்று ஸித்தாந்திக்கு இஷ்டமானதைக் காட்டமாட்டாது என்பது. விஷயவாக்யத்தில் உள்ள லிங்கமும் ப்ரகரணத்தில் முன் வாக்யத்தில் உள்ள "பாதோ஽ஸ்ய ஸர்வாபூதாநி"

என்கிற லிங்கமும் சேர்ந்து உபயவிதகாரணத்வத்தைக் காட்டி பரமாத்மலிங்கமாக ஆகக்கூடுமென்பது ஸித்தாந்தியின் கருத்து.*

இந்த்ரப்ராணாதிகரணம் (11)

𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑍍𑌤𑌥𑌾𑌨𑍁𑌗𑌮𑌾𑌤𑍍 ॥ ௨௯ ॥

இந்திரன் ப்ராணன் என்ற பதங்களாலே சொல்லப்பட்டவன் ஜீவனைக்காட்டிலும் வேறு; பரமாத்மா. அப்படியிருந்தால்தான் மேலே சொல்லப்படுகிற ஆநந்தம், அஜரம், அமிருதம் என்கிற பதங்களுடன் ப்ராணன் என்கிற பதத்துக்கு ஸாமாநாதிகரண்யம் ஏற்படுமாகையால். ப்ராணனே ஆனந்தம் அஜரம் அமரம் என்று உபநிஷத்து மேலே சொல்லுகிறது. அந்தப் பதங்கள் பரமாத்மாவையே சொல்லுகிறவைகள். ப்ராணன் என்கிற சொல்லும் அவனையே சொன்னால்தான் ஸாமாநாதிகரண்யம் ஏற்படும். ஜீவனைச் சொன்னால் அது ஏற்படாது.

𑌨 𑌵𑌕𑍍𑌤𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑍋𑌪𑌦𑍇𑌶𑌾𑌦𑌿𑌤𑌿 𑌚𑍇𑌦𑍍
𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌭𑍂𑌮𑌾 𑌹𑍍𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 ॥ ௩௦ ॥

உபதேசம் பண்ணுகிறவனுடைய ஆத்மா சொல்லப்படுகிறபடியால் கீழ்சொன்னது கூடாது என்றால், அன்று; இந்த ப்ரகரணத்தில் பரமாத்மாவினிடத்தில் சேர்ந்திருக்கும் பல தர்மங்கள் சொல்லப்படுகின்றன.

𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌤𑍂𑌪𑌦𑍇𑌶𑍋 𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑌵𑌤𑍍 ॥ ௩௧ ॥

உபதேசம் பண்ணுகிறவன் சாஸ்த்ரத்தாலே தன்னைப் பார்த்துக்கொண்டு செய்கிற உபதேசமிது. வாமதேவன் சொன்னதைப்போல.

𑌜𑍀𑌵𑌮𑍁𑌖𑍍𑌯𑌪𑍍𑌰𑌾𑌣𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑍍𑌨𑍇𑌤𑌿 𑌚𑍇𑌨𑍍𑌨 𑌉𑌪𑌾𑌸𑌾
𑌤𑍍𑌰𑍈𑌵𑌿𑌧𑍍𑌯𑌾𑌦𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌹 𑌤𑌦𑍍𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 ॥ ௩௨ ॥

ஜீவனுடைய லிங்கமும், முக்யப்ராணனுடைய லிங்கமுமிருப்பதாலே சொன்னது கூடாது என்றால், அப்படியன்று. உபா

---

* இது ச்ருதப்ரகாசிகையை அநுஸரித்து எழுதப்பட்டது; வேறு வழியைப் பாவப்ரகாசிகையில் பார்க்கவும்.

ஸனம் மூன்றுவிதம். மூன்றுவிதங்களும் வேறிடங்களில் சொல்லப்படுகின்றன. இங்கேயும் அவைகள் தகுந்தவைகள். அசேதநத்தோடு சேர்த்தும் சேதனர்களுடன் சேர்த்தும் தனியாகவும் பரமாத்மாவை உபாஸநம் பண்ணுவதை உபதேசிப்பதற்காக இப்படிச் சொல்லப்படுகிறது.

அவ— பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் சொல்லுகிறார்—

வித்₃யா ப்ராதர்த₃நீ ஸா வத₃தி ஹிததமோபாஸ்திகர்மேந்த்₃ர-
மேவ வ்யாதந்வாநா ப்ரஸித்₃த₄ப்ராணேந்த்₃ரலிங்க₃ம் ததே₃வ
விஶ்வகேது₃ரிதி சேந்ந । ப்₃ரஹ்ம த்₃வேதா₄ ஹ்யுபாஸ்யம்
ப₃ஹுவித₄விஷயவிஶிஷ்டம் ஸ்வாத்₃யநா ச ப்ராணேந்த்₃ர-
ப்ராணோக்தி ப்ரப₃லதரமஹாவாக்யவைப₃ர்த்யந்த்₃ரம் ॥

அந்த ப்ரதர்தன வித்யை, (மனிதனுக்கு) மிகவும் ஹிதமான உபாஸனத்துக்கு இந்த்ரனையே கர்மமாகச் சொல்லுகிறது. ப்ரஸித்தமான ப்ராணன் இந்த்ரன் என்பதற்கு வேண்டிய அடையாளங்களும் அவனுக்கு உள்ளவைகளாகச் சொல்லப்படுகின்றன. ஆகையால், அந்த இந்திரன் ஜகத்காரணம். இது பூர்வபக்ஷம். இது கூடாது. ப்ரம்மத்தை வெகுவிதமான சேதனர்களையும் அசேதனங்களையும் விசேஷணங்களாக உடையதாகவும், அந்த விசேஷணங்கள்சேராத ஸ்வரூபமுள்ளதாகவும், ஆக இப்படி மூன்று விதமாக உபாஸிக்கவேண்டும். ப்ராணன் இந்த்ரன் என்கிற பதங்களைக்கொண்ட ஆரம்பமும், அதிகபலமுள்ள மஹாவாக்யத்துடன் விரோதிப்பதினால் பாதிக்கப்படுகிறது.

குறிப்பு— (1) ப்ரதர்தன வித்யையில், ப்ரதர்தனன் என்பவன் மனிதனுக்கு மிகவும் ஹிதமானதை உபதேசிக்கவேண்டுமென்று இந்திரனைக் கேட்க, அவனும் * "மாமுபாஸ்ஸ்வ" "ப்ராணோஸ்மி ப்ரஜ்ஞாத்மா தம் மாமாயுரம்ருதமித்யுபாஸ்ஸ்வ" என்று சொன்னான். இதனால் இந்த உபாஸனத்துக்கு இந்த்ரன் கர்மம் (உபாஸிக்கப்படுகிறவன்) என்று சொன்னதாக

* (கௌஷீ—2-14) என்னை உபாஸி; நான் ப்ராணன், ஜ்ஞானரூபமான ஆத்மா, அந்த என்னை ஆயுஸ்என்றும் அமிருதம் என்னும் உபாஸி.

ஆயிற்று. அவன் த்வஷ்டாவின் பிள்ளையைக் கொன்றவனாகவும், வேதத்தைப் படித்துக்கொண்டிராத யதிகளை செந்நாய்களுக்குக் கொடுத்தவனாகவும், சொன்ன சொல்லைத் தவறின சில அஸுரர்களை ஹிம்ஸித்தவனாகவும் தன்னை சொல்லிக்கொள்ளுகிறான். இவைகள் ப்ரஸித்த இந்திரனுடைய லிங்கங்கள். முக்ய ப்ராண விஷயமாகவும் லிங்கங்கள் இருக்கின்றன. அவைகளாவன—ப்ராணன் உடம்பில் இருக்கிறவரையில் ஜீவனுக்கு ஆயுஸ் இருக்கிறது; ப்ராணனுடன் கூடப்போய் ஜீவன் அந்த லோகத்தில் அமிருதத்தை அடைகிறான்—என்பன. இப்படி ப்ரஸித்தமான இந்திரனை உபாஸிக்கவேண்டும் என்பதற்கு லிங்கங்கள் இருக்கின்றன. இந்த்ரன், ப்ராணன் என்கிற பதங்கள் ச்ருதிகள். ஆகையால் இந்த்ரனே ஜகத்காரணம். இது பூர்வபக்ஷம்.

(2) இந்திரனிடத்தில் ஜகத்காரணத்வம் என்கிற லிங்கம் இருப்பதாக இங்கே சொல்லவில்லையே என்றால், அவன் சொல்லும் பதில்— ஈக்ஷத்யதிகரணத்தில் (1—1—5) ஸத்தினிடத்தில் ஜகத்காரணத்வமும், முமுக்ஷூபாஸ்யத்வமும் சேர்ந்திருப்பதாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இங்கே முமுக்ஷூபாஸ்யத்வம் என்கிற லிங்கத்தாலே ஜகத்காரணத்வமும் இந்த்ரனிடத்திலிருப்பதாக ஏற்படுகிறது.

(3) இந்தப் பூர்வபக்ஷம் சரியன்று. முமுக்ஷுவாலே உபாஸிக்கத்தகுந்தவன் ஜீவன் அன்று. அவனும் ஸம்ஸாரத்திலிருந்து மூன்றுவிதமான தாபங்களை அனுபவிக்கிறான். ஆகையால் மோக்ஷத்துக்காக உபாஸிக்கவேண்டியவன் ஜீவனைக்காட்டிலும் வேறானவன். அதை ஆனந்தவல்லி வாக்யம் காட்டுகிறது. "𑌯𑌦𑌾 𑌹𑍍𑌯𑍇𑌵𑍈𑌷 𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌦𑍃𑌶𑍍𑌯𑍇𑌽𑌨𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑍇𑌽𑌨𑌿𑌰𑍁𑌕𑍍𑌤𑍇𑌽𑌨𑌿𑌲𑌯𑌨𑍇𑌽𑌭𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇। 𑌅𑌥 𑌸𑍋𑌽𑌭𑌯𑌂 𑌗𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 (தைத் — ஆன-7) இந்த வாக்யத்தில் அபயம் என்பதற்கு பயம் (ஸம்ஸார பயம்) இல்லாமைக்காக என்பது பொருள். 'ப்ரதிஷ்டாம்' என்பதாலே வேறு எண்ணம் கலப்பில்லாத நிலையான த்யானம் சொல்லப்படுகிறது. இதுதான் உபாஸநம். அதன் க்ரமத்தை நாலு விசேஷணங்களாலே சொல்லியிருக்கிறது. அத்ருச்யே என்பது சக்ஷுஸ் முதலான இந்திரியங்களாலே அறியப்படாதவன் என்பதைச் சொல்லி,

அவன் அசேதனத்தைக்காட்டிலும் வேறு என்பதைக் காட்டு கிறது. சூத்ரம்—கர்மத்தாலே செய்யப்பட்ட உடம்பு. அதில்லாதவன் என்பதைச் சொல்லுகிற ஊநாத்ம என்கிற பதம் பத்த ஜீவன்களிடமிருந்து இவனைப் பிரிக்கிறது. "ஊநிருக்த" என்பது தேவன் மனிதன் முதலான பதங்களாலே சொல்லப்படாதவன் என்று பொருளுள்ளதாய், ஒரு காலத்தில் இந்தப் பதங்களால் சொல்லத்தகுந்த முக்தனைக்காட்டிலும் இவன் விலக்ஷணன் என்பதை விளக்குகிறது. ஆதாரமில்லாத வன் என்பதைச் சொல்லுகிற "ஊநிலயநே" என்கிற பதம் இவனைப் பரமாத்மாவினால் யரிக்க(தூக்க)ப்பட்ட நித்யர்களிட மிருந்து பிரிக்கிறது. ஆகையால் முமுக்ஷுபாஸ்யன் பரமாத்மா; இந்திரன் அன்று.

(4) கீழே சொன்னது லிங்கம். இந்திரனை ஜீவனென்று சொல்லுவதற்கும் லிங்கங்களிருக்கின்றனவே என்றால், உப நிஷத்தின் கடைசியில் ப்ராணனை ஆநந்தம் அஜரம் அமரம் என்று சொல்லியிருக்கிறது. இந்தப் பதங்கள் பரமாத்மாவின் தர்மங் களைச் சொல்லுகின்றன. இவைகளுக்கு ப்ரமாணம்— (1)ஆநந்தோ ப்ரஹ்ம" என்கிற வாக்யமும், (2)அஜர,அமரஎன் கிற பதங்களும். அவைகள் "ஊவஹதபாப்மா விஜரோ விம்ருத்யு:"என்கிற பதத்துடன் சேர்த்துப்படிக்கப்பட்டிருப்பதா லும்,ஊவஹதபாப்மாஎன்பது "ஸர்வேப்ய:பாப்மப்ய உதித:" என்கிற சாந்தோக்ய வித்யையிலிருக்கிற வாக்யத்தின் அர்த் தத்தைச் சொல்லுவதாலும் அந்தப் பதங்கள் பரமாத்மாவின் தர்மங்களைக் காட்டுகின்றன. ஆகையால், இவைகளுடன் ஸமா நாதிகரணமான ப்ராணன் என்பதும் பரமாத்மாவையே சொல்ல வேண்டும். ஆகையால், உபநிஷத்தில் முதலிலிருக்கிற ப்ராணன் என்கிற சொல்லும் பரமாத்மாவையே சொல்லுகிறது. இதை முதல் ஸூத்ரம் சொல்லுகிறது. "ப்ராணோஸ்மி" என்று சொல்லப்படுகிற இந்திரனைச்சொல்லும் இந்திரன் என் கிற பதமும் பரமாத்மாவையே சொல்லவேண்டும்.

(5) இரண்டாவது ஸூத்ரத்தில் சொன்ன பரமாத்மா வுடன் ஸம்பந்தமுள்ள தர்மங்கள் எவைகள் என்றால், ஸர்வாதா ரத்வம் (எல்லாவற்றுக்கும் ஆதாரமாயிருப்பது); ஸாது என்றும்

அஸாது என்றும் சொல்லப்படுகிற கர்மங்களாலே பெருமையையும் சிறுமையையும் அடையாதவனாயிருப்பது; எல்லா ஜீவன்களையும் கர்மங்களைச் செய்விப்பது; லோகத்தை ரக்ஷிப்பது; உலகத்துக்குச் சேஷியாயிருப்பது; எல்லாரையும் நியமனம் பண்ணுவது என்பவைகள். இத்தனையும் பரமாத்மாவின் தர்மங்களாயிருக்கையால் இந்த்ரன், ப்ராணன் என்கிற பதங்களும் பரமாத்மாவையே சொல்லுகின்றன என்று தீர்மானம் பண்ணுவது தகுந்தது. ஆகையால் இந்த்ரன் ப்ராணன் என்கிற பதங்கள் ச்ருதியாயிருந்தாலும் துர்பலங்கள். ஜகத்காரணம் ஜீவன் அன்று என்று ஆநந்தமயாதிகரணத்தில் செய்த தீர்மானம்தான் நிலைநிற்கிறது.

(6) "மாமுபாஸ்வ" என்கிற வாக்யம் முதலிலிருக்கிறது. அதைப் பின்னால் வருவதைக்கொண்டு பாதிக்கலாமா என்றால், அதுக்கும் முன்னாலே முமுக்ஷூபாஸ்யத்வம் சொல்லியிருக்கிறது. உபநிஷத்திலிருக்கிற எல்லா வாக்யங்களும் சேர்ந்து ஒரு மஹா ப்ரகரணம். அதற்கும் ஆரம்பத்துக்கும் விரோதமிருந்தால் அந்த மஹா ப்ரகரணம்தான் ப்ரபலம். ஆரம்பம் துர்பலம்.

(7) இந்திரனுடைய லிங்கத்தையும் முக்ய ப்ராணனுடைய லிங்கத்தையும் சொல்லுவதின் கருத்து என்ன என்றால், இந்த்ரன் ப்ராணன் என்கிற பதங்களுக்கு ரூடியாலுள்ள அர்த்தத்தை விடக்கூடாது என்பது. அப்போது மாமுபாஸ்வ என்பதற்குப் பொருள்- என்னுடைய ஆத்மாவை உபாஸி என்பது. இது சேதனனை விசேஷணமாகவுடைய பரமாத்மாவின் உபாஸனம். "ப்ராணோऽஸ்மி" என்பதற்கு ப்ராணனுக்கு ஆத்மாவான பரமாத்மாவை உபாஸி என்பது பொருள். இது அசேதனத்தை விசேஷணமாகவுடைய உபாஸநம். கடைசியில் * "ஸ ஏஷ ப்ராண ஏவ ப்ரஜ்ஞாத்மாऽநந்தோऽஜரோऽம்ருத:" என்கிற வாக்யம் பரமாத்மாவின் ஸ்வரூப உபாஸநத்தை விதிக்கிறது. இப்படி மூன்றுவிதமான உபாஸனங்களை விதிப்பதில் இந்த வித்யைக்குக் கருத்து.

* (கௌஷீ—2-62) அந்த இந்த ஸர்வஜ்ஞனான ஆத்மா ஆநந்தன், கிழத்தனமில்லாதவன், மரணமில்லாதவன்.

(8) என்னுடைய ஆத்மாவை உபாஸி; ப்ராணனுடைய ஆத்மாவை உபாஸி என்று சொல்லலாமே, "என்னை உபாஸி" என்று ஏன் வேறுவிதமாய்ச் சொல்லியிருக்கிறது என்றால், உபதேசம் செய்கிற இந்திரன், சாஸ்த்ரப்படி எல்லாச் சொற்களும் பரமாத்மாவையே சொல்லுகின்றன என்று அறிந்தவன். ஆகையால் "மாம்" என்று சொன்னான். மாம் என்பதற்கு என்னுடைய ஆத்மாவை என்பது பொருள். சாஸ்த்ரத்தை அறிந்த வாமதேவர் என்கிற ருஷியும் இப்படியே சொல்லியிருக்கிறார்– *தத்தைதத் பஶ்யந்ருஷிர்வாமதேவ: ப்ரதிபேதே அஹம் மநுரபவம் ஸூர்யஶ்சாஹம் கக்ஷீவாந்ருஷி: - என்று. (74)

அவ— இந்த அதிகரணத்தை ஆரம்பிக்கவேண்டியதில்லை என்று எண்ணக்கூடிய சங்கையைக்காட்டிப் பரிஹாரம் சொல்லுகிறார்—

யல்லிங்கம் காரணைகஸ்திதமிதி கதிதம் ஜ்யோதிஷீ
ந்த்ரே ச தத்ர ப்ரக்யாதாந்யத்வநிஷ்டம் ப்ரதமமிதமத:
ஸந்த்ருதேர்வாஸ்த்யயோக: । ஸத்யம் தத்ஸர்வப்ர
க்ருதிமயி விஹிதா நேதி வஸ்துத்வதேதத் விஷ்ணூத்பத்த்யக்த
நீதிப்ரமித ஜநக வாதாவதாரே ப்ரதீக்ஷ்ய ஶங்கா ॥

ஜ்யோதிஸினிடத்திலும் இந்த்ரனிடத்திலும் இருக்கும் எந்த லிங்கங்கள் காரணமான ஒரு வஸ்துவிலிருப்பனவாகச் சொல்லப்பட்டனவோ, அந்த லிங்கங்கள் அவைகளைக் காட்டிலும் வேறு என்று ப்ரஸித்தமான பரமாத்மாவினிடத்திலிருப்பனவாக முன்னமே தீர்மானிக்கப்பட்டன. ஆகையால் அந்த லிங்கங்களைக்கொண்டு பூர்வபக்ஷம் சொன்னது தகுந்தது அன்று. அந்த லிங்கங்களுக்கு ஸர்வகாரணத்திலிருப்பது ஏற்படாவிட்டால், முன் செய்த தீர்மானத்துக்குப் பாதம் இல்லை. ஆகையால் சங்கைக்கு இடமில்லை என்று ஒருவன் சொன்னால், அதற்கு ஸமாதானம் சொல்லுகிறது நான்காம் பாதம். இது உண்மையே. விஷ்ணுவின் உத்பத்திவிஷயத்தில் சொல்லப்பட்ட ந்யாயத்தைக்கொண்டு பிரமித்தவனுக்கு புரோவாதத்தைப் பார்த்து சங்கை உண்டாகிறது.

(பிரு—3-4-10) அந்த இதையறிந்து வாமதேவ ருஷி—நான் மநுவாக இருந்தேன், நான் ஸூரியனாக இருந்தேன்; நான் கக்ஷீவான் என்கிற ருஷியாயிருந்தேன்—என்று எண்ணினான்.

குறிப்பு— (1) இந்த இரண்டு அதிகரணங்களில் சொல்லப்பட்ட அளவில்லாத ப்ரகாசமுள்ளது, முமுக்ஷுவாலே உபாஸிக்கத்தகுந்தது என்கிற லிங்கங்களாலே ஜகத்காரணத்வத்தின் நினைவு வருகிறதா? இல்லையா? வந்தாலும், வராவிட்டாலும், பூர்வபக்ஷத்தைச் சொல்ல இடமில்லை. முதல் பக்ஷத்தில் அந்தக் காரணத்வமானது பரமாத்மாவினிடமிருப்பதாகஆகாசாதிரணத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஆகையால், இந்த லிங்கங்களும் பரமாத்மாவினிடத்திலேயே இருப்பவை. ஆகையால் ஜ்யோதிஸும் இந்திரனும் பிரஸித்த ஜ்யோதிஸும் இந்திரனும் அல்ல என்று ஏற்படுகிறபடியால், பூர்வபக்ஷம் சொல்லுவதற்கு இடமே இல்லை. இரண்டாவது பக்ஷத்திலும், ஈக்ஷத்யதிகரணம் முதலான இரண்டு அதிகரணங்களில் செய்த தீர்மானத்துக்கு விரோதமே யில்லை. விரோதமிருப்பதாக எண்ணித் தானே பூர்வபக்ஷம் சொல்லப்படுகிறது.

(3) இந்த ஆக்ஷேபத்தை ஒப்புக்கொண்டு ச்லோகம் பதில் சொல்லுகிறது. பரமாத்மாவே இந்திரனுகப் பிறந்திருக்கிறுன், அவனை முமுக்ஷு உபாஸிப்பது தகுந்ததுதான். பரமாத்மாவுக்கு உத்பத்தி உண்டோ என்றால், விஷ்ணு உபேந்த்ரனுக அவதாரம் பண்ணவில்லையா? உபேந்த்ரனை எல்லாரும் பரமாத்மாவாக ஒப்புக்கொள்ளவில்லையா? அதுபோல இந்த்ரனும் என்று முமுக்ஷு உபாஸிக்கவேண்டியவனுக ஆநந்தவல்லியில் சொல்லப்பட்டதையும், இந்த்ரன் தன்னை உபாஸிக்கச் சொன்னதையும் பார்த்து, ஒருவனுக்குச் சங்கை உண்டாகலாம். அதைத் தீர்ப்பதற்காக இந்த அதிகரணம்.

(4) ஜ்யோதிஸ் விஷயமாகப் பிறக்கும் சங்கையை ச்லோகம் சொல்லவில்லை. அது இப்படியிருக்கலாம்— அளவில்லாத ப்ரகாசம் ஜகத்காரணத்தில் இருப்பதாலும், அந்தக் காரணம் பரமாத்மா என்று தீர்மானிக்கப்பட்டபடியாலும் ஜ்யோதிஸ் பரமாத்மா. அதுதான் ஜீவனுடைய ஜாடராக்நி. பரமாத்மா ஒரு சிறு இடத்தில் இருக்கக்கூடுமோ என்றால், அவன் எங்குமிருக்கிறவன் அன்றே. இது சங்கை. இதைத் தீர்க்கும் விதம்—ஜாடராக்நி கார்யமானது; அது பரமாத்மாவாக இருக்கக்கூடாது. இரண்டையும் ஒன்றுகச் சொன்னது உபாஸனத்துக்காக. (75)

அவ:— இரண்டு அதிகரணங்களில் பூர்வபக்ஷி காட்டின லிங்கங்களுக்கு ப்ரயோஜநத்தைக் காட்டுகிறார்—

ஜ்யோதி: ப்ராணேந்த்3ரஶப்3தா3: பரதரவிஷயா: கார
ணத்வாத்3யுக்ததர்மோக்தித: ஸாத்4வ்யேஷாம் பஹுவிஹதி
ரதீ வ்யாப்தஶூந்யே து வ்ருத்தி: | [illegible]
க்ஷயித இஹ தயா த்4யாநஸித்3த்4யை [illegible] ப்ரா
ணாதி3லிங்கம் தத3வஹிதபரோபாஸநாந்மோக்ஷணாய ||

ஜ்யோதிஸ் ப்ராணன் இந்த்ரன் என்கிற பதங்கள், (அவைகளின் பொருள்களை விசேஷணங்களாகக் கொண்ட) பரமாத்மாவைச் சொல்லுகின்றன; காரணமாயிருப்பதுடன் சேர்ந்த தர்மங்களைச் சொல்லுகிறபடியால். இது ஸரியானது. அந்தப் பதங்கள் விசேஷ்யமான பரமாத்மா வரையில் போகாமல் ரூடியால் விசேஷணங்களை மாத்ரம் சொல்லுவதானால் பல விரோதங்கள் வருகின்றன. பரமாத்மாவை ஜாடராக்னியின் ஆத்மாவாகச் சொல்லியிருப்பது என்பது ஒரு பலனை அடைய அவனை அப்படித் தியானம் பண்ணுவதற்காக. முக்ய ப்ராணனுடைய லிங்கமும், இந்த்ரனுடைய லிங்கமும், இந்த்ரனையும் ப்ராணனையும் விசேஷணமாகவுடைய பரமாத்மாவை உபாஸநம் பண்ணி மோக்ஷம் அடைவதற்காகச் சொல்லப்பட்டன. (76)

அவ:— பரமாத்மாவைத் தவிர வேறானவைகளைச் சொல்லும் சொற்களைப் பரமாத்மா விஷயத்தில் உபயோகப்படுத்தும் போது அவைகள் அவனை எந்த வழியாய்க் காட்டுகின்றன என்பதைச் சொல்லுகிறார்:—

கார்யம் யச்ச கர்மவஶ்யம் யத3பி த்3ருட4ஸித்3த4ம் [illegible]
[illegible] ஶப்3தை3ர் நிருக்தைர் ப்3ரஹ்மணி ஸ்யாச்ச
க்வசித்3 க3திஹதா ரூடி4 [illegible] | தஜ்ஜ்ஞாநந்த்3ர
[illegible] விவக்ஷா ஸ்யாதீ3ஶே
ஜ்யோதிரிந்த்3ராதி3ஶப்3தை3ர் [illegible] ||

எது கார்யம் (உண்டுபண்ணப்பட்டது) ஆகவோ எது கர்மத்துக்கு உட்பட்டதாகவோ திருடமாக அறியப்படுகிறதோ, அவைகளை ரூடியாலே சொல்லுகிற பதங்களால் ப்ரம்மத்தைச் சொல்லும்போது, சில இடங்களில் வேறு வழியில்லாமலிருந்தால், ரூடி

யைத் தள்ளிவிடவேண்டியது; ஐந்த்ரீநியாயப்படி. எந்த இடங்களில் பூர்வபக்ஷி காட்டும் லிங்கங்கள், யோகசக்தி முதலிய வழிகள்மூலம் பரமாத்மாவிடத்தில்பொருந்தமுடியாமல்அந்தந்தஜீவாதிகளைப்பற்றியே நிற்குமோ, அந்த இடங்களில் அவைகளை விசேஷணமாகவுடைய பரமாத்மாவைச் சொல்லுவதில் கருத்து. ஜ்யோதிஸ், இந்திரன் முதலான பதங்களால் சொல்லப்பட்ட விஷயங்களிலும், அஹம், த்வம் (நான், நீ) என்று சொல்லப் பட்டவைகளிலும், இந்தப்படி ஸர்வேச்வரனைச் சொல்லுவதிலேயே கருத்து.

குறிப்பு— (1) ஆகாசம் என்கிற சொல் ரூடியாலே பூதாகாசத்தைச் சொல்லுகிறது. ஆகாசத்தை ஜகத்காரணமாகச் சொல்லிப் பரமாத்மவிஷயத்தில் அது உபயோகப்படுத்தப் படுகிறது. இந்த இடத்தில் ரூடியால் ஏற்பட்ட அர்த்தத்தை விட்டுவிட்டு, யோகத்தாலே அந்தப் பதம் பரமாத்மாவைச்சொல்லுகிறது என்று கொள்ளவேண்டியது. இது ஐந்த்ரீ நியாயப்படி. இப்படியே ப்ராணன் என்கிற சொல் விஷயத்திலும்,

(2) இந்திரன் என்கிற சொல் ரூடியாலே ஸ்வர்க்கலோகத்துக்கு அதிபதியைச் சொல்லுகிறது. அவனைப்பற்றிச் சொல்ல பட்ட லிங்கங்கள் அவனைத்தவிர வேறொன்றைக் காட்டுகிறவைகளாகச் சொல்லமுடியாது. ஆகையால் இந்த்ரன் என்ற சொல்லுக்கு ரூடியால் ஏற்பட்ட அர்த்தத்தை விடமுடியாது. இந்திரனை முமுக்ஷூபாஸ்யனாய்ச் சொல்லியிருக்கிறது. இப்படி உபாஸிக்கவேண்டியவன் பரமாத்மா. ஆகையால் இந்திரன் என்கிற பதம் இந்திரனை விசேஷணமாகவுடைய பரமாத்மாவைச் சொல்லுகிறது என்று கொள்ளவேண்டும். இப்படியே, ஜ்யோதிஸ். ப்ராணன் என்கிற சொற்கள் விஷயத்திலும். இங்கே ஜ்யோதிஸ் என்னும் பதம் விஷயவாக்யத்திலுள்ள புருஷனுடைய ஜாடராக்னியைச் சொல்லுகிறது. அந்த வாக்யம் அதஃ யதஸ்ய பரோ ஜ்யோதிஃ என்பது. விஷயவாக்யத்தில் ப்ராணன் என்னும் பதம் முக்ய ப்ராணனையே லிங்கங்களாலே காட்டுகிறது.

(3) அஹம் வாஸ்மி என்கிறவிடத்தில் அஹம் என்கிற பதம் என்னை விசேஷணமாகவுடைய பரமாத்மாவையும், 'தத்த்வமஸி' என்கிறவிடத்தில், த்வம் என்கிற பதம் உன்னை விசேஷணமாகவுடைய பரமாத்மாவையும் சொல்லுகின்றன.

(4) ஆகாசம் ப்ராணன் ஜ்யோதிஸ் என்கிற பதங்களை காரியங்களையும், இந்த்ரன் என்கிற பதம் கர்மவச்யனையும் காட்டுகின்றன.

(5) இந்த ச்லோகத்தில் சொன்ன நியாயம் புதிதாய் காட்டப்படுகிறது. 14-வது ச்லோகத்தில் "ப்ரத்யூதாதீயாஃ" என்று சொல்லப்பட்டவைகளில் இது ஒன்று. (77)

See p.36

அவ:— சாஸ்த்ரத்தின் ஆரம்பமான ஈக்ஷத்யதிகரணம் முதல் ஏழு அதிகரணங்களில் காட்டப்பட்ட பரமாத்மாவினுடைய ஏழு குணங்களைச் சொல்லுகிறார்:—

स्वेच्छातः सर्वहेतुर्भूमगुणविभवानन्द-
निस्सीमहर्षः शास्त्रैकवेद्यदिव्याकृतिरनव-
धिकाकाशनादिस्वभावः । सर्वप्राणप्रवृत्ति-
स्थितिविघटनकृत्प्राणनो दिव्यदीप्तिः प्राणेन्द्राद्य-
न्तरात्मा प्रथमाधिकरणैः सप्तभिः प्रत्यपादि ॥
इति प्रथमाध्याये प्रथमः पादः ॥

ஸர்வேச்வரன் ஏழு அதிகரணங்களாலே ஏழு குணங்களுள்ளவனாகச் சொல்லப்படுகிறான். எப்படி என்றால், (1) தன் இச்சையாலேயே எல்லாவற்றுக்கும் காரணமாயிருப்பவன்; (2) நல்ல குணம் என்கிற பெருமையையுடையதும், முடிவில்லாததும், அளவில்லாததுமான ஆனந்தம் என்கிற குணமுள்ளவன், (3) தோஷம் கொஞ்சமுமில்லாத கர்மத்தால் உண்டுபண்ணப்படாத அப்ராக்ருதமான திருமேனியையுடையவன், (4) இடத்தாலும் காலத்தாலும் அளவுள்ளதாகச் செய்யப்படாமல் தான் ப்ரகாசிப்பது மற்றவைகளை ப்ரகாசிக்கச் செய்வது முதலான ஸ்வபாவத்தையுடையவன், (5) ப்ராணனோடு கூடியவைகளும், ப்ராணனில்லாதவைகளும் என்கிற பிரிவுள்ள உலகத்தைப் பிழைத்திருக்கும்படி செய்கிறவன்; (6) அளவில்லாத ஜ்யோதிஸாயிருப்பவன்; (7) ப்ராணன் இந்த்ரன் முதலானவைகளுக்கு ஆத்மாவாய் அவைகளுக்குள்ளேயிருப்பவன்.

'பூமகுண' என்பதாலே துக்கம் கலக்காத ஆனந்தம் காட்டப்படுகிறது. (78)

முதல் அத்யாயம் முதல்பாதம் முற்றிற்று.

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ॥

ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய மஹாதேஶிகாய நம: ॥

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன்

அருளிச்செய்த

அதிகரண ஸாராவளி.

(முதல் அத்தியாயம் இரண்டாம் பாதம்.)

ஆசாரியர்களால்

V. K. ராமாநுஜதாஸனைக்கொண்டு

எழுதப்பட்ட தமிழுரையுடன் கூடியது.

சின்னமு, ர. ஸ்ரீநிவாஸபாட்டராசாரியரால்

கும்பகோணம்

ஸ்ரீ கோமளாம்பா பிரஸ்ஸில்

அச்சிட்டு

வெளியிடப்பட்டது.

பஹுதாந்ய-ளு மாசி-மீ

1939 பிப்ரவரி.

—0—

விலை] [அணா-8

முதல் அத்யாயம்

இரண்டாம் பாதம்.

அவ:— முதல் பாதத்துக்கும் மற்ற மூன்று பாதங்களுக்கும் ஸங்கதியைச் சொல்லுகிறார்:—

[illegible]
‖ ௭௯ ‖

இந்த சாஸ்திரத்தில் முதல் அத்யாயத்தில் இருக்கும் அதிகரணங்களால் ப்ரம்மம் ஒன்றே ஜகத்காரணம் வேறு அன்று என்பது தீர்மானிக்கப்படுகிறது. அவைகளில் முதல்பாதத்தில் இருப்பவைகள் அயோக(ம)த்தையும், த்ரிபாதியில் (மற்ற மூன்று பாதங்களில்) உள்ளவைகள் அந்யயோ(ம)கத்தையும் பெரும்பாலும் போக்குகின்றன. அவைகளில் பூர்வபக்ஷத்திற்கு அநுகூலமாக ம்ருதுவான ஹேதுக்கள் முதலிலும், மிகவும் க்ரூரமான (பலமான) ஹேதுக்கள் கடைசியிலும் காட்டப்படுகின்றன. இது ஒருவிதமான ஸங்கதி. முதல்பாதம் எல்லா உபநிஷத்வாக்யங்களையும் பற்றி உண்டாகும் ஆக்ஷேபங்களைத் தீர்ப்பதற்காகச்செயயப்பட்டது. த்ரிபாதீ சில சில வாக்யங்களைப்பற்றிச் சொல்லப்படும் ஆக்ஷேபங்களைத் தீர்த்து அது வழியாக எல்லா வாக்யங்களுக்கும் உண்டாகும் ஆக்ஷேபங்களைத் தீர்ப்பதற்காகச் செய்யப்பட்டது.

குறிப்பு— (1) அயோகம்— பரமாத்மாவினிடத்தில் ஜகத்காரணத்வம் இல்லை என்பது. அந்யயோகம்— வேறு வஸ்துவான அசேதநத்தினிடமோ, சேதநனிடமோ ஜகத்காரணத்வம் இருக்கிறது என்பது. முதல் சொன்னது முதல் பாதத்திலும், மற்றது மற்ற மூன்று பாதங்களிலும் தூஷிக்கப் படுகின்றன. இதனால் பரமாத்மாவினிடத்தில் ஜகத்காரணத்வம்

இருக்கிறது என்பதும், மற்றவைகளிடத்தில் அது இல்லை யென்பதும், ஆகையால் பரமாத்மா ஒருவனே ஸர்வஜகத்கார ணம் என்பதும் ஸித்திக்கின்றன.

(2) 'ஷூாயஃ' (பெரும்பாலும்) என்கிற பதத்தால் முதல் பாதத்தில் கூந்யயொமவ்யவஹெஷமும், மற்ற மூன்று பாதங்க ளில் கயொமவ்யவஹெஷமும் சில அதிகரணங்களால் ஏற்படும் என்பது காட்டப்படுகிறது. ஆனாலும் முதல்பாதத்தில் கயொமவ்யவஹெஷம் ப்ரதாநம். மற்ற மூன்றில் கூந்யயொம வ்யவஹெஷம் ப்ரதாநம்.

(3) 'யதொ வா ஜமாநி' என்கிற வாக்யம் ப்ரம்மத் துக்கு லக்ஷணத்தைச் சொல்லுகிறது. லக்ஷணத்தில் அவ்யாப்தி, அதிவ்யாப்தி, அஸம்பவம் என்கிற மூன்று தோஷங்களும் இருக் கக்கூடா. அவ்யாப்திஎன்பது லக்ஷ்யத்தின் ஒருபாகத்தில் லக்ஷண மில்லாமை. ப்ரம்மம் ஒன்றேயாகையால் இந்த தோஷத்திற்கு இங்கு இடமில்லை. லக்ஷ்யத்தில் லக்ஷணம் கொஞ்சமும் இல்லாமை அஸம்பவம். இதைத்தான் அயோகம் என்று சொல்லுகிறது. இந்த அயோகம் இல்லை என்று சொல்லுவது முதல்பாதத்தின் கார்யம். லக்ஷ்யத்தைக் காட்டிலும் வேறொன்றில் லக்ஷணமிருப் பது அதிவ்யாப்தி. இதுதான் அந்யயோகம். இது இல்லை என்று த்ரிபாதியில் காட்டப்படுகிறது. ஸ்ரஹ காரணமெவ என்பது கயொமவ்யவஹெஷம். ஸ்ரஹெவ காரணம் என்பது கூந்யயொமவ்யவஹெஷம். (79)

அவ:— ஸ்ரீபாஷ்யத்தில் பாதங்களின் விஷயங்கள் சொல் லப்பட்டிருப்பதைக் காட்டுகிறார்—

கஸஷ்வஸஷ்ாவெஸ்வதா விஃவிஜவதாகாஷ்
விஷா ஷாஷெ்ஷ தீவாவதாரெஜவ்யமணி நயமெண:
ஸஂஷூவஜதா த்ரிவாஃ்யாஃ । கதஷாவஸஷ்விஜாநித
விஷயஸெஷாஃஷாஃ்வாஃஂ தாகெவிதெத்ரஃஂ தாரத
ஃ்ஂ நியதநிஜவெஷெ: ஷூாவ்யதாதீயமெநெ: ॥அ0॥

அஸ்பஷ்டங்களும், ஸ்பஷ்டங்களும், மிகவும் ஸ்பஷ்டங்களும், அசேதநனிடத்திலும் சேதநனிடத்திலும் இருக்கிறவைகளுமான லிங்கங்களை உடைய வாக்யங்கள் த்ரிபாதியிலுள்ள அதிகரணங்களால் விசாரிக்கப்படுகின்றனஎன்பது ஸ்ரீபாஷ்யத்திலும் வேதாந்ததீபத்தின் அவதாரிகையிலும் சொல்லப்படுகிறது. ஆகையால் முதல்பாதத்துக்கு விஷயம் மிகவும் அஸ்பஷ்டமான லிங்கங்களை உடைய வாக்யங்கள் என்று சிலர் அபிப்ராயப்படுகிறார்கள். இவைகளுக்குள் இந்த பேதம் பூர்வமீமாம்ஸையின் மூன்றாவது அத்யாயத்தில் சொல்லப்பட்டவைகளும் உறுதியான பலமுடையவைகளுமான ப்ரமாணங்களாலே ஏற்படுகிறது.

குறிப்பு— (1) வாக்யங்களும், அவைகளின் அர்த்தங்களும் ஒரேவிதமாயிருந்தாலும், ச்ருதி முதலிய ப்ரமாணங்களுடன் சேரும்போது அவைகளுக்குள் பேதமுண்டாகிறது. கேட்டவுடனே அர்த்தத்தைக் காட்டும் வாக்யம் மிகவும் ஸ்பஷ்டம். கொஞ்சம் தாமதத்துடன் காட்டுவது ஸ்பஷ்டம். அதிகதாமதத்துடன் காட்டுவது அஸ்பஷ்டம்.

(2) ப்ரமாணங்கள்— ச்ருதி, லிங்கம், வாக்யம், ப்ரகரணம், ஸ்தாநம், ஸமாக்யை- என்பன. இவைகளில் ஒவ்வொன்றும் கீழ்ச்சொன்ன ப்ரமாணத்தைக் காட்டிலும் துர்பலம். 5-வது ச்லோகத்தின் 3-வது குறிப்பைப் பார்க்க. (80)

அவ:— நான்கு பாதங்களிலும் பூர்வபக்ஷிகள் பூர்வபக்ஷங்கள் சொல்லும் ப்ரகாரங்களைக் காட்டுகிறார்—

வ-ூவ-ஃக்ூாலிஙா-ூ ெவெ: ஸூ8திவிஙவி-ெதாஷீதி
ஹி: வ-ூவ-ஃவெக்ஷ: ஸி-ெஜை: ஸாயாஙெணாஙவ்ூ
வயிகியஜ்ெத: ஹூதூவஸூா ஷிதீயெ । ஸஷூாஸா
யாஙணெகூவாஙவிி வஙஃதாநூகீகெ ஞஙயெதி
ந்ூாெயெகூதிூஂஶஃதூ ஹூதிவஙணவிஹகத்ூஙிதாzெஙூ
ஷணீயா ॥　　॥ அக ॥

பூர்வபக்ஷி முதல் பாதத்தில் சொல்லும் ஹேதுக்கள் உண்மையில்லை. அவன் புத்தியினால் கல்பிக்கப்பட்டவைகள். இரண்டாவது பாதத்தில் அவன் சொல்லும் ஹேதுக்கள் இருக்கின்றன. ஆனால் அவைகள், பரமாத்மாவுக்கும் மற்றவைகளுக்கும் பொது.

சில காரணங்களாலே அவைகள் மற்றவைகளிடமேயிருக்கின்றன என்று பூர்வபக்ஷி காட்டுகிறான்: மூன்றாவது பாதத்தில் அவன் சொல்லும் ஹேதுக்கள் ஸ்பஷ்டங்களாயும் மற்றவைகளுக்கே உள்ளவைகளாயுமிருக்கின்றன. கடைசி பாதத்தில் பூர்வபக்ஷி காட்டும் ஹேதுக்களோ வேறுமதங்களில்சொல்லப்பட்டதை அநுவாதம் பண்ணுகிறவைகள்போல் இருக்கின்றன. இப்படி நான்கு பாதங்களாகப்பிரித்துச்சொல்லப்பட்டிருப்பதை முப்பத்தைந்து அதிகரணங்களிலும் நன்றாய் விசாரித்து அறியவேண்டும்.

குறிப்பு— முதல் பாதத்தில் ஈக்ஷத்யதிகரணம் முதலான ஏழு அதிகரணங்களில் பூர்வபக்ஷிசொல்லும்ஹேதுக்களாவன–(1)கௌணேக்ஷணஸாஹசர்யம், கார்யத்துக்கும் காரணத்துக்கும் ஸாரூப்யம். ப்ரதிஜ்ஞையாலும் த்ருஷ்டாந்தங்களாலும் அநுமாநமேற்படுவது.(2)ஆநந்தமயன் என்கிறசொல்லில் மயட் என்கிற விக்ருதிக்கு விகாரம் அர்த்தம்; ப்ராசுர்யம் அர்த்தமானாலும் ஆநந்தத்துடன் துக்கக்கலப்பிருப்பது. (3) கண் முதலான அவயவங்களை உடைய சரீரமுள்ளவனாயிருப்பது. (4, 5) ஆகாசம் ப்ராணன் முதலான ச்ருதிகள் ஈக்ஷணம் முதலான லிங்கங்களைக் காட்டிலும் ப்ரபலங்கள். ஸாமாந்யசப்தம் விசேஷத்தைச் சொல்லும். (6) ஜாடராக்னியின் ஐக்யம். (7) த்வஷ்டாவின் பிள்ளையைக் கொன்றது முதலானவைகள். இவைகள் எல்லாம் இல்லை என்று ஸித்தாந்தத்தில் காட்டப்பட்டிருக்கின்றன. (81)

அவ:— த்ரிபாதியின் ஸங்கதியை வேறு விதமாய்ச் சிலர் சொல்லுவதைக் காட்டுகிறார்:—

விஶ்வம் வாசெ ஶிதீயெ வவாசிசி கயயம்ஶ்ரூத்யெ
வாக்யவறெகா விஶ்வாயாரஸ ரூதெதநுஹிஷவநவாரு
ஸகஷணீயஸ்ரூதீயெ। தாயெவ ஸாம்வ்யாஜிவகெஷாஜித
வஸிவம் நஹ்ராஜிராநூஷெநீயெதெ்யவம் கெஷிதிவா
ரீம் ஜமஷாரயமவி ஜெராதநுபாவெஃ ஸமாயிஃ ॥ அ௨ ॥

இரண்டாவது பாதத்தில் ஜகத்து பரமாத்மாவுக்குச் சரீரம் என்று சொல்லுகிற வாக்யங்கள் விசாரிக்கப்படுகின்றன; மூன்றாவது பாதத்தில் அந்த பரமாத்மா எல்லாவற்றுக்கும் ஆதாரன்

என்று சொல்லுகிற வாக்யங்கள் விசாரிக்கவேண்டியவைகள்; நான் காவது பாதத்தில் ஸாங்க்யன் முதலானவர்களின் பக்ஷங்களைச் சில உபநிஷத் வாக்யங்கள் சொல்லுகின்றன என்கிற ப்ரமம் போக்கப்படுகிறது— இப்படிச் சிலர் த்ரிபாதியின் விஷயங்களைச் சொல்லுகிறார்கள். இதுவும் சிஷ்யர்களின் புத்திக்குத் தெளிவையும் ஆறுதலையும் உண்டுபண்ணும். (82)

ஸர்வத்ரப்ரஸித்த்யதிகரணம் (1)

அவ— கீழ் அதிகரணத்துக்கும் இந்த அதிகரணத்துக்கும் ஸங்கதியைச் சொல்லுகிறார்:—

𑌯𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌣𑌶𑌰𑍀𑌰𑌂 𑌸 𑌮𑌨𑍁𑌜𑌹𑌿𑌤𑌤𑌮𑍋𑌪𑌾𑌸𑍍𑌤𑌿
𑌕𑌰𑍍𑌮 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌜𑍀𑌵𑌶𑌙𑍍𑌕𑌾𑌂 𑌜𑌗𑌦𑍁𑌪𑌜𑌨𑌕𑍇
𑌸𑍂𑌤𑍇 𑌶𑌾𑌣𑍍𑌡𑌿𑌲𑍍𑌯𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 । 𑌬𑌲𑌵𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌦𑍍𑌵𑌾 𑌯𑌤𑍍𑌕𑌂 𑌉𑌪
𑌕𑍍𑌰𑌮𑌸𑍍𑌥𑌂 𑌮𑌹𑌾𑌵𑌾𑌕𑍍𑌯𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 𑌕𑍍𑌰𑌮𑌸𑍍𑌯 𑌤𑍍𑌯𑌾𑌗𑌮𑌾𑌨𑍇 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍
𑌶𑍋𑌕𑍍𑌤𑌾𑌨𑍍𑌨𑍍𑌯𑌨𑍍𑌣𑌿𑌤𑌿 𑌮𑌹𑌾𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑍇𑌕𑍀𑌕𑌰𑍋𑌤𑌿 ॥ ௮௫ ॥

எவனுக்கு ப்ராணம் சரீரமோ, அவன் மனிதனுக்கு மிகவும் ஹிதமான உபாஸனத்துக்கு கர்மம் (விஷயம்) என்று கீழ் அதிகரணத்தில் சொல்லப்பட்டது. இங்கேயும் ப்ராணனைச் சரீரமாகவுடையவன் சொல்லப்படுகிறான். இதனால் ஜகத்துக்குக் காரணமானவன் ஜீவன் என்கிற சங்கையைச் சாண்டில்ய வித்யையுண்டு பண்ணுகிறது. கீழ் அதிகரணத்தில் சொன்ன நியாயத்தாலே இங்கே ஆரம்பத்தை மஹாவாக்யத்தைக்கொண்டு பாதிக்கலாம். இப்படி பூர்வபக்ஷம் உண்டாக,மஹாவாக்யம் உபக்ரமத்துக்கு ஒத்திருக்கிறது என்று அதை அத்துடன் ஒன்றாகச் செய்கிறார்.

குறிப்பு— (1) ஸங்கதியை இரண்டு விதமாய் ச்லோகம் சொல்லுகிறது. இரண்டிடங்களிலும் ப்ராணனைச்சரீரமாகவுடையவனை உபாஸிக்கவேண்டியவனாகச் சொல்லியிருக்கிறது. ப்ராணனைச் சரீரமாகவுடையவன் ஜீவன். இது ஓர் விதம். முன் அதிகரணத்தில் உபக்ரமத்துக்கும் மஹாவாக்யத்துக்கும் விரோதமிருக்கும்போது, மஹாவாக்யம் ப்ரபலம், உபக்ரமம் அதினால் பாதிக்கப்படுகிறது என்று தீர்மானிக்கப்பட்டது. இங்கே உபக்ரமத்தில் ப்ரம்மம் என்கிற பதம் இருக்கிறது. மஹாவாக்கியத்

தில் ஜீவலிங்கமிருக்கிறது. கீழ்ச் சொன்ன நியாயத்தைக்கொண்டு மஹாவாக்கியத்தின் பலத்தாலே உபக்ரமத்தைப் பாதித்து 'ப்ரம்ம' என்கிற சொல்லுக்கு ஜீவன் என்று பொருள்கொள்ள வேண்டியது. இது இரண்டாவது விதம். ஸித்தாந்தி இங்கே உபக்ரமத்துக்கும் மஹாவாக்யத்துக்கும் விரோதமில்லையென்று காண்பிக்கிறார்.

(2) இன்னொரு விதமாயும் ஸங்கதியைச் சொல்லலாம்:—முன் அதிகரணத்தில் காரியத்தையோ கர்மவச்யனையோ சொல்லுகிற பதத்தைப் பரமாத்மவிஷயத்தில் ப்ரயோகிக்கும்போது அந்தப் பதங்களால் சொல்லப்பட்டவைகளை விசேஷணமாகவுடைய பரமாத்மா சொல்லப்படுகிறான் என்கிற நியாயம் புதிதாய் காட்டப் பட்டது. இங்கே தக்ரதுந்யாயம் என்கிற புதிய நியாயம் காட்டப்படுகிறது. அந்த நியாயமாவது— இந்த உலகத்தில் புருஷன் எப்படி உபாஸிக்கிறானோ, அப்படியே இதை விட்டுப் போன பிறகும் ஆகிறான்— என்பது.

(3) முன் பேடிகைக்கும் இங்கே ஆரம்பிக்கும் பேடிகைக்கும் ஸங்கதியையும் சொல்லலாம்:—முன் பேடிகையில் உபாஸகனுடைய சரீரத்துக்கு வெளியிலிருக்கிற ஜ்யோதிஸ், இந்த்ரன், ப்ராணன் ஆகிய இவைகளை விசேஷணங்களாகவுடைய பரமாத்மாவின் உபாஸநம் சொல்லப்பட்டது; இந்தப் பேடிகையில் உபாஸகனுடைய சரீரத்திலேயே இருக்கிற பரமாத்மாவை உபாஸிக்கவேண்டும் என்பது சொல்லப்படுகிறது. முதல் இரண்டு அதிகரணங்களில் உபாஸகன் ஹ்ருதயத்திலும் மூன்றாவது அதிகாணத்தில் அவனுடைய வலது கண்ணிலும் பரமாத்மாவின் உபாஸனம். இந்த மூன்று அதிகரணங்களும் ஒரு பேடிகை.(83)

அவ— ஸ்ரீபாஷ்யம் முதல் ஸூத்ரத்துக்கு இரண்டு விதமாய் அர்த்தம் பண்ணி, அவைகளில் இரண்டாவது அர்த்தத்திலேயே பெரியோர்கள் கௌரவம் பண்ணுகிறார்கள் என்று சொல்லுகிறது. ஒப்புக்கொள்ளாத அர்த்தம் என் சொல்லப்படுகிறது என்று கேள்விக்கு ஸமாதானத்தைச் சொல்லுகிறார்:—

ஸ்வாரஸ்யாத்³ த்³வயம் வ்யாக்²யத்ஸ்வபி⁴ஹிதா
கிம் நிமித்தம் விவக்ஷிதைகதேச நாஸ்தி: பர இஹ ஸ்வர்ண
வித்யேத்யுத்தர வேதியோக்து: । ஸத்யம் ப்³ரஹ்மாஸ்தேத்ய

𑌸𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑌂 𑌵𑌨𑌿𑌷𑍍𑌟𑌿 𑌸𑍍𑌵𑌾𑌪𑌿 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇 𑌵𑌿𑌵𑌾𑌦𑍇 𑌵𑌿𑌭𑍇𑌦𑍇
𑌷𑌾𑌦𑍍𑌵𑌾𑌹𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌸𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌰𑌾𑌦𑌾𑌰𑌵𑌿𑌭𑍇𑌦𑌾𑌦𑍍𑌯𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿 𑌸𑍂
𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑍈 ॥ ॥ ௮௪ ॥

இந்த அதிகரணத்தில் வாக்யபேதத்தை ஒப்புக்கொண்டு முதல் யோஜனை எதற்காகச் சொல்லப்படுகிறது. வித்யையை ஒன்றாகவைத்துக்கொண்டு மேலே உபாஸனத்தை விதித்து குணங்களை விதிப்பதற்காக அநுவாதம் என்று சொல்லுவது தகுந்தது. இந்த ஆக்ஷேபம் ஸரியானதே. ஓர் இடத்தில் ப்ரம்மத்தை ஒப்புக்கொண்டு வேறிடத்தில் ப்ரம்மம் இல்லையென்று விவாதம் எழுப்பப்படுகிறது. இதற்கு உதாரணமாக இந்த முதல் யோஜனை சொல்லப்படுகிறது. வேறு மதக்காரர் பக்ஷத்தை அநுஸரித்து இது சொல்லப்பட்டது. உண்மையான அர்த்தம் எப்படி என்று கவனித்து அறியவேண்டியது.

குறிப்பு— (1) இந்த அதிகரணத்தில் விசாரிக்கிற விஷயவாக்யம்—"𑌸𑌰𑍍𑌵𑌂 𑌖𑌲𑍍𑌵𑌿𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌜𑍍𑌜𑌲𑌾𑌨𑌿𑌤𑌿 𑌶𑌾𑌨𑍍𑌤 உபாஸீத, ...𑌸 𑌕𑍍𑌰𑌤𑍁𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤 । 𑌮𑌨𑍋𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌶𑌰𑍀𑌰𑌃" (சா-3-14-1) என்பது. இதை இரண்டு வாக்யங்களாகப்பண்ணி உபாஸீத என்கிற வரையில் ஒரு வாக்யம் என்றும், மீதியிருப்பது ஒரு வாக்யம் என்றும், முதல்வாக்யத்தில் சாந்தியை (மனதில் ஸமாதானத்தை) அடைவதற்காக உபாஸநம் விதிக்கப்படுகிறது என்றும், அதற்கு ப்ரம்மம் கர்ம *காரகம் என்றும், இரண்டாவதுவாக்யத்தில்மோக்ஷத்துக்காகஉபாஸனம்விதிக்கப்படுகிறது என்றும், அதற்கு 𑌮𑌨𑍋𑌮𑌯ன், 𑌪𑍍𑌰𑌾𑌣𑌶𑌰𑍀𑌰ன் என்கிற பதங்களாலே சொல்லப்பட்டவன் கர்மம் என்றும், அந்தப் பதங்கள் முதல் வேற்றுமையின் விகுதிகள் உள்ளவைகளாயிருந்தாலும் ஆறுவது வேற்றுமையின் விகுதியுள்ளவைகளாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் சிலர் வியாக்யானம் பண்ணியிருக்கிறார்கள். இப்படி இரண்டு வாக்யமாகப்பண்ணி அர்த்தம் சொன்னதை '𑌶𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌾𑌹𑍍𑌯𑌾𑌦𑍍 𑌭𑍇𑌦𑍇' என்று ச்லோகம் சொல்லுகிறது.

* காரகம் என்பதற்குப் பொருளை யதீந்த்ரமததீபிகையின் 114வது பக்கத்தில் பார்க்க.

(2) இரண்டாவது யோஜனையில் விஷயவாக்யம் முழுவதும் ஒரே வாக்யம். ஒரே வாக்யமாக அர்த்தம் பண்ணக்கூடிய விடங்களில் இரண்டு வாக்யங்களாகப் பண்ணுவது தகுந்தது அன்று என்பது மீமாம்ஸகர்களின் நியாயம். அப்போது ஒரே உபாஸனம் 'ஶாந்த உபாஸீத' என்று விதிக்கப்படுகிறது. அதையே 'ஸ க்ரதும் குர்வீத' என்று அநுவாதம் பண்ணி குணங்கள் விதிக்கப்படுகின்றன. இதற்கு உதாரணம்- 'அக்நிஹோத்ரம் ஜுஹோதி' என்று முதலில் விதித்து, 'பயஸா ஜுஹோதி' என்று ஜுஹோதி என்பதால் அதை அநுவாதம்பண்ணி பயஸ் (பால்) என்கிற த்ரவ்யம் விதிக்கப்படுகிறது. இங்கே மீமாம்ஸகன் கேட்கிறான்— ஒரு கர்மத்தை விதித்த பிறகு வேறு வாக்யத்தாலே ஒரே குணத்தைத்தானே விதிக்கலாம். இங்கேபல குணங்கள் விதிக்கப்படுகின்றனவே? இது எப்படிக்கூடும்? — என்று. பதில்— இங்கே குணங்களின் ஸமுதாயம் விதிக்கப்படுகிறது. ஸமுதாயம் ஒன்றுதான். அல்லது க்ரமம் விதிக்கப்படுகிறது. அப்பொழுது எவைகளுக்கு அந்த க்ரமமோ, அவைகளும் ஸித்திக்கின்றன. மறு கேள்வி— முதல் வாக்யத்தாலே ப்ரம்மத்தின் ஸர்வாத்மகத்வம் என்கிற குணம் விதிக்கப்படுகிறதே, வேறு குணங்களின் ஆகாங்க்ஷையே இல்லையே-என்று. பதில்— உபாஸநத்தை விதிக்கிற வாக்யம் 'ஶாந்த உபாஸீத' என்பது. ஸர்வாத்மகத்வம் வேறு வாக்யத்திலிருக்கிறது. ஆகையால் உபாஸநத்தை விதிக்கிற வாக்யத்தில் ஸர்வாத்மகத்வகுணம் சொல்லப்படவில்லை. வேறு குணங்களுக்கு ஆகாங்க்ஷையுண்டு. மேலும், அந்த வாக்யத்திலிருக்கிற "யதா" என்கிற சொல்லாலே அது அநுவாதவாக்யம் என்று ஏற்படுகிறபடியால், அதுவும் விதி வாக்யமும் ஒரு வாக்யமாக இருக்கமுடியாது. ஸர்வாத்மகத்வம் சாந்தியை ஸம்பாதிப்பதற்கு ஹேதுவாகச் சொல்லப்படுகிறது. ஸர்வாத்மகத்வம் எப்படி என்பதை 'தஜ்ஜலாந்' என்பது காட்டுகிறது. இங்கே விதிக்கப்பட்ட உபாஸநத்துக்குக் கர்மம் 'ப்ரஹ்ம' என்கிற சொல்லாலே சொல்லப்படுகிறது.

(3) சிலர் ப்ரம்மத்தை ஓர் உபநிஷத்து சொல்லுகிறது என்றும், மற்ற உபநிஷத்துக்களில் அது சொல்லப்படவில்லை என்றும் வாதிக்கிறார்கள். இப்படியும் ஆக்ஷேபம் சொல்லக்

கூடும் என்று காட்டுவதற்காக ஒரே வித்யையைச் சொல்லுகிற இடத்தில் ஒரு வாக்யம் ப்ரம்மத்தையும், மற்ற வாக்யங்கள் ஜீவனையும் சொல்லுகின்றன என்கிற பூர்வபக்ஷத்தை ஸ்ரீபாஷ்யம் காட்டுகிறது. இதுவும் வேறு மதத்தாரால் பூர்வபக்ஷமாகச் சொல்லப் பட்டது.

(4) முதல் யோஜனை கூடாது. ஏன் என்றால், (1) ஸூத்ரத்தில் உதரீர்ச்சயமில்லை, "உபாஸ்யகுணத்வாதிதி" என்பதை அத்யாஹாரம் பண்ணவேண்டும், (2) இந்த உபநிஷத்தில் ப்ரஹ்ம என்கிற பதம் முதலிலும் கடைசியிலும் இருக்கிறது. அந்த இரண்டும் ஒன்றையே சொல்லுகின்றன என்பது ஸ்வரஸம். ஒன்று பரமாத்மாவையும், மற்றொன்று ஜீவனையும் சொல்லுகிறது என்கிற பூர்வபக்ஷத்துக்கே இடமில்லை. (3) சாந்தியானது ச்ரவணத்தாலும் மனனத்தாலும் ஏற்பட வேண்டும். அதை உபாஸநத்தின் பலனாக ஒரு வாக்யமும் சொல்லவில்லை. "சாந்தோ தாந்த உபரதஸ்திதிக்ஷு: ஸமாஹிதோ பூத்வா ஆத்மன்யேவாத்மானம் பச்யதி" *(ப்ரு—6—4—23) என்கிறவிதி சாந்தியை உபாஸநத்துக்கு அங்கமாக விதிக்கிறது. (4) சாந்த: என்கிற பதத்துக்கு சாந்திகார்ய: என்று அர்த்தம் சொல்லவேண்டுமானால் லக்ஷணையால் சொல்லவேண்டும். (84)

ஸர்வத்ர ப்ரஸித்தோபதேசாத் ॥ 1 ॥

"ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" என்கிற வாக்யத்தாலே எல்லா ஜகத்துக்கும் ஆத்மாவாக காட்டப்பட்டவனும் ப்ரம்மம் என்கிற பதத்தாலே சொல்லப்பட்டவனுமானவன் பரமாத்மா, (ஜீவன் அன்று); 'தஜ்ஜலான்' என்கிற ஹேதுவைக்கொண்டு "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" என்று ப்ரஸித்தமானதைச் சொல்லுகிறபடியால். ஜகத்தின் உத்பத்திக்கும் லயத்துக்கும் ஸ்திதிக்கும் ப்ரம்மம் காரணம் என்பது "யதோ வா இமானி" என்கிற வாக்யத்தில் பிரஸித்தமாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது. அந்தராதிகரணத்தில் "ஸுக விசிஷ்டாபிதானாதேவ ச" என்கிற ஸூத்திரத்திலிருந்து 'ஸ:' என்கிற பதத்தை இந்தப் பாதத்தி

* இதின் அர்த்தத்தை 20-வது பக்கத்தில் பார்க்க.

ுள்ள எல்லா அதிகரணங்களிலும் விதேயமாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும். அந்தப் பதம் முதல் பாதத்தில் ஜகத்காரணமாகச் சொல்லப்பட்ட பரமாத்மாவைக் குறிக்கிறது.

விவக்ஷிதகுணோபபத்தேஸ்ச ‖ உ ‖

அநுபபத்தேஸ்து ந ஶாரீர: ‖ ௩ ‖

மேலே சொல்லப்பட்ட குணங்களுக்குப் பரமாத்மாவினிடத்திலேயே பொருத்தமிருக்கிறபடியாலும், அவைகளுக்கு சரீரத்துடன் சேர்ந்திருக்கிற பத்த ஜீவனிடத்திலும், முன்னால் சரீரத்துடன் சேர்ந்திருந்த முக்த ஜீவனிடத்திலும் பொருத்தமில்லாமையாலும் அந்த ஜீவன்கள் சொல்லப்படவில்லை.

கர்மகர்த்ருவ்யபதேஶாச்ச ‖ ௪ ‖

உபநிஷத்தின் கடைசியில் ப்ரஹ்மத்தை அடையப்படுகிறவனாகவும், ஜீவனை அடைகிறவனாகவும் சொல்லப்படுகிறபடியால் அவர்கள் வேறுபட்டவர்கள். இதைச் சொல்லுகிற வாக்யம் "ஏதமித: ப்ரேத்யாபிஸம்பவிதாஸ்மி (சா—3-14-4) என்பது. ஏதம் என்பது கீழே சொன்ன ப்ரம்மம்.

ஶப்தவிஶேஷாத் ‖ ௫ ‖

ஸ்ம்ருதேஶ்ச ‖ ௬ ‖

அடைகிறவனும் அடையப்படுகிறவனும் அவஸ்தாபேதத்தாலே ஒன்றுதான் என்று உண்டாகும் சங்கையைப் போக்குவதற்காக இந்த ஸூத்ரங்கள். ஒரே அவஸ்தையில் பரமாத்மாவுக்கும் ஜீவனுக்குமிருக்கும் பேதத்தை, பரமாத்மாவை முதல் வேற்றுமையாலும் ஜீவனை ஆறும் வேற்றுமையாலும் காட்டுகிற ப்ரமாணங்களை இந்த ஸூத்ரங்கள் காட்டுகின்றன. "ஏஷ ஆத்மாந்தர்ஹ்ருதயே" என்பது ச்ருதிப்ரமாணம். இதே அர்த்தத்தை ஸ்மிருதியும் (கீதையும்) சொல்லுகிறது. அந்த வாக்யம்— "ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட:" (கீதை 15-15.) என்பது.

அர்பகௌகஸ்த்வாத்தத்வ்யபதேஶாச்ச நேதி சேந்நிசாய்யத்வாதேவம் வ்யோமவச்ச ‖ எ ‖

சிறிய இடத்திலிருப்பவன், அணுபரிமாணமுள்ளவன் என்று சொல்லுகிறபடியால் "ப்ரம்ம" என்கிற பதம் பரமாத்

மாவைச் சொல்லுகிறது என்பது கூடாது என்கிற ஆக்ஷேபம் சரியன்று:--- இப்படி அவனைத் தியானம் பண்ணவேண்டும் என்று கருத்தாகையால். அவன் ஆகாசம்போலே அளவில்லாதவன் என்பது அந்த இடத்திலேயே சொல்லப்படுகிறது.

ஸம்ஹோமஹூாஷி்ஙிதி வேஹ வெவெஶஷூாசு ॥ அ ॥

உபாஸகனுடைய ஹ்ருதயத்திலிருப்பதாலே அவனுக்குப் போல உபாஸ்யனை ப்ரம்மத்துக்கும் ஸுகதுக்கங்களின்போகம் ப்ரஸக்தமாகுமே என்றால்; அப்படியன்று— போகத்தை அடைவதற்கும், போகத்தை அடையாமைக்கும் காரணங்கள் வேறாகையால். போகத்துக்குக் காரணம் கர்மவச்யனாயிருப்பது. எல்லாரையும் நியமனம் பண்ணுகிற பரமாத்மாவுக்கு அதில்லை.

அவ— அதிகரணத்தின் பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் சொல்லுகிறார்:—

ஸவுக்ஷம் கூஉுஹிஃ வெஷஜுநிஉதி வடிவெத ஞ்ஹூ
ஶவொZவி வெவெவதூ்ஷாநொZஉாநஃ ஸுவ
தஜிதுஹுஜீவ ஹவெதி வெஹ । தஜக்ஷாஷொநூஷிகெத
விுவியமுணஹிஊாஉஶுநாசு ஸவுதாஷெஃஷாஸூா
உவூணுக்ஷம் ஹூுவயிகூதஜிஹொவாஸுயெ ஜூா
யவஸி ஸூாசு ॥ (அரு)

பிறப்பையுடைய ஜீவனிடத்தில் எல்லாமாயிருப்பது தன்னுடைய கர்மங்களாலே சேரும். ப்ரம்மம் என்கிற பதத்துக்கும் அவனிடத்தில் பொருத்தமுண்டு. அந்தப் பதத்தாலே சொல்லப்பட்டவன் அல்பமான இடத்தில் இருப்பவன் அல்பமான அளவுள்ளவன் என்று சொல்லப்படுகிறான். அப்படிப்பட்டவனும் ஸுகத்தையும் துக்கத்தையும் அநுபவிக்கிறவனும் ஜீவன் தான். இப்படிப்பூர்வபக்ஷம். இது சரியன்று. தஜ்ஜமாயிருப்பது முதலானவைகள் அநுவதிக்கப்படுவதாலும், பலவிதமான குணங்களையும் பரமாத்மாவுக்கும் ஜீவனுக்குமிருக்கிற பேதத்தையும் சொல்லுகிறபடியாலும், எல்லாமாயிருப்பதற்கு பரமாத்மாவினிடத்திலேயே ஸ்வாரஸ்யமிருப்பதாலும். அளவில்லாதவனை அணுவாகச் சொல்லுவது, இருக்கிற இடமாகிய உபாதி அணுவாயிருப்பதைக்கொண்டு; அதுவும் உபாஸனைக்காக.

குறிப்பு— (1) முதல்பாதியில் பூர்வபக்ஷ ஹேதுக்கள் சொல்லப்படுகின்றன. அவைகளாவன— (1) ஜீவன் தன்னுடைய கர்மங்களாலே தேவனாகவும் மனிதனாகவும் பிறக்கிறபடியால் அவனையும் அவன் சரீரத்தையும் சேர்த்து 'அவன் எல்லாம்' என்று சொல்லலாம். (2) ப்ரம்மம் என்கிற பதம் பெரிதான வஸ்துவைச் சொல்லுகிறது. ஜீவனுடைய தர்மபூத ஜ்ஞானம் இயற்கையில் அளவில்லாததாகையால் அவனிடத்தில் அந்தப் பதத்துக்குப் பொருத்தமுண்டு. அப்படியே அவன் சிலவிடங்களில் 'ப்ரூஹ' பதத்தால் சொல்லப்படுகிறான். (3) உபாஸிக்கப்படுகிறவன் இருப்பதாகச் சொல்லப்பட்ட இடம் ஹ்ருதயம். அது சின்னது. (4) அவனை "அணீயாநு" (மிகவும் சின்ன அணு) என்று வாக்யம் சொல்லுகிறது. (5) அனுமானம்— ஹ்ருதயத்தில் இருப்பவனாக உபாஸிக்கப்படுகிறவன், ஸுக துக்கங்களின் அநுபவமுள்ளவன், ஜீவனுடைய ஹ்ருதயத்திலிருப்பதாலே; ஜீவன் என்று அறியப்பட்டவனைப்போல. இந்த அநுபவமுள்ளவன் ஜீவன்தான்.

(2) ச்லோகத்தின் பின்பாதியால் ஸித்தாந்த ஹேதுக்களைச் சொல்லுகிறார். அவைகளாவன— (1) ஸர்வம் என்று சொல்லப்பட்ட ஜகத், ப்ரம்மம் என்று சொல்லப்பட்டவனாலே உண்டு பண்ணப்பட்டது என்றும், அவனிடத்தில் லயத்தை அடைகிறது என்றும், அவனாலே பிழைத்திருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. "யதொவாஇமாநி" என்கிற வாக்யம் இப்படி ஜகத்துக்குக் காரணமாயிருக்கிறவன் பரமாத்மா என்பதைச் சொல்லுகிறது. அதை இந்த வாக்யம் அநுவாதம் பண்ணுகிறது. இது முதல் ஸூத்ரத்தின் அர்த்தம். (2) இந்த உபநிஷத்தில் சொல்லப்பட்ட குணங்கள் பரமாத்மாவுக்கே இருக்கின்றன, ஜீவனுக்கு இல்லை. இது இரண்டாவது மூன்றாவது ஸூத்ரங்களின் அர்த்தம். (3) ஜீவன் வேறு, பரமாத்மா வேறு, இது 4, 5, 6. ஸூத்ரங்களின் அர்த்தம். (4) ஜீவன் பலவிதமான சரீரங்களுடன் பிறப்பதாலே அவனை, அவனுடைய எல்லா உடம்புகளாகச் சொல்லலாம். ஆனால் "ஊஂ ஸவஂ" என்கிற பதங்களில் எல்லாச் சேதநர்களும் சேர்ந்திருக்கிறார்கள். ஒரு சேதநனை மற்றொரு சேதநனுக்கு உடம்பாகச் சொல்லமுடியாது.

ஒரு ஜீவனை மற்றஜீவன்கள் என்று சொல்லக்கூடாது. பரமாத்ம விஷயத்திலேயோ, அவனுக்கு எல்லா அசேதனங்களும் எல்லாச் சேதனர்களும் சரீரங்களாயிருக்கையாலே அவனே எல்லாமாக இருக்கிறான் என்று சொல்லுவது ஸ்வரஸமாயிருக்கிறது. (5) பரமாத்மாவை அணுவென்று சொன்னது உபாஸனத்துக்காக, ஜீவன்ஹ்ருதயத்திலிருப்பதாலே. இது ஏழாவது ஸூத்ரத்தின் அர்த்தம். (6) ப்ரம்மசப்தத்தால் சொல்லப்பட்டதை ஜீவன் என்று அநுமானம் சொன்னான். அதில் உபாதி என்கிற தோஷமிருக்கிறது. கர்மவச்யத்வம் உபாதி. இது உதாரணத்திலிருக்கிறது. பக்ஷத்திலில்லை. இது கடைசி ஸூத்திரத்தின் அர்த்தம்.

(3) இந்த அதிகரணத்தில் பூர்வபக்ஷி சொல்லும் ஹேது ப்ராணசரீரத்வம். இது ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் பொது. ஆனாலும் ஜீவனுக்கே அது உண்டு என்று பூர்வபக்ஷி இரண்டு லிங்கங்களைக் காட்டுகிறான். ஒன்று சின்ன இடத்திலிருப்பதும், அளவில் அணுவாயிருப்பதும். மற்றொன்று ஸுகதுக்கங்களின் அநுபவம். விதிவாக்யமும், * "வஷ ஆத்மாக்ஷஹற்ஸுஷயெணீயாநு" என்கிற வாக்யமும் ஒரு ப்ரகரணமாயிருப்பதாலே இந்த இரண்டு லிங்கங்களும் ஏற்படுகின்றன; "வஷ" என்கிற பதம் விதிவாக்யத்திலிருக்கிற ப்ரம்மத்தைச் சொல்லுகிறது. ஆகையால் இரண்டு வாக்யங்களும் சேர்ந்து ஒரு ப்ரகரணமாகிறது. ப்ரகரணம் ஏற்படுவதற்கும், அதைக் கொண்டு லிங்கங்கள் சொல்லுவதற்கும் தாமதமுண்டாகிறபடியால், இந்த ஹேது அஸ்பஷ்டம். முதல் லிங்கம் அந்யதாஸித்தம் என்று காட்டப்படுகிறது. இரண்டாவது லிங்கத்துக்குச் சொன்ன அநுமானம் தோஷமுள்ளது.

(4) இந்த அதிகரணத்தின் விஷய வாக்யத்தாலே ஜீவனிடத்தில் ஜகத்காரணத்வமில்லையென்பது காட்டப்படுகிறது. (85)

---

* (சா—3—14—3) என்னுடைய ஹ்ருதயத்திலிருக்கும் இந்த ஆத்மா மிகவும் அணுவானவன்.

அத்த்ரதிகரணம் (2)

அத்தா சராசரக்ரஹணாத் ॥ கூ ॥

ப்ராம்மம் க்ஷத்ரம் என்கிற ஓதனத்தைச் சாப்பிடுகிறவன் (அத்தா) பரமாத்மா, ப்ராம்மம் க்ஷத்ரம் என்கிற பதங்கள் ஸ்தாவரங்களும் ஜங்கமங்களுமான ஜகத்தைச் சொல்லுகிறபடியால். அவைகளைச் சாப்பிடுவதாவது ஸம்ஹாரம் பண்ணுவது. ஸம்ஹாரம் பண்ணுகிறவன் பரமாத்மா. இதற்கு விஷய வாக்யம்— 1 "யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரம் ச உபே பவத ஓதந꞉। ம்ருத்யுர்யஸ்யோபஸேசநம் க இத்தா வேத யத்ர ஸ꞉" என்பது.

ப்ரகரணாச்ச ॥ கoo ॥

இந்தத் தீர்மானம் ப்ரகரணத்தாலும் ஏற்படுகிறது. விஷய வாக்யத்தில் அத்தாவை அறியமுடியாது என்று சொல்லியிருக்கிறது. இந்த அர்த்தத்தையே 2 "நாயமாத்மா ப்ரவசநேந லப்ய꞉" என்கிற வாக்யம் சொல்லுகிறது. அதின் நினைவு வருகிறபடியால் இரண்டும் ஒரு ப்ரகரணம். அதில் சொல்லப்பட்டவன் பரமாத்மா.

குஹாம் ப்ரவிஷ்டாவாத்மாநௌ ஹி தத்தர்சநாத் ॥

ஹ்ருதய குஹையில் ப்ரவேசித்திருக்கிறவர்கள் ஆத்மாக்கள் அல்லர்களோ; அது இந்த உபநிஷத்தில் காட்டப்படுகிறபடியால். ஆத்மாக்கள் ஜீவாத்மாவும் பரமாத்மாவும். பூர்வபக்ஷி சொல்லுகிறபடி புத்தியும் ஜீவனும் அன்று; ப்ராணனும் ஜீவனும் அன்று. ஹ்ருதயகுஹையில் ஆத்மாக்களே ப்ரவேசித்திருப்பதற்கு ப்ரமாணங்கள்- பரமாத்மவிஷயத்தில் " தம் துர்தர்சம்...... குஹாஹிதம்" (கட—1-2—12) என்பதும், ஜீவவிஷயத்தில் "யா ப்ராணேந ஸம்பவதி... குஹாம் ப்ரவிஸ்ய திஷ்டந்தீ" (கட-2-4-7) என்பதும்.

---

1 (கட 1—2—25) எவனுக்கு ப்ராம்மணன் க்ஷத்ரியன் ஆகிய இருவர்களும் அன்னமோ, எவனுக்கு மிருத்யு ஊறுகாயோ, அவன் இப்படி இருக்கிறன் என்று எவன் அறிவன்— என்பது இதின் பொருள்.

2 (கட 1-2-22) இந்த ஆத்மா ப்ரவசனத்தாலும் (மனனத்தாலும்) அடையத்தகுந்தவன் அல்லன்.

விசேஷணாச்ச ॥ ௧௨ ॥

இந்த ப்ரகரணத்தில் ஜீவனை உபாஸிக்கிறவனாகவும், அடை-கிறவனாகவும், பரமாத்மாவை உபாஸிக்கப்படுகிறவனாகவும், அடையப்படுகிறவனாகவும் சொல்லியிருக்கிறது. புத்தியைப்பற்றியோ, ப்ராணனைப்பற்றியோ பேச்சேயில்லை.

அவ— இந்த அதிகரணத்தின் பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் சொல்லுகிறார்:—

அத்தா ப்ரஹ்மௌதநாதேஸ்ஸர்வஸ்யாத்தி ஸம்ப்ருக்த்யே
தோதவ்யஸ்ய ஸ்யாத் ஸ்யாத் ந்ருத்யாதிவஸிதஸ்யாப
நிவிஷ்டாத்மஸம்ஸ்தயோகாத் । ஜீவஸ்யாத்த்வம் ச ப்ர
கரணவிஹிதம் ஹோத்ருதோக்தயோஸ்த்வ ப்ரயுக்த
ப்ராகஸ்வப்ரதிநியதரஸா ஹ்ருதி நீத்யாயஸ்வா ஸ்யாத் ॥

அன்னம் முதலானவைகளைச் சாப்பிடுகிறவன் (அத்தா) ஸம்ஸாரி ஜீவன் என்பது பிரஸித்தம். கடச்ருதியில் சொல்லப் பட்டவனும் ஸம்ஸாரி ஜீவனாகவே இருக்கவேண்டும். இது பூர்வ பக்ஷம். இது சரியன்று. ஏன் என்றால். இங்கே எல்லா ஸ்தாவ ரங்களையும் ஜங்கமங்களையும் சாப்பிடுவதற்கு மிருத்யு ஊறுகாயா யிருக்கிறான் என்று சொல்லியிருக்கிறது. ஆகையால் அவைகள் அவனிடத்தில் லயத்தையடைகின்றன என்பது ஏற்படுகிறது. இந்தமந்த்ரத்தில் சொல்லப்பட்ட அத்தா ஜீவன் அன்று என்பது ப்ரகரணத்தாலே அறியப்படுகிறது. ஒருவன் ஏவப்படுகிறவனாக வும், மற்றொருவன் ஏவுகிறவனாகவும் எப்போதுமிருக்கிறார்கள் என்பதே ஸ்வரஸமானது. ஆனதால் இருவரும் பானம் பண்ணு வதாக மந்த்ரம் சொல்லுகிறது. அல்லது இதை (ஹ) சத்ரி நியாயத்தாலும் நிர்வாஹம் பண்ணலாம்.

குறிப்பு- (1)பூர்வபக்ஷம்- விஷயவாக்யத்தில் ப்ராம்மணன் க்ஷத் ரியன் ஆகிய அன்னத்தைச் சாப்பிடுகிறவனாக ஒருவனைச்சொல்லி யிருக்கிறது. இங்கே அன்னம் என்கிற பதத்தின் முக்யமான பொருளுக்குப் பொருத்தமில்லாமையால் அதற்குப் போக்யம் என்று பொருள் கொள்ளவேண்டும். உலகத்தில் போகத்தைஅநு பவிக்கிறவன் ஜீவனாகவே இருப்பதை எல்லாரும் பார்க்கிறோம். இங்கே சொல்லப்பட்ட அத்தாவும் ஜீவனாகவே இருக்கவேண்டும்.

(2) ஸித்தாந்தத்துக்கு அநுகூலமாக இரண்டு ஹேதுக்கள் சொல்லப்படுகின்றன. அன்னத்தைச் சாப்பிட ஊறுகாய் ஸாதனமாயிருந்து கடைசியில் அதுவும் சாப்பிடப்படுகிறது. அதுபோல ப்ராம்மணர்கள் க்ஷத்ரியர்கள் இருவர்களை ஸம்ஹாரம் பண்ணுவதற்கு ம்ருத்யு ஸாதனமாயிருந்து, தானும் ஸம்ஹரிக்கப்படுகிறான் என்று ஏற்படுகிறது. ஆகையால் ஓதநம் என்கிற பதம் போக்யமானதைச் சொல்லவில்லை; ஸம்ஹரிக்கப்படுவதையே சொல்லுகிறது. ஸம்ஹாரம் பண்ணுகிறவன் பரமாத்மா; ஜீவன் அன்று. ஸம்ஹாரத்துக்கு விஷயம் ப்ராம்மணனும் க்ஷத்ரியனும் மாத்ரமல்ல. அந்தப் பதங்கள் உபலக்ஷணங்களாய் ஸ்தாவரங்களும் ஜங்கமங்களும் அடங்கின ஜகத்தைச் சொல்லுகின்றன. இது முதல்ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட ஹேது. இரண்டாவது ஹேது இரண்டாவதுஸூத்ரத்தில் சொல்லப்படுகிறது.

(3) ப்ரகரணத்தைக்கொண்டு அத்தா பரமாத்மா என்று சொன்னபோது, பூர்வபக்ஷி சொல்லுகிறான்—ப்ரகரணமாகச் சொல்லப்பட்ட வாக்யம் விஷயவாக்யத்தைவிட்டு ஒதுங்கியிருக்கிறது. இந்த வாக்யத்துக்கு அடுத்த மேலேயிருக்கிறது *'ஐதம் பிபந்தௌ ஸுக்ருதஸ்ய லோகே குஹாம் ப்ரவிஷ்டௌ' என்கிற வாக்யம். அதில் முதலிரண்டு பதங்கள் ஸுக்ருதத்தாலுண்டுபண்ணப்பட்ட உலகத்தில் அந்த ஸுக்ருதத்தின் பலனை அநுபவிக்கிற இருவர்களைச் சொல்லுகின்றன. அவர்களில் ஒருவன் ஜீவன். மற்றொன்று புத்தியோ ப்ராணனோ. ஆகையால் இந்த வாக்யத்தில் பரமாத்மாவின் பேச்சேயில்லை. இதுவும் விஷயவாக்யமும் சேர்ந்திருப்பதால் அதில் சொல்லப்பட்ட அத்தா ஜீவன்தான்—என்று.

(4) இது, மேலிரண்டு ஸூத்ரங்களால் தூஷிக்கப்படுகிறது. ஹ்ருதயகுஹையில் ப்ரவேசித்திருப்பதாக இந்த வாக்யம் சொல்லுகிறது. இருவருக்கும்தான் அதில் ப்ரவேசம் என்று மேல் ஒரு வாக்யமும், கீழ் ஒரு வாக்யமும் சொல்லுகின்றன. இது ஓர் ஹேது. ஜீவனையும் பரமாத்மாவையும் தவிர வேறொன்றையும் பற்றி இந்த உபநிஷத்து பேசவில்லை. இது இரண்டாவது ஹேது. (86)

* (கட-1-3-1)ஸுக்ருதத்தால் அடையப்படும் உலகத்தில் ஹ்ருதய குஹையில் ப்ரவேசித்து கர்மங்களின் பலன்களை அநுபவிக்கிறவர்களை.

அவ— ஹ்ருதய குஹையிலிருக்கிறவர்களில் ஒருவன் ஜீவன், மற்றவன் பரமாத்மா என்கிற தீர்மானத்துக்குப் பூர்வபக்ஷி சொல்லும் ஆக்ஷேபத்தையும், அதற்குப் பதிலையும் சொல்லுகிறார்—

सत्त्वं स्वाद्वत्त्यनश्नन् ज्ञ इति विभजनात् पैङ्गि-
श्रुत्युक्तं तु सत्त्वं बुद्धिः प्राणोऽस्य वेति
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ॥ [illegible] ॥

ஸத்துவம் பழுத்த (பக்வமான) கர்மபலத்தைச் சாப்பிடுகிறது (அநுபவிக்கிறது) என்றும், அதைச் சாப்பிடாதவன் அறிவுள்ளவன் என்றும் இந்த இருவரையும் பிரிக்கிறபடியால் பைங்கிச்ருதியில் சொல்லப்பட்ட ஸத்துவம் புத்தியோ அல்லது பிராணனோ ஆகவேண்டும். இந்தக் காரணத்தாலே ருதத்தைப் பானம்பண்ணுகிறவர்களில் மற்றொருவன் ஜீவனே என்பது பூர்வ பக்ஷம். இது சரியன்று. ஸத்துவம் என்கிற ச்ருதியானது ப்ராணியைச் சொல்லத்தகுந்தது. கர்மத்தை அநுபவிக்கிறவனை 'க்ஷேத்ரஜ்ஞ' என்கிற பதத்தால் சொல்லமுடியாது. அவனைப் பற்றின கேள்வியின் ஆரம்பமானது வேறு கருத்தைக்கொண்டது. இதுவும் முன்னும் பின்னுமிருக்கிற வாக்யங்களைக்கொண்டு நன்றாய் ஸ்ரீபாஷ்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

குறிப்பு— (1) ஹ்ருதயகுஹையிலிருக்கிறவர்கள் ஜீவனும் பரமாத்மாவும் என்று சொல்லப்படுகிறது. இது கூடாது. "ருதம் பிபந்தௌ" என்கிற வாக்யம் கர்மபலனை அநுபவிக்கிற இருவர்களைச் சொல்லுகிறது. இதே அர்த்தமுள்ள 'த்வா ஸுபர்ணா' என்கிற முண்டகவாக்யம் "ஒரே உடம்பில் இருவர் இருக்கிறார்கள்; அவர்களில் ஒருவன் கர்மபலனை அநுபவிக்கிறான்; மற்றொருவன் அதை அநுபவிக்காமல் நன்றாய் ப்ரகாசிக்கிறான்" என்று சொல்லுகிறது. கர்மபலனைச் சாப்பிடுகிறவன் ஜீவன்; சாப்பிடாதவன் பரமாத்மா. இப்படியிருக்க, 'ருதம் பிபந்தௌ' என்கிற வாக்யத்தில் கர்மபலனை அநுபவிக்கிறதாகச் சொல்லப்பட்டவன் பரமாத்மாவாக இருக்கக்

கூடாது. இதுக்குப் ப்ரமாணமுமிருக்கிறது. 'ஆஸ-வண-ுர' என்கிற மந்த்ரத்துக்கு பைங்கிச்ருதி வியாக்யானம் பண்ணும் இடத்தில் ஓரீர உடம்பிலிருக்கிற இருவர்களில் ஒன்று ஸத்துவம் என்றும், மற்றொன்று ஜ்ஞ: (ஜீவன்) என்றும் இவைகளைப் பிரித்துச்சொல்லுகிறது. ஸத்துவம் என்பது அந்தக்கரணமாகவோ, அல்லது ப்ராணனாகவோ இருக்கவேண்டும். இது பூர்வபக்ஷியின் ஆக்ஷேபம்.

(2) இதை உத்தரார்த்தம் தூஷிக்கிறது. ஸத்துவம் என்கிற பதத்துக்கு ஜந்து (சர்மத்தாலுண்டான பிறப்பையுடையவன்) என்கிற பொருளுமுண்டு. அதுவே இங்கே தகுந்தது. அங்கு ஜ்ஞ: என்கிற பதமும் ஜீவனைச் சொல்லவில்லை. ஏனென்றால், அவன் கர்மபலனை அநுபவிக்காதவன் அன்று. ஆதலால் அந்தப் பதம் பரமாத்மாவையே சொல்லுகிறது.

(3) பூர்வபக்ஷி கேட்கிறான்— கடவல்லி ஜீவனைப்பற்றியே பேசுகிறது. ஏன் என்றால், நசிகேதஸ் "யெயம் ௫ெதெ" என்கிற மந்த்ரத்தாலே ஜீவனுடைய ஸ்வரூபத்தைப்பற்றியே கேட்கிறான். விஷயவாக்யத்திலும், 'ஐதம் விஙெஞள' என்கிற மந்திரத்திலும் ஜீவன்தான் சொல்லப்படுகிறான்—என்று. இதற்குப் பதில் ஸ்ரீபாஷ்யத்திலேயே சொல்லியிருக்கிறது. அதாவது— நசிகேதஸ் உடம்பைக்காட்டிலும் ஆத்மா வேறு என்று அறிந்தவன். ஆகையால் அவன் மோக்ஷஸ்வரூபத்தைப் பற்றிக் கேட்டான். மோக்ஷம் என்பது பரமாத்மாவை அநுபவிப்பது. அதற்காக அவனுடைய ஸ்வரூபத்தையும், அவனை உபாஸிப்பதையும் இந்த உபநிஷத்து வர்ணிக்கிறது. "ஐதம் விஙெஞள" என்கிற மந்திரமும், ஜீவனுக்கு அவன் கர்மத்துக்குத் தகுந்தபடி பலனைக் கொடுத்து அதை அவன் அநுபவிக்கும்படி செய்கிறான் "என்கிற பரமாத்மாவின் பெருமையைச் சொல்லுகிறது.

(4) பரமாத்மா கர்மபலனை அநுபவிக்காவிட்டால், அவனையும் ஜீவனையும் சேர்த்து "ஐதம் விஙெஞள" என்று எப்படிச் சொல்லலாம் என்றால், இதற்குப் பதில் இரண்டுவிதமாய் முதல் ச்லோகம் சொல்லியிருக்கிறது. ஜீவன் கர்மபலனை அநுபவிக்கிறவன், பரமாத்மா அவனை அநுபவிக்கும்படி செய்

கிறவன்; ஜீவன் ப்ரயோஜ்யகர்த்தா, பரமாத்மா ப்ரயோஜக கர்த்தா. இருவருக்கும் பொதுவான கர்த்தா என்கிற ஆகாரத்தைக்கொண்டு கர்த்தாவைச் சொல்லும் ஶத்ருப்ரத்யயம் வைத்து "ருதம் பிபந்தௌ" என்று மந்த்ரம் சொல்லுகிறது. பூர்வபக்ஷி சொன்னபடி புத்தியையோ, ப்ராணனையோ இந்த மந்த்ரம் சொல்வதாகக் கொண்டால் அது கொஞ்சமும் ஸ்வரஸம் அன்று, ஏன் என்றால், ருதபானத்துக்கு அவைகள் உபகரணங்களே அல்லாமல் கர்த்தாக்களல்ல. இது ஓர்வித பரிஹாரம். சத்ரிந்யாயத்தாலே பரிஹாரம் சொல்லுவது மற்றொரு வழி. "சத்ரிணோ யாந்தி" என்று குடைபிடித்துக்கொண்டிருக்கிற ஒரு கூட்டத்தைச் சொல்லும்போது, அதில் குடையில்லாதவரும் இருக்கலாம்; குடையுள்ளவரையும் குடையில்லாதவரையும் சேர்த்து 'சத்ரிண:' என்று சொல்லப்படுகிறது. அதுபோல பானம் பண்ணுகிற ஜீவனையும், பானம் பண்ணாத பரமாத்மாவையும் சேர்த்து "ருதம் பிபந்தௌ" என்று சொல்லலாம். இந்தப் பரிஹாரத்தில் லக்ஷணையென்கிற தோஷமிருக்கிறது. ஆகையால் முதல் பரிஹாரமே ச்லாக்யமானது. இதற்கு அநுகூலமாக ஓர் நியாயமுமிருக்கிறது. இருவஸ்துக்களைச் சொல்லும் சப்தத்தாலே இருவஸ்துக்களைக் குறிப்பிட்டு, அவைகளுக்கு ஒரு க்ரியையில் ஸம்பந்தம் சொல்லுகிறவிடத்தில் அவ்விரு வஸ்துக்களுக்குள் ஒன்று தெரிந்ததாயிருந்து மற்றொன்று தெரியாமலிருந்தால், தெரியாத வஸ்துவையும் தெரிந்த வஸ்துவின் ஜாதியைச் சேர்ந்ததாகவே எடுத்துக் கொள்ளவேண்டுமென்பது அந்த நியாயஸ்வரூபம். உதாரணம்— "உபௌ க்ருஹம் ப்ரவிஷ்டௌ" (இருவர் வீட்டில் பிரவேசித்தார்கள்) என்று சொன்னால், இரண்டு மனிதர்கள் பிரவேசித்தார்கள் என்பதே பொருளாகும். ஒரு மனிதனும், ஒரு தண்டமும் ப்ரவேசித்தன என்று பொருளாகாது. அதுபோல் இந்த இடத்திலும் கர்மத்தின் பலனை அநுபவிக்கும் ஜீவன் அறியப்பட்டிருப்பதால், இரண்டாவது வஸ்துவும் இவன் ஜாதியில் சேர்ந்த சேதனனாயிருக்கவேண்டும்.

(நிகமனம்) இந்த அதிகரணத்தில் பூர்வபக்ஷி சொல்லும் ஹேது—அன்னத்தைச் சாப்பிடுவது. ப்ராம்மணனும் க்ஷத்ரிய

னும் ஓதனமல்லாமையால் ஓதனம்என்னும் பதத்துக்கு லக்ஷணை யால் பொருள் கொள்ளவேண்டும். அந்தப் பொருள் போக்யம். புருஷர்களுக்கு ஸ்திரீகளும், ஸ்திரீகளுக்கு புருஷர்களும் போக் யர்கள். புருஷர்களுக்குப் புருஷர்களும் ஸ்திரீகளுக்கு ஸ்திரீ களும் இஷ்டமான வேலைகளைச் செய்வதால் போக்யர்கள். இப்படிப் பொருள் கொள்ளும்போது போகத்தை அநுபவிக் கிறவன் ஜீவன் என்று ஏற்படும். அவன் கர்மங்களின் பலன் களை அநுபவிக்கிறவன். இந்த ஹேது அஸ்பஷ்டம். ஏன் என் றால், ஓதநம் என்கிற பதத்துக்கு வாக்யத்தில் பொருத்தமில்லை என்று அறிந்து, அதற்கு லக்ஷணையால் எப்படிப் பொருள் கொள்வது என்று விசாரிக்கவேண்டும். இவ்வளவு தாமதம் இருக் கிறபடியால் இந்த லிங்கம் அஸ்பஷ்டம்.

(2) இந்த பூர்வபக்ஷத்துக்குப் பதில்— விஷயவாக்யத்தில் ஓத நம், உபஸேசனம் என்கிற பதங்களிருக்கின்றன. ஓதநம்-அன் னம்; உபஸேசனம்- ஊறுகாய்; அதாவது அன்னத்தைச் சாப் பிடுவதற்கு உதவி செய்து பிறகு தானும் சாப்பிடப்படுவது. (உவஸெவநம்— ஸ்வயஜேு)ாநகெவ ஸதி கூந)ஸ)ாஊநஹெ தஃ:)ம்ருத்யு (யமன்) உதவி செய்கிற சாப்பாடு ஸம்ஹாரம்தான். அவன் மற்றவர்களை ஸம்ஹாரம் செய்வதற்கு உதவி செய்து பிறகு தானும் ஸம்ஹரிக்கப்படுகிறான். இப்படி இரண்டு பதங்க ளுக்கும் ஸம்பந்தமிருக்கிறது. "ப்ரம்ம,க்ஷத்ரம்" என்கிற பதங்கள் ப்ராம்மணன் க்ஷத்ரியன் முதலான ஜங்கமங்களையும் ஸ்தாவரங் களையும் சொல்லுகின்றன. ப்ரளயகாலத்தில் உலகம் நாசமடை யும்போது ப்ராம்மணர்களுக்கும் க்ஷத்ரியர்களுக்கும் மாத்ரம் நாசமில்லை; எல்லாருக்குமே நாசம். ஆகையால் இப்படி ஸம்ஹா ரம் பண்ணுகிறவன் ஜீவன் அன்று; பரமாத்மாதான்.

(3) அன்னம் என்பதற்கு முக்யமான பொருளுக்குப். பொருத்தமில்லாமையால் லக்ஷணையால் பொருள் கொள்ளவேண் டும். அந்தப் பொருள் போக்யம் என்றும், இதேமாதிரி உபஸே சநபதத்துக்கும் லக்ஷணையால் விதேயன் என்பது பொருள் என் றும், பூர்வபக்ஷி வைத்துக்கொண்டு, உபஸேசனமான ம்ருத்யு விதேயன் என்று கொண்டு (வா) பாதகம் பண்ணுதவன் என்று அர்த்தம் பண்ணுகிறான். (வா) பாதகமல்லாமல் இருப்பது ம்ருத்யுவுக்கும் கட்டை ஓட்டாஞ்செல்லி முதலானவைகளுக்கும்

உண்டு, இது பொதுவான ஆகாரம். ப்ரம்மம் க்ஷத்ரம் ஆகிய அன்னத்தைச் சாப்பிடுவதற்கு உதவி செய்வது விசேஷாகாரம், இந்த உதவியை ம்ருத்யு செய்கிறான். மீமாம்ஸகர்கள் தீர்மானம் செய்திருக்கிற * ப்ரோத்காத்ருந்யாயப்படி பொதுவான ஆகாரத்தை விட்டு விட்டு விசேஷாகாரத்தையே எடுத்துக் கொள்ளவேண்டும்.

(4) பூர்வபக்ஷி கேட்கிறான்— ஓதநம் என்கிற பதம் முதல் வாக்யத்திலிருக்கிறது. உபஸேசநம் என்பது இரண்டாவது வாக்யத்தில். முதல் வாக்யம் உபக்ரமந்யாயத்தாலே ப்ரபலம். அதைத் துர்பலமான வாக்யசேஷத்தாலே பாதித்துப் போக்யம் என்னும் அர்த்தத்தை விட்டு விட்டு ஸம்ஹார்யம் என்னும் பொருளை எப்படிக் கொள்ளலாம்—என்று. பதில்— இரண்டு வாக்யங்களும் சேர்ந்து ஒரு மஹாவாக்யம். அதற்கும் உபக்ரமத்துக்கும் விரோதமிருந்தால் மஹாவாக்யமே ப்ரபலம் என்பது இந்த்ரப்ராணாதிகரணத்தில் (1-1-11) தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மேலும், முதல் வாக்யத்துக்கும் வாக்யசேஷத்துக்கும் விரோதமிருந்தாலன்றோ வாக்யசேஷம் துர்பலம். இங்கே விரோதமேயில்லை. ஓதனபதத்துக்கோ முக்கியப்பொருள் இங்கே பொருந்ாது. லக்ஷணையால் ஓர் பொருள் கொள்ளவேணும். அந்த லக்ஷணப்பொருள் போக்யத்வமா ஸம்ஹார்யத்வமா என்றுஸந்தேஹம் வருகிறது.

* இந்த நியாயம் ஸோமயாகத்தில் சமஸஹோமம் ஆனபிறகு 'ப்ரைது ஹோதுச்சமஸ: ப்ரோத்காத்ரூணாம்' என்று அத்வர்யு ஏவுகிறான். இதன் பொருள்— ஹோதாவின் சமஸம் ஸதஸ்ஸுக்குப் போகட்டும், உத்காதாக்களின் சமஸம் போகட்டும்—என்பது. உத்காதா என்பவன் ஒருவனே, அந்தப் பதத்திலிருக்கும் பஹுவசநத்துக்குப் பொருத்தமில்லை. பஹுவசநத்துக்குத் தகுந்தபடி உத்காத்ரு சப்தத்துக்கு லக்ஷணையால் அர்த்தம் கொள்ளவேண்டும். உத்காதாவுடன் சேர்ந்த இருவர்களைப்போல அவனுக்குக் கானம் பண்ணுவது என்கிற ஓர் ஆகாரமுண்டு. மற்ற ருத்விக்குகளைப்போல யாகத்தை முடிக்க உதவி செய்வதாகிய மற்று ஓர் ஆகாரமுமிருக்கிறது. இது பொதுவான ஆகாரம். முன் சொன்னது விசேஷாகாரம். விசேஷாகாரத்தையே எடுத்துக்கொண்டு கானம் பண்ணுகிற உத்காதாவின் கணத்திலிருக்கிறவர்களையே அந்தப்பதம் லக்ஷணையால் சொல்கிறது என்பது தீர்மானம்.

அதை ஸம்ஹார்யத்வம் என்று காட்டி வாக்யசேஷம் தீர்க்கிறது. இது மீமாம்ஸகர்களின் நியாயத்துக்கு ஒத்திருக்கிறது. அந்த நியாயம்— "அக்தாஃ ஶர்கரா உபத⁴தா⁴தி", 'தேஜோ வை க்⁴ருதம்' என்று இரண்டு வாக்யங்கள் இருக்கின்றன. சர்க்கரா: என்பது சுக்காங்கற்கள். அவைகளை அஞ்ஜனம் செய்து ஆஹவனீய அக்னிஸ்தானத்தில் அடுக்கவேண்டும். எதனால் அஞ்ஜனம் செய்கிறது என்று ஸந்தேஹமுண்டாக "நெய் தேஜஸ் அன்றோ" என்று நெய்யை ஸ்தோத்ரம் பண்ணுகிற வாக்யசேஷம் நெய்யினாலேயே அஞ்ஜனத்தைச் செய்யவேண்டும் என்று காட்டி ஸந்தேஹத்தைத் தீர்க்கிறது. அப்படியே இங்கேயும் உபஸேசனம் என்னும் பதம் ஸந்தேஹத்தைத் தீர்த்து உதவி செய்கிறது. ஆகையால் அத்தா பரமாத்மா என்பது ஸித்தம்.

(5) இந்த அதிகரணத்தின் விஷயவாக்யத்தில் ஜகத்காரணத்வம் சொல்லப்படவில்லையே? எப்படி இந்தப் பாதத்தில் இதற்கு ஸங்கதி என்றால்; ஜகத்காரணத்வம் என்பது ஜகத்தினுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் ஆகிய இவைகளுக்குக் காரணமாயிருப்பது. இந்த அதிகரண விஷயவாக்யத்தில் ஸம்ஹாரம் சொல்லியிருப்பதால் இந்த அதிகரணத்துக்கு இந்தப்பாதத்தில் பொருத்தம் உண்டு. (87)

அந்தராதிகரணம் (3)

அந்தர உபபத்தே꞉ ॥ ௧௩ ॥

(கண்ணுடைய)உள்ளில்இருக்கிறவன் பரமாத்மா,ஜீவன் அன்று; ப்ரதிபிம்பமுமன்று; சக்ஷுரிந்திரியத்தை அதிஷ்டானம் பண்ணுகிற ஸூரியனும் அன்று. சொல்லப்பட்ட குணங்களுக்குப் பரமாத்மாவினிடத்திலேயே பொருத்தமிருக்கிறபடியால்.

ஸ்தா²நாதி³வ்யபதே³ஶாச்ச ॥ ௧௪ ॥

கண்ணிலிருப்பது, அதை நியமனம் பண்ணுவது முதலானவைகள் சொல்லியிருக்கிறபடியால். அவைகளுக்குப் பரமாத்மாவினிடத்திலேயே பொருத்தமிருக்கிறது. இந்த விஷயம் மேல் அதிகரணத்தில் ஸ்தாபிக்கப்படுகிறது.

ஸுகவிஶிஷ்டாபிதானாதேவ ச ॥ ௧௫ ॥

ஸுகம் என்கிற பதத்துக்கு ஸுகத்வம் என்பது பொருள். ஸுகத்வத்தை விசேஷணமாகவுடையவனே, உபாஸனத்துக்கு இடத்தையும் சில குணங்களையும் சொல்லுவதற்காக விஷய வாக்யம் சொல்லுகிறபடியால். ஸுகத்தையுடையவனைச் சொல்லும் விஷயவாக்யம்— "ப்ராணோ ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம" (சா—4-10-5) என்பது. கம் - ஸுகம், கம் - ஆகாசம்போல் அளவில்லாதது. ஸூத்ரத்திலுள்ள ச என்பதற்கு இந்த ஹேதுவே போதும், வேறு ஹேதுக்கள் வேண்டியதில்லையென்பது கருத்து.

அத ஏவ ச ஸ ப்ரஹ்ம ॥ ௧௬ ॥

இங்கே அத ஏவ என்பதாலே கீழ்ஸூத்ரத்திலிருக்கிற 'ஸுகவிஶிஷ்டாபிதாநாத்' என்கிற பதத்துக்கு அதிதேசம். 'அத ஏவ ப்ராண:' என்கிற ஸூத்ரத்தில்போல நியாயத்தின் அதிதேசமில்லை. ஸூத்ரத்தின் பொருள்—ஸுகத்வத்தை விசேஷணமாகவுடையவனைச் சொல்லுகிறபடியாலேயே அவன் (ஆகாசம் என்று சொல்லப்பட்டவன்) ப்ரம்மம். இதற்கு விஷய வாக்யம்— "யத்வாவ கம் ததேவ கம், யதேவ கம் ததேவ கம்" (சா—4-10-5) என்பது. அக்னிகள் சிஷ்யனுக்கு "ப்ராணோ ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம" என்று உபதேசம் பண்ணின போது அவனுக்கு ஒரு ஸந்தேஹமுண்டாயிற்று—'ப்ராணோ ப்ரஹ்ம' என்பதற்கு ப்ராணன் ப்ரம்மாத்மகம் என்பது பொருள். இப்படி ஸுகமும் ப்ரம்மாத்மகம், ஆகாசமும் ப்ரம்மாத்மகம் என்று கருத்தா? இப்படியானால் ஒன்றும் புதிதாய்ச் சொல்லப்படவில்லையே. ப்ரம்மஸ்வரூபம் இன்னது என்றும் உபதேசிக்கப்படவில்லையே. ஆகையால் 'கம் ப்ரஹ்ம' என்பது ப்ரம்மம் ஸுகமானது என்றும், 'கம் ப்ரஹ்ம' என்பது ப்ரம்மம் ஆகாசம்போல் அளவில்லாதது என்றும் உபதேசம் பண்ணியிருக்கலாமா? இதுதான் அக்னிகளின் கருத்தா?—என்று. இந்த ஸந்தேஹத்தைக்கொண்டு சிஷ்யன் சொல்லுகிறான்- "விஜாநாம்யஹம் யத் ப்ராணோ ப்ரஹ்மேதி, கம் ச து கம் ச ந விஜாநாமி" (சா-4-10-5) என்று. அக்னி

களும், சிஷ்யனுல் பின்னுல் சொல்லப்பட்டதுதான் தங்கள் கருத்து என்று காட்டின. இதை ஸூத்ரம் சொல்லுகிறது.

ஶ்ருதோபநிஷத்கக³த்யபி⁴தா⁴நாச்ச ॥ கஎ ॥

வேதாந்தத்தைக் கேட்டு பரமாத்மாவை உள்ளபடி அறிந்தவனுலே தியானம் பண்ணவேண்டியதாய் வேறு உபநிஷத்தில் சொல்லப்பட்ட அர்ச்சிராதிமார்க்கத்தைச் சொல்லுகிறபடியால்.

இப்படி ஐந்து ஸூத்ரங்களால் கண்ணுக்குள் இருக்கிறவன் பரமாத்மா என்று ஸாதித்து, பூர்வபக்ஷி சொல்லும் யுக்தியைத் தூஷிக்கிறது மேல்ஸூத்ரம்:—

அநவஸ்தி²தேரஸம்ப⁴வாச்ச நேதர: ॥ கஅ ॥

கண்ணுக்குள்ளே ப்ரதிபிம்பம் முதலானவைகள் எப்போதுமில்லாமையாலும், சொன்ன குணங்கள் அவைகளிடத்திலில்லாமையாலும் அவைகள் கண்ணுக்குள் இருக்கும் புருஷன் அல்ல.

அவ:—பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் சொல்லுகிருர்—

யஸ்த்வக்ஷிண்யேஷ புருஷ இதி ஶ்ருதிபுருஷோ ஜீவோ யதா²க்ஷ தேவதா கோ³ வா பிம்ப³மித்யேவம் ஸம்ஶயே நேதி வேது³ । ஏதத் ப்³ரஹ்மேதி ஶ்ருதேஶ்ச கம் ப்³ரஹ்மாக்ஷித³ர்ஶிதே: ஸம்யத்³வாமத்வாதே³: ஸ்தி²திநியதிபத²ஶ்ருதிஶ்சா பரஸ்ய ॥ 88

* " யஏஷோऽக்ஷிணி புருஷோ த்³ருஶ்யதே " என்று ய: என்கிற பதத்தாலே எவன் ப்ரஸித்தியுள்ளவனுகக் காட்டப்படுகிருனே, அவன் ஜீவனுக இருக்கட்டும்; அல்லது, சக்ஷுரிந்திரியத்தை அதிஷ்டாநம் பண்ணுகிற ஸூரியனுக இருக்கட்டும்; அல்லது பார்க்கப்படுகிற ப்ரதிபிம்பமாக இருக்கட்டும். இது பூர்வபக்ஷம். இது சரியன்று. "ஏதத் ப்³ரஹ்ம" என்றும், 'ஏதத³ம்ருதம்' என்றும், 'அப⁴யம்' என்றும், 'கம் ப³ம்' என்றும் சொல்லுகிறபடியாலும். மேல்வாக்யத்தில் சொல்லப்படும் ஸம்யத்வாமத்வம் முதலிய குணங்களாலும்,

* (சா—4-15-1) எந்தப் புருஷன் கண்ணில் பார்க்கப்படுகிருன்.

எப்பொழுதும் கண்ணிலிருந்துகொண்டு நியமநம் பண்ணுகிறான் என்று சொல்லுகிற ப(ப)லத்தாலும், அர்ச்சிராதிமார்க்கத்தைச் சொல்லுவதாலும், கண்ணுக்குள்ளிருக்கும் புருஷன் பூர்வபக்ஷி சொன்னபடியல்லன்.

குறிப்பு— (1) விஷயவாக்யத்தில் சொல்லப்பட்ட குணங்கள்— அமிருதம் - அளவில்லாமல் போக்யமாயிருக்கிறவன்; அபயம் - துக்கக்கலப்பில்லாதவன்; பரமாத்மாவை நியமநம் பண்ணுகிறவனில்லாமையாலே, அவனுக்குத்துக்கமில்லை; துக்கம் வருமோ என்கிற பயமுமில்லை. ப்ரம்ம-ஸ்வரூபத்தாலும் குணங்களாலும் அளவில்லாதபடி பெரியவன். ஸம்யத்வாம:-எல்லா நல்ல குணங்களும் வந்து சேருமிடமாயிருப்பவன்; வாமனீ: - தன்னை ஆச்ரயித்தவர்களிடத்தில் நல்ல புத்தியைச் சேர்க்கிறவன். பாமநீ:-எல்லா உலகங்களிலும் வ்யாப்தமான காந்தியோடுகூடிய திருமேனியையுடையவன். தன்னை உபாஸிக்கிறவன் அதை வேண்டினால் அதை அவனுக்குக் கொடுக்கிறவன். இந்தக் குணங்கள் ஜீவனிடத்தில் ஒரு நாளும் சேரா. இவைகள் முதல் ஸூத்திரத்தில் சொல்லப்பட்ட குணங்கள்.

(2) கண்ணுக்குள் இருக்கும் புருஷனை 'கம்' என்றும், 'கம்' என்றும் உபநிஷத்து சொல்லி 'கம்' ஆக இருப்பவனே 'கம்' என்றும், கம் ஆக இருப்பவனே "கம்" என்றும் சொல்லுகிறது. இதின் பொருள்— ப்ரஹ்மம் ஸுகமாயிருக்கிறது. ஸுகமான அதன் ஸ்வரூபத்துக்கு அளவில்லை என்பது. இதனாலே ப்ரம்மம் அளவில்லாத ஸுகம் என்பது ஏற்படுகிறது. இது கண்ணுக்குள்ளிருக்கும் புருஷனிடம் இயற்கையாகவே இருக்கிறபடியால் அவன் ஜீவன் அன்று. இது மூன்றாவது நாலாவது ஸூத்ரங்களின் பொருள்.

(3) ஸ்திதிநியதிவ்யாக— இது இரண்டாவது ஸூத்ரத்தின் பொருள். அந்தர்யாமி ப்ராம்மணத்தில் 'எவன் கண்ணுக்குள்ளே இருக்கிறானோ, எவனைக் கண் அறியாதோ, எவனுக்குக் கண் சரீரமோ, எவன் அதற்குள்ளிருந்து அதை நியமனம் பண்ணுகிறானோ, அந்த உன் அந்தர்யாமி அமிருதனான ஆத்மா' என்று சொல்லப்படுகிறது. இதில் அந்தர்யாமி கண்ணிலிருப்பதும் அதை நியமனம் பண்ணுவதும் சொல்லப்படுகின்றன.

இந்த அந்தர்யாமி பரமாத்மாதான் என்று மேல் அதிகரணத்தில் தீர்மானிக்கப்படுகிறது. ஸூத்ரத்திலுள்ள 'ஸ்தாநாதி' என்னும் பதத்தில் ஸ்தானமென்பது ஸ்திதி-இருப்பு. 'ஆதி' என்பதால் நியமனம் சொல்லப்படுகிறது. இந்த இரண்டையும் "ஸ்திதிநியதிவ்யோஸ" என்று ச்லோகம் சொல்லுகிறது. 'ஸ்திதிநியதி' என்பதற்கு எப்போதுமிருப்பது என்றும் பொருள் கொள்ளலாம்.

(4) இந்த உபநிஷத்தில் சொல்லுகிற வித்யையை உபாஸிக்கிறவன் மோக்ஷத்தை அடைகிறான் என்று, அவன் வைகுண்டத்துக்குப் போகும் மார்க்கம் இங்கே சொல்லப்படுகிறது. முமுக்ஷுவால் உபாஸிக்கப்படுகிறவன் பரமாத்மா. ஆகையால் கண்ணுக்குள்ளிருக்கும் புருஷன் பரமாத்மா; அவன் ஜீவன் அன்று. இது ஐந்தாவது ஸூத்ரத்தின் அர்த்தம்.

(5) ஆறுவது ஸூத்ரத்தின் அர்த்தத்தை ச்லோகம் சொல்லவில்லை. ஒருவன் கண்ணுக்கு முன்னிருந்தால் ப்ரதிபிம்பம் கண்ணிலிருக்கும்; அவன் போய்விட்டால், அதுவும் போய் விடும். எப்பொழுதும் பிரதிபிம்பம் கண்ணில் இராது. ஸூரியன் கண்ணுக்குள்ளே இல்லாமலே அதை நியமனம் பண்ணலாம். ஜீவனுக்கு இருப்பிடம் ஹ்ருதயம், கண் அன்று. ஆகையால் இவைகள் ஒன்றும் கண்ணுக்குள்ளிருக்கும் புருஷன் அன்று. சொன்ன குணங்கள் இவையொன்றுக்குமில்லை.

(6) ச்லோகத்தில் 'யத்ருஷ்டாத்யை:' என்பதில் 'ஆதி' என்னும் பதத்தாலே ப்ரத்யக்ஷமாய்ப் பார்ப்பது சொல்லப்படுகிறது. இது பூர்வபக்ஷியின் இரண்டாவது ஹேது. இது அந்யதாஸித்தம். ப்ரம்மம் கண்ணிலிருப்பதற்கு அந்தர்யாமி ப்ராம்மணத்தில் ப்ரஸித்தியிருப்பதாலே அவனை ப்ரத்யக்ஷமாய் பார்க்கிறவர்கள் யோகிகள் என்று ஏற்படுகிறது, இப்படி வேறுவிதமாய் அர்த்தம் பண்ணக்கூடுமாகையாலே இந்த ஹேது பூர்வபக்ஷிக்கு அநுகூலமன்று. இது இரண்டாவது ஸூத்ரத்தின் தாத்பர்யம். (88)

அவ— ஒரு கேள்வி- இங்கே மோக்ஷத்துக்காக உபாஸிக்கப்பட வேண்டியவன் கண்ணுக்குள் பார்க்கப்படுகிறான் என்று சொல்லப்படுகிறது. ப்ரதிபிம்பத்தை உபாஸிப்பதாலே ஒரு பலனும்

கிடைக்காதே. அதைப் பூர்வபக்ஷத்தில் கண்ணுக்குள்ளிருப்பவை களில் ஒன்றாக எப்படிச் சொல்லலாம்— என்று. இதை அநு வாதம்பண்ணிப் பதில் சொல்லுகிறார்:—

ஸ்வாதந்த்ர்யாத் ஸம்விதாயா: ச்ருதிஷு ந ஹி கல்வ்யேவ வேத்யத்வாத்: க்ஷ்ரோணாமோக்ஷநாசேசிய விதிபலிதா வேதநஸ்யாதயுக்தாக்ஷ। தஸ்மாத் க்ஷ்ணாஸ்ய: ப்ரதிக்ருதிவாராஷோ யாஜ்யதே வர்த்மவக்ஷேயம் வர்த்மவராஸ்வஸ்யக்ருதிஷு யயாஸம்ஸ்வம் நீதிரர்த்யா ॥ ॥ அக ॥

ச்ருதி ஸ்வதந்த்ரமானது. பலனைக் கொடுப்பதே உபாஸிக்கத்தகுந்தது என்று அது சொல்லுகிறதில்லை. மங்களமான வஸ்துக்களைப் பார்ப்பதாலே பலன் கிடைப்பதுபோல் உபாஸனத்துக்கும் ப்ரயோஜநம் கிடைக்கலாம். இதை உபாஸியென்கிற விதியின் பலத்தாலே இது ஏற்படுகிறது. ஆகையால் கண்ணுக்குள் இருக்கும் புருஷன் ப்ரதிபிம்பமாக இருக்கக்கூடும் என்று பூர்வபக்ஷத்தில் சொல்லுவது தகுந்ததுதான். இந்த நியாயத்தை கீழ்மேல் அதிகரணங்களில் வரும் இவ்விதமான ஆக்ஷேபங்களுக்கும் ஸமாதானமாக ஊஹிக்கவேண்டும்.

குறிப்பு— (1) பலன் கொடுப்பதையும், பலனைக் கொடுக்க முடியாததையும் உபாஸிக்கும்படி வேதம் சொல்லுகிறது. ஏன் அது சொல்லுகிறது என்று கேட்கக்கூடாது; அது ஸ்வதந்த்ரம். பலன் கொடுக்கமுடியாத அசேதநத்தை உபாஸிப்பதனால் பலனை அடையலாம். கண்ணாடியைப் பார்த்தால் க்ஷேமமுண்டாகும் என்று சாஸ்த்ரம் சொல்லுகிறது. கண்ணாடி அதைக் கொடுக் காது. இவ்விதமானவைகளைப் பார்ப்பதாலும் இவ்விதமான ஒன்றை உபாஸிப்பதனாலும் பலன் கிடைக்குமென்று விதியின் பலத்தாலே ஒப்புக்கொள்ளவேண்டும். ஆகையால் பூர்வபக்ஷி ப்ரதிபிம்பத்தைப் பூர்வபக்ஷத்தில் சேர்த்தது குற்றமன்று. (89)

அவ:— இந்த வித்யையில் விஷயவாக்யத்துக்கும் "கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம" என்கிற வாக்யத்திற்கும் நடுவில் அக்னி வித்யை வருகிறபடியால் இரண்டு வாக்யங்களுக்கும் ஸம்பந்தம் இல்லை. அவைகள் வெவ்வேறு ப்ரகரணங்கள். ஆகையால் அக்ஷி வித்யை வேறு; ப்ரம்மவித்யை வேறு என்கிற ஆக்ஷேபத்தை அநுவாதம் பண்ணிப் பதில் சொல்லுகிறார்:—

सन्दर्भप्रायेणाग्निविद्या मध्यत उपनीता यद्य-
प्यस्यास्तस्यास्त्वङ्गं ब्रह्मविद्यानुगतिरिति सैव
अक्षिविद्या तदेकार्थ्या। इत्येवं विहितविरहेणानुमि-
सहितिता वाग्दर्शनकाङ्क्षायाः प्राक्तनं च
ब्रह्मविद्यानुगुणमिह स्वं प्राक्तनं न ब्रह्म-
दृष्टिः ॥ ॥ १० ॥

முன்னதிகரணத்தில் (விசாரித்த வாக்யத்திற்கு) முன்பு அக்னி வித்யை வந்தது. இந்த அதிகரணத்தின் விஷயவாக்யத்தின் நடுவில் அது வந்திருக்கிறது. ஆகையால் இங்கே ப்ரம்மவித்யை தொடர்ந்துவரவில்லை, ஆதலால் அக்ஷிவித்யை ப்ரம்மவித்யையைக் காட்டிலும்வேறு. இது பூர்வபக்ஷியின் ஆக்ஷேபம். இது சரியன்று. அங்கங்களாலே ஒரு அங்கியைச் சொல்லும் ப்ரகரணத்திற்குப் பிரிவு ஏற்படாது. அக்னிவித்யை ப்ரம்மவித்யைக்கு அங்கம் என்பது பஹுப்ரகாரமாகக் காட்டப்படுகிறது. அக்னிவித்யையில் சொல்லியிருக்கும் பலன்கள் ப்ரம்மவித்யைக்குப் பொருந்தினவைகளாகவே இருக்கின்றன. அக்னிவித்யைக்கு முன்னால் சொல்லியிருப்பதும் ப்ரம்மத்ருஷ்டியன்று.

குறிப்பு— (1) உபநிஷத்தில் 'प्राणो ब्रह्म' என்று ஆரம்பித்து 'तदाकाशं चोचुः' என்று ப்ரம்மஸ்வரூபத்தை அக்னிகள் சேர்ந்து உபதேசித்து, மேலே ஒவ்வொன்றும் தனித்தனியாய் தன்னுடைய வித்யையை உபதேசித்து, மறுபடியும் எல்லாம் சேர்ந்து "एषा सोम्य ते अस्मद्विद्यात्मविद्या चाचार्यस्तु ते गतिं वक्ता" (சா-4-9-9) என்று முடித்தன. மேலே அக்ஷிவித்யை உபதேசிக்கப்படுகிறது. மூன்றாவது ஸூத்ரத்தில் அக்னிவித்யைக்கு முன்னாலே இருப்பதையும், பின்னால் வருவதையும் சேர்த்து ஒரு ப்ரகரணமாக்கி அக்ஷிபுருஷன் அளவில்லாத ஸுகமாயிருப்பதால் அவன் பரமாத்மா என்று தீர்மானம் பண்ணப்பட்டது. இதைப் பூர்வபக்ஷி ஆக்ஷேபிக்கிறான்.

(2) அவன் சொல்லுவது- (1) 'कं ब्रह्म खं ब्रह्म' என்பவைகள் த்ருஷ்டி விதிகள். விஷயஸுகத்தை ப்ரம்மமாகவும், ஆகாசத்தை ப்ரம்மமாகவும் த்யானம் பண்ணு என்று

விதிக்கப்படுகிறது; 'நாஜ ஸ்வ்ஹெதி உவாஸீத' என்பது போல. (2) அக்னிவித்யைக்குப் பிரம்மவித்யையின் பலனைக் காட்டிலும் வேறான பலன்கள் சொல்லப்படுகின்றன. ஆகையால் அது ஒன்றுக்கு அங்கமாக இருக்கக்கூடாது. பலமுள்ளதின் பக்கத்தில் பலமில்லாததாய்ச் சொல்லப்பட்டது அதற்கு அங்கம் என்பது மீமாம்ஸகர்களின் ந்யாயம். இங்கேயோ வேறு பலன்கள் சொல்லப்படுகின்றன. ஆகையால் அக்ஷிபுருஷனைப் பற்றிய வித்யைக்கு ஜீவன் விஷயம்; அது ப்ரம்மவித்யையன்று-என்பது.

(3) இதற்கு ச்லோகம் பதில் சொல்லுகிறது. முதலில் "கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம" என்பது த்ருஷ்டி விதி அன்று. உபதேசம் பெறுகிறவன் முமுக்ஷு. ஆசார்யன் ப்ரம்ம வித்யையை உபதேசிக்காமல் தேசாந்தரம் போனபோது, அவன் சாப்பிடுகிறதில்லை என்று தீர்மானம் பண்ணினவன் அவன் தங்களுக்குச் செய்த சுச்ரூஷைகளினால் ஸந்தோஷமடைந்த அக்னிகள் அவனுக்கு ப்ரம்ம த்ருஷ்டியை உபதேசித்திருக்கமாட்டா. மேலும், அவன் "ப்ராணன் ப்ரம்மம் என்பதை அறிகிறேன், மற்றவைகளை அறியேன்" என்று உத்தரம் சொன்னான். அவைகள் ப்ரம்மத்ருஷ்டியாயிருந்தால் ஒரு விதியையறிந்ததாகவும் மற்றவைகளை அறியவில்லையென்றும் சொன்னது கூடாது. கடைசியில் "உனக்கு எங்கள் வித்யையும், ஆத்மவித்யையும் உபதேசிக்கப்பட்டன" என்று சொன்னதும் த்ருஷ்டிவிதியாயிருந்தால் பொருந்தாது.

(4) அக்ஷிவித்யை ப்ரம்மவித்யையென்று முதலிரண்டு ஸூத்ரங்களாலும் 5, 6-வது ஸூத்ரங்களாலும் ஏற்படுகிறது. அக்னிவித்யை ப்ரம்மவித்யைக்கு அங்கம் என்பதற்கு மூன்று ஹேதுக்களிருக்கின்றன. (1) முதல் அக்னி அக்னி வித்யையை உபதேசம் பண்ண ஆரம்பிக்கும்போது, சிஷ்யன் 'ஸோம்ய' என்கிற சொல்லால் சொல்லப்படுகிறான். முன்பு ஒரு சொல்லாலே சொல்லப்பட்டவனை மறுபடி தெரிவிக்கும்போதுதான் இந்தச் சொல்லை உபயோகப்படுத்தலாம். முன்னாலே ப்ரம்மவித்யை அவனுக்கு உபதேசிக்கப்பட்டது. பிறகு அவனுக்கு அக்னிவித்யையைச்சொல்லுவதாலே இரண்டுவித்யைகளுக்கும் ஸம்பந்தமிருக்கிறது. (2)'ஸூவாய ஸோம்ய தே மஹிம் வக்தா'என்று அக்னி

கள்சொன்னபடியால் ப்ரம்மவித்யையின் உபதேசம் முடியவில்லை என்றும், அவைகள் பரமாத்மாவின் ஸ்வரூபத்தை மாத்திரம் உபதேசித்தன என்றும், உபாஸனத்துக்கு வேண்டிய குணங்களும், இடமும், முக்தன் போகவேண்டிய மார்க்கமும் பின்னால் ஆசாரியனால் உபதேசிக்கப்படுகின்றன என்றும் ஏற்படுகிறது. ஆதலால், அக்னியின் உபதேசத்திற்கும், அக்ஷிவித்யைக்கும் நடுவிலிருக்கும் அக்னிவித்யை ப்ரம்மவித்யைக்கு அங்கம். (3) "அஸ்மத்வித்யா சாத்மவித்யா ச" என்கிற பதங்களின் சேர்க்கை வாக்யம் என்கிற ப்ரமாணம். அதனால் ஒன்று அங்கம் என்பதும், ஒன்று அங்கியென்பதும் ஏற்படுகின்றன. அக்னிவித்யை ஆத்மவித்யைக்கு அங்கம், 'யஸ்ய பர்ணமயீ ஜுஹூ:' என்கிற வாக்யத்தில்போல. பர்ணமயமாயிருப்பது ஜுஹூவுக்கு அங்கம் என்பது பூர்வமீமாம்ஸையில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இங்கே 'ச' என்னும் பதத்தாலே அக்னிவித்யையும், ப்ரம்மவித்யையும் (ஆத்மவித்யையும்) ஸமப்ரதானங்களாகச் சேர்த்துச் சொல்லப்படவில்லை. கீழிரண்டு ஹேதுக்களால் அக்னிவித்யை ப்ரதானம் அன்று என்பது ஏற்படுகிறது, "ச" என்னும் பதம் உபதேசத்தில் இரண்டு விஷயங்களையும் சேர்க்கிறது. "ச" என்பது ஒன்றோடொன்று சேர்ந்திருக்கும் ஸம்பந்தத்தை மாத்ரம் சொல்லுகிறது. அந்த ஸம்பந்தம் அங்காங்கிபாவம் என்றும் சொல்லலாம்.

(5) நடுவில் அங்கம் வருவதால் ப்ரகரணவிச்சேதம் (நடுவில் விட்டுப்போவது) இல்லையென்பது பூர்வமீமாம்ஸையில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(6) அக்னி வித்யைக்குப் பலன் சொல்லியிருக்கிறதே என்கிற ஓர் ஆக்ஷேபத்துக்குப் பதில் சொல்லவேண்டும். அங்கத்துக்குப் பலன் இருக்கக்கூடாது என்பதின் கருத்து— அங்கியின் பலனுக்கு விருத்தமான பலன் அதற்கு இருக்கக்கூடாது என்பதே. இங்கே அக்னி வித்யைக்குச் சொல்லப்படும் பலன்கள் அப்படி விருத்தங்கள் அல்ல; ப்ரம்ம வித்யைக்கு அநுகூலமானவைகள். அவைகளாவன— 'அபஹதே பாபக்ருத்யாம்' ப்ரம்மத்தை அடைவதற்கு இடையூறான பாபங்களைப் போக்குகிறான்; லோகீ பவதி— ப்ரம்மலோகத்தை அடைகிறான்; ஸர்வமாயுரேதி— ப்ரம்மவித்யையை முடிப்பதற்கு வேண்டின

முழு ஆயுஸ்ஸையும் அடைகிறான்; ஜ்யோக்ஜீவதி— வியாதிகளால் துன்பத்தையடையாமல் ப்ரம்மத்தை அடையும் வரையில் ஜீவிக்கிறான்; நாஸ்யாவரபுருஷா: க்ஷீயந்தே- அவன் பிள்ளை பேரன் முதலானவர்களும், சிஷ்யர்களும், அவர் சிஷ்யர்களும் ப்ரம்மவித்துக்களாகவே ஆவார்கள்; உப வயம் தம் புஞ்ஜாமோऽஸ்மிம்ஶ்ச லோகேऽமுஷ்மிம்ஶ்ச— 'அவன் ப்ரம்மத்தை அடைகிறவரையில் இந்த உலகத்திலும் அந்த உலகத்திலும் அவனை ரக்ஷிப்போம்—என்பனவாம்.

(7) அந்தராதிகரணத்தில் (1-1-7) கண்ணிலிருப்பவனைப் பரமாத்மா என்று தீர்மானம் செய்திருக்க, இதில் அவனை ஜீவன் என்கிற பூர்வபக்ஷம் எப்படிக்கூடும்? இதற்குப் பூர்வபக்ஷி சொல்லக்கூடும் பதில்— அந்தரதிகரணத்தில் பரமாத்மாவுக்கே உள்ள குணங்கள் சொல்லப்படுகிறபடியால் கண்ணிலிருப்பவன் அங்கே பரமாத்மாதான். இங்கேயோ அவ்விதமான குணங்கள் சொல்லப்படவில்லை. 'ய ஏஷ:' என்று ஆரம்பிப்பதால், சொல்லப்பட்டது பிரஸித்தமானது என்பதும், அவன் பார்க்கத் தகுந்தவன் என்பதும் ஜீவன் என்பதற்கு அநுகூலங்கள். மறு கேள்வி— "ஏதத்ப்ரம்ம" என்பது முதலான குணங்கள் சொல்லப்படுகின்றனவே. அவைகள் பரமாத்மாவுக்குத் தானேயுண்டு — என்று. பூர்வபக்ஷியின் பதில்— இங்கே 'ஏததிதி ஹோவாச' என்று சொல்லுவதால் இது திருஷ்டி விதி, 'ஸர்வம் கல்விதம் ப்ரம்ம தஜ்ஜலாநிதி' என்பதில்போல 'இதி' என்னும் பதமிருப்பதாலே. இது முதலில் வருகிறபடியால் இதற்கு ஒத்து மேல் சொல்லப்படும் குணங்களுக்கு அர்த்தம் பண்ணவேண்டும். ஆகையால் கண்ணிலிருப்பவனை ஜீவன் என்று சொல்லலாம். இந்தப் பூர்வபக்ஷத்தை இந்த அதிகரணம் தூஷிக்கிறது. "இதி" என்னும் பதம் பூர்வபக்ஷத்துக்கு அநுகூலமன்று. எந்தவிடத்தில் ஞானத்தைச் சொல்லும் பதம் 'இதி' என்பதுடன் சேர்க்கப்படுகிறதோ, அங்கேதான் த்ருஷ்டிவிதி என்று கொள்ளவேண்டும். இங்கே அவ்விதமான பதமில்லை. இருக்கும் பதமோ 'உவாச' (சொன்னான்) என்பதுதான். அதற்கு ஜ்ஞாநம் பொருள் அன்று. (90)

(நிகமனம்) (1) இந்த அதிகரணத்தில் பூர்வபக்ஷி சொல்லும் ஹேது கண்ணிலிருப்பது. இது ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் பொது. ஆனாலும் யஃ என்கிற சொல்லாலும், 'த்ருஶ்யதே' என்கிற நிகழ்காலச்சொல்லாலும். இது ஜீவனுக்கே உண்டு என்று ஏற்படுகிறது. பரமாத்மா கடவல்லியில் சொன்னபடி அத்ருஶ்யன் (காணமுடியாதவன்). இந்தத் தீர்மானத்தை "அக்ஷிணி புருஷோ த்ருஶ்யதே" என்கிற சொற்களைச் சேர்த்து வாக்யம் என்கிற ப்ரமாணமாகப் பண்ணி முடிவு செய்ய வேண்டும். இப்படித் தாமதமுண்டாவதால் இந்த ஹேது அஸ்பஷ்டம்.

(2) அக்ஷிபுருஷனிடத்தில் முமுக்ஷூபாஸ்யத்வம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆநந்தமயனிடத்தில் இதுவும் ஜகத்காரணத்வமுமிருக்கின்றன. ஆகையால் அக்ஷிபுருஷனிடத்திலும் ஜகத்காரணத்வம் வரவேணும் என்பது பூர்வபக்ஷியின் அபிப்பிராயம்.

(3) இந்த அதிகரணத்தால் ஜீவனிடத்தில் ஜகத்காரணத்வமில்லை என்பது ஸித்தமாயிற்று.

அந்தர்யாமி அதிகரணம். (4)

அந்தர்யாம்யதிதைவாதிலோகாதிஷு தத்தர்மவ்யபதேஶாத் ॥ 19 ॥

அதிதைவம், அதிலோகம் முதலான சொற்களை அடையாளமாக உடைய வாக்யங்களில் சொல்லப்பட்ட அந்தர்யாமி பரமாத்மா; ஜீவன் அன்று. பரமாத்மாவின் தர்மங்கள் சொல்லப்படுகிறபடியால். ப்ருஹதாரண்யகத்தில் இருக்கும் அந்தர்யாமி ப்ராம்மணத்தில் (பிரு—5-7) "உன்னுடைய அந்தர்யாமி அம்ருத" என்று பல வாக்யங்கள் சொல்லுகின்றன. 19-வது வாக்யத்தின் முடிவில் 'இத்யதிதைவம்' என்கிற வாக்யமிருக்கிறது. இது காண்வபாடம். மாத்யந்தினபாடத்தில் 'ஸர்வேஷு லோகேஷு' என்றும், 'ஸர்வேஷு வேதேஷு' என்றும், 'ஸர்வேஷு யஜ்ஞேஷு' என்றும் ஆரம்பிக்கிற மூன்று வாக்யங்கள் அதிகமாயிருக்கின்றன. இந்த

இரண்டு பாடங்களும் இந்த அதிகரணத்துக்கு விஷயவாக்யங்கள் என்று காட்டுவதற்காக ஸூத்ரத்தில் "உபயேஷு, உபயோஹ" என்கிற சொற்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ந ச ஸ்மார்த்தமதத்தர்மாபிலாபாச் சாரீரஶ்ச ॥ ௨௦ ॥

அந்தர்யாமி கபிலஸ்மிருதியில் சொல்லப்பட்ட ப்ரகிருதியன்று; சரீரத்துடன் கூடின ஜீவனும் அன்று; அவர்களிடத்தில் இருப்பவனவாக நினைக்கமுடியாத தர்மங்கள் அந்தர்யாமியினிடத்தில் இருப்பனவாகச் சொல்லப்படுகிறபடியால்.

உபயேঽபி ஹி பேதேநைநமதீயதே ॥ ௨௧ ॥

இரண்டு சாகைக்காரர்களும் ஜீவனை அந்தர்யாமியிடமிருந்து பிரித்துச் சொல்லுகிறார்கள், இந்தக் காரணத்தாலே. இந்தக் காரணமென்பது 'ஹி' என்பதின் பொருள்.

அவ— அதிகரணத்தின் பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் சொல்லுகிறார்:—

> அந்தர்யாமீ ஸ ஜீவோ பஹுவிதகரணாயத்ததீ
> வ்யக்த்யநுமிதோ நாந்யோ த்ரஷ்டேதி வோக்தேரிதி
> யதி ந நியந்த்ருஸாம்ய வ்யுதாஸாத் । த்ருஷ்ட்ருத்வாத்யம்
> ச தத்தத்விஷயவபுர்தீரீஶே ஹி முக்யம் தச்ச
> உபாத்தம் காண்வமாத்யந்தினவிதிகதாஸ்தஸ்ய சாத்மா ஶரீரம் ॥

அந்தர்யாமி என்று சொல்லப்பட்டவன் பிரஸித்தனான ஜீவன், பலவிதமான இந்திரியங்களுக்கு அதீனமான ஜ்ஞானங்களையுடையவனாக அநுவாதம் பண்ணப்படுகிறபடியாலும், அவனைத்தவிர வேறு பார்க்கிறவனில்லையென்று சொல்லுகிறபடியாலும். இது பூர்வபக்ஷம். இது சரியன்று. அந்ய என்கிற சொல்லாலே வேறு நியமனம் பண்ணுகிறவன் இல்லையென்று சொல்லப்படுகிறது. பார்ப்பவனாயிருப்பது முதலானவைகள் (த்ருஷ்ட்ருத்வாதி) ரூபம் முதலிய அந்தந்த விஷயங்களுடன் சேர்ந்த ஜ்ஞானங்களே. இந்தப் பொருள் ஈசுவரனிடத்தில் முக்யமாய் இருக்கிறது. அவனுடைய தர்மங்கள் காண்வ மாத்யந்தினபாடங்களில் படிக்கப்பட்டிருக்கின்றன. அவனுக்கு ஜீவாத்மா சரீரம்.

குறிப்பு— (1) உபநிஷத்து, கடைசியில் அந்தர்யாமியை 'ஊத்ருஷ்டோ த்ரஷ்டா' (பார்க்கப்படாமல் பார்க்கிறவன்) என்று சொல்லுகிறது. 'த்ரஷ்டா' என்கிற சொல்லுக்குக் கண்ணால் விஷயங்களைப் பார்க்கிறவன் என்று பொருள் கொண்டு, பூர்வபக்ஷி இப்படிப்பட்டவன் ஜீவன் என்று சொல்லுகிறான். ஸித்தாந்திபோல் ஒருவன் கேட்கிறான்— த்ரஷ்டா என்பதற்கு ரூபத்தைப் பார்க்கிறவன் என்பது பொருள். அதைக் கொண்டு பரமாத்மாவையும் சொல்லலாமே என்று. பூர்வபக்ஷி பதில் சொல்லுகிறான்— அந்தர்யாமி, பரமாத்மா என்றும் த்ரஷ்டா (ரூபத்தைப் பார்க்கிறவன்) என்றும் கொண்டால் வாக்யசேஷமாகிய " நாந்யோऽதோऽஸ்தி த்ரஷ்டா " (அவனைக் காட்டிலும் பார்க்கிறவன் வேறானவன் இல்லை) என்பது பொருந்தாது. ஜீவன் பரமாத்மாவைக் காட்டிலும் வேறு. அவனும் ரூபத்தைப் பார்க்கிறான். வேறு பார்க்கிறவனில்லை என்கிற நிஷேதம் எப்படிக்கூடும்? ஆகையால் தர்சனம் கண்ணால் ரூபத்தைப் பார்ப்பது. ச்ரவணம் காதாலே சப்தத்தைக் கேட்பது. இப்படிப்பட்டவன் ஜீவனைத்தவிர வேறொருவன் இல்லை என்பது இப்போது பொருந்தும். இது பூர்வபக்ஷியின் வாதம்.

(2) இதை ச்லோகம் தூஷிக்கிறது. 'அந்ய' என்கிற பதம் கீழே சொல்லப்பட்டவனுக்கு வேறும் ஸத்ருசமுமானவனைச் சொல்லும். கீழே சொல்லப்பட்டவன் அத்ருஷ்ட (காணப்படாதவ)னாயிருந்துகொண்டு த்ரஷ்டாவாயும் நியந்தாவாயுமிருப்பவன். அவனைப்போல் அவ்வவைகளால் பார்க்கப்படாதவனும், அவ்வவைகளைப் பார்க்கிறவனும், அவ்வவைகளை நியமனம் பண்ணுகிறவனுமான வேறு ஒருவனில்லையென்பதே அந்த வாக்கியத்தின் பொருள் ஆகையால் அந்யனில்லையென்பது பூர்வபக்ஷி நினைத்தபடி அவனுக்கு ஸாதகமாகமாட்டாது. பூர்வபக்ஷி அந்தர்யாமி ஜீவன் என்று ஓர் அநுமானத்தை மனதில் வைத்துக் கொண்டு சொல்லுகிறான். அந்த அநுமானமாவது—அந்தர்யாமி, ஜீவன், அவனை * த்ரஷ்டாவென்று சொல்லுகிறபடியால், நம்மைப் போல என்பது. இதில் உபாதி என்கிற தோஷமிருக்கிறது. கர்மவச்யத்வம் என்பது உபாதி. அது த்ருஷ்டாந்தத்திலிருக்

* த்ரஷ்டா - கண்ணாலே ரூபத்தைப் பார்க்கிறவன்.

கிறது. பக்ஷமாகிய அந்தர்யாமியிடமில்லை. ஏன் என்றால், அவனை 'ஊஜூதஃ' என்று உபநிஷத் சொல்லுகிறது. அந்தப்பதத்துக்கு மரணம் முதலான ஸம்ஸாரிகளின் தர்மமில்லாதவன் என்பது பொருள். அதில்லாமைக்குக் காரணம் கர்மமில்லாமை. த்ரஷ்டா என்கிற பதத்தால் அங்கங்கே ஜீவனையும் பரமாத்மாவையும் சொல்லுகிறபடியாலே அந்த இடங்களுக்குப் பொருந்தும்படி அந்தப் பதத்துக்கு அர்த்தம் சொல்லவேண்டும். அந்த அர்த்தம் ரூபத்தைப் பார்க்கிறவன் என்பது மாத்திரம். இப்பொழுது நீ சொன்ன அநுமானத்தில் வ்யபிசாரம் என்கிற தோஷமும் வருகிறது.

(3) இப்படிப் பூர்வபக்ஷத்தைத் தூஷித்து, ஸித்தாந்தத்துக்கு அநுகூலமான இரண்டு ஹேதுக்களைச் சொல்லுகிறார். முதல் ஹேது— இரண்டு சாகைகளும் அந்தர்யாமியை த்ரூஷ்டா என்றும், ஊஜூதஃ என்றும் நியமனம் பண்ணுகிறவன் என்றும் சொல்லுகின்றன. அந்தர்யாமி எல்லாவற்றுக்கும் ஆத்மா என்று சொல்லப்படுகிறான். ஜீவன் ஒரே காலத்தில் ஒரேசரீரத்துக்கு ஆத்மா; அந்தர்யாமியினிடத்தில் ஸம்ஸாரியின் தர்மம் ஒன்றுமில்லை என்று அம்ருத என்னும் பதம் காட்டுகிறது. அந்தர்யாமியிடத்தில் சொன்ன தர்மம் பத்தஜீவனிடத்திலில்லை. முக்தனிடத்திலும் முன்பு இல்லாதிருந்து பரமாத்மாவினால் கொடுக்கப்பட்டது. அந்தர்யாமி ஒருவனாயிருந்து எல்லாரையும் எல்லாவற்றையும் நியமனம் பண்ணுகிறான் என்பது சொல்லப்படுகிறது. இது ஜீவனால் முடியாது. இது முதலிரண்டு ஸூத்திரங்களின் அர்த்தம். இரண்டாவது ஸூத்ரத்தில் "ந ச ஸ்மார்த்தம்" என்று ஏன் சொல்லியிருக்கிறது? அந்தர்யாமி ப்ரகிருதியோ என்கிற ஸந்தேஹமேயில்லையே என்றால், அது உதாஹரணமாகச் சொல்லப்படுகிறது.— எப்படி அந்தர்யாமி, ப்ரகிருதியும் அதின் கார்யங்களும் அன்றோ, அப்படியே ஜீவனும் அன்று என்று சொல்வதற்காக.

(4) ஸித்தாந்தத்துக்கு அநுகூலமான இரண்டாவது ஹேது— ஆத்மாவினால் அறியப்படாதவனாய் அவனைச் சரீரமாகவுடையவனாய் அவனை நியமனம் பண்ணுகிறவனாய் அந்தர்யாமி சொல்லப்படுகிறான்: இதனால் அந்தர்யாமி ஜீவனைக் காட்டிலும் வேறு

என்பது ஏற்படுகிறது. ஆத்மா ஜீவன். அவனை ஒரு சாகையில் ஆத்மா என்றும், மற்றொரு சாகையில் விஜ்ஞானம் என்றும் சொல்லியிருந்தபோதிலும் இரண்டு பதத்துக்கும் ஸ்தானம் என்கிற ப்ரமாணத்தாலே ஒரே பொருள். (91)

அவ:— கீழ் இரண்டு சாகைகளின் வாக்யங்களிலிருக்கும் ஆத்மா விஜ்ஞானம் என்கிற பதங்கள் ஒரே பொருளுள்ளவைகளாய் ஆத்மாவைச்சொல்லுகின்றன என்பதுசொல்லப்பட்டது. அவைகள் இரண்டும் அந்தக்கரணத்தைச் சொல்லுகின்றன, ஆகையால் அந்தர்யாமி அந்தக்கரணத்தைக் காட்டிலும் வேறு; அவன் ஜீவன் என்று பிறக்கும் சங்கையை அநுவாதம் பண்ணி பதில் சொல்லுகிறார்—

𑌸𑍍𑌥𑌾𑌨𑍈𑌕𑍍𑌯𑌾𑌚𑍍𑌚 𑌶𑌾𑌖𑌾𑌦𑍍𑌵𑌯𑌪𑌠𑌿𑌤𑌾𑌤𑍍𑌮
𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌬𑍍𑌦𑌯𑍋𑌰𑍍𑌏𑌕𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌂 𑌤𑌦𑌪𑌿 𑌕𑌥𑌯
𑌤𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌯𑍁𑌷 । 𑌲𑍋𑌕𑌾𑌮𑍍𑌨𑌾𑌯𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿
𑌤𑍍𑌯𑌾𑌽𑌨𑍁𑌶𑌿𑌷𑍍𑌟𑌿 𑌚𑍇𑌤𑌨𑍇 𑌹𑍍𑌯𑍇𑌕𑌤𑌾𑌨𑌬𑌾𑌧𑌃
𑌕𑍇𑌨𑌾𑌪𑌿 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌭𑌵𑌤𑌿 𑌚 𑌸 𑌤𑍇 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 𑌸𑌾𑌕𑍍𑌷𑍀
𑌸𑍍𑌯𑍁𑌷 ॥ ॥ ௯௨ ॥

இரண்டு சாகைகளிலும் படிக்கப்பட்ட ஆத்மா விஜ்ஞானம் என்கிற பதங்கள் ஒரே ஸ்தானத்திலிருப்பதால் ஒரே பொருள் உள்ளவைகள் என்கிற தீர்மானத்தை அசைக்கமுடியாது. (எவரும் ஒப்புக்கொள்ளவேண்டியதுதான்). ஆனாலும், அவைகள் புத்தியையே சொல்லுகின்றன என்கிற வாதம் ஸரியானதன்று, ஏன் என்றால், உலகத்திலும் வேதத்திலும் ஆத்மா விஜ்ஞாநம் என்கிற பதங்கள் ஒரே விதமாய் சேதனனையே சொல்லுகின்றன. இதுதான் அவைகளுக்குப் பிரஸித்தமான அர்த்தம். (2) லக்ஷணையாலே அவைகளுக்கு மனது பொருள் என்று சொல்வதானால், முக்யமான அர்த்தத்துக்குப் பாதமிருப்பதாகக் காட்டவேண்டும். அதைக் காட்டமுடியாது. (3) ஒவ்வொரு வாக்யத்திலும் 'ஸ தெ' என்கிற பதங்கள் இருக்கின்றன. 'ஸ:' என்பது அந்தர்யாமியையும், 'தெ' என்பது உபதேசத்தைப் பெற்றுக்கொண்டிருந்த ஜீவனையும் சொல்லுகின்றன. அந்த வாக்கியங்கள் அந்தர்யாமியை ஜீவனுக்கு அந்தர்யாமி என்று

சொல்லுகின்றன. ஒரு வாக்யம் மாத்திரம் பூர்வபக்ஷியால் ஜீவனைச் சொல்லப்பட்ட அந்தர்யாமி, உபதேசத்தைப்பெறுகிற ஜீவனுக்கு ஆத்மா என்று சொல்லுவது அஸங்கதம். எல்லா வாக்யங்களும் ஒரேவிதமாயிருக்கா.

குறிப்பு— (1) இதே ப்ரகரணத்தில் மனதிலிருந்துகொண்டு அந்தர்யாமி அதை நியமனம் பண்ணுகிறான் என்று சொல்லுகிறபடியால், சொன்ன சங்கையை ஒப்புக்கொண்டால் புநருக்தி என்கிற தோஷம் வரும். (92)

(நிகமனம்) பூர்வபக்ஷத்தில் ஹேது, த்ரஷ்டா என்கிற பதம், இது ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் பொது. ஆனாலும் வாக்யசேஷத்தைக்கொண்டு அந்தப் பதம் கண்ணால் பார்க்கிறவனைச் சொல்லுகிறது என்றும் அப்படிப்பார்க்கிறவன் ஜீவன் என்றும் பூர்வபக்ஷி சொல்லுகிறான். வாக்யசேஷத்தைக்கொண்டு த்ரஷ்டா என்பதின் அர்த்தத்தை நிர்ணயம் பண்ணவேண்டியதாகையால் தாமதமுண்டாகிறது. இந்த ஹேது அஸ்பஷ்டம்.

(2) இங்கே அந்தர்யாமியிடம் ஜகந்நியமனம் என்கிற தர்மம் சொல்லப்படுகிறது. ஆனந்தமயனிடத்தில் இதுவும் ஜகத்காரணத்வமும் சேர்ந்திருக்கின்றன. ஆகையால் ஜகத்காரணத்வமும் அந்தர்யாமியான ஜீவனிடத்தில் வருகிறது என்பது பூர்வபக்ஷியின் கருத்து.

(3) இந்த அதிகரணத்தால் ஜீவனிடத்தில் ஜகத்காரணத்வமிருப்பதாக ஏற்படாது.

அத்ருச்யத்வாதிகுணகாதிகரணம். (5)

அத்ருச்யத்வாதிகுணகோ தர்மோக்தே: ॥௨௨॥

அத்ருச்யனாயிருப்பது முதலான குணங்களையுடையதாகச் சொல்லப்பட்ட அக்ஷரம் பரமாத்மா, பிரகிருதியும் அன்று, ஜீவனும் அன்று, பரமாத்மாவினுடைய தர்மம் சொல்லப்படுகிறபடியால். இதற்கு **விஷயவாக்யங்கள்**— “அத பரா யயா ததக்ஷரமதிகம்யதே। யத்தத்த்ரேச்யமக்ராஹ்யம்” (மு–1-6), “அக்ஷராத் பரத: பர:” (மு–2-2) என்பன. அக்ஷரம் என்கிற சொல் நபும்ஸகலிங்கமாயிருப்பதாலே ஸூத்ரத்தில் அத்ரு

ஶ்ருதிஷ்வாதிராணகஂ என்று இருக்கவேண்டும். ஆனாலும், இரண்டாவது வாக்யமும் இதற்கு விஷயம் என்று காட்டுவதற்காக 'ராணகஃ' என்கிற பும்லிங்கமான பதம். இங்கு தர்மம் "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்" என்பதால் சொல்லப்பட்டிருக்கிறது.

விஶேஷணபேதவ்யபதேஶாப்யாஞ்ச நேதரௌ ॥

அக்ஷரம் என்று சொல்லப்பட்டவனை ப்ரகிருதியிலிருந்தும் ஜீவனிடத்திலிருந்தும் பிரிப்பதாலும், அவைகளைக் காட்டிலும் அவன் வேறு என்று சொல்லுகிறபடியாலும் அக்ஷரன் அவைகள் அன்று. ஒன்றை அறிவதினால் எல்லாம் அறியப்பட்டதாக ஆகும் என்று இந்த உபநிஷத்தில் முதலில் சொல்லியிருக்கிறது. அந்த ஒன்றான அக்ஷரம் பூதயோநி பதத்தால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது ப்ரகிருதியாகவோ ஜீவனாகவோ இருக்கமுடியாது. ப்ரகிருதியை அறிவதாலே ஜீவனை அறியமுடியாது. ஜீவனை அறிவதாலே ப்ரகிருதியை அறியமுடியாது. அக்ஷரம் இவைகளைக் காட்டிலும் வேறு என்பது "அக்ஷராத்பரதஃ பரஃ" என்பதால் சொல்லப்படுகிறது. இந்தவாக்யத்தில் அக்ஷரம் ப்ரகிருதி. அதைக்காட்டிலும் பரமானவன் ஜீவன். அவனைக்காட்டிலும் பரமானவன் பூதயோநியான அக்ஷரம், அதாவது பரமாத்மா.

ரூபோபந்யாஸாச்ச ॥ ௨௩ ॥

ரூபத்தைச் சொல்லுகிறபடியாலும். ரூபமாவது— "அக்நிர்மூர்த்தா" (மு- 2- 1- 4) என்கிற வாக்யத்தில் சொல்லப்பட்டது. அது எல்லாருக்கும் ஆத்மாவாயிருக்கிற பரமாத்மாவினிடத்தில்தான் பொருந்தும்.

அவ— அதிகரணத்தின் பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் சொல்லுகிறார்:—

த்ருஶ்யத்வாதேர்நிஷேதோ விக்ருதிஷுதித ஸத்த்வக்ஷரே
ஸந்நிக்ருஷ்டாச்ச பஶ்சாத்தாக்ஷரம் தத்த்வபரிகவரஃ
பஶ்சிம்ஶோத்தாஸ்த்ர ஸா ஹரிஶ் । ஸர்வஜ்ஞத்வாதிஷ்ட
ஷேஃ ப்ராயஶஸஶாதிதம் ஸ்வக்ஷரம் ப்ரஹ்மஶப்தம் பஶ்சா
த்ஸூக்தம் தத் ஜீவாதிக்ஷேபயிதயா ஹேதுஸத்த்வரோக்தஃ ॥

த்ருச்யத்வம் முதலானவைகளை நிஷேதித்திருப்பது, விகாரத்தை அடைகின்ற அக்ஷரத்தினிடத்தில்தான் கிட்டியிருப்பதாலே பொருத்தமுடையது. ஐந்தாவது வேற்றுமையோடு முடிகிற அக்ஷரம் என்கிற பதம் அதையே சொல்லுகிறது. அதைக்காட்டிலும் வேறாகச் சொல்லப்பட்டவன் ஜீவன். இது பூர்வபக்ஷம். இது சரியன்று. ஸர்வஜ்ஞன் என்பது முதலானவைகளைச் சொல்லியிருக்கிறபடியால் முதலில் சொல்லப்பட்ட அக்ஷரம் நிர்தோஷமான ப்ரம்மம்தான். பின் சொல்லப்பட்டது ஜீவனோ, அல்லது ப்ரகிருதியோ, அக்ஷரத்தை அவதியாக வைத்துக் கொண்டு அதைக் காட்டிலும் வேறு என்று பேதம் சொல்லப்படுகிறபடியால்.

குறிப்பு—(1) அக்ஷரத்தில் த்ருச்யத்வம் முதலானவைகள் இல்லையென்று விஷயவாக்யம் சொல்லுகிறது. ஓரிடத்திலிருப்பதையே மற்றவிடத்திலில்லையென்று சொல்லலாம் என்பது பொதுவான நியாயம். ஆகையால் இந்த வாக்யத்தால் த்ருச்யத்வம் முதலானவைகளையுடைய ப்ரகிருதியின் கார்யங்கள் நினைவுக்கு வருகின்றன. அவைகளைப் போலிருப்பதும் அவைகளுக்கு காரணமுமான ப்ரகிருதியே நம்முடைய புத்தியில் உடனே தோன்றுகிறபடியாலே அக்ஷரம் என்று சொல்லப்பட்டது அந்த பிரகிருதிதான். பரமாத்மா, நினைவில் கிட்ட இல்லாதபடியால் அவனை அக்ஷரம் என்கிற சொல் சொல்லவில்லை. இரண்டாவது விஷய வாக்யத்தில் ஃக்ஷராக்ஃ வரதஃ என்கிற இரண்டு பதங்களும் ஸமாநாதிகரணமான பதங்கள். அப்போது அவைகளுக்குப் பொருள் - கார்யங்களை காட்டிலும் வேறான அக்ஷரத்தைக்காட்டிலும்—என்பது. அதைக்காட்டிலும் 'வரஃ' என்று சொல்லப்பட்டவன் ஜீவன். இது பூர்வபக்ஷம்.

(2) இதை ச்லோகம் தூஷிக்கிறது. மேலே அக்ஷரத்தை " யஸ்ஸர்வஜ்ஞஃ ஸர்வவித் " என்று பரமாத்மாவுக்கேயுள்ள ஸர்வஜ்ஞத்வம் என்கிற குணத்தையுடையதாகச் சொல்லுகிறபடியால் அக்ஷரம் ப்ரகிருதியும் அன்று ஜீவனும் அன்று. ப்ரகிருதி அசேதனம். பத்த ஜீவனுக்கு அவனுடைய தர்மமான ஜ்ஞானம் குறைந்திருப்பதால் அவன் ஸர்வஜ்ஞன் அல்லன். முக்தஜீவனும் ஸர்வஜ்ஞன் அல்லன். அவனுக்கு அது பரமாத்மாவால் கொடுக்கப்பட்டது. இங்கே ஒருவனால் கொடுக்கப்படாமல் இயற்கையாகவே

யிருக்கிற குணம் சொல்லப்படுகிறது. " ஸவஜ்ஞஃஸாதி " என்கிற விடத்தில் "ஞஃதி" என்கிற சொல்லால் இரண்டாவது மூன்றுவது ஸூத்ரங்களில் சொன்ன ஹேதுக்கள் காட்டப்படுகின்றன. ஆகையால் அக்ஷரம் என்பது பரமாத்மா என்பது ஸித்தம்.

(3) பூர்வபக்ஷத்தில் சொன்னபடி "அக்ஷராத் பரதஃ" என்கிற பதங்கள் ஸமாநாதிகரணங்கள் என்பது கூடாது. பரதஃ என்கிற சொல் எதைக்காட்டிலும் பரம் (வேறு) என்று ஓர் அவதியை (எல்லையை)த் தேடுகிறது. அந்த அவதி அக்ஷராத் என்கிற சொல்லாலே காட்டப்படுகையில், அதைவிட்டுவிட்டு சொல்லப்படாத கார்யவர்க்கத்தை அவதியாகக் கல்பிப்பது சரியன்று. வாக்யத்துக்குச் சரியான அர்த்தம்— அக்ஷரம் என்று சொல்லப்பட்ட ப்ரகிருதியைக் காட்டிலும் வேறானவன் ஜீவன், அவனைக்காட்டிலும் வேறானவன் பரப்ரம்மம் என்பது.

(4) பூர்வபக்ஷி சொல்லுகிறபடி 'அக்ஷராத் பரதஃ' என்கிறவைகளை ஸாமாநாதிகரண்யமாக வைத்துக்கொண்டாலும், கீழே சொன்ன அர்த்தம் கிடைக்கும். ஜீவஸ்வரூபத்துக்கு மாறுதலில்லாதபடியால், அக்ஷரம் என்கிற பதமும் ஜீவனையே சொல்லலாம். அவன் ப்ரகிருதியைக் காட்டிலும் வேறானவன். பரஃ என்கிற பதத்தாலே சொல்லப்பட்டவன் பரமாத்மா. இதை நினைத்தே ச்லோகம் 'ஜீவாதிகஃ' என்று சொல்லுகிறது.

(5) பூர்வபக்ஷி கேட்கிறான்— இரண்டு வாக்யங்களிலுமிருக்கும் அக்ஷரம் என்கிற பதம் ச்ருதி. இரண்டாவது வாக்யத்திலிருக்கும் அக்ஷரம் ப்ரகிருதி என்று ஸித்தாந்தத்திலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆகையால் முதல் வாக்யத்திலிருக்கும் அக்ஷரமும் ப்ரகிருதிதான். ஸர்வஜ்ஞனுயிருப்பது லிங்கம். அது எப்படி ச்ருதியைப் பாதிக்கும்—என்று. பதில்— ஸித்தாந்தத்துக்கும் அநுகூலமான ச்ருதியிருக்கிறது. "யேநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம்" என்கிற வாக்கியத்தில் அக்ஷரனைப் புருஷன் என்று சொல்லுவதாலே அந்தப் பதம் அசேதனமான ப்ரகிருதியைக் காட்டாது. லிங்கம் ச்ருதிக்குப் பலத்தைக்கொடுக்கிறது.

இந்த ச்ருதி இரண்டாவது முண்டகத்தில் கடைசியிலிருக்கிறது. பூர்வபக்ஷி காட்டும் ச்ருதி மேலே இரண்டாவது அத்யாயத்தின் முதல் முண்டகத்திலிருப்பதால் துர்பலம். உபஸம்ஹாரத்திலிருப்பதைவிட உபக்ரமத்திலிருப்பது ப்ரபலமன்றோ? ஆகையால் முதல் ஸூத்ரம் சொன்ன தீர்மானம் நிற்கிறது.

(6) அக்ஷரம் என்கிற ஒரே பதத்தாலே பரமாத்மாவையும், ஜீவனையும், ப்ரக்ருதியையும் எப்படிச் சொல்லலாம் என்றால், அந்தப் பதத்துக்கு (ந க்ஷரதி) நாசமில்லாதது என்பது பொருள். இந்தத் தர்மம் பரமாத்மாவினிடத்தில் பூர்ணமாயிருப்பதால் அவனே அதற்கு முக்யமான பொருள். மற்றவர்களிடத்தில் இதில் கொஞ்ச அம்சமிருப்பதாலே அது லக்ஷணையாலே அவைகளைச் சொல்லுகிறது. ஜீவனுக்கு ஸ்வபாவத்தில் மாறுதலிருந்தாலும், ஸ்வரூபத்தில் மாறுதலில்லை. ப்ரக்ருதிக்கு ஸ்வரூபத்தில் மாறுதலிருந்தாலும் அது ஒருபோதும் இல்லாமல் போகிறதில்லை. அல்லது, அக்ஷரபதம் அசூ என்கிற தாதுவிலிருந்து ஏற்படலாம். அப்பொழுது அது (அச்நுதே—வ்யாப்நோதி) எங்கும் வியாபித்திருக்கிற வஸ்துவைச் சொல்லுகிறது. இந்தத் தர்மம் பரமாத்மாவினிடத்தில் பூர்ணமாயிருக்கிறது. ப்ரக்ருதிக்கு எங்கும் வியாப்தி இல்லாமற்போனாலும், தன் கார்யங்களை வியாபித்துக்கொண்டிருப்பதாலே அதையும் அக்ஷரம் என்று சொல்லலாம்.

(7) "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்" என்கிற வாக்யம் அக்ஷரம் ஸர்வஜ்ஞனாயிருப்பதை அநுவாதம் செய்து, அவனை ஜகத்காரணமாகச் சாட்டுகிறது என்று எண்ணக்கூடாது. அவன் ஜகத்காரணமாயிருப்பது முன்னமேயே விதிக்கப்பட்டிருக்கிறது. அதை மறுபடியும் இங்கே விதிக்கவேண்டியதில்லை. ஆகையால் இங்கே விதிக்கப்படுவது அவன் ஸர்வஜ்ஞன் என்பதுதான். இந்தக் குணம் ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதற்கு வேண்டியது. இந்த வாக்யம் 'தத்நா ஜுஹோதி' என்கிற வாக்யம்போலிருக்கிறது. அதில் ஹோமம் விதிக்கப்படவில்லை. வேறு வாக்யத்தால் விதிக்கப்பட்ட ஹோமத்தை அநுவாதம் செய்து தயி என்னும் ஹோமத்ரவ்யம் விதிக்கப்படுகிறது. 'யஸ்ஸர்வஜ்ஞஃ' என்னும் வாக்யத்தில் ஸர்வஜ்ஞ என்னும் பதம் எல்லா வஸ்துக்களையும் அறிந்தவன் என்றும், ஸர்வவித்

என்னும் பதம் அவைகளின் எல்லாப் பிரகாரங்களையும் அறிந்தவன் என்றும் காட்டுகின்றன. ஒரு வஸ்துவை அறிவதுடன் அதின் பிரகாரங்களையும் அறிகிறவன்தான் அதை நன்றாய் அறிகிறவன். ஆகையால் இப்படிப் பொருள் கொள்வது பொருத்தமானது. அல்லது, 'ஸர்வவித்' என்னும் பதம் எல்லாவற்றையும் அடைந்தவனைக் காட்டுகிறது என்று கொள்ளலாம். அப்போது அவன் எல்லாவற்றுக்கும் ஸ்வாமி என்பது ஏற்படும்.

(நிகமனம்) 1 இந்த அதிகரணத்தில் பூர்வபக்ஷியின் ஹேது அத்ருஶ்யத்வம் முதலானவைகள். அவை ப்ரக்ருதிக்கும் பரமாத்மாவுக்கும் பொது. ஸந்நிகர்ஷம் என்கிற ந்யாயத்தைக் கொண்டு அவற்றைப் பிரக்ருதிக்கே சொல்லவேணும். இந்த ந்யாயத்தைக் காட்டித் தீர்மானம் பண்ணவேண்டியிருப்பதால் தாமதமுண்டாகிறது. அதனால் இந்த ஹேது அஸ்பஷ்டம்.

2 விஷயவாக்யத்திலேயே அக்ஷரத்தைப் பூதயோனி என்று ஜகத்காரணமாகச் சொல்லியிருப்பதாலே பூர்வபக்ஷிக்கு இடமுண்டாகிறது.

3 இந்த அதிகரணத்தாலும் ப்ரகிருதியிடத்தில் ஜகத்காரணத்வமிருப்பதாக ஏற்படவில்லை. (93)

வைச்வாநராதிகரணம் (6)

வைஶ்வாநரஸ்ஸாதாரணஶப்தவிஶேஷாத் ॥ உரு ॥

வைச்வாநரன் என்று சொல்லப்பட்டவன் பரமாத்மா; வைச்வாநரன் என்கிற பதம் அவனுக்கும் ஜாடராக்னிக்கும், ஸூர்யனென்ற தேவதைக்கும், பஞ்சபூதங்களில் ஒன்றான அக்னிக்கும் பொதுவாயிருந்தாலும், பரமாத்மாவுக்கே உள்ள தர்மங்களைக் கொண்டு அவன் பரமாத்மாதான் என்று குறித்துக் காட்டப்படுகிறபடியால்.

ஸ்மர்யமாணமநுமாநம் ஸ்யாதிதி ॥ உசு ॥

(ஊ தி) இப்படியிருக்கிறது என்று நினைவுக்கு வருகிற ரூபமானது வைச்வாநரனைப் பரமாத்மா என்று காட்டுவதற்குத்

தருந்த லிங்கமாயிருக்கிறது. இப்படியென்று சொல்லப்படுவது முண்டகோபநிஷத்தில் சொல்லப்படுகிற ரூபம். அந்த ரூபம் இங்கே நினைவுக்கு வருகிறது. அது பரமாத்மாவின் ரூபம்.

ஶப்³தா³தி³ப்⁴யோऽந்த꞉ப்ரதிஷ்டா²நாச்ச நேதி சேந்ந ததா² த்³ருஷ்ட்யுபதே³ஶாத³ஸம்ப⁴வாத் புருஷமபி சைநமதீ⁴யதே ‖ ௨௭ ‖

சப்தம் முதலானவைகளாலும், சரீரத்துக்குள்ளே யிருப்பதாகச் சொல்லப்படுவதாலும்(ஜாடராக்னி இங்கே தோன்றுவதால்) கீழ்ச் சொன்ன தீர்மானம் கூடாது என்கிற ஆக்ஷேபம் சரியன்று. மூன்று உலகங்களையும் சரீரமாகவுடைய வைச்வாநரனை (பரமாத்மாவை) ஜாடராக்னியைச் சரீரமாகவுடையவனாக உபாஸிக்கவேண்டியதாக உபதேசித்திருப்பதால். இது எப்படி அறியப்படுகிறது என்றால், ஜாடராக்னிக்கு மூன்று உலகங்களும் சரீரமாயிருப்பது பொருந்தாமையால். ஒரு சாகையில் “ஸ ஏஷோऽக்³நிர்வைஶ்வாநரோ யத் புருஷ꞉(அக்னிர-1-4-25)என்று வைச்வாநரனைப் புருஷன்என்று சொல்லுகிறார்கள். அதனாலும் ஆக்ஷேபம் சரியன்று. ஜாடராக்னிக்குப் புருஷத்தன்மை கிடையாது. ஓர் உபாதியுமில்லாமல் புருஷசப்தம் பரமாத்மாவைத்தான் சொல்லும். இதைப் புருஷஸூக்தத்தில் காணலாம். ஆதலால் இங்கு அக்னிசப்தம் அக்னியைச் சரீரமாகவுடைய பரமாத்மாவைத்தான் சொல்லுகிறது. வேறு ச்ருதியான அக்னிரஹஸ்யத்தில் சொல்லப்படுகிற இரண்டு ஹேதுக்கள் தூர இருப்பதால், ஸூத்ரத்தில் நேரே காட்டப்படுகின்றன. அந்த ஹேதுக்களாவன— வைச்வாநரன், அக்னி என்கிற பதங்களை ஸமாநாதிகரணங்களாகச் சேர்த்திருப்பதும், சரீரத்துக்குள்ளேயிருப்பதாகச் சொல்லுவதும். விசாரிக்கப்படுகிற சாந்தோக்யத்திலிருக்கிற இரண்டு ஹேதுக்கள் கிட்ட இருப்பதால் ‘ஆதி’ என்னும் பதத்தால் குறிக்கப்படுகின்றன. அவைகளாவன— உபாஸகனுடைய சரீரத்தில் மூன்று அவயவங்களை மூன்று அக்னிகளாகக் கல்பிப்பதும், ப்ராணாஹூதிகளுக்கு ஆதாரமாகச் சொல்லியிருப்பதும்.

அத ஏவ ந தே³வதா பூ⁴தம் ச ‖ ௨௮ ‖

ஆகையினாலேயே வைச்வாநரன் ஸூரியனாகிய தேவதையும் அன்று; பஞ்சபூதங்களில் ஒன்றான அக்னியும் அன்று. ‘ஆகையி

ஞலே' என்பது முதல் ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட ஹேதுக்களைக் காட்டுகிறது. அந்த ஹேதுக்களாவன - முமுக்ஷுக்களாலே கேட்கப்படுவது, வைச்வாநரனை ஆத்மாவாகவும் பிரம்மமாகவும் சொல்லுவது, ப்ரம்மம் என்னும் பதத்துக்குப் பதிலாக வைச்வாநரன் என்னும் பதத்தை ப்ரயோகித்திருப்பது, வைச்வாநராத்மாவின் உபாஸனத்தின் பலன்களாக அவனுடைய அநுபவத்தையும் எல்லாப் பாபங்கள் போவதையும் சொல்லியிருப்பது- என்பன. இந்த ஹேதுக்களாலே, விசாரிக்கப்பட்ட வைச்வாநரன் ஸூர்யனுமன்று ; மஹாபூதமான அக்னியுமன்று என்பது காட்டப்படுகிறது. இதற்குக் கீழ் ஸூத்ரத்தால் ஜாடராக்னியுமன்று என்று காட்டப்பட்டது. ஜாடராக்னி அளவுபட்டிருப்பதால், மூன்று உலகங்களும் சரீரமாயிருப்பது அதற்குப் பொருந்தாதாயினும், த்ரைலோக்யசரீரகத்வம் தேவதைக்கும், மஹாபூதமான அக்னிக்கும் பொருந்தலாம். எப்படியென்றால், மூன்று உலகங்களையும் தேவதை அதிஷ்டானம் பண்ணுவதால் அது கூடலாம். பஞ்சீகரணம் பண்ணின அக்னி மூன்று உலகமாய் பரிணமத்தை அடைந்திருப்பதால் அது கூடலாம் என்று, முன் ஸூத்ரத்தில் சொன்ன "ஶப்தாதிப்ய:" என்கிற அம்சத்தை ஆக்ஷேபித்துவந்த சங்கையை இந்த ஸூத்ரம் பரிஹரிக்கிறது.

ஸாக்ஷாத³ப்யவிரோத⁴ம் ஜைமினி: ‖ உ௯ ‖

அக்னி என்கிற சொல்லால் அக்னிவழியாகப் பரமாத்மாவைச் சொல்லாமல், நேராகவும் அவனைச்சொல்லக்கூடுமாகையால் விரோதமில்லையென்று ஜைமினி அபிப்ராயப்படுகிறார்.

அபி⁴வ்யக்தேரித்யாஶ்மரத்²ய: ‖ ௩௦ ‖

எங்குமிருக்கிற பரமாத்மாவை ஒரு தேசத்தில் மாத்திரம் ஸம்பந்தப்பட்டவனாக எப்படிச் சொல்லக்கூடும் என்றால், உபாஸகனுக்கு அவன் நன்றாய்த் தோன்றுவதற்காக அப்படிச் சொல்லுகிறது என்று ஆச்மரத்யர் எண்ணுகிறார்.

அநுஸ்ம்ருதேர்பா³த³ரி: ‖ ௩௧ ‖

பரமாத்மாவைப் புருஷனுடைய ஆகாரமுள்ளவனாக ஏன் சொல்லுகிறது என்றால், அவனை அப்படித் தியானம் பண்ணுகைக்காக அப்படிச்சொல்லுவது என்று பாதரி எண்ணுகிறார். 30, 31

ஸூத்ரங்களுக்கு சங்கைவெவ்வேறு. முதல் ஸூத்ரத்தில்அளவு பட்டிருப்பது மஹாபூதமான அக்னிக்கும், ஸூரியனுன தேவதைக்கும் உண்டு. ஆகையால் அவைகளில் ஒருவன் வைச்வாரன் என்று சங்கை. இரண்டாவது ஸூத்ரத்தில், சொல்லப்பட்ட ரூபம் பிராகிருதமாயிற்றே. பரமாத்மாவுக்கோ அப்ராகிருத சரீரம். ஆகையால் அவன் எப்படி இங்கே சொல்லப்பட்ட வைச்வாநரனுக ஆகக்கூடும் என்று சங்கை.பரிஹாரங்கள்- (1)அளவில்லாத பரமாத்மாவின் ரூபத்தைத் தியானம் பண்ணமுடியாது. தியானத்துக்கு விஷயமாவதற்காக அளவுபட்ட ரூபம் சொல்லப்படுகிறது. (2) இங்கே பரமாத்மாவுக்கே இயற்கையாக உள்ள ரூபம் சொல்லப் படவில்லை. தியானத்துக்காக ஒரு ரூபம் சொல்லப்படுகிறது.

ஸம்பத்தேரிதி ஜைமிநிஸ்ததாஹி தர்சயதி ॥ ௩௨ ॥

உபாஸகனுடைய மார்பு முதலானவைகள் வேதி முதலானவைகளாக ஏன் கல்பிக்கப்படுகின்றன என்றால், ப்ராணுஹுதி ஹோமங்களை அக்னிஹோத்ரஹோமங்களாகச் செய்வதற்காக அப்படிக் கல்பனை. இப்படி ஜைமினி எண்ணுகிறார். அப்படியே உபநிஷத்தும் காட்டுகிறது. இந்த ஸூத்ரமும் வைச்வாநரன் ஜாடராக்னி அன்று என்பதைக் காட்டுகிறது.

ஆமநந்தி சைநமஸ்மிந் ॥ ௩௩ ॥

த்ரைலோக்ய சரீரகனுன வைச்வாநரனே உபாஸகன்சரீரத்திலே ப்ராணுஹுதிகளுக்கு ஆதாரமாக வாக்கியங்கள் சொல்லுகின்றன. சொல்லும் வாக்யம்— தஸ்ய ஹவா ஏதஸ்யாத்மநோ வைச்வாநரஸ்ய மூர்தைவ ஸுதேஜா: (சா—5-18-2) என்பது.

அவ- பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் சொல்லுகிறார்—

ஸ்வரூபாகாராதித்ரவாதா ப்ரஸமீபப்ரஹீர ஸம்பத்தி
யஷ்டாதிகர்மணாஸ்த்ரா யேத்யோ வைஸ்வாநராத்மா ஸ்திரப
ஹவிர்மய: ஸ்பூர்திஜ்ஞாதிஸாத்ராக: । தைவம் ப்ரஹ்ம
த்ரயீதேஹாப்யநந்தநாதயா யோகதஸ்ஸ்நிஹோபா
வைஸிஷ்ட்யாத் க்ரியாஜ்ஞம் ஸ்வபாவஷி பாரயீமஷ்ரா
ஹம்ரைவத்யாதியீஸ்வ ॥   ॥ ௩௪ ॥

ஸ்வர்க்கலோகம், ஸூரியன், வாயு, ஆகாசம், ஜலம், பூமி ஆகிய இவைகள் வைச்வாநரனுக்குத் தலை முதலானவைகளாகச் சொல்லப்பட்டிருப்பதால் த்யானம் பண்ணவேண்டியவனைச் சொல்லப்பட்ட வைச்வாநரவிஷயத்தில் பல ஸம்சயங்கள் உண்டாகின்றன. ச்ருதியும் லிங்கமும் ஸமமாயிருப்பதாலே ஸம்சயங்கள் நிலையாயிருக்கின்றன. இது பூர்வபக்ஷம். இது சரியன்று, வைச்வாநரனை ப்ரஹ்ம என்று சொல்லுகிறபடியாலும், மூன்று உலகங்களையும் அவனுக்குச் சரீரமாகச் சொல்லுகிறபடியாலும். வைச்வாநரசப்தத்துடன் ஸமாநாதிகரணமாகச் சொல்லப்பட்ட அக்னி என்கிற பதம் யோகசக்தியாலே பரமாத்மாவைச் சொல்லுகிறது. அல்லது, அக்னியை விசேஷணமாகவுடைய பரமாத்மாவைச் சொல்லுகிறது. உபாஸகன்சரீரத்தில் பரமாத்மா என்கிற த்யானமும், கார்ஹபத்ய அக்னி முதலானவைகளின் த்யானமும் ப்ராணாஹூதி என்கிற க்ரியைக்கு அங்கம்.

குறிப்பு— (1) ஸ்வர்க்கலோகம் வைச்வாநரனுடைய தலை; ஸூரியன் கண்; வாயு ப்ராணன்; ஆகாசம் இடுப்பு; ஜலம் மூத்ராசயம்; பூமி கால்கள். இப்படி வைச்வாநரவித்யையில் சொல்லியிருக்கிறது. (சா. 5- 11- முதல் 24-உள்பட.)

(2) மற்ற அதிகரணங்களில் விஷயவாக்கியத்தைக் கொண்டு அங்குச் சொல்லப்படும் வஸ்து ஜீவன், அல்லது ப்ரகிருதி என்று பூர்வபக்ஷம் சொல்லப்படுகிறது. இங்கே வைச்வாநரன் என்கிற பதம் இன்னதைச் சொல்லுகிறது என்று தீர்மானம் பண்ணமுடியாது என்பது பூர்வபக்ஷம். இப்படிப் பூர்வபக்ஷத்தைச் சொல்லுவதற்குக் காரணம்— விஷயவாக்யத்தின் ஆரம்பத்தில் வைச்வாநரசப்தத்தை ப்ரம்ம சப்தத்துடன் ஸமாநாதிகரணமாகச் சொல்லியிருக்கிறது. அது வைச்வாநரன் பரமாத்மா என்பதற்கு லிங்கம். அக்னிரஹஸ்யத்தில் இந்த வித்யையில் "ஊஷிவெஶ்வாநரஃ" என்று இரண்டு பதங்களை ஸமாநாதிகரணங்களாகச் சொல்லியிருக்கிறது. இது வைச்வாநரன் ஜாடராக்னி முதலியன என்பதற்குக் காரணமாகும். வைச்வாநரன் என்கிற பதம், பரமாத்மாவையும் ஸூரியதேவதையையும் பஞ்சபூதங்களில் அடங்கின அக்னியையும் ஜாடராக்னியையும் சொல்

ஆவதாகப் பிரயோகங்கள் இருக்கின்றன. இப்படி பிரயோகங்களும் லிங்கங்களும் ஸமமாயிருக்கிறபடியால் கீழே சொன்னபடி பூர்வபக்ஷம் சொல்லப்படுகிறது.

(3) ஸந்தேஹமில்லாமல் வைச்வாநரன் பரமாத்மாதான் என்று தீர்மானம் பண்ணுவதற்கு வேண்டிய தர்மங்கள் சொல்லப்படுகின்றன. (1) உபநிஷத்தின் ஆரம்பத்தில் "கோ ந ஆத்மா, கிம் ப்ரஹ்ம" என்று இருக்கிறது. இதின் பொருள்- நம்முடைய ஆத்மாவான ப்ரம்மம் எது? என்பது. மேலே இதற்குப் பதில் சொல்லும்போது, இதுவே 'ஆத்மாநம் வைச்வாநரம்' என்று பலதடவை சொல்லப்படுகிறது. கேள்விக்கும் பதிலுக்கும் விஷயம் ஒன்றாகவேயிருக்கவேண்டியது. 'கோ ந ஆத்மா' என்பது கேள்வி. 'ஆத்மா வைச்வாநர:' என்பது பதில். ஆகையால் ஆத்மா என்னும் பதத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிற ப்ரம்ம வைச்வாநரன் என்கிற பதங்களுக்கு ஒரே பொருள். ஆகையால் வைய்ச்வாநர ப்ரம்மம் அதாவது பரமாத்மா. இது ப்லோகத்தில் சொல்லப்பட்ட ஹேது. (2) "ஸ ஸர்வேஷு லோகேஷு ஸர்வேஷு பூதேஷு ஸர்வேஷ்வாத்மஸு அந்நமத்தி" என்றும், "ததா ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே" என்றும் வைய்ச்வாநரனை உபாஸிப்பதின் பலன்கள் சொல்லப்படுகின்றன. அந்நம்=என்பது போக்யமானவஸ்து. எல்லா உலகங்களிலும், எல்லாப்பூதங்களிலும், எல்லா ஆத்மாக்களிலுமிருக்கும் அன்னம் ஸர்வாந்தராத்மாவாயும் அளவில்லாதஸுகமாயுமிருக்கும் பரமாத்மாதான். ஆகையால் உபாஸநத்தின் பலன் எல்லாப் பாபங்களின் நாசமும், பரமாத்மாவின் அநுபவமும். இது வைய்ச்வாநரன் பரமாத்மா என்பதற்கு மற்றொரு லிங்கம். இது ஸ்ரீபாஷ்யத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

(4) வைய்ச்வாநரனுக்கு ஸ்வர்க்கலோகமும், அந்தரிக்ஷலோகமும், பூலோகமும் அவயவங்களாகச் சொல்லப்படுகின்றன. இந்த வாக்கியத்தைப் படித்தவுடன் முண்டகத்தில் அக்ஷரவித்யையில் அக்ஷரத்துக்குச் சொல்லப்பட்ட இவ்விதமான ரூபம் நினைவுக்கு வருகிறது. அக்ஷரம் பரமாத்மா என்று கீழ் அதிகாணத்தில் தீர்மானிக்கப்பட்டபடியால் வைச்வாநரன் பரமாத்மா என்பது அநுமானத்தால் ஸித்திக்கிறது.

(5) பூர்வபக்ஷி கேட்கிறுன்— ஜாடராக்னியின் லிங்கமும் இருக்கிறதே, அதற்கு என்ன கதி? இந்தக் கேள்வியை மூன்று வது ஸூத்திரம் அநுவாதம் பண்ணி, அதற்குப் பதில் சொல் கிறது. அந்த லிங்கங்களை 3-வது ஸூத்ரத்தின் உரையில் பார்க்க. பதில்— (1) அக்னி சரீரகனுகப் பரமாத்மாவை உபாஸிக்கவேண்டும் என்று விதிக்கப்படுகிறது. வைச்வாநரனுக்கு மூன்று உலகங் களையும் சரீரமாகச் சொன்னது ஜாடராக்னிக்குப் பொருந்தாது. (2) வைஶ்வாநரனை அக்னிரஹஸ்யம் "ஸ ஏஷோऽக்நிர் வைஶ்வாநரோ யத் புருஷ:" என்று புருஷனுகச் சொல்லுகிறது. ஆகையால் வைஶ்வாநரன் ஜாடராக்னி அன்று.

(6) ஸூரியதேவதைவிஷயத்திலும், பஞ்சபூதங்களில் ஒன்ருன அக்னிவிஷயத்திலும் உபநிஷத்தில் இவ்விடத்தில் லிங்கம் காணப் படவில்லை. அவைகள் வைஶ்வாநரன் அல்ல என்பதற்குக் கீழே சொன்ன ஹேதுக்களே போதுமென்று நாலாவது ஸூத்ரம் சொல்லுகிறது.

(7) அக்னி வைஶ்வாநர என்கிற பதங்கள் ஸமாநாதிகர ணங்களாக சொல்லப்பட்டிருந்தாலும் அக்னிபதமும் பரமாத் மாவையே சொல்லுகிறது. இந்த்ரப்ராணுதிகரணத்தில் சொன்ன படி அக்னியென்கிற சொல்லுக்கு அக்னியின் ஆத்மாவான பர மாத்மா என்பது பொருள். அக்ரம் நயதி என்கிற (யோக) வ்யுத்பத்தியாலும் அது பரமாத்மாவையே சொல்லுகிறது. அக்னி சப்தத்துக்கு இரண்டுவிதமாய் நிர்வாஹம் செய்திருக்கிறபடியால், இரண்டு விதமாயும் உபாஸனம் பண்ணலாமா என்ருல், கூடாது. அக்னிசரீரகனுகவே வைஶ்வாநரனை உபாஸிக்கவேண்டும் என்பது ஸூத்ரகாரரின் அபிப்பிராயம். இது "தமக்நௌ ஜுஹ்வதீதி வைஶ்வாநர:" என்பதினுல் விளங்குகிறது. கார்யங்களின் லிங்கங் களோ, கர்மவச்யர்களின் லிங்கங்களோ எங்கேயில்லையோ, அந்த எல்லா இடங்களுக்கும் ஜைமிநியின் நிர்வாஹம் பொருத்தமுள் ளது. இந்த ந்யாயத்தை எங்கேயாவது காட்டவேண்டும். அது இங்கே காட்டப்பட்டது. இந்த நிர்வாஹத்தின்படியே ஆகாசாதி கரணத்திலும் ப்ராணுதிகரணத்திலும் ஆகாசப்ராணசப்தங்களுக்கு யோக வ்யுத்பத்தியாலே பொருள் கொள்ளப்பட்டது.

(8) இந்த உபநிஷத்தில் 5-வது அத்யாயத்தின் பதினெட்டாவது கண்டத்தில் வைச்வாநரனை உபாஸிக்கிறவன், தான் பண்ணும் ப்ராணாஹுதிகளை வைச்வாநரனுக்கு ஆராதனமாகவும் அவைகளை அக்னிஹோத்ரமாகவும் எண்ணிக்கொண்டு செய்யவேண்டியது என்று விதிக்கப்படுகிறது. அக்னிஹோத்ரத்துக்கு ஹவிஸ்ஸை வைக்க வேதியும், அதன்மேல் பரப்பப்பட்ட பர்ஹிஸ்ஸும், ஹோமத்துக்கு ஆதாரமான அக்னியும் வேண்டியவை. அதற்காக உபாஸகனுடைய மார்பை வேதியாகவும், அதிலிருக்கும் மயிரை பர்ஹிஸாகவும், ஹ்ருதயத்தைக் கார்ஹபத்ய அக்னியாகவும், மனதைத் தக்ஷிணாக்னியாகவும், வாயை ஆஹவனீயமாகவும் உபநிஷத்து சொல்லுகிறது. உபாஸகன் தன்னுடைய சரீரத்தையும் வைச்வாநரனுடைய த்ரைலோக்ய சரீரமாக நினைக்கவேண்டும். இதுவும் உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இது கடைசி இரண்டு ஸூத்திரங்களின் அர்த்தம். (94)

அவ—கீழ் ஸ்லோகத்தில் தீர்மானம் பண்ணினது சரியன்று; விதிக்கப்பட்டது த்ருஷ்டி விதி என்கிற சங்கையை அநுவாதம் பண்ணித் தீர்க்கிறார்—

[illegible] ॥ ௯௫ ॥

ஒன்றில் வேறென்றின் த்ருஷ்டி பண்ணுவதால், த்ருஷ்டி பண்ணுகிறவர்களுக்கு மிகவும் உயர்ந்த மோக்ஷபலன், கிடைப்பதாக ஓரிடத்திலும் சொல்லப்படவில்லை. இங்கே சொல்லப்பட்ட பலனோ அன்னம் கிடைப்பது முதலானவை. ஆதலால் இந்த வைச்வாநரன் பரமாத்மா அன்று. இந்த சங்கை சரியன்று. ஸ்வர்க்கம் முதலானவைகளை வைச்வாநரனின் தலை முதலானவைகளாக உபாஸிக்கும்படி சொல்லியிருப்பதால் அவ்விதத் தலை முதலான ரூபத்தையுடையது ப்ரம்மம்தான். உபநிஷத்தின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட ப்ரம்மம் ஆத்மா என்கிற சொற்களுக்கு (பா)பாதமில்லை. எல்லாப் பாபங்களுடையவும் நாசம் பலனாகச்சொல்லப்படுகிறது. எங்குமிருக்கிற அன்னம் பரப்ரம்மம்தான்.

குறிப்பு— (1) ஸ்வர்க்கலோகத்தை வைய்வாநரனுடைய தலையாகவும், ஸூர்யனை அவன்கண்ணாகவும், வாயுவை ப்ராணனாகவும், ஆகாசத்தை இடுப்பாகவும், ஜலத்தை மூத்ராசய மாகவும், பூமியைக் கால்களாகவும் உபாஸிக்கும்படி உபநிஷத்து சொல்லுகிறது. இது 'மனதை ப்ரம்மம் என்று உபாஸி' என் பதுபோலிருக்கிறது. இது த்ருஷ்டிவிதி. த்ருஷ்டிவிதியால் மோக்ஷமாகிய பலன் கிடைப்பது ஓரிடத்திலும் சொல்லப்பட வில்லை. ஆகையால் வைய்வாநரன் பரமாத்மா அன்று. இது சங்கை.

(2) இதை ச்லோகம் தூஷிக்கிறது. இந்த உபாஸநத்தில் தலை கண் முதலானவைகள் ஒரு புருஷனுடைய அவயவங்கள்; அந்தப் புருஷன் பரமாத்மாதான்; ஏன் என்றால், (1) வைய்வா நரனை ஆத்மா என்றும், ப்ரம்மம் என்றும் உபநிஷத் ஆரம்பத்தில் சொல்லுகிறது. அவைகளின் முக்யார்த்தத்தை விடுவதற்கு ஏதா வது ஒருபாத(ஙாய)ம் காட்டவேண்டும். அது காட்டப்படவில்லை. (2)உபநிஷத்தின் கடைசியில் உபாஸகனுடைய எல்லாப் பாபங்களு டையவும் நாசம் உபாஸனத்தின் பயனாகச் சொல்லப்படுகிறது இது த்ருஷ்டிவிதியினால் ஏற்படாது. இப்படி வைய்வாநரன் ப்ரம்மம் என்று ஏற்பட்டபோது, அன்னம் என்கிற சொல்லுக்கு. போக் யம் என்று பொருள்கொண்டு, எல்லா உலகங்களிலும் எல்லாப் பூதங்களிலும் எல்லா ஆத்மாக்களிலுமிருக்கும் அன்னம் அளவில் லாமல் ஸூக்ஷ்மமான பரமாத்மா என்று கொள்ளவேண்டும். பர மாத்மாவை அன்னம் என்று 'ஊஹமந்நம், ஊஹமந்நாதঃ' (தை-ப்ரு-10-அ) என்கிற வாக்யமும் சொல்லுகிறது. இங்கே அஹம் என்பதற்குப்பொருள்— ஊஹம் என்று சொல்லுகிறவனு டைய ஆத்மாவான பரமாத்மா— என்பது.

(நிகமனம்) 1 பூர்வபக்ஷி பூர்வபக்ஷத்துக்கு அநுகூலமான ஹேதுக்களைச் சொல்லவில்லை.

2. அத்ருஶ்யத்வாதிகுணகாதிகரணத்தில் விசாரிக்கப்பட்ட அக்ஷரத்தினிடத்தில் த்ரைலோக்யசரீரத்வமும் ஜகத் காரணத்வ மும் சேர்ந்திருக்கின்றன. வைச்வானரனிடத்திலும் த்ரைலோக்ய சரீரத்வம் இருக்கிறபடியால் ஜகத்காரணத்வமும் அவனிடத்தில் இருக்கவேணும். அவன் பூதஅக்னியாக இருக்கும்பக்ஷத்தில் அவன் ஜகத்காரணம் என்பது ஏற்படும். இது பூர்வபக்ஷியின் கருத்து.

3. இந்த அதிகரணத்தால் அசேதனத்தினிடத்தில் ஜகத் காரணத்வமிருப்பது ஏற்படவில்லை. (95)

அவ— இந்த இரண்டாவது பாதத்திலிருக்கும் ஆறு அதி கரணங்களையும் இரண்டு பேடிகைகளாகப் பிரித்து, அவைகளுக் குள் பேதத்தையும், ஆறு அதிகரணங்களுக்கும் பொதுவான அர்த்தத்தையும் சொல்லுகிறார்:—

த்³வேதா⁴ பா⁴விதாநாம் ஹ்ருத³ய [illegible]
[illegible] உக்தா விஶ்வாந்தர்யாமிதாதி³ [illegible]
[illegible] । ஷட்ஸு ப்³ரஹ்மாத்ம [illegible]
[illegible]
[illegible] ॥ ॥ கூசு ॥

இந்தப் பாதத்தில் முதல் மூன்று அதிகரணங்களில் பரமாத்மா சின்ன அளவுள்ள உபாஸகனுடைய ஹ்ருதயத்திலும் கண்ணி லும் இருப்பவனாகத் தியானம் பண்ணவேண்டியவன் என்பது சொல்லப்படுகிறது. மேல் மூன்று அதிகரணங்களில் எல்லாவற் றிற்கும் அந்தர்யாமியாயிருப்பது முதலானவைகளால் பெரிதான அளவுள்ளவனாக அவனைத் தியானம் பண்ணவேண்டியது என்பது சொல்லப்படுகிறது. ஆறு அதிகரணங்களிலும் ப்ரம்மம், ஆத்மா, புருஷன் என்கிற பதங்கள், சேதனர்கள் அசேதனங்கள் இவை கள் சேர்ந்த ஜகத் ஆகிய இவைகளைக் காட்டிலும் வேறாய் ஜகத் துக்குக் காரணமான பரமாத்மாவைச் சொல்லுகின்றன. இது ரூடியாலும், வ்யுத்பத்தியால் ஏற்பட்ட அர்த்தத்தை அந்தந்த ப்ரகரணங்களைக்கொண்டு ஒரு வஸ்து விஷயமாகத் தீர்மானிப்பதா லும் ஏற்படுகிறது.

குறிப்பு:— (1) முதல் இரண்டு அதிகரணங்களில் உபாஸக னுடைய ஹ்ருதயமும், மூன்றாவதில் அவன்கண்ணும், பரமாத் மாவுக்கு இருப்பிடமாகச் சொல்லப்படுகின்றன. நாலாவது அதிக ரணத்தில் அவன், எல்லாவற்றுக்கும் அந்தர்யாமியாயிருப்பதும், மற்ற இரண்டு அதிகரணங்களில் அவன் த்ரைலோக்ய சரீரக னாயிருப்பதும் தியானம் பண்ணவேண்டிவைகள் என்பது சொல்லப் படுகிறது.

(2) முதல் அதிகரணத்துக்கு விஷயமான சாண்டில்யவித் யையில், "ஸர்வம் க²ல்வித³ம் ப்³ரஹ்ம, தஜ்ஜலாந்" என்று

ப்ரம்மசப்தமும், ஆத்மசப்தமும், இரண்டாவது அதிகரணத்துக்கு விஷயமான கடவல்லியில், “ஆனந்தம் விஜ்ஞானம் அக்ஷரம் ப்ரஹ்ம யஸ்மிந், பரஸ்மாத் ந பரம் கிஞ்சித்” என்று ப்ரம்ம, ஆத்ம, புருஷசப்தங்களும், மூன்றாவது அதிகரணத்துக்கு விஷயமான உபகோஸலவித்யையில் “ய ஏஷோ அக்ஷிணி புருஷோ த்ருஶ்யதே ஏஷ ஆத்மேதி........ ஏதத் ப்ரஹ்மேதி” என்று அந்த மூன்று பதங்களும், நாலாவது அதிகரணத்துக்கு விஷயமான அந்தர்யாமி ப்ராம்மணத்தில் “ஏஷ த ஆத்மா” என்று ஆத்மசப்தமும், ஐந்தாவது அதிகரணத்துக்கு விஷயமான முண்டகத்தில் “தேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம், தபஸா சீயதே ப்ரஹ்ம, தஸ்மாதேதத் ஜாயதே” என்று புருஷ-ப்ரம்ம-ஆத்ம சப்தங்களும், ஆறாவது அதிகரணத்துக்கு விஷயமான வைச்வாநரவித்யையில், ‘கோ ந ஆத்மா, கிம் ப்ரஹ்ம’ என்று ஆத்ம ப்ரம்மசப்தங்களும் இருக்கின்றன. இந்த சப்தங்கள் ரூடியாலும், ப்ரகரணத்தால் கட்டுண்ட யோகத்தாலும், ஜகத்காரணமான ப்ரம்மத்தையே சொல்லுகின்றன என்பது தீர்மானிக்கப்பட்டது.

அவ:— அத்வைதிபக்ஷங்கள் ஸூத்ரகாரராலேயே இந்த அதிகரணங்களால் நிராகரிக்கப்படுகின்றன என்று சொல்லுகிறார்—

தஜ்ஜத்வாதேஸ் ஸர்வம் ஜகதபி கதிதம் ப்ரஹ்ம
வேத ஸர்வம் ஸர்வாத்மத்வாதிதா வ்யூஹவிதார்
திதா ஸர்வத்ரேதா ச । தத்ராபிப்ரேக்ஷ்யோபாய்ய
ஹ்யதிபாஹவியாவாப்யம்ஹ்ரோ ணக்ஷேத்ர க்ஷ்
ப்ரோக்திஜாதம் நிவியதிஹ நயை: ஸூத்ரகாரோ
நிராஸ ॥ ॥ ௱௭ ॥

“ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம” என்று ஸமாநாதிகரணபதங்களாலே எல்லா ஜகத்தையும் ப்ரம்மமாகச் சொன்னது, அது ப்ரம்மத்தினிடத்திலிருந்து உண்டானதாலும், அவனிடத்தில் லயத்தை அடைவதாலும், அவனாலே ஒரு வஸ்துவாக இருப்பதாலும் என்று முதலில் சொல்லப்பட்டது. பிறகு ஜகத்தை உண்டுபண்

னுகிறவன் எல்லாவற்றுக்கும் அந்தர்யாமியான ஆத்மாவென்றும், எல்லாம் அவனுக்குச் சரீரம் என்றும் சொல்லப்பட்டது. ஆதலால், ப்ரம்மமும் எல்லாமும் ஒன்று என்றும், ஜகத் பாதிக்கப்படுகிறது என்றும் இவ்விதங்களான விபரீதார்த்தங்களைக் கொண்டு மிகவும் ப்ரமத்தை யடைந்த அல்ப புத்திகளுடைய வெறும் பிதற்றல்களை இந்தப் பாதத்தில் இந்த அதிகரணங்களால் ஸூத்ரகாரர் போக்கடிக்கிறார்.

குறிப்பு:- (1) 'ஐதம் ஸர்வம் ப்ரஹ்ம' என்கிற ஸாமாநாதிகரண்யத்துக்குப் பலபேர்கள் பலவிதமாய் அர்த்தம் பண்ணுகிறார்கள். ப்ரம்மமும் மற்றெல்லாமும் ஒன்று என்றுபாஸ்கரனும், ஜகத்து பாதிக்கப்படுகிறது அதாவது பொய்யானது என்றுசங்கரனும், ராஜா தான்ராஜ்யம் என்பதுபோல் என்று வைசேஷிகனும், ஜகத்தை ப்ரம்மமாக த்ருஷ்டி பண்ண (பார்க்க) வேண்டியது என்று பழைய மாயாவாதிகளும், ஸ்தோத்ரம் என்று வேறுசிலரும் சொல்லுகிறார்கள். இவைகளெல்லாம் விபரீதநிர்வாஹங்கள். ப்ரம்மத்தை ஆத்மாவாகவும், ஜகத்தை அவன் சரீரமாகவும் அந்தர்யாமிப்ராம்மணம் தெளிவாய்ச் சொல்லுகிறது. ஆகையால் சரீராத்மபாவத்தை முன்னிட்டுக்கொண்டு ஸமாநாதிகரணபதங்களாலே ஜகத்தையும் ப்ரம்மத்தையும் ஒன்றாகச் சொல்லியிருக்கிறது. இது ஒரு நிர்வாஹம். ஜகத் உண்டாவதற்குக் காரணம் ப்ரம்மம். காரியமும் காரணமும் ஒன்றாகையாலே இரண்டையும் ஒன்றாகவே வேதம் சொல்லுகிறது. இது இரண்டாவது நிர்வாஹம் இந்த நிர்வாஹங்களை மற்ற மதக்காரர்கள் அறியாமையால் அவர்களை 'ஷண்ஹூத்ராண' என்றும், க்ஷுத்ரர்கள் என்றும், க்லீபர்கள் என்றும் சுலோகம் சொல்லுகிறது. (97)

இந்தப் பாதத்தால் சொல்லப்பட்ட பரமாத்மாவின் குணங்களைச் சொல்லுகிறார்.—

ஸாயீநாஶேஷஸத்வஸ்திதயதநதயா ஸர்வஹோவெந திஷ்டு ஹ்ஸாஶெஷொzக்ஷிமித்ருஷ்டிரவியதநஃ க்ஷிதாஹ்ஜிமாத்ரஃ । ஸுஜெஷ்காதூஜ்ஞொஸ்ாநர

ஷட்விதயோ லக்ஷணஸ்யாதிகஸ்ய வ்யாக்யாத: பாதே த்விதீயே ச்ருதிசிகரசிரோபூஷண: ஸ்ரீநிவாஸ: ॥ ௧௬ ॥

இதி அதிகரணஸாராவல்யாம் ப்ரதமாத்யாயே த்விதீய: பாத: ॥

முதல் அத்தியாயம் இரண்டாம் பாதத்தில், உபநிஷத்துகளுக்குச் சிரோபூஷணமான ஸ்ரீநிவாஸன் ஆறுகுணங்களை உடையவனாகச் சொல்லப்படுகிறான். அவைகளாவன— (1) எல்லாவற்றினுடையவும் ஸத்தையும், ஸ்திதியும், ப்ரவ்ருத்திகளும் தனக்கு ஸ்வாதீனமாயிருப்பதாலே எல்லாமாக இருப்பது; (2) எல்லாவற்றையும் ஸம்ஹார்ம் பண்ணுவது; (3) உபாஸகன் கண்ணில் நிலையாயிருப்பது; (4) எல்லாம் தனக்குச் சரீரமாயிருப்பது; (5) அக்னி முதலானவைகளைச் சரீரமாக யுடையவனாக உபாஸகர்களால் தியானிக்கப்படுவது; (6) ஸ்வர்க்கலோகம் முதலானவைகளைச் சரீரமாக உடைய வைச்வாநரன் என்கிற பதத்துக்குப் பொருளாயிருப்பது.

முதல் அத்தியாயம் இரண்டாம் பாதம் முற்றிற்று.
